உ

சிவமயம்.

பட்டினத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

திருப்பாடற்றிரட்டும்,

அருட்புலம்பலும்,

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப்புலம்பலும்,

உபயார்த்ததீபிகையுரையும்.

இவை

தில்லைத்திருநகர்

ஸ்ரீ சாமிநாத தேசிகேந்திர சிவயோகி

அவர்களால் உரையெழுதப்பெற்றது.

சென்னை

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

[ரிஜிஸ்தர்செய்தது.] 1927. [விலை ரூபா—2

முகவுரை.

நூன்முக வாய்மை வான்முக டேறுங்
சான்முகந் நாட்டு மேன்முக வுரையே.

அகவுரை கண்டு தகவுரை காட்ட லான்றோர்க் குரித்தாகலின், அகவுரைக்குத் தகவுரை யாப்பொரு ணகவுரையன்றித் தகவுரையாகா. தகவுரையில்லா வகவுரைகண்டு முகவுரை கொடுத்த னகவுரையன்றி முகவுரையாகா. 'துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத், திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று' என உள்ளுவர்க்கமுதாம் வள்ளுவனார் மொழி தெள்ளிதின் விளங்கத் துறவின் பெருமையைக் காட்டும்.

அமிழ்தினுமினிய தமிழ்நாட்டின்கண் துறவுபூண்டு சிறப்புற்றோங்கிய பெரியார்களில், கட்டிலகொழித்த பட்டினத்தடிகள் உத்தரவேற்கும் பத்திரகிரியா ரிருவருமே. இவர்க டுறவின் பெருமையை விரித்து 'பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பரவி, விட்டுவிட மாட்டார் வெறுவீடர்' என எண்ணுடையவராங் கண்ணுடைய வள்ளல் கூறிய நீதிசேர் மொழியே போதிய சான்றும்.

கைவிடச் சுட்டசட்டி காணுமளவே நசையைப் பொடியாத் திசைவிடுந் தன்மையின்றி 'வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங் காட்டுவது ஞானக்

S. Kannappa Chelliar

களவென்னும்' பொய்ம்மையாளர் மெய்ம்மையடைய மட்டிலாவிரத பட்டினத்தடிகளியற்றிய அகவுரைக்கும், கல்லாதவரும் நல்லா வுணரும் பொருட்டு வாமிநாதற் றெழுஞ் சாமிநாதப் பெரியான்செய்த தகவுரைக்கும், குருமலையத் தமிழ்த் திருமலையாமெனது முகவுரைக்கும் ஆய்ந்தமைந்த கல்வியறிவாளர் மகிழ்ச்சி யடைவாராக.

இங்ஙனம்,

வித்வான். மு. திருமலைமுத்துப் பிள்ளை.

விஷய சூசிகை.



பட்டினத்தடிகள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார் சரிதம்.

அநாதி முத்த சித்துருவாகிய ஸ்ரீ சிவபெருமான், பிரமேந்திராதி தேவர்களும் ஏனைய ஆன்ம கோடிகளும் உய்தற் காரணமாகக் கைம்மாறுவேண்டாக் கருணையே உருவமாய்க்கொண்டு அருட்சத்தியாம் உமாதேவியாரோடும் சாந்நித்தியமாய் எழுந்தருளியிருப்பது ஸ்ரீ கைலயங்கிரியாகும். அம்மலை, இந்திராதிய தேவர் பதவிகளும், பிரம்ம பதவிகளும், விஷ்ணு பதவியும் நிலைபெறுக்காலத்தினும் தான் தன்னிலைகெடாது சாசுவதமாய் விளங்கி ஊழிகள்தோறும் ஓங்குந் தன்மையானது. இத்தகைய பர்வதத்திற்கு வெள்ளிமலை யெனும் பெயரும் வழங்கப்படும். அன்றியுந் தன்னை யடைந்தார்க்குத் தன்பெருமை தந்தருளும். இம்மலையின் தத்துவத்தை வேதாகமாதி புராணங்களெல்லாம் வெகுவாய்ச் சிறப்புற விளக்கும் மகா பெருமைவாய்ந்த நந்திதேவர்தம் பிரதம காப்பிலுள்ளது.

இத்தகைய மகத்துவம் வாய்ந்த கைலமா மலையின்கண் எழுந்தருளியுள்ள நம் சிவபரஞ்சுடரைத் தரிசிக்கவே

ண்டி அவர்தந் தோழரும், அளகாபுரிக்கு இறைவனுமான குபேரன் புறப்பட்டு கைலையை யடைந்து அங்குவாயிற் காவலாளரா யிருந்த நந்திதேவரைத் தரிசித்து வணங்கி அவரனுமதிபெற்று பின்னர் சந்நிதியுட்சென்று அங்கு ஸ்ரீ சிவபெருமான் உமையவளோடும் எழுந்தருளியுள்ள திவ்ய திருக்கோலக் காக்ஷியினைக் கண்டு நமஸ்கரித் தெழுந்து துதிசெய்து பரமானந்தமுற்று ஐயனை நோக்கி, என்னுருயிர்த்துணையாம் ஆண்டவரே! தேவரீர் இங்கெழுந்தருளியுள்ள திவ்ய திருக்கோலக் காக்ஷியைப் போன்றே மண்ணுலகத்துள்ள திவ்யக்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளுங் கண்டு களிக்குமாறு வேண்டுகின்றேன். ஆகையால் அவ்வாறு திருவுளம்பற்றல்வேண்டு மென்னரசே யென்று பிரார்த்தித்து நிற்க, அன்பர்களது குறைமுடிக்குங்கோமானுதலின், தம்மரிய தோழர் வேண்டு கோளுக்கிரங்கியவராய் உடனுக ஸ்ரீ உமாதேவியாரோடும் இடபாரூடரா யெழுந்தருளி சிவகணங்கள், தேவர்கள், முனிவர் முதலியோர் சூழச்சென்று காசி, காஞ்சி, காளத்தி முதலாய ஸ்தலங்களிலே எழுந்தருளி அவ்வந்தத்தலத்தும் திருக்கைலாய கோலக் காக்ஷியினைக் குபேரனுக்குத் தரிசிப்பித்து ஸ்ரீசிதம்பர க்ஷேத்திர மடைந்தருளினர். குபேரனும் எம்பெருமானைப் பின்பற்றிச்சென்று அவ்வத்தலங்களினும் அண்ணலார் தம்கைலை கோலங் கண்டு களித்துத் திருச்சிற்றம்பலமெனும் சிதம்பராலயம் வந்தடைந்து ஸ்ரீ சிவகாமசுந்தரிசமேத ஸ்ரீ ஆனந்தத் தாண்டவ மூர்த்தியைத் தரிசித்

துப் பேருவகைகொண்டவனுய்க் கைலைப்பதியோடும் சின்ஞள் வசித்திருந்தனன். இங்ஙன மிருக்கும் போழ்து ஓர் தினம் குபேரன் கைலைநாதனைவணங்கித் துதிசெய்து, அன்பருளமே சாலவும் ஆலயமாய்க் கொண்டருளும் ஏ அண்ணல்! சோழமாமண்டலந்திகழும் திருவெண் காடென்னும் திவ்யக்ஷேத்திரத்திலேயும் தேவர்தம் திருக்கோலக் காக்ஷியினைக் கண்டு களிப்புறவிருப்புறுகின்றன னென்று வேண்டிநின்றனன். அப்போது அன்புவலைப்பட்ட அருட்டிருமேனியான் தமது அரியதோழர்தம் வேண்டுதலுக்கிசைந்தவராய் உமையவளோடும் புறப்பட்டுச்சென்று திருவெண்கா டடைந்தனர். உடனுகை குபேரனும் ஆங்குச் சென்று எம்பெருமானைத் தரிசித்திருந்தனன்.

இங்ஙன மிருந்து வரும்போ தொருதினம் அப்பதிக்கருகாமையிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்திற்குச்சென்று அப்பதியின் வனப்பையும் வளப்பத்தையும் நன்குகண்டுணர்ந்து நகரச் சிறப்பையும் திவ்யாலய திருவழகையும் பார்த்துப் பரமானந்தமெய்தி அங்குத் தான் சிலபோது வதிந்திருப்பான் விருப்புற்றவனுய்ப் புறப்பட்டு திருவெண்காடு வந்தனன். எப்பதிக்கும் ஈறப்பதியாய் ஒப்புவமையற்ற அளகாபுரியின் அரசனுகிய குபேரனுக்கே மிகப் பிரமை கொண்டு அன்புற்றன னென்றுல், அத்திரு நகரின் வனப்பையும் வளப்பத்தையும் யாவரே கண்டு கணக்கிடவல்லார்! அளகேச னிவ்வண மின்புற்றிருத்தலை கைலை நாதர் நன்குணர்ந்தவராய் அவ்வளகேசனை நோக்கி, "ஏ என் இனிய

நண்பனே! நின் உள்ளத்தைக் காவிரிப்பூம் பட்டினம் கொள்ளை கொண்டது; நினக்கிசைந்துள சரீரமோ போகானுபவத்திற் கேற்றதாகும்; மானிடர்கள் வாழா நின்ற இக்கர்மபூமிக் கேற்றதாகா; ஆகவே, நீ விருப்புற்ற இந்த காவிரிப்பூம் பட்டினத்திலேயே பிறப்பாயாக" வென்று கட்டளையிட்டருளினர். இம்முறைகேட்ட குபேரன் திடுக்கிட்டயர்ந்தவனாய் மனமிகவருந்தி, ஏ கயிலைமலைக் கண்ணுதால்! தேவரீர் என்னுளக் குறிப்புணர்ந்து எனக்கிட்ட கட்டளையை வகிக்க கடமைப்பட் டுள்ளேனேயன்றி செயற்பால தொன்றுமின்று. ஆயினும் எளியேன் கேவல மானிடப் பிறவிகொண்டு பிறந்து இப்புவனபோக போக்கியாதிகளி லழுந்தி தேவரீர் திருவடியை மறக்கும்போது தடுத்தாண்டருளுமாறு நமஸ்கரித்து வேண்டுகின்றேன் என்று பிரார்த்தித்து நிற்க; எம்பெருமான் அப் பிரார்த்தனைக்கிரங்கி, அவ்வளகேசனை நோக்கி "ஏமித்திரா! நின்வேண்டுதலுக் கிசைந்தோம்; கோரியவாறு செய்வோம்; அஞ்சலை! அஞ்சலை!" என்று அநுக்ரகித்து அருளன்னையோடும் தம்மிருப்பிடமாய கைலாயத்திற் கெழுந்தருளினர். இஃதிங்ஙனமாக;

காவிரிப்பூம் பட்டினத்தின்கணுள்ள சுத்த சைவ வேளாளர் மரபில்வந்த சிவநேச ரென்பவ ரொருவர் தம் மரபிற் கேற்ற சற்குணவதியான 'ஞானகலாம்பை' யென்னும் கற்பரசியாரைத் திருமணமுடித்து விதிப்படி இல்லறம் நடாத்திவரும்போது இவர்கட்கு பர்லசந்திரன்போ

ன்ற ஓர் பெண்குழவி பிறத்தலும், இதன்பின் சிலகாலம் வரை இன்னோர்க்கு ஆண்மகவில்லாமை குறித்து மனங் கவன்று சிவநேசர் தம் மில்லக் கிழத்தியோடும் அருந்தவம் புரிவான் றொடங்கினர்கள். இவ்வணம் நிகழ்ந்தேறுங்கால் சிலநாள்களில் இன்னவர் தவப்பயன் காரணமாக அளகை வேந்தனுல் குபேரன் கொண்ட கைலநாதன் கட்டளையின் பிரகாரம் உத்தமியாகிய ஞான கலாம்பையார் கருப்பொ றையமர்ந்தனள். அது முதலாக அம்மையார்க்குக் கர்ப் பக்குறிகள் காணப்பட்டுவந்தன. இஃதுணர்ந்த உற்றோ ரும் சிவநேசரும் மனமகிழ்ந்தவர்களாய் விளங்க, மாதங்கள் படிப்படியாய்ப் பத்தும் பூர்த்தியாக, ஞான கலாம்பையார் க்கு உத்தமநாளிலே ஆண் குழந்தை பிறந்தது. அது கண்ட சிவநேசர் அகமிக மகிழ்ந்து அன்பு மீதுற அவ் வாண் மகவுக்குத், "திருவெண்காடர்" என்னுந் திரு நாமமிட்டுக் குழந்தையை நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். இவ்வாறுகத் திருவெண்காடராய குழந்தை பிறைச்சந்திரன் போன்று நாளடைவில் திடகாத்திரமாக வளர்ந்துவர, வயது ஐந் தாயினள்.

இவ்வாறுகத் திருவெண்காடப் பாலர்க்கு ஐந்தா மாண்டு நடைபெறும்போது பிதாவான சிவநேசர் ஸ்ரீ சிவ பிரானுர் திவ்ய திருவடிநீழலே யடையப்பெற்றனர். பிதா வின்கதி யிவ்வாறுக, திருவெண்காட்டு மைந்தனுர் தந்தை யார்க்குச் செயற்பாலதான ஈமக்கடன்களாற்றிப் பல்வேறு

வினய விளையாடல்களால் தாயின் மனோவிசாரத்தை மாற்றி வந்தனர். பின்னர் மகா உத்தமியான ஞான கலாம்பையார் திருவெண் காடர்க்குச் சத்வகுணம்ஸம் வாய்ந்த வுத்தம வுபாத்தியாயரைக்கொண்டு கல்வி கற்பிக்கச் செய்துவந்தனர். இங்ஙனம் பிள்ளையார் சிலகாலம் சிறுநூல் பயின்று வந்து, பின்னர் தர்மார்த்த காம மோக்ஷ ஏதுவான தர்ம நூல் பலபயின்று அதிற் றேறியவராய் பால்யத்திலேயே பண்டிதத் திறமைவாய்ந்து கசடறக்கற்ற நூற்றுணிபால் 'கற்றபின், நிற்க அதற்குத்தக' என்ற ஆப்த மொழிக்கிணங்க அறிவொழுக்கங்களிற் சிறந்து அரன் பத்தியில் விரைந்து சிவாராதனம் புரியுமாறு தக்க ஆசிரியரைத்தேடி யெதிர்நோக்கியவராயிருந்து தேடுங்கால் கிட்டாமைபற்றி மனம் வருந்தி அன்னபானுதிகளையுங் காலத் தருந்தாது, அகாலங்களில் மருந்தெனவருந்தி நித்திரை முதலியன வெறுத்துக் குருமூலமாயே சிவபூசைசெய்து கொடுக்கப் பெறவேண்டு மென்னும் பேரவாக்கொண்டு ஆசிரியப் பிரிய ராயிருந்துவந்த வெண்காடர் கனவிலே அவ் வெண்காட்டெந்தையார் ஓ ரந்தணராய்த் தோன்றி, "என் அரிய மதலாய்! திரு வோண நக்ஷத்திரங்கூடிய திங்கள் வார பிரதோஷநாள் நாளையே யானதால் நீ திருவெண்காடு அடையப்பெறின் அங்கோ ரந்தணர் நினக்குச் சிவதீக்ஷை செய்வித்துச் சிவபூசை முறையினையும் செவ்வனே யோதிவிப்பர்" என்றருளி மறைந்தருளினர். இதுகண்ட திருவெண் காடர் நித்திரை கலைந்தெழுந்தவராய்த் தாங்கண்ட கன

வின் கருத்தினைத் தன் தாயர்க்கோதி பின்னர் நித்திரை செய்யாது விழித்தேயிருந்து, மறுநாள் எம்பெருமான் குறித்ததினமாதலின், தன் தாயாரோடும் திருவெண்காடடைந்து அவ்வெண்காட் டையனைக் கண்குளிரக்கண் டடிபணிந்து அகமலர்ந்து ஓர்பிராகாரத்திலே நின்றுகொண்டு தேசிகோத்தமரின் திருவரவை எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். அப்போது கனவிடைத் தோன்றிய கண்ணுதலே அங்கவர் முன் அந்தணராய் வந்தருளினர். அந்நேரமே மிக நன்னேரமெனக்கண்ட பிள்ளையார் இரண்டடி முன் வைத்து, வந்த ஆசிரியர்தம் மடிமலரில் அடியற்ற மரம்போல்வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து அஞ்சலிசெய்து தோத்திரம்புரிந்து நிற்க, அப்போது அவ்வாசிரிய பெருமான் பிள்ளையாரை அருட்கண் கொண்டு நோக்கி “ஏ பிள்ளாய்! எம்மூர் வியாக்கிரபுரம், நேற்றையிரவிலே யிங்குவந்தனம், என் கனவிடையோர் அந்தணர் தோன்றி ‘நீ நாளை உதய வேளையிலே திருவெண்காடடைந்து அங்குகாணப்பெறும் வெண்காடனென்னும் பாலனுக்குத் தீக்ஷைபுரிவாயாக’ வெனக் கூறி, இச்சம்புடத்தையும் அவன் கையிற் கொடுப்பாயாக; இதனுள்ளோர் சிவலிங்க முளது; அது அவனாலே சென்ற ஜெனனத்தில் பூசை செய்துவரப்பெற்றது; அவன் கைக் கெட்டியதும் இச்சம்புடம் தானே திறந்திடும்; அதுமுதல் நீர் அவனுடன் ஓர் மண்டல கால அளவு சேர்ந்திருப்பாயாக’ எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர்; ஆகவே அம்மறையவர் கட்டளையிட்டவாறு இங்குற்று நின்

னைக் கண்டனன்" எனத் திருவாய்மலர்ந்தருளினர். அவ் வார்த்தையைக்கேட்ட திருவெண்காட்டுப் பிள்ளையார் அவ் வந்தணாளர்தம் திருவடித் தாமரையிலே பன்முறையும் நமஸ்கரித்தெழுந்து தோத்திரஞ்செய்து நின்றனர். உட னுகக் குருவுருவாய் வந்தருளிய பெருமான் வெண்காட்டுப் பிள்ளையார்க்குச் சிவதீக்ஷைசெய்து எம்பெருமான் கன விடைவந்துதந்த சம்புடத்தையுங் கொடுத்தருளினர். திரு வெண்காட்டடிகள் அந்த சம்புடம் பெற்றமாத்திரத்தே அது திறந்துகொள்ள, அதனுள்ளே சிவலிங்கமும் விநாயக மூர்த்தியும் இருக்கக்கண்டு பரமானந்தமுற்றவராய், ஆசிரி யர்கூறியவாறுகப் பிள்ளையார் பூசித்துவந்தனர். இதன் மேல் குருவாகவந்த ஐயர் பிள்ளையாரோடும் நாற்பதுநாட் கள்வரையிருந்து அதன்மேற் புறப்பட்டுச் சென்றனர்.


இதன்மேல் வெண்காட்டுப் பிள்ளையார் திருவெண் காட்டிலிருந்துகொண்டே சிவபூசை மகேசுரபூசைகளை முறையே நடத்திக்கொண்டு அங்ஙனே வசித்துவந்தனர். இங்ஙனம் நிகழும்போது நாளடைவிலே முன்னுள்ளதான பொருள்கள்யாவும் செலவழிந்துபோக, அதன்மேல் பூசை க்குப் போதுமான பொருளில்லாமைபற்றிப் பிள்ளையார் மனமிகவருந்தியிருந்தனர். இவ்விஷயமறிந்த அன்னையா ரும் வறுமைநோயைக்குறித்து வருந்தலாயினர். இவ்வாறு நிகழும்போ தொருநாளிரவிலே சிவபெருமான் பிள்ளையார் கனவிடைத் தோன்றியவராய் "ஏ மெய்யன்பனே! நீவருந் துத லொழிக; நின் வீடு முற்றும் பொன்னும் மணியும்

குப்பல் குப்பலாயிருக்கும்படிச் செய்துள்ளேம்" எனத் திருவாய்மலர்ந்து மறைய, இஃதறிந்த உத்தம பக்தப் பிள்ளையார் துயில்நீத் தெழுந்தவராய்த் தன் அன்னையார் பால் தான் கண்ட கனவின் விசேஷத்தை யோதினர். பின்னுஞ் சற்றுநேரத்திற் கெல்லாம் பொழுதும் விடிந்தது; காவலர் வாயிலாகத் தம்மில்ல முற்றிலும் பொன்னும் மணியும் நிரம்பியிருத்தலை வெண்காட்டடிகள் தெரியலாயினர். சிவபூஜா கைங்கரியாதிகட்கு முட்டுப்பாடாயிருந்தது நீங்கியதேயென்று மனக்களிப்படைந்தவராய்ச் சிவபூசை, குருபூசை அதிதியர்பூசை முதலிய பதிபுண்ணியாதிகளை விதிப்படிச்செய்து, பின்னர் தம் காவிரிப்பூம் பட்டினம் சென்று ஆங்கே தமக்குரிய இல்லற தர்மாதிகளையும்நடத்திக் காலங் கழித்தனர்.

இவ்வாருகச் சின்னுட் செல்ல, வெண்காட்டுப் பிள்ளையார்க்கு விவாக காலம் அடுத்ததையறிந்த அன்னையார் புத்திரசிகாமணியார்க்கு இனித் திருமண முடித்திட வேண்டுமென்னும் உறுதிகொண்டு உற்ருர் பெற்ருர் முதலிய உறவின்முறையாரையும்கலந்து அறிந்துகொண்டு அக் காவிரிப்பூம் பட்டினத்திலேயே வேளாளர் மரபிற் சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்தவராயுள்ள சிதம்பர செட்டியாரென்னும் சுத்த சைவ சிகாமணியார்க்கும் அவர்தம் தர்ம பத்தினியாராகிய சிவகாமியம்மையார்க்கும் தவப்புத்திரியாய் விளங்கியுள்ள சிவகலை யென்னுஞ் செல்வியரை மணஞ் செயப் பேசி முடித்துச் சகல வைபவத்தோடும் உத்தம


ஓரையிலே திருவெண்காட்டுப் பிள்ளையார்க்குத் திருமண முடித்து அதன்மேல் பிள்ளையாரும் பத்னியுமாக விதிப்படி இல்லற நடாத்தி வரும்போது சிவபூசை அடியார்பூசை முதலிய பதி புண்யாதிகளையும் நியமமாகச் சிரத்தாபத்தி யோடும் புரிந்து வரும்போது சிலகாலம்வரை அதாவது 35 வயது வரையிலும் பிள்ளையார்க்குப் புத்திரப்பேறில்லாது அதுவிஷயமாகச் சிறிது மனங்கவன்று மருதப்பரது திரு வடிக்கண் அன்புவைத்துப் பூசைசெய்து வந்தனர்.

இவ்வாறாக, திருவிடைமருதூரிலே சிவசர்மாவென் னும் ஓர் அந்தணசீலர் தம் பத்னி சுசீலையென்பாளோடும் இல்லறதர்மமாற்றிவருங்கால் அவர்க்குரிய பொருளனைத் தும் அடியவர்பூசை, சிவபூசை முதலிய கைங்கரியாதிகளில் ஈடுபடுத்திவர, அதனால் தம்மிடமுள்ள பொருளனைத்தும் சுருங்கி வறுமையெய்தி வாழ்நாள் செலுத்துவது மிகக் கஷ்டமாயிருக்கிறபோது மருதப்பன் அவ்வந்தணர் கன விலும் அவரது பத்னியார் கனவிலுமாகத் தோற்றி "அன் பர்களே! நம் ஆலயத்திலுள்ள சிவகங்கைக் கரையின்கண் ஓர் வில்வ விருக்ஷமிருக்கிறது; அதனடியிலே யாம் ஓர் சிசு ரூபமாய்ச் சயனித்திருப்போம்; நீங்கள் அதுகண்டு எடுத் துக்கொண்டுபோய்க் காவிரிப்பூம் பட்டினத்தில் குழந்தை யில்லா தருந்தவம்புரியும் திருவெண்காடர்பாலளித்து அச் சிசுவிடைப் பொன்பெற்றுவந்து உங்கள் வறுமைநோய் களைவீர்களாக" என்றருளி மறைந்தருளினர். இப்பால் அச்சிவாக்கினைபிரகாரம் மற்றைநாள் அந்தசிவசருமர் அவ்



சிவபிரானாகியகுழந்தையை சிவசர்மாவும், சுசீலையும் கண்டுகளித்தல்.

வில்வ விருக்ஷத்தின் அடிப்பிரதேசத்திலே ஓர் குழந்தை சயனகோலமாக விருப்பக் கண்டவராய் அக்குழவியைப் பெற்று மார்போடணைத்துவந்து தம்மனைவிபாற் சேர்ப்பிக்க, அக்குழந்தையையேற்ற அவ்வம்மையார் சிசுவின் திருவழகை நோக்கிக் களிப்பெய்தி ஆஹா! பெருக்காறொத்த செல்வத்தின் பொருட்டாகவோ இத்தகைய திருவருட்செல்வக் குழந்தையை விற்பது! என்னெஞ்சம் கொஞ்சமேனும் சம்மதிக்கவில்லையே!" என வருந்தி நிற்ப, சிவசருமர் ஐயன்கூறியன கொண்டு காவிரிப்பூம்பட்டின மடைந்து ஆங்குள்ள சோலையினோர்பால் அமர்ந்திருக்க, அப்போது எம்பெருமான் வெண்காடர் கனவிலும் அன்னார் பத்னி சிவகலையார் கனவிலுமாக வெளிப்பட்டு "ஏ மெய்யன்பர்காள்! தங்கள் இல்லத்தின் அருகேவிளங்கும் சோலைக்கண் சிவசரும ரென்கிற அந்தணசீலர் தம் மனைவியோடும் வந்து ஓர் குழந்தையையும் வைத்துள்ளனர்; ஆதலால் நீவீர் அவர்கள்பாற்சென்று அவர்களை உபசரிப்போடும் அழைத்துச்சென்று இல்லத்திருத்தி அவ்வம்மையின் கைவசமுள்ள குழந்தையின் யெடையளவினதான பொருள்கொடுத்து அச்சிசுவைப்பெற்றுக்கொள்வீர்களாக. அக்குழவிதான் தங்கள் இருமைக்கும் ஏற்றதோர் உறுதித் துணையாய் நிற்பது." என்று அநுக்ரகித்து மறைந்தருளினர். உடனே வெண்காட்டடிகளும் மனைவியாருமாகச் சென்று சிவசருமரையும் சுசீலையையுங்கண் டானந்தித்து ஐயன் அநுமதித்தவாறே அவர்களுக்கு உரியபொன்பொரு



சிவசர்மர், சுவேதாரண்யரிடம் குழந்தையைகொடுத்து குழந்தை எடையுள்ளபொன்பெறுதல்.

ளீந்து செல்வக்குழவியைக் கைப்பற்றிக் கொண்டனர்கள். பின்னர் ஐயரும் அம்மையும் தியானசிந்தையோடு திருவிடை மருதூர்க்குச் சென்றனர்கள்.

இவ்வண்ணம் அப்பன் திருவருளினாலே வாய்த்து ள்ள அருங்குழவிக்கு வெண்காட்டுப் பிள்ளையார் "மருதப் பிரான்" எனுந் திருநாமஞ்சூட்டி அவ்வருமந்த குழவி யைத் தம் மாவித்துணையாய்க் கொண்டாதரித்துக் காப்பா ற்றிவந்து தக்கவயதில் கல்விச்சாலையில்வைத்து வித்தாரம் பம் செய்வித்தார்கள். இப்படியாக அவனருளால் கிடைக் கப்பெற்ற அருந்தவக் கொழுந்தாம் மருதப்பிரான் எனுங் குழந்தை, பிள்ளையார்தம் பெருங்குல முற்றிலுமே விளக்க வந்த பெருஞ்செல்வமாய் உலகோர் யாவர்களும்கண் டின் புறத்தக்க அதிவினையத் திருவிளையாடல்க ளாற்றிவந் தனர். அவ்விளையாடல்கண்ட தந்தை தாயர்கள் விந்தை யெனக்கொண்டு பெரிதும் வியந்தனர். பின்னே மருதப் பிரான் தினந்தவறாது பள்ளிக்குச்சென்று பாடம்படித்துக் கல்வியிற்றேர்ந்து, வல்லுனரென்னும் பெயரை நல்லோர் வாயிலாகப்பெற்று ஆண்டுகள் பதினறடையப்பெற்றனர். இங்ஙனமாக, ஓர்போது தந்தைபால்வந்து என் அன்பான எந்தையே! இனியான் நாவாய் மூலம் கடற் பிரயாணஞ் செய்து தக்க தேயத்திலே வாணிபமிடற்றிப் பொருளீட் டற் கிச்சைகொண்டுள்ளேன். அதற்குத் தங்களநுமதி வேண்டுகின்றேன் என்னலும், இம்மொழிகேட்ட வெண் காட்டடிகளார் பிள்ளையின் தீவிரத்துவமுணர்ந்து தீரத்

தையுமறிந்தாரேனும், இளம்பிராயநோக்கி அநுப்ப மனந் திடப்படாது மயங்கிப் பின்றெளிந்து குமாரனது மனோ ஊக்கப்பாட்டினையும் குலத்தொழில் விர்த்தியையு மோர்ந் தவராய் 'அப்பனே! நின் எண்ணப்படியே செய்துவருவா' யென்று அநுமதித் தநுப்பலாயினர். உடனே மருதப் பிரான் நல்ல ஓரையில் நாள்கொண்டு அரியபெரிய நண்பர் சிலரோடும் நாவாயேறிச்சென்று ஓர் தீவிற்றங்கி அந்நகர த்தில், கொண்டு சென்ற பலபண்டங்களான சரக்குகளை யிறக்கி விலைகூறி விற்கிரயஞ்செய்து கிடைக்கப்பெற்ற பொ ன்னைக்கொண்டு ஆங்கே சில தர்மப்பணிபுரிந்து மிஞ்சிய பொருள்களுக்கு அத் தீவாந்தரத்திலேயே விராட்டிச்சரக் கையும் தின்பண்டங்களாகிய அவல் கடலையையும் மூட்டை க்கணக்காய் கொள்முதல்செய்து கப்பலி லேற்றிக்கொண்டு காவிரிப்பூம் பட்டினம் நோக்கிப் பாய்மரந் தூக்கினர். இவ் வகையான வியாபாரங்கண்ட நண்பர்களும் ஏனையோரும் ஈதென்ன, மருதப்பிரானுக்கு ஏதும் சித்தப்பிரமையுண் டோ? இன்றேல் இவ்வியாபாரம் செய்யத் துணியாரே! என ஒருவரோடொருவராகப் பேசிக்கொண்டே கப்பலில் வந்தனர்கள். இவ்வாறாகக் கப்பல் திரும்பி ஓடிவருகிற போது மத்தியிலே மருதவாணர் கிருபாவிசேடத்தால் காற்று மழையுமாகக் கலந்து அதி வேகமாய்வீச, கப்பல் செல்ல வேண்டிய மார்க்கம் தவறி வேறுவழி செல்ல லாயின. ஆகவே கையிருப்பிருந்த ஆகாரப் பொருள்கள் தீரும்வரை சரியான மார்க்கம் விளங்கவில்லை கப்பலிலுள்

ளார் அனைவர்க்கும் பசிப்பிணி வருத்தவே அன்னோரனை வரும் மருதப்பிரானைக்கண்டு ஐயனே! இப்போது எங்கள் பசிக்கு உணவாக அவல் கடலை தாருங்கள், குளிர் நீங்க எருமுட்டை கொடுங்கள் எனக்கேட்டனர்கள். அதுகேட்ட மருதப்பிரான், ஏ நண்பர்காள்! யான் இக் கப்பலோடும் நம்பட்டினஞ் சேர்ந்ததும் யான் தங்களுக்குத் தரவிருக்கும் எருமுட்டைகள் எம்மட்டோ அம்மட்டும் கப்பல்விட்டிறங்கியவுடனே எனக்கு வருவித்துத் தருவித்தல்வேண்டும் என்றுகூறி ஒப்புதல்பெற்ற உறுதிமொழிச் சீட்டொன்று எழுதிப்பெற்றுக்கொண்டு அதன்பின்னரே தம்மிடமுள்ள விராட்டிகளைத் தந்தனர். அதன்மேல் மார்க்கந்தவறிச்சென்ற கப்பல் நேர்வழிதெரிந்து ஓடிக் காவிரிப்பட்டினத் துறைமுக மடைந்தது. மரக்கலமுள்ளார் அனைவரும் துறைமுகத்திறங்கி நகரடைந்து சிலர்மட்டும் திருவெண்காடரைச் சேவித்து அவர்பால் "ஏ ஐயனே! தம் புதல்வர்க்குப் புத்தி யுன்மத்தமாயிருக்கிறது; சித்தம் சிதறியதோ யாதோ தெரிந்தில" மென்றுகூறி அதன்மேல் தங்கடங்கள் வீடுபோய்ச் சேர்ந்தனர்கள். உடனே திருவெண்காட்டடிகள் தம்புதல்வர் கொண்டுவந்த விராட்டி மூட்டைகளையும் அவல் கடலை மூட்டையையும் பிரித்துப் பார்க்க, எருமுட்டைகளில் இரத்னக்கற்களும், அவல்மூட்டையில் பொற்கட்டிகளுமாக விரவியிருக்கக்கண்டு அதியாச்சரிய முற்றனர். மற்றும் கலம் கடலி லோடிவரும் போது எருமுட்டை பெற்றவர்கள் எழுதிக்கொடுத்த சீட்

டும் அகப்பட்டது. அதுகண்ட வெண்காட்டடிகள் அக மிக மகிழ்ந்தனர். நிற்க; விராட்டி மூட்டையிலும் அவல் கடலை மூட்டைகளோடும் மாணிக்கங்களும் சொர்னக்கட்டி களும் கலந்தொளிரக்கண்ட மருதப்பிரானும் ஏனையோரும் ஆ ஹா! ஈ தென்ன ஆச்சரியகரமாக விருக்கிறதே! யாம் எருமுட்டைகளுக்குச் சீட்டெழுதித்தந்து வாங்கினோமே! இப்போ திவர்கட்குக் கொடுக்கும்போது அவ்விதமாகவ ன்றோ கொடுத்தல்வேண்டும்போல் தோன்றுகிறதே! என் செய்வது! தெய்வ சங்கற்ப மிவ்வாறுயிற்றே! என்று பல ரும் பற்பல விதமாய்க்கூறி மனம் வருந்தினர்கள். இதன் மேல் வெண்காட்டடிகளார் தம்புதல்வரது வியாபாரத் திறங் கண்டுகளித்தவராய் மீண்டும் அவரைக் காண்பான் இருப்பிடந் தேடிச் சென்றுபார்க்க, அவர் அங்கில்லையா கவே அவரைத் தேடித் திகைத்து யாண்டுங் காணுப் பெரி தும் மனமயக்கங் கொண்டிருந்தனர். மருதப்பிரான் ஏர்க் கனவே திருவிடைமருதூரிலே தம்மை மறவாது போற்றிப் புசிப்பித்துக்காத்துவந்தசிவசருமருக்கும் அன்னவர்மனைவி யார்க்கும் அத்வைத முத்தியளித்துப் பின்னர் ஆங்கெழுந் தருளியுள்ள மகாலிங்க மூர்த்தியோடும் இரண்டறக் கலந் தருளினர்.

இச்செய்தி கேட்டறிந்த வெண்காட்டுப்பிள்ளையார் மனக்கவலையுற்று முகக்கமலமும் வாடியிருக்கும்போது அவர்தம் மனைவியார் சிறு பெட்டக மொன்றைக் கொணர் ந்து "ஏ ஐயனே! தம்புத்திரர் இப்பெட்டகத்தைத்தங்கள்

பால் தந்தருளுமாறு கொடுத்துச்சென்றனர்" எனக்கூறிப் பெட்டகத்தை நாதன்திருமுன் வைத்துச் சென்றனர். உடனுக வெண்காட்டுப்பிள்ளையார் மிகவிருப்போடும் அப் பெட்டகமெடுத்துத் திறந்து பார்க்க, அதிலே காதற்ற ஊசியொன்றும் ஓலைச்சுருளொன்றுமாக விருப்பக்கண்டு, ஓலைச்சுருளெடுத்து வாசித்துப்பார்க்க, "காதற்றவூசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என வரையப்பட்டிருந்தது, பிள்ளையார் அம்மெய்ம்மொழியைப் பார்த்த மாத்திரத்தே சிறிதுந்தாழாது அந்த க்ஷணமே துறவாச்சிரமம் பெற்றருளினர். பின்னர் தம் தலைமைச் சம்பிரதியாகிய சேந்தனுரை வருவித்துத் தம்பொருளனைத்தும் வறியார் கொள்ளுமாறு கொள்ளையிடக் கட்டளையிட்டருளித் தன்னை யின்ற அன்னைநிமித்தமாக வெளிப்போகாதபடி அந்நகர்க் கணித்தாயுள்ள ஓர் மண்டபத்திருந்துகொண்டு வீடெங்கும் பிச்சையேற்றுண்டு மெய்ஞ்ஞான நிட்டை மேவப் பெற்றிருந்தார். ஆனல் அவரது கொள்கை அப்போது பந்து மித்திராளுக்கு மிக இழிவாகத்தோன்றிற்று. நிற்க; அவரது தமக்கையார்க்கு இவர்செய்கையைப் பார்த்ததும், நம் பார்வையிலேயே எந்த வீட்டினுஞ் சென்று பிச்சையெடுத்துண்டு நமக்கு மானயீனம் உண்டுபண்ணுகின்றனே யென்று மனமிகவருந்தினவளாய் இத்தீயனை எவ்விதத்தும் கொல்லலே முறையெனக்குறித்து விடங்கலந்த ஓர் அப்பத்தைத் தயாரித்து அதனை அன்னுருண்ண அநுப்பிவைத்தாள். அவ்வஞ்சக் கொடுஞ் செயலைப்பிள்ளையார் திரு

வருள்கொண்டு தெரிந்தவராய் அதனைப் பாதியாகப்பகுந்து ஓர் பாதியைத் தன் தமக்கைவீட்டிறப்பிலேயே செருகினர். உடனே அவ்வில்லம் அக்கினிபற்றியழிந்தது.

சின்னாள்சென்ற பின்னாள் பிள்ளையார்தம் அன்னையார் தற்செயலாய்ச் சிவபதமெய்தினர். அப்போதுள்ள உறவின்முறையார் அவ்வம்மைச் சவத்தை வழக்கம்போன்று சகலகாரியாதிகளுமுடித்து மயானங்கொண்டு போயினர். அவ்விஷயமுணர்ந்த பிள்ளையார் ஆ ஹா! இக்கடனுக்காகவே நாம் யாண்டுஞ்செல்லாது இங்ஙனே சுற்றித் திரிந்தும் மிஞ்சிவிட்டதேயென்று வெகுவேகமாக மயானமோடிச் சுடலையடைய, அங்குள்ள உற்றார் மற்றுரெவரும் அருகில்நில்லாதகல, உடனே வெண்காடர் பிரேத தகனத்தம் ஆங்கு அவர்களால் அடுக்கப்பெற்றுள்ள விறகனைத்தும் எடுத்தெறிந்துவிட்டுப் பசுங்கதலித்துண்டங்களைப் பறப்பி அதன்மீது மாதாவைக்கிடத்தி என்புருகச் சிற்சில இரங்கற் பாசுரங்கள்பாட, அங்ஙனே குபீலென்று அக்னி பற்றியெரிந்தது. பின்னர் பிள்ளையார் மேலே ஆகவேண்டிய கிரியாம் சங்களைத் திறம்படநடத்திவிட்டுத் தாம் திருவிடை மருதூர்க்குச்சென்று அப்பனம்மையடிபணிந்து அப்பதிவிட்டகன்று அநேக திவ்யதிருத்தலங்கள்சென்று சுவாமிதரிசனஞ்செய்து ஆங்காங்கு தோத்திரங்கள்பாடியருளித் திருவாரூரை யடைந்தனர்.

வன்மீகநாதர் எழுந்தருளியுள்ள திருவாரூரிலே பிள்ளைப்பெருமான் சிலகாலம்வரை வாசஞ் செய்திருக்கும்

போது அவர்க்குத் தொண்டுபுரிவான்வேண்டி ஒருவன் தானாகவே திருவருள்கூட்டத் தொண்டனாயமர்ந்து பணி செய்துவந்தனன். ஓர் நாள் அத்தொண்டன் எண்ணெ யிட்டுத் தலைமுழுகியவன்று உறக்கங்கொள்ளாது காம யிச்சை கொண்டவனாய்த் தன்மனைவியோடுங்கலந்து வந் தனன். அதுகாரணமாக அன்னவன் சன்னிநோய்க்கு ஆட்பட்டு மரணமாயினன். இவ்விஷயமறிந்த பிள்ளைப் பெருந்தகையாளர் அவனிடஞ்சென்று திருவருள்கூட்ட அவனை உயிர்பெற்றெழச்செய்தனர்.

இதன்மேற் பிள்ளையார் ஆரூரைவிட்டகன்று கொ ங்குநாடுசென்று மகா மௌனவிரதம் பூண்டவராய் ஞான நிட்டை கூடியிருந்தனர். அப்போது ஓர் தினம் நடுராத் திரியிலே பசிப்பிணிவருத்த ஓர் கசடன் வீட்டுவாயிலை யடைந்து அங்கே கைதட்டி நின்றருளினர். அவ்வில்லக் கசடன் சுவாமிகளை யறியானாய்க் கோல்கொண்டு ஐயனது மெய்யில் அடித்தனன். அன்றுமுதலாகப் பிள்ளையார் தாமிருக்குமிடத்திற்கு எவரும் பிக்ஷைகொண்டுவந்தாலன் றித் தாம்போய்க் கேட்பதில்லை யென்ற விரதமேவினர். இதன்மேல் கொங்குநாடுவிட்டுப் புறப்பட்டுத் துளுவ நாடடைந்து அநேக அரியஸ்தலங்களையடைந்து தரிசித்து உஞ்சேனை மாகாளஞ் சென்று ஆங்குள்ள சிவபிரானைத் தரிசித்து விநாயகராலயம் புக்கிருந்து நிஷ்டை கூடி யிருந்தனர்.

இப்படியாகச் சிலபோது அங்குதங்கி அவ்விநாயகராலயத்திலே பிள்ளையார் நிட்டையிலிருந்துவர, ஓர்நாளிரவிலே திருடர்கள் பலர் ஒன்றுகூடிப் பத்திரகிரியார் தம் அரண்மனையில் களவுகொள்ளத் தீர்மானித்து அவ்விநாயகராலயத்திலுள்ள கணேசபெருமானை வேண்டிக்கொண்டு அரசனது அரண்மனைபுகுந்து பட்டு பீதாம்பரங்களென்ன, அரிய ஆபரணாதிகளென்ன, மற்றுள்ள பொன்பொருள்களென்ன இவையனைத்தையும் களவுகொண்டு திரும்பும்போது அவ்விநாயகராலயத் தண்டையில்நின்று அவரை வேண்டிச் சென்றமைகொண்டு ஓர் மணி மாலையை அவர் கழுத்தில் விழவீசவும், அம்மாலை அந்த கணேசர் கழுத்தில் விழாது அருகிருந்த நமது வெண்காட்டடிகளார் கழுத்தில் விழுந்தது. திருடர்கள் இம்மாலை மாற்று அறியாராய் விரைவிற் சென்று விட்டனர். இங்கிவ்வாறாக, அங்கு அரண்மனையில் களவு போனது அதி காலையில் அறிக்கை யாளர்களால் அரசனறிந்து திருட்டுப்போன விவரத்தைப்பற்றித் துப்பறியச் சில காவற் காறர்களை வெளிக்கடத்தி, அவர்கள் புறம் போந்து பார்க்கையில் அவ்விநாயக ராலயத்தின்கணுள்ள வெண்காட்டடிகள் கழுத்தில் அரசனது மாணிக்கப்பதக்கம் பளீரென ஜொலிக்கக் கண்டவர்களாய் இதோ அகப்பட்டான் திருடனென ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவரைப்பிடித்துக் கடிந்து துன்புறுத்தவே, அவர் நிட்டை கலைந்தது. உடனே காவலாளர்கள் பிள்ளையாரை அரண் மனைக்குக் கொண்டு

சென்று இராஜ சபைக்கணிறுத்தி விசாரணையால் உண்மையறிய வியலானுப் கள்வனிவனே யெனத்தீர்மானித்துக் கழுமரத்தேற்றக் கட்டளையிட்டனன். அதுகேட்ட கொலைஞர்கள் பிள்ளையாரைக் கழுமரத்தண்டையில் கொண்டு நிறுத்தினர். அப்போது திருவருள்வழி நின்ற பிள்ளைப்பெருமான் "என்செயலாவது யாதொன்றுமில்லை" யென்பதாதியாயுள்ள திருப்பாசுரமொன்று பாடியருள, அப்போது கழுமரம் குபீலெனத்தீப்பிடித்தெரிந்து சாம்பராயது. இஃதறிந்த பத்திரகிரி மன்னர் அந்தோ! என் செய்தோமென விரைந்து சென்று சற்குரு நாதன் திருவடியிலே முடிபடவிழுந்து நமஸ்கரித்தெழுந்து அஞ்சலியஸ்தராகித் தம்மைத் தாமறியாது மயக்குற்றிருந்தனர். அப்போது ஞானமூர்த்தியான பட்டினத்தடிகள் பத்திரகிரி மன்னர்க்கு ஞானச்சுடர் கொளுத்தி அவரைத் திருவிடை மருதூர்க்குச் செல்லுமாறு உத்திரவளித்துப் பிறகுதாமும் பல க்ஷேத்திரங்களெங்கும் யாத்திரை சென்று பின்னர் திருவிடை மருதூரை யடைந்திருந்தனர். யேர்க்கனவே அங்குற்ற பத்திரகிரி ஸ்வாமிகள் பிக்ஷைகொண்டு தம் குருநாதருக்கு அன்னமுன்ன மருத்தி மிச்சத்தைத்தாம் பின்னருந்துவர். பத்திரகிரி சுவாமிகள் அங்கு ஓர் நாய் வளர்த்து வந்தனர். அந்நாய் திருவருள்கொண்டிறந்து காசிமன்னர்க்குப் புத்திரியாய்ஜனித்து மீண்டும் திருவிடை மருதூரில்வந்து ஆங்கெழுந்தருளியுள்ள பத்திரகிரி சுவாமிகளையே சற்குருவாய்க்கொண்டு அவர்க்கே பணிபுரிந்து

வந்தது. இப்படி நடந்தேறுங்கால் பின்னோர் சமயம் இவ்விருவர்களின் முன்னர் அகஸ்மாத்தாய் ஓர் ஜோதியெழ, அச்சுய பரஞ்சோதியிலே பத்திரகிரியாரும் பணிபுரிந்து வந்த காசிராஜன் புத்திரியுமாக இருவர்களும் கலந்தருளினர். இவ்வற்புத முணர்ந்த பட்டினத்தடிகளார் உடனே சிவாலயம் புகுந்து எம்பெருமான் முன்னின்று "திருவருட் தெய்வமே! அனைை யடிமையை இன்னமும் இப்பூமியில் கிடக்கவிட்டிருப்பதன் திருவுளக் குறிப் பறிந்திலனே!" என வருந்திக்கேட்க, அப்போது "ஏ திருவெண்காட்டடிகாள்! நீவிர் வருந்துத லொழிந்து நம் மொற்றியூர் வருவாயாக" என வோர் அசரீரிவாக்குப் பிறந்தது. அவ்வருட்டிருவாக்குப் பிறந்ததுணர்ந்த பிள்ளையார் எம்பிரான் திருவுளக் குறிப்புணர்ந்தவராய்த் திருவெண்கா டடைந்தார். இச் செய்தியுணர்ந்த சேந்தனாது மனைவியு மைந்தரும் பிள்ளையார்பால் அணுகி அவரது திவ்ய திருவடியை வணங்கிநிற்ப, அன்னவர்களை வெண்காடர் கண்டு நீவிர் யாவரோ? என வினவ, அப்போது சேந்தனாது மனைவி சுவாமிகாள்! அடிமை தேவரீரிடம் கணக்கெழுதிவந்த சேந்தனார்தம் மனையாள் என்றும், இன்னவன் என் புதல்வனெனவுங் கூறிப் பின்னர் சுவாமிகள் உத்திரவுபிரகாரம் சேந்தனார் தேவரீரது திரவியாதி பொருள்களனைத்தையும் கொள்ளையிடச் செய்தனர். இஃதறிந்த வரசன் உண்மையறியானுய்ச் சேந்தனார் செய்கையில் ஐயமுற்று அவர்க்கு விலங்கிட்டுச் சிறைக்கனுப்பினன். ஆகையால் அன்னாரைச்

சிறை மீட்டருளவேண்டும் என்று பிரார்த்தித்தித்து நமஸ்கரித்தனள். இதுகேட்ட வெண்காடர் சிவபரஞ்சுடரைத் தியானிப்பாராயினர். உடனே கணேசரது திருக்கருணையினாலே சேந்தனார்க்கிட்ட விலங்கு முறியப்பெற்று அவர் சிறையி னின்றும் புறம்வந்து பட்டினத்தையனைத் தரிசித்து வணங்கி, அடிமையின் ஆன்மசிறையும் இத்துடன் விலக்கியருளல்வேண்டும்" என நமஸ்கரித்திருந்தனர். உடனே வெண்காட்டடிகளார் சேந்தனார்தம் பரிபக்குவ முணர்ந்தவராய் "இனி நீ ஸ்ரீ சிதம்பரதலம் சென்று விறகு வியாபாரஞ்செய்து அதனா லெய்தப் பெறும் இலாபங்கொண்டு சிவபூசை மகேசுரபூசை முதலான பதிபுண்ணியங்களாற்றி வந்து இல்லற தர்மம் நடத்தி வாழக்கடவாயென்று ஆக்ஞாபித்தனர்.

இதன்பின்னர் அடிகளார் திருவெண்காட்டைவிட்டு நீங்கிச் சீகாழி, சிதம்பரம், காஞ்சிவரம், காளத்தி, திருவாலங்காடு முதலான சிவக்ஷேத்திராதிகளை யெல்லாந் தரிசித்துத் திருவருட்டுதிபுரிந்து கடைசியாகத் திருவொற்றியூரையடைந்தனர். அப்பதியின்கண் பிள்ளையார் சிலகாலம் வரை வசித்திருந்து பற்பல துதிப் பாசுரங்களோதியும், சிலசமயங்களில் கடற்றுறையையடைந்து அங்கு ஆடல்புரியும் பையல்களோடும் சேர்ந்து அதிவிநோத விளையாடல்கள் புரிந்தும் வருவர். இங்ஙன மியற்றிவரும் நாளி லோர் தினம் பிள்ளைப் பெரும்வள்ளலார் ஆண்டுள்ள ஓர் குழி கண்டு அதற்கண்ணிறங்கி மறைந்தருளினர். இவ்வதிசய

முணர்ந்த விளையாட்டுப் பிள்ளைகள் அந்தோ! ஈதென்ன புதுமை! தற்போது நம்முடனேசேர்ந்து விளையாடி அற்புதங்கள் பல புரிந்துவந்த பெரியோர் இக்குழியிலிறங்கினவரைக் காண்கிலமே! யெங்கு சென்றிருப்பர்?'' எனத் தேடும்போது ஐயன் ஓர் மணற்குன்றி னுச்சியிலேதோன்றியருளினர். அப்போது தேடிய பிள்ளைகள் அவரைக் குன்றின்மேற்கண்டு அவர்பாற்செல்ல, உடனே அவர் பழய குழியிற் குதித்து மறைந்தருளினர். இஃதோர் முறையன்று; பலமுறையும் ஐயன் அப்பிள்ளைகட்கு ஆடலியற்றி வந்து கடைசியாகத் தாம் குழியிலிறங்கி யிருந்துகொண்டு சிறுர்களை நோக்கி "எனது ஆப்த நண்பர்களே! நீங்கள் என்மீது தயவுசெய்து இந்தச் சால் பாண்டத்தைக் கவிழ்ப்பீர்களாக;'' என்று வேண்ட, ஏது மறியாச் சிறுவர்கள் அத்திருமொழி கேட்டலும், அவ்வாறே சாலெடுத்துச் சாற்றிச் சிலநேரஞ்சென்று கவிழ்த்தசாலை மீண்டுந்திறந்து பார்க்க, சுவாமிகள் காணுது அக்குழிக்கண் சிவலிங்கப்பெருமான் விளங்கக்கண் டதிசயித்தவர்களாய் நகர் நடுப்புக்கித் தாங்கள் கண்கூடாகக் கண்ட அற்புதக் காட்சியினைப் பல்லோர்க்குத் தெரிவிக்க, அதுகேட்ட நகருள்ளார் ஓராயிரவர்க்கு மேலாகத் திரள் திரளாய்க் குழுமிக் கடலோரஞ்சென்று பெருமானது சிவலிங்கவடிவங்கண்டு ஆநந்தங்கொண்டு நமஸ்கரித்துவந்தனர். இவ்வற்புதம் எங்கணும் பெருவழக்காய்ப்பெருகவே, பலபாகங்களிலுமிருந்து எண்ணிறந்தார் தினந்தினமும் வந்துவந்து தரிசித்து வணங்கிச்

செல்வாராயினர். இதன்மேல் அருளுரு வெய்தப்பெற்ற ஐயன் மனைவியாராய சிவகலையம்மையார் திருவருள்தெய்வத் திருச்சந்நிதிக்கு முன்னிடமமர்ந்து சுவாமிகளார் திவ்ய திருவடிக்கமலங்களில் இடையறுத அன்புசெலுத்தி அதேதியானமாயிருந்துவந்து கிடைத்தற்கரிய பரசிவபதமடைந்தனர்.

பட்டினத்துப்பிள்ளையார் குருபூசாதினம்.

வெண்பா.

ஆடியுத்திராட மவிர்பூம்புகார்த் திருவெண்
காடரொற் றித்தியாகர் கவின்பதியில்-நீடுமணை
விற்கோலியன்னுட் டிளைஞர்கோ லந்தரித்துச்
சிற்கோல மான தினம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருப்பாடற்றிரட்டும்

உடயார்த்த தீபிகையுரையும்.

கோயிற்றிருவகவல்-க.

நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொ னம்பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே.

(பொழிப்புரை.) ஏ நெஞ்சமே! தியானிப்பாயாக; நெஞ்சமே! தியானிப்பாயாக; பரசிவபெருமானை; செம்பொற் சபையின் கண்ணே ஆநந்தத் தாண்டவம் புரிகின்ற நடராஜ பெருமானை; நெஞ்சமே! தியானிப்பாயாக; நெஞ்சமே! தியானிப்பாயாக.

ஏ நெஞ்சமே! எல்லாம்வல்ல இறைவனும் சிவ பெருமானை நீ தியானிப்பாயாக என்பது கருத்தாம்.

(குறிப்புரை.) முதற்கண் சிவபெருமானை யென்றது பொது வகையால் எல்லாம் வல்ல இறைவனாகியும், மனவாக்குக் கெட்டாத அருபஞான சொரூபத்தினையும், பின்னர் சிறப்புவகையான் செம் பொனம்பலவனை யென்றமையால் திவ்ய பொற் சபையின் ஞானா காயத்தின் கண்ணே எம்பெருமான் அம்பலவாணராய்ச் சர்வான்மாக் களு முய்யுமாறு தமது திருவருட் சத்தியையே திருவுருவாய்க் கொண்டருளி செய்தருளும் ஒப்பற்ற தலைமை உரிமைத் தொழி லாம் பஞ்சகிருத்திய சுத்த நிர்த்தத்துவத்தினைக் குறித்துப் பிள்ளை யார் அங்ஙனங் கூறியருளினரென நன்கு விளங்குகின்றது.

இன்னும், “அருளம்பலத்தி லருளுருவாகிச், சிகாரம் பிரமந் திரைமலநீங்கி, யகாரவுயிர்தன் னடியிணை சேர்வான், றிருநடஞ் செய்யுந் திருத்தில்லைக்கண்ணே.” என்றபடி, அருளே திருமே னியாக் கொண்டு அகிலாண்டகோடிக ளனைத்தும் தமது திருவ ருட் சத்தியைக்கொண்டு பஞ்ச கிருத்தியங்களா லாற்றி, ஈற்றில் அநுக்ரகிக்கும் கருணாகரன், பிரமேந்திராதி தேவர்கட்கும் வேத ங்கட்கும் யேனையோர்க்கும் அறியப் படானாய், எத்தேவர்க்குமிறை யாய் விளங்கலானும், மற்றைச் சர்வஸ்தலங்களினு முள்ள மூர்த்திக ளெல்லாம் விராட் புருடனது இதயாம்பரமாய ஞானகாய வெளி யிலே நிரதிசயாநந்தத் தாண்டவம்புரிந்து ஆன்மாக்களைத் தமது திரு வடித் தாமரையில் லயிக்கச்செய்யும் பரம கருணாகரரான அம்பல வாணர்தம் அர்த்தயாம ஆராதனைக்கு வந்தொடுங்கலானும், மற் றும், சிவசம்பந்தமான என்னூற்கு முன்னெடுப்பில் “திருச்சி ற்றம்பல மென்றெடுத்து முடிவிலும் திருச்சிற்றம்பலமென்று முடி த்தலானும் இத்தலமும் இத்தலத் தண்ணலாரும் இறைவராயினமை யின் இப் பொன்னம்பலவனை முன்னங்கொண்டு ‘நினைமின் மன னே நினைமின் மனனே சிவபெருமானைச் செம்பொ னம்பலவனை’ யென்றனரென்க.

இனிச் சுத்தாத்வைத சித்தாந்த வீரதீர வைராக்கிய உத்தம பத்தி மார்க்கப் பரமத்தியாகியான பட்டினத்தடிகளார் இப்பத்தி மார்க்கப் பாசுரத் தொகுதியை முதற்கண் பாடியருளத் துவக்கிய போது எடுத்துக்கொண்ட விஷயம் இனிது முடிதற்கேதுவாகவும், கடவுள் வாழ்த்தாகவும், ஆன்மாக்களது மனோசாந்தத்தின் பொருட்டதாகவும் தியானத்தைக் கூறவந்தவர் மனத்தை முன்னிலைப் படுத்தி 'நினைமின்மனனே, சிவபெருமானைச் செம்பொனம்பலவனை' எனக்கூறியருளினர். இதன் காரண காரியத்தை இன்னுஞ் சற்று ஊன்றி நோக்கற்பாலதாகும்; என்னை?

மகா அருமையாய்க் கிடைத்த மக்கட்பிறப்பினர்களான ஆன்மாக்கள் தத்தம் மனம் உபசாந்த மெய்தி நித்திய திருப்தியை யடைவதற்குச் சாதனமானதைக் கூர்ந்து நோக்குமிடத்து, முன்னர் பூதாகாச தரிசனம் அத்யா வசியமாகும்; அதாவது, காணத்தகும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு வெனும் பூதங்கள் நான்கையும் ஆகாயமாகவே கண்டுதரிசித்த லாகும். சான்றுக தைத்திரியோப நிஷத் முதலியன ஆத்மாவி (பிரமத்தி) னின்று ஆகாயமும், ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்பும், அப்புவினின்று பிருதிவியும் தோன்றியன வென்றும், அம்முறையே தோன்றியன போன்று ஒன்றனுள் மற்றொன்றை ஆகாச பரியந்தமாக வொடுங்கச் சர்வமும் ஆகாயமெனக் காண்டலே பூதாகாச தரிசனமாம்.

> "பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத பெரிய மோனம், வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப மயமாய்"

என்றருளியதான நித்திய நின்மல நிட்கள நிராமயக் கடவுளையன்றி யிங்கற்பமுமில்லை; எல்லாம் சிவமயமே யென்று ஐயந்திரி

பின்றிப் பாவித்து, பாவனாதீதமாயுள்ள பரம்பொருளைத் தேசிக மூர்த்தியின் றிருவருளால் தன்மயமாகக் கண்டிருத்தலாம். இம்முறைகண்டவரே கிருத கிருத்தியராவர். சிதாகாச தரிசனமுடையாரே சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்த பிராப்தி வடிவ கைவல்யத்தை (முத்தியைத்) தவறாது அடைவரென்பது சாஸ்திரங்களின் பரம தாற்பரியமாகும்.

இனிப் பிறவா நிலையை யெய்துதற் கேது சிதாகாச தரிசனமும், சிதாகாச தரிசனத்திற் கேது மனாகாச தரிசனமும், மனாகாச தரிசனத்திற் கேது பூதாகாச தரிசனமுமா யிருத்தலால் அப்பூதாகாச தரிசனஞ் செய்வதற்குச் சிறந்த காரணமாகவிருப்பது, பூமண்டலமாகிய விராட் டுருவத்தின் இருதய கமலமாய சிதம்பரத்தின் பொன்னம்பலத்துள்ளே ஆநந்தத் தாண்டவஞ் செய்யும் ஸ்ரீநடராஜ மூர்த்தியைத் திரிகரணமு மொத்து தரிசித்தலேயாம். இதுகொண்டே நம் பட்டினத்தடிகளார் 'நினைமின் மனனே, நினைமின் மனனே, சிவபெருமானைச் செம்பொனம்பலவனை' என்றும், மணிவாசகப் பிரபுவும், "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்து மென்சிந்தையுள்ளும், உறைவான்" என்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

ஸ்ரீசிதம்பரம் பஞ்சபூதங்களுள் ஆகாய தரிசனஞ் செய்யுஞ் க்ஷேத்திரமா யிருத்தலின், சமஷ்டி (பொதுமை) வடிவப்பிரமாண்டத்தின் இருதயமாயுள்ள சிதம்பர தலத்தின் பொன்னம்பலத்துள்ளே ஆநந்தத்தாண்டவஞ் செய்யும் நடராஜமூர்த்தியைத் தரிசிப்பது போன்றே வியஷ்டி (தனிமை) வடிவவுடம்பின் இருதயமாகிய மனாகாயத்தில் உபசாந்த விருத்தியுள்ளே சிதாநந்த வடிவாக விளங்கும் தேவாதிதேவனாகிய ஸ்ரீமந்நடராஜமூர்த்தியையுந் தரிசித்தல் வேண்டும். அநவரதத் தாண்டவ அற்புத நடராஜமூர்த்தியைப்

பொற்புடன் தரிசித்தவர்களே புண்ணிய மூர்த்திகளாவர். அவர்களே தவருது ஜீவன் முத்தியையும் பெறுவர்.

ஸ்ரீ சிதம்பர தரிசனஞ் செய்தவர் சித்த விகற்ப மின்றி விளங்குவரென்பது;

"சன்மார்க்க ஞானமதின் பொருளும்வீறு சமயசங்கே தப்பொருளுந் தானொன்றாகப், பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்தபோதங், கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியேயென்ன வெச்சமயத் தார்களும்வந் திறைஞ்சாநிற்பர், சன்மார்க்க நெஞ்சமுறை வெனக்குந்தானே சண்டவு நாந் தங் காண்டலாகும்''

என்று ஸ்ரீ தாயுமானப் பெருந்தகையார் திருவாய் மலர்ந்தருளியிருப்பதனுலும் நன்குவிளங்கலாயின.

அலகைத் தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலை யோம்பற்க.

(போ - ளா.) கானல் நீரும் சுழல் காற்றும் போன்றதான அநித்தியத்துவ இப்பிரபஞ்சவாழ்க்கையையும் இச்சரீரத்தினையும் அழிவுருநித்தியத்துவ முடையதென்றெண்ணி மிகவும் போற்றிவளர்க்காதிருப்பாய். தநுகரண புவனபோகாதிகளைச் சதமெனக்கொள்ளாது சழக்குவழக்கெனத் தள்ளவேண்டுமென்பதே கருத்தாம்.

(கு - ரை) ஆன்மாக்கள் அநாதி கேவலத்தில் ஆணவமலத்தோடுங்கூடி அறிவு, இச்சை, செயல் என்பனவற்ருல் அநித்தியத்துவப் போக போக்கியாதிகளில் ஈடுபட்டு ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்பனவாய கன்மசேடங்களால் உண்மைப் பொருளாம் அநாதி நித்திய பரமேசுரனை உபாசித்து இருவினையொப்பும்

மலபரிபாகமு மெய்தற் பொருட்டாகவே இப்பொய்யுலக வாழ்வையும், அதற் காதாரமாகிய உடலையும் கேவலம் அநித்தியத்துவ முடையதெனத் திடம்பெற வேண்டிக் கானல் நீரையும் சுழல்காற்றையும் எடுத்துக்காட்டி, இவையொத்த பொய்வாழ்வினை யொழித்தக்காலே மெய்வாழ்வாம் மோக்ஷபிராப்தி பெறலாமென்று கூறினரென்க.

ஆயின், இப்பெருந்தகையாளர் கூறிய "உடலையோம்பற்க" என்றது ஒருவாறு சிலாக்கியமாயினும் யோகியரும் திருமூலரும் கொண்ட கொள்கையாகிய உடலோம்புந் தன்மைக்கு நேர்விரோத பாவ மேற்படுகின்றதே யெனப் பலர் ஐயுறலாம்; அற்றன்று;

ஈண்டு யோகியரும் ஞானியரும் ஈசுரோபாசனையால் கரண சேட்டை யொழியப்பெற்று அவரது திருவருட்பயனும், அவ்வருட்பயனால் சகல விரக்தியும், அவ்விரக்தியால் மெய்ஞ்ஞான சித்தியும் கைவரப்பெற்றமையால் அங்ஙனம் உடலில் வெறுப்புற்றுக் கூறினதேயன்றி யேனையோர்க் கன்றெனத் தெரிதல் வேண்டும்.

இன்னும் இக்கலிகால கோலாகலத்தால் ஏற்பட்டுள்ள தான்றோன்றித் தம்பிரான் மார்களான நாஸ்திகர் முதலிய புறமதக்காறர்களது கோட்பாட்டைக் கண்டிப்பான் வேண்டியே அங்ஙனங்கூறினாரெனினும் பொருந்து மென்க.

வெண்பா.

ஆலயமேகாய மறிவே சிவலிங்க
மாலயனுங் காணாத வள்ளலுக்குச்—சீலமுறு
மன்பே யபிடேக மன்பே நல்லர்ச்சனையு
மன்பே நைவேத்தியமு மாம்.

இந்நிலங்கொண்ட சிவஞானியர்க்கு இச்சரீரம் அழிய மனம் பொறார். இவரல்லா,

ஆடமைத் தோளினல்லா ரல்குலந் தடத்துண்மூழ்கிப்
பாடமை கொங்கைபற்றிப் பவளவா யூறன்மாந்தி
நீடமை யின்பமெய்தார் நிறைபெருந் தவமிலாதார்
காடமை வாழ்க்கைபூண்டு சழிப்பர்வாழ் நாளைவீணில் என்ற

இச்செய்யுட் கிலட்சியமானோர் உடலை வெறுத்தேகூறுவர் என்றறிதல் வேண்டும்.

பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்குந்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்

(பொ - ரை.) பிறந்தவுயிரனைத்தும் இறந்தே தீரும்; அவ்வாறு இறந்தவை யனைத்தும் மறுபடியும் பிறப்பனவாகும்; உருவமும் பெயரும் உடன்கொண்டு தோன்றப் பெற்ற வனைத்தும் மறையப் படுவன வாகும்; இம்முறையே மறைவெய்தியன பின்னருந் தோன்றப்பெறும்; பெருத்தனவனைத்தும் சுருங்கும்; சுருங்கினயாவும் மீண்டும் விரியும்; அறிந்தன வெவையும் மறப்பெய்தும்; மறந்தன பின்னும் தெரியவும் வரும்; சேர்ந்தவை பிரிவெய்தும்; பிரிந்தவைபின்னர் சேர்ந்து விடும்; புசித்தனயாவும் கசமலமாய்விடும்; புனைந்தன வெல்லாம் அழுக்கேறிப் போம்; விரும்பிய எவையும் வெறுக்கப் படுவதாகும்; வெறுத்தவை மீண்டும் விருப்புறுவதாகும்; ஆகிய இவையெலாம் நன்கு விளங்கிக் கொண்டனை தவிரவும்,

(கு - ரை.) உலகத்திலே வாழும் ஜீவராசிகள் பற்பல யோனி பேதங்களாகத் தோன்றி அவையெல்லாம் எப்போதும் ஒரே படித் தாயின்றி இயற்கை சுபாவம் வேறுபாடாகவே மாறுதலடையும் தன்மையன வென்றும், அவ்வேறுபாடுகள் காரணம்பற்றியே வந்த காரிய வேறுபாடுக ளெனவும், அவைகளைச் சீர்தூக்கலால் யாதும் பயனின் றெனவும், இவையெலாம் இயற்கையுண்மைத் தத்துவ விபரீதமாயா ஜனித சுபாவீகமெனவுங் கண்டறிதல் முக்கிய கடமை யாமெனவும் அறிந் தகற்றல் வேண்டு மென்பதாயிற்று.

பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்து நினைக்கொன்றன
தின்றனை யனைத்து மனைத்து நினைத்தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை யனைத்து மனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்

(போ - ரை) நீபிறந்தபல பிறவிகடோறும் அநேகமான ஜீவன் களை வதைத்தாய்; பின்னர் அவையெல்லாம் நின்னையுங் கொன் றன; அந்த ஜீவன்களை நீ புசித்தனை; அந்தஜீவன்களும் பிறகு நின்னை விழுங்கின; அனைத்தையும் நீயே யீன்றாய்; பின்னர் அவை யெல்லாம் உன்னையும் ஈன்றன; யெவையும் நீ வளர்த் தனை; மீண்டும் அவைகளும் நின்னை வளர்த்துவந்தன; செல்வம் சேர்ந்தபோது இனியன பெற்றாய்; மிடிவந்தபோது துயரப்பட் டாய்; தேவலோகத்தும் வாழ்ந்தாய்; நரகத்திலுங் கஷ்டமுற்றாய்

விரிந்த இவ்வுலகத்திலே சுகதுக்கமிரண்டையும் அநுபவித்தாய்; (ஆகிய இவற்றுள்) எவற்றையும் விடாது பொருந்தி வாழ்ந்தனை; தவிரவும்,

(கு - ரை.) பிறந்தன பிறந்தனவென்றது அடுக்குத்தொடரென்ப. மனோபிராந்தியின் உவப்பையே ஆண்டு களிப்பெனச் சாற்றினர். சுவர்க்கமென்றது புண்ணியாத்மாக்கள் வாழும் ஸ்தலமாகும். அதுகொண்டே சுவர்க்கத் திருந்தனை என்றனர். நரகம் என்றது பாவிகள் வாழும் ஸ்தலமாகும். அதுகொண்டே நரகிற்கிடந்தனை யெனக்கூறினர். துக்கானுபவங்குறித்து கிடந்தனையென்றதாயிற்று. கொலைசெய்த வொருவனைக் கொலையுண்டவன் மறுஜென்மத்தில் கொல்வான் என்றபடி மேலே கூறுவாராயினர். இதனால் வினைப்பகுதியின் பந்தம் விளங்கலாயிற்று.

புற்புதக் குரம்பைத் துச்சி லொதுக்கிடம்
என்ன நின்றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்

(பொ - ரை.) நீரின்குமிழி யொத்த அத்தனை அநித்திய சிறுமனைபோன்றும், வெறுக்கத்தக்க கேவல ஒதுக்கிடம் போன்றும் விளங்கித்திரியும் நல்வினை தீவினையால் வந்த இந்தசரீரத்தை கல்லைவிட வன்மையதா யெண்ணினை; இந்தச்சரீரத்திலே,

(கு - ரை.) இந்தச்சரீரம் அதிவிரைவில் அழியு மென்பதற்காகவே ஸ்ரீ குமாரகுருபர சுவாமிகள் கூறியதுபோன்றே நமதுபிள்ளையாரும் நீர்மேற் குமிழியென்று யாக்கை அழிவின் அதிதீவிரத்தை யெடுத்தோதினர்; என்? கல்லினும் வலியதாய்க் கருதுவதாலென்க. துச்சில், ஒதுக்கிடம் இவை ஒரு பொருட் சொற்களாகும். நல்வினை தீவினை அதாவது புண்ணியச் செயல் பாவச்

செயல்கள். இவ்விருவினையின் காரண மாகவந்த சரீர மானதால் இருவினைக்கூட்டை யென்றனர். இதுகொண்டே தாயுமானாரும் வினைப்போகமே ஒருதேகங் கண்டாயென்றார். இன்னும், வருக ணத்து வாழ்ந்திடுமோ விழுமோ யிம்மலக் கூடென்றார் இராமலிங்க வள்ளலாரும்.

பீளையு நீரும் புறப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீறுந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளூறத் தேர்ந்து

(போ - ரை.) கண்ணின் வழியாக பீளையும் நீரும் வெளி வரும்; காதின்குறும்பி வெளிப்படும்; மூக்கின்வழியே சளியுஞ் சலமும் வெளிவரும்; வாய்வழியாகக் கோழையும் எச்சிலும் கூடி வெளிவரும்; * குதத்தின் வழியே வாயுவும் மலமும் வந்திடுந் தின மும்; பீசத்தின் வழியே பெருமல விந்தும் சிறு நீரும் பெருகி வெளிவரும்; ஆகவே இத்தனை ஆபாச துர்க்கந்த கசமாலங்கள் உட ற்குள்ளிருந்து வெளிவந்திடும்; இன்னும் இவ்வுடலை முடிவிலே சுடப்பட்டு எலும்பு மிச்சமாகின்றன; இவ்வளவான பலமலங்க ளையும் தன்னகங்கொண்ட சரீரத்தால் கொண்டாடும் வாழ்க்கை யைப்பற்றி ஊன்றி விசாரிக்கின் ஆபாச வாழ்க்கையாகவே தெரி கின்றது.

* குதம் - எருவரும் பெருவாய்.

(சூ - ரை.) உயிர் வாழ்தற் கிருப்பிடமாய உடம்பினை மிகச் சாமானியமாய்க் கருதவேண்டி யிருப்ப, அங்ஙனங் கருதாது உடம்பையே பிரதானமாகக்கொண்டு அதிலேயே இலக்ஷியம் வைத்து அதையே சாசுவதமாகக் கொண்டொழுகும் நாத்தினை நோக்கியே பலமுறையும் பலவிதமாகவும் கூறிவருகின்றா ரென்றறியக் கிடக்கின்றன.

சான்றாக:—

மின்போலழியும் வயிற்றாமை வடிவாயழியு மெய்யுருவாய்
முன்போலழியும் பிறந்தழியு மடவாருடனே முயங்கியதன்
பின்போயழியு நரைத்தழியும் பேய்போற்றிரிந்து பெயர்ந்தழியும்
பொன்போல் வளர்த்துமிவ்வுடல நிலையாதழிந்து போய்விடுமே.

புழுச்சுமை மலக்குவை புலவு நாறிய
வழுக்குட லீரல்சீ வழியுஞ் செய்யக
முழுக்குட லுதிரநீர் மூளையின் பொதி
யழுக்குட லதைப்பொரு ளாக வெண்ணுமோ.

எனச் செவ்வந்திப் புராணங் கூறலானும் நன்கு விளங்கப் பெறும்.

கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போக வின்பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை

அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!.

(பொ - ரை.) மணங்கமழ் கொன்றை மாலையணிந்த சடைமுடிப் பரமேசனை; இடையறாத சிவபோக மென்கின்ற பேரானந்தத்தை; மரநிழல்போன்று நீங்கப்பெறாத நேர்மையாய்ப் பொருந்தி, எனது எனும் மமகார மொழிய, யான் எனும் நினைவுங் கெடுமாறும், இருவினைக்குங்காரணமாகிய மும்மலங்களுங்கெடவும்; ஜனன மரணம் நீக்கமுற, மயங்குத லொழிய, ஆணவங் கரைய, இராப் பகலறியாது, இம்மைமறுமை யென்னும் இருமைப் போகமும் நீங்க, ஒப்புவமையற்ற ஒருவனாகிய முதற்கடவுளை, தில்லையம்பதியில் சுவம்புவாய் விளங்கிய சோதிநாதனை சிற்சபாநாதனை, ஆனந்தத்தாண்டவ மூர்த்தியை, ஞானாகாயத் திருப்பொது நடிக்கும் நடனசிகாமணியை அக்கினியிற்பட்ட அரக்கென கரைந்துருகித் தியானிப்பாய் நெஞ்சமே! தியானிப்பாய் நெஞ்சமே! சிவசங்கர பிரபுவை பொற்சபைவிளங்கும் ஞானாகாசனைத் தியானிப்பாய் நெஞ்சமே! தியானிப்பாய் நெஞ்சமே.

(கு - ரை.) சுவாநுபூதிச் செல்வரா மெய்யன்பர்கள் மரநிழல் போன்றே சதாகால தியானபராரைய் ஒப்பரும் சிற்பரனைச் சிந்தைகுடிவைத்து சிவாநந்தபோகந் துய்த்து ஞானானந்த நித்திரையிற் சொக்கித் தன்னைமறந்திருப்பதான திருவருட் செல்வம் கைவரப் பெற்றமையினாலே அவர்கள் எங்குறினும், என்னசெய்யினும், எதுபேசினும் அவையனைத்தும் மெய்ஞ்ஞானானந்த போதையே

யென்றுணரற் பாலதென பல பெரியோர்கள் மெய் நூல்களிற் கூறிப் போந்தமை போன்றே நமது பிள்ளைப் பெரியாரும் தமது சுவானுபூதி செல்வத்தினை ஏனையோரும் பெறுதல் வேண்டுமென்றே இந்த முதல் அகவற்பா நமக்கு நன்கு தெரிவிக்கின்றதாயிற்று.

இன்னும், திருவருட் செல்வராய பெரியாரெல்லாம் ஏனையோர் போன்று ஏகதேசத்தில் எம்பெருமான்பால் அன்புசெலுத்து முறையினரன்றென்றும், சர்வதா அப்பரம் பொருளையே சிந்தை குடிவைத்திருப்பர் அதாவது! அத்தற்பர சிற்பரனைத் தம்முள்ளக் கோவிலில் வைத்துத் தியானித்தே வருவரெனவும் நன்கு புலனாகின்றது. எங்ஙனமெனில், "பிரியாது வணங்குவ னெப்பொழுதும்" "நினையாதொருபோது மிருந்தறியேன்" "நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" என்பனபோன்ற திருவாக்குகளானும் என்று அறிதல் வேண்டும்.

கோயிற்றிருவகவல்—உ.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடங்
காதலுங் கருத்துமல் லானின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்து

(போ-ரை.) சாதகமில்லாது கலகமாகிய பாதகத்தை யுண்டு பண்ணத்தகும் நீண்ட கண்களையுடைய பெண்களின் பக்கலில் வருந்திச் செல்லும் ஆசையும் நினைப்புமன்றி, தேவரீரது உபய

பாதகமலங்களையும் தமியேன் சிரஞ்சூட்டிக்கொள்ள புண்ணியமுஞற்று பாவியேன் பக்கத்துணையாயிருந்து,

(சூ - ணா.) சிலமாதர்களது கண்கள்நீண்டனவாய் மான்விழி போன்று மருளும் சுபாவத்தோடுங் கூடிய தானதாலும், அவ்வேல் விழிபட்டார் மயலிற் கெட்டாராக கலகப் பாதகக் கண்ணென்றார். மருங்கிற் புண்ணுடனுடும் என்றதால் இடைநடுக் கீழ்ப் புண்புழையாம் அல்குலெனத் தெரிக.

மக்களில் மாதர்வலைப்படுவார் மிக்காரென்றும், அவர்கள் தெய்வத்திருவடிக் கமலங்களில் பற்றுவைத்துப் பரகதி யடையாரென்றும் கூறினர் சான்றோர். ஈண்டு நமது வெண்காட்டடிகளும் அவ் விஷயத்தினைக் குறித்தே மிகவும் விரிவாய்க் கூறி யுள்ளார்கள். அவை பின்வரக் காண்க. சிலபெண்களாரது இடையும் நடையும் உடையுமே ஆடவர்களது சிந்தையைக் கெடுத்துத் தட்டியெழுப்பும் தூதுவர் போன்று விளங்குவதால் கலகப்பாதகக் கண்ணியர் என்றார் எனினும் அமையும்.

"வஞ்சமடவார் மயலொருபான் மணியேநின்னை வழுத்தாத
நஞ்சமனையார் சார்பொருபா நலியும்வாழ்க்கைத் துயரொருபால்
விஞ்சுமினது திருவருளை மேவாதுழலு மிடியொருபா
லெஞ்சலிலவா யலைகின்ற தென்செய்கேனிவ் வெளியேனே"

என்றார் தனித்தமிழ்ச் செல்வரும்.

அங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித்தங் கோழை குடிபுகுஞ் சீறூர்

ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை
ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமம்
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழுக் கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்

(போ - ரை.) இங்கும் அங்கும் எங்குமாக வோடித்திரிகின்ற திருடராம் ஐந்துபேர்கள் வம்பியற்றி வருந்துங் காடாம்; மலசலம் நிறைந்துள பெட்டி; புண்ணியபாவமலிந்த பேழை; வாதபித்த சிலேத்துமம் மூன்றும் பொருந்துஞ் சிற்றூர்; அழுக்கடை தோலுடன் உதிரமுங் கலந்துள்ள கருவியாகும்; துர்நாற்றம் வீசுகின்ற பாத்திரம்; நவத்துவாரமும் நான்குமுழ நீளமுமுள்ள கட்டைத் துண்டு; பேய்ச்சுரை யமருங்கொல்லை; சாம்பர் மலிந்து கிடக்கும் விசாலித்த சுடுகாட்டுமேடு; அவாவெனுங் கயிற்றால் சுற்றுகின்ற பம்பரம்; சாசுவத வியாதிக் கிருப்பிடம்; ஒடும்படியான கப்பல்; அவலக்ஷணமாகிய மாயை; சாகுங்கூடு; சோறுநிறை தோற்பை; காற்றினில் தூற்றக்கூடிய கருக்காய்; காற்றினில் பறக்கும் பட்டம்; கர்மத்துக்கேற்ற முறையாக யமனுல் வெட்டக்கூடிய கட்டை; பிரமனுர் தைக்கும்படியான சட்டை; மயானத்தில் செய்யப்படும் சிறிய விருந்து; காமஅக்கினியால் தீயும் சருகு; புழுக்களூரும் கிழங்குத்தோல்; பாவக்கொடி படரும் சிறுகிளைக்கொம்பு; மணக்கோலமாய்ச் செல்லும்படிக்குள்ள பிண்டம்; கடைசியில் பிணமயமாய் கட்டைபோற்கிடக்கும் பிண்டம்; பிணமானபின்பு ஊரில் நிலைபெருத கஷ்டவியாதி; காற்றினில் குவிந்த பூளைப்பூ; உதய சூரியன் முன்தோன்றி யுள்ள தீயபனிப் படலம்; ஆகாயத்திற் காணும் இந்திரதனுசு; இடியோடுகூடிய மேகத்தின் சிறுநிழல்; தண்ணீரில் காணும் குமிழி; தண்ணீர்மேலெழுதும் எழுத்தாகும்; நித்திரை சமயங்காணுங் கனவில் காணப்படும் நிகழ்ச்சி; அந்தநிகழ்வில் நிலைபெரு மாயாகுறிப்பு,

(கு - ரை.) எண்டிசாமுகமும் யதேச்சையாய்ச் சென்று ஆங்காங்கு நிகழ்வனவற்றைத் தனித்தனி யுணருந் தன்மையில் ஒன்றுக்கொன்று வம்பியற்றிவருவதால், கள்ளரைவர் கலகமிட்டலைக்குங் கானகமென்றுர் உடலை எப்போதும் மலசலந் தாங்கிநிற்றலால் மல

சலப்பேழை யென்றார். இருவினைகட்கு மீடாயிருத்தலின் பெட்டகமென்றார் சரீரத்தை. கசமால சேர்க்கையால் நாற்றப்பாண்டமென்றார்; அன்றியும் நல்வினை தீவினைகட் கேதுவாதலின் இருவினைப் பெட்டகமென்றார்; நான்குமுழ நீளமும் ஒன்பது துவாரங்களு முள்ளதால் பீற்றல் துண்டமென்றார்; அன்றியும் ஆசாபாசத்தால் பம்பரம்போல் ஆடியோடி வர்க்கூடிய தென்றார் சரீரத்தை; முடிவில் நமனால் மாய்க்கும் கட்டையென்றார்; பிரமனால் படைக்கப்பட்டதால் இச்சரீரத்தை சட்டையென்றார்; பொய்யாகிய மெய்யினை முடிவில் அக்னியால் எரிந்துவிடுவதால் ஈமக்கனலில் இடுசில விருந்தென்றார்; இன்னும் பூளைப்பஞ்சென்றும், சூரியன் முற்பட்ட பனிப்படலமென்றும், இந்திரவில்லென்றும், நீர்க்குமிழி யென்றும், அன்றி அந்நீரில் எழுதிய எழுத்தென்றும், கனவிடைக்கண்ட காக்ஷியதென்றும் இவ்வாறாக இவ்வுடலின் இழிவையும் அநித்தியத்துவத்தையுங் கூறி, இவ்வாறாய பொய்யுடலை மெய்யெனநம்பி மயங்கிக் கெட்டுப் போகாது உண்மையான பரமபதியை இச்சரீரம் உள்ளபோதே பக்தி யோகஞான மார்க்கங்களால் உபாசித்து நித்தியவாழ்வைப் பெற தெரிவிக்கலாயினர் என்க.

அமையு மமையும் பிரானே யமையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக் கழகே.

(போ - ரை.) இவ்வாறான இச்சரீரமானதை, வந்துசேர்வீர் சேர்வீர் ஐயனே! சேர்வீராக; வரைராஜனுடைய குமாரியாகிய உமையம்மையார் வாழ்க வாழ்கவெனத் துதிசெய, பரமானந்தத் திருநடன தரிசனந் தந்தருளி அடிமையைத் தடுத்தாளுமாறு கருணைசெய்தல் தேவரீரது திவ்ய திருவருளினுக்குப் பேரழகாகும்.

(கு - ரை.) சரீரம் நிலைப்பட்டதல்ல; ஆகவே அவ்வாறாய அநித்திய மாயாகற்பிதவுடலைப் பொருட்படுத்தி நித்திய ஸ்தூலமாக் கொண்டு மாதர்சுகத்தி லாழ்ந்துள்ளேன். ஆகையினாலே துக்க ஏதுவான ஜனனம் மீண்டும் மீண்டும் வந்தேதீரும். தேவரீர் திருக்கருணைவைத்து அடிமையை ஆண்டருள்புரிவீர்களாக என்பதுதான் இந்த அகவற்பாவின் உட்கிடையாகும். இவ்வுலகஆசைகள் பலவாயினும், அவற்றுள்ளும் பெண்ணாசையென்பதே எம்பெருமானையும் மறந்திடச்செய்யும் மகாவலிமைபெற்றதாம். ஆகவே அந்தமாதர் ஆசைக்கடலில் ஆழ்த்தப்பெற்றவன் மீண்டுந் தன் வல்லமையாலே மையற்கடல் கடந்தேறான் என்பது உண்மை. இவ்வணம் மையற் பரவையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் அன்னவன் வருந்திவரும் போது அவனுக்கு ஆண்டவன் சகாயமே அவசியமாக விருக்கும்; "பிறந்தவ ரிறக்கையாலு மிறந்தவர் பிறக்கையாலு, மறிந்துயர் பெரியோரெல்லா மாக்கையை வெறுத்தலாலு, மறந்து நான் பிறவிவேண்டேன் மறுபிறப் பிலாதவண்ணஞ், செறிந்தருள் செய்யவேண்டும் திருப்புலி வனத்துளானே." என்றனர் சிவஞானவள்ளலார். நமது அருளன்னையாகிய பர்வதராஜ குமாரியாகிய லோகமாதாவே தம் பிள்ளைகளாம் மக்கட் பிறப்பினர்க்குத் தம் தலைவனைப் பணிந்து வேண்டி அருள்சுரந்திடுமாறு ஐயன்பால் சேர்ப்பிக்கும் நற்றாயாவள். "விடையுடையான் விகிர்தன் மிகுபூதப், படையுடையான் பரிசே யுலகாக்குங், கொடையுடையான் குணமே குணமாகுஞ், சடையுடையான் சிந்தைசார்ந்துநின்றானே" என்றார் திருமூலரும்.

கோயிற்றிருவகவல்—ரு.

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்

(பொ - ளை.) திருப்பாற்கடல்கடைந்து அதில் தோன்றப்பெற்ற விஷவெண்ணெயைப் பெற்று அதைத்தம்முடைய திவ்ய கண்டத்திலே நிறுத்தியருளிய பெருங்கருணைக் கண்ணுதலே! (நினக்கு அடியேன்) அடைக்கலமாயினேன்.

(கு - ளை.) தேவர், அசுராதியோர் முன்னோர்போழ்து எம்பெருமானை யெண்ணாராய் பாற்கடலின்கண் திருவமுதங்கடைய, அப்போழ்து அவர்களது கொள்கைக்கு மாறுபட விஷந்தோன்றிற்று; உடனே அவ்விஷத்தின் கொடுமை சகியாராய் அனைவரும் சங்கரனார் சரண்புக, எம்மான்கருணைபூத்து அவ்விடத்தைக் கொணர்வித்து தாமுண்டு கண்டத்தி லடக்கப்பெற்று அனைவரையுங் காத்தருளி மீண்டும் அமுதங் கடைந்தெடுப்பித்து அசுரர் நீங்க மற்றையோர்க்களித்துக் காத்தனர். ஈண்டு சிவபாஞ்சுடரைத் துதிமுறைகொண்டதில் ஆலகாலவிட மடக்கிய இறைவனுந் தன்மையைக் கூறினதின் காரணகாரியமாகப் பிள்ளையார் தம்மைப்பற்றியுள்ள தற்போதங்கழற்றிச் சிவபிரானது திருவருட் போதத்தைப் பெறுமாறே அச்சிவபெரும்பதிக்கண் தங்குறை சாற்றினரென்க. அடைக்கலம் - சரணுகதியடைதல். அஃதாவது தஞ்சமென்று தாள் பணிதலாகும்.

அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்.

(போ - ள) சர்வான்மாக்களது ஆவியையும் பரிமுதல்செய்யும் கொடுங்கொலையாளனுங் கூற்றுவனைத் தமது திருவடியினாலே உதைத்து ஒடுக்கிய எப்பொருட்கு மிறைவா! நினக்கு அடியேன் அடைக்கலம் புகுந்தேன்,

(கு - ளா.) கடையூர்க் கண்ணுதலார் முன்னம் இயமனையுதைத்தருளியது பக்த சீலரான மார்க்கண்டேய பாலனுக்காகவாகும். இதனைப் பிள்ளையார் குறித்துப்பாடியது, ஏ சிற்பரனே! மார்க்கண்டேயர்க்காக முன்னம் அருளமுதம் வழங்கினை; இப்போது யானும் தேவரீர் தம்திருவடிக்கண் அடைக்கலம் புகுந்தேன்; ஆகவே என்னையும் இயமனுக்கு ஆளாக்காது தமக்கே ஆளாக்கொண்டு காத்திடுவீர் என்பதைக் குறிக்கின்றது. இவ்வாறு மெய்யன்பர்க்காக நம் பரம கருணாநிதியார் தேவரையும் கடிந்து வெறுத்தலை நோக்க, உண்மையன்பர்கண்மாட்டு அவர்க்குளவாய கருணைக்குக் கணக்கில்லையென்பதும் தோன்ற நின்றது.

உலகடங்கலும் படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவநின் னடைக்கலம்

(போ - ளா.) சர்வான்மகோடிகளையும் சிருட்டிசெய்துவரும் சதுர்முகப் பிரமன்றன் சிரங்கொய்து தமது இடக்கரத்திற் றாங்கியுள்ள முழுமுதல்வா! தேவரீர்க்கு அடியேன் அடைக்கலம் புகுந்தனன்.

(கு - ளா.) உலகு அடங்கலும் படைத்தவன் என்றது சகல ஆன்மவர்க்கங்களையும் என்றபடி முன்னொருகாலத்தில் பிரமனும் அவர்தம் தாதையான விண்டுவும் தாம் தாம் பரத்துவம் வாய்ந்துளமென்று வாதுபுரிந் தகங்கரித்தபோது ஒப்பரிய தற்பரனார் ஓர் சிரசைக் கொய்வித்து அதன்மேல் அவர்க்கு மெய்ஞ்ஞானச் சுடர் கொளுத்தலாயினர் என்க.

செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கலம் அடியநின் னடைக்கலம்.

(போ - ரை.) ஆணிப்பொன்னம்பலப் பொதுவின்கண் அநவரத தாண்டவம் புரிகின்ற திருவருட்செல்வ, நின் அடைக்கலம் ஐயனே! நினது அடைக்கலம்; அடியேன் உனது அடைக்கலம்.

(சு - ரை.) பொன்னம்பலச்செல்வன் என்றது ஸ்ரீமந்நடராஜ வள்ளலை. ஒப்பருந் திருவருட்செல்வத்தை உடைத்தாதல் நோக்கி செல்வன் என்றனர் என்க;

மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தளைந்ததி லுளைந்திடு
நிணைவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்காறு மிவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
இகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குடம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்தும்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை

மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும் பஞ்சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடு மரக்கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுணின் றாடிக்
கருணைமொண் டலையெறி கடலே யடைக்கலம்

தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மானின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கல முனக்கே.

(போ - ரை.) மனத்தின் வழிபோய் எளியனைத் துன்புறுத்துங் கனுப்போன்ற இந்த உலகத்து வாழ்க்கையும், மேலான பொருளினை யுணரப்பெருத குற்றமுள்ள மனதும், மாயையில் தோன்றி அதின்சேர்க்கையால் வருத்தமுறுங் கொழுப்பிலூரும் புழுப்போல் வதியுஞ் சிந்தையையும், கபடமும் பாவமும், பழிப்புக்குக் காரணமான தீயவெண்ணமும், குற்றமும் அழுக்காறும் நிறைந்த மறதியும், சபடும் அசத்தியமும் ஒன்றுக்கொன்று பேதித்து மிக்ககோபத்திஞலே விளையும் சச்சரவும், மரணமும், கேவலத் தன்மையையுண்டுபண்ணும் சிற்றினச் செய்கைகளும், விரோதமும், பீதியும், தைரியமும், நடுங்குதலும், முக்குணத்தால் ஏற்படும் மடமையும், இந்திரியங்க ளைந்தின் கூட்டுறவும், துன்பமும் வியாதியும் பொருந்தும் உடலை; ஆன்மாவான பக்ஷியான ஒட்டமெடுக்குங் கூட்டை; எலும்பும் நரம்பும் கொண்டுங்கட்டி கொழுமையான தோல்கொண்டு மூடியும், ஒழுகும் பொத்தற் குடிசலையும்; செழித்து மிகுந்த சிறு இரத்தப் புழுக்களோடுங் கூடிய கூட்டை; மலம் நிறைந்துள உடற்பாண்டத்தை; மாமிசமய உடலாகிய கூடையை; ஓய்வில்லாது சோறுநிறைத்த துக்காஸ்பதமாய துக்கத்தோடுங் கூடிய சிறு குழியை; கொல்லுதற்கேதுவாய பல ஆயுதசாலையை; வெறுக்கத்தக்க காரியங்களான பலவஸ்துக்களுள்ள குப்பை மேட்டை; அநித்திய பண்டங்கள் சிதறும் கந்தலாம் கோணியை; கோபமெனும் தீயெழுப்பக் கூடியதான கொல்லர் துருத்தியை; ஐவகை இந்திரியப்பறவைக் கூட்டங்கள் சேருங் கூட்டை; நீங்காக் கவலையெனுங் காய் காய்க்கின்ற விருக்ஷங்கள் நிறைந்துள்ள சோலையை;

ஆசாபாசத்தினால் சுற்றுகின்ற பம்பரத்தை; காசுபணத்தால் சுற்றுகின்ற காற்றாடியை; குழந்தைகளாகிய வினையில் மயங்குகின்ற சக்கரத்தை; உலகமாகிய விசாலப்பரப்பில் உருண்டோடும் இரதச் சக்கரத்தை; பாவப் பதார்த்தங்களோடும் பிறவிக் கடலில் நுழைந்து, காமியமான காற்றுதாக்கி வருத்திவர, தீயொழுக்கமென்கிற கரையைச்சேரும் கொடுங்கப்பலை; இருவினைகளான விலங்குகளோடும் செல்லும் சிறியபடகை; கூற்றுவந்தழைக்க அச்சமுறும்படியாயுள்ள இந்தச் சரீரத்தை கேவலம் சவமாயெண்ணி யான் வெளிப்புறப்படும்போது, தேவரீர் திருவடித்தாமரைகளுக்கு அடைக்கலம்; தேவரீர்க்கே அடைக்கலம்; வானிடையே உருட்டி சப்தித்து இடிப்பதுபோல கெர்ச்சித்துப் புறப்படும் வெண்மையான காளையை வாகனமாய்க்கொண்டுள்ள எம்பெருமானே! தமது அடைக்கலம்; இமையாநாட்டங்கொண்ட ஏ இறைவா! உமக்கு அடைக்கலம். மெய்த்தொண்டர்கட்கு எளியதொண்டர் போன்றவனே! உமது அடைக்கலம்! வேதவிப்ராளான முனீஸ்வரமரபினர்கள் வாழும் தில்லைச்சிதம்பர சிற்சபைமேவித் திருத்தாண்டவம் புரிந்து, திருவருளையே அலைகள்போன்று வீசாநின்ற வாருதியே! தமக்கு அபயம் தேவர் முனிவராதியோர் நின் சந்நிதிவந்து அன்பொடுந்துதிக்க, சுவர்னகசிதாபரணங்களணிந்துள்ள சிவகாமசுந்தரியோடும் இரக்கம்வைத்துத் திருவருள் சுரந்தருளும் எம்மானே! தேவரீர்தம் உபயபாத கமலங்களுக்கும் அடைக்கலம்; சிற்சபையில் நடம்பயிலும் சிதாகாசத் தெய்வமே! நும்மடிக்கே அடைக்கலம்.

(கு - ரை.) முக்குணமென்பன இராசத தாமத சாத்துவிகமென்பன. பொறிகள் ஐந்தாவன: மெய் வாய் கண் மூக்குச் செவி. உடற்கும் உயிர்க்கும் உரிய நட்பைநோக்குங்கால் பக்ஷியானது தன் கூட்டை விட்டோடியது போன்ற நட்பன்றி மற்றன்று என்பதா

யிற்று. இதற்குத் திருவள்ளுவநாயனாரும் ஓர் சான்றுகூறியுள்ளார் அஃதாவது :—

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு' என்றபடி. கோளென்பது மித்திரபேதக் குறைமொழியாகும்.

ஐம்புலன்,—சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்து என்க. இதையே திருவள்ளுவனார் சுவையொளியூ றோசை நாற்றமென்றைந்தின், வகைதெரிவான் கட்டேயுலகு என்ற குறட்பாவால் விளக்கினார். பொதும்பை-பொந்து. நடுவன் என்றது இயமனை.

ஆபாசமயமானதும், அதி அநித்தியத்துவ மானதுமான உடலையும் உலகவாழ்வையும் பரமசாஸ்வித மென்றறிந்து, சர்வசாணித்தியமான பரம்பொருளையே சர்வாதாரமாகக் கொண்டு தேடக்கிடையாத் திரவியமெனவும், பார்க்கவொண்ணு பாக்கியமெனவுங் காண்டலே மெய்யறிவாந் தன்மையென்பதை உள்ளுறக்கருதி அந்த சிற்பர தற்பரனுக்கே சரண்புகுந்து அடைக்கலமாதல் வேண்டுமென்பது சாரமென்றுணர்தலே மக்களார் கடமை.

ஓர் வீட்டினுள்ளே திருடர் பதுங்கிநிற்பதுபோல ஆன்மாவினுள்ளே ஈசன் மறைவாகயிருக்கிறான். அதையே உயிர்க்குயிராய், உள்ளொளியாய் என வழங்குவர் மேலோர்.

கச்சித்திருவகவல்—௬.

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்

(**போ - ரை.**) ஸ்ரீ வாசுதேவனார் குமாரரான சதுர்முகப் பிரமரால் படைத்தல் செய்துள்ள எழுவிதமான தோற்றத்துள் சிறந்த தலைமைவாய்ந்த மனிதப்பிறப்பில் பிறந்துவந்த மலையரசனது திருப்புதல்வியாராகிய பார்வதி தேவியார்க்கினிய பரனை சிவபரஞ்சுடரின் திவ்ய திருத்தாட் டாமரைகளை வணங்கி ஒப்பரும் சிவபதஞ் சேராது பெண்மக்களைக்கண்டு களிகூர்ந்து வாழுமவர்போல் தாழுமவர்களுக்கு நான் சிலவிஷயங்களைக் கூறுவேன்; அழிவுள்ள பொய் வாழ்வுகொண்ட மனிதர்களே! தெளிவாய்க் கேட்பீர்களாக :—

(**கு - ரை.**) வரும் எழ்பிறவி யென்றது தேவர், மனிதர், விலங்கு, பரவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன. இவ் வெழுவகைப் பிறவிகளிலும் மானிடப்பிறவியே சிறப்புடைத்தாதல் நோக்கி மானுடத்துதித்து என்றார்போலும்: சான்றாக. "மக்களாக் கையிற் பிறத்தலே யரிது மற்றதிலும், துக்க கூன்குரு டூமையைத் துறத்தலு மரிது, நற்குலத்திடை வருதலு மரிதுஞானத்தான், முக்கணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே" என்றார் சிவஞான வள்ளலார். இவர்மட்டோ, "அரிது அரிது மானிடராதலரிது" என

ஔவையாரும் கூறியுள்ளார். மானிடப் பிறவியில் பெறவேண்டிய மேலாகிய சதுர்வித பதவிகளையும் பெறமுயலாது அநித்திய மாயா போகபோக்கியங்களான மாதர் மையலிற்சிக்கி மதிமயங்கி ஈற்றில் பாவத்தையே தேடிக்கொள்ளுவதால் மாக்க ளென்றனர். இன்னும், "மூத்திரத்தி னனேந்த முடைநாற்ற யோனிக்குக், காத்திரத்தை விட்டார் கணக்கில்லை" என்றார் சிவஞானவள்ளலும்.

முள்ளுங் கல்லு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுட ருங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்து முன்னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
உகிராற் கீற வுலர்ந் துள்ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்

(பொ - ள்.) முள்ளின்மேலும் கல்லின்மேலும் வருந்திநடக்கக்கூடிய உள்ளங்காலைப் பஞ்செனப் பகர்ந்தும், வெளுமையான

எலும்புகளால் காத்துவரக்கூடிய கணைக்கால்களை துள்ளும் வரால் மீனென்றே கூறிப்புகழ்ந்து பேசியும், சதையும் எலும்புங் கூடியுள்ள கேவலமான தொடையினை விளங்கும் வாழைத்தண்டென்று கூறியும், உயர்ந்துள உடலைத்தாங்கியுள்ள இடையை உடுக்கையொத்ததென்று சிறப்பிக்கும், மேலும் பிடியென வழங்கிவந்தும், மலம், நீர், கொழுப்பு, மடிப்பு இவை இசையும் வயிற்றை ஆலிலையென்று வர்ணித்தும், முன்னம் பருவுபோன்று தோன்றி முன்னீண்டு திரண்டுருண்டு பூரித்து புளகித்து சீப்பாய்ந்து பெருத்து, நகத்தாற்கீற வுலர்ந்து உட்பக்கமுருகி நகைப்புக்கு ஏதுவாய்ப் பின் கீழ்த்துவண்டு வீழ்ந்து வாடிநிற்கும் தனத்தைத் தாமரை மொட்டெனப் பகர்ந்தும், குலைக்கக்கூடியதான காமவெறியினாலே கண்கெட்டு அலமரும் அறிவிலாக் குருட்டோர்க்குக் கூறுவேன்:

(கு - ரை.) இங்கெடுத்தோதிய மங்கையர் அங்க வுருப்புக்களெல்லாம் காமவெறியர்களைப் பகட்டி அவர்தம் மனத்துக்கினிப்ப, அதனால் அவ்வுருப்புகள் அன்னோரால் சிறப்பெய்துகின்றன. காமுகர்க்குக் கண்கிடையாதென்பதும் விளங்கும். அன்றி இன்னோர்க்குக் கண்ணிருந்தும் குருடர்போல் மயங்கினவராக, அதனானே பிள்ளையார் குருடர் என்றழைக்கலாயினர். இதுநிற்க; "ஓகைமடவாரல்கு லேபிரம பதமவர்க ளுந்தியே வைகுந்தமாம், ஓங்குமுலையே கைலை யவர்குமுதமலர்வாயி னூரலே யமுத மவர்தம், பாகனைய மொழியேநல் வேதவாக் கியமவர்கள் பார்வையே கருணை நோக்கம், பாங்கினவ ரோடுவிளை யாடிவருசுகமதே பரமசுகமாகு மிந்த, யூகமறியாமலே தேகமிகவாடிநீ ருறுசுவைப் பழமெறிந்தே, யுற்றவெருவாய் மெல்லும் வீணர்நீ" ரென்று நல்லோரை நிந்திக்கும் பரமபதிதர்களையும் போன்றார் உள்ளாராதலின் அன்னோரையுங் குறிக்கொண்டுரைசெய வந்தனர் எனலும் பொருந்தும். (திருவருட்பிரகாசர்.)

யோனிவழி யேயுதித்தவ் யோனிவழி யேகினைந்தவ்
யோனிவழி யேயொடுங்கு மூமர்காள்—யோனிவழி
வாராவொருவனையே வந்தித்தால் யோனிவழி
வாரா வகையருளு வான். (சிவஞானவள்ளல்.)

நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியிங் கியற்றும்
அங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றாய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்
தக்க தலையோட் டின்முளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரண்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரக வாயில்

(போ - ளா.) நீட்டுதல், முடக்குதல், மிகுதிப் பொருளேற்றல், பிசைதல், உண்டல் ஆதிய உதவிவரும் உள்ளங்கையைத் தாமரையிதழெனக் கூறியும், வியர்வை, அழுக்கு இவை பொருந்தியுள்ள கழுத்தினை அழகிய பாக்கு விருக்ஷமாகக் கூறியும், வெப்பும், ஊத்தையுஞ் செறிந்தவாயினையும் உதட்டையும் பவழவிதழெனவும், முருக்கம்பூ வெனவும் கூறினர்; அன்னத்தையுங் கறிவகையையு மென்றுதின்று வயிற்றடைக்கச் செய்யும் சாதகமாயுள்ள தந்தபந்திகளை அந்தமானமுத்தென முழக்கியும்; சளியும் நீரும் சளசளவென் றிறங்கும்படிக்குள்ள மூக்கைக் குமிழமல ரெனவும், நீரும் பீளையும் நீங்குதலில்லா விளையும் கண்களை நோக்கிச் செங்கழுநீர் மலரெனச் செப்பியும், குறும்பிவிளையுங் காதினைவள்ளைச் செவியென வழங்கியும், கையும் எண்ணெயுங்கொண்டு மினுக்காவிடினும் அன்றியும் சுத்திசெய்யாவிடினும் அதிக புழுதியும் பேனும் அடைந்துவளரக்கூடிய மண்டையோட்டின்மேல் வளர்ந்தோங்கிய மயிரைத் திரண்டுகறுத்த மேகமென உவமைகூறியும் இவ்வாருகப் பலவித வணிகளாற் சிறப்பித்துப்பேசியும் வாாநின்ற உடலெனும் நரகத்திற் கொப்பான வாயிலானது,

(கு - ளா.) அகங்கையென்ற உள்ளங்கையை அங்கை யென்றனர். துப்பு என்பது சிவந்த பவழ மென்பதாயிற்று.

ஆணவமே நீர்போமி னஞ்சலிசெய் தேனுமக்கு
கோணைசிவ னென்பாற் குடிகொண்டா—னீணிரையத்
துன்பம் பயக்கின்ற துக்கசுக மேபோமி
னின்பமுறு காயத்தோ டின்று.

என்றபடி நமது பிள்ளையார் சர்வ அகங்காராதித் தத்துவச் சேட்டைகளையும், மற்றும் புறப்பொருளாம் அநித்தியமான பெண்டு பிள்ளை பண்டபதார்த்தங்க ளினைத்தையும் கேவலம் துச்சமெனக்

கொண்டெறிந்து முற்றுந் துறந்து தூய்மை யுற்றவராதலின் தமக்குற்ற சுவானுபூதிச் செல்வத்திருவருட் பயனுலடைந்த ஆத்மஞானப் பெருங்களிப்பினைக் கொண்டே ஏனைமாக்களும் அங்ஙனம் ஆமாறுகருதி, "தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி, வலைப்பட்டார் மற்றையவர்." (முற்றத்துறந்தவர்கள் முத்திபெறுவர், துறவாதவர் பிறப்பிலழுந்துவர்) என்று திருவள்ளுவ தேவரருளிய திருக்குறளின் கருத்திற்கிசைய, தாமின்புற்றவாறே உலகமாக்களும் உண்மைப்பொருளுணர்ந் தொழுகுமாறு கருணையினாலே மேலேகூறிப் போந்த பலவகைப் பொய்மை நிகழ்ச்சியின் கீழ்மைமையைக் கண்டித்து மெய்ப்பொருளை யகத்திடையே மேவக்கொண்டுய்யுமாறு கூறியருளினா ரென்றுணரற்பாற்று.

தோலு மிறைச்சியுந் துதைந்து சீப்பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சா ணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக் காமுக னுய்நா ளென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் றிருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி

செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க ளினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமும்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

(போ - ரை.) சருமமும் மாம்சமும் மிகுத்துச் சீப்பாயும் காமக் குகை; சர்ப்போற்பத்திபூமி; இரத்தநீரொழுகும் மார்க்கம்; துளை யுள்ளவாசல்; எண்சாண்கொண்ட சரீரம் வெளிப்படும் பெரிய வாசல்; இம்மண்ணுலகத்து காமங்கழித்தற்கான மறைவான ஸ்தானம்; அந்தவிடம்விரும்பிக் காமுகனெனும் சுவானம் சதாகாலமும் இச்சைவைத்து விழுந்துகிடக்கும் நடுவாயில்; சடையின்கண்ணே சந்திரனையிவர்ந்த சிவபிரானது திவ்யதிருவருளைப் பெறுதோர் கிடந்துழலாநின்ற மிருதுவான பெரியவாசல்; (அல்குலை) ப்புண்ணென்றறிந்து கூரையினுலே மூடினும் உட்கிடைநீர்வரும் சப்திக்கும் செம்புண்; மயக்கங்கொண்டு திருவருளின் உண்மையறிய மாட்டாத மாக்கள் நுழைதரும் மார்க்கம்; காமவியாதியால் கட்டுண்டு அதிலிருந்தும் மீளுதலில்லா சிற்றினத்தவர் சென்றடையும் மார்க்கமாம்; பெண்கள்சுகமே பெருஞ்சுகமெனப் பேசிடும் குதர்க்கக் காமுகர்வீழும் படுபள்ளம்; செருக்கடந்த காமங்கொண்டார் சேர்ந்

திடும் சிறியபள்ளம்; பெண்ணும் ஆணும் வெளிப்படும்படியான விசாலமார்க்கம்; பவ்வீமலிந்திழியும் வாசலுக்கு அருகில் சலம்வந்தூற்றிடும் சிறுநீர்வாயில்; இவ்வசைவழியை இன்பம் பிறப்பிடமாக நீங்கள் இச்சைவையாது, அந்த பொதுமாதரது மேனியைத்துதி செய்யாதுவிட்டு பச்சிலையெனும் பத்திரபுஷ்பாதிகளைக் கிள்ளி சிவபிரானை அருச்சனைபுரியினும், அன்புநோக்கி அவர்கட்கிரங்கி ஆதரித்துச் சிவபதஞ்சேர்ப்பிக்கும் பரமனும், முத்திக்குரிய முதல்வனும்; ஆதியந்தமற்ற நித்தியத்துவ முடையவனும், பொன்னொடு முதல் என்னொடும் சிருட்டிசெய்த பரமபதியும், காஞ்சிமாபதிக் கண்ணெழுந்தருளி யிருக்கின்ற பரமேசனுமான ஒப்புயர்வற்ற முதல்வனாரது உபயபாத கமலங்களையும் வழிபட்டுய்யுங்கள்.

(கு - ரை.) "சத்தியமுநோன்புந் தவமுமிளஞ்சொல்லும், உத்தமருக்குள்ளகுண மொன்றின்றி,— மத்திமராய், மைதுனமுஞ் சோறுமாய் மாயுமளவும் புசிக்குங், கைதவர்க்கு முண்டோ கதி" என்ற சிவஞானவள்ளலார் வாக்கிற்கிணங்க, மோக்ஷமெய்தற்குத் தடையாயுள்ளஉபத்தவிருப்பத்தினை முற்றிலு மொழித்தல் வேண்டுமென்பதாயிற்று. (இன்னும் இதற்கு அநந்த சான்றுகள் கூறக்கிடப்பினும் ஈண்டு விரிவஞ்சிவிடுத்துள்ளேம்) இவ்வள விழிவும் போகமாதரெனும் பொதுப் பெண்டிரைக் குறித்தும், அவர்தம் மையலிற்சிக்கி மயக்குற்றுழலும் கைதவர்க்காகவும் கூறினரன்றி யேனையோர்க் கன்றெனை உணரற்பாலது. "பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி, மெச்சிச் சிவபத வீடருள்பவன்" என்னும் பெருமொழிக்கிசையத் திருமூலரும் "யாவர்க்கு மாமிறைவர்க் கொருபச்சிலை, யாவர்க்குமாம் பசுவிற் கொருவாயுரை, யாவர்க்குமா முண்ணும்போதொரு கைப்பிடி, யாவர்க்குமாம்பிறர்க் கின்னுரைதானே" யென்று நன்கெடுத்தோதியதுங் காண்க.



பட்டினத்தடிகள் வியாபாரநிமித்தம் ஓடமேறிப் போதல்.

திருவேகம்ப மாலை.

அறந்தா னியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற் [னே.
றிறந்தான் பெருமையை யென்சொல்லுவேன் கச்சியேகம்ப

(பொ - ரை.) திவ்ய கச்சிப்பதியில் மேவிய ஏகாம்பர நாதனே இல்லறதருமம் புரிபவனைவிட அவ்வறத்தினை விட்டகன்று புறப் பற்றாகிய பெண்டுபிள்ளை பண்ட பதார்த்தாதிகளை யெல்லாம் வெறுத்தொதுக்கித் துறவு பூண்டவன் கோடிபங்கு மேன்மையனு வன்; அத்துறவியைவிட உள்ளத்திலும் பற்றுவையாதுள்ளவன் நூறுகோடி பங்கு மேன்மையனுவன்; தரும மல்லாதனவற்றை அறவேயொழித்து நன்னூலாம் சன்மார்க்கப்பகுதியை உள்ளபடி யோர்ந்து சிற்பரமூர்த்தியாம் தேவரீரோடும் நெருங்கி இருவினைக ளியற்றாது நான் என்பதொழிந்து நின்ற முழுத்துறவியின் பிரபா வத்தை எவ்வாறு கூறுவேன் என்பதாம்.

(கு - ரை.) முதன்முதலாகக் கூறிய 'அறந்தானியற்றுபவன்' என்றது இல்லறத்தானை; எவ்வாறெனின், அவனிலுங் கோடி யதிகம் இல்லந்துறந்தான் என்பனவால் விளங்கினதறிக; ஈதன்றி யும் திருவள்ளுவர் 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்திற் கூறிய 'அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை' என்ற தாதியாய குறளினு லும் நன்கு புலப்படுகின்றது. இல்லந் துறத்தலாவது புறப்பற்றொ ழித்தலே; புறப்பற்றும், என்மாடு, என்வீடு, என்பிள்ளை என்ப தாதியன. உள்ளத் துறவுடையோன் - சந்நியாசி.

வெண்பா.

தாயரையுந் தந்தையையுந் தற்சார்ந்த கேளிரையு
மாயுமயல்காட்டு மனைவியையுஞ்—சீயென்று.
சொற்பனம்போற் கண்டெட்டாத் தூரப்போ யோகநிலை
நிற்பவனை ஞானியென நேர். என்றார் சிவஞான வள்ளலாரும். அறிவுமயமானவன் எவனோ அவனே யோகஞானி யெனப்படுவான். அத்தகையோனே மோக்ஷமாயவீடடைய வல்லவன் ஆவன் என்க. இன்னவன் பெருமைசொல்லல் எவர்க்கு மாகாதாதல் என்றார். "இருவாதனை யற்றிறந்தான் பெருமையை யென் சொல்லுவேன்" என்றார் பிள்ளையாரும். அவ்விரு வாதனையுந் துறந்தபின்னர் "இறந்தான் பெருமையை" என்றுழி, ஈண்டு சீவபோதமெனும் தற்போதத்தைக் கொன்றவனென்றே பொருள் சோடல்போதரும். 'அறிவோடிருந்து' என்றது சித்தெனும் சிவத்தோடு தான் ஒன்றி நிற்றலாம். பிறத்தல் - இறத்தல்,—நினைத்தல்-மறத்தலாம். சிவபோதம் தொலைந்து சீவபோதம் லபிக்கும்வரை தலைவன்றரிசனங் காண்டலியலாவாம். (1)

கட்டியணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடி வைப்பரோ விறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) ஏ கச்சிப் பிரபுவே! இறைவா! தச்சனும் இயமதர்மனுலே இவ்வுடலை, மரம்போன்று வெட்டித்தள்ளற் கினையாக உயிர்வாங்கித் தள்ளுவானுயின் கட்டிச்சேர்ந்த பெண்ஜாதியும் பிள்ளைகளும் பறைமேள மடிப்பித்தும் பலவாத்தியங்களை முழக்கச்செய்தும் பின்னர் கண்ணீர்விட்டழுதும் சுடுகாடுவரைச் சென்று திரும்பி வந்து விடுவார்களேயன்றி மேற்செல்ல வில்லையாகும்.

(கு - ரை.) ஈண்டு கட்டியணைத்திடும் பெண்டீரும் பிள்ளையு மென்றது அவர்கள் அளவளாயிருந்தக்கால் நேர்ந்த அன்பின்மிகுதியைக் காட்டுகின்றது. அன்றியும் பரிவுள்ள உற்றுரையுங் குறிக்கும். பிராணன் காலனுக்கும், உடல் அக்கினி பகவானுக்குமாக இருவரும் ஒப்புக்கொண்டு விட்டபிறகு உள்ளார்க்கும் உற்றுர்க்கும் மற்றூர்க்கும் பற்றுவிட்டு விடுவதால் ஒவ்வொருவரும் சுடுகாடுமட்டும் சென்று பின்திரும்பி வாரா தென்செய்வர்கள்! அந்தோ பாவம்! "எம்பெருமான் திருவடிக்காளாகாது இப்படி யேமாந்து இயமனுலகம் போய்விட்டார், அன்றி யிப்பிரேதத்தாரும் யேகப்போகிறூர் சுடுகாட்டிற்கு; ஆகவே யேனையோரெல்லாம் இவ்வாறு எமாந்து அழிந்துபோய் விடாதீர்கள் எச்சரித்தேன்" என்பதாகப் பறைகள் படபடவென்னுஞ் சப்தத்தால் சாற்றுகின்ற தறிமின்கள் என்பது வெளியாகின்றது. பிராணனைக் கைப்பற்றுங்கால மறிவதால் காலனுயினன். வீடுகட்டுவதற்கு தச்சன் முன் வருவதுபோன்றே இங்கு சிறுவீடாகிய சரீரம் மாய்வதற்கு இயமன் முதற்காரணமாயிருத்தலின் இரண்டாவதாகக் காலத்தச்சனுமாயினன் எனவறிக.

சான்றகத் திருமூலர்:—

பண்டம்பொய்க்கூரை பழகிவிழுதலா
லுண்டவப்பெண்டிரு மக்களும்பின்செலார்
கொண்டவிரதமு ஞானமுமல்லது
மண்டியவருடன் வழிநடவாதே.

ஊரெலாங்கூடி யொலிக்கவழுதிட்டுப்
பேரினைநீக்கிப் பிணமென்றுபேரிட்டுச்
சூரையங்காட்டிடை கொண்டுபோய்சுட்டிட்டு
நீரினில்மூழ்கி நினைப்பொழிந்தாரே. (2)

கைப்பிடி நாயகன் தூங்கையிலே யவன் கையையெடுத்
தப்புறந்தன்னி லசையாமன் முன்வைத் தயல்வளவில்
ஒப்புடன்சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படிநா னம்புவே னிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) ஏ இறைவா! காஞ்சிப்பதி மேவியுள்ள ஏகாம்பரனே! (நடுச்சங்க நல்விலங்குபூட்டுதலாகிய விவாக சந்தர்ப்பத்திலே) கைப்பிடித்தகணவாளன் உறங்கும்போது அவன்தன்மேல் வைத்துள்ள கையையெடுத்து அப்பக்கத்தில் அசைதலின்றி வைத்துவிட்டுப் (பின்) பக்கவீடு சேர்ந்து நித்திரைநீங்கி, பின்னர் (தன் கணவனிடம் சேர்ந்து) முன்போல் தூங்கும் வஞ்சகியை யான் எவ்வாறு நம்புவது!

(கு - ரை.) 'கைப்பிடிநாயகன்' என்றது முன்னம் விவாக நிகழுங்கால் அக்னியென்ன, தேவர்களென்ன, பெரியோர்களென்ன இன்னும் ஏனையோர்களது சாக்ஷியங்களின் முகதாவில் நியமமாகமணம்புரிந்துள்ள உத்தமஸ்திரீயென்பது எவருமறிவதற் கேதுவானது. அங்ஙன மிருக்க, நம்பிள்ளையார்கூறிய பிழைவசனம், வியட்டியன்று சமட்டிமுறை யெனவறிதற்பாற்று. இதனாற் பெண் மக்களையோர் பொருட்படுத்தாது பரம்பரனையே நம்பற்பாலதென்பது துணிபாம். பிள்ளையார், மனைவியின் தீயொழுக்கைக் கூறினதாகக் கூறுவர் சிலர். அதுசரியன்று; சுவாமிகளார்க்குச் சிவத்தைத் தவிர்த்து வேறெதுவும் நம்பும் சுபாவமின்மையாலின் மனைவியரையும் ஐயுற்றதாகக் கருதிச் சிவத்தினிடமாக மட்டும் நம்பகத்தைத் தம்மகத்திட்டாராதலி னென்றுணர்க. இதனால், நம்பத்தகுவது எம்பெருமானைத்தவிர வேறெதுவு மில்லையென்ற அவர்தம் கொள்கையை கொள்ளல் மரபாகும். பொய்யிற்சிறந்த தையலார் என்றாலும் ஈண்டு நம்மனோர்க்காகவே பெரும்பான்மை தேற்றமாயிற்று. (3)

நன்னூரிற் பூட்டிய சூத்திரப்பாவை நன்னூர் தப்பினல்
தன்னாலு மாடிச் சலித்திடுமோ வந்தத் தன்மையைப்போல்
உன்னாலியானுந் திரிவதல்லான்மற் றுனைப்பிரிந்தால்
என்னாலிங் காவதுண்டோ விறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) இறைவா! கச்சிப்பதிக்கரசே! நற்கயிற்றிலிணைத்துள்ள சூக்ஷப்பிரதிமையின், பிணைத்த அந்தக் கயிரானது அறுமேயாயின் அப்பிரதிமை தானாக அசைந்தாடிச் சலியாதன்றோ? அதுபோலவே தேவரீரது வல்லமையாலே ஆடியசைந்த யான் தம்மைமறந்து விடுவேனாயின் இவ்வேழையேன் இங்கெவ்வாறு வாழப் போகிறேன்! வாழேனென்பது கருத்து.

(கு - ரை.) சூத்திரப் பாவையாவது, கயிர் கொண்டாட்டும் பொம்மை;

உலகமு முயிரு மொருங்குறப் படைத்தல்
வுயிரிடை நடன மோவாது எற்றினு
மாருயி ரறியா வற்புத மென்கொல்
உலக மார்த்தாண்ட னொளிகொ டறிந்து
முலக மார்த்தாண்ட னுருவறியாவே. (வள்ளலார்.)

இங்ஙனம் சிவபெருமான் மாயை ஆன்மா, வென்பவற்றோடும் பிரிவின்றி ஒன்றுபட்டிருப்ப தியல்பாதலின் ஆன்மாக்கள் என்றும் தன்னந் தனிமையா யிராவாம். எம்மானன்றி ஜீவபாரங்கள் உலகில் நிலைபெருங் காரணங் கண்டே "உனைப்பிரியின் இங்கு என்னா லொன்று மாவதில்லை" யென்றார். என் சிலர்கட்கு ஈசனின்றி சக்தியில்லை யாதலினென்க. இதனையே தாயுமானாரும் 'அவனன்றி யோரணுவு மசையாதெனும் பெரிய வாப்தர்மொழி யொன்றுகண்டா' யென்றார். (4)

நல்லா ரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே
அல்லாதுவேறு நிலையுளதோ வகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) அரசே! கச்சித்திருவேகாம்பர கண்ணுதலே! உத்தமர்களது உறவும், தேவரீர்க்கினிய பூசாகைங்கரி யாதிகளில் விருப்பும் விவேகமுமில்லாது என்னுயிர்க் குறுதியாந் துணைவேறுண்டோ? இல்லை; இல்லம், சொத்து, பெண்டிர், பிள்ளை, உற்றார், இவ்வுலகவாழ்க்கை சரீரவனப்பு ஆகிய இவையெலாம் (கிளிஞ்சலில் வெள்ளிதோற்றம் போன்று) போலித்தோற்றமாய் முடிந்ததே. (ஆகவே மாயாபிரபஞ்ச மென்றது உண்மையே.)

(கு - ரை.) உத்தமோத்தம சத்துவகுண சாதுக்களையே நல்லாரென்றனர். மனிதன்பெற வேண்டிவந்ததே ஞான மடைதற் பொருட்டாகும். அவ்விதஞானப் பிரசாதம் சிவானுக்ரகத்தாலன்றி கிடைக்கப்பெரு. அதுகொண்டே பிள்ளையார் அந்தஞானம் கிடைக்கப்பெருவிடத்து கெதிவேறில்லை யென்ருர். (இதுசத்தியம்) ஆகவே அச்சிவபூசை முதலியவைகளில் சிறந்தது சிவத்தியானமாகும் அத்தியானத்திற்கு முக்கியம் மெய்யன்பாம்; அந்த அன்போ, சத்துவகுண சாதுக்களார் நல்லிணக்கத்தாலேயே உண்டாவதாகும்; ஆகவே இத்தியாதி நியாயங்கள் காரணமாக்கொண்டே அங்ஙனம் நல்லாரிணக்கம், பூசைநேசம், ஞானம் என்பனவடுக்கிக் கூறினர். மக்களென்பார் பிரதமமாக தங்க ளுயிர்க்குறுதுணையாம் ஈசனை வசப்படுத்தவேண்டுமாயின் அவரது நட்பேயாம்; அதாவது நேசம்பெறுதல் பத்தியாலன்றிச் சாத்தியமாகா, என்னை ? பத்தியின்றேல் அருட் சித்தியின்று, அருட்சித்தியின்றேல் பெறுமுத்தி யின்று ஆகலானே முத்திக்குரிய முறை கூறி மற்ற உலகவாழ்க்கைத் துணை

களை யெல்லாம் வெளிமயக்கே யென்று தேற்றத்திற் கூறினர். "சிவநேசம் பவநாச" மாதலின் இக்கருத்தையே இன்னு மோரிடத்தும் 'அடியாருறவும் அரன்பூசை நேசமும்' எனமடித்துக் கூறினர். (5)

பொல்லாதவ நெறி நில்லாதவனைம் புலன்கடமை
வெல்லாதவன் கல்வி கல்லாதவன் மெய்யடியவர்பாற்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின்றிருவடிக்கன்
பில்லாதவன் மண்ணிலேன் பிறந்தேன்கச்சி யேகம்பனே

(போ - ரை.) திருக்கச்சி மேவியருளிய செல்வனே! இவ்வடியவன் மிகக் கொடியவன்; பத்திமார்க்கம் பற்றாதவன்; ஐம்புலன்களையும் அடக்காதவன்; சத்தியஞான சாத்திரங்களைப் படியாதவன்; மெய்யன்பர்களை மேவாதவன்; சத்தியவார்த்தை பேசாதவன்; தேவரீர் தம் திருவடிமலர்க்கண் ஆசை யில்லாதவன்; இத்தன்மையான கயவன் இந்தபூமியில் ஏன் சுமையாகினேன்;

(கு - ரை.) உலகத்துள்ள தீயர்தங் குணங்களைத் தன்மேலேற்றித் தாழ்ந்து, அதனல் ஏனையோர்க்கு அறிவுறுத்துவான் காரணம் பற்றிக் கூறற்பாலதாயின.

துச்சிலை விரும்பித் துயர்கொளுங் கொடியேன்
துட்டனேன் தூய்மையொன் றில்லா
வெச்சிலை யனையேன் பாவியே னென்னை
யென்செய்தாற் றீருமோ வறியேன்
பச்சிலை யிடுவார் பக்கமே மருவும்
பரமனே யெம்பசு பதியே.

எனப் பெரியா ரொருவரும் தங்குறை கூறித் தாழ்ந்தமை காண்க. உண்மை சொல்லாதவன் என்றதால் பொய்பறக்கும் புழுத்

தலையர்க் கறிவுறுத்துவான் வேண்டியும், அங்ஙனம் பொய் புகல்வார் அண்ணலார் தம்மைப் பொருந்தாத ஒலொழியா ரென்பதையும் விளக்கலாயினர் போலும். அன்றி, சத்தியம் எங்கில்லையோ அங்கு நன்மை யில்லாது பொல்லாமையும அப்பொல்லாங்கால் நன்னெறி யில்லாமையும், நன்னெறி யில்லையாகவே புலனடக்க மில்லாதும், இத்தனைக்கும் எதுகல்வியறி வில்லாமை காரணமாக, மெய்யன்பர் முதலிய சாதுக்களாரது சார்பில்லாமையுமாகிய கசடனாய் விடுவதாலுமென்க. (6)

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே.

(**போ - ரை.**) ஏ கச்சிப்பதிக்கிறைவனே! இப் பூமியின்கண் பிறக்கும்போது யாதொரு பொன்பொருளுங் கொண்டு வந்ததில்லை; பிறந்துவாழ்ந்திருந்து தேடிய பொருளில் சிறிது கூடகொண்டு போவதில்லை; மத்தியகாலத்தில் வந்த பொருட்செல்வம் பரமசிவன் தரப்பட்டதென்று அறிந்து இரப்போர்கட் கீயாது வீணேவைத்துப் போகின்ற புத்தியீனர்களுக்கு நான் சொல்வதென்ன!

(**து - ரை.**) பிறந்து வளர்ந்தபின் கொள்ளும் தேட்டத் திரவியத்தில் மிஞ்சும் பொருள்களில் சிலவற்றையும் கூட பரமேசுவரனால் அளிக்கப்பட்டதாக வெண்ணிக் கொடாமை காரணமாகவே அவர்களை குலாமர் என்றார். பொருள் மட்டோ; உடல் ஆவி யென்னும் மூன்றையுந் தத்தம் செய்வாரும் செய்தாரும் உளராவர். அவர்க்கே மோக்ஷசுகம் கிடைக்கப் பெறுவர். சில பல ஈதலில்லா மகாலோபிகள் உள்ளளவும் பெட்டியிலும் மண்ணிலும் வைத்துப்

பார்த்துக் காத்து கடைசியில் பலதீய விநியோகாதிகளுக் கெல்லாம் ஈடுபட்டழிகின்றன. சான்றாக;

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகுங் காண். என முன்னோர் மொழிந்தமை காண்க.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூஉங் கில்லை கேடு. திருவள்ளுவர். (7)

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந்தால்
சொன்னவிசாரந் தொலையாவிசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம் வைத்தா யிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) இறைவா! காஞ்சிப்பதியமர் கண்ணுதலே! முதன்முதலாக அடிமைக்குச் சோற்றிலேயே கவலைகொண்டுள்ளது; அது ஒருவாறு நீங்க அடுத்தபடியாகதிரண்டபொருளின் கவலையாகிறது; அஃது எப்போது மிருந்துகொண்டே யிருக்கிறது; ஒரு நாளும் நீங்கினபாடில்லை, நித்தியகவலை நிமிஷக் கவலையாம்; இதற் கடுத்தாப்போல் மயிற்சாயலும் குயிற்றொனியும் வாய்ந்த மங்கயரை புல்லுதற்குச் சொல்ல முடியாதகவலை; இந்தவிதமாக மகா தீய மனசுக்கு எத்தனைகவலை வைத்துள்ளாய்! (அடா அப்பனே!)

(து - ரை.) மனிதன் சரீரத்திற்கு முதலாதாரமாயும், உயிர்க்கு உயிராயும் விளங்குகின்றது அன்னமாதலாலும், அன்றி அவ்வன்

னம் தினம் ஒன்றிற்கு மூன்று முறைக்குக் குறையாது வேண்டுத லாலும், அஃதில்லாவழி அனைத்தும் ஒடுங்குத லாலும் அதனை முதற்கூறிப் பின்னும் அதுவே விசாரமென்றார். "அன்னத் புருஷகா" என்பதாதிய உபநிஷத்தாதிகள் கூறுவதாலும் அன்னமயம் பிராணமயமாய் விளங்குகின்றது, மற்ற சொன்ன விசாரத்திற்கும் தோகையரைப் பன்னவிசாரத்திற்கும் அன்னமின்றி பசி வந்த போது ஊக்கமின்மையாலும், பசிநாசனுகிய அன்னத்தை முன்னம் சொன்னார் முற்றுந் துறந்தார். மற்றும் அன்னவிசாரத்தை அதுவே விசாரமென மடித்துக் கூறியும், சொர்ன விசாரத்தைத் தொலையா விசாரமென்றும், தோகையரைப் பன்னும் விசாரத்தினை பலகால் விசாரமென்றும் அததற் கேற்றவாருகக் கூறியது மிகவுங் கவனத் திற் கிடமாயுள்ளது. (8)

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையு நினையாப்பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

(போ - ள.) காஞ்சிப்பதியில்வாழ் ஏகாம்பர பிரபுவே! அடியேன் புருஷார்த்த போகங்களைப் படியாத குற்றத்தையும், மற்றும் அவைகளைச் சிந்தனைசெய்யாத பிசகையும், மனங்கரைந்துருகி தேவரீர் சந்நிதிக்கண் நின்று தரிசியாத தப்பிதத்தையும், நின்திருவடித் தியானமுறுத குற்றத்தையும், தேவரீர் அருளிய ஸ்ரீபஞ்சாக்ஷரஜெபஞ் செய்யாத பிசகையும், தம்மைத் தோத்திரியாத குற்றத்தையும், அன்றி வணக்கஞ் செய்யாத பிசகினையும், இன்னுமுள்ள மற்ற குற்றங்களையும் பொறுத்தருள் செய்வாய்.

(கு - ள.) கல்லாப்பிழை, கருதாப்பிழை, உருகி நில்லாப்பிழை, நினையாப்பிழை, ஐந்தெழுத்தைச் சொல்லாப்பிழை துதி

யாப்பிழை, தொழாப்பிழை ஆய இவ்வெல்லாப்பிழைக்கும் முதற் கண் நில்லாப்பிழையாகிய கல்லாப்பிழையை பிள்ளையார் குறித்தோதிய கருத்தாவது: கருதல், கசிந்துருகிநிற்றல், ஐந்தெழுத்தோதல், துதித்தல், தொழுதல், ஆகிய வனைத்தும், அறிவுநூல்களையும் ஞான நூல்களையும் ஐயந்திரிபற ஓதினார்க்கன்றி தெய்வ வழிபாட்டின் பாகுபாடுகள் நன்கு புலனாகாவாதலின் பிள்ளையார் அக்கல்லாப் பிழையை முன்கூறிக் கற்றுத்தெளிதல் அவ்சியமென்பதைக்குறிப் பித்தா ரென்பது தோன்றநின்றது.

"கற்றல் கேட்டலுடையார் பெரியார்கழல் கையாற் றொழு தேத்த" என்னும், "கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கரையூரிற் பாண்டிக் கொடுமுடி" என்றும், "கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே" என்னும் தேவாரச்செல்வர்கள் திருவாய் மலர்ந்தனவும், 'ஓதாதார்க்கில்லை யுணர்வொடு ஒழுக்கம்' என்ற நீதிநூலும் பிறவும் அக்கருத்தினையே குறித்துக் காட்டலுங் காண்க. மற்றவை வெளி, பக்தி, யோக, ஞான, தியானதொண்டுகள் புரிய இயலாவுழி அவர்கள் சரீரதொண்டேனுஞ் செய் துய்யட்டும் என்ற நோக்கத் தானே 'தொழாப்பிழையை' ஈற்றில் வைத்தாரென்பதும் தெளிவாம். தொழுதல்-சரீரதொண்டு. (9)

மாயநட்போரையு மாயாமலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளைத்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயுமதேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே.

(போ - ரை.) காஞ்சிமாபதிக் கிறைவனே! வஞ்சகநெஞ் சகம் வாய்ந்த நண்பர்களையும், நீங்காத மலயென்கின்ற பெண்டிரையுமொழித்து, மற்றெல்லாருட பதார்த்தங்களையுந் தியாகஞ் செய்து துறவறம்பூண்டு, திருவருட் டாயினைப் பற்றிச் சென்று

பின்னர் பரமபிதாவாகிய பரசிவத்தைப் பின்பற்றி பின்னர் முன் தாயினை மறந்து தந்தையுந் தானுமாயிருத்தலேயே நிட்டை யென் றோதி யருளினன் என் பரமகுருநாதன்.

(கு - ரை.) ஈண்டு மேற்பாசுரத்தை பிள்ளையார் தத்துவங் களையே கற்பனையாகக் கூறினார்போலும். எங்ஙனமெனில், மாய நட்போர் என்று சமஷ்டியாய்க் கூறியது; அதாவது தத்துவங்களை என்க. மாயாமலமென்றது ஆணவமலத்தை; ஆன்மா இருவினை யொப்பு மலபரிபாகஞ் சத்தினிபாதம் பெற்றுச் சிவத்தொடுங்கலந்து ஒன்றி நிற்பதே நிஷ்டையென்ப தாயிற்று, ஈண்டு திருவருளே தாயாம். சிவமே தகப்பனவன். மாயாமல மென்றது - கெட்ட தாமலம்; ஆணவமானது முத்தியிடத்தில் வன்மை குறைந்து நிற் றலால் அதனை மாயாமலமென்றனர்; திருவருட் சத்தியின் சாதகத் தானே சிவபெருமானைச் சேர்தல் கூடுமென்பது நூற்றுணிபாகும். சிவத்தோடும் பேதமறக் கலந்துவிடவே தாயை விட்டுப் பிரிந்த தாகும். அதையே அத்வைத நிலையெனப் படுவது. (அத்வைதம்- இரண்டற்றது.) (10)

வரிக்கோல வேல்விழி யாரநுராக மயக்கிற் சென்று
சரிக்கோது வேனெழுத் தஞ்சுஞ் சொலேன் றமியேனுடல்
நரிக்கோ கழுகு பருந்தினுக்கோ வெய்ய நாய்தனக்கோ
எரிக்கோ விரையெதுக்கோ விறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிமாபதிவாழ் ஏகாம்பரநாதனே! வரிபரந்த வேலொத்த கண்கள் பொருந்திய பெண்மக்களது மயக்க வலையிற் சிக்கி அன்னவரோடும் நேசித்து அளவளாவியிருக்க புகழ்வேன். ஸ்ரீ பஞ்சாக்கர ஜெபம் செய்யமாட்டேன்; (இத்தன்மையினேன்) எளியவனது சரீரம் நாய்க்கோ, அன்றி கழுகுக்கோ, பருந்துக்கோ, நரிக்கோ, நெருப்பிற்கோ, வேறெதனுக்கோ ஆகாரமாகும்.

(கு - ரை.) சரிக்கோதுவேன் - இசையும்படிக்கோதுவேன் எனலும் பொருந்தும். அநுராகம் - காமியம். பஞ்சாக்கரம் செபித்த லின்றிக் கேவலம் மாதரைப்புல்லிக்கிடப்போரது உடலமானது அவர்கட்கின்றி ஈற்றில் நாய் நரி முதலியன பிடிங்கித்தின்னற்கு யோக்கியமாகுமெனல் தொன்முறை. காம இச்சையை ஒழிக்கவல் லது பஞ்சாக்ஷர ஜெபமாதலான் அஃதும் செய்யேன் என்றார். இக் கருத்தைக்கொண்டே மாணிக்கவாசகரும் 'அஞ்செழுத்தின் பிணை பிடித்துக் கிடக்கின்றே' னென்றார். (11)

காதென்று மூக்கென்று கண்ணென்றுகாட்டியென் கண்ணெ
மாதென்று சொல்லிவரு மாயைதன்னை மறலிவிட்ட [திரே
தூதென் றெண்ணமற் சுகமென்றுநாடுமித் தூர்ப்புத்தியை
ஏதென் றெடுத்துரைப்பே னிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) காஞ்சிப்பதிக் கிறைவராம் ஏகாம்பர நாதனே! காதைப்பார், மூக்கைப்பார், விழிகளைப்பார், நான் ஓர் பெண்ணென்று என்கண்ணெதிரே காட்டிவருகிற கேவலமான சொரூபத்தை, இயம னால் அனுப்பியுள்ள தூது எனக் கருதாதொழிந்து இன்பசொரூப மென்று மையலால் நினைத்து மகிழ்ந்துள அவ்வெறிப் புத்தியினை என்னவென்று கூறுவேன்!

(கு - ரை) மாதென்றது, பெண்ணை, பெண்ணே மாயையின் காரிய வடிவம், ஆனால் இந்தப்பெண்ணை ஞானிகள் வெறுப்பர், அஞ்ஞானிகள் களிப்பர். வாஸ்தவத்தில் அதாவது வேதாந்த நியாய பிரகாரம் ஆடவர்களைவதைக்க எமதர்மனால் விடப்பட்ட தூதுவன் என்றதுதான் சத்யம். சாக்ஷியாக "நன்மனைதோறும் பெண்களைப் படைத்து நமனை யென்செயப்படைத்தாய்" என்றும் கூறுவர். சதாகாலமும் பெண்போகமே வேலையாகக்கொண்டவர் கடைசியாக எம்லோகத்தையே ஆக்ஷியாய்க்கிடப்பார் என்பர் மேலோர். இக்க

திக்குக் காரணகுருபீடம் ஒடியாளே யாவர். இதனாலேயே மாதரை மறவிவிட்ட தாமென்றார் பிள்ளையார். (12)

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) கச்சி காமகோட்டத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஏகாம்பரபிரபுவே! யானிருக்கும் ஊரும் நிச்சயமல்ல; வினைப்பகுதியால்வந்த பந்துமித்திராளும் நிச்சயமல்ல; என்னைத் தவம்புரிந்து பெற்ற தந்தை தாயரும் நிச்சயமல்ல; பெண்டிரும் நிச்சயமல்ல; புத்திரரும் சிறப்பும் நிச்சயமல்ல; திரவியமும் நிச்சயமல்ல; இவ்வுலகத்தின்கண்ணே யாரும் நிச்சயமல்ல; தேவரீரது திவ்ய திருமலரடியிணைகளே நிச்சயமாகும்.

(சு - ரை.) இந்தத் திருப்பாசுரமானது சிவபெருமானது திவ்ய திருவடித்தாமரையைத் தவிர்த்து உலகத்தில் வேறெவர்களும் நித்தியத்துவ முடையவர்களன் றென்பதாகப் பெரும்பாலுங் கூறியுள்ளதாம். இக்கருத்துக்கிசைய இன்னுமோர் பெரியார் கூறியன இங்கு குறிப்பதும் காண்க.

காண்பதும்பொய் கேட்பதும்பொய் காரியம்போலே யிதமாய்ப்
பூண்பதும்பொய் யெவ்விடத்தும் போகமும்பொய்—மாண்பாகத்
தோற்றியின்ப வெள்ளமாய்த் துன்னியென்னுட் சம்பந்தன்
வீற்றிருப்ப தொன்றுமே மெய்.

ஆகவே, இதனால் சேதனாசேதனங்க ளெல்லாவற்றையும் நிலையென நம்பினோர் அதன்கதியே யடைவரென்றும், எம்முக்கட்பெரு

மானே நிலையென நம்பினவர்கள் அவரைப்போன்றே எக்காலமும் நிலைபெற்றே வாழ்வர் என்பது மாயிற்று. (13)

சீறும் வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினாற்
பீறு மலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) இறைவனே! காஞ்சியாபதிக்கண்ணேயெங்கு முக்கண்ணரசே! தீயன பயத்தற்கேதுவான வினைப்பகுதியே ஓர்பெண்ணுருக்கொண்டுப் பின் திரண்டுருண்டு ஸ்தன்னியங்கள் தோன்றி மாமிசவடிவாகப் பருத்துள்ளதும்; அநாகரீகச்செயலால் கீற, அதனால் வடியும் செந்நீர், மலம் இவைகள்வழிந்தூறும் கேவல பெரியதோர் குழியினைக்கடந்து கரையேறவறியேன்!

(து - ரை.) பாவமே பலசேர்ந்து பெண்வடிவாய் வந்ததென்பதும் அமையும். கூறும்,—பலவாறு சிறப்பித்துக் கூறுதலையுடைமையால் கூறும் முலையென்றனர் என்க; சிறுநீர், நாதநீர், மாதாந்தச் செந்நீர் ஆகிய மூன்னீரும் சதாவழிந்தூறும் தன்மையால் பெருங்குழி யென்றூர்.

விண்குலாவுயர் விண்ணவராயினும்
பெண்கள்காமம் பிடித்தவருய்வரோ
புண்களாகிப் புரந்தரன்மெய்யெலாங்
கண்களானது காமத்தினாலன்றோ.

என்று 'திருக்குற்றாலப் புராணங்' கூறலான் பெண்போகம் மிகக் கொடியதென்றும், அதனாலே பிள்ளையார் "பெருங்குழிவிட்டேறுங் கரைகண்டிலேன்" என்று வருந்திக் கூறினரென்றும் வெள்ளிடைமலையென விளங்கலாயிற்று. (14)

பொருளுடையோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்து
தெருளுடையோரைமுகத்தினுந்தேர்ந்துதெளிவதுபோ [த்
லருளுடையோரைத்தவத்திற்குணத்திலருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத்தகுங்கச்சி யேகம்பனே.

(போ - ரை.) காஞ்சிப்பதிக்கண்மேவிய ஏகாம்பர பிரபுவே! செல்வ வந்தர்களை அவர்கள்செய்யுந் தானதருமங்களாலும், மகா தீர வீரர்களை யுத்தகளத்தே ஆண்சிங்கம்போன்று அஞ்சாதுமுன்சென்று வெற்றிகொள்வதாலும், உத்தம அறிவாளிகளை அவர்களது முகத்தினாலும், அறிதல் இயல்பாமாறுபோலத் தெய்வத்திருவருள் வாய்க்கப் பெற்ற பெரியோர்களை அன்னோர்கள்புரியுந் தவ விசேடத்தாலும் நற்குணாதிகளாலும், அருளினாலும், மெய்யன்பினாலும், சந்தேக விபரீதங்களும் சாத்திரமொழிகளாலுங் காணலாமென்றதாயிற்று.

(கு - ரை.) வேண்டிய திரவியங்களிருந்தும் அதிற் கூடுமட்டும் தருமகாரியாதிகளில் ஈடுபடுத்தாவிடின் அப்பொருளுக்குடையவர் உடையவராகாது காவலாளரேயவர் உடையவர் இவர்க்குப் பின்னர் வந்து மனம்போற் செலவழிப்பர், ஆதலின் அவரைச் செய்கையிற் காணலாமென்றார் பிள்ளையார். தெருளுடையாரை அவர்தம் முகத்தானே காணலாம். எவ்வாறெனின் அடுத்ததைக் காட்டும் கண்ணாடியைப்போன்றென்க. அன்றி அவர் வதனம் தயாளந் ததும்ப விளங்கலானும் அறியத்தக்கதாகுமென்க. இன்னும் அன்னோர் எவ்வுயிர்களிடத்தும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் இரங்கச் செய்வர் என்க, இத்தகைய தயாளத்துவம் தோன்றற்கு அவர்களது அன்பின் முதிர்ச்சியேயாகும் என்பதாம் சான்றாகத் திருவள்ளுவரும், "அன்பிலாரெல்லாந்தமக்குரியர் அன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு'' என்றருளியதுங்காண்க. ஆகவே, இவ்வாறு குணங்குறியானே மெய்யருளுடையாரைக் கண்டு கடைத்தேற வேண்டும் என்பதாம். இன்னும் இத்தகைய மெய்யன்பாளர்க்கு,

சிவபெருமானிடம் அன்புபாராட்டிவருங் காலந்தோறும் அவர்தம் கண்களில் ஆநந்தநீர் அருவியாய்ச் சொரிதலுங் காணலாமென்க. ()

பருத்திப் பொதியினைப் போலேவயிறு பருக்கத் தங்கள்
துருத்திக் கறுசுவை போடுகின்றார் துறந்தோர் தமக்கு
வருத்தி யமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தில்
இருத்திக் கொண்டே னிருந்தா யிறைவாகச்சி யேகம்பனே

(போ - ரை.) இறைவா! கச்சித்தலம்வாழ் ஏகாம்பரநாதனே! பஞ்சுப் பொதிபோன்று, அறுசுவைப்பதார்த்தங்களுடனே தங்கள் வயிறு வீங்கும்படியாகத் தோற்றுருத்தியிலே நிரம்ப அன்னத்தை அடைக்கின்றார்களன்றித் துறவிகளைத்தேடி அவர்களுக்கு அன்போடும் அமுதளியார்கள்; ஆகவே இக்கொடும்பாவிகளை இவ்வுலகத்தின் கண் எதற்காக வைத்துள்ளாய்?

(து - ரை.) துருத்தியென்பது ஈண்டு தோற்பையாம் உயிரோடுள்ள வயிற்றை. உப்பு, புளிப்பு, உரைப்பு முதலியன அறுசுவையாகும். "தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்க லுனென்றாங், கைம்புலத்தாறோம்பறலை" என்ற திருக்குறட்பிரகாரம் ஐவரையுங்காக்குங் கடனுடையானாதலின் துறவறத்தார்க்கு அமுதளியாது தன் குடும்பத்தோடுமட்டும் விலாப்புடைக்கவுண்டு மாடுபோல் விழுந்து கிடத்தலை நோக்கியே பிள்ளையார் அவனை "இருத்திக்கொண்டேனிருந்தாய்" என்று கடிந்து விளித்தனரென்க. என்? பிரமசாரியன் வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னுமூவரையும் காத்தற்குக் கடனுடையான் காரணம்பற்றியே இல்வாழ்வானை அங்ஙனங்கடிந்து கூறினரென்றதாயிற்று. இம்மூவரையுங் காத்தற் காரணமாகவே ஔவையாரும் இல்லறத்தை நல்லறமென்றனர். (16).

பொல்லா விருளகற்றுங்கதிர் கூகையென் புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடு மாறொக்குமே யறிவோ ருளத்தில்
வல்லா ரறிவா ரறியார்தமக்கு மயக்கங் கண்டாய்
எல்லாம் விழிமயக்கே யிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) ஏ இறையவனே! காஞ்சிப்பதிவாழ் ஏகாம்பரனே! மெய்ஞ்ஞானியர் (ஊனக்கண்ணன்றி) ஞானக்கண்ணால் காண்டற்கு வலிமையுடையவராகலின் உள்ளகம்ஒளிரும் சிவவொளி கதிரொளியென்னும் இருவொளியையும் என்றுங் கண்டே வருவர். அவரல்லா அஞ்ஞானியர்கள் திருவருளால் அகமுகக்கண்ணும் ஞானக்கண் திறக்கப்படாமைபற்றி தத்தம்மகத்துள்ள அவ்விருவகையொளியும் இயல்பாய்த்தோற்றமுறாது மயங்கியிருப்பர். இது எவ்வாறெனின், பகலொளியானது கோட்டான்கண்ணுக்கு இருளாய் விளங்குவதுபோன்றெனக் கொள்க. இக்காரணம்பற்றியே எவையும் விழிமயக்கேயென்றார் பிள்ளையார்.

(து - ரை.) கூகையெனுங் கோட்டானுக்கு பகல்காலம் இருளாய்த்தெரியும். அஃதேபோல பார்த்தவிடமெங்கும் பரவெளியாய்த் தோன்றும் சிவவொளியும் அஞ்ஞானியாது கண்ணொளிக் கெட்டாதென்க. அன்றி அகக்கண் தரிசனமில்லார்க்கு ஆனந்தமின்றாம். ஏன், திருவருள் நோக்கமிலார்க்கு அகக்கண் திறந்திடுதலில்லை. எப்போது அகக்கண்ணும் ஞானக்கண் திறந்திடுதலில்லையோ பரன் பரை காட்சியுமில்லையாம். பராபரத்தோற்றம் காணுவிடத்து சிற்சுகோதயமு மின்றாகும். அதுகொண்டே முதன்முதல் திருவருட்பலத்தைக் கைவரச் செய்வதே கைத்தவமாகக் கொள்வர் மேலோர். ஊனக்கண்ணுக்கு அகப்படா சிவபாஞ்சுடர்; ஞானக்கண்ணுக்கு அகப்படா மாயாதேவி; ஏன், அது இருட்கூறு. ஆகவே நினைப்பு மறப்பற்றும் அதன்வழி இராகத்வேஷாதி யொழிந்து

வைராக்கிய அழுத்தமுண்டாக இருவினையொப்பு மலபரிபாகமும் பிறக்கும் இதன்மேல் சற்குருகடாக்ஷமும் அவரால் மெய்ஞ்ஞானோபதேசமும் அவ்வுபதேசதீக்ஷையால் அஞ்ஞானமொழிந்து மெய்ஞ்ஞானம் லப்தமாப் அகவிருளொழிந்து பரவொளி விளங்கலாகும்.

புண்ணிய னெந்தை புனித னிணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவது
மண்ண லிறைவ னருட்பெற்ற போதே. என்ற திருமந்திரத்தாலுணர்க. (17)

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்
தீதுக்குதவியுஞ் செய்திடுவார் தினந் தேடி யொன்று [பர்
மாதுக்களந்து மயக்கிடுவார் விதிமாளு மட்டும்
ஏதுக்கிவர் பிறந்தா ரிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ணா.) ஏ இறைவா! காஞ்சிமகா க்ஷேத்திர வாசியாயெழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனே! உள்ளகாலமட்டும் குதர்க்க வாதங்களுக்கும், வீண்வம்புக்கும் செல்வர்கள்; அப்படிச் சிலர் வருவர்கள்; அழிவழக் கிடுவர்கள்; கெட்ட காரியங்களுக்குத் துணைநிற்பர்கள்; சதாசம்பாதிக்கும் பொருளையெல்லாம் மாதர்க்கீந்து மதிமயக்கங் கொள்வர்; இத்தீயர்கள் பிறந்ததெதற்கோ?

(கு - ணா.) வந்தவகை தெரிந்து அதற்குரிய சத்துவகுண பிரவிர்த்தியில் நில்லாது வாழ்நாளை வீணாளாக்கழித்துப் பூமிபாரமாய்க் கிடப்பதில் பயனென்னோ! அந்தோ; இன்னோர் இவ்வாறுபாவத் தேட்டத்திற்காகவே வந்தனர் போலும் எனக்கருதியே 'ஏதுக்கு இவர் பிறந்தனர்' என்றாராக்கும். இவ்வாறு பிறந் திறத்திலினும் பிறவாமையே நன்றாகும். இதனானே ஓர் பெரியார் "பிறவாவரந்

தாரும்'' என்ற பல்லவி துதிபாடித் தொழுதார் இவர்மட்டோ; நமது நாவுக்கரசரும் "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே, வழுவாதிருக்க வரந்தரவேண்டும்'' என்று மன்றாடிநின்ற மாநடத்தேவன்முன் மன்றாடிநின்று வரம்வேண்டி நின்றனர். இஃதன்றோ வந்ததன் பிரயோசன மாகும்.

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பருற்றுப் பெற்ற, தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்கள், ஆயார்பிறர்க் குபகாரஞ்செய்யார் தமையண்டினர்க் கொன், றீயாரிருந்தென்ன போயென்னகாண் கச்சியேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சியம்பதிவாழ் ஏகாம்பரநாதனே! பொய் பேசியே பொழுதுபோக்குவார்கள் உத்தமர்களைத் தூஷணைபுரிவர்; தவங்கிடந்தீன்ற தாயரைப் பலவாறாக நிந்திப்பர்; பலவாறாக வஞ்சகமுஞ் செய்வார்கள்; மெய்ந்நூ லாராய்ச்சி செய்யுங் கனவுங் காணார்கள்; ஒருவர்க்கோர் உதவியுஞ் செய்யார்கள்; தற்சூழ்ந்தார்க் கேதும் தருதற்கிசையார்கள்; இத்தன்மையோர் உலகத்திலே இருந்தும் பயனில போயும் பயனிலவே.

(த - ரை.) பொய்பேசுதலாகிய பாவம் ஒன்றையொழித்தால் அதுவே வழியாக மற்றைத் தீச்செயல் யாவும் தாமே யொழிந்துவிடும்; அன்றி பொய்பேசுதலாகிய வழக்கம ஒன்றிருப்பின் அவ்வழியாகவே மற்றெல்லாத் தீச்செயல்களும் தானகவே வளர்ந்திடும்.

சிறுபஞ்சமூலம்.

இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுக்கு
மம்மையரு நரகத் தாழ்விக்கு—மெய்ம்மை
யறந்தேயும் பின்னு மலர்மகளை நீக்கு
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய்.

அப்பென்றும் வெண்மையதாயினுமாங் கந்நிலத்தியல்பாய்த்
தப்பின்றியேகுண வேற்றுமை தான்பல சார்தலினற்
செப்பிலபக்குவம் பக்குவ மாயுள்ள சிவனிலும்
இப்படியேநிற்ப னெந்தை பிரான்கச்சி யேகம்பனே.

(போ - ரை.) காஞ்சிப்பதி யேகாம்பரனே! வானிருந்திழியும் தண்ணீரானது ஸ்படிகம் போன்றதேனும் எந்நிற நிலத்திற் சேர்கின்றதோ அந்நிறத் தண்ணீராயாவது போலவே ஆராயுமிடத்தே, பக்துவர் அபக்குவர் என்ற இருபாலாரிடத்தும் சிவபெருமான் அவரவர்களது நீர்மைக்குத்தக்க நேர்மையாயிருப்பனென்பதாயிற்று.

(த - ரை.) பக்குவாபக்குவியையே பக்குவபக்குவமென இரட்டுறக் கூறினர். ஈசன் எங்கணும் வியாபகமுள்ள இறைவனாதால் ஆன்மகோடிகளது மனோபாவங்களுக்கேற்றவாறாக அங்கங்கமர்ந்திருப்பது தேற்றமாம். ஆனால் வேற்றுமைகாணப்படும்; அங்ஙனமாயினும் அத்தகைமை அவரவர்களது மனோநிலை, கர்ம பரிபக்குவத்திற் குகந்தவாறாயிருந்து வருதலென்றுணரற்பாலது. (20)

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றி நரராய்ப்பிறந்துபின் சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
ஈயாமனிதரை யேன்படைத்தாய் கச்சி யேகம்பனே.

(போ - ரை.) காஞ்சிப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! இழிந்தபிறவியான நாயுடலெடுப்பினும் தன்னைக்காக்குந் தலைவனுக்கு உள்ளபடியாக காவல்காத்துதவுதலோடும் வேட்டையாடியுமுபகரிக்கும். நற்றாய் வயிற்றிலே மனிதவுடற்றாங்கிப் பிறந்து வேண்டிய திரவியங்கள் பெற்றும், காய்த்தலில்லா மரம்போலவும், நீரில்லாத்தடாகமும், கற்பசுவும்போன்றும் யார்க்கும் ஏதும் பிரயோசனமில்லாத மனிதர்களைச் சிருட்டிசெய்தமைதற்கோ?

(கு - ரை.) நல்லறிவில்லா நாயுங்கூட தன் எஜமானென்றறிந்தும், அவனுக்குள்ளபடி காத்தும் உழைத்தும்வருகின்றதைப் பார்க்கிறோம்; அதனினும் எத்தனையோமடங்கதிக மேம்பாடுள்ள மானிடயாக்கையைப் பெற்று வந்தவர் அரிய தாய், தமக்கை, தங்கைகளொடும் அளவளாவி ஒருவருக்கொருவர் ஈடுபட்டுக்கொண்டும், பின்னர் சம்பத்தில் முன்னிலும் மிகுதிப்படவாழ்ந்தும், காய்த்தலில்லாமரம், தண்ணீரில்லாத் தடாகம், கல்விஞலாக்கிய பசு ஆகிய இவைகளைப் போன்று உற்ருர், பெற்ருர், நட்டார் முதலியோர்க்கு உதவி முதலியன செய்யாது வாழ்தலும் ஒரு வாழ்க்கையாமோவென்ற கருத்துடன் மனம்வருந்தி "ஈயாமனிதரை யேன்படைத்தா" யென்று இழித்துக்கூறினரென்க. இதனல் ஈயாதமனிதர்கள் கேவலம் நாயினுங் கடையரென்பதாயிற்று. (21)

ஆற்றிற்கரைத்த புளியாக்கிடாமலென் னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம் பற்றுமையா புரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந் தாளுடையாய் குன்றவில்லுடையாய்
ஏற்றுக்கொடியுடையா யிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) ஐயனே! திரிபுராதியர்களைத்தகித்து, யமனைத்தொழும்புகொண்ட திருவடியுடையாய்! மகாமேருபர்வதத்தை வில்லாய் வளைத்தவனே! இடபத்துவஜங்கொண்டவா! ஏ இறைவா! காஞ்சிப்பதிமேவும் ஏகாம்பர நாதனே! அடிமை நின்பால்வைத்த அன்பனைத்தும் ஆற்றிற்கரைத்த புளியைப்போன்று அவலமாகாதபடி குறிக்கொண்டு அடிமைமீது திருவுளம்வைத்தருள்வீர்களாக.

(கு - ரை.) பல அரிய அற்புதங்கள் நிலவப்பெற்ற பழவடியர்களான நால்வர்களுடையவும், மற்றும் சண்டேசுரர், கண்ணப்பர், சிறுத்தொண்டர் முதலாயினோர்களது ஒப்பற்ற மெய்யன்பிற்கு நம் போலியன்பும் ஓர்பொருட்டாமோவென ஐயுற்றவராய், என்னையும்

அடிமைகொண்டு என்னன்பையும் நின் அன்பாற் கொண்டருள வேண்டுமென்று வேண்டினராயிற்று. அன்பர்களை ஆதரிப்பான் வேண்டியே முப்புரமெரிசெய்தாய்; கூற்றுவனையாட்கொண்டாய்; குன்றவில்தாங்கியருளினாய்; ஆகவே இவையெல்லாம் அன்பர்கட் காகவல்லவா? அதுபோன்றே இப்போது என் அன்பினுக்கும் இரங்கி யருள்செயல்வேண்டும் என்று வேண்டியருளினர் என்க. (22)

பெண்ணாகிவந்தொரு மாயாபிசாசம் பிடித்திட் டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையான்மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளியென்போதப் பொருள்பறிக்க
எண்ணா துனைமறந்தே னிறைவாகச்சி யேகம்பனே.

(**போ - ரை.**) காஞ்சிமாபதிக்கண் மேவிய ஏகாம்பரநாதனே! மாயையெனும்பேயே ஓர் பெண்ணுருக்கொண்டுவந்து எனைச்சார்ந்து கண்களினால் உருட்டி தனங்களைக்காட்டி மயங்கும்படியாகச்செய்து, நிதம்பஸ்தானப் புண் குழியிலே விழச்செய்து என்னறிவாகிய ஞானபதார்த்தத்தை யபகரித்தது, அதனால்யான் தம்மைக்கருத வியலாது மறந்துபோயினேன்.

(**கு - ரை.**) மங்கையர் மார்பிடந்தங்கிய தனமே புருடர்களை யேய்த்து விருப்புறச்செய்யு முக்கிய அங்கமாயுள்ளது. கடிதடம், அல்குல், நிதம்பம் இவை ஒருபொருட் சொற்களாம். மாதர் மயக்கி லகப்பட்ட மனசை மீண்டுந் திருப்பிச் சிவத்திடைச்செலுத்துதல் திருவருட்செல்வம் கைவரப்பெற்றார்க்கன்றி மற்றோர்க் காகா தென்க. (23)

நாவாரவேண்டும் விதஞ்சொல்லு வாருனை நான்பிரிந்தால்
சாவேனென்றே யிருந்தொக்க வுண்பார்கள் கைதான்வறண்
போய்வாருமென்று நடுத்தலைக்கேகுட்டும் பூவையருக்[டால்
கீவார் தலைவிதியோ விறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) காஞ்சிப்பதிவாழும் ஏகாம்பரநாதனே! தாசிகட்குப் பொருள்கொடுத்துக்கொண்டேவரின், அவர்களும் நாயகனோடு இனிமையாகவும் வாசாலமாகவும் அந்யோந்யம் பாராட்டிப் பேசுவார்கள். யான் தம்மைப்பிரிய சகிப்புறேன், அன்றியும் சாவேன் என்றுங்கூறிச் சமபோசனஞ் செய்திடுவர். இம்மாயகார்கள், பொருளீவது சிறிது தடைப்படின் இல்லஞ்செல்லும் வழிகாட்டித் தலையிலும் குட்டித் தள்ளிவிடுவர்கள். இன்னோர்க்கு மயங்கிப் பொருளீவதும் விதிவசமேயாம்.

(கு - ரை.) கொடுப்பவன் கைவரண்டால் மாயந்தொடுப்பவராய தாசிகளின் வாயும் வறண்டு கடுஞ்சொற்சொல்லிக் கடத்திவிடுவரென்க. "நம்பனடியவர்க்கு நல்காத்திரவியங்கள், பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்" என்றபடி விளைவதுநோக்கி 'விதிவசமோ' என்று சித்தாந்தித்தார். (24)

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கொடார் குரு சொன்னபடி
நில்லா ரறத்தை நினையார் நின்னாம நினைவிற்சற்றும்
இல்லா ரிருந்தென் னிறந்தென் புகல்கச்சி யேகம்பனே.

(போ - ரை.) காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனே! பரசிவத்தினது பிரபாவங்களாகிய கதைகளைப் படிக்கமாட்டார்; உத்தமரிடங்கூட கனவிலேனும் சத்தியமொழிகூறார்; பசித்துவந்தவர்க்குச் சோறிடார்; குருவுபதேசங்கொண்டு நடவார்; தருமஞ்செய நினைக்கமாட்டார்; தமது நாமமாகிய பஞ்சாக்கரத்தைச் சற்றேனும் எண்ணுதல் செய்யார்; இன்னோர்கள் இவ்வுலகில் இருப்பினும் இறப்பினும் என்பயன்? சொல்வாய்.

(கு - ரை.) மானிடதேகம் பெற்றவர்களான சைவ சமயிகள் தங்கள் உரிமைத்தெய்வமாகிய சிவபெருமானது பிரபாவங்களாகிய வரலாற்றினைக் கற்றுத்தெளிவது கடமையேயாம். நல்லவர்பால் கன

விலும் மெய்பேசாதவர் ஏனையோரிடத்துப்பேசுவதைப்பற்றிக் குறிப்பிடவேண்டுவதில்லை. மற்றும் சத்தாம்ஸ அநுட்டானமில்லாதவன் பிறப்பில் மனிதரூபமாயினும் குணத்தில் மிருகத்தை ஒப்பாவன் என்பது வெளியாயிற்று. (25)

வானமுதத்தின் சுவையறி யாதவர் வண்கனியின்
தானமுதத்தின் சுவையெண் ணல்போலத் தனித்தனியே
தேனமுதத்தின் தெளிவாய ஞானஞ் சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவை நன்றல்லவோ கச்சி யேகம்பனே.

(போ - ளை.) காஞ்சிமாபுரியின் கண்ணுதலான ஏகாம்பரநாதனே! தேவாமிர்தத்தின் இனிமை இப்படிப்பட்டதெனக் கண்டறியாதவர்கள் வளப்பமுள்ளபழத்தின் இனிப்பைப் பிரியப்படுவது போன்று ஒவ்வொன்ருக தேனினுடையவும் அமிர்தத்தினுடையவும் இனிமையினும் தெளிவுள்ள ஞானமிர்த இனிப்பைக் கொஞ்சமேனும் அநுபவியாதவர்க்கு, குறைவுபாடான அமுத இனிமை மிக மேன்மையாய்த் தோற்றப்படுமாம்.

(கு - ளை.) தேவாமிர்தமுண்டறியா ஒருவன் பழச்சுவைகண்டு அதனினும் மிக மேலென வுணர்தல்போல ஞானமிர்தச்சுவையையறியாதவன் உலகபோகானுபவச்சுவையை மெச்சுவதியல்பாயிருக்கிறது பலர்க்கு என்பது தோன்றநின்றது. "நற்ருமரைக்கயத்தினல்லன்னஞ் சேர்ந்தாற்போல், கற்ருரைக் கற்ருரே காமுறுவர், கற்பிலா, மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற், காக்கையுகக்கும் பிணம்" என்ருர் ஔவையாரும். (26)

ஊற்றைச் சரீரத்தை யாபாசக்கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந்தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்துவிட்டேன் இறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) இறையவனே! காஞ்சிப்பதிவாழ் ஏகாம்பர நாதனே! துர்நாற்றம்வீசும் தேவல உடலே, பொய்ச்சரக்கு முதலானவை மலிந்துள்ள மறைவிடத்தை; ஊனிறைந்து நவத்துவாரமுள்ள தோற்றுருத்தியை; சோறுபொதிந்த தோற்பையை; கூறரிய காற்று நிறம்பியுள்ள அநித்தியபாத்திரத்தை; மிகவும் ஆசையுற்றுத் தாங்கி அலக்கழிந்து விட்டேன்.

(து - ரை.) இவ்வுடலின் கணக்கறியாது மிகவும் நன்கு வளர்த்துவிட்டேன் என்பதுபோல, "மடுக்கமுடியாமலவிருட்டிற்சென்று மனங், கடுக்கமுடியாப் புலனுற் கட்டிச்சுமக்க வைத்த, தொடுக்கமுடியாத துன்பச்சுமையை யினி, யெடுக்கமுடியாதே எழுத்தறியும் பெருமானே" என்றுர் அருட்பிரகாச வள்ளலாரும். (27)

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந்தீங்குக ளாயவுமற்
றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி யேகம்பனே.

(போ - ரை.) திருக்காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பர நாதனே! வாய் வார்த்தையால் ஏற்படும் பிசகும், நினைப்பால் ஏற்படும் பிசகும், சரீரத்தால் செய்துள்ள தீச்செயல்களும், கண் காக்ஷியால் உண்டாந் தீயபார்வைகளும் புருஷார்த்தமல்லாத வீண்கதைகளைக் கேட்டதனுலுண்டாகும் கஷ்டங்களும் பிறவுமான சர்வ பிசகுகளையும் தாங்கி, அடிமைக்குத் திருவருள் பாலிப்பாய்.

(து - ரை.) இப்பாசுரத்தில் காட்டியுள்ள குற்றங்கள் பெரும்பாலும் திரிகரண சேஷ்டித குற்றமாதலின் மன்னித்து திருவருள் பாலித்தல் வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தனர் போலும். கரண சேஷ்டைக்கு மெய்ஞ்ஞானியர் கட்டுப்படாது கடந்தே நிற்ப தியல்பாகும். எப்படி?

ஆயிர மடந்தைய ராகந்தோய்ந்து நான்
றாயவ னென்றுமால் சூளுஞ் சாற்றினன்
காயமுங் கரணமுங் கடந்த தன்மையா
னீயு மந்நிலையிலே நிற்கப் பாலையே, என்றபடி. (28)

முட்டற்றமஞ்சளை யெண்ணையிற்கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கேசெயும் பாவையர்மேல்
இட்டத்தை நீதவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ளை.) இறைவனே! காஞ்சிப்பதி வாழ் ஏகாம்பர நாதனே! நல்லமஞ்சளை எண்ணெய் சேர்த்து முகத்திலே பூசிக் கொண்டு அழகு செய்தும், கால்விரலில் மெட்டியிட்டும், நெற்றி யில் பொட்டிட்டும், பித்தளையி லாக்கப்பெற்ற ஓலையெனும் ஆபர ணத்தை ஒளிசெயத் தேய்த்தணிந்தும், பகற்போதில் வெளிவேஷம் போட்டு ஆடவரைமயக்கும் நாரியர்மீது எனக்கேற்படும் மயக்கத்தை நீக்கிடுவாயாக.

(கு - ளை.) நல்லதாயுள்ள மஞ்சளை முட்டற்ற மஞ்சளென் றார். மஞ்சளில் எண்ணெய் கூட்டி முகத்தி லணிவது அந்நாள் வழக்காதலின் அங்ஙனங் கூறினர். இதுமட்டோ, பித்தளை யோலை யையும் அப்படியே ஊருங்களிம்பைத் தேய்த்துப்போக்கி யணியும் வழக்கத்தையும் கூறினர். இவ்வழக்க வொழுக்கம் பெரும்பாலார்க்கு மப்போதுண்டு. அவ்வழக்கை இப்போதும் ஒருசாரார் அதாவது நாடக நடிப்போர் மட்டும் எண்ணெய்சம்பந்த மஞ்சள் பவுடர் முகத் திற்கிடும் தன்மையால் தெரிகிறது. சாதாரண நாட்டுப் பெண்மக் கள் பெரும்பாலார் இப்போதும் அணிந்து கொள்கிறார்கள். ஆனல் நகரத்திலுள்ள நாகரிக மக்களார் அதுசெய்தல் நின்று விட்டது. இதில் ஓர் மர்மமுமுண்டு, அஃதாவது நாரியர் மஞ்சள் பூச்சினல்

நாயகர் ஜீவதசை விர்த்தியாயிருப்பதாக அவர்கள் கொள்கையாம். தவிர, தங்கள் சுமங்கிலியத்துவத்தைக் கருதியும், கருதுவதும் ஓர் காரணமாகத் தெரிகிறது. ஆனல் பொதுமக்களோ அவ்வாறான அபிப்பிராய முடையவர்களா யணிவதில்லை. என்னே வெனின், விலைமாதர் எண்ணமெல்லாம் நாயகனை மயக்கவே யென்க. மற்றுஞ் சில பொதுப்பெண்கள் முகமட்டு மன்றி தன்சரீர முற்றிலுமே பூசுவர்கள்; அது எதன்பொருட்டெனின் சாதாரணமாக ஸிலஸ்திரீகள் கற்றாழை நாற்றம், வேர்வைநாற்றம் இவைகளை மாற்றுவதற்காகவும் அணிவர்கள். இதனைத் தாயுமானர் தமது பாசுரங்களில் பராபரக்கண்ணியிலே "மெய்வீசு நாற்றமெலா மிக்க மஞ்சளான் மறைக்கும், பொய்வீசும் வாயார் புலையொழிவ தெக்காலம்" என்று கூறியுள்ளார். (29)

பிறந்துமண்மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்து சிற்றின்பத்தின் மேன்மயலாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன்றே தடுமாறிப்பொன் றேடியப் பாவையர்க்கீந்
திறந்திடவோ பணித்தா யிறைவாகச்சி யேகம்பனே.

(பே. - ரை.) ஏ இறைவா! காஞ்சிப்பதியமர் ஏகாம்பரநாதனே! இந்தப்பூமியின்கண் ஜனித்து பலவித வியாதிகட் குட்பட்டு அதனன் பேரின்பத்தை முற்றிலு மெண்ணுதலின்றி, சிற்றின்பமாகிய அநித்திய மாயாபோக போக்கியத்தையே விரும்பிக் கேவலம் பெண்மக்களார் கூட்டத்தில் கலந்து அவர்கட்காக மிகவும் அலைப்புண்டு பொருள்சம்பாதித்து அம்மாதரார்க்கே யளித்து மரிப்பதற்காகவோ மனிதனைச் சிருட்டி செய்தனை?

(கு - ரை.) மனிதர்கள் இவ்வுலகில் பிறந்து வந்ததெல்லாம் தத்தம் பாவ கர்மங்களின் பயனு லென்றும், இனியாவது அத்திய

வினைகளை யொழித்துச் சென்மங் கடைத்தேறற் கேற்ற தவத்தி லீடுபட்டு அதனால் சதுர்வித பதவிகளை யடைவான் காரணமாக வென்பது நிராடங்கமான சாஸ்திரீய வழக்காம். ஆனால் மனிதர்கள் அவ்வுண்மை வழிபற்றாது மயக்குற்று சிற்றின்பச் செயலில் அழுந்திப் பலவியாதிகட் குட்பட்டு மடமையாற் கெட்டுப் போகிறார்கள் என்பதையே 'பிணியே குடிகொண்டு' என்று குறித்தனர். பிறந்த மக்கள் இறவாது மேலாம் பதவியாம் முத்திப் பேற்றினை யடைதற் காக வந்ததை அடியோடும் மறந்து மாதர்க்கும் நோய்க்கும் அடைக் கலம்புகுவதை நோக்கியே "பிணியே குடிகொண்டு இறந்திடவோ பணித்தாய்" என்றும் கூறினரென்ப. இதனால் இறந்துபோகாது நித்தியமாயுள்ள பேரின்பப் பெருவாழ் வெய்தற் பொருட்டே வந் தனரென்பது தானே விளங்குகின்றது. ஆகவே மக்களார் இற வாது தவங்கிடந்து எம்பெருமாற் காட்பட்டு பிறவித் துன்பத்தை யொழித்தற்காகவே இம்மானிட தேகம் கிடைக்கப்பெற்றுள்ளதென அறிந்து அவ்வழியைக் கடைப்பிடித்தல் மானிடப் பிறப்பினரின் இன்றியமையாத கடமையென உணரற்பாற்று. இதற்குச் சான்றாக.

"எல்லையில் காலமெல்லா மேழைமார் வலையுட்பட்டு
கல்வியுங் கருத்துமின்றிக் கலக்கநா னலக்கணுற்றேன்
அல்லுநண் பகலுமுன்ற னடியின்கீ ழிருத்தல்வேண்டுஞ்
செல்வமுஞ் சிறப்பும்வேண்டேன் றிருப்புலி வனத்துளானே."

என்றார் சிவஞான வள்ளலும். (30)

பூதங்களற்றுப் பொறியற்றுச் சாரைம் புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப் பேராசைதானற்றுப் பின்முனற்றுக்
காதங் கரணங்களுமற்ற வானந்தக் காக்ஷியிலே
ஏதங்களைந் திருப்பே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) ஏ இறைவா! காஞ்சியிலெழுந்தருளியுள்ள ஏகாம்பர நாதனே! பஞ்சபூதங்களுமொழிந்து, பொறிகள் ஐந்தும் ஒடுங்கி அதின்கணுள்ள புலன்களைந்தையும் நீங்கப்பெற்று, வேறுபாட்டையுடைய மூன்றுகுணங்களு மொழிந்து, ஆசையொழிந்து, சர்வாவத்தைகளு மொழியப்பெற்று வஞ்சமான அகக்கரணங்கள் நான்கும் ஒடுங்கியவிடத்தே உண்டாகாநின்ற சிவானந்தநிகழ்விலே நான் என்னும் ஆணவமூலத்தையழித்துச் சிவமாகக் காணப்படுவேன்.

(த - ரை.) ஆகாமிய சஞ்சித பிராரத்த மென்பனவற்றையே பின்முனென்றனரெனினும் பொருந்தும். ஐம்பூதங்கள் மண், நீர், காற்று, நெருப்பு ஆகாயம் என்பன. ஐம்பொறியென்பன மெய் வாய் கண் மூக்குச்செவியென்க. ஐம்புலன்களாவன - சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம் என்பனவாம். முக்குணங்கள் - இராசத, தாமத, சாத்துவிகங்களாம். அகக்கரணம் நான்காவது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. இன்னதத்வாதிகளை அப்பாற்படுத்தி ஒற்றித்துள்ள ஆன்மாவானது அதீதப்பட்ட சிவானந்தப்பேற்றில் லயமாகும் என்க. அதன்மேல் தற்போதமொழிந்து சிவபோதமாய் நிற்கு மென்க.

ஐம்பொறியு, மைம்புலனு, மைம்பூத, முமதற்றி
யின்பசிவ நீயென்ற லேலாதோ—வன்பனே
முத்திமுடி வீதென்றான் முன்னூலும் பின்னூலு
மற்றநூ லெல்லா மற. என்றார் சிவஞானவள்ளல். (31)

நல்லாயெனக்கு மநுவொன்று தந்தருண் ஞானமிலாப் [பஞ்
பொல்லா வெனைக்கொன்று போடும்பொழுதியல் பூசைசெ
சொல்லார் நற்கோயி னியமம் பலவகைத்தோத்திரமும்
எல்லாமுடிந்தபின் கொல்லுகண்டாய் கச்சி யேகம்பனே.

(போ - ளை.) நற்றூயொத்தவனே! காஞ்சியேகாம்பரநாதனே! இவ்வடிமை நின்பால் ஓர்விண்ணப்பம் சொல்லவேண்டியிருக்கிறது; அதை அநுக்கிரகஞ்செய்தல் வேண்டும்; அஃதாவது; ஞானசூனியனும்தீயவனுமான அடிமையைத் தேவரீர்மாய்க்கும்போது, மேன்மையாகிய சிவபூசை, பஞ்சாக்கர செபம், பாடப்பெற்ற திவ்யாலய தரிசனம், சிவதோத்திரங்கள் முதலியனவனைத்தும் அடிமையால் நடந்தேறிய பின்பே என் ஆவியை அகற்றல்வேண்டும்.

(கு - ளை.) எவ்வகையானும் சிவபக்தியிற் சிறந்தவராயுள்ள மெய்யன்பர்களது ஆவியை வாங்கும்போது அவர்களறியாவண்ணமாகவே அதாவது வெகுநளினமாக இலேசாய்க்கைக்கொண்டு மிக்க மரியாதையோடும் பல்லக்கு, விமானம், இரதம் இவைகளில் வைத்து எங்கு கொண்டுபோகவேண்டுமோ அங்கே கொண்டு செல்வனும். என்? முன்னம் மார்க்கண்டேயர் ஆவியை பறிக்கும்போது பாசம் வீசிய அஞ்ஞான்று எம்பெருமான் தோன்றி திருவடி தீக்ஷைசெய்தது ஞாபகமிருத்தலாலென்க. இவ்வாறு ஆவியிழந்தவர்களுங்கூட மறுபிறப்பிலே ஞானசித்தியடைந்து சிவபெருமானது திவ்ய திருவடிநீழலையடைந்து பெருவாழ்வெய்துவரென்க.

இங்ஙனம் பூசை, செபம், தவம் முதலியன செய்யாது ஆகாரம், நித்திரை, மைதுனம் என்னும் இவைகளோடு மட்டு மிருந்து உயிர் விடுபவன் வரும் ஜென்மத்தில் நரனாய்ப் பிறத்தலே யரிதென்னும் தருமநூல். ஆதல்கொண்டே அப்பர் சுவாமிகள், தான் புழுப்பிறவி கொள்ளினும் சிவனடியை மறவாத மனம் வேண்டுமென்று பிள்ளையாரைப் போன்று மனுச்செய்து கொண்டனர். இவர்கள் இவ்வாறு எம்பெருமானிடம் மனுச்செய்வதை ஆராய்ந்ததில் ஒன்று தோன்றுகிறது; அதாவது ஈசுரார்ப்பணமாக இவர்கள் செய்யும் பூசைமுதலியன பூர்த்தியானபின் மரணமடைந்தால் நற்பதவி பெறலாமென்

றும், அஃதின்றி அரைகுறையில் ஆவி நீங்குமேல் பதவிக்கு ஏது வின்றி வேறெப்பிறவி கிடைக்குமோ என்னும் ஐயம் தோன்றலி ெனன்ப. (32)

சடக்கடத்துக் கிரைதேடிப் பலவுயிர் தம்மைக்கொன்று
விடக்கடித்துக் கொண்டிறுமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல்வார் கடமைக் கரம்பற்றி நமன்
இடக்கடிக்கும்பொழு தேதுசெய்வார்கச்சி யேகம்பனே.

(பொ - ரை.) காஞ்சிமாபதிக்குள் வளர்ஞானக் கண்மணியே! ஜடபதார்த்தமாய இவ்வுடலுக்கு ஆகாரமாகப் பலஜீவ செந்துக்களை வதைசெய்து அம்மாமிசங்களை மென்றுகொண்டு தின்றுக்கிடக்கும் மாந்தரை இயமதர்மன் கைக்கொண்டு மகா கடுமையாகத் தண்டனை செய்யும்போது யாது செய்வர்களோ!

(கு - ரை.) அற்பமான ஜீவசெந்துக்களை இரக்கமின்றி வன் னெஞ்சால் வதைசெய்து அதன் மாமிசாதிகளை மிகப்பிரியத்தோ டும் புசிக்கும் மகாபாவிகளைக் கூற்றுவன் சற்றும்இரங்காது இரௌர வாதி நரகிற் கிடத்தித் துன்புறுத்துவன். சான்றாக பெரியா ரொரு வர் கூற்றைக் காண்க:—

கொன்று விலங்கின் றசை நுகரும்
  கொடுமை யோதல் விலங்கினுட
றுன்றுமயிரெத் துணையாமத் துணைய
  காலம் வெந்நரகி
ெனுன்றி நுகர்வாய் புழுவொழுக
  வுழப்ப ரென்கை யுணர்ந்தேயோ
கன்று சினவெங் கொடுவிலங்கும்
  புலவூன் றின்னக் கருதாவால்.

எல்லாவுயிர்களேயுங் கடவுள்படைத்துக் காக்கின்ருர். அவைகளே யிரக்கமின்றிக் கதறிப்பதரக் கொலேபுரிந்து அதனேப் புசிப்பது ஆண்டவன் கட்டளேக்கு முற்றிலும் விரோதமன்ருே? ஆகலான் தனக்குக் கீழ்ப்பட்டதென்று தான்கொலேபுரிவது போன்றே, தனக்கு மேற்பட்ட எவராலும் தான் கொலேயுண்ணப் படுவான் என்பது சத்தியமன்ருே? (33)

நாறுமுடலே நரிப்பொதிச்சோற்றினே நான்றினமுஞ்
சோறுங்கறியு நிரப்பியபாண்டத்தைத் தோகையர்தங்
கூறுமலமு மிரத்தமுஞ்சேருங் குழியில்விழா
தேறும்படியருள்வா யிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) திருக்காஞ்சியி லெழுந்தருளியுள்ள ஏகாம்பர நாதனே! துர்நாற்றங் கமழும் உடலே! நரிகளுக்குப் பொதிச் சோற்றை யொத்த பண்டத்தை; யான் எப்போதும் அன்னங்கறி முதலியவற்ருல் நிரம்பச்செய்த பாண்டத்தினே; மயிலன்னசாயலுள்ள தையலார்தன் கேவலமலமும் இரத்தாதிகளும் இழியும் நிதம்பக்குழியிலே அழுந்தாது முத்திக்கரை காண்பான் திருவருள் பாலிப்பாயாக.

(கு - ரை.) மனிதர்க்குப் பொதிச்சோறுபோன்று கேவல நரி நாய்களுக்கும் இவ்வுடல் பிணமான பின்னர் யேகதேசத்தில் ஆகார மாதலேக் கூறினர். திரிபதார்த்த இச்சையைத் தன்னறிவின் ஆற்றலால் மாற்றலாகாமை கொண்டே 'கரையேறும்படி யருள்வா' யென்று வேண்டி நின்றனர் என்க. குழியில் விழுந்தவர் மீண்டும் ஏறுதல் கடினமாதல் கொண்டும், அதனினும் இக்குழி மலமும், இரத்தமும், சேறும் கலந்து சரியும் நரகக் குழியாதல் பற்றியே வேண்டலாயினர் போலும். (34)

சொக்கிட்டரமனைப் புக்குட்டிருடிய துட்டர்வந்து
திக்குற்ற மன்னரைக் கேட்பதுபோற் சிவநிந்தைசெய்து
மிக்குக்குருலிங்க சங்கமநிந்தித்து வீடிச்சிக்கு [னே.
மெக்குப்பெருத்தவர்க் கென்சொல்லுவேன்கச்சி யேகம்ப

(பொ - ரை.) காஞ்சிமாபதிக்கண் ணிலவும் ஏகாம்பரநாதனே! இராஜமாளிகையிலே நுழைந்து மயக்கப்பொடிதூவிக் களவுகொண்ட தீயர், மீண்டும் சாதுரியமாக வந்து எண்டிசாமுகமும் கீர்த்திவாய்ந்த மன்னனைநோக்கித் தனக்குப் பொருள் யாசித்தல்போன்று, சிவதூடணம்புரிந்து குருலிங்க சங்கம வழி பாட்டினைத் தாழ்வுறப்பேசி முத்திப்பேற்றினை விரும்பத்தக்க கொடிய போலிச் சிறப்பாளர்க்கு யாது கூறுவது?

(கு - ரை.) ஒருவன்வீட்டில் திருடிக்கொண்டும், அவ்வீட்டவன்பால் யாசிப்பதுபோல, வாய்மதத்தால் சிவநிந்தை செய்தும் பத்திமார்க்கத்தைத் தூஷித்தும்விட்டுத், திரும்பவும்முத்திப்பேற்றை விரும்புவதாகக் காட்டும் வஞ்சவேஷக் கொடியரும் உலகத்துள்ளா ரென்பதைக் கூறி எச்சரித்தார் போலும். (35)

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்ன மிகக்கொடுக்கப்[நித்தம்
பொருந்தார் வளம்பெறவாழ்வார்நின் னுமத்தைப் போற்றி
அருந்தாமுலைபங்க ரென்னுரைப் பாதகரம்புவியில்
இருந்தாவ தேதுகண்டா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை.) ஏ இறைவா! காஞ்சியில்மேவிய ஏகாம்பரநாதனே; தன்னில்லந்தேடி விருந்தினராய் வரும் ஏழைபரதேசிகட்கு வயிறார சோறிட மாட்டார்; செல்வத்தைமட்டும் விர்த்தி செய்வதில்

தேட்டஞ்செய்து வாழ்வா; எம்பெருமானது நாம தோத்திரஞ் செய்து உண்ணுமுலைபாகனே! என்று வாழ்த்தார்; இவ்வகைப் பாவிகள் சிறந்த இவ்வுலகத்திலே கிடத்தலால் உண்டாவ தென்னவோ?

(சு - ரை.) "வித்துமிடல் வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் புலம்" என்றார் பெருநாவலர். ஈதொன்றோ!

துறந்தவர்கள் வேண்டியதொர் துப்புறவு நல்கி
யிறந்தவர்கள் காமுறு மிருங்கட னியற்றி
யறம்பலவு மாற்றிவிருந் தோம்புமுறை யல்லாற்
பிறந்தநெறி யாலுளதொர் பேருதவி யாதோ.

என்பதாகக் கச்சியப்ப சிவாச்சாரியரும் கூறியதறிக. சிவநாமஞ் செப்பாதவரைப் பிள்ளையார் பெரும்பாதகர் என்று வருந்திக் கூறினார் என்க. தீவினைக் காட்பட்டவரே சிவ நாமஞ் செப்பார் என்றனர். நிற்க; மக்களாய்ப் பிறந்தோர் என்றும் தம் உடல் பொருளாவியால் எவர்க்குமுற்ற இடுக்கண் களையவேண்டுவதே ஆக்கையெடுத்ததின் பயனுமென்பர் மெய்ந்நூலார். (36)

எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக் குள்ளபடி
வல்லானறிந்துள னென்றுணராது மதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறு சூழ்விதியின்படி துக்கித்துப்பின்
எல்லாஞ்சிவன்செய லேயென்பர்காண் கச்சியேகம்பனே.

(போ - ரை.) சிவ காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனே! பல சாத்திரங்களைக் கற்றுணர்ந்தும் நாம்செய்த வினைக்கீடாக ஏற்பட்டதான திட்டம், 'எல்லாமுணர்ந்த வல்லானறிந்துள்ளான்' என்றறியமாட்டாது மதிகெட்டு அறிவீனர்களது தீயமொழி

களைக்கேட்டு மயங்கி யாதாமொரு காரியத்தில் இறங்கி அதிலேற் படும் கஷ்ட நஷ்டங்களால் வருந்தி அதன்பின்னரே 'எல்லாம் சிவன் செயலே' எனக் கூறுநிற்பர். இது அறிந்ததுபோன்ற அறி யாமையாகும்.

(கு - ரை.) கற்றவர்களிலும் சிலர் இவ்வாறு வினைப்பயனே அல்லது பயனில்லாமையோ நேர்ந்தபின்னரே சிவன்செயலென் பரேயன்றி முழுநம்பிக்கையோடும் காரியநிகழ்வின் ஆரம்பத்திலே அத்திடங் கொள்கின்றார்களில்லை; காரணம், மெய்ந்நூன்முறையிலே திடம்பெரு அவலப்புத்தியாகும் என்க. அங்ஙனம் திடப்படுமேல் 'யாதும் சிவன் செயலே' என்ற திடவைராக்கியம் என்று நிலைப் பட்டதோ அன்றே அவர்க்கு பிராரத்தம் நசிக்கத் தலைப்பட்டதா கும். அன்றியும் அவரை ஆகாமியம் அடையாவாம்.

எல்லாஞ் சிவமெனு நான்மறை யாகம மெக்கலையு
மெல்லாஞ் சிவமென் றெழிற்குரு வாய்வந் தெடுத்திசைத்து
மெல்லாஞ் சிவமென வெவ்வெவர்கோட்கு மிசைந்திருந்து
மெல்லாஞ் சிவன்செய லென்றுகண் டேன்கச்சி யேகம்பனே.

என்றனர் சிவஞான வள்ளலாரும். (37)

பொன்னைநினைந்து வெகுவாகத்தேடுவர் பூவையன்னாள்
தன்னைநினைந்து வெகுவாயுருகுவர் தாரணியில்
உன்னைநினைந்திங் குனைப்பூசியாத வுலுத்தரெல்லாம்
என்னையிருந்துகண்டா யிறைவாகச்சியே கம்பனே.

(பொ - ரை.) ஏ இறைவா! சிவகாஞ்சியில்மேவும் ஏகாம்பர நாதனே! பொருளில் இச்சைகொண்டு மிக்க சிரமப்பட்டு சம்பா திப்பர் பல ஆயிரக்கணக்காய். இலக்குமியை நிகர்த்த சுந்தரியைப் பார்த்துப் பார்த்து மிகவும் உருகுவார்கள். தேவரீரைத் தியானித்

துப் பூசைசெய்யாத இருகான் மாடுகள் இப்பூமியிலே பிறந்து வாழ்வதில் பயன் யாதோ?

(கு - ரை.) தெய்வத்தியானமும் பத்திபூசையு மில்லாதாரை உலுத்தரென்று இகழ்ந்துள்ளார். உலுத்தர் என்னுஞ்சொல், பொருளாசைக் காரரையும் குறிக்கும். பிறவிகளிலெல்லா மேலாயபிறவியில் பிறந்த மனிதன் அப்பிறவியெய்தமைசிவபூசை, சிவசிந்தனை, சிவஸ்தோத்திரம் சிவமந்திர ஜெபம் முதலிய பத்திவகையில் ஈடுபடுமாறேயென்று பகர்வர் மேலோர்.

தன்னை வினையைத் தலைவனையு முன்னுாது
பொன்னைப் புலியையெழிற் பொற்கொடியை—யுன்னியுனிக்
காலங் கடத்துகின்ற காமுகர்க்கு முண்டாங்கொல்
ஞாலங் கடத்துகின்ற நாடு. (சிவஞானவள்ளலார்.) (38)

கடுஞ்சொல்லின் வம்பரை யினரைக் குண்டரைக் காமுகரை, கொடும்பவ மேசெயும் நிர்மூடர்தம்மைக் குவலயத்துள், நெடும் பனைபோல வளர்ந்து நல்லோர்த நெறியறியா, இடும்பரை யேன்வகுத் தாயிறைவா கச்சியே கம்பனே.

(போ - ரை.) இறைவனே! காஞ்சிமாபதியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனே! எப்போதும் கடுகடுத்த வார்த்தைபேசித் திரியும் கொடியரை; சீலத்துவமில்லாத கீழ்மையரை; புறங்கூறுகின்றவரை; காமியனை; மகாகொடிய பாவச் செயல்களைச் செய்யும் முழுமூடரை; இப்பூமியின்கண் உயர்ந்த பனைபோல் உருவத்தில் மட்டும் உயர்ந்து உத்தமர்களது ஒழுக்கத்தை யறியாத இறுமாப்புள்ளவனை எதற்காகப் படைத்தனை?

(கு - ரை.) மானிட யாக்கையைப் பெற்று நீதிநெறியிற் பிறழ்ந்து தன்னையடுத்தார் பலர்க்குந் தீங்கினை புரிந்து வருபவர் இவ்

வுலகத்திலே யாதாமோர் அற்ப பிரயோசனமும் இல்லையாவர்; இவரை இடும்பரை என்வகுத்தா யென்றனர். பலதுராத்மாக்களைப் படைப்பதிற் பயனில்லை. (39)

கொன்றேனனேக முயிரையெல்லாம்பின்பு கொன்றுகொன்
தின்றேனதன்றியுந் தீங்குசெய்தேனது தீர்கவென்றே [று
நின்றேநின் சந்நிதிக்கே யதனாற்குற்றம் நீபொறுப்பா
யென்றேயுனை நம்பினே னிறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) ஏ இறைவா! சிவகாஞ்சியில் விளங்குகின்ற ஏகாம்பர நாதனே! அநேக ஜீவன்களை யெல்லாம் மாய்த்தேன்; அதன்மேல் அம்மாமிசாதிகளை வதைத்து வதைத்துப் புசித்தேன்; இஃதன்றியும் இன்னுமனேக பாவகிருத்தியங்களையுஞ் செய்தனன்; ஆகையால் அதனாலுண்டாகிய பாவங்களை நிவர்த்திப்பதற் காகவே தேவரீரது திருச்சந்நிதிக்கண் வந்து அடைந்தேன்; ஆகவே எம் பெருமான் என் அறியாமையால் நிகழ்ந்த தீச்செயல் பாவங்களைப் பரிகரித்து ஆட்கொள்ளுவாயென்றே அடைக்கலமாயினேன்.

(து - ரை.) புலையுங் கொலையும் பஞ்சமகாபாவத்திற் சேர்ந்தவை. பாவங்களெல்லா வற்றினும் மகாகொடிய பாவமாகலானே பெரியோரெல்லாம் மிகவுங் கண்டித்துக் கூறியுள்ளார்கள். அதாவது தாயுமானார் விரதங்களிற் சிறந்ததாகக் கொல்லாமையைக் கூறி ஈதெங்கணும் வியாபிக்க வேண்டுமென்னும் அபிப்பிராயங் காரணமாகவே கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமென்றும், கொல்லாவிரதம் குவலயமெங்கணும் ஓங்கவேண்டு மென்றும், இன்னும் பலவிதங்களாகவும் கூறிப் பறைசாற்றியுள்ளார் இவர் மட்டோ, திருவள்ளுவரும் கொல்லான், புலாலை மறுத்தானை எல்லாவுயிரும் கைகூப்பித் தொழுமென்றும் கூறியுள்ளார்.

கொல்லா விரத குலமே குலமென்று
நல்லார்க ளெல்லா நவின்றிருக்க—கொல்வாற்
றெரிசித்தா லும்பாவந் தீயன்முக நோக்கிப்
பரிசித்தா லும்பாவம் பார். என்றார் சி. வள்ளலாரும்.

புலாலுண்பதை யொழித்தால் அவ்வழியாகக் கொலை புரிவது தானே ஒழிந்து விடும். தெரியாக்காலத்துச் செய்திடினும், தெரிந்த பின்னராவது விலக்கப்படின் அவனை எல்லாவுயிரும் தொழுமென்றார். வள்ளுவனார் அதுமட்டோ!

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. என்றார்.

பதி பசு பாச விளக்கம்.

கொலையிலா னுதவுமன்னங் கூறிற்பே ரமுதமாகுங்
கொலையுளா னுதவுமன்னங் கூறில்வல் விடமதாகும்
புலையர்தம் மனையிலுண்போன் புலையனு மாறுபோலக்
கொலைஞர்த மனையிலுண்போன் கொலைஞனேயாவனன்றே.

ஒருவர் குற்றஞ் செய்ததைப் பிறர்பாலாவது குருவின்பாலாவது அல்லது கடவுள்பாலாவது கூறி யிரங்குவானாயின் அதுமன்னிக்கப் படுமாதலால் அதன் காரணமாகவே பிள்ளையாருங் கூறிக் காட்டினர் என்பதாயிற்று. இதுமெய்ஞ்ஞானியார்களது இரங்கற்பாவாகும் என்க. (40)

ஊரிருந்தென்ன நல்லோ ரிருந்தென் னுபகாரமுள்ள, பேரிருந் தென்பெற்ற தாயிருந் தென்மடப் பெண்கொடியாள், சீரிருந்தென்ன சிறப்பிருந்தென்னவித் தேயத்தினில், ஏரிருந்தென் வல்லவா விறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) எல்லாம் வல்ல இறைவனே! காஞ்சிவாழ் ஏகாம்பர நாதனே! ஊரிஞல் ஆவதொன்றுமில்லை; உத்தமர்க ளிருந்து மென்ன ஆகப்போகிறது? மற்றும் உதவிபுரிவா ரிருந் தென்ன? பெற்றுவளர்த்த தாயார் இருந்துமென்ன? மடமை, அழகு இவைகளிருந்தென்ன? பெண்டிர் இருந்தென்ன? புகழ் பெற்றென்ன? ஏரிருந்தென்ன? தேவரீர் தம் அருளில்லையா யின் என்றபடி. (எட்டுப்பிரதியிலில்லை)

(து - ரை) மேற்கூறிவந்த அனைவரும் இருப்பதால் மட்டும் போராது; என்? இவர்களால் ஆவது யாதுமில்லை; என்? அநித் திய மாயாதேகிக ளானதாலென்க. ஆகவே நித்திய நிர்மலானந்த பரசிவத்தின் கிருபைவேண்டு மென்பதாயிற்று அவானன்றே பொன் றுங்காலத்துப் பொன்றுத் துணையானவர், ஆதல் பற்றியே அங்ங னங் கூறலாயிற்று. (41)

வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொரு வன், கல்லாலெறியப் பிரம்பாலடிக்கக் களிவண்டுகூர்ந், தல் லார் பொழிற்றில்லை யம்பலவாணர்க்கோ ரன்னைபிதா, இல் லாததாலல்லவோ விறைவாகச்சி யேகம்பனே.

(போ - ரை.) ஏ இறைவா! சிவகாஞ்சியில் விளங்கும் ஏகாம் பரநாதனே! முன்னேர்கால் வில்லால் ஒருவன் அடிப்ப, மற்றொ ருவன் செருப்பால் உதைக்க, இன்னு மொருவன் கடிந்து கல்லால் எறிய, பிரம்பினுலே ஒருவனடித்திட எதுவா யிருந்தது, தேனைப் பருகிச் சந்தோஷிக்கும் வண்டுக்கூட்டங்கள் நிறைந்தும், மேகங் கள் தவழும்படியாயும் வளர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்துள்ள தில் லைச் சிதம்பராலய ஞான சபையின்கண்ணே பஞ்சகிர்த்திய சுத்த நிர்த்தனம் புரியும் எந்தையார்க்கோர் தாய்தந்தையரில்லாக் குறையா லன்றோ! (இச்செய்யுள் முன்னேட்டுப் பிரதியிற் கிடையா.)

(௬ - ரை.) முற் காலத்தில் அருச்சுன னென்பான் வில் கொண்டடித்தவன்; கண்ணப்பநாயனுர் செருப்புக்கால் படச் செய்தனர்; சாக்கியநாயனுர் கல்கொண் டெறிந்தனர். அரிமர்த் தன பாண்டியராசன் பிரம்பினலடித்தவன்; இதனுல் எம்பெருமான் தாய்தந்தையர் வழித்தோன்ருது தனிப்பரம் பொருளாதலின் அங் ஙனங் கற்பனைசெய்தா ரென்ப. இக்கருத்தின் உண்மையை மணி வாசகர் 'தாயுமிலிதந்தையிலி தான்றனியன்' என்ற வாசக பாசு ரத்தால் விளக்கின காண்க. (42)

திருவேகம்ப விருத்தம்.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனே
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
என்செய்வேன்கச்சி யேகம்ப நாதனே.

(பொ - ரை.) சிவகாஞ்சியில் எழுந்தருளிய ஏகாம்பரனே! இதுபரியந்தம் அடிமைப் பெற்றுவந்த பிறவிகளுக்குரிய தாய்மார்கள் எத்தனை எத்தனை பேர்களோ; தந்தையார் எத்தனை எத்தனை பேர் களோ; மற்றும் பெண்டிர்கள் எத்தனை யெத்தனை பேர்களோ; பிள்ளைகள் எத்தனை எத்தனை பிள்ளைகளோ; அன்றி முன்னே பெற்றுவந்துள்ள பிறவிகள் எத்தனை எத்தனை பிறவிகளோ புத்தி யற்ற சுவானம் போன்ற யான் யேதுந்தெரிந்திலன்; இனிப்பெற விருக்கும பிறவிகள் எத்தனை யெத்தனையோ யேதுமறிந்திலனே!

(து - ரை.) ஆன்மாக்கள் தனுகரண புவனபோகத் துள்ள காலை தான் முன்னெடுத்துவந்த சரீரம் அல்லது பிறவிகளைப் பற்றிச் சிறிதும் ஆராய்வதில்லை; என்? அதற்குரிய ஞானவுணர்ச்சி வாராமையே யாம். அவனருளால் அவ்வுணர்ச்சி தோன்ற, அப்போதுதான் முன்னைய சென்ம அளவையும் பின்சென்ம சங்கியையுங்கண்டு, அந்தோ! இத்தனை சென்மங்களுக்கு மேற்பட்ட தாய் தந்தை சுற்றத்தார்க ளின்னவகையின ராயினரென்பதும் உணரா வகையின் மனமயங்கி வருந்தி எடுத்த சென்மமும் இனிவரவிருக்கும் சென்மமும் போதுமென் னையனே யென்று மனக்குறவுற்று அதன்மேல் போரும் போருமென்றும் இனியாவது நின்திருவடிநீழலில் இருத்திக் கொள்வாயென்று ஆண்டவனை வேண்டி அது பெற எதிர்நோக்கி யின்னமும் எத்தனை சென்மமோ வென்று வருந்திக் கூறினதாகத் தெரிகிறது. (43)

திருத்தில்லை.

காம்பிணங்கும் பணைத் தோளார்க்கும்
  பொன்னுக்குங் காசினுக்குந்
தாம்பிணங்கும்பல வாசையும் விட்டுத்
  தனித்துச் செத்துப்
போம்பிணந் தன்னைத் திரளாகக்கூட்டிப்
  புரண் டினிமேற்
சாம்பிணங் கத்துதையோ வென்செய்கேன்
  தில்லைச் சங்கரனே.

(போ - ரை.) சிதம்பர மேவிய திருநடத் தெய்வமே! மூங்கிலையனைய பருத்துவிளங்கும் தோள்கள் வாய்ந்த மங்கையினிடத்தும் பொன் பொருள் மண்முதலியவைக ளிடத்தும் தான்மிகப்பிரி

யத்துவம் வைத்துள்ள மயக்கத்தை யொழித்து தனித்து மாண்ட சவத்தினை இனிச்சாக விருக்கும் பிணக்கூட்டங்கள் சூழ்ந்து கொண்டு அழுது புரளும் அலங்கோலத்தை யெஃசொல்வது! ஆ! அவர்க்குரிய அறியாமையைப் பற்றி என்செய்வது!

(கு - ரை.) தில்லைச் சங்கரனென்றது, சிதம்பர சிற்சபையில் நடனஞ் செயும் சிவபெருமானை யென்க. சங்கரன் - சுகந்தருபவன். இறந்தவரை யுத்தேசித்து இனியிறக்க விருப்பவர் கூட்டமாகக் கூடியழுவது சுத்தபேதமை யென்று தெரிவித்ததாம். (44)

சோறிடுநாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைக ளிறங்கிடுந்தீவினை யெப்பொழுது
நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டால்
ஊறிடுங்கண்க ளுருகிடுநெஞ்ச மெனுள்ளமுமே.

(போ - ரை.) திருவெண்ணீர் சாற்றிய திருமேனி வாய்ந்தவரும், அழகுபொருந்திய ஞான சபையின்கண் மேவியவரும் ஆகிய நடராஜ வள்ளலின் நடனதரிசனஞ் செய்தால் என திருகண்களும் ஆநந்த வருவி சொரியும்; மனமும் புத்தியும் உருகிவிடும்; அன்றி, ஊரவர்கள் வருந்தி அன்ன மருத்துவர்; குப்பை மேடும் வஸ்திரமளிக்கும்; தொண்டுபுரி யன்பரைப் பார்த்து இருகரங்களும் சிரமீதேறிடும்; தீயவினைகள் இறங்கி போதற்கு வழிதேடும். சிதம்பரநாதனைத் தரிசிக்க முத்திதருந் தலமாதலால் இத்தனையும் "நிருத்தங்கண்டா லுண்டா" மென்றார்.

(கு - ரை.) பஞ்ச ஸ்தலங்களுள்ளே ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரமாய்து தரிசித்தமாத்திரத்தே முத்திதரும் ஸ்தலமாதலினாலே சுவாமிகள் தமது திருப்பாசுரத்திலே சிற்றம்பலவர் நிருத்தங் கண்டால்

கண்களில் ஆநந்தநீர் பெருகிடும், நெஞ்சமும் அறிவும் நெகிழ்ந்து உருகிடும் என்று கூறினரென்க; இங்ஙனமாகவே வள்ளலார்

"மலர்மண மணியொளி மன்னியவண்ண
மாவிக்கியல்பு மபிமுகமாதலு
மாகாயம்போலாந் தரங்கண்டாங்
கெழுமியெங்கணுமாய்க் கிளரொளிச்சடையனைப்
பின்னியொன்ருகிப் பெறுமெனுநாலே" என்றருளினர்.

ஆக்கலளித்த லழித்தன் மறைத்தவரு
ளூக்கலிவை யெவ்விடத்து நோக்கியே—நீக்கமறப்
புல்லிய ரானந்தப் பொற்பின் மிசையேற
னல்ல சிவதரிசனம். என்றும் அருளினர்.

இன்னும், சிவனடியவர்களைக் கண்டமாத்திரத்தே 'எறிடுங் கைக' ளென்ருர்; என்? அன்னோரைச் சிவமாகவே பாவித்தல் காரணமாகப் பாவவினைகள் தாமே இறங்கி யொழியுமென்றனர் எனவறிக. (45)

அழலுக்குள் வெண்ணெயெனவே யுருகிப்பொன்னம் பலத்தார், நிழலுக்குணின்று தவமுஞற்ரும னிட்டூரமின் ஞர், குழலுக்கிசைந்த வகைமாலைகொண்டுகுற் றேவல்செய்து, விழலுக்குமுத்துலை யிட்டிறைத்தே னென்வி திவசமே.

(போ – ரை.) பொன்னம்பலப் பெம்மான்றன் சந்நிதியிலே நின்று அக்னியிற்பட்ட வெண்ணெய் போன்று மனமுருகித் தவம் புரிய மாட்டாது, நிட்டூரவார்த்தைகளையே பெரிதும் பாராட்டும் பொதுப்பெண்டிர் கூந்தலிற் செருகயேற்ற வகைவகையான புஷ்ப மாலைகளைக் கொண்டு கொடுத்துப் பின்னும் அவர்களுக்குரிய ஊழி

யங்களைப் புரிந்து வந்ததானது, விழற்செடிக்கு மூன்று தலையிட்டு நீரிறைத்தா லென்ன வாயது; இதுவும் எனது தலைவிதிதான்!

(கு - ரை.) பொன்னம்பலப் புனிதனர் தம் ஆலய மமர்ந்து தவம்புரிவோர்க்கு அத்தவம் யாதொரு விக்கினமும் வாராது தீவிரதரமாக இனிது முடியுமாற்றால் அது செய்யாமையைப்பற்றி "நிழலுக்குள்நின்று தவமுஞற்றாமல்" என்றார். சிற்சபாநாதன்றிருச் சந்நிதி மருவி அருந்தவம் செய்யாது நாரியரைச் சேர்ந்து வீண்காலங் கழித்துவிட்டது விழலுக்கிறைத்ததற் கொப்பாயது என்று விசனமுற்ற தாயிற்று. இது அறியாமையைக் குறித் திறங்கலாகும். திருவடிநீழல் - ஞானசத்தி நிலயம். நிட்டூர மின்னார் - பழிமொழி பயிலும் பான்மையினரான மின்னலிடையினரை. (46)

ஓடாமற்பாழுக் குழையாமலோர முனைப்பவர்பாற்
கூடாமனல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சில்
நாடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(போ - ரை. சிவ சிதம்பராலய தேசிகனே! அன்னவிசாரங் கொண்டு அங்கு மிங்குமாக ஓடியலையாதும், அவத்திற்கு உழைக்காமலும், பக்ஷபாதமாய்ப் பேசுபவர்பால் சேராதும், உத்தம சத்துவ குணத்தர் தம் கூட்டத்தை விட்டசையாமலும், கொடுங் கோபங் கொள்ளாது சாந்தவழி நின்றும், நற்காரியத்தை விட்டு விடாமலும், இன்றைக்கு வேண்டும் நாளைக்கு வேண்டும் என்று திரவிய தேட்டமின்றியு முள்ளதான அருட் செல்வத்தையே எனக்கருள் புரிவாயாக.

(கு - ரை.) பயனின்றி பழிக்கேதுவாதலின் 'பாழுக்குழையாமல்' என்றார். ஓரஞ் சொல்லுங் குடி ஓங்காது இழிதலின்

அவர்பாற் சேராமை வேண்டினர். அஞ்ஞான விவகாரத்திற் கேதுவாதல் கூடாமைபற்றியே 'நல்லவர் கூட்டம் விடாம' லென்றனர். செய்தவமாளர்க்குக் கோபங் காரணமாயிருத்தலின் 'கோபம் நெஞ்சில் நாடாமல்' என்றார். பொருட்செல்வம் என்றும் வேண்டுவதாகலின் அவ்வநித்திய செல்வம் எனக்கு வேண்டுவதின்று; ஆதலால் அவ்வாறு தேடக்கூடாததும் நித்தியத்துவத்தை யருளும் நித்திய வஸ்துவுமான திருவருட் செல்வத்தை சேட்டருளினர் என்க. தேடக்கிடைக்கும் திரவியம் பொருட்செல்வம்; தேடக் கிடைக்காத திரவியம் அருட்செல்வமாம். சிலர், உள்ளமறிந்து உழைப்பறிந்து உள்ளவன் கொடுப்பானென்று அமராது படபடப் பாயும் மகா ஆவலாயும் பரந்து பரந்து பாடுபடுகின்றார்கள். ஏன்? பொருளின்மேல் அவர்களுக்குள்ள மிச்சமான இச்சையேயாம். அப்படி இச்சைகொண்டு பக்ஷியாய்ப் பரந்தால் பொருள் மிகுதியாய்விடுமோ? இதுபேராசை, ஆசையால் பெருநட்டமே வரும். பொருள் வருவாய் நம் சக்தியைக் கொண்டேயென்று சொல்வது சில மேற்றிசைக் கல்வியாளர் தம் நவீன யுக்தியாகும். அது பிரயோசனமற்றதாகும். எல்லாம் அவனது கர்த்தவ்யத்தாலும் நமது நல்ல எண்ணத்தினாலும் கிடைக்கக் கூடியதென்றே அமர்த்திய ஆசையால் வேலைசெய்ய வேண்டும். (47)

பாராமலேற்பவர்க் கில்லையென்னுமற் பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள் வந்தணுகாமன் மனமயர்ந்து
பேராமற்சேவை பிரியாமலன்பு பெறுதவரைச்
சேராமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(போ - ளை.) சிவ சிதம்பரமேவிய தேசிகோத்தமரே! நல இளப்பம் பாராது யாசகங் கேட்போர்க்கு இல்லையென்று கைவிரியாதும், ஒருவருடைய குற்றங்கருதி குறைகூறிவராமலும், பாவம்

வந்துசேரவொட்டாதும், சமயநோக்கி மனம்வருந்தி போகாமலும், தேவரீர் சேவை மறவாமலும், தேவரீர்பால் பக்தி, அன்பு இவையில்லாதவர்களை யான் சேராவண்ணமும் நின்திருவருட் பிரசாதத்தைக் கொடுத்தருள்வாயாக.

(கு - ரை.) அது, இது என்று தாரதம்மியம் பாராது கேட்போர்க்கு இல்லையென்றலினும் வேறு பாவமில்லையாதலால் 'இல்லையென்னுமல்' என்றார். அவ்வாறுவந்த அதிதி முதலானவர்களைக் குறைகூறி வராமல் என்பதே ஈண்டுப் பொருந்தும் எச்செயலாலும் சொற்பமான பாவமும் வந்து என்னைப் பற்றுமலுமுள்ள சீலத்துவமுடையாராதலின் 'பாவங்கள் அணுகாமல்' என்றுகூறினரெனலாம். எவற்றினுக்கும் ஆண்டவன் தரிசனம் அவசியமாதலின் 'சேவைபிரியாமல்' என்றதாயிற்று. எம்பெருமானிடத் தன்பில்லா விலங்கினரைச் சேர்ந்தால் எங்கு அந்த விலங்கின் றன்மை வந்துறுமோ என்றஞ்சினவராகலான் 'அன்புபெறுதவரைச் சேராமல்' என்னும், இவையெலாம் தன்னை வந்தடையா வண்ணம் தடுத்தாட்கொள்வது அருளே யாகலான் 'அருளைத் தருவாய்' என்றார் போலும். இவர், மேற்கூறியது போன்றே 'ஒருமையுடனினது திரு மலரடிநினைக்கின்ற வுத்தமர்த முறவுவேண்டும்' என அருட்பிரகாச வள்ளலு மறைந்தனர். (48)

கொல்லாமற்கொன்றதைத் தின்னுமற்குத்திரங்கோள்
களவு, கல்லாமற்கைதவரோ டிணங்காமற்கனவினும்பொய்,
சொல்லாமற் சொற்களைக்கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே.

(போ - ரை.) சிவ சிதம்பராலய தேசிகோத்தமனே! பிற ஜீவன்களை வதைசெய்யாமலும், வதைசெய்து அம்மாமிசத்தை யுண்ணமலும்,வஞ்சகமென்ன, கோளுரையென்ன, திருடதலென்ன

இவைகளெல்லாம் செய்யப் பழகாமலும், சூதர்களோடும் சேராமலும், ஒருவர் சொல்லும் பொய்யினைக் கேட்காமலும், மயிலன்ன நடையுடைய யாதர்மயக்கத்தி லகப்பட்டுப் பதிதனுகாமலும் நின் திருவருட் பிரசாதத்தைத் தந்தருள்வாயாக.

(கு - ரை.) பஞ்சமகா பாவங்களுக்கும் கொலை முதலான தாக லானும், ஜீவ இம்சைக்குப் பிராயச்சித்த மின்றூதலானும், அது அளவுகடந்த காலம் கொடியநரகத்திற் காளாக்கி விடுவதாலும் அதனைச் செய்யுளின் முதற்கண் கூறினரென்க. இச்செய்யுண் முதல் மூன்று செய்யுட்களும் கூறுதல் கரணசேட்டிதமாதல் கொண்டு, அக்கரண பரிசிலனம் மக்கட் கின்றியமையாத முக்கிய வொழுக்க மாதலால் முறையே மூன்று பாக்களினுங் கரண ஒழுங்கினத்தைக் கூறிக் கடிந்தனர். சிவபெருமான் திருக்கருணையால் கிடைக்கப் பெறும் அருட்பிரசாத மொன்றே கரணவொழுக்கத்திற்கு முக்கிய ஏதுவாதலின் சுவாமிகள் மேற்கூறிய செய்யுட்கள் மூன்றி னீற்றிலும் 'அருட் செல்வந் தருவா' யென்று வேண்டி யுள்ளார் போலும். (49)

முடிசார்ந்தமன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்துநாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே.

(போ - ரை.) மணிமகுடந்தரித்த அரசர்களும், மற்றும் அவருள்ளிட்டார்களும் முடிவுகாலத்திலே ஓர் பிடிசாம்பராய் வெந்து பின் மண்மய மாதலைக் கண்ணாரக் கண்டும், மறுபடியும் இப்பூமியின்கண் வாழ்தலிலேயே இச்சைவைத்துள்ளா ரன்றி, இதில் வெறுப்புற்று நிச்சயமாகிய பரமானந்தப் பெருவாழ்வைப் பெற்றுய் தற்பொருட்டு பொன்னம்பலத்தின்கண் சர்வதா ஆனந்தத் தாண்ட

வம் பயிலாநின்ற சற்குரு மூர்த்தியைப் போற்றிப் பக்தி கொண்டு அவரது திருவடிக் காளாக வேண்டும் என்று உணர்வாரைக் காணேமே! அந்தோ பாவம்!

(சூ - னா.) நெடுங் காலமாகச்செய்த பலஅரிய தவத்தின் பயனாகக் கிடைக்கப் பெற்றுவந்த இந்த மானிடர்களுக்கு மரணகாலமென்பது சர்வ நிச்சயமாயுள்ளது; அவ்விதமரணமோ, இவர் உயர்ந்தோரென்றும், இவர் இழிந்தோரென்றுந் தாரதம்மிய மின்றி எவராலும் மரணநிகழ்வு சமத்துவமாயே கடந்து வருகின்றன. இது கண்கூடான விஷயம். எவ்வளவு மகாமண்டலேஸ்வரரா யிருந்தாராயினும் அவர் ஒரு காலம் மரணமடைந்து அக்னிக் கிரையாகிக் கைப்பிடி சாம்பருக்குள்ளாகி விடுகின்றார்கள். ஆகவே, "எந்நாளாயினுங் கூற்றுவன் வருவான், அந்நாளந்தக் கூற்றுவன் றன்னைப், போற்றவும் போகான் பொருளொடும் போகான், சாற்றவும் போகான் தமரொடும் போகான், நல்லாரென்னுன் நல்குறவறியான், தீயாரென்னுன் செல்வரென் றுன்னுன்; தரியாளொரு கணம் தருகனுளன்" என்று கபிலர் கூறியதை அறிந்தாவதும் தில்லைத் திருநடநாதன் றிருவடியடைதல் வேண்டுமென்று கருதி அவ்வழிச் செல்வாரில்லையே யென்றனர். (50)

காலையுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாகமாமுற் சஞ்சிதமா
மாலையுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
ஆலமுகந்தரு ளம்பலவாவென்னை யாண்டருளே.

(போ - னா.) சுத்த பாற்கடலினின்றும் எழுந்த ஆலகால விஷத்தினையுண்டு கண்டத்திருத்திய பொன்னம்பலவனே! ஆன்மாக்களுக்கு தினநிதமும் காலைக்கஷ்டம் மலசலத்தால்; இதுபோக, மத்தியான காலத்திலுண்டாந் துன்பம் பசிதாகத்தினுல்; முன்னர்

சேகரமாயுள்ள மாலைத்துன்பம் நித்திரையாலும் காமக்கேட்டினுலு மாம். ஆக இத்துன்பங்களவையு மொழித்து அடிமையை ஆதரித் தருள்க.

(கு - ரை.) உபாதி - உபாதை ஒருபொருட் சொற்கள். உபத் திரவம். பசிதாகத்தை பசிப்பிணி யென்பதுமுண்டு. இப்பசி தாகப் பிணி உண்டாக, மானங்குலங்கல்வி வண்மையறி வுடைமை முதலிய பத்துக் குணங்களும் துன்புறுத்தலால் அதனைச் 'சாலவுபாதி' யென்றனர். சஞ்சிதமென்பது யோர்க்கெனவே தேடிய வினைமிச் சம். மாலையுபாதி நித்திரையும் காமச்செயலுமாம். இதனை முன் சஞ்சிதமாகிய மாலையுபாதியாகக் கூறினர் என்க. இம்மூவகை உபா தியையு மொழித்து என்னை ஆண்டருள் என்று வேண்டி யருளினர். (51)

ஆயும்புகழ்த்தில்லை யம்பலவாண ரருகிற்சென்றாற்
பாயுமிடபங் கடிக்குமரவம் பின்பற்றிச் சென்றாற்
பேயுங்கணமும் பெருந்தலைப்பூதமும் பின்றொடரும்
போயென்செய்வாய் மனமேபிணக்காடவர் போமிடமே.

(போ - ரை.) ஏ மனமே! சான்றோர்களாலே யுணரப்படும் கீர்த்திமானுய திருத்தில்லைச் சிதம்பரநாதர் பக்கம் அணுகுவோமா யின், இடபமோ பாய்ந்துமுட்டும்; பாம்போ கடிக்கும்; பின் பற்றிச் சென்றால் பேய்பிசாசுகளும், பெருந்தலைப் பூதங்களும் பின்னர் தொடர்ந்துவரும்; அன்றி பீதியுண்டு பண்ணும்; அவர் போகுமிடங்கள் சவந்தாங்கு மயானமாகும். ஆகவே அவரைத் தொடர்ந்து என்செய்வாய்-

(கு - ரை.) இச்செய்யுட் டலைவராம் அம்பலவாணர்க்குப் பரி வாரங்களா யமர்ந்துள்ள இடபம், அரவம், பூதபைசாச கணங்க

ளாதியனவெல்லாம் அவ்வச்சொரூபமே யென்று கண்டு தரிசிப்பார் பயனின்றிச் செல்வரேயென் றையுற்றவராய் சுவாமிகள் அவை களை விளக்குவான் தோன்றி இங்ஙனங் கூறினாரன்றி நிந்தையு மன்று ஸ்துதியு மன்று. ஞானமும் தருமதேவதையுமே இடபமாய் வந்தது. அவ்ராவி யரவம் குண்டலி சத்தி; மற்ற முகூர்த்தங்களே கணங்களாகும் பிணக்காடென்பது மாயாதேவி மாய்ந்த விடத்தைக் காட்டுவது. இங்ஙனம் ஒவ்வொன்றும் ஒவ்வோ ரம்ஸங்களையே மாற்றிக்கொண்டுவந்த குறியென் றுணர்தலே முறையாம். இவ்வா றுணர்ந்து தரிசியாது அந்தந்த சொரூபமாகவே யெண்ணிச் செல் லின் பலனின்றென் றறிக. இக்குறிப்பையே மாணிக்கவாசகர் திரு வாசக சிவபுராணத்தின் ஈற்றில் "சொல்லிய பாட்டின் பொரு ளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்துள்ளார்" என்றார். ஆகவே வஸ்துவின் யதார்த்தநிலையை யுணர்தலே அவசியம் என்பதாயிற்று.

ஓடுமெடுத்தத ளாடையுஞ்சுற்றி யுலாவிமெள்ள
வீடுகடோறும் பலிவாங்கியேவிதி யற்றவர்போல்
ஆடுமருட்கொண்டிங் கம்பலத்தேநிற்கு மாண்டிதன்னைத்
தேடுங் கணக்கென்னகாண் சிவகாம சவுந்தரியே.

(போ - ரை.) சிவகாம சுந்தரியே! உடுக்க வுடையில்லாமல் இடையில் புலித்தோலணிந்து, கையில் பிர்ம்ம கபாலத்தை பிக்ஷா பாத்திர மாகக்கொண்டு திரிந்து வீடுகடோறும் போய் பிச்சைவாங்கி அனாதையென விளங்கி வனத்திடை வெளியிலே கூத்தாடா நின்ற பேயாண்டியைத் தேடித்திரிவது எதற்காகவோ?

(கு - ரை.) மனிதராவார் இனிப்பிறவாத் தன்மைக் கேற்ற மெய்ஞ்ஞானத்தை யடைதல் வேண்டுமாயின் பலஜென்மாக்களின் புண்ணிய பரிபாகத்தாலே சித்திசுத்தியும், அதனால் புண்ணியமும்,

அதனாலே பாவ நீக்கமும், அதனால் குடும்ப தோஷ தரிசனமும், அதனால் உண்மை மெய்த்துறவும், அதனால் கன்ம நிவர்த்தியும், அதனால் ஞானயோக முயற்சியும், அதனால் ஆத்மப் பிரியமும், அதனால் மகாவாக்கிய விசாரமும், அதனால் அத்துவித ஞானமும், அதனால் இராகத்துவேஷ நீக்கமும், அதனால் விதி நிஷேதங்கள் ஒழிவும், அதனால் நல்வினை தீவினைகளிரண்டும் நீங்கலும், அதனால் பெயர் ஜாதிக்குறிபெறாது மனமிறந்து நித்தியாநந்த மயமாகிய ஜீவன்முத்தி வந்தடைதலும் படிப்படியாய்ப் பெறுதல்வேண்டும். இதன்மேல் இருவகைப்பற்றுக்களு மொழிந்து மானபி மானமற்று பிச்சை யேற்றுண்டு பரதேசி கோலம்வருதலே பரமனருட்குப் பக்குவ காலமென்றுணர்த்தும் காரணமாமென்று காட்டியருளிய குறிக்கோலமாகும். இங்கே ப்ராசத்தியின் கிருபையானே சிவத்தைக் காணத்தகுவது நோக்கியே சிவகாம சுந்தரியை விளித்தனர் என்க. (53)

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானுமிங் கொன்றொடொன்று
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை
காட்டுவிப்பானு மிருவினைப்பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லையம்பலத்தே.

(பொ - ரை.) ஆன்மாக்களை உண்பிப்பவனும், தூங்கச் செய்கின்றவனும், ஒன்றோடு மற்றொன்றைப் பொருந்தச் செய்பவனும், அவைகளைப் பண் படுத்துகின்றவனும், அதனால் விளையும் பலனைத் தெரிவிக்கின்றவனும், இருவினைகளாகிய பாசக்கயிற்றைக் கொண்டு அசைவிக்கின்றவனும் ஆகிய ஓர் தலைவன் சிதம்பர பொன்னம்பலத்திலே விளங்கியுள்ளான்.

(கு - ரை.) அநாதியாய் ஆணவமலத்தோடு சேர்ந்து அறிவு, இச்சை, செயல் இவையின்றிக் கிடந்த ஆன்மாக்களை சிவபெரு

மான் கருணைமேலிட்டால் எடுத்துக் கன்மத்திற்குத் தக்கினவாருக தநுகரண புவன போகங்களைக் கொடுத்து, பரிபக்குவம் வருவித்தற் பொருட்டதாக சகலாவஸ்த்தைகளிலும் பன்முறை விடுத்து இரு வினையொப்பு வந்தவுடனே குரு முகூர்த்தமாய்த் தோன்றி தீட்சை யால் சஞ்சிதமகற்றி ஆகாமியம் ஏருதபடிச்செய்து, ஆன்மாவோடும் பேதமற நின்று சரீரத்தோடும் பிராரத்துவத்தைப் போக்கி அழி விலா மோக்ஷவீட்டிலே இருத்தி வாழச்செய்யும் முழுமுதலாய், தில்லைச்சிதம்பர பொன்னம்பலத்திலே ஒருவன் விளங்கி யிருக்கின் றனன். (54)

அடியார்க்கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வரம்பெறலாம் வையமேழளந்த
நெடியோனும் வேதனுங் காணுதநித்த நிமலனருட்
குடிகாணுநாங்க ளவர்காணுமெங்கள் குலதெய்வமே.

(போ - ரை.) தொண்டர்க்குத் தொண்டரும், பொன்னம் பலத்தில் வாழ்பவருமாய நடராஜவள்ளலின் திவ்ய திருப்பாதகமலங் களில் வணங்கினல் இறவாதபடிக்குத் திருவருளைப் பெறுதற்கான நல்வரம் பெற்றுய்யலாம். யாங்களோ, சப்தலோகங்களையும் காலி ஞல் அளந்தவனுய மகாவிட்டுணுவும் பிரமதேவனும் காணப்பெரு நித்தியனுகிய சிவபெருமான் றன் திருவருட்குரிய அடிமைக்குடிக ளாவோம், அவர் எங்களுக்குரிய குலதெய்வமு மாவர்.

(கு - ரை.) படியளந்தமையால் மாலைப்பெரியோன் என்பதா யிற்று! வேதத்திற் குரிமையாக வுள்ளவனுதலால் வேதியனுயி னன் பிரமன் என்றபடி - நித்தன் - ஆதியந்த மில்லாவரும் பெருஞ் சோதியன். நிமலன்-மலபந்த மில்லாதவன். தற்போத மென்னும் தற்சுதந்தர மில்லாது தநுகரண புவன போகாதிகளை யெல்லாம்

அவன்பாற் படுத்து அவனருளையே அபேக்ஷித்துநின்று, அவனையே சதா சிந்தை குடிகொண்டார்க்கு அடியரன்றி, ஏனையோர்க்கன்று என்பது 'அடியார்க் கெளியன்' என்பதாற் றெரித்தனர். இத் திருப்பாடலால், மானிடரில், எம்பெருமாற்கு மெய்யன்பு பூண் டார்க்கும் திருமாலாதியோர் ஒப்பாகா ரென்பது தோன்ற நின்றது. இன்னும் பிறத்தலும் இறத்தலு மில்லாத பொன்னம்பல வாணர்தம் அடிபணியில் இறவா வரம்பெறலா மென்றபடி அவரடிக் கமலங்களி லேயே அன்புவைத்துள்ள எண்ணிறந்த மெய்ஞ்ஞானியரும் யோகி யர்களும் பத்தர்களும் சித்தர்களும் பிறந்திறவாத பெருவாழ்வெய்தப் பெற்றனர்கள். பிரம விட்டுணுக்கள் தாமெனுந் தற்போதத்தால் தாழ்ந்தனர் அந்நாளென்றார் பிறரும். (55)

தெய்வச் சிதம்பரதேவா வுன்சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பன மாமன்னர்வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர்தம் மேடையெங்
கைவைத்த நாடகசாலையெங்கே யிதுகண்மயக்கே. [கே

(போ - ரை.) தெய்வீகத் தன்மைவாய்ந்த ஸ்ரீ சிதம்பரத்தில் மேவிய தேவதேவா! தேவரீரது திருவுளம் சிறிது அருளுக்கஞ் செய்யுமேல், பொய்மையும், கனவையு மொத்ததான மகா மன் னர்களது பெரியவாழ்வும் உலகத்தோற்றமும் ஏது, இல்லையென்ற படி; அதி நிச்சயமாக வெண்ணிச் சேர்த்த திரவியமும் ஏது, இதுவு மில்லை யென்றபடி; அரசவர்க்கத்தார்க்கு மெத்தை மேடையு மேது அதுவுமில்லையாகும். மிக அலங்கரித்துள்ள நாடகசாலையு மில்லை யென்பதாம். இவையனைத்தும் கண்மயக்காய் முடியும் என்றார்.

(கு - ரை.) சிவசிதம்பரம் தில்லையம்பல மாதலின் தெய்வச் சிதம்பரமென்றார். சிவபெருமானது திவ்ய திருவுளம் எங்கள்பால்

திரும்பி பதிந்துவிடின் மெத்தை மேடையோடுங் கூடிய பொய் வாழ்வு, கண்மயக்காய்ப் போய்விடுமே யன்றி நிலையெனத் தோன்றப்பெறா. கண்மயக்கு - போலித்தோற்றமாம். அதாவது கானல் நீரென்றபடி. உலகானுபவம் சொப்பன மொப்பதாய்த் தோன்றுமென்க. (56)

உடுப்பானும் பாலனமுண்பானு முய்வித்தொருவர் தம்மைக், கெடுப்பானு மேதென்று கேள்விசெய்வானுங் கெதியடங்கக், கொடுப்பானுந் தேகியென் றேற்பானுமேற் கக் கொடாமனின்று, தடுப்பானு நீயல்லையோ தில்லையாநந் தத் தாண்டவனே.

(போ - ள.) தில்லைச்சிதம்பர ஞான சபையின் கண்ணே ஆனந்த நடம்பயிலும் அப்பனே! வஸ்திர முடுப்பவனும், பாலும் அன்னமுமாகப் புசிப்பவனும், ஒருவரைப் பிழைக்கச் செய்து மற்று மொருவரைக் கெடுப்பவனும், யாதெனக் கேள்வி கேட்பவனும், கவலைதீரக் கொடுப்பவனும், உபாதான மென்று இரப்பவனும், ஏற்பவனுக் கீயாதபடி தடுக்கின்றவனும் நீயேயல்லவோ?

(கு - ள.) "நானுரைக்கும் வார்த்தை யெலாம் நாயகன் சொல் வார்த்தையன்றி, நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டீர்நா— னேனுரைப்பேன், நானெனக்கெனவோர் ஞானவுணர் வேது சிவம், ஊனுடிநில்லா வுழி" என்ற இந்த வெண்பாவை ஓர் பெரியார் பாடினமை அத்துவிதத் தன்மையாயிற்று. இறைவன் "எல்லாமா யல்லதுமா யிருந்தருளு மத்துவித விலக்கணத்தா" னென்பதுபோன்று எல்லாமவனே யென்று கூருதென் சொல்வர்! ஆயினும் சிவநிலையும் சிவநிலையையும் காரணகாரியத்தான் பிரித்துணர்ல் மக்களிற் சிறந்தார் மதியழகாகும். சாரமாகச் சிவச் செயலையும் சிவச்செயலாகக் கூறினரென்ப. (57)

வித்தாரம்பேசினுஞ் சோங்கேறினுங்கம்ப மீதிருந்து
தத்தாவென்றேறிப் பவுரிகொண்டாடினுந் தம்முன்றம்பி
ஒத்தாசைபேசினு மாவதுண்டோதில்லை யுண்ணிறைந்த
கத்தாவின்சொற்படி யல்லாதுவேறில்லை கன்மங்களே.

(போ - ரை.) இடம்பமாக வாக்சாதூர்யம் பேசினாலும், நாவாயேறிச்செல்லினும், கம்பமீதேறித் தத்தாவென்று கூத்தாடினும், தமயன்முன்னே தம்பி ஒத்தாசையாகப் பேசினும் யாதேனும் ஒரு காரியம் நிகழ்வதுண்டோ, தில்லைத்தலத்துறை கர்த்தாவான சிவபிரான் நியமப்படி யல்லது வேறே எதுவும் நடவாது.

(கு - ரை.) சிலபாசுரங்கள் எல்லாம் கடவுள் செயல் என்ற சித்தாந்தத்தையே மடித்தும் மடித்தும் வினைவழி விளங்கக் கூறிவருகின்றன. வித்தாரம் - வாஜால நெடும்பேச்சாகும். அன்றி இடம்பமொழியென்று கூறினும் அமையும். சோங்கு - பண்டை மரக்கலம். பவுரி - ஓர்வகைக்கூத்து. (58)

பிறவாதிருக்க வரம்பெறல்வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ
அறமார்புகழ்த்தில்லை யம்பலவாணா ரடிக்கமல
மறவாதிருமனமே யதுகாணன் மருந்துனக்கே.

(போ - ரை.) ஏ நெஞ்சமே! இவ்வுலகத்திலே பிறவாத வரத்தைப் பெற்றுய்தல் வேண்டும். அவ்வரத்தைப் பெறுதற் கியலாது நாம் இறந்துவிடின், அதன்மேல் சாகாதிருத்தற்கு மருந்துண்டு; அஃதெங்கெனின், தருமமும் புகழும் பெற்றுள்ள தில்லைச் சிதம்பராலயத்தின்கண் சிற்சபையிருக்கிறது; அதாவது ஞானசபை; அந்த அதி மகாத்மியம் வாய்ந்த திவ்ய திருச்சபையிலே ஸ்ரீ ஆனந்த நடராஜ பெருமான் அநவரத தாண்டவம் பயின்று

வருகின்றனர்; அவர்தம் திருமலரடியிணைகளில் ஒரு மலரடியாம் வாமபாக அதாவது தூக்கி முன்காட்டி யாடி யருளும் இடது திரு வடிக்குக் குஞ்சிதபாத மென்றுபெயர். அந்த ஒப்பற்ற மகா மந்த்ர ரூப சத்தியம்ஸ சுந்தரதிருவடியை மறவாது தியானித்திருப்பாய்; அதுதான் நல்ல மருந்தாகும். அதுவே பிறவாமற்செய்யும் பேரின்ப மருந்தாம்.

(கு - ரை.) மேற்கருத்தினையே பற்றிக் கூறுவதறிக:—"பிற விப்பெருங்கட னீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்" என் ுறார் திருவள்ளுவ நாயனுர். இதுமட்டோ! முதல் அதிகாரம் கட வுள் வாழ்த்தாகக் கூறியதில் எ-குறட்பாக்களிலும் அவரது திருவடி யையே குறித்து வாழ்த்தியுள்ளமை குறிப்பாம். ஸ்ரீமந் மாணிக்க வாசகரும் திருவாசகம் முதல் சிவபுராண அகவற்பா எடுப்பிலேயே 'நமச்சிவாயவாழ்க நாதன்றாள்வாழ்க' வென்று எடுத்தவர் எட்டடி வரையிலும் திருவடியையே வாழ்த்தியுள்ளார். அன்றி அதன் ஈற்றிலும் "சொல்லற்கரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச், சொல் லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோருமேத்தப் பணிந்து" என்று கூறினமையுங் காண்க. திருமூலரும்,

அரனடி சொல்லி யரற்றி யழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளு
முரனடி செய்தங் கொதுங்க வல்லார்க்கு
நிரனடி செய்து நிறைந்து நின்றானே.

போற்றியென்பா ரமரர் புனிதன்னடி, போற்றியென்பா ரசுரர் புனிதன்னடி, போற்றியென்பார் மனிதர் புனிதன்னடி, போற்றி யென்னன்புள் விளங்கவைத்தேனே. என்று கூறியனவுங் காண்க. "புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா நின்னடி யென்மனத்தே, வழு

வாதிருக்க வரந்தரவேண்டு" மென்றமையும் பிறவாமருந்தாகலின் அப்பரும் கூறினமையுணர்க. மற்றும் அத்திருவடியாம் பிறவா மருந்தை அருட்பிரகாச வள்ளலார் நூற்றிருபத் தெட்டடியால் கூறிய ஓர் விருத்தத் தோத்திரப்பாவிலே திருவடியைத் துதிசெய்து வந்துள்ளார்; அதில் நன்றாய்ச் 'சத்திவடிவாம் பொற்பதாம்' என்று வெளிப்படக் கூறினமையுங் காண்க. இதனால் இறைவனது திருவடியில் அருட்சத்தி வியாபித்து நின்று பிறவாநெறியினை அநுக்ரகிப்பதாலேயே சர்வான்மாக்களும் மகாப்க்த கோடிகளும் சத்திவடிவாம் பொற்பதத்தையே துதித்தும், வணங்கியும், தியானித்தும், தரிசித்தும் வருகின்றனர்கள் ஆகவே ஈறிலாப்பதங்களனைத்தும் தந்து அழிவில்லாத இன்பந்தந்திடும் பதமெனவும் பலவாறாக வாழ்த்தியுள்ளார்கள். அதுகொண்டே நமது பட்டினச் சுவாமிகளும் அத்திருவடியை மேற்பாசுரத்தில் இறவாதிருக்கும் மருந்தென்று கூறிவிளக்கி யருளினர் என்றுணர்க. (59)

தவியாதிரு நெஞ்சமே தில்லை மேவியசங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞானகரனைப் புராந்தகனை [தால்
அவியாவிளக்கைப் பொன்னம்பலத் தாடியையைந்தெழுத்
செவியாமல் நீசெவித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே.

(பொ - ரை.) நெஞ்சே! களையாதிருப்பாய்; தில்லைச் சிதம்பரமேவியுள்ள திருநடத்தரசை, உலகமெலாம் நிறைந்துள்ள ஞான சொரூபனை, திரிபுராந்தகனை, ஒருபோதும் கெடுதலில்லா மணி விளக்கை, பொற்சபைச்சண் நடனம் செய்கின்றவனை ஸ்ரீபஞ்சாக்கர மந்திரத்தினாலே, வாய்கொண்டு செபியாது மனத்தினால் செபித்திடுவையே யானால் பிறந் திறவாமோக்ஷம் கிடைக்கப்பெறலாம்.

(கு - ரை.) கூறிய சங்கரனைப்பற்றி யான்டுளனோ வென ஐயுறுதேயெனத் திடங்கூறியதாகத் 'தவியாதிரு நெஞ்சமே' யென்

றனர். ஆனால் அச்சங்கரன் இப்புவியிலேயே தில்லையின்கண் ஞானஸ்வரூபமா யமர்ந்துள்ளான் என்று குறித்துக்காட்டினாரென்க. என்? அவன் இன்னான், இன்னவிட மிருப்பவன் என்றுணரற் கில்லாமைகொண்டு குறிப்பிட்டருளிய தோடும் நில்லாமல் அவனை யறியும் ஆற்றற்கேதுவா மார்க்கமாகிய பஞ்சாக்கர மந்திரத்தையும் எடுத்துக்காட்டியது மிகக் கவனிக்கத் தக்கதாகும். வாயினால் பஞ் சாக்கரம் சபித்தலில் மனம், கண்முதலியன ஒத்திராது பலவழிச் சலித்தற் காரணமாக அச்செபம் தக்கதன் றென்றே மனத்தாலேயே செபித்தல் வேண்டுமென்பதைப் பற்றி 'செபியாமல் நீசெபித்தால்' என்று தெளிவுறக் கூறினாரென்க. வாக்கால் செபித்தலினும் மனத் தால் செபித்தல் எத்தனையோ மடங்கதிகமென மெய்ந்நூல் சாற்று கின்றது. பௌதிகபூத விளக்கைப்போ லல்லாது ஆதியந்தமற்று பொருத்தல் நிறுத்தலற்ற பரஞ்சோதி யாதலின் அதனை 'அவியா விளக்' கென்று சிறப்பித்தனர். அவியாவிளக் கென்றது அப்பரம னையே யாதலால் அவ்வொளியம்ஸனை அவனருள்கொண்டு காண்டி னல்லா லியலாமை பற்றி அருட்பிரசாதமே பிரதானமாயிற்று. (60)

நாலின்மறைப்பொரு ளம்பலவாணரை நம்பியவர்
பாவிலொருதரஞ் செவிக்கொணாதிருப் பார்க்கருங்கல்
மேலிலெடுத்தவர் கைவிலங்கைத் தைப்பர்மீண்டுமொரு
காலினிறுத்துவர் கிட்டியுந் தாம்வந்து கட்டுவரே.

(போ - ரை.) சதுர்மறைப் பொருளா யிருக்கிற சிற்சபா நாதரை மனத்திடங்கொண்டு அவரது சந்நிதானத்திலே சென்று ஓர் முறையேனும் வழிபடாது இதர வியவகாராதிகளில் அழுந்திக் கிடப்பவர்களை இயமதூதர்கள் அவர்கள் தலையில் பெரும் பாராங்கல் லைச் சுமத்தி அதுபோராதபடி கைகளிலும் விலங்கைப் பூட்டுவர்கள்.

இதுமட்டோ! மீண்டும் ஓர்காலிலே நிற்கும்படிச் செய்வார்கள். பின்னும் அவர்களைப் பாசக்கயிற்றினால் இறுகக் கட்டி விடுவார்கள்.

(கு - ரை.) சதுர்மறை நான்குவேதங்கள். அதாவது இருக், யசுர், சாமம், அதர்வணம் என்பன. வேதமுடிவாய் விளங்குவதாலும், நால்வேதத்துச்சியென்றும், அருமறை சிரத்தின் மேலான் என்றும், வேதத்திற் கெட்டான் என்றும் மறைதுதிபாதன் என்றும் பலவாறு பல மஹாத்துக்களாலும் துதிசெயப் பெற்றுள்ள தாலேயே மறைப்பொருள் என்றனர் பிள்ளையார். அன்றியும்,

ஆரண வுருவமாகி யம்பரக் கோயிலூரு
நாரணன் பிரமன்காணா நட்டநீ செய்ததென்னே
காரணமுயிரே யென்னக் கண்டவர் காணாதேங்கச்
சீரணிமாடமோங்குந் திருப்புலி வனத்துளானே. என்றார் வள்ளற் பெருமானும். (61)

ஆற்றோடுதும்பை யணிந்தாடு மம்பலவாணர்தமைப்
போற்றாதவர்க் கடையாளமுண்டே யிந்தப்பூதலத்தில்
சோற்றுவியற்றுச் சுகமற்றுச்சுற்றத் துணியுமற்று
எற்றாலும்பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே.

(பேர் - ரை.) கங்கையோடுந் தும்பையையும் அணிந்து திருநடம்பயிலும் சிற்சபாநாதனைத் துதிசெய்யாதவர்களுக்கு இப்பூவுலகில் அடையாளங்கள் பலவுண்டு; அதாவது: சோற்றின்வாசனை கூட கிடைக்கப்பெறாமல், இன்பமென்பதே தெரியாது இடையில் தரிக்க உடையு மின்றி ஓடெடுத்துச் சென்று பிச்சை யெடுப்பினும் அகப்படாமல் ஏக்கங்கொண் டிருப்பர்கள்.

(கு - ரை.) இதுபோன்றே தேவாரச் செல்வரும் "பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார், நாக்கைக் கொண்டரனை

நவில்கிலார், ஆக்கைக்கேயிரை தேடியலமந்து, காக்கைக்கே யிரை யாகிக் கழிவரே." என்று திருவாய் மலர்ந்தருளினமை காண்க. சோற்றுவி - அன்னவாசனையும் என்றபடி. முன்னம் அவனைப் பிச்சைக்காரன் எனவெண்ணி துதியாதும் வணங்காதும் ஒதுக்கிவிட்டவர்களே இப்போதிந்த பெரியார் கூறியவாறு வெளிவந்திரக்கும் போலிப்பரதேசிகளாவார் என்பது தோன்ற நின்றது. (62)

அத்தனை முப்பத்துமுக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனையம்மை சிவகாமசுந்தரி நேசனையெங்
கத்தனைப் பொன்னம்பலத்தாடு மையனைக் காணக்கண்கள்
எத்தனைகோடி யுகமோதவஞ்செய் திருக்கின்றவே.

(பொ - ள்.) எவ்வுயிர்க்கும் பிதாவானவனும், முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தலைமையானவனும், என்று முள்ளவனும், தாயான சிவகாமசுந்தரியினது கைப்பிடித்த பதியானவனும் நம்கடவுளானவனையும் சிற்சபையிலே நிர்த்தனஞ் செய்யாநின்ற ஆனந்த சொரூபியைப் பார்க்க நமது கண்கள் எத்தனைகோடி யுகங்களோ தவம்செய்துள்ளன.

(கு - ள்.) இவ்வுலகத்துள்ள சமயங்கள்பல. அவ்வச்சமயத்தவர்களும் ஓரோர் கடவுளையே கொண்டுளோராயினும், சர்வகர்த்தவ்யமும் ஒருங்கேபொருந்தி அநாதிகாலந் தொடங்கி பஞ்சகிர்த்தியங்களால் ஆன்மாக்களது பரிபக்குவத்திற் கீடாக அநுக்ரகித்து வருபவர் ஒப்பற்ற ஒரு தனித்தலைமைப் பதியாகிய சிவபரம்பொருளே யெனத் தெளிவுபெற வறிந்திலர். அதற்குரியார் நஞ் சைவசமயத்தவரே யாவர். இவர்கள் கர்மயோக பக்திஞான மார்க்கங்களால் அச்சிவபெருமானே பரமபதியெனக் கொண்டு வழிபட்டுய்தலான் இம்முறையை ஏனையோரும் உணர்ந்துய்வான் காரணமாகவே கர்த்தனையென முன்கூறிப் பின்னர் 'நங்கர்த்தனை' யென்றும், அதுவும்

போராதென்று "பொன்னம்பலத்தாடு மையனே" யென்றும் செவ்வனே விளக்கிக் கூறினாரென்க. (63)

திருச்செங்காடு.

நெருப்பான மேனியர் செங்காட்டிலாத்தி நிழலருகே
இருப்பார் திருவுளமெப்படியோ வின்னமென்னையன்னை
கருப்பாசயக்குழிக் கேதள்ளுமோகண்ணன் காணரிய
திருப்பாதமே தருமோதெரியாது சிவன்செயலே.

(போ - ரை.) செவ்வான மொத்த அக்னிமய திருமேனியுடையாரும், திருவாத்தி நீழலில் வீற்றிருப்பவருமாய பரமேஸ்வரனது கிருபை எவ்வாறோ! எளியனை இன்னுந் தாய்தன் கர்ப்பக் குழிக்கனுப்புமோ! அவ்வாறன்றி, விட்டுணுமூர்த்தியால் காண்பதற் கியலாத் திருப்பாதந் தந்தருளுமோ! யாதுமறிந்திலன், எதுவும் அவன் செயலேயாம்.

(கு - ரை.) நெருப்பானமேனியர் என்றார், எதனால்? பரசிவம் பனி, புகை, தீக்காற்று, அக்கினி, பளிங்கு, சந்திரன் ஆக இவ்வொளி கொண்டு அக்னிமயமாயுள்ளவ னென்று சித்தாந்த வுண்மைச் செப்பும். அன்றி செந்நிறமேனியன் என்றும் விளம்புவதாலும், பஞ்சமூர்த்தி, பஞ்சசத்திகள் யாவும் ஜோதிமயமாய்க் காண்பதாலேயும் அவ்வாறு நெருப்பானமேனியைக் கூறினாரென்க. ஆன்மாக்கள் தற்சுதந்தரரன்றி பரதந்திரரானது விளங்க மேற்கூறியவாறு ஐயுற்றன ரென்க. விருப்பு வெறுப்பில்லான் வேதவிதிசெய்தோ, நெருப்புருவனெங்க ளமலன், என்றார் சிவஞான முனிவரும். (64)

திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி யறிவழிந்து [யான்
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோ தொன்று வேண்டுவன்

செய்யுந் திருவொற்றி யூருடையீர் திரு நீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே.

(பொ - ரை.) திருவொற்றி மேவிய சிவ பெருமானே! கோழையடைத்து, கண்கள் சுழன்று செருகி, உணர்வழிந்து, சரீரம் பொய் பட்டழியும்போது அடிமை ஓர் வரம்வேண்ட விருக்கிறேன்; அருள்செய்க. (அதாவது) யான் அச்சமயம் விபூதிபூசி, கைகூப்பித் தொழுது ஸ்ரீ பஞ்சாக்கரத்தையும் செபிக்கச் செய்தருளு மென்பதாம்.

(கு - ரை.) ஆன்மாக்கள் நெடுநாளாக அளவளாவி அநுபவித்து வந்த பெண்டுபிள்ளை பண்டு பதார்த்தங்களென்ன சகலத்திலும் பற்றுவைத்து அநுபவித்து வந்தவர்களானதால் மரண காலத்தில் அவை அவர்கள் மனசில் மிகவும் கிடந்துவருத்தும். ஆகவே அவர்கள் அந்தமரண தருவாயில் அந்த ஆசாபாச வெண்ணங்களை வரவொட்டாமல் தடுத்து எம்பெருமானைத் தியானிக்கவும், அவர் மந்திரமாகிய பஞ்சாக்கரத்தை யோதவும் மற்றும் விபூதி உருத்திராக்ஷங்களணிதல் முதலிய வைதிகக் கிரியைகளில் மனஞ்செல்லாது மருண்டு மயங்கி யேங்கிப் பெருமூச்சுவிட்டுத் தியங்குவர். உண்மைவழி தெரிந்த திடப்பிரக்ஞர்கள் தங்களுக்கிருந்த பல ஆசைகளையு மொழித்து முடிவாக சிவபிரானது திருவடித்தியானமோ பஞ்சாக்கர செபமோ இவைகளில் இயன்றவாறுக சைவவேடத்தோடு மிருந்து செய்துவருவர். சிவநாமங்களை கூறுவர், துதிப்பர். இனித்தவிர வேறெந்த பிரீதியுங் கொள்ளார்; ஏன், இவ்வாறு செபத்தியானாதிகள் செய்து ஆத்மா பிரிந்தால்தான் அவர்கள் நற்கதி யடைவார்களாதலா லென்க. ஆகவே இம்மைப்போக போக்கிய ஆசையை அறவே யொழித்து மரண சந்தர்ப்பத்தில் சிவத்தியானஞ் செய்ய வேண்டுமென்பது அவசிய மாயிற்று. இங்ஙனமின்றிப் பல பற்றுக்க

ளோடும் பிராணன் பிரியுமாயின் அவற்றிற் கேற்ப ஜெனனங்க ளேற்பட்டு நெடுங்காலம் பிறந்திறந் துழலற்கே ஏதுவாவ ரென்க. ஈண்டு பிள்ளையாரும் அச்சமயம் காணங்கள் ஏதும்மருண்டுபோமோ வென்று எம்பெருமானை வேண்டினரென்ப தாயிற்று. ஆயினும் சுவாமிகள் பற்றற்றவராதலின் அவ்வாறு நிகழாவாம். இதனுல் வேண்டுதல் செய்தல் தனக்கெனவாயினும் உண்மையில் பிறர்க்குப் பயன் படுமாறே தன்மேலேற்றிக் கூறினரெனினும் பொருந்தும் என்க. "மஞ்சடைவான நிறத்தோனயன் முதல்வானவர்க்கா, நஞ் சடையாள மிடுமிடற்றோய் கங்கைநண்ணுகின்ற, செஞ்சடை யாய்நின் திருப்பெயராகச் சிறந்தவெழுத், தஞ்சடையார்கண்கள் பஞ்சடையாமுன் னறிவிலரே." என்றனர் அருட்பிரகாச வள் ளலும். (65)

சுடப்படுவா ரறியார்புர மூன்றையுஞ் சுட்டபிரான்
திடப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பின்
நடப்பவர்பொற்பத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக் கிழிப்பதுவே.

(பொ - ரை.) ஏ மனமே! திரிபுரமெரி செய்த செல்வனை யும், வானுறவோங்கிய பெருமதில்கள் சூழப்பெற்றுள்ள அழகு வாய்ந்த திருவொற்றி க்ஷேத்திரத்தில் விளங்கியருளும் தியாகராஜப் பெருமான்றன் திவ்ய திருவீதியில் செல்லும் மெய்யடியவர்களது திருவடிகள் நஞ்சிரம்பட நன்கு விழுந்து கிடத்தல்தான் பிரமதேவன் எழுதிய விதியேட்டைக் கிழித்தெறிவதாகும். இந்த முறையை அறிவிலிகள் உணர்தற்கின்றி வீணாக மாய்கின்றனர்.

(கு - ரை.) சுவாமிகள் இவ்வாறாக ஒற்றி க்ஷேத்திரத்தைச் சிறப்பித்தது மிக்கதக்கதுவே. என்னை? அந்நகர் திருவீதிக்கண் இதுகாறும் தரிசனார்த்தமாக எழுந்தருளிவந்த உண்மைப் பக்தர்,

யோகர் ஞானியர் மற்றும் தபோநிட்டர்கள் எண்ணிறந்தோ ராவார்கள். அவர்களது திருவடிகள் அவ்வீதியின் மீது பட்டதன் விசேஷமாக அத்திருவடித்துகளானது வீதியிற்படிவார்மீது பரிசப்படலான் அவ்விசேடங் கொண்டு விதியேட்டைக் கிழித்திடுமென்றது கவனிக்கத் தக்கதாம். (66)

திருவிடை மருதூர்.

காடே திரிந்தென்ன காற்றேபுசித் தென்ன கந்தைசுற்றி
ஓடே யெடுத்தென்ன வுள்ளன்பிலாதவ ரோங்கிவிண்ணோர்
நாடே யிடைமருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

(போ - ள.) மெய்யன்பில்லாத உள்ளத்தவர்கள் வனத்திடையே வாழ்ந்தாலென்ன? அவர்கள் வாயுபக்ஷணிகளா யிருந்து பிழைத்தா லென்ன? தவிர, கந்தலணிந்து பிக்ஷாபாத்திரங் கொண்டு உபாதானம் பெற்றாலென்ன? இவைகளால் ஒருசிறிதும் பிரயோசனமில்லை. மேன்மையதான தேவலோக மெனவே கூறும்படியான திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானிடத்தே மெய்யன்புள்ளவர்கள் மனையாளோடும் வீட்டிலேயே யிருப்பினும் உண்மையான ஞானப் பேற்றினால் உண்டாகக் கூடிய மோக்ஷானு கூலம் பெறுவர்கள்.

(கு - ள.) சிவபெருமானிடத்தே உண்மை யன்பில்லாதவர்கள் தவவேடத்தோடும் காட்டிலிருப்பதைப் பார்க்கிலும், மெய்யன்புடையராய் மனைவிமக்களோடும் இல்லறத்தி லிருந்து நாட்டில்வாழ்தலே ஞானந் தருமென்பதாயிற்று.

மனத்தகத் தழுக்கறாத மௌனயோக ஞானிகள்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கறார்

மனத்தகத் தழுக்கறுத்த மௌனயோகர் வேசியர்,
மூலத்தடத் திருப்பினும் பிறப்பறுத்து நிற்பரே.

என்ற சிவவாக்கியர் கருத்தும் மேற்பாசுரத்தைத் தழுவி யுரைக்கின்றது. "வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன், வேட நெறிநின்றோர் வேடமெய் வேடமே" என்றார் திருமூலநாதரும். ()

தாயும்பகைகொண்ட பெண்டீர்பெரும்பகை தன்னுடைய
சேயும்பகையுற வோரும்பகையிச் செகமும்பகை
ஆயும்பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினால்
தோயுநெஞ்சே மருதீசர்பொற்பாதஞ் சுதந்திரமே.

(பொ - ரை.) பொருளிச்சையால் தேட்டஞ்செய்து சம்சார பந்தத்திலே கட்டுண்டு ஜீவிக்கும் நெஞ்சமே! இச்செக வாழ்வைப் பற்றி நன்கு ஆராய்ந்து பார்க்கும்போது, உள்ள பெரும்பொருளானது போய் வெறும் ஆளாயிருக்க நேருமாயின் அப்போது பெற்று வளர்த்த தாயாரும், மணம்பெற்ற பெண்டீரும், பிறந்த மக்களும், சுற்றத்தார்களும், நண்பர்களும், மற்றுமுள்ளோரும் ஆக அனைவரும் பெரும்பகையினரா யொதுக்கி விடுகின்றார்கள். ஆகவே இவனுக்குச் சர்வ சுதந்தரமாயுள்ள தெதுவென்று பார்க்குங்கால் இவனால் அன்பு செய்யப்பெற்றுள்ள திருவிடை மருதூர் வாழும் சிவபிரானது திருப்பாதங்களே துணையாகும்.

(கு - ரை.) மேற்பாசுரத்திற் கிசைய நமது ஔவை மூதாட்டியார் கூறியருளியுள்ள வாக்குண்டாம் என்னும் மூதுரையிலே, கல்லானேயானாலு மென்பதாதியாயுள்ள செய்யுளிலே பிற்பகுதியாம் 'இல்லானை யில்லாளும் வேண்டா ளீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லாதவன் வாயிற் சொல், என்றதே சாலுமென்க. 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை' யென்றார் வள்ளுவரும். (68)

திருக்கழுக் குன்றம்.

காடோசெடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிட
நீடோய் கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

(போ - ளா.) வானோக்கி வளர்ந்துள திருக்கழுக்குன்ற மேவி யருளும் எம்பெருமானே! அடிமையின் தேகம் நிலைதவறுமிடம் காட்டின்கண்ணோ, அன்றி மரநிழலிலோ, சமுத்திர தீரத்திலோ, சிறப்புள்ள நாட்டிலோ, நகரத்தின் கண்ணோ, அன்றி நகரமத்தியிலோ, நன்மைவாய்ந்த வீட்டிலோ, அன்றி வெளிப்பக்கத் திண்ணை மீதோ, எங்கோ வறிந்திலன்; ஆயினும் தேவரீரது திருவடியே துணையெனக் கொண்டுளேன்.

(து - ளா.) பலரும் நாடிவாழ்தலின் நாடென்றார். தாழ்மைக் குரியசொல், தமியேன் என்பதாயிற்று. உடற்கு மெய்யென்ற பெயரிருப்பினும் பொய் பொய்யே; உயிர்க்கு மட்டும் 'குற்றாலத் துறை கூத்தனல்லால் நமக், குற்றாருளரோ' என்ற தேவாரபிரகாரம் உயிர்த்துணையாகத் தம்மையே கொண்டுள்ளேன். என்று சுவாமிகளார் திறம்பட குறித்துள்ளார் போலும். (69)

திருக்காளத்தி.

பத்தும்புகுந்து பிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்னகாண் கயிலாபுரிக் காளத்தியே.

(போ - ளா.) தென்கயிலை யென வழங்கும் திருக்காளத்தி மலைக்கண் எழுந்தருளிய சிவபரஞ்சுடரே! அன்னையின் உதரத்தில்,

பத்துமாதங்களிருந்து அதன்பின்னே பிறந்துவளர்ந்து, பட்டு வஸ்திரங்கள் உடுத்தி முத்துமாலை பவளமாலைக ளணிந்து பலவாறுக ஓடித்திரிந்து உலகபோகங்களை யனுபவித்து முடிந்தபின்னர் இறந்துபோயுள்ள பிணத்தண்டை இனிச்சாக விருக்கின்ற பிணங்களார் சப்தித் தழுகின்ற காரணமென்னையோ?

(த - ரை.) காளத்தியைத் தென்கயிலையென் றுலகர் கூறன் மாத்திரமன்று; புராணக்கொள்கையு மப்படியே யென்க. இனிச் சாகுமட்டுங் கிடந்து துன்புற்றுப் போக விருப்பவர்கள் தங்களுக் கழாது இறந்து துன்பந்துலைந்தோரைச் சூழ்ந்தழுவதும் என்னபுத்தியதோ வென்பதாகக் கத்துங் கணக்கென்னகா ணென்றனர் பிள்ளையார். "முன்னேபலர்க்கழுது அவர்கள் திரும்பிவராமை கண்டும் பின்னு மழுகின்ற பேதமையர்க் கென்ன பேசுவது" என்ற கருத்தினை யடக்கியதாய்க் கூறிய ஆண்டாண்டு தோறு மழுதுபுரள்வதில் பயனின்றென்றும், அவ்வா றழுவது பெரும் பேதமையென்றபடி விளங்கலாயிற்று. (70)

பொன்னாற் பிரயோசனம் பொன்படைத் தார்க்குண்டு
பொன்படைத்தோன்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக் கங்கேதுண்டத்
தன்மையைப்போல்
உன்னாற் பிரயோசனம் வேணதெல்லா முண்
டுனைப்பணியும்
என்னாற் பிரயோசன மேதுண்டு காளத்தி
யீசுரனே.

(பொ - ரை.) திருக்காளத்தி மேவிய சிவபரஞ்சுடரோய்! பொன்னுள்ளார் அதன் பலாபலனை யடைவர்; பொன்னுடையோ

ஞல் அப்பொன்னுக்கு என்ன பயனுளது? அதே போன்று தேவரீரால் அடிமைப் பெறவேண்டிய பலன் மெத்தவுண்டு; தேவரீர்க் கடிமை செய்யும் என்றல் தேவரீர்க் கென்ன வுண்டு. ஒன்றுமில்லை யென்றபடி.

(ரு - ளா.) பரமசிவன் சுகத்திற் காஸ்பதன். அவனை அடைந்தார்க்குச் சுகமளிப்பன். இப்பொருளை 'சங்கரன்' என்னும் நாமம் குறிக்கும். ஆகவே அது போன்று நம்மால் அவனுக்குரியது ஒன்று மின்றும். சாக்ஷியாக, மேகங்கள் கடல் நீரைக்கொண்டு அதிலுள்ள உவரை நீக்கி நன்னீராக்கி நாம் முதல் சர' அசரங்களாகிய சர்வமும் உஜ்ஜீவிக்க எதுப்படுகிறது. ஆனுலோ, நம்மால் அம்மேகங்களுக்கு யாதொரு கைம்மாறுவது அல்லது நன்றியறிதலாவது இல்லை. இத்தன்மை தான் சிவபெருமானுக்கும் எனத்தெரிதல் முக்கியமான விஷயம். இதைத்தான் சுவாமிகள் 'என்றற் பிரயோசன மேதுண்' டென்று கூறினர். ஆகவே, காருண்ய சொரூபனுயுள்ள கைம்மாறு வேண்டா கடவுளை நாம் எவ்வளவு தூரமறிந்து வழிபட்டுத்துதி செயல் வேண்டுமென்பதை நன்கு ஆராய்ந்து அவ்வழி நிற்றல் வேண்டும். (இதற்கு அவர் கூறியன தக்க சான்று.) (71)

வாளான்மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேனல்லன் ஞெண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந் தப்பவல்லேனல்ல ஞனினிச்சென்
ருளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பருக்கே.

(போ - ளா.) (இறைவன் வேண்டுதலுக் கிசைந்து) கத்தி கொண்டு பிள்ளையை அறுத்துச் சமைத்து அவர்க்கு முன்னம் சிறுத்தொண்டன் அமுதூட்டினதுபோல் நான் செய்ய சக்தியும் பக்தியு முள்ளவனல்லன். மற்றும், முன்னம் திருநீலகண்ட நாயனுர் தன் இல்லாள் சொல்லிய சபதத்திஞலே இளம்பிராய இன்னலத்தினை

யொருக்குவிக்க பக்தி வைராக்கிய முள்ளவனு மல்லன். முன்னம் கண்ணப்பன் ஐந்து தினங்கள் பக்தி தொண்டு புரிந்து ஆருவது தினத்தில் தன் கண்ணைத் தோண்டி ஆண்டவனுக்குச் சாத்தியருள மனமொத்த வன்மையைப்போல் யான் செய்ய வன்மையுள்ளவனல் லன். இவ்வளவு திடம் பெருச்சிறியேன் காளத்தியப்பருக்கு ஆட் படுவ தெவ்வாரே !

(கு - ரை.) மேற் செய்யுளில் மூன்று பெரும்பக்தர்களை விள க்கியருளியுள்ளார் பிள்ளையார். அம்மூவர்களும் செய்த பக்திச் செயல் மிக்க அரியன வென்பது சொல்லாமலே விளங்கும். எப்படி? இவ்வணம் மூவர்களும் செய்தன போன்று அவ்வளவு அரிய செயல் களால் யான் பக்தி சாதிக்க வில்லையே யென்று வருந்தின ரென்பத னுனே நன்கு விளங்கும் அரிய பக்தி யென்பது. அவ்வரும் பக்தி யைத்தானுஞ் செய்தற் கில்லையே யென்று வருந்தினர் போலும். இம்மூன்று தொண்டர்தம் சரிதம் பெரிய புராணத்திற் கூறி வருத லறிக. இதனுல் பக்தியின் வலிமை நன்கு விளங்கலாயின. பற்றற்ற வாறே பரனருட்சித்தியாகும். அச்சித்தியான் முத்தி யெய்தப் பெறலா மென்க. (72)

முப்போதுமன்னம் புசிக்கவுந்தூங்கவு மோகத்தினுற்
செப்பொத்திளமுலை யாருடன்சேரவுஞ் சீவன்விடும்
அப்போது கண்கலக்கப்படவும் மமைத்தாயையனே
எப்போது காணவல்லேன் றிருக்காளத்தியீசுரனே.

(பொ - ரை.) இறைவனே! காளத்தி மேவிய கண்ணுதலே! முக்காலங்களிலும் அன்னம் புசிக்கவும், நித்திரை செய்யவும், மாதர் மேல் வெறியால் செப்புக்கிண்ணம் போன்ற பக்குவதனங்களுள்ள மங்கையை மருவவும், தேகவியோக மாம்போது மனம் வருந்திக்கண

கலக்க முறவுஞ் செய்தனே; இனியான் எக்காலத்திலே தேவரீர் தம் திருவடியைக்காண வல்லனுவேன் என்பதாம்.

(சூ - ணா.) தினமொன்றிற்கு மூன்று வேளைகளிலும் புசித்தும், நித்திரை செய்தும், மற்றும் மாதர் முயக்கத்திருந்தும் காலங் கடத்திவரின் அவ்வளவுக் கவ்வளவு பின்னரேற்படுந் துன்பத்திற் காட்பட்டல்லவோ தீரவேண்டும்! இதற்கென் செய்வதென்று மன வருத்தத்தோடுங் கூறினரென்க. கொழுமையுள்ள உணவருந்தி சரீரத்தில் மெத்ததிமிரேற்றி, அதனுல் நல்ல மங்கையரை நாருந் தோலுமாங்காறும் புணர்ந்து பகலெலாந்தூங்கிப் பொலபொலெனப் பிள்ளைகளைப் பெற்று ஈற்றில் தேகவலுவற்று பக்தியென்பதே தெரியாது வெறுங்கசடனுய்ச் செத்துச் செத்துப்பிறந்து பிறந்திழிதலின் பயனென்றுமின்றென்பதைத் தன்மேலேற்றி, உக உபகாரமாக சுவாமிகள் கூறினுரெனவறிதல் வேண்டும். இதனுல் இப்புலையாட்டொழிந்து ஐம்புலனடக்கி ஆசையைத் தொலைத்து நம்பனை நினைத்து நாளுந்துதித்து வெம்பவமொழித்து வீடுறச் செய்தலே போந்த நெறியென்பதனைக் குறிப்பாற் கூறினர் நம் சுவாமிகளென்றறிதற் பாற்று. ஆகவே, ஆகாரம், மைதுனம், நித்திரை இம் மூன்றையும் நாளடைவில் மிதப்படுத்திச் சாதகம் செய்தல் மெத்த வுத்தமமாகும் என்பதைக் கடைப்பிடித் தொழுகல் அத்யாவசியகம்.

இரைக்கேயிரவும் பகலுந்திரிந்திங் கிளைத்துமின்னுர்
அரைக்கேயவலக் குழியருகேயசும் பார்ந்தொழுகும்
புரைக்கேபுழலுந் தமியேனையாண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல்லால நிழற்கீழமர்ந்தருள் காளத்தியே.

(போ - ணா.) பொன் முகலியாற்றின் தீரத்திலும் கல்லாலவிருக்ஷத்தடியிலுமாக எழுந்தருளியுள்ள காளத்தி நாதனே! ஆகாரத்தையுத்தேசித்தே இராப்பகலோயாது பலவிடங்களிலும் ஓடியலைந்து

வாடிவதங்கி பெண்மணியினது மின்னலொத்த இடை நடுப்புழை யென்பதின்வழி சென்னீர்ச் சீயும் குழிப்புண் வெறிகொண்ட ஏழைமதிப் பேதையை ஆட்கொண்டருள்வீர்கள்.

(சு - ரை.) மேன்மையான மனிதப்பிறவியில் பிறந்தும் அத னல் அடையத்தகும் ஆன்மலாபமாகிய இறைவன் திருவடித்தியா னத்தை அடியோடுமறந்து உள்ளளவும் மண்ணென்றும் பெண் ணென்றும், பொருளென்றும் அலமலேந்து அலேந்துச்சாகும் பே யொத்தாரைச்சுட்டியே "நடலைவாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர், சுடலைசேர்வது சொற்பிரமாணமே, கடலினஞ்சமு துண் டவர் கைவிட்டால், உடலினூர்கிடந் தூர்முனிபண்டமே." என்ற அப்பர்தம் அறமொழிக் கொப்பென முடியுமே யென்றனுதபித்து மேற்பாசுரத்தால் மக்களிற் சிலர்களைத் தூண்டி யெச்சரித்தாராக. வழுக்குமிடத்தை அசும்பு என்றனர். புரை-அல்குற்றுவாரம். கல்லா லென்பது-கன்மய ஆலவிருக்ஷம். இவ்விருக்ஷ நிழலிலேயே ஸ்ரீ சிவ பெருமான் தக்ஷிணா முகூர்த்தமாய் விளங்கி வீற்றிருந்தருளினர். காளத்தியில் பொன்முகலியாற்றின் கரையில் மேவியுள்ளது. காளத் தியே - எம்பெருமான் எழுந்தருளியுள்ள அத்தலத்தின் பெயரே அவர்க்கும் ஆகுபெயராய் விளங்குகின்றது. (74)

நாறுங்குருதிச் சலதாரைதோற்புரை நாடொறுஞ்சீய்
ஊறுமலக்குழி காமத்துவார மொளித்திடும்புண்
தேறுந்தசைபிளப் பந்தரங்கத்துள சிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய் திருக்காளத்தி யீச்சுரனே.

(பொ - ரை.) திருக்காளத்தியிலே மேவிவாழும் சிவபாஞ் சுடரே! தீயவாசம் வீசும் இரத்த நீர் வரும் வாய்க்கால், தோல் துவா ரம், தினமும் ஒர்வகை நீர் உற்பத்தியாகக் கூடிய ஓர் குழியாம்...

ஆசையைத் தூண்டும் துவாரம், மறைவாயுள்ள ஓர் வகைப்புண்ணிடம், விம்மிய தசை வெடிப்பு, இவ்வித மர்மஸ்தானத்தின்கணுள்ள கேவலமாய அற்பச்சுகத்தை யொழித்துப் பேரின்ப முறுவான் எம்மானது திவ்யதிருப்பாத மலரைத் தந்தருள்க.

(கு - ரை.) மேற்பாசுரத்தில் முக்கியமாக மாதரார் நிதம்பத்திழிவும் அதனாலுறும் சுகத்தின் கீழ்மையும், ஆண்டான் திருவடிப் பெற்றியும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். ஏன்? நம்மனோர்க்கேயாம். (15)

திருக்கைலாயம்.

கான்சாயும்வெள்ளி மலைக்கரசேநின் கழனம்பினேன்
ஊன்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய் கரவூரனுக்கா
மான்சாயச்செங்கை மழுவலஞ்சாய வளைந்தகொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்த்த சிவக்கொழுந்தே.

(போ - ரை.) நறுமணங் கமழும் திருக்கயிலாய மலைக்கிறைவனே! கரவூரன்பன் காரணமாக தம்திருக்கரங்களிலுள்ள மான் சாயவும், மழுவானது மற்றோர் பக்கஞ் சாயவும் திவ்யதிருமுடிக்கண் சூடிய கொன்றை மாலையின் தேன் சிந்தவும் தேவரீரது திருவடிவத்தைச் சாய்த்தருளிய சிவக் கொழுந்தே! இவ்வடிமை தேவரீரது திவ்யதிருவடிக்கமலங்களை நம்பிக் கொண்டுள்ளேன்; மாம்ஸமாகிய ஊனுடலாம் சரீரத்தை ஒழித்து (நித்திய ஞானதேகத்தைக் கொடுத்தருள்வாய்.)

(கு - ரை.) இப்பாசுர முதல் மேற்கூறியுள்ள சிலபாசுரங்களிலும், தன் சரீரத்தில் வெறுப்புத் தோன்றி அதையொழித்து விடுயென்றே வேண்டிவருகிறார். ஏன்? இந்த ஆபாச அநித்திய தேகத்தை அவரொழிப்பின் வேறு ஞான தேகத்தைக் கொடுத்தே தீர

வேண்டு மென்பது கொண்டு அவ்வாறு அடுத்தடுத்துக் கூறுவாராயி னரென்க. அன்றி இவ்விரத்த மாம்ஸாதி சரீரத்தால் எதுந்தீங் குறுமோ வெனும் ஐயப்பாகு முண்டாகலாம். கரவூராவது திருவிரி ஞ்சிபுரமாகும்; அத்தல நாதர்க்கு அபிடேகம் புரிபவர் சிவசருமராம் சிறுபிராமண சுவாமிகளானது பற்றி அவரது சிரமத்துக்காற்றுது தாம் தமது சிரத்தைச் சாய்த்தருளினர். இவ்வுண்மை அத்தலபுரா ணங் கொண்டறிக. இந்த ஊனுடல் இனி வாராவகை செய அப் பிரபுவாலன்றி முடியாதாகலான் அடுத்துக் கூறிவருவதுங்காண்க. நமக்கும் அதுவழியாகவே தூண்டினராகக் கொண்டு எம்பெருமானை இடைவிடாது வணங்கித் துதிசெய்து ஞானவடி வெய்தல் வேண்டு வதே முறையாகும் என்க. இக்கருத்துடையவராகிய ஓரடியார், பட முடியாதினித்துயரம் படமுடியாதரசே பட்டதெலாம் போதுமிந் தப்பயந்தீர்த்திப் பொழுதென், னுடலுயிராதிய வெல்லாம் நீயெடு த்துக்கொண்டுன் னுடலுயிராதியவெல்லா முவந்தெனக்கே யளிப் பாய், வடலுறுசிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண் மணியே யென் குருமணியே மாணிக்கமணியே, நடன சிகாமணியேயென் ன வமணியே ஞானநன்மணியே பொன்மணியே நடராஜமணியே" என்றருளியுள்ளார் அருட் பிரகாசவள்ளலாரும். (76)

இல்லந்துறந்து பசிவந்தபோதங் கிரந்துதின்று
பல்லுங்கறையற்று வெள்வாயுமாயொன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும்பொருளு மிழந்துசுகானந்தத் தூக்கத்திலே
அல்லும்பகலு மிருப்பதென்றோ கயிலாயத்தனே.

(பொ - ரை.) திருகயிலாசத்தில் வீற்றிருந்தருளும் சிவபரஞ் சுடரே! முதற்கண் வீட்டை விட்டு வெளிப்போந்து, பசி யேற்படு மேல் பிச்சைவாங்கிப்புசித்து, பல்லில் தாம்பூல கறையொழித்து வெள்வாயாய், ஓர் பதார்த்தத்திலும் பற்றின்றி, சொற்பொருள் கட

ந்து, அவைகட்கு மேலே தோன்றப்படும் சுகானந்த நித்திரை இராப்பகலும் நீங்காது செய்வது என்றோ!

(கு - ரை.) வெண்காட்டடிகளார் நிட்டாபரர் அவர் தம் நிட்டையின் அநுபவானந்தம் முதிர முதிர இல்லத்தார் இடுக்கணு முதிரலாயின; நிட்டைக்குக் கஷ்டம் வர வெளிப் போந்து தவமியற்று வாராய்ப் பசிவந்தபோது அங்கங்கே ஏற்றுண்ணலாயினர். இக்கருத்தைச் செய்யுளில் ஸ்பஷ்டமா யோதி விட்டனர். துறவறத்திற்குத் தாம்பூலாதிகளும் அதனால் பற்கறையும் அவலக்ஷண மாதலானும் வெள்வாயுமா யென்றனர். பற்றற்றகண்ணே சொல்லுதலும் பொருளும் விரோதமாதல் கொண்டு அதனை யொழித் தென்றனர் போலும்; ஞானானந்தம் சதானந்தமாகலான் அல்லும் பகலும் சுகானந்த நித்திரை யென்றனர். (77)

சினந்தனைபற்றுப் பிரியமுந்தானற்றுச் செப்கைபற்று
நினைந்ததுமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனியேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற
வனந்தனிலென் றிருப்பேனத்தனே கயிலாயத்தனே.

(போ - ரை.) திருக்கயிலாயவாச சிவபரஞ்சுடரோய்! கோபமொழிந்து, ஆசையகற்றி, வேறெச்செயலு மின்றி, யேர்க்கனவே யெண்ணிய தொழித்து, மறப்பு மின்றி, சங்கற்பமு மில்லாது தனிமையாகி சிவானந்தத்தூக்கமெய்துகின்ற சுகாரம்பம் எக்காலம் கூடும்?

(கு - ரை.) உலக காரியத்தும் குடும்ப காரியத்தும் தன்மனம் போன்று ஒத்து நடவாவிடத்துண்டாகும் கோபம். காரணம், ஆசாபாசம் நீறைவேறாமையேயாம். ஆகவே சித்த சமாதானமென்னும் சாந்தத்தினாலே அக்கோபத்தை வரவொட்டாது அடக்குவர் சான்றோர். அதனை இப்பெரியார் அவசியமென்றார். இன்னும் சங்கற்ப

விகற்பத்தையும் அப்படியே நிகிர்ஷ்டம் செய்துவிட வேண்டுமென்றும் தீர்மானித்தனர். மற்றும் நாளைக்கு பின்னுக்கென்றும் பிரவிர்த்தி வியாபாராதிகளையும் அவ்வாறே ஒழிப்பின் பின்துன்பமில்லையென்பதும் அவர் கொள்கை. இவ்வளவும் ஏன்? பின்னர் எதிர் நோக்கமாயுள்ள சதானந்த நிட்டைக்கு இடையூறு உண்டாகாமைக் கென்றே யென்பாம். இதனால் சிந்தை ஏகாக்கிரமா யிருப்பான் நம் கொள்கையாயிற்று. ஆகவே நமக்கும் அதுவழியாக் கொள்வதுதான் உணர்வின் தேற்றமாகும். சர்வசாரமாக மனோநாசஞ் செய்து 'தன்னையறிந் தின்பமுறும்' சிவானந்தப் பேற்றைப்பெறுமாறே அங்ஙனம் "தனியேயிருந்து ஆனந்தநித்திரையை அவாவினதாக நன்குவிளங்கு கின்றது. 'தன்னையறிந்தான் தலைவனையுமறிவான்' என்றும், "தன்னைத்தான்கண்டால் தனைப்படைத்தோனையும் இன்னவித மென்றறிந் தின்புறலாம்" என்றும், "தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே யொரு தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே" யென்றும் கூறினர் அருட்பிரகாச வள்ளலாரும். இதனால் இன்னுமோர் விஷயம், அதாவது ஆனந்த நித்திரை புரியுமிடத்தினை வனமென்றார். ஏன், அது ஊனக்கண்ணாலன்றி ஞானக்கண்ணால் அதாவது அறிவாலறிந்து ஆனந்திப்பதே. அதுதான் 'தூங்காமற் றூங்குஞ் சுகம்' என்றார் பெரியார். அவ்விடத்தில் அவ்யாகிருத வியாபார பிரகிருதிகள் செல்லக் கூடாமைபற்றியே வனமென்றார். (78)

கையாரவேற்றுநின் றங்ஙனந்தின்று கரித்துணியைத்
தையாதுடுத்துநின் சந்நிதிக்கேவந்து சந்ததமு
மெய்யாரநிற்பனிந் துள்ளேயுரோமம் விதிர்விதிர்ப்ப
ஐயாவென்றோல மிடுவதென்றோ கயிலாயத்தனே.

(பொ - ரை.) கைலைமலைவாசா! யான் கையடங்கப் பிச்சையேற்று அவ்விடத்தே புசித்தும், கேவல அழுக்குத் துணியை தையல்

செய்யாதணிந்தும், அதன்மேல் தேவரீரது திவ்ய சந்நிதானம் வந்தும், நீண்டநேரம்வரைச் சரீரம் பூமியிற் கிடக்குமாறு தொழுதும், உள்ளே உதயமாகும் ஆனந்தத்தால் மயிர்க்குச்சும் எடுப்ப, 'ஐயனே' யென்று ஓலமிட்டழைத்து முறையிடலும் என்றோ ! அறியேனே!

(சு - ரை.) உத்தம சாதுக்களுக்கு முக்கியமாக வேண்டுவது உடைகோவணமும் ஏகதேசம் கிடைத்த வுணவுமே யாதலால் அதனை ஆண்டவன்பால் வேண்டலு மாயினர். மற்றொன்றும் வேண்டிலேன் என்றபடி. அதன்மேல் அவரைப்பணிவது விரைவின்றி நீண்டநேரம் அதாவது ஆசையடங்க அட்டாங்கமாக நமஸ்கரித்துக் கிடந்து என்றதும் அப்படியே. அதன்மேல் 'ஐயனே' யென்று ஓலஞ்செய்தழைத்து ஆனந்தமாக மெய்சிலிர்ப்பவும் திருப்தியடைவது தனக்கினியதான காரியமெனத் தெரிதல்வேண்டும். ()

நீறார்த்தமேனி யுரோமஞ்சிலிர்த்துள நெக்குநெக்கு
சேறாய்க்கசிந்து கசிந்தேயுருகிநின் சீரடிக்கே
மாறாத்தியானமுற் றானந்தமேற்கொண்டு மார்பிற்கண்ணீர்
ஆறாய்ப்பெருகக் கிடப்பதென்றோ கயிலாயத்தனே.

(போ - ரை.) திருக்கயிலைமலை மேவிய தேவதேவே ! திருநீறணியப்பெற்ற சரீரத்தில் மயிர்க்குச்செடுப்ப மனம் கட்டுவிட்டுக் கரைந்து கண்ணீர் ஒழுகிச் சேறாக வுருகித் தேவரீரது திருவடியை நீங்காத் தியானஞ்செய்து இன்பெய்தி கண்ணீரும் ஆனந்தம்பெருக நிலவரமாவது என்றோ ?

(சு - ரை.) என்னன்புருக்கி யிறைவனை யேத்துமின்
முன்னன்புருக்கி முதல்வனை நாடுமின், என்றதிருமூலர் திருவாக்கிற் கிணங்க சுவாமிகளார் தாம் அன்பாலன்றி அவனடி காண்டற் கிசையாவெனக் கொண்டு அதிதீவிரமாகச்சிவசின்ன

இலக்ஷணாதிகளோடும் விரைந்து விரைந்து ஐக்கியமாதற்கு உரியகாலம் இன்னும் எவ்வளவு நாளிருக்கின்றனவோ வென்று அவனை நோக்கி வருந்தி விளிக்கின்றனர். (80)

செல்வரைப்பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக்காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தின்
எல்லையிற்புக்கிட வேகாந்தமாயெனக் காமிடத்தே
அல்லலற்றென் றிருப்பேனத்தனே கயிலாயத்தனே.

(பொ - ரை.) யெம்பெருமானே! கயிலைத்தலைவா! தினந்தவறாது பிரபுக்களைத் தொடர்ந்தேகி என்துன்பங்களை யெல்லாமெடுத்தோதியும் பல்காட்டிக் கெஞ்சியும் வருந்தாதபடிக்கு, என்னைச் சிவானந்த வெளிக்கண் ணேகுவித்து ஏகாந்தமாய்த் துன்பமின்றியிருக்குமாறு என்றோ அநுக்ரகிப்பாய்? என்றோ சுகானந்த நித்திரைகொள்வேன்.

(கு - ரை.) அநித்திய செல்வமாகிய பொருளுடையாரிடம் போய்ப் பலவாறாகத் தாழ்ந்து மனம்வருந்துவதைக் காட்டிலும் சர்வவிபுவாயும் காருண்யமே சொரூபமாயுங் கொண்டுள்ள சிவபெருமானையே யடைந்து மேற்கவலையை மொழிந்து வாழ்தலே நன்றென்றபடி அல்வண்ணலார்க்கே குறையோதினர் போலும். இதனால் அதி தீவிரதரப் பக்குவத்தில் வந்துகொண்டிருப்பதாக நன்கு புலனாகின்றது. (81)

மந்திக்குருளையொத் தேனில்லைநாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ்சிந்தையை யானென்செய்வே னெனைத்தீதகற்றிப்
புந்திப்பரிவிற் குருளையையேந்திய பூசையைப்போல்
எந்தைக்குரியவன் காணத்தனே கயிலாயத்தனே.

(போ - ரை.) சிவபெருமானே! வெள்ளிமலைக்கரசே! அடிமையேன் கேவலம் குரங்குக் குட்டியை நிகர்த்தவனல்லன்; இக்கீழ்மையேன் வழக்குணர்ந்தும் ஜீவன தேட்டத்திற்குரிய காரியார்த்தங்களை வழக்கம்போன்று எண்ணுநின்ற என்மனதை யான் செய்வதென்ன? ஆகலான் இவ்வடிமையை தீயகாரியாதிகளினின்றும் பிரித்து மனசில் தோன்றும் அன்பினாலே தன்குட்டியைத் தானே கவ்விச் செல்லும் பூனையொத்துக் காத்தருள பரம பிதாவாயுள்ள தேவரீர்க்கே அடிமை பூண்டுள்ளேன்.

(கு - ரை.) குட்டியிட்ட குரங்கு ஓரிடஞ் செல்லும்போது குட்டியைத் தான் எடுப்பதில்லை; குட்டி, தாயின் வயிற்றில் பற்றிப் பிடித்துக் கொள்ளும். இதனைச் சாத்திராராய்ச்சியார் மர்க்கட நியாய மென்பர். இந்த குரங்கு நியாயம்போன்றே ஜீவான்மாக்கள் தன்னிச்சையைக் கொண்டே கடவுளை யடைவதின்றெனத் தெரியும். நிற்க; குட்டியிட்ட பூனை ஓர்பாற் செல்லுகையில், குட்டியைத் தன்னிச்சை கொண்டு வாயில் கவ்விச் செல்லும்; இந்தபூனை நியாயம் போன்று பரசிவத்தின் திருவருளாலேயே சீவாத்மாக்களை அபிமானித்து அதாவது கருணைபூத்து நற்பதவியிற் சேர்க்கு மென்பதாம். இக்கருத்து கொண்டுதான் 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்றார் சிவபுராணத்தில் மணிவாசகப் பெருமான். மந்திக்குருளை - குரங்கின் குட்டி. பூசை - பூனை. இதனால் சுவாமிகள், தன்னறிவின் சக்தியாலாயினும் அன்றி தவத்தின் சக்தியாலாயினும் கடவுளடியை யடையவியலாது, அவனருள்கொண்டேதான் அவனைக் காணத்தகும் என்பது தோன்ற கூறிநின்றார். (82)

வருந்தேன்பிறந்து மிறந்துமயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற் புகுகின்றிலேன்புகழ் வாரிடத்தில்
இருந்தேனினியவர் கூட்டம்விடேனிய லஞ்செழுத்தாம்
அருந்தேனருந்துவன் நின்னருளாற் கயிலாயத்தனே.

(பொ - ரை.) திருக்கயிலாய நாதனே! இனியான் ஜெனமித்தும் மரித்தும் தம்மருள் கொண்டு சிறிதும் துன்ப மென்பதையே அடையப்பெறேன்; அன்றி ஐம்புலாதிகள் வழிபற்றி வேறெவற்றினும் மயங்கிப் போகேன்; மற்றும் நரகத்திலும் விழமாட்டேன்; எதனாலெனிலோ, தேவரீரது திவ்யதிருவடிக் கமலங்களையே துதித்து வாழும் உண்மையடியவர் திருக்கூட்டத்திற் சேர்ந்துள்ளேன். மகிமை தங்கிய பஞ்சாக்கரமாகிய அருந்தேனை அருந்துவேன் ஆதலினாலென்க.

(கு - ரை.) "என்னை ஐம்புலாதிகள் மறித்திழுத்துப் பகிர்முகப்பட்டு விஷயாதிகளில் அழுத்தி புத்தியைக் கெடுமாறு செய்கின்றமையாலே'' எனத்தெரிவதால் 'மயக்கும் புலன்' என்றார் போலும். "ஐம்புல வேடராற் றனைமறந்து, கரண மென்னுங் கடிகுரன் ஞாளி, சூழ்தரப்போதத் தனிவிற் பிடித்திட்டு'' என்றனர் ஞானவள்ளலும். ஸ்ரீபஞ்சாக்கரத்தை அப்பர் சுவாமிகள்:—

இல்லக விளக்கது விருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியாயது
பல்லக விளக்கது பலருங் கொள்வது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. என்றருளியதறிக. (83)

மதுரை.

விடப்படுமோவிப் பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோநின் னருளின்றியேதின மேயலையக்
கடப்படுமோவறப்பர் வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்க நாதாசவுந்தர பாண்டியனே.

(பொ - ரை.) சொக்கலிங்கேசா! சோமசுந்தர பாண்டினே! சர்வவிபுவாய் தேவரீரது திவ்ய திருவருட்பிரசாதங் கைவராதவரை

யில் இம்மண்ணுலக மாயாந்தகார வாழ்வினை விட்டு நீங்கவியலுமோ! அவ்வாறு விட்டு மறுபடியும் அந்த மனதானது அதைச்சாராதிருந்து விடுமோ? தவிர, எப்போதும் மனமானது அங்கு மிங்குமாக வலையத் தான்றருமோ? கேவலஸ்தர்களில்லஞ் சென்று கண்ணீர்சோர மன மயரச் சாத்தியப்படுமோ? இயலா தென்றபடி.

(கு - ரை.) இச்செய்யுளால் எம்பெருமானது திருவருள் கூட்டுறவாலன்றி, அதாவது அநுக்ரகத்தாலன்றி உலகானுபவப்பற்று விட்டொழியா தென்றும், அன்றி மலினவாசனையோடுங்கூடிய மனமும் ஒருமைப்படுதலருமை யென்றும், இக்கட்டத்தால் ஆகாராதிகளின் காரணமாக இழிவாய்ப் பலர்வாயிலிலும்போய் அலக்கழிந்து கண் கலக்கப்படுவதும் நின்னடிமைக்கி லக்ஷணமாகுமா வென்பது அவர் கொள்கைபோலும். (84)

பொது.

உடைகோவணமுண் டுறங்கப்புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண் டருந்துணைக்கே
விடையேறுமீசர் திருநாமமுண்டிந்த மேதினியில் [க்கே.
வடகோடுயர்ந்தென்னதென்கோடுசாய்ந்தென்னவான்பிறை

(போ - ரை.) இவ்வுலகத்தின் கண்ணே, உடுப்பதற்கு கௌபீனமிருக்கிறது; நித்திரைவரின் திண்ணைகளிருக்கிறது; பசிக்குணவாக இலை, காய் இவைகளிருக்கின்றன; தாக நீக்கத்திற்குத் தண்ணீரிருக்கிறது; உயிர்த்துணையாக இடபா ரூடராம் சிவபெருமானது திவ்ய திருநாமமாய ஐந்தெழுத்துண்டு; ஆதலினாலே, ஆகாயம் நிலவும் சந்திரனுக்கு வடகோடி உயர்ந்தாலென்ன தென்கோடிதாழ்ந்தாலென்ன?

(கு - ரை.) 'ஞானிக்கில்லை யின்பமுந் துன்பமும்' என்றபடி உத்தமோத்தம மகாசாதுக்களுக்கு தேகாபிமானம், மானாபி மானம்.

இவைகளில்லையாகும்; ஈதன்றியும் உலககவலையு மின்றாம்; சந்திர னது வடமுனை தென்முனைகளின் உயர்வு தாழ்வுகளால் உண்டாகுந் துன்ப யின்பங்களுக்கு மாயாசகித இல்லற குடும்பிகளே பாத்திய மாவார்களன்றி மாயாரஹித துறந்த ஞானிகளுக்கில்லை யென்றபடி யாம். "பாவமில்பர மாத்துமஞானர்க்கு, மூவகையுல கத்தினுமொய்ம் பிணு, லாவதோர்பய னென்றிலையாங்கவர், சீவன்முத்தரெனச் செப் பும் வேதமே." என்றனர் ஞானப்பிரகாச வள்ளலாரும். (85)

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
ஓடுநமக்குண்டு வற்றாதபாத்திர மோங்குசெல்வ
நாடுநமக்குண்டு கேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே
ஈடுநமக்குச் சொலவேயொருவரு மிங்கில்லையே.

(பொ - ரை.) எனது உத்தம மனமே! நமக்கு வீடாயுள்ளது திருவாலங்காடெனும் க்ஷேத்திரமாகும். மற்றும், எம்பெருமான் தந்தருளிய திருவோடிருக்கிறது; அவ்வோடோ, ஒருகாலமும் வறு மையுறாதது; நமக்கு வேண்டியன எவையும் கொடுத்தற்கு செல்வ முள்ள தேயங்கள் பலவுள. ஆதலினாலே இங்கே எவரும் நமக்கு ஒப்பாகார்.

(கு - ரை.) திருவாலங்காடென்னும் ஸ்தலத்தைத் தனக்கு வீடென்றது, காரைக்காலம்மையார்க்கு சிவபிரான் கயிலையிலிருந்த படி திருவடியின்பமாக குறித்துத் திருவாய் மலர்ந்தனுப்பியதாகும். அவ்வுண்மையுணர்ந்துள்ள பிள்ளையாரும் பந்தவிமோசன க்ஷேத்திர மாதல் கண்டு தமக்கும் அதையே வீடெனக் கொண்டனரென்க. இத்தலம் வடநாட்டிலுள்ளதாகும். விமலர்-மலமிலார். அதாவது கடவுளரே. திருவோட்டினுக்குப் பிக்ஷையென்றுங் குறைதலில்லா மையால் வற்றாத பாத்திரம் தம் ஓடு என்றனர். 'துறந்தார்க்கு வேந்

தனுந்துரும்பு' என்றபடி ஈடு நமக்கு ஒருவரு மில்லை யென்றன ரென்க. (86)

நாடிக்கொண்டீசரை நாட்டமுற்றாயிலை நாதரடி, தேடிக் கொண்டாடித் தெளிந்தாயிலை செகமாயை வந்து, மூடிக் கொண் டோமென்றுங் காமாயுதங்கண் முனிந்தவென்றும், பிடிப்பையோ நெஞ்சமே யுனைப்போலில்லை பித்தர்களே.

(போ - ளா.) எமனசே! சர்வதாதாவாகிய நமது காருண்ய வள்ளலைக் கனவிலுங்கருதாதிருந்து விட்டாய்; போகட்டும்; அவரது திருவடிமலரைப் பத்திகொண்டு சென்று கண்டு தரிசித்தாயில்லை; இவ்விஷயங்களில் சிறிதுங்கவலையின்றி என்னையே குறித்து, மாயாந்த காரத்தால் மயங்கினே மெனவும், மதன் உபாதையினாலே வாடு கின்றே னென்றும் என்பால் பழிசுமத்தி வருந்தச் செய்வையேல், உன்போன்ற பித்தரொருவரு மிலராவர் என்பாம்.

(சு - ளா.) நெஞ்சமே! நீ நம்பர மேசுவரனைப் பணியாது வாழவேண்டு மென்றால் அது எவ்வாறு கூடும்? கஷ்டமுறா தென் செய்வது? அது நின் குற்றமே, நீ செய்ய வேண்டிய வழிபாடோ, தியானமோ, அல்லது பணியோ யாதும் செய்யா தொழிந்து பழி கூறுவ தெப்படி? ஆகையால் குற்றம் நின்பாலதாம். கடவுளை நம்பி னோர் கைவிடப்படுவரோ? 'இம்மையே தருஞ் சோறுங் கூறையும் யேத்தலாமிடர் கெடலுமாம், அம்மையேசிவ லோகமாள்வதற்கியாது மையுறவில்லையே' யென்றார் தேவாரச் செல்வராம் சுந்தர மூர்த்தி யாரும். (87)

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொன் றெண்ணப், பொய்யொன்றுவஞ்சக நாவொன்றுபேசப் புலால்கமழு, மெய்யொன்றுசாரச் செவியொன்று கேட்க

விரும்புமியான், செய்கின்றபூசை யெவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே.

(பொ - ரை.) நின் மெய்யன்பர்களது இருவினைகளையு மொழித்தபரம்பரனே! என துகைகள் ஓர் காரியஞ்செய்யவும், கண்களானவை ஒன்றைப்பார்க்கவும், மனமானது ஓர் விஷயத்தில் புகவும், பொய்ச்சாரும் நாவொன்றைப்பற்றி பேசவும், தீய நாற்றக்கமழும் சரீரமானது ஒன்றைப் பரிசித்துணர்வு பெற்று வரவும், செவிகள் ஓர் விஷயத்திலிறங்கவும் பொருந்திய இச்சிறியேன் செய்யாநின்ற நின்பூசையை ஏற்பது எவ்வாறோ?

(கு - ரை.) ஐம்புலன்களும் அதனதன் செயலினின்றும் ஒடுங்கிஞலன்றி சித்தம் ஏகாக்கிரம் பெறுதாம். அது பெறுதாகவே அத்துவிதம் சித்தியாகா; அது சித்தியாதபோது அந்தக்கரணங்களும் சலிப்புறும்; இவை யொவ்வொன்றும் சேடிக்கும்போது, பக்தியோ அல்லது தியானமோ நிலை பெறுதாம். ஆகவே, பக்தி, சிவபூசை, தியானம் இவைகளால் அந்தக்கரண புறக்கரணங்களை ஒருவழிப்படுத்தி மேல் யோக நிஷ்டைசாதனங்களில் முயல வேண்டும். ஆதலிஞலேயே கரண வொழுக்க மில்லாவழி சிவபூசையால் பயனின்றுமாதலால் நம் சுவாமிகள் பலமுகப்பட்ட கரணங்களோடு கூடிச் செய்யும் பூசையை யெவ்வாறு கொள்வா யென்றனர். பொய் யொன்றும் கொடுமையிஞல் தான் வஞ்ச நாவென்று கூறினர். (88)

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துருகிப், பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சிலையால், எண்ணுண்டுசாத்த வெதிர்நிற்கவீச னிருக்கையிலே, மண்ணுண்டு போகுதையோ கெடுவீரிந்த மானிடமே.

(போ - ரை.) வீணாகக் கெடுபவர்களே! சிவபிரானைத்தரிசிக்கக் கண்களிருக்கின்றன. சிந்திப்பதற்கோ, மனமிருக்கிறது; உருக்கமாக அவனது கீர்த்தியைப்பாடப் பண்கள் பலவுள; அதனை மீண்டுங் கேட்க காதுகளிருக்கின்றன; பெம்மான் திருவடிகளை பச்சிலையால் அருச்சிக்க மந்திரங்களுள; இத்தியாதி தொண்டுகள் செய்து சந்நிதி முன்னிற்பதற்காகவே சிவபிரான் கோயில் கொண்டிருக்கிறபோது அதனிமித்தமாகவே யெடுத்துவந்த யிந்த மனிதப்பிறவியை அந்தோ! வீணாக மண்தின்று விடுகின்றதே!

(கு - ரை.) உலகப்பிறவிகள் பலவகையுள்ளும் மேலாயது மானிடப்பிறவியேயாகும்; அப்பிறவிக்கு கடவுளால் கொடுத்துள்ள உபகரணங்களாகிற புறக்கரணங்கள் வாய் கண் மூக்குச் செவி முதலியனவன்றி ஞானக் கண்ணொன்றும் கொடுத்துள்ளது. அவரை வழிபட்டுய்யுமாறே யென்க; அது கொண்டே அப்பரும் தலையே நீவணங்காய், கண்காள் காண் மின்களோ, மூக்கே நீமுரலாய், செவிகாள் கேண்மின்களோ, வாயே வாழ்த்து கண்டாய் என்பதாதியாய்த் திருவாய் மலர்ந்தமை கொண்டு தெளிக. அங்ஙனம் அவனாற் கொடுத்தருளப் பெற்ற அங்கங்களால் அவனைவழிபடாது வீணே பிறவிஷயங்களிற் செலுத்தி ஈற்றில் மண்ணாய்ப் போவது கண்டே வருந்தி நமது பிள்ளையாரும் "மண்ணுண்டு போகிறதையோ" வென்று எடுத்துக் கூறினமையும் காண்க. இவர் மட்டோ! சுந்தர மூர்த்தி சுவாமிகளும் "வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம்" என்றருளினமையுமறிக. (89)

சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலு மாசற்ற வாகாயந் தன்னிலு மாய்ந்து விட்டோர்
இல்லிலு மன்ப ரிடத்திலு மீசனிருக்கு மிடங்
கல்லிலுஞ் செம்பிலுமோவிருப்பா னெங்கள் கண்ணுதலே.

7 (போ - ரை.) நெற்றியில் கண்கொண்ட எங்கள் நிமலனார், மந்திரங்களிலும், அம்மந்திர முடிவாகவும் சதுர்மறைகளாகிய சுருதியாதிகளிலும் அந்தகாரத்தும், பரமாகாயத்தும், சிவதத்துவங்களை ஆராய்ந்து சிவத்தைத் தெளிந்து கலந்துவாழும் பரம நிஷ்டாபராள் வீற்றிருக்கும் இல்லங்களிலும், அத்தகைய உத்தம அன்பர்கண்மாட்டும் எழுந்தருளியிருப்பதல்லாமல் கல், செம்பு இவைகளிலோ பொருந்தியிருப்பன்? இரான் என்றபடி.

(கு - ரை.) எல்லா முடையவனுதலால் ஈசன் என்றனர் போலும். நெற்றி நடு நேத்திரத்தானுதலால் கண்ணுதல் என்றார். சதுர்மறை எழுதப்படாமையானும், சப்தமாத்திரமாயறியப்படலானும் அதனைச் சுருதியென்றனர். அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாயிருந்தருளும் எம்பெருமான், கல், செம்பு இவைகள் மட்டிலுந்தானேவிளங்குவன் என்று சர்வவியாபகத்துவத்தைக் கூறியறிவுறுத்தினர் என்க; எங்கும் வியாபித்துள்ள கடவுளை கல், செம்பாகக் காண்போர்க்கும், அவைகளிலன்றி மற்றவிடங்களிலே கடவுள் வியாபித்துள்ளதை மறுத்துக் கூறுபவர்கட்கும் அறிவுறுத்தற்கே இச்செய்யுள் தோன்றிற் றென்றறிக: இந்த பாசுரமானது கடவுளர் யாண்டும் நிறைந்துள்ளா ரெனுங் கொள்கையை யுடையவராய், அக்கடவுளரது யதார்த்தவடிவமானது மனவாக்குகட் கெட்டாததாதலால் அவனது சொரூப திருமேனியைத் தொழும் விவேகிகட்காகத் தோன்றிய தன்றென்பதைக் கவனிக்கப்பாலதாம். இந்தபாசுரத்தினது ஆழ்ந்த கருத்தினை நுண்ணுணர்வாயறிய லாற்றுது ஆலயத்தின் விக்ரக வழிபாட்டைக்கண்டிக்கத் தலைப்படுகின்றனர். அவர்களை, பிள்ளையாரது மற்றைப்பாசுரங்களை யுங்கண்டு கூறுதுள்ள மந்தமதியினரென்று தெரியலாம். இந்த பாடலிலேயே முன்னும் பின்னுமாக ஆலயதொழுகையைக்கட்டுப்படுத்துக் கூறியருளிய பலபாக்களுள்ளதை நேயர்கள் ஆராய்ந்தறிக. வஸ்துவைக் கல்லென்றும்

அல்லது செம்பென்றுங் காண்பார்க்குக் கடவுளில்லையாகும்; அங்ஙன மின்றிக் கடவுளாகக் காண்போர்க்குக் கல்செம்பில்லையாகும் எவ்வா றெனில்,—

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்.

என்ற திருமூலர் திருமந்திரச் செய்யுளானுணர்க. (90)

வினைப்போகமேயொரு தேகங்கண்டாய் வினைதானொழிந்தா
தினைப்போதளவு நில்லாதுகண்டாய் சிவன்பாதநினை [ல்
நினைப்போரைமேவு நினையாளர்நீங்கிந் நெறியினின்றால்
உனைப்போலொருவ ருண்டோமனமே யெனக்குற்றவரே.

(போ - ரை.) நெஞ்சமே! முன்வினைப்பயனாகவே ஓர் தேகம் வந்தது; அந்த வினையொழிந்தவாறே தேகமும் இமைநேரமும் நில்லாது போய்விடும்! ஆதலினாலே சிவபிரான் திருவடிகளைத் தியானிப்பாயாக; அவ்வாறு தியானிப்போரைச் சேர்வாய்; தியானியாதவரை விட்டுவிலகிடுவாய்; ஆகவே நீ இம்முறையில் நிற்பையாயின் நின்போல் எனக்கு அருந்துணைவ ராருமில்லை.

(கு - ரை.) பிராரத்த கன்மத்தின் பயனே சரீரமாயிற்று. பிராரத்த கன்மபலனை கரையச் செய்யாவிடின் ஆகாமிய வினையை தேடிக்கொண்டால் பிறப்பிறப்பு நீங்காதாகும்; ஆகவே பிராரத்த வினையை அநுபவித்து வரும்போது சிவபூசை, சிவாலய வழிபாடு முதலியவற்றில் நெஞ்சம் அழுந்தி விடுமேயாயின் ஆகாமியவினை யெட்டாவாம். அது எட்டாதாகவே பிறவியொழிதற்கு ஏது, சிவ

பூசையும் ஆலயவழிபாடும் அடியர் நேசமும் அவர்பால் தொண்டும் அவர்க்குபசரிப்பு மாகும் என்க. (91)

பட்டைக்கிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து [துக்
முட்டச்சுருட்டியென் மொய்குழலாள்கையில் முன்கொடுத்
கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோ விங்ஙனேசிவன் மீண்டதுவே.

(பொ - ரை.) பட்டுத்துணிகிழித்து பெரியவோர் ஊசியை விரும்பி யெடுத்து அத்துணியுள்வைத்துச் சுருட்டி, எனது அடர்ந்த கூந்தல் வாய்ந்த மனையாள் கையிற் கொடுத்தருளி, யோர்க்கனவே யென்னைப் பற்றியுள்ள மாயையின் ஆசைகள் என்னைவிட்டோடிட வன்றோ இப்பக்கம் சிவபராஞ்சுடரார் எழுந்தருளினது போலும்.

(கு - ரை.) நம்பிள்ளையாரவர்கள், தமக்கு எம்பெருமானார் கட்டளையிட்டருளிய விவரத்தினை இந்த பாசுரத்தினாலே நன்குவிளக்கிக் காட்டினார்கள். இதனால் சுவாமிகள் முத்திப்பேற்றினுக் குரிய பரிபக்குவகாலம் வந்துள்ளமை விளங்கலாயிற்றென்க. (92)

சூதுற்றகொங்கையு மானார்கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்றபூசனுக் கென்செயலாஞ் செய்தபுண்ணியத்தால்
தீதற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்றவூசியைத் தந்துவிட்டான் எந்தன்கைதனிலே.

(பொ - ரை.) சொக்கட்டான் காயொத்த தனபாரங்களை யுடைய மனையாளும், மான்போன்றுருகுங் கண்களைப் பெற்ற காமஸ்திரீயின் போகானுபவ சுகமும், பின்னுஞ் சேர்த்துள்ள பொருள்களும், மரிக்கும்போது ஏற்படும் இந்திரியாதிகளின் விபரீதச் செயல்களுக்கு யாதுசெய்யப்போகிறது! யோர்க்கனவே செய்



வேதாரண்யர் காதற்றவூசியைக்கண்டு துறவறம்பூண்டது.

துள்ள புண்ணிய விசேஷத்தினாலே மாதேவனும் தனித் தலைமைப் பரமபதியார், இப் பிறவியினுள்ளத்தின்கண் உண்மை யுணரும் படிக்கோ எனதுகையில் காதறுந்த வூசியைக் கொடுத்துவிட்டனன்?

(து - ணர்.) சூது என்றும் சொக்கட்டான் சாயையும் தென்னையின் குரும்பையையும் ஆரம்பத்தில் தோன்றுந் தனங்களுக்கு உவமை கூறுதல் புலவர்கட் கியற்கையாகும். மான்விழிபோன்று மருளும் சுபாவமுள்ள கண்களையுடைய பொதுப் பெண்டிரென்று வருணித்தல் ஈண்டு விலைமாதரைக் குறிக்கும். மனையாளும், விலைமாதரும்; மற்றுமுள்ள பொருளும் ஆகிய இவையெலாம் மரணதருவாயில் யாதும் நலம்புரிய வல்லதோ, அல்ல என்றபடி. ஆகவே பழய புண்ய காரணத்தான் சிவபெருமானே வந்தனர் என்பதாயிற்று. (93)

வாதுற்ற திண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும் புகலுநெஞ்சே யிந்தப்பூதலத்தில்
தீதுற்றசெல்வமென் தேடிப்புதைத்த திரவியமென்
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே.

(போ - ணா.) நெஞ்சமே! மிக்கவலிமைபெற்றுள்ள தோள்களை யுடையவரும், அண்ணாமலையில் வீற்றிருப்பவருமாகிய சிவபிரானாது திவ்ய திருமலரடியிணையினை அடையப்பெற்று சதாகால முந் துதிசெய்வாயாக. இவ்வுலகத்தின்கண் தீமைக்கேதுவான இன்பமென்ன, கல்வியென்ன, சிறப்பு, தனமுதலான செல்வ மிருந்தால் யாதுபயன்? மிகக்கஷ்டத்தினாற் றேடிச் சேமித்துள்ள திரவிய மிருந்தும் யாதுபயன்? மரணமடைந்த பின்னர் வழிக்குத் துணையாகக் காதில்லாத உபயோகமற்ற ஊசிகூட உடன்வருவதில்லை.

(து - ணா.) ஆன்மா சரீரத்தை விட்டுப்பிரிந்து தனிமையாகப் போம்போது பொன்றுத்துணையா யுள்ளது சாக்ஷாது பரமேசுவர

னது திருவடித்துணையாதல்பற்றி அதையே துதிசெயவேண்டு மென்பது "உற்றாருளரோ உயிர்கொண்டுபோம்பொழுது, குற்றாலத்துறை கூத்தனல்லால்நமக் குற்றாருளரோ" என்று ஓதியருளியபடி, தேவாரம். (94)

வேதத்தி னுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டுவிடப், போதித்த வன்மொழி கேட்டிலையோ செய்த புண்ணியத்தான், ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சமதாம்பொழுது, காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

(**போ - ளை.**) நான்குவேதங்களினுட்பொருளையும், மண்ணின் பாலுள்ள ஆசையையும், பெண்ணாசையையும், விட்டொழிக்கும்படி ஓதியருளியவனுமாய சிவகுரு மூர்த்தியினோர் வார்த்தையைக் கேட்டாயில்லை போலும்; பண்டைய புண்யவசத்தினாலே மதியிரவியின் பிரகாசம் போன்று ஆன்மா பிரகாச ரூபந்தாங்குங்கால், மரிக்கும் போது மரணத்தின் பின்னிட்ட வழித்துணைக்காக காதற்ற வூசியும் உடன் வாராதாம்.

(**து - ளை.**) மண்ணாசை பெண்ணாசை பொன்னாசைகளை நீக்கி விடும்படியுள்ள வேதசாஸ்திர தாற்பர்யத்தை யோதியருளியவன் என்ன உரைகூறினும் அமையும். மூவகை ஆசைகளிலேயு முயங்குதலொழிந்து சிவபெருமான் றிருவடிக் கமலங்களிலேயே பற்று வைப்பவர்கள் இருளில் அதாவது நரகத்தில் தள்ளப்படா ரென்பது சித்தாந்தமாகும். வெண்காட்டடிகளார் வரலாற்றில் ஊசியின் விவரத்தை நன்குணர்க. ஆன்மாவின் பரிசுத்தநிலை ஒளிமயமாகும். அந்நிலைதான் மகாமேலாகிய நிலையென்பர் மேலோர். (95)

மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாயில்மட்டே
இனமானசுற்ற மயானமட்டே வழிக்கேதுதுணை

தினையாமளவெள் ளளவாகினுமுன்பு செய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ்சித்திக்குஞ் சத்தியமே.

(போ - ரை.) (மாண்டுபோனவர்கட்காக) பெண்ஜாதி பிள்ளைகள் பொருள் வாழ்வு இவையெலாம் தெருவாயில் வரையில்தான் துணைவரும்; சொந்தபந்துக்கள் மயானம்வரையில் துணைவருவர்கள்; இதன்மேல் ஆத்மதுணைக்காக நிற்பார் ஒருவரையுங் காணோம்; ஆகவே, தினையளவாவது அல்லது எள்ளளவாவது தான் முன்னே செய்துள்ள தரும தவங்கள் உடன்வந்து துணைநிற்க, இதன்மேல் ஆன்மா சிவலோகஞ் சென்றடையும்; இது நிச்சயம்.

(து - ரை.) உற்றார் பெற்றாரும், பொன்னும்பொருளும் இவைகள் மரித்தபின்னே துணையாகா; அச்சமயம் உயிர்த்துணையா யுள்ளது தருமதவங்களேயாம். ஆதலினாலே உலகத்திலே அன்னவர்களோடு அளவளாவிக் காலங் கடத்துவதினும் உயிர்க்குறுதி பயக்கும் தான தரும தவங்களைச் செய்வதையே முக்கியமாகக் கொள்ளல் வேண்டுமென்பதுதான் பாசுரக்காறர்தம் பரமார்த்திக எண்ணம். வாழ்வாவதுமாய மிதுமண்ணாவது திண்ணம், பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பரிதா, தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான் மலரோனுங், கீழ்மேலுறநின்றான் றிருக்கேதாரமெனீரே. தேவாரம். (96)

அத்தமும்வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டே விம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத் தழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப்புண்ணிய பாவமுமே.

(போ - ரை.) செல்வமும் அதோடுகூடிய வாழ்க்கையும் வீட்டோடும் நின்றுபோகும்; மிக்க சூழ்ந்துள்ள பெண்டீர் முதலான

மற்றப்பெண்களாரும் கண்களில் நீர்சொரிய நடுத்தெருமட்டிலேயே நின்று விடுவர்கள். பின்னும் இருகரங்களையுந் தலையிலிட்டுத் தேம்பியழும் மக்களாருஞ் சுடலைமட்டுமே வந்து நிற்பர்; இருவினைகளாம் புண்ணிய பாவங்கள்தான் பின்றொடர்ந்தேகும்.

(கு - ணா.) அர்த்தம், அத்தமென்றுவந்து பொருள் என்னும் அருத்தங் கொடுத்து நின்றது. விழியம்பு,—கண்ணீர். புண்ணிய பாவம், சொர்க்க நரகம் புகட்டும். உடல்விட்டுச் செல்லும் உயிர்க்கு தருமமும் தவமுமே துணையாய்ச் சென் றுதவுவ தெனவறிந்து, அத னால் தவம் அறம் இவைகளே செய்தல்வேண்டும் என்பதாயிற்று. "அறத்தாறிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை" என்றார் திருவள்ளுவர். (97)

சீயுங்குருதிச் செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும்புடைவையொன் றில்லாதபோது பகலிரவாய்
ஈயுமெறும்பும் புகுகின்றயோனிக் கிரவுபகன்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே.

(போ - ணா.) சீயும், இரத்தக் கொழுமைநீர் சுரந்திழியும், நிணமும் மிகக்கலந்து வெளிப்பட்டு பாய்ந்து, புடவையில்லாத சமயத்தில் இராப்பகலாய் ஈ யெறும்பு நுழையத்தகும் பெண்குறிக்கிச்சைவைத்துக் கெட்டழியும் மனிதர்களைக் கெடாது காத்தற்கோர் மருந்தேனு மில்லையே!

(கு - ணா.) மாயாமயக்கினால் பெண்களைக்கொண்டு மனம் போனபடிப் புல்லி மயங்கி வாடிவதங்கி வகையறியாது கிடந்துழலும் புல்லறிவாண்மக்கள் வீணே கெடுவதுநோக்கி மனம்பொறாத நம் சுவாமிகளார், பரிதபித்து அந்தோ! இத்தகையாளரை மீட்பதற்கு ஓர் மருந்தில்லாமற் போயிற்றே யென்று இரங்கிக் கூறியதென்க.

இதுநிற்க; இன்னுமோர் பிராகாரத்தால் அறிவுறுத்தியதாகவுங் கூறலாம். (98)

சீதப்பனிக்குண்டு சிக்கெனக்கந்தை தினம்பசித்தால்
நீதுய்க்கச்சோறு மனைதோறுமுண்டு நினைவெழுந்தால்
வீதிக்குணல்ல விலைமாதருண்டிந்த மேதினியில்
ஏதுக்குநீசலித்தாய் மனமேயென்றும் புண்படவே.

(போ - ரை.) மனமே! இந்த வுலகத்திலே குளிர்பனிக்காலத்தைக்கழிக்க போதுமான உறுதிக் கந்தல்கள் கிடைக்கும்; தினகாலமும் பிச்சைகொண்டுண்ண நினக்கு சோறுகறிகள் வீடெங்குங் கிடைக்கும்; காமாந்தகாரம் வந்து பற்றின் தெருப்புறத்தே நல்ல தாசிகளுள்ளார்; ஆகவே, யெப்போதும் மனம்வருந்த நீயேன் சலிப்புறுகின்றாய்? சலியாதிரு என்றபடி.

(கு - ரை.) இப்பாசுரத்தைச் சுவாமிகளார் பொதுவகையாய்ப் பாடியருளினரே யன்றித் தன்னைக்குறித்தாவது அல்லது மற்ற உலகத்தாடவரைக் குறித்தாவது என்ற நோக்கம் அவர்பா லின்றெனத் தெரிகிறபடியால் குறித்துச்சொல்ல ஏதுவில்லை. விலைமாதரைச் குறித்தமையால் குலமாதரைக் கூடாதென்பதாயிற்று ஏன்? பாவமென்றபடியா லென்க. இது விஷயமாக நமது நாயனாரும், 'நலக்குரியார், பிறர்க்குரியாள் தோடோயாதார்' என்றனர். 99)

ஆறுண்டுதோப்புண்டு அணிவீதியம்பலந் தானுமுண்டு
நீறுண்டுகந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த
மாறுண்டுலாவி மயங்குநெஞ்சே மனைதோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின் சும்மாயிருக்கச் சுகமுமுண்டே.

(போ - ரை.) எப்போதும் பேதாபேத மடைந்து விஷயாதிகளிலே உழன்று கிடக்கின்ற எ மனசே! தேகத்தைக் கழுவ நதி

யிருக்கிறது; களைப்புச் சலிப்பாறவும் உலாவவும் நல்ல தோப்பு மிருக்கிறது; வசிக்க வுறங்க சத்திரம் சாவடிக ளிருக்கின்றன; அணியத்திருநீறு முண்டு; உடுத்திக் கொள்ள கந்தைத் துணியும் கௌபீனமு மிருக்கிறது; மற்றும் வீடெங்குஞ் சென்று பிச்சை கொண்டுண்ணவும் பிறகுறங்கவும், இதன்பின்னர் சும்மாயிருத்தலிற் சுகமுமிருக்கிறதே. (ஆகவே நீயேன் சதாசலிக்கின்றூ) யென்றபடி.

(கு - ரை.) "சும்மாயிருக்கச் சுகமுதயமாகுமே, யிம்மாயாயோக மினி யேனடா வென்றூர் தாயுமானூர். இது போன்றே இன்னும் பல சான்றோரும் பலவிடத்தும் சாற்றியுள்ளார்கள். ஈண்டு கருவி கரணங்களை யொடுக்கி நிஷ்டை கூடலையென்க. அவ்வாறு மனதை விஸ்ராந்திக்கச்செய்து எந்தவத்துவில் தாக்குற்று எதைக் குறிக்க வேண்டுமோ அதைக் குறித்து நிற்றலே யோக மென்பார்கள். நிட்டை, தியானமுதலியன செய்தற்குச் சரீரம் திடமுறவும் அசக்த மின்றியு மிருந்தாற்றூன் கொண்டகொள்கை கைகூடும். என் தேகத்திற்கு அலுப்புச் சலிப்பிருக்குமேல் மேல் முயற்சிக்குத் தளர்ச்சிவந்துறும், அதுகொண்டே ஔவையாரும் "மூப்பதாமாண்டளவில் மூன்றற் றொருபொருளைத் தப்பாமற் றன்னுட் பெறூணுயின், செப்புங், கலையளவேயாகுமாங் காரிகையார் தங்கண் முலையளவேயாகுமா மூப்பு" என்பதாய்க் கூறினமை காண்க. இவ்வகை மேலனுபவாதிகட்கு மனம் லயித்து அறிவோடொன்று பட்டுழைக்குங்கால் ஒருகால் மனஞ்சிறிது தளர்வுறுமேல், அதற்கும் சுவாமிகளார் ஆறு தோப்பு மடந் தட முதலியனவு மிருக்கிறதென்றனர்கள். ஆகவே சரீரம் திடமுற்றிருக்கும்போதே மேற்கூறிய சிவானுபூதிகட் கேற்றபடி யுழைத்து திவ்ய திருவடிக்கண் அன்பு செலுத்தல வென்றலே பெரியாரிச்சை யாயிற்றெனலாம். (100)

உடுக்கக்கவிக்க குளிர்காற்றுவெய்யி லொடுங்கிவந்தால்
தடுக்கப்பழைய வொருவேட்டியுண்டு சகமுழுதும்

படுக்கப்புறந் திண்ணை யெங்கெங்குமுண்டு பசித்துவந்தால்
கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சேநமக்குக் குறைவில்லையே.

(போ - ரை.) மனமே! குளிர் காற்றினாலேனும் வெயிலினாலேனும் கஷ்டப்பட்டு வருந்திவரின் அக்களைப் பிளைப்பைத் தணியச் செய்யுமாறு உடுத்துவதற்கும் போர்த்துக் கொள்வதற்கும் ஓர் பழம் வஸ்திரமிருக்கிறது; படுக்கைக்கு உலகடங்கலு முள்ள திண்ணைக ளெங்கு மிருக்கிறது; அன்றிப் பசிபோடும்வரின் ஆகாரங் கொடுத்தருள ஐயனிருக்கின்றார். ஆகவே நமக்குக் குறைவேயில்லையாம்.

(கு - ரை.) மெய்யடியர்கள் மிக்கப் பசியோடு மிருப்பரேல் எம்பெருமான் நேரேயாவது அன்றி வேறொருவரைக் கொண்டாவது அன்னபானியங் கொடுத்துதவுவா ரென்பது நிச்சயம். சான்றாகச் சுந்தரமூர்த்தியார்க்குச் சோறளித் தாதரித்தமையானே அவரும் "பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை புகலூர் பாடுமின், புலவீர்காள், இம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம், அம்மையேசிவ லோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே" என்றருளியுள்ளார்கள். ஆகவே அன்பர்களதுமனம் உறுதிப்பாட்டால் எல்லாம் சிவன்செயலென்றே நிச்சயித்தார்க்கு நன்மையும் அவ்வாறில்லார்க்கு அநுக்கிரக மில்லாமையும் ஏற்படக் கிடத்தலா லறியலாம். (101)

மாடுண்டுகன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோமினிக் கேண்மனமே
ஓடுண்டுகந்தையுண் டுள்ளேயெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்டகண்ட னடியார்நமக்குத் துணையுமுண்டே.

(போ - ரை.) நமக்கு மாடுகன்றுக ளிருக்கிறது; பிள்ளை பெண்க ளிருக்கிறது எனச்செர்வித்துக் களிப்பதெல்லாம் மற்றோர்

சமயத்திலே அழிந்து போய்விடுமென்று சான்றோர்கள் சாற்றிய தறிந்தும், யேகதேசத்தில் நேராக அநுபவ ரீதியாலறிந்தும் அவைகளிலுள்ள ஆசையறுந்தன. மனமே! இனிக்கேள், நமக்குப் பிச்சைக்கு 'ஊருண்டு ஒடுண்டு' உடுத்துவதற்குக் கந்தைத்துணியுமிருக்கிறது; உளத்திடையோத பஞ்சாக்கர மிருக்கிறது; குண்டலந் தண்டுங் கண்டத்தையுடைய சிவபிரானும் அடியவர்களும் துணையுள்ளார்கள்.

(கு - ரை.) இப்பாசுர வாயிலாக உண்மைத் துறவாச்சிரமிகளான சிவனடியார்கட்கு வேண்டுவன இன்னதென்பதைச் சுவாமிகள் விளக்கினார்கள். இதற்கு மேற்பட்டுள்ளமை குடும்பியென்பதற் கடையாளங்களென இதனானே நன்கு புலப்பட்டு விட்டது. சாக்ஷியாகப் பத்திரகிரியார் சோல்லுபையையும் நாய்க் குட்டியையுங் கண்டு அவரைக் குடும்பியென்று கூறினமையால் தெளிக. ()

மாத்தானவத்தைபு மாயாபுரியின் மயக்கத்தையும்
நீத்தார்தமக்கொரு நிட்டையுண்டோ நித்தனன்புகொண்டு
வேர்த்தாற்குளித்துப் பசித்தாற்புசித்து விழிதுயின்று
பார்த்தாலுலகத் தவர்போலிருப்பர் பற்றற்றவரே.

(போ - ரை.) சொர்க்கானு பவங்களுக்குரிய வான்பொருள்களும், மாயையால்வந்த சரீர எதுவால் உண்டாகும் மயக்கத்தினையும் வெறுத்தொதுக்கியுள்ள மெய்த்துறவாளர்க்கும் நிட்டை புரியுமுறை யுளவோ? அகம்புறமென்னும் இருவகைப் பற்றையும், இன்னும் இப்புவனப்பற்றும் 'அப்புவனபோக மெனப்படும் தேவலோகப் பற்றுகளையும் கேவலம் துச்சமென ஒதுக்கியவர்கள், சிவபரஞ்சுடர்பால் அன்புகொண்டு வியர்க்கக் குளித்தும், பசிக்கப் புசித்தும், மயக்கம்வரி னுறங்கியும், பிறர் பார்க்க உலகத்தார் போன்றும் விளங்குவர்கள் என்க.

(து - ரை.) உலகத்துள்ளே பெரிய லோகமாவது தேவலோக மெனப்படுவது. அத்தேவலோகத்திலே கற்பகம், காமதேனு சிந்தாமணி இவைகள் உள்ளன. இத்தகைய மேன்மையான பொருளின்பயனையும் தேவலோக வாழ்வையும் ஞானவான்கள் சிறிதும் விரும்பவே மாட்டார்கள். எதனாலெனின், அவ்வுலக ஆசையினாலே ஜனனம் ஏற்படுமாதலி னென்க; மெய்ஞ்ஞானியர் அந்த தேவலோகத்தையும் ஆங்குள்ள விசேட பொருள்களையும் இலவலேசமும் இச்சிக்கமாட்டார்கள். அத்தாக்ஷியாக இம்மண்ணுலகத்துள்ள மாணிக்கவாசகசுவாமிகளும் தேவலோகவாழ்வே வேண்டிப்பெறேன் என்று திண்ணமாய்க் கூறி விட்டனர். மாயாபுரி—இவ்வுடல். விருப்பு வெறுப்பற்றவர்களுக்கு கிட்டை அநாவசியகமாம். இது உண்மை நூல் முறையாமென்க. (103)

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம்பார்வல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காமலேநமக் கிட்டபடி
என்றென் றிரு மனமேயுனக்கே யுபதேசமிதே.

(போ - ரை.) மனமே! தெய்வம் ஒன்று என்றிருப்பாய்; அத்தெய்வத்தை என்றும் உண்டென்றிரு; உயர்ந்த செல்வங்கள் யெல்லாம் அழிந்துவிடு மென்று நம்பி யிரு; பசித்து வந்தவர்களது ஏழை முகத்தைப்பார்த் திரங்குவாய்; உத்தமதானம், உத்தமர்நட்பு உனக்கு நன்மைபயப்பன, ஆதலால் அதைப்பரிந்து கொள்ளுதல் மிகவும் நன்மை. நடுவு நிலைமை தவறாமல் புத்தியைச் சமன்படுத்தி நமக்கு முன்னே குறித்திட்ட திட்டப்படிதானே நடக்கு மென திருப்தியாயிரு. இதுவே என் உபதேசம்.

(து - ரை.) "ஏகம் சிவம் ஏகம் அது சத்யம்" என்றபிரமாண பூர்வமாகச் சிவன் ஒருவனே ஒப்புயர் வற்ற தலை

மைப்பதியாதலின் ஈண்டு ஒருவனை பரசிவ 'மொன்றே' யென் றோதினர். ஒன்றன்று பலவென்பாரை மந்தாரக் கொள்கை யென் றொதுக்குக. இதுகொண்டே தேவாரச் செல்வராய அப்பரும் 'ஒருவனை யுலகேத்த நின்றநாளோ' என்றனர். நல்லறமென்ற ஈண்டு இருவீட்டறத்தையு மெனலாம். அதாவது காம்யாநுபவ வீட்டறமொன்று; நிஷ்காமியாநுபவ மோக்ஷவீடடைதற் கேது வாம் துறவறமொன்று, ஆக இரண்டறமுமே குறிக்கற்பாலது. நடு நீங்காமலே என்றது: இறைவன் வினைக்காரணமா யமைத்தமை யில்வருங் கீழ்மையைக் குறிகொளாமையையே யாம். இதனால் கடவுள் கட்டளையைக்கொண்டு சமாதானங் கொள்ளற்பாலதாயிற்று. மேலாசை வழிபற்றின் அநுபவிப்பது பிறவியே யாகலான் அங்ஙனங் கூறினரென் றாயிற்று. (104)

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்புபொம்மல்
ஆட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிரு சுற்றத்தைவாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென்றேயிரு நெஞ்சேயுனக் குபதேசமிதே.

(போ - ரை.) ஏ நெஞ்சமே! நீகடைத்தேறுமாறு உன்னு யிர்த் துணையாகவும் கண்போன்றுங் கிடைத்த குருமூர்த்தியின் திரு வடிகளைத் தேடக்கிடைக்காத திரவியம்போன்று எண்ணியிரு; கரை யேற்றக் கூடியது அத்திருவடியென்றே உறுதி கொள்வாய்; ஆபா சச் சரீரத்தைக் கேவலம் ஆடும் பதுமைகளிலொன்று என்றுகருது; பந்து மித்திரர்களை, உன்னை நெருங்கிய சந்தைக்கூட்டங்கள் என நினைத்திருப்பாய்; இன்னும் இந்த உலக வாழ்வைத் தண்ணீர்க் குடங் கவிழ்த்தலையொத்ததா யுணர்வாய்; யான் நினக்குச் செய்த வுபதேசமிதுவே.

(து - ரை.) சற்குருமணியார், சத்தியஞானத்தை யூட்டி அசத்திய ஞானமாகிய அஞ்ஞானத்தை யோட்டும் தயாளுவானதால் அவரது திருவடிகளை நாட்டமென்றிரு வென்றனர். "எந்நாளிருப்பினு மிறப்பது நிச்சயம், பொன்னாட்டிலிந்திர னாயினும் போன்றுவ, னன்னாட்கழியுமுன் ஞானத்திலேலே, தன்னாலறிவது சற்குருபாதமே." என்றார் ஞானவள்ளலார்.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. என்றருளிய திருமூல தேவர் வாக்கியத்தை நோக்கி சற்குரு பாதத்தை நம்பு என்றபடியும் பொருந்தும். சுற்றமுதலானோர்க்குச் சந்தைக்கூட்டத்தை உபமானித்தது மிக்க நேர்மையாயது. வாழ்க்கைக்குக் குடங்கவிழ் நீரைக் குறித்துள்ளார், என், வாழ்க்கைக் குவமை ஆற்றுநீர் ஓட்டத்தையுஞ் சிலரொப்பிட்டுள்ளார்; ஆனல் நம் பிள்ளையாரவர்கள், அவ்வாற் றோட்டமும் சிலபோது நிச்சயிக்க நேரும்; ஆகையால் அதைத் தாமும் உவமிக்க வெண்ணாது அதிசொற்ப நேரத்துள் சுவரிப்போதற் கேதுவான குடங்கவிழ் நீரையே உவமித்தல் நியதியெனக் கொண்டே அதனைக் குறித்தனர்போலும் என்றுணரல் வேண்டும். (105)


என்செயலாவது யாதொன்றுமில்லை யினித்தெய்வமே
உன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே.

(போ - ரை.) ஐயனே! என்னுட லுயிராதிய வனைத்தும் உன்பால் தத்தஞ்செய்து அடிமை பூண்டேன், ஆகையால் இனி

யென்க்கென வோர் செயலுமின்றும். எதுவும் நின் திருவுள்ச் செயலாகவே யாகுமென்றெண்ணி யிருக்கின்றேன்: இந்தச்சரீரங் கொண்டுவந்த பின்னர் யாதொரு தீயவினையுஞ் செய்திலேன்; ஆனால் இவ்வுடம்பு ஜனித்தற்கு முன்னாக ஏதுஞ்செய்த வினை தானோ இவ்வாறாக என்னை ஆளாக்கிவிட்டது! (என்செய்வேன்)

(கு - ரை.) மேற்பாசுரம் சுவாமிகளைக் கழுமரத்தடியிற் கொண்டுவந்து நிறுத்தியபோது சுவாமிகளார் அக்கழுமரத்தைக் கண் காணித்தவண்ணம் பாடியருளிய தாகும்; மற்றவிவரங்களை முன் னுள்ள சரிதத்தி லுற்றுநோக்குக. சரம் அசரம் என்னும் இரு வகையிலும் எம்பெருமான் வியாபித்துக் காத்து வருவது வரு தல் இயல்பாகும். ஆகவே அச்சிவபரம்பொருளன்றி அகில காரியங் கள் அணுப்பிரமாணங்கூட நடப்பதியலாவாம், இங்ஙனமாயவுண்மை யினை நன்குணராப் பலர் எக்காரியங்களும் தன் தன் வலிமையானே நடந்தேறுகின்றன வென்று கருதி மடமையால் மகிழ்கின்றனர்; ஆனால் உண்மைகண்ட உத்தமர்கள், யாவும் அவன் செயலென்றே அறியுந் தரமுடையாராதலின் "என்செயலன்றி, யெல்லாம் நின் செயலே" என்றார் பிள்ளையார். பிராரத்த வினை யொழியுமாறு நான் செய்துவரும் நல்வினையொழிய தீவினையென்பதே அறிந்தி லனே! இப்பிறவி வந்ததுமுதல் இதுவரையிலும் ஒரு சிறிதும் பாவவினை செய்துணராமை கொண்டே "இவ்வூனெடுத்த பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை" என்றனர். ஆனால் தீவினை நினைத்தலினும் கனவினு மில்லாதமுறையில் ஏற்பட்டுள்ளதை நோக்க "முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டது," என்றார். எவையும் சிவன்செயலென் றமர்ந்தாரை யீஷத்தும் ஆகாமியம் பற்றாதென்க. (106)

திருவேட்டமாகித் தெருவிற்பயின்றெனைத் தேடிவந்து
பரிவாகப்பிச்சை பகருமென்றானைப் பதம்பணிந்தேன்



பட்டினத்தடிகளை திருடனென சேவகர் பத்திரகிரிராஜனிடம் பிடித்துப்போதல்.

கருவாகுமேதக் கடற்கரைமேவக் கருதுமென்னை
உருவாக்கிக் கொள்ளவல்லோ விங்ஙனேசிவனுற்றதுவே.

(பொ - ரை.) நங்கருணையங்கடலார், சிவபக்தரைப் போன்ற வேடங்கொண்டவராய் திருவீதியிலே உலாவி அடிமையின்பால் நெருங்கிவந்து புன்னகையோடும் "பிச்சையெடும்" என்று எனக் கருள்புரிந்த அச்சற்குருநாதன் றிருவடிகளிற் றெண்டனிட்டேன். கருப்பொறை யென்னும், துக்காஸ்பதமாய சாகரத்தை யடைதற் கிருந்த அடிமையைச் சிவபெருமான் தன்னவனுக்குவான் வேண் டியே இங்ஙனம் எழுந்தருளினர்போலும்! என்பதாம்.

(கு - ரை.) இங்ஙனந் தோன்றி வந்தருளிய பக்தர்பிரானை, 'பிரம்மகபால சகிதமாக பிக்ஷாடன மூர்த்தியாய்வந்து தாருகாவனத்து இருடிபன்னியரைப் பார்த்து பிச்சையிடுமின்கள் என்றருளிய சிவ பிரானை' என உரை கோடலு மமையுமென்க. விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர். இம்மூவருள் சகலரைத் தடுத்தாட் கொள் வான் எம்பெருமான் சற்குரு மூர்த்தியாக எழுந்தருளி வருதல் முறையாதல் கொண்டே, ஈண்டு சுவாமிகள் ஐயனைத் 'திருவேட மாகி' என்று கூறினர் என்க. ஆகவே அம்மொழி உபதேச முறை யிற் கூறியதென்பாம். நிற்க; ஓர்போது பிள்ளையார் பிச்சை யேற்றுக்கொண்டுவந்து ஓர்பா லமர்ந்திருக்கும் அச்சமயத்திலே எம் பெருமான் பிச்சையிடு மென்று கேட்டதாகவும், அப்படியே பகிர்ந் திடலும், அப்போதையன் மறைந்தமைகண்டு ஓ! எனையனன்றோ வந்தவர்! ஆ! கெட்டேனே யென்று வருந்தி துதித்துப் பின் னர் உடனுக இப்பாசுரம் பாடியருளினதாகச் சில்லோர் சொல்வது முண்டு. (107)

விட்டேனுலகம் விரும்பேனிருவினை வினைருடன், கிட் டேனவருரை கேட்டுமிரேன்மெய் கெடாதநிலை, தொட்டே

ன்சுகதுக்க மற்றுவிட்டேன் றெல்லைநான்மறைக்கும், எட்டேனெனும்பர மென்னிடத்தேவந்திங் கெய்தியதே.

(போ - ரை.) சதுர்வித பழமறைகட்கும் எட்டப்படாத பரம்பொருளார் என்பால் வந்தமர்ந்த பின்னரே யான் உலகானுப வாதி இச்சைகளை யெல்லாம் ஒழித்து விட்டனன். வீணை வம்பர் முதலாயினேரையும் சேர்ந்திலேன். அன்றி அன்னோர் கூறும் சொற்களுக்குங் காதுகொடேன்; சத்வாம்ஸ குணானுபவமே விருத்தியாகக் கொண்டு விட்டேன்; மற்றும் சுகதுக்காதிகளையுங் குறிக்கொண்டேன்.

(கு - ரை.) பாவபுண்ணிய வினைகளையே இருவினையென்றார்; மெய்கெடாத நிலையென்றது ஈண்டு யதார்த்தமாய ஞானமுடிபு; அஃதாவது, மாயாபந்த மொழிந்த சுத்தநிலை யெனினுமாம். மலபந்தத்தால் மறைப்புண்டிருந்த சிவபரஞ் சுடரார் பந்தமறைப்பாய எழுவகையும் நசிக்க, அதன்மேற்பட்டுள்ள நன்னிலம்விட்டுப் பகிர்முகம்பட்ட மாத்திரமே பிரபஞ்சாதிய வனுபவங்களி னின்றும் மனமானது வேறுபட்டு விட்டமையானே 'விட்டேனுலகம்' என்று திடப்பிரக்ஞராகக் கூறத் தலைப்பட்டனர் போலும். சான்றாக,

மக்களு மனையுநீத்து மாதரா ராசை நீத்துச்
சொர்க்கமே லாசை நீத்துச் சுத்தனைப் பற்றொன் றின்றிக்
கர்க வேண்டியது நீத்துச் கருதிரு வினையு நீத்து
நிர்க்குண சிவந்தானாகி நிற்பர் நிட்டாநு பூதர்.

என்று சி. வள்ளற் பெருந்தகையோர் வான்முறையாம் இப்பாசுரக் கருத்தினை தழீஇனார்போலும். இன்பதுன்பாதிகள் நீங்கவே பிறவியின்மையும், பிறவியற்ற போதே பேரானந்த முதயமுமான தால் 'நான்மறைக்கெட்டா பரம் வந்தெய்தியதே' யென்றனர்.()

அட்டாங்கயோகமு மாதாரமாறு மவத்தையைந்தும்
விட்டேறிப்போன வெளிதனிலே வியப்பொன்றுகண்டேன்
வட்டாகிச்செம்மதி பாலூறலுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாதபேரின்ப மென்னைவிழுங்கி யிருக்கின்றதே.

(போ - ளை.) எட்டங்கங்களோடுங் கூடிய யோகத்தினையும், அறுவகை யாதார நிலையையும், ஐவகையான அவஸ்த்தை யினையும் கடந்து மேல்நோக்கிச் சென்று அப்பரவெளி வீட்டினுள்ளேபோக, ஆங்கே அதிசயமொன்று கண்டனன்; அதைக்கண்ட மாத்திரத்தே சந்திரமண்டல தாரையி னின்றிழியும் அமிர்தபானம் பண்ணிக் களித்தேன். அப்போதே நம்முயற்சியினாலே கிடைத்தற்கரிய நிரதிசயானந்த மயமாயிருந்தனன்.

(கு - ளை.) அட்டாங்க யோகமாவன.—இயம நியமாதி எட்டங்கங்களோடுங் கூடியிருந்து யோகசாதனை புரிதலாம். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை இவையே ஆறுதாரமாகும். அவத்தை யைந்தாவது; சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதம் ஆக இவைகளைக் கடந்து மேற்செல்ல, ஆங்கே பரவெளியாய்த் தோன்ற, அவ்வெளிநடுவிலே வட்டவடிவாய் சோதிமயங் காணப்பட, அதினின்றுந் தோன்றி வழியும் அமிர்தரஸ பானம்செய்து பசிதாகங்களொழிந்து பரமானந்த சகிதமான நிட்டை புரிந்து நிற்பர் சிவராஜயோகிய ரென்பார். நமது சுவாமிகள் யோகநிட்டை சாதித்து ஞானமிர்த பானபரனாய்க் கரண சேட்டையற்றும், பசிதாக மொழிந்தும் நிர்ச்சிந்தையாய் அவ்வானந்தத்திலேயே அதீதமாயமுந்தி, திளைத்தமையையே ‘பேரின்பம் என்னை விழுங்கியுள்ளதே’ என்றனர்.

ஸ்ரீமந் மாணிக்கவாசகர் தம் திருஞானத்தாழிசையில் “சுழியாகிய முனைகண்டபி னூற்று ருறவற்றூர், சூதும்பல பொய்வாதமும்

விட்டார் பிறர்க்கிட்டார்'' என்றனர். இக்கருத்தினைச் சுவாமிகளார் யோகமுறைபற்றி, ஆருதார வழியாம் படியேறிச் சென்று அண்ணாக்கினை அணுகிச்செல்லும் புழைவழியேகி மூக்கு நுனியாம் இருகண் புருவமத்தியாகிய சுழிமுனைச் சோதியென்றும், நந்தியொளியென்றங் கூறுநின்ற முக்கோணமாட நடுவோங்கும் சுடருதயம் கண்டு வணங்கியதின் காரியமாகவே, மேலே மணிவாசகர் பேசிய வண்ணம் சுழியாகிய முனைகண்டவுடனேயே உற்ருர் உறவார்பெற்ருர் முதலாய பழய வழக்க வாசனைகளை யெல்லாம் தாமேயற்றுப் போமென்றபடி கண்ட தம் அனுபவத்தையே மேற்பா சுரத்தால் விளக்கினமை காண்க; அஃதாவது விட்டேனுலகம், விரும்பேனிருவினை, வீணருடன் கிட்டேன், அவருரையுங் கேளேன், சுகதுக்கமு மற்றுவிட்டேன்; காரணம் 'பரம்' 'தன்பால் வந்தெய்தியதால்' என்று குறிப்பிட்டதை நன்குகுறித்துணர, செவ்வனே விளங்கும். இவ்வுண்மையையே ஓர் பரமயோகியும்

"ஞான, சீதசீதளபூர்ண மதிமண்டலச்செழுந் தேன்மடை திறந் தண்டுளந், தேக்கிட்டு அடற்பெரும் பசிநீக்கி மௌனச் செறுக்குற்று, உலாவுகரணச் சேட்டையற்று, அருளின்ப வீட்டி நாட்டத்தையென் சிந்தைகுடிவைத்தபரனே" என்று

துதிகூறினமையான் நன்குபுலனுகும். இவர், பரம சிவராஜ யோக ஜீவசமாதியாம். (109)

எரியெனக்கென்னும் புழுவோவெனக்கெனு மிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக்கென்னும் புன்னுயெனக்கென்னு மிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தே னிதனுலென்ன பேறெனக்கே.

(போ - ரை.) ஆவியார் அகன்றதன் பின்னர் ஆற்றொுணு நாற்றப்பீசும் ஆக்கையையோ, அக்னி தனக்கெனும்; அதன்றி புழு

வானது தனக்கேயென்றம் கூறும்; இம்மண்ணே, தன்னதே யென்றும்; பருந்தானது நானிருக்கிறே னென்று கூறும்; நரியானது நான்நெடுநாட் சுதந்தரன் என்றும்; கேவலமான சுவானம் தனக்குப் பாத்தியங் கூறும். இவ்வண்ணம் ஒவ்வொன்றுங்கூற, இவ்வுண்மையறியாது நான்மிகவும் போற்றி வளர்த்து வந்தேன்; கடைசியாக பயனொன்று மின்றென வறிந்தேன்.

(து - ளா.) மேற்பாசுர பிரகாரமாகவே சரீரத்தை

"உழுநரிக் கணங்களுக் குதவுமொண் பொருள்
கழுகினிக்குணவு கட்டிய களஞ்சியந்
தழலினுக் கிந்தன மானச்ட்டக
மெழிலுறப் புனையினு மிருப்ப தல்லவே." என்று செவ்வந்திப் புராணமுங்கூறி வருகின்றது. இவ்வாறாக இதுமட்டுமல்ல, இன்னும் அநந்த நூன்முறைகளும் இம்மானிடச் சரீரத்தைப் பற்றி அநியனித்தியத்துவ மானதெனவும், இவ்வுடலைத் தாங்கியுள்ள ஆன்மாவுக்கு எதும் பயனின்றெனவும், இவ்வுடம்பை பல ஜெந்துக்களும் அக்னியும், மண்ணும் தனது தனதென்றும் எண்ணிக்கொண்டிருந்து ஈற்றில் ஒருவாறாய் அழிவெய்துகின்றது ஜெகப்பிரசித்தம்.

ஆனல் இச்சரீரத்தை நாம் கடவுளிடத் தேற்றுவந்தது, இவ்வாறாக அழிந்து நிலையடையாது சங்கற்பித்துப் பெற்றுவந்தோ மில்லை. பின்னை வந்தகாரணந்தான் என்னையோ வெனின், இதுகாறும்; எடுத்துவந்த பலவகை இழிந்த பிறவிகளைப் போலாது அருமையான மானிட வடிவம் பெற்று வந்தது, இனியும் பலயோனி வாய்ப்பட்டுப் பிறந் திறந்துழன்று நின்புறு வாறாக எற்ற நிஷ்காமிய தவம் புரிதற்கு இம்மனித சரீரமன்றி மற்றெந்தச் சரீரத்தாலும் இயலாதாதலானே இதற்கென தவஞ்செய்து பெற்றுவந்துள்ளோ மென்றும், அம்முறையை இப்பூமியில் வந்து பிறந்தபின்னர் மாயா மயக்

காலும் இந்திரஜாலம் போன்ற கோலாஹல உலகியல் வாழ்வையே பிரதானமாகக் கொண்டு மயங்கி, வந்தகொள்கையை மறந்து, வீணே மாயும் மடமையினின்றும் கண்விழித்து பக்தி யோக தவ ஞானங்களாலே இச்சரீரத்தையே சாதகமாகக் கொண்டும், இது வீழ்வதற்குள்ளாக உத்தமமான மெய்த்தவ யோகஞான பதவிகளுக்கு ஆளாகி விடுங்கள்; இதிற்சிறிதுங் கவலையிரா திருப்பீரேல் உங்கள் கதி அதோகதியாய் ஒரு பயனுமின்றிக் கடைசியாக நிர்க்கதியாய் விட நேரும்; சரீரம் நீண்டநாளிருக்கு மென்றெண்ணி யேமாந்துபோய் விடாதீர்கள்; விழித்துத் தவத்தில் தலையிடுங்க ளென்று நமது பட்டினத்தடிகள் மேற்பாசுரங்களால் உலக பாமரர்களை நன்கு தூண்டினரென்றே உறுதியாகக் கூறலாம். (110)

அண்ணறன்வீதி யரசிருப்பாகு மணிபடையோர்
நண்ணொருநா லொன்பதாமவரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணென்பசிக்கு மடைப்பள்ளியான சுகமுமெல்லாம்
எண்ணிலிகால மவமேவிடுத்தன மெண்ணரிதே.

(போ - ளா.) பரிபாஷை சூசனமாய்ப் பாடப்பெற்ற பாசுரம். (நாம்பெரிய வீட்டிலிருப்பது போன்று) ஆன்மவரசன் நஞ்சரீரத்தைச் சிற்றூராகக்கொண்டு இருதயமே சிம்மாசனமாக வீற்றிருந்து ஆறுதாரங்களையும் தாம்வாழும் திருவீதிகளாகப் பாவித்துலவி, தத்துவம் ௩௬ - யும் தனக்குற்ற படைத்துணையா யாக்கிக்கொண்டும், மற்றும், அவ்வான்ம வரசனுக்குப் பசிக்குணவு தயாரித்தற்கு அரையிடமாயுமுள்ள வீடும் மடப்பள்ளியுமாக வகித்துக் கொண்டனர். ஆகவே, இவ்வாறுய சவுக்கியங்கருதி வெகுகாலத்தைத் தெரியாமையால் கழித்துவிட்டனன். அதுவிஷயமாக மீண்டும் யோசிப்பேணுயின் மகா அருமையாக விளங்கும்.

(கு - ளா.) ஆன்மாநுபவ காரணமாய் முடிந்துள்ள சுகானு பூதியை மிகவும் விசேடமாயெண்ணி, அதன் கண்ணே கட்டுண்டு கிடந்ததைத் தவிர்த்து அதற்குப் புறம்பாகவோர் சுவாநுபவத்திலே இலவலேசமும் பெற்றறிந்திலனாயினன் என்பவர் "எண்ணிலி காலம் அவமே விடுத்தனன்" என்றனர். (111)

என்பெற்றதாயரு மென்னைப்பிணமென் றிகழ்ந்துவிட் டார், பொன்பெற்றமாதரும் போவென்றுசொல்லிப் புலம் பிவிட்டார், கொன்பெற்றமைந்தரும் பின்வலம்வந்து குட முடைத்தார், உன்பற்றொழிய வொருபற்றுமில்லை யுடைய வனே.

(போ - ளா.) சகலத்தையும் அடிமையாய்க் கொண்டோய்; என்னைப் பெற்றுவளர்த்த அன்னையாரும் எனைச்சவமாகக் கருதி வெறுத்தனள்; எனது பொருள் கொண்டுவந்த மனையாளும் வெருட்டி விட்டனள்; பலசாலிகளான பிள்ளைகளும் சுற்றிவந்து குடத்தை உடைத்தனர்கள்; ஆகவே, இனியெனக்குத் தம் பற்றன்றி வேறொரு பற்றும் கிடையாது.

(கு - ளா.) உயிர் நீங்கிய பின்னர் அச்சவத்துக்குச் சொந்தமா யுள்ளார் எவரும் அவர்க்குத் துணையே யாகார்; இது உலகடங்க லுக்குமுள்ள இயல்பு. ஆனல் ஒருவர்மட்டும் உயிர்த்துணையாயிருப் பார்; அவரும் எப்படித்துணையாவர் எனின், "நமக்குக் கடைவழிக்கு அவன்றுள் துணையெனவறிந்து அன்பு பக்தி முதலியனசெய்து வந் துள்ளவன் எவனே அவனுக்கு மட்டும் அந்தியகாலத்தில் துணையா யேகுவ" னெனவறிதல் வேண்டும். ஏனையோர்க்கு துணையா கான் இது நிச்சயம். இதற்கு ஓர் சுலபமான பிரத்தியக்ஷ அத்தா க்ஷியே போரும்; அதாவது, நம்முடைய ஜீவதசைகாலத்தில் நாம்



பட்டினத்தடிகளை கழுமரம் ஏற்றும்போது எரியச்செய்வதும், அரசனை ஆட்கொள்வதும்.

யார்ாரிடம் அன்பும் உரிமையும் பாராட்டி வருகின்ருேமோ அவர்களே நமக்குரிய விசேஷாதியன நிகழுங் காலத்தும் நம்பால் அன்பும் உரிமையும் பாராட்டி வருகிறதைப் பார்க்கிருே மல்லவா? இதே போன்று தான் கடவுளிடத்தும் யோர்க்கனவே அன்புவைத் திருப்பவருக்கு அக்கடவுளும் அன்புவைத் துதவி வருவரென்க. இக்கருத்தினையே திருவள்ளுவரும்,

"அன்றறிவாமென்ன தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்ருத்துணை" யென்ருர். ஈண்டு அறத்தைக் குறித்தாரேனும், அன்பினுக்கும் அம்முறையேகொள்க. (112)

கறையற்றபல்லுங் கரித்துணியாடையுங் கள்ளமின்றிப் [ந்
பொறையுற்றநெஞ்சமும் பொல்லாதவூணும் புறந்திண்ணையு
தறையிற்கிடப்பு மிரந்துண்ணுமோடுஞ் சகமறியக்
குறைவற்ற செல்வமென்றேகோல மாமறை கூப்பிடுமே.

(பொ - ரை.) யாதோர் பழக்கத்தானும் குற்றமற்ற வெண்பல்லும், கருமையழுக்குப் படிந்த வஸ்திரமும், வஞ்சக மென்பது கொஞ்சமு மில்லாததும், பொறுமை வாய்ந்துள்ளதுமான நன்மனசும், உருசிகர மில்லாத வுணவும், புறம்பேயுள்ள திண்ணைப்புறவாசமும், தரைப்படுக்கையும், பிச்சையேற்றுப் புசிக்கும் திருவோடும், ஆக இவைகளெல்லாம் என்றுங் குன்றுதலில்லாச் செல்வ மாகும் என்று உலகோரறிய வேதநூல் விளம்பும் என்கின்ருர்.

(கு - ரை.) மேற்பாசுரத்தில் குறிப்பான விஷயங்க ளில்லையாதலால் எழுதப்படவில்லை. ஆனல் ஒன்றுமட்டும் சொல்லலாம், என்னையெனின், பரதேசிகளாகிய மெய்த்துறவாளர்க்குரிய உபகரணச் சாமான்களை சுவாமிகள் மிக்க அன்போடு "குறைவற்ற செல்வமென்று கோலமாமறை கூப்பிடும்" என்ருர். துறவிகளுக்குத் துறவிகள், ஞானிகளுக்கு ஞானிகள், யோகிகளுக்கு யோகிகள்

ஆகிய இத்தகையினரே நம்மினத்தவ ரென்று அவர்களை யடைந்து அவைகளுந் தரவுபூண்டு விட்டமையானும், வெறுந்தடிப் பரதேசிகளை யடையாது, சத்துவகுண உத்தமோத்தம பாத்திரர்களான ஞானியர் கரதலமமரவும் அதற்கு யோக்கியதையும், வற்றாததும், அக்ஷயமும் பொருந்தி பெருமைபெற்றதால் அவைகளைப் பற்றி மறைபுகழத் தகுமென்னலாம் என்று சித்தாந்தித்தே அங்ஙனங் கூறலாயினமையால் யானும் அதை அநுசரித்தவ னாயினேன். (113)

எட்டுத்திசையும் பதினாறுகோணமு மெங்குமொன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித் தங்கக்ஷத்தில்வைப்பர் கருத்தில்வையார்
பட்டப்பகலை யிரவென்றுகூறிடும் பாதகரே.

(பொ - ரை.) எண்திசா முகங்களென்ன, பதினாறுகோண திசைகளென்ன ஆக எவ்விடத்தும் ஓர் படித்தாயே நிறைந்திருந்து வெளித்தோன்றும் பரஞ்சோதியினை அறிவிலாரனைவர்களும் கட்டிச் சுருட்டித் தங்கள் கக்ஷத்தில் வைப்பரேயன்றி வைக்க வேண்டிய கருத்தகத்தில் வைத்திடார்கள்; இவர்களையே பகலை யிரவென்று சொல்லக்கூடிய பாதகர்க ளென்னும் உலகம்.

(கு - ரை.) சோதியைக் கட்டிச்சுருட்டி கக்ஷத்திடுவர் கருத்தில்வையார் என்றது இங்கே அச்சோதி நாதனைப்பற்றி முழங்கும். சுருதியாதிகளை யென்று பொருள் மறைந்துகிடத்தலின் என்று நூலுக்கானமையான் அங்ஙனம் ஆகுபெய ரென்றறிதல் வேண்டும்.

எண்டிசை யென்ன, பதினாறுகோண திசைகளென்ன, இவைகள் ஒருமித்த அண்டபிண்ட பிரமாண்டங்க ளுள்ளும் அன்றி அண்ட பகிரண்டங்களினும் மற்றெங்கணும் சர்வபரிபூரண அகண்ட தத்துவ சச்சிதானந்த ஒப்பற்ற ஒருதனிப்பெரும் பதியாளரைப் பற்

றிப் பேசுகின்ற வேதசாஸ்திர புராணேதிகா சாதிகள் எவற்றினும் யேகதேசமாயுள்ள சிலவிஷயங்களை மட்டும் இங்கொன்றும் அங்கொன்றுமாய்த் தெரிந்துகொண்டு அதையும் நெஞ்சினிற் பதியாது சுவடியில்தா னிருக்கிறதே யென்று கயிர்கொண்டுகட்டி கக்ஷத்தில் வைத்துக்கொண்டும், தன்கருத்தகத்திருக்கும் கண்ணப்ப நாயனை கண்டறிந் துய்யுங் கணக்கறியலாற்றாத கள்ள ஞானக்கற்றறிமோழையர் வாய்ஞானம்பேசி வாழ்நாளை வீணாகக் கழித்து, "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே தேசோமயானந்தமே" என்று தாயுமானர் வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டியருளியதையும்,

> "தேடிக்கண்டு கொண்டேன், திருமாலொடு நான்முகனுந்
> தேடித் தேடொணா தேவனையென் னுளே
> தேடிக்கண்டுகொண்டேன்"

என்று ஆப்தர் அருளிய திருமொழியையு முணர்ந்தறிய வியலாதவர்களாய், அந்த தன்னுட் கலந்த சோதியை, யெங்கெங்கோ விருப்பதாக வறிந்து அங்கங்கு மோடியுழன்று கக்ஷகச்சுவடியும் கைவிட்டு, ஒருநிலையு முணராது

> "ஓடியோடி யோடியோடி யுட்கலந்த சோதியை
> நாடிநாடி நாடிநாடி நாட்களுங் கழிந்துபோய்
> வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மானிடர்
> கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே."

என்ற திருப்பாசுர பிரகாரமுள்ள எத்தனையோ 'அஸனத்துவம் ஸரை'க்குறித்தே நம்சுவாமிகள், 'பட்டப்பகலை யிரவென்றுகூறிடும் பாதக' ரென்றார் போலும். எங்கணும் வியாபியாயுள்ள பரம்பொருளை ஒரோரிட மிருப்பதாய்க் குறித்து வீணே அலைந்து கடைசியாகத் தன்னகத் தேவனை மறந்தமையானே 'மூடரெல்லா' மென்றனர், சுவாமிகளார். (114)

வாய்நாறுமூழன் மயிர்ச்சிக்குநாறிடு மையிடுங்கண்
பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குழிவாய்ச்
சீநாறும்யோனி யழநாறுமிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க் கோவிங்ஙனேமனம் பற்றியதே.

(பொ - ரை.) வாயில் ஊழல் வெப்பு நாற்றம் வீசும்; தலைமயிரில் வியர்வையழுக்கு நாறும்; மையிட்டு மயக்குங் கண்களில் பீளைப் பீநாறும்; சரீரமெல்லாம் ஓர்வகை துர்நாற்றம் வீசும்; பெரிய மலஞ் சரிவழி வாய் நரகநாற்றம் வீசும்; அல்குல் அழல் நாற்றம் வீசும்; விந்துவெனும் சுவேதநீர் சிந்தி பாய்நாறும்! ஆக இத்தனை ஆபாச நிலையின் உண்மையை யறியாது; பசப்புமயக்கால் மயங்கி ரசாபாசத் தாயகமாயுள்ள மங்கையினிடத்தோ நீ இவ்வண மயங்கினய்! மனமே! உன் அறியாமை யென்னே!

(த - ரை.) மங்கையர்தம்யோனிமிசை வைத்திருக்குமாசைதனைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கைமதி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணுக் கதி.

எனச் சிவஞான வள்ளலார் மாதர்களது மயக்கறக் கூறியருளியதுங் காண்க. இதனல், இத்தனை யிழிவையு முணர்ந்த பெரியார்கள், யேதுமறியாராயுள்ள நம்மனோர்கள் மீது கருணைவைத்துக் கடைத்தேறுமாறு யெழுதி வைத்தருளியன நம் ஆராய்ச்சிக் கெட்டாது மயங்கின காலம் போக, அப்பெரியார் கூற்றை யுணர்ந்த பின்னரேனும் பண்டைய மயக்கி னிழுக்கை ஒருவாறொழித்துப் பாதிமதி வேணியனார் பாதமலரடி யிணையைப் பத்திமுறையால் பணிந்தேத்திப் பரகதிக் காளாதல் வேண்டுமென்பதே நம்பட்டினத் தடிகளார் தம் பரமார்த்த சாதனமெனக் கொள்ளற்பாலது. (115)

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந்துண் டுரைப்படியே
செருக்கித்தரிக்கத் திருநீறுமுண்டு தெருக்குப்பையில்
தரிக்கக்கரித்துணி யாடையுமுண்டெந்தச் சாதியிலும்[யே.
இரக்கத் துணிந்துகொண்டேன் குறையேது மெனக்கில்லை

(பொ - ள்.) உரையாடற் கினிய மகாமந்திரமாகிய பஞ்சாக்ஷர மிருக்கிறது; மறைமுறைவழாது விருப்பொடும் அணிந்துகொள்ள திவ்யதிரு வெண்ணீறிருக்கிறது; அன்பொடு மணிந்துகொள்ள குப்பைமேட்டில் கரித்துணியிருக்கிறது; பசிக்கு, ஜாதி வித்தியாசம் பாராட்டாது பிச்சையேற்கவும் துணிவு கொண்டேன்; இதன்மேல் எனக்கு யாதொரு குறைபாடுமில்லை.

(கு - ள்.) எனக்கிந்த உத்தமபிறவியைக் கொடுத்துபகரித்த உத்தமன் ஆணையாகிய வேதநூற்பிரகாரம் அப்பரமனை யென் சிந்தைகுடிவைத்து வணங்கித்துதித்து வருகிறேன். பண்டைய விசாரம் யாவும் பஞ்சாய்ப் பறந்தன; குறைமுறை யெங்கோ குடியோடின. பவமாற்றும் பஞ்சாக்கரமாதலின் 'நல்ல திருவெழுத்தைந்துண்டு' என்றனர். சான்றாக திருமூலம்.

"சிவாய நமவெனச் சித்த மொருக்கி
யவாய மறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
யவாயங் கெடநிற்க வானந்த மாமே." (116)

ஏதப்பட்டாயினி மேற்படும்பாட்டை யிதென்றறிந்து
போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்சென்று புல்லறிவால்
வாதைப்பட்டாய் மடமாதர்கலவி மயக்கத்திலே
பேதைப்பட்டாய் நெஞ்சமேயுனைப் போலில்லைபித்தருமே.

(போ - ரை.) ஏ மனமே! நீ குற்றவாளியாயினை; மெய்ஞ் ஞானியரைத் துணைபற்றி மேலே சென்றடையும் பான்மை யின்னனவென்றறிந்து மெய்ஞ்ஞான மேவினபாடில்லை; இதுகாறும் நின் சிவபோதத்தாலேயே துன்பமெய்தி வந்தனை; பேதைமை மிக்குள்ள மான்விழி மாதரார்தம் மயக்கும் போலிச்சுகத்தில் படிந்து பாழ்பட்டாய்; ஆனதால் நின்போன்ற பித்தர் இங்கில்லை யென்பேன்.

(கு - ரை.) "வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய்" என்ற ஆன்றோர் நல்லுரைப்படியே இச்சென்ம மெய்தி பல்வகைத் துன்பங்கட் காட்பட்டமையாலேயே பூர்வ ஜெனனப் பிழை பாட்டினை நன்குவிளக்கு கின்றது; இதனால் 'ஏதப்பட்டாய்' எனக் கூறலாயினார் ஏதம்-குற்றம். "சென்றது கருதார்" என்றபடி போனது போக, இனித்தவறாது சீவபோதங்கழன்று சிவபோதமுறப் பரிந்து பரமஞானபரானைக் கடைப்பிடித்து அவர்தம் இன்னுரைக்கிசைந்து நன்னெறியாம் ஞானப்பிரசாதங் கைவல்யமாதற்பொருட்டே 'இனி மேற்படும் பாட்டையறிந்து போதப்பட்டாயில்லை' என்றனராக. ()

சுரப்பற்றுவல்வினை சுற்றமுமற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர் கையிணக்கற்றுக் கவலையற்று
வரப்பற்றுநாதனை வாயாரவாழ்த்தி மனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோ பரமாபர மானந்தமே.

(போ - ரை.) சிவபெருமானே! என்செயலென்பது ஈஷத்துமில்லாதடங்கி, தீவினை யேதுவால்வந்த, பந்துமொழிந்து, காரணச் செயல்களு மொழிந்து, வஞ்சநீத்து, பெண்மக்களால் ஏற்படாநின்ற சிநேகபான்மையுந் தொலைந்து அளவிலாப் பேரன்பினலே தேவரீரை வாய்நிரம்ப வாழ்த்தி மனமாதியெல்லாம் அசர, ஆசையென்பதறவே யொழிந்த வன்றல்லவோ ஆனந்தோதய மாகும்.

(சு - ரை.) "பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவ தறிக." என்றிவ்வாறுக மணிமேகலை கூறற்கிசைய, கொடியவினைத் திட்பங்களென்ன, பந்துமித்திர தொந்த கஷ்டங்களென்ன, கருவிகரணத் தொழில்களென்ன, இவைகளொழிந்தும், மாதர்கள் மையல் வலைப்பட் டேசல்படும் பரிசு மொழிந்தும், பற்பல பிரவிர்த்திகளால் உண்டாந் துன்பமொழிந்தும், நிராசை பரந்து விரிந்த காலமன்றோ பரமானந்த நித்திரைவரும் என்பதாயிற்று; ஆகவே சர்வவினைகளுக்கும், பிறவிக்கும் மூலவித்தாயுள்ளது பற்றென்ப தாயிற்று. இவ்வுண்மையையே அருட்பிரகாச வள்ளலாரும்.

"பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பாமே" என்றதனாலும் பற்றே சென்ம வித்தென்பதாயிற்று என்றறிக. (118)

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லா
நாய்போலருந்தி நரிபோலுழன்று நன்மங்கையரைத் [ம்
தாய்போற்கருதித் தமர்போலனைவர்க்குந் தாழ்மைசொல்லி
சேய்போலிருப்பர் கண்டீருண்மைஞானந்தெளிந்தவரே. [ச்

(போ - ரை.) மெய்ஞ்ஞான சித்திபெற்றவர்கள், பிசாசைப் போன்று அலைப்புண்டும், சவம்போன்று விழுந்துகிடந்தும், யார்யார் பிச்சை யிடினும் அவற்றை யெல்லாம் நாயைப்போல் தின்றும், நரியைப்போல எங்கணுந் திரிந்தோடியும், கற்பலங்காரிகளைத் தன்றாயர் போலுமெண்ணியும், சமஸ்த ஜனங்களுக்கும் பந்துபோல் தாழ்ந்த வார்த்தைகள் கூறியும், பால்ய பிள்ளைபோல் விளங்குவர்.

(து - ரை.) மெய்ஞானியர்கள் மேற் கூறியவாறு பலபடித்தாய் விளங்குவதோடும்,—

உம்பர்வாழுலகம் வேண்டார் உலகரசாக்ஷி வேண்டார்
பொன்புனை மகளிர்வேண்டார் புண்ணிய பாவம் வேண்டார்
இன்பொடுதுன்பம் வேண்டா ரிறப்பொடு பிறப்பும்வேண்டா
ரைம்புலப் பகையைவேண்டா ரறிவினையறிந்தமேலோர்.
சி - வள்ளலார். (119)

விடக்கேபருந்தின் விருந்தேகமண்டல வீணனிட்ட
முடக்கேபுழுவந் துறையிடமே நலமுற்றுமிலாச்
சடக்கேகருவி தளர்ந்துவிட்டாற் பெற்றதாயுந்தொடாத்
தொடக்கேயுனைச் சுமந்தேனின்னி னேதுசுகமெனக்கே.

(போ - ரை.) நரமாம்ஸ பிண்டமே; பருந்துக்கினிய விருந்தே! கமண்டல காத்துச் சதுர்முகப் பிரமன் சிருட்டிசெய் கோணலோய்! புழுத்தங்குந் தாயகமே! நலமிலாச்சடலமே! அங்கந்தளரின் அன்னையுந்தீண்டாத சூதகப் பொருளே! நின்னை யான் இதுபரியந்தமும் சுமந்தேன், நின்றாலணுத்துணைச் சுகமெனக்கேயுற நேர்ந்திலதே.

(து - ரை.) இந்தமனித அம்ஸத்தின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் ஆய்ந்துணருங்கால் கேவல தரத்தினவாய் விளங்குவதாலேயே பண்டைய பலஞானிகள் சமயம் நேர்ந்துழி மலபந்தமே தொந்தமாயுள்ள இந்த ஜென்மமே வேண்டேன். கொடுத்த நீரே எடுத்துக்கொள்ளும் இதனாற் பெற்றபலன் போதுமென்றுவருந்தினதுலகறியும். சான்றாக சேதுபுராணம்.

பழித்திடுங்கோழைமூளை பற்றியவழுக்கு மற்றை
யொழித்திடுமலநீர் வெண்ணீ ருவையிற்றி னுலகத்தொன்று

மிழிப்புறு பண்டமில்லை யிவற்றினுக் கிடமாயென்று

மழிப்புறு மியாக்கை காப்பா ரறிவுளா ராகுவாரோ? எனக் கூறலுங் காண்க. பத்தியு ஞானமும் பதிந்தயோகமும் நத்தியீண் டுஞற்றின் மேலாம் நற்கதி யடையலாகும் என்று கருதி அவ்வழி நில்லாது, அத்தமும் வாழ்வும் அழகிய பெண்டிரும் நித்தமும் நம் பால் நிலவி துய்த்திடலே முத்தியு மோக்ஷமதாகு மெனக் கிடந்து, இச்செனனத்தில் துன்பத்திற் காட்பட்ட பின்னரும் அன்ன துணை ராது ஆக்கையே கதியா யழுங்கினையே! யென்றகங் கருதியே "எனக்கேது நின்னால் சுக" மென்று வருந்தியதா மென்றபடி கூறினரென்க. (120)

அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்ன வாவதில்லை
தொழுதாற்பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த
பழுதாற்பயனென்ன நன்மையுந்தீமையும் பங்கயத்தோன்
எழுதாப்படிவருமோ சலியாதிரென் னேழைநெஞ்சே.

(போ - ரை.) என் ஏழைமனதே! நின்னறியாமையால் நீயே தேடிக்கொண்ட துன்பத்தைக் கருதி விசனமுற்றால் என்னபயன்? அன்றி மனநோவதினால் யாதுபயன்? அப்போதுபோய்த் தொழுவ தால் ஆவது யாது? ஒருவன் நின்னை புண்படிக் கடிந்து கூறினும் பயன்யாது? ஆகவே ஒன்றுமாவதில்லை; வரும் நன்மை தீமைகள் பிரமதேவனால் முன்னம் விதிக்காமல் வந்து எய்துமோ? ஆகவே இனி நீ தயங்குதலொழிக.

(கு - ரை.) "வேதாவை யிவ்வணம் விதித்தவா றேதென்னில் உன்றன் வினைப்பகுதி யென்பனந்தோ" என்றனர் தாயுமானர்; இதனால், இன்பதுன்பங்களுக்குக் காரணம் நீயேயாதலின் யாரை நோவது என்றறிந்து அடங்குதி என் றறிவுறுத்தினர் போலும். அன்று ஆலோசியாது கர்மாவைச் செய்துவிட்டு இன்றுபோய் ஆல

யந்தொழுதாற் பயனென்றுந் தாரா. ஆதலால் நீ சலியாதே; என்று கூறினர் என்க. (121)

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக் கழுவேற்றுநீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச் சுற்றத்தைநீங்கிச் சகநகைக்க
வேரீருமக்கவர் தாமேதருவ ரிணையடியே.

(போ - ரை.) ஊரிலுள்ளவர்களே! நான் உங்களுக்கோதும் உபதேச மொழியைக் கேட்பீர்கள், பண்டு சமணர்களைக் கழுவிலேறச்செய்த திருவெண்ணீற்றினை தேயத்தாரனைவோரும் தரிப்பீர்களாக; புறந்திண்ணையைத் தேடி யுறங்குங்கள்; சந்தைக் கூட்டமொத்த உற்றூர் பெற்றூர் நட்டார் யாவரையும் விட்டொதுங்கி நாட்டார் நகைசெய்யப் பிச்சையேற் றுண்பீர்களாக; இவ்வாறு என் மொழியை நன்மொழியாக்கொண்டு செய்வீரேல், எம்பெருமான் தண்ணருள்கொண்டு வலியவந்து தம் தெப்பமாந் திருவடிதந்து சம்சாரக்கடலி லாழ்ந்து கரைகாணாது தத்தளிக்கும் உங்களைத் தயவொடுங் கரையேற்றுவர்.

(கு - ரை.) ஊரீர் - முன்னிலை விளித்தல். ஞானம் எய்தற்கு சரீர அநித்தியத்துவம் நாளும் நினைவில் வருதல் அவசிய மென்பார் 'உடம்படங்கப்போரீ' ரென்றனர்.

கங்காளன்பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற்பூச மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வீரே. என்ற வெண்ணீற்றின்பெருமையையும் அதன் வலிமையையுங் கூறுவான் வந்தார் "சமணைக் கழுவேற்று நீற்றை" யென, அதன்பெருமையை விளக்கிக்கூறி

ஞரென்க. ஈண்டு 'நித்திரை யென்றது பேய்நித்திரையை யன்றி யோகநித்திரை யெனக் கூறன்முறையாம். மற்றும் மேற்கூறிய வனைத்தும் ஆன்மாக்களது உண்மாசு கழிந்து பற்றறுப்பான் உபாயங் கூறியவண்ணம் அநுட்டிக்க, அதனால் அவனது பற்றுத் தோன்றி யாட்கொள எதுகூறுவான் பாடியபாசுர மாயதென்க. (122)

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமறைநூல்
ஏற்றிக்கிடக்கு மெழுகோடி மந்திரமென்னகண்டாய்
ஆற்றிற்கிடந்துந் துறையறியாம லலைகின்றதே.

(பேர் - ரை.) ஏ நெஞ்சமே! நீ திருவெண்ணீற்றை முழு நீறுபூசிய முனிவர்போற் சரீரமெங்கணும் பூசினும் யாது பிரயோசனமாகும்? அன்றி தீர்த்தாடனார்த்தம் யாத்திரை புரியினும் பயன் யாது? அஞ்ஞானநெறிவிட்டு மெய்ஞ்ஞானவழி தொட்டு அவன் வழிநிற்றற் கறிந்தாயில்லை! பெருமை வாய்ந்த சதுர்வேத தாற்பர்யங்களையும்; எழுகோடி மந்திரங்களையும் நன்கு உணர்ந்தாயில்லையே! ஆற்றிலிருந்து துறைகண்டேற வறிந்தாயில்லை, அங்குமிங்குமாக வலைந்தென் பயன்?

(கு - ரை.) மாற்றிப்பிறக்க வகையறியாதபோது நீற்றைப் பூசியும் நீராடப் போயும் என்னபயன் கண்டாய்? என்றனர் சுவாமிகளார். ஈண்டு மாற்றிப்பிறத்தலாவது: காம்யார்த்தப் பிரவிர்த்தி மார்க்க ஹேதுவாம் இல்லற ஆசிரமத்தினின்றும் நிஷ்காமிய ஹேதுவாம் துறவற ஆசிரமத்தைப் பெற்றுத் தவமியற்றலாம். எப்படியெனில் இவ்வாறு மாறிப்பிறவாது ஆசாபாசங்களில் ஆழ்ந்து ஆகாரம் நித்திரை மைதுனம் என்னும் அநித்திய போக போக்கியங்களையனுபவித்துக் கொண்டு திருநீறணிந்தும் நிவ்யநதிகளில் தீர்த்தாட

னஞ் செய்தும் வந்தால் இனிப்பிறந்திறவாத பேரின்ப முத்தியென்பது சித்தித்து விடுமோ? ஒருபோது மின்றும். என்னும் இக் கருத்தினை அகத்திற் கொண்டே 'நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன' என்று கூறினரேயன்றி நீறுபூசுவதால் பயனின்று, ஆகையால் நீறு பூசாதேயுங்கள் என்று கூற வந்தவரேயன்று. அங்ஙனம் திருநீற்றையே பழித்ததாகக் கொள்ளின், முற்பாசுரத்திலே "சமணரைக் கழுவேற்றிய திருநீற்றைப் பூசுங்க ளென்று உபதேசிக்கும், இன்னும் பின்னே கூறியுள்ள ஓர் பாசுரத்தில் "திருநீறுமிட்டுக் கையுந்தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவுங் கற்பியுமே" என்று வேண்டியும், மற்றும், மாமறைநூல் எற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டாய், ஆற்றிற்கிடந்துந் துறைதெரியாமலலைகின்றதே என்றும் கூறற்கிடனின்றும்.

ஆகவே சுவாமிகளாரது ஆழ்ந்த கருத்தினை நன்குணர்ந்து சம்சார சாகரத்திற் கிடந்தழுங்கியது போதுமென்று, அதன் கரையாகிய துறவாச்சிரமம் புக்கி தவஞ்செய்து மனமொருமித்து தற்போதங்கழன்று சிவபோதமுற்றுத் தியானயோக சமாதியால் உட்கலந்த சோதி சொரூபத்தை அபரோக்ஷமாகத் தரிசித்து பிறப் பிறப்புந் தொலைந்து ஞானனந்த யோகநித்திரையிற்சொக்கி சாயுச்சியத்தைப் பெறவேண்டுமென்பதே ஐயன் கருத்தெனக் காண்பார் அத்துவிதபாத்தார் "தீர்த்தமாடினாலும் அகப்பேய, ஊத்தைப்போகாதே; ஊத்தைப்போனாலும் உள்வினை தீராதே" இதனால் உள் வினையாகிய ஆசாபாச ரசாபாசந் தொலைந்து ஜென்ம வேராறுதற்கான நிஷ்காமிய தவப்படியாம் துறவறத்தையே குறிக்குமென்பதை இனியேனுமுணர்வீர்களாக. துறைதெரிந் தேறுங்கரை—அநித்திய உலகவாழ்வையொழித்து நித்திய துறவறக்கரையை. (123)

செல்வரைப்பின்சென் றுபசாரம்பேசித் தினந்தினமும்
பல்லினைக்காட்டிப் பரதவியாமற் பரானந்தத்தின்

எல்லையிற்புக்குநல் லேகாந்தமாயெனக் காமிடத்தே
அல்லலற்றென் றிருப்பேனுலநீழ லரும்பொருளே.

(போ - ரை.) கல்லாலின்கீழ் அமர்ந்தருளிய அருட்பெருங் குருவே! தினகாலமும் பொருளுடையார்பாற் சென்று, அவர்க் கினிய வுரையாடி பல்தோன்றகெஞ்சி யாசியாது பரமானந்தம் உதய மாம் ஸ்தானமருவி ஆங்கே எனக்கேற்ற விடத்திலே நிர்விசாரமா யிருந்து வாழ்ந்திருப்ப தென்றுகொலோ!

(கு - ரை.) சனக, சனந்தன, சனாதன, சனற்குமாரரெனும் நால்வர்க்கும் உபதேசித்தருள்வான் கல்லாலின் கீழ் ஆசிரிய வடிவங் கொண்டமர்ந்து சின் முத்திரை சகிதமா யெழுந்தருளி யிருந்தருளி யவர் நம் தக்ஷிணாமூர்த்தித் தேசிகராவர். ஈண்டு சுவாமிகள் அப்ப ரம்பொருளை விளித்தது எதுகொண்டோ வெனின், தான் மெய்ஞ் ஞான நிலைகண்டு தானவனாந் தத்வோபதேசத் தரிசனார்த்தமே எதிர்நோக்காக வுடைமையாந் தனிநிலை யுறுவான் வேண்டியே யென்க.

நல்லேகாந்தமாய் எனக்காமிடத்தே யென்றது யாதொரு சல னமுமிலாது ஞானவரம்பா மோனநிலையை யுத்தேசித்து யெனக்கா மிடத்தே யேகனாயிருத்தற் பொருட்டென்க. இக்கருத்தினையே தாயுமானாரும்,

"கண்மூடி மௌனியாகித் தனியே யிருப்பதற்
கெண்ணினேன் எண்ணமிது சாமிநீயறியாததோ" என்றனர்.

நமது ஔவைப் பாட்டியாரும் 'இனியவை' கூறவந்த விடத்தே எடுத்த முதற்கண் இனிது, இனிது, 'ஏகாந்தமினிது' என்று ஓதி யருளினமையும் சான்றாக் கொளற்பாலது. (124)

ஓங்காரமாய்நின்ற வத்துவிலேயொரு வித்துவந்து
பாங்காய்முளைத்த பயன்றிந்தாற் பதினாலுலகு
நீங்காமனீங்கி நிறையாநிறைந்து நிறையுருவாய்
ஆங்காரமானவர்க் கெட்டாக்கனிவந் தமர்ந்திடுமே.

(பொ - ரை.) பிரணவாகாரமாய் நின்ற ஓர் பொருளினிடமாக ஒரு விதையானது செழிப்பாய்த் தோன்றியதின் பிரயோசனத்தை யறிந்தால் ஈரேழுலகங்களினும் பொருந்தாது பொருந்தி பரிபூரணமாய், அகங்காரம் ஆளப்பெற்றார்க்கு கிடைத்தற்கரிய கனியென்றும் பரம்பொருள் வந்து உள்ளகத்தமர்ந்து தோன்றும்.

(கு - ரை.) நிட்டாபராளான தவசீலர் சர்வ வியாபகத்துவமாய பரசிவத்தோடுங் கலப்புற்று எங்கணும் வியாபிப்பர்கள் ஆயினும் சத்வாம்ஸப் பிரகிருதி சையோகமாயே விளங்கிநிற்பரன்றித் தனித்திரா ரென்க. தானெனுமகந்தை தங்கியவிடத் தமராத தனிமுதலானதால் "அகங்காரமானவர்க் கெட்டாக்கனி" யென்றனர். ஓங்காரத்தினுட் பொருளை யுள்ளபடி புணர்வாரெவரோ அந்த பரபுருஷனே நாதவடிவான நற்பரனை நன்குறப் பொருந்துவர் என்பர் மேலோர். ஆகவே சர்வ அண்டபிண்ட சராசரங்கட் கெல்லாம் மூலதாதுவாயுள்ளதும், தாயகமாயதும் பிரணவமே யென்றுணர்தற்பாற்று. (125)

விதியார்படைப்பு மரியாரளிப்பும் வியன்கயிலைப்
பதியார்துடைப்புநம் பாலணுகாது பரானந்தமே
கதியாகக்கொண்டு மற்றெல்லாந் துயிலிற்கனவெனநீ
மதியாதிருமனமே யிதுகாணன் மருந்துனக்கே.

(பொ - ரை.) நெஞ்சமே! பரசிவானந்தப் பேற்றினையே பரமப்பிரசாதமாகக்கொண்டு, கேவலம் தனுகரண புவன போகாதி

களையெல்லாம் துச்சமாகக் கண்டுகழித்து விடுவாய். இச்சித்தாந்தமே நின்பிறப்பில்லா தொழிக்குமோர் மருந்தாகும். இவ்வாறு அமைந்தால், பிரமனார் சிருட்டியும், வாசுதேவனது காத்தலும், திருக்கயிலாசகிரி மேவிய உருத்திர மூர்த்தியாரது அழித்தலும் நம்பால் நடவாது என்ப.

(கு - ரை.) போகம் பயக்கும் பொய்ப்பொருளாம் சரீரத்தையே நம்பியவர் பிடிசாம்பராவதோடு சரியாய் விடுவர் இதேபோன்று எதிரிடையான நித்திய நின்மல நிரதிசயானந்தனும் பரமேசனைப்பொருளாக்கொண்டு அவன் முறைசொண்டு அவனடிக்காட்படின் அவனே ஆன்மாவின் பிறப்பிறப்பைக் கடிந்து பேரின்ப நிலையை யருள்வனென்ப. ஆகவே சிருட்டிப்பும், காப்பும், அழிப்பும் கயிலையாளும் கண்ணுதலடியராம் மகாபக்தர்கள் மாட்டும் ஜீவன்முத்தராம் ஞானியர் பாலும் நடத்தலில்லையாகும் என்ப. சம்ஹார கர்த்தாவாகக் கூறியது ஈண்டு மும்மூர்த்தியில் உருத்திரனை யென்க. 'வியன் கயிலைப் பதியா' ரென்றது, (சிற்பர சின்மய தனித்தலைமை யிறைவனை யென்க.) ஆகவே மும்மூர்த்திகட்கும் தலைமைப்பதியாய் விளங்குவன் கயிலையாளியாம். "மூளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" என்னுந் தேவாரத்தான் நன்கு விளங்கும். (126)

நாய்க்குண்டுதெண்டு நமக்குண்டுபிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திர பஞ்சாக்ஷர மதியாமல்வரும்
பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகன் றன்னருளேக்கங்களேக்குற்கே

(போ - ரை.) ஆகாரக் கவலையில்லாது நாய்க்குக் குப்பைமேடு கடோறும் மிச்சமாக எச்சிலைச்சோறு கிடைக்கும்; அப்படியே நமக்கும் பிச்சைச்சோறு வீடெங்கு முண்டாம். நமனை வெல்லற்கு நம்வாயில் பஞ்சாக்ஷர மந்திரமுளது. இன்றென்று தெரிந்து

கொள்ளாது பீடிக்கவரும் பேய்க்கு திருவெண்ணீறிருக்கிறது; மயக்குறும் ஜனனவியாதிக்கு பரமாசிரியரது திவ்யதிருவருளுேக்கமிருக்கிறது நம்மை நோக்கியாள. ஆகவே பயமில்லை யென்பதாம்.

(கு - ரை.) நாய்க்கு என்றும் கவலையிலாச் சோறு போலவே நமக்கும் கவலையிலாச் சோறு வீடெங்குங் கிடைக்கின்றது. நம்பால் நமன் வாராமைக்குப் பஞ்சாக்ஷரமே தக்க உதவியாயுள்ளது என்றார் மேலோர். உத்தம பக்தரை திருவருளுேக்கால் நோக்கித் தீக்ஷை செய்வித்தனர் என்பது. (127)

நேமங்கணிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி
ஓமங்கடர்ப்பணஞ் சந்திசெபமந்த்ர யோகநிலை
நாமங்கள்சந்தனம் வெண்ணீறுபூசி நலமுடனே
சாமங்கடோறு மிவர்செய்யும்பூசைகள் சர்ப்பனையே.

(பொ - ரை. நியமாதிகளென்ன, நிட்டைகளென்ன, வேதாத்தியனங்களென்ன, ஆகமபாராயணமென்ன, நியாயவழி நிற்றலென்ன, நித்திய ஓமங்களென்ன, தர்ப்பணாதிக ளென்ன, சந்திகளென்ன, செபங்களென்ன, மந்திராதிக ளென்ன, யோகப்பிராதான்யம் என்ன, நாமோச்சாரண மென்ன, சந்தனாதி விபூதிகளென்ன, ஆக இவையனைத்தும் சாமங்கள் தவறாது செய்தலென்ன இவை வஞ்சகமாகும்.

(கு - ரை.) ஆலய பூசைகளென்ன, வைதிகச் சந்திஜெபமுதலிய கிருத்தியங்களென்ன, மற்றும் திரிகால வந்தன வழிபாடுகளென்ன, இன்னுமுண்டான இயம நியமாதிக ளென்ன, சங்கற்ப தர்ப்பணாதிக ளென்ன இவைகளெல்லாம் செய்யுங்கால் சிறிதேனுமனஞ்சலியாது சிரத்தையோடும் செய்தலே பயன்றரத் தக்கதாகும்.

நம்சுவாமிகள், தற்காலம் நடந்தேறும் வைதிக கிருத்தியங்களெல்லாம் கண்டு 'சர்ப்பனையே' யென்று வருந்திக் கூறினர் போலும். ().

நானெத்தனைபுத்தி சொன்னாலுங்கேட்டிலை நன்னெஞ்சமே
ஏனிப்படிகெட் டுழலுகின்றாயினி யேதுமிலா
வானத்தின்மீனுக்கு வன்றாண்டிலிட்ட வகையதுபோல்
போனத்தைமீள நினைக்கின்றையே யென்னபுத்தியிதே.

(போ - ளா.) என் இனிய மனமே! யான் உனக்கு எவ்வளவோ யெடுத்தோதியிடினும் அதனைக் கேட்டாயில்லை; நீ இவ்வாறாக ஏன கெட்டலைகின்றாய்? இனிக்காரணமின்றி ஆகாய மீனுக்குத் தூண்டிலிட்டதுபோல நீ சென்றதைக்கவனித்துப் பலவாறாகக் கலங்குகின்றாயே! ஈதென்ன வுனக்கிப்படி அற்பயோசனைவந்தது?

(து - ரை.) இப்பாசுரத்தால் சுவாமிகள் மனத்தின் றன்மையைக் கண்டு மிகவு மிரங்கி, மீண்டும் புத்திபோதிக்கின்றார். ஞானியரிலக்கணம் "சென்றதைக் கருதார்நாளைச் சேர்வதை நினையார் கண்முன், நின்றதைப் புசிப்பார் வெய்யி னிலவாய் விண் விழுது வீழ்ந்து, பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையா யொன்றும் பாரார், நன்று தீதென்னார்சாக்ஷி நடுவான ஜீவன்முத்தர்" என்னுங் கைவல்ய நியாயம் பற்றி மனதிற் கிடித்துரை கூறினராக; சென்று போனதை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்து வருந்துவதை, வானமீனுக்கு வன்றூண்டி லிட்டது போன்றுள்ளதாக் கூறிமறுத்தனர் சுவாமிகளார். வானமீன் - ஆகாயத்திற் றோன்றும் நக்ஷத்திராதிகள். (129).

அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள்செய்து

விஞ்சத் திருத்திச் சதாசிவமென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக்களை பறித் தேன்வளர்த்தேன் சிவபோகத்தையே.

(போ - ரை.) பஞ்சாக்ஷர மெனுங் கோடரியினாலே பஞ்ச புலாதிகள் பொருந்திய பஞ்சபொறியெனும் வஞ்ச கட்டையை அறவே வெட்டிப் பண்படுத்தி மேலே சதாசிவமாகிய வித்தைப் பதித்து கரணகூட்டமாகிய களைகளை அறவொழித்துச் சிவபோக மென்கின்ற பயிரை வளர்த்துள்ளேன்.

(த - ரை.) அஞ்சக்கரம் – 'சிவாயநம' ஐம்புலன் - சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம்; இதன்பிரதியான தமிழ்மொழி – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; இந்த ஐந்துவகையான புலாதிகளும் மெய், வாய், கண், மூக்குச், செவி யென்னும் ஐந்து ஸ்தானங்களினும் மறைந்திருந்துகொண்டு சுவையொளியாதிய ஐவகைபோகத்தையும் நுகருந்தன்மையாக வுள்ளன. ஆகவே மனிதனுள்ளிருந்து கொண்டு அவனுக்கு ஹித சத்துருவாய்த் தன் வழியீர்த்து இராகத்துவேஷாதிகளிற் சிக்குண்டு அதனால் விளையும் இன்பதுன்பாதிகளுக்கு அவனை ஆளாக்கிவிடும் பெரிய சத்ரு வானதினாலே தான் அந்த ஐவகை ஹித சத்துருக்களான கட்டையை ஐந்தக்கரமாய கோடரி ஆயுதத்தால் சம்ஹரித்து மனம் சித்தமாகிய பூமியை பக்குவப்படுத்தி 'சதாசிவ வித்தையிட்டுச் சிவபோகப் பயிர் விளைத்தற் கேது ஈதெனவிளக்கினர் நம் சுவாமிகளார். ஆகவே வேத நடுவாய் விளங்கும் மகாமந்திரமாகிய பஞ்சாக்கரத்தை நன்கு ஓதி தத்துவாதிகள், ஐம்புலாதிகள் இவைகளைப் பதப்படுத்தி மன மாதியைத் தன்வசம் வைத்துக்கொண்டு சதாசிவத்தியானஞ் செய்ய, மேலே சிவபோகானுபவம் விளையும். அதனால் பரசிவதரிசனம் பார்த்தானந்திக்கலாம், இதுநிச்சயம். (130)

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாருநாளுரெனப் பகர்வாரந்த நேரத்திலே
நோயாரும்வந்து குடிகொள்வரேகொண்ட நோயுமொரு
பாயாருநீயு மல்லாற்பின்னையேது நட்பாமுடலே.

(போ - ளா.) பல்லோரிடத்தும் நண்புகொண்டுள்ள உடம்பே! நின்மாதா வென்ன, மற்ற சுற்றத்தார்க ளென்ன, நின்னை மணந்த மனைவி யென்ன இவர்களெல்லாம், நினக்கு முடிவுகாலம் வர, காரணகாயலா ஏற்பட்டுள்ள அந்த சந்தியிலே நின்பாற் பற்றின்றி நினக்கு உள்ளளவுகூட பாத்தியப்பட்டிராமல் நீயார் நானுரென்று வெறுப்புற்று கைவிட்டு விலகி விடுவர்கள் அப்போது உனக்குத் துணை உன்னேயும் நீஉறங்கிக் கிடக்கும் பாயுமன்றி வேறெவரும் உனக்குத் துணையாயிருக்க மாட்டா ரென்பதாம்.

(தா - ளா.) சடலி நஞ்சமு தண்டவர் கைவிடுங் காலத்திலே, நினக்கு அரியதுணைவர்கள் போலிருந்து உன்னுல் போஷணை பெற்றுவந்த மனையாள் பந்துமித்திராதிய ரெவரும் உன்னுல் இனிப்பிரயோசன மில்லையென விலகி உன்னைப் பராமுகமாய் விட்டு விடுவார்களாதலால் அவர்களை நீவெகு துணையாக எண்ணி யிருப்பதையொழித்தும், இறந்தவுடலைப் பிடுங்கித்தின்னும் கழுகைப் போன்று இவர்கள் உயிரோடு பிடுங்கித்தின்னுங் கழுக்களென மதித்து இவர்களை நம்பாது எம்பெருமானே உற்றதோர் உயிர்த் துணைவரென நம்பி அவர்தம் பஞ்சாக்கர ஜபமும் தியானமுங்கொண்டு அவர் பாதத்தையே பணிந்து கிடப்பாயாக என்பதை நன்கு விளக்கினர் சுவாமிகளார். (131)

ஆயும்பொழுது மயிர்க்கால்கடோறு மருங்கிருமி
தோயுமலக்குட்டையாகிய காயத்தைச் சுட்டுவிட்டாற்

பேயுநடனமிடுங் கடமாமென்று பேசுவதை
நீயுமறிந்திலையோ பொருடேட நினைந்தனையே.

(போ - ரை.) நெஞ்சமே! இவ்வுடல் விஷயமாக ஆராய்ந் தறியும்போது ஒவ்வொரு மயிர்க்காலிலும் புழுக்கள் மலிந்துள்ளன; மலங்கிடக்கும் குட்டையாகிய இவ்வுடம்பினை யிறந்தபின்னர் தகித் துவிடின், அதன்மேல் பைசாசங்கள் நடிக்கும் சுடுகாடென ஜனங் கள் கூறுவதை நீகேட்டறிந்தா யில்லையோ? அவ்வாறுய உடலை மெய்யெனநம்பி திரவியதேட்டஞ் செய்ய நினைந்தனையே!

(கு - ரை.) செகம்புகழ வளர்த்த உடலினைச் செகமிகழவிறந்த பின் சுட்டெரித்தலைக் கண்ட பின்னரேனும் பிறந்திறவாமைக்கேது வாம் பேரருட் செல்வம் பெறத் தவம்புரியா தென்கொலோ வென் பது பிள்ளையார் கருத்தெனை விளங்கலாயின. அருட்செல்வம் செல் வத்துட் செல்வம், பொருட்செல்வம், பூரியார் கண்ணுமுன் என்றார் திருவள்ளுவ நாயனாரும். (132)

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்க வடியேன்படுந்துயர் சற்றல்லவே.

(போ - ரை.) அலங்கார பூஷணம் அணிவதற்காக வன்று; மற்றும் திரவியத்தைக் குறித்து மன்று; பூமியைப் பெறுதற்கு மன்று; மாதரை வேண்டியுமன்று; அலங்கார விசித்திரக் கண் காக்ஷிக்குமன்று; அண்டத்தப்புறமும் விளங்கும் அவனடி மலர்ச் சேவைக்கு மன்று; மனமயங்கிச் சாண்வயிறு வளர்த்தற்கு நான் படுங்கஷ்டம் சொற்பமன்றே!

(கு - ரை.) வெண்காட்டையன் கொங்க நாடடைந்த போது அங்கு தங்கி தெருவில் பிச்சைக்குப் புறப்பட்டு ஓர் தெருவில் ஒருவன்வீட்டில் கைதட்டிப் பிச்சைகேட்டு நிற்க, அந்த வீட்டிலுள்ளவன் பிள்ளையாரைக் கேவலம் கள்ளனென் றெண்ணி அவரை வைது அடித்தனன். இவ்விஷயமுணர்ந்த எதிர்வீட்டான் ஐயோ! பாவம்! அடிகளாயிற்றே! என்று வந்தழைத்துப்போய் உபசாரத்தோடும் அவர்க்கு அன்னப்பிக்ஷை யளித்து ஆதரித்தனன். அப்போது அய்யன் இப்பாசுரத்தை அங்கு பாடியருளின ரெனத் தெரிகின்றது. பசியின் கொடுமையால் அடிபடலாயிற்றே யென்று மனம் நொந்து கூறியதென்று தெரியலாயிற்று. சிவயோகிகளுக்குப் பசிதுன்புறுத்துவ தியல்பாம்; எவ்வாறெனின், அந்தயோகியர் தமது சிவயோக தவவலிமையினாலே அவரது கபால சந்திரமண்டலத்தி நின்றொழுகிவரும் அமிர்த தாரையானது நாடிவழிசென்று மூலாக்கினியைச் சாந்தஞ்செய்யும். அவ்வளவுவரையில் தவமுதிர்ச்சியில்லையாயின் அமிர்த தாரை பெருகிவரற்கு இடமின்றாம். ஆகவே சுவாமிகளுக்குப் பசிநோய் தொந்தித்து அதனாலடிபட லாயினர் என்பார் ஓர் சாராரென்க. (133)

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறையாததீர்த்த மினிமுடிந்து
கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே.

(போ - ரை.) உலோகத்தகட்டில் வரைதல் செய்யாத சக்கரம்; வாயினால் செபித்திடா மந்திரம்; ஏனையோர்க் கெட்டக்கூடாத புஷ்பம்; கையினால் இறைக்கக்கூடாத தண்ணீர்; துணியில் முடிந்து பெட்டியில் கட்டிவைக்காத இலிங்கம்; நினைத்தல்

செய்யாநெஞ்சம், இந்நிலைமைத்தாயது எதுவோ அதை என்குருமூர்த்தியார் குறித்துபதேசித்தனர்.

(கு - ரை.) பேரறிவினாலே அந்தர் முகமாகச் சிவாநுபூதியில் விளங்கக் கூடலான் வெட்டாத சக்கர மென்றனர். உன்னுமை லுன்னும் உரைமந்திர மாகலின் பேசாத மந்திரம் என்றார். (அசபா.) தத்வாராய்ச்சியால் உணரக்கூடாத பிறமதத்தார்க்குக் காணப்பெறாததாகலின் வேறொருவர்க்கு எட்டாத புட்பமென்றனர். புறத்தே அர்க்கியங் கொடாத தீர்த்த மென்பான் இறையாத தீர்த்தம் என்றார். சற்குருமூர்த்தியார் கருணையோடும் உபதேசித்தயாத்திரத்தே, யேர்க்கனவே பரோக்ஷமாயுணர்ந்தவையனைத்தும் நேரே அபரோக்ஷமா யறிந்தபோது எவையும் ஞானார்த்தமாய்த் துலங்குமாதலான் ஒவ்வொன்றும் பரிபாஷா முறையாகக் கூறினரென்க. என்? ஞான படியேறியோர்க் கியல்பாதலாலென்க. ()

எருமுட்டைபிட்கி னுதிர்ந்திடுஞ்செல்லுக் கெவராழுவார்
கருமுட்டைபுக்குக் கழலகன்றுய்கன துக்கமதாய்ப்
பெருமுட்டுப்பட்டவர் போலழும்பேதையிர் பேத்துகிறீர்
ஒருமுட்டும்வீட்டு மரணமென்றைக்கு மோதுமினே.

(பேர் - ரை.) மக்களே! மாதா கர்ப்பமாகிய முட்டையுள் கட்டுண்டிருந்து அரனடி சேவையு மற்றுவிட்டீர்; நீங்கள் மிக்க துக்கத்துக் கேதுவாய துன்பமனுபவிப்பவர்போன்று துயருறும் அறிவிலிகள். நீங்கள் கலங்குவதில் பயனென்னோ? சரீரம் அழிந்துவிடுதற் கஞ்சும் பான்மையை விட்டொழிந்து தேருவீர்; எருமுட்டையினின் றுதிர்ந்தழியும் செல்லுக்கழுவா ராருமின்றே! எத்துயரும் வாராது காத்திடும் எம்மிறைவனார் திருநாமம் என்றும் ஓதுவீர்களாக.

(து - ளா.) எருமுட்டையில் ஜெனித்தழியும் கணக்கற்ற செல்களுக்கு கவலேயோடழுபவர் யாருங்காணோம்; ஆதலால் இறந்தாரைக் கருதியழுவார் பேதையராவர்; சிவபெருமானது திருவடிச் சேவைக்கினிய ஜென்மம் பெற்றும் அப்போது உலகபோகத்திலழுந்தி அவரை மறந்திருந்துவிட்டு மீண்டும் கற்பத்தால் நலிவுறும் போது வருந்துவதில் பயனின்றே என்று, "கருமுட்டுபுக்குக் கழலகன்றிலர்" என்று அறிவுறுத்துகிருர். இதனுல், சிவநாம சிந்தனே பிறப்பிறப்பொழிக்கும் பேறளிக்கு மாதலால் 'ஒருமுட்டும் வராதபடி யொழித்துக்காக்கும்' என்பாராயினுர். இதற்குத், திருமூல நாயனுர் திருமந்திரம் வருமாறு. (135)

சூக்தும பஞ்சாக்கரம்.

சிவசிவவென்றே தெளிகிலருமர்
சிவசிவவாயுவுந் தேர்ந்துள்ளடங்கச்
சிவசிவவாய தெளிவிலுள்ளார்கள்
சிவசிவவாகுந் திருவருளாமே. (1)

சிவசிவவென்கிலர் தீவினேயாளர்
சிவசிவவென்றிட தீவினேமாளும்
சிவசிவவென்றிடத் தேவருமாவர்
சிவசிவவென்னச் சிவகதிதானே. (2)

மையாடுகண்ணியு மைந்தரும்வாழ்வு மனேயுஞ்செந்தீ
ஐயாநின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துளே
மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெறும்[வே.
பொய்யாய்ப்பழங் கதையாய்க்கனவாய் மெல்லப்போனது

(போ - ளா.) சிவந்த வான்சுடர் வாய்ந்த செந்தழல் மேனியெஞ் சிவனே! தேவரீரது மாயாசத்தி தோற்றமாகிய இந்த வுலகத்

திலே மைதீட்டப்பெற்ற கண்களையுடைய மனையவளும் மக்களும், வாழ்க்கையும் மாளிகையும் முதன் முதலாக நிச்சயமான தாய்க்காணப் பெற்றிருந்தன ; பின்னர் நாளடைவிலே எல்லாம் ஒழிய பழங் கதையோடு இதுவும் ஓர் கதையாய் அதன்காலத்தில் சொப்பனம் போலவும் மெதுவா யொழிந்து போயின.

(து - ரை.) மனசின் மயக்கத்தா லுண்டாம் தோற்றமாயுள்ள கூட்டமாதலின் 'உருவெளித்தோற்ற' மென்றனர் இதனுனே அம் மாயாசத்தியை வடநூலார் வேதாந்த சாத்திரத்துள் 'அநிர்வசனீயம்' என்றதற்கு அபிதானமிட்டு வழங்குவர். மாயாகற்பிதவுலகம் மெய்த்தோற்றமுறல் மக்களின் நூலாயாக்குறையாகும். சான்றாக,-

அவிரொளி யீசனை யன்னிய னென்று
மிருள்புரி யாக்கையை யானென தென்று
மன்னிய மடந்தையை யாருயி ரென்று
முன்னுறச் செய்த லுயர் மலமோரே. (சி. வள்ளலார்.)

ஆயாய்பலகலை யாய்ந்திடுந்தூய வருந்தவர்பாற்
போயாகிலு முண்மையைத் தெரிந்தாயில்லைபூதலத்தில்
வேயார்ந்ததோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின் றனைமனமேயென்ன பித்துனக்கே.

(போ - ரை). நெஞ்சே! நீ, மெய்ஞ்ஞான ஏதுவாய பல சாத்திரங்க ளாராய்ந்தாயில்லை ; அன்றி அந்நூல் ஆய்ந்துள்ள நற்றவச் சான்றோரிடஞ் சென்றேனும் உட்கருத் துணர்ந்தா யில்லை ; (பின்னென்செய்தனை?) உலகத்தில் மூங்கிலொத்த தோளியரான மாதர் மயக்கி லகப்பட்டு அழுந்திப் பேயெனவிழிப்பது என்ன புத்தியோ! வன்றி பைத்தியமோ!

(கு - ரை.) உண்மைச் சாத்திரவாயிலாக வுண்மைப்பொருளை யறிந்தொழுகலே அபரோக்ஷ ஞானமெனவும், அங்ஙன முணர்ந்த வாறே தன்னுள் தன்னறி வறிந்ததுவே பரஞான மென்றனர் மேலோர். ஈண்டு உண்மைப் பொருளாவது, திரிதல், கெடுதல், விகாரமின்றி எப்போதும் ஒரேதன்மையாய் விளங்கலாம் பரவஸ்து. இஃது நூலாய்தலில்லாத சாமானியமாக்களுக்கு ஒதி யுணர்த்தியவா றென்க. 'கற்றமேலவர்தங் கருத்தினை யோரேன்' என்றார் பல்லோரும். (137)

அடியாருறவும் அரன்பூசைநேசமு மன்புமன்றிப்
படிமீதில்வேறு பயனுளதோபங் கயன்வகுத்த
குடியானசுற்றமுந் தாரமும்வாழ்வுங் குபக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்குமென்றினஞ் சார்ந்திலரே.

(போ - ரை.) உலகத்தார், சிவனடியார்களின் நட்பும், சிவ பூசையில் விருப்பமும், இவைகளில் அன்பு செலுத்தியும் வருத லான பக்திமார்க்கத்தைவிட உலகத்திலே ஆன்மாக்களாவார் தேடிக் கொள்ளவேண்டியது மற்றொன்று முளதோ? பிரமதேவனால் சிருட்டித்துள்ள பந்துக்கள், மனைவி, வாழ்க்கை இவை யனைத்தும் தடியாலடியுண்ட விதமாக முடியுமேயன்றிக் காரிய மில்லையென்று சாதுசங்கத்தைச் சார்ந்தார்களில்லையே!

(கு - ரை.) உலகத்தார் - தோன்றாயெழுவாய். அடியா ராவார் அவனருள்கொண்டார். இம்மானிடசரீரம் மண்ணுலகில் வந்தது, மெய்யன்ப ரன்பினின்று மெய்ப்பரன் றாள்பணிந்து மெய்யறம் புரிந்து பின்னர் மேலரன்பதமேவற்காம். சான்றாக திருமூலர் திரு மந்திரம்,—

உடையா னடியா ரடியாருடன் போய்ப்
படையாரழன் மேனிப் பதிசென்று புக்கேன்

கடையார நின்றவர் கண்டறி விப்ப
வுடையான் வருசென வோல மென்றாரே.

ஒன்றுக்கு முதவாத ஒருபிரயோசனமு மில்லையாதலால் பந்துவும் பெண்டு பிள்ளையும் உடைபட்ட மண்பாண்ட மென்றார். இதனைத் தெரிந்தும் அதை மறந்தும் மாடென வீணுக் குழைத்துச் சாகின்றார்களே என்பார் தெரிந்தும் இனஞ்சார்ந்திலரே என்றனர் சுவாமிகள். (138)

ஆங்காரப்பொக்கசங் கோபக்களஞ்சிய மாணவந்தான்
நீங்காவரண்மனை பொய்வைத்தகூடம் விண்ணீடிவளர்
தேங்கார்பெருமதிற் காமவிலாசமித் தேகங்கந்தல்
பாங்காயுனைப்பணிந் தெப்படிஞானம் பலிப்பதுவே.

(போ - ரா.) பீத்தற் றோற்பையாயுள்ள இந்த வுடம்பானது அகங்காரப் பொக்கிஷமா யிருக்கின்றது. அது மட்டோ, கோபத்திற்குக் களஞ்சிய மாயும், ஆணவத்திற்கே யுரிய அரண்மனையாயும், பொய்க்கிசைந்த கூடம்போன்றும், ஆகாயமளாவிய பெரிய மதில் சூழப்பெற்ற காமவிலாசமாயும் விளங்கியிருப்ப, இம்மட்டையும் விட்டு எவ்வாறு தேவரீரைத் தொழுது முத்தியின்ப முறுவது? அசாத்தியமென்றபடி.

(கு - ரை.) சரீரத்திலே பலதுவாரங்க ளிருத்தலின் அதனைக் கந்தலென்று கூறலாயினர். அகங்காரமென்பதுவே ஆங்காரமாயது; அதாவது மமதாங்கார மென்பர். பொக்கிஷம் - திரவியக் குப்பலாயுள்ளவிடம்: கோபக்களஞ்சியம்-கோபம் மிகுதியாயுள்ள ஸ்தானம்; விலாசம் - விசாலமான விடம். ஆங்கார மென்ன, கோப மென்ன இத்தீய குணங்கள் ஒருவனுக்கு உள்ளளவும் ஞானம் நிலையுறாதென்பது வெளியாயது.

"ஆணவமாதிய வாப்பையாவி, தானவிழ்க்கறியா தானேயவிழா, கரணமொடுக்கிக் கருதியகாலைச், சங்கா னவிழ்க்குந் தயைக்கை யாலே." எனவும்,

"விந்து மோகினி மானென விரிந்த, தத்துவக்காட்டிற் றனித் திடுமுயிரை, யாணவ வேங்கை யொருபா லடர்ப்ப, மாயைக் குடாவடி யொருபான் மயக்க......

தாயினுஞ்சாலத் தயாநிதியிரங்கி - சட்கடைவாளால் காடறமாற் றலும்" எனவும் சிவஞானவள்ளல் தெரித்தன காண்க.

ஓழியாப்பிறவியெடுத் தேங்கியேங்கி யுழன்றநெஞ்சே
அழியாப்பதவிக் கவுடதங்கேட்டி யநாதியனை
மழுமான்கரத்தனை மால்விடையானை மனத்திலுன்னி
விழியாற்புனல்சிந்தி விம்மியழுநன்மை வேண்டுமென்றே.

(பேர் - ரை.) ஓயாது பிறந்து பிறந்து யேக்கமுற்றுழன்ற மடநெஞ்சமே! நீ அழிந்து போகாத முத்தி நிலைமைக்கு ஒருவித மருந்து கூறுவதைக் கேட்பாய்:— ஆதியந்த மில்லாதவனும், மழுப் படை, மான் இவைகளைத் தன் திருக்கரத் தேந்தியவனும், திரு மாலை இடபமாய்க் கொண்டவனுமாகிய சிவபெருமானை மனதில் தியானித்துக் கண்ணீர் விட்டழுது ஞானப்பிரசாதம் பாலித்தருளு மாறு வேண்டி நிற்பாயாக.

(கு - ரை.) ஜனித்தற்கு ஏது மனோ சங்கற்பமே யாதலால் 'உழன்ற நெஞ்சே' யென்றனர். அழியாப்பதவியாவது சாயுச் சியமாகும். அதாவது ஜீவாத்மா பரமாத்மாவோடு லயப்படுதல். பிறந்திறவா முத்திபெறவேண்டின் பிறந்திறவாத சிவபெருமானே அளித்தற் குரியவனாதலான் அவனை 'அநாதியனை' என்று குறிப் பிட்டனர். இக்கருத்தினை வெளியிடுவான் கருதியே ஆசிரியர்

திருவள்ளுவனாரும் "பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடிசேராதார்" என்ற இக்குறட்பாவிலே 'இறைவனடி சேர்ந்தார் நீந்துவ' ரென்று வெள்ளிடைமலைபோல் விளக்கினரென்ப.

பிறப்பும் இறப்பும் இலாத இறைவன் ஒப்பரிய தற்பரனைய சிற்பர சிவபரஞ்சுடரே யாகலான் நம் சுவாமிகள் 'மழுமான்காரத்த' னென்றும், 'மால்விடையானை' யென்றும் நன்கு குறித்துக் கூறியுள்ளார்.

இன்னும், பிறத்தலிறத்தற்கு ஏது மனமேயாகலான் அந்தமனம் எங்கெந்த பொருளை அவாவியேகுமோ அந்தந்த பொருளை அடைதற்கான பிறப்புண்டாவ தாதலாலும், அதுவும் பிறந்திறவாத கடவுளைத் தியானித்திருக்குமானல்தான் பிறந்திறக்குந் துன்ப நீங்குமாதலாலும் மனத்தின்கண் 'உன்னி' யென்று தெளிவுபெறக் கூறலாயினரென்க. மனம்போம் வழிக்கே வாக்கும் சரீரமும் துணைசெய்யும். ஆதலானே 'மனவாக்கு நேர்நிற்கில் வல்வினைமன்னு' என்றார் மந்திர மூர்த்தியார், மெய்யன்பர்தம் அறிகுறியாக ஈண்டு விழியாற் புனல் சிந்தி விம்மியழும் பான்மையை கூறியவாறாக நமது மணிவாசகரும் தந்திருவாசகத்திலே "மெய்தானரும்பி விதிர் விதிர்த்" தென்பதாதியாம் பாசுரத்தால் நன்கு கூறியருளினமை கண்டுதெளிக.

இறைவன்பால் மெய்யன்பர் அழுது முறையிடல் இயல்பென்றாயிற்று; எங்ஙனமெனில், பிள்ளை பிதாவின்பால் வேண்டியனகேட்டழல் இயல்பே யாதலானும்; அவ்வாறே நமது ஆளுடையபிள்ளையாராய ஞானசம்பந்தர் பூர்வம் இடபாரூடராய் வந்தருளிய பரமபிதா மாதாவாக வந்தமை கண்டழுதமையானும் நன்கு புலனாகும்.

நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம் பிடிபடுமோபெருங் காஞ்சிரங்காய்
ஆக்குவாரா தருந்துவாரா து போலுடம்பு
தீக்கிரையாவதல்லா லேதுக்காமிதைச் செப்புமினே.

(பொ - ரை.) நாய்க்கு ஓர் கர்ப்பமும் அதற்காக வைத்தியஞ் செய்தலும் தேசத்திலில்லை; பேய்க்கும் ஞானம் விளம்பலுமில்லை; எட்டிக்காயை உண்டுபண்ணுபவருமில்லை, அதை அருந்துவோருமில்லை; அதுபோன்று இவ்வுடம்பானது கேவலம் நெருப்புக்கு ஆகாரமாவதைத் தவிர்த்து வேறெதற்கு பிரயோசனமாகும்? ஆகாதென்றபடி.

(கு - ரை.) இப்பாசுரமானது, பத்திரகிரிமன்னன் சுவாமிகளை வணங்கியிருந்தபோது அவர்க்காக உடல்நிலையுணர்த்துவான் வேண்டிக் கூறியருளியதாம் என்று சிலர் கூறத்தெரிகின்றது. நிற்க; நாய்க்கு கர்ப்பத்தைப்பற்றிய பாராட்டலும், அதற்காக வைத்திய சிகிச்சை செய்வதும் உலக சம்பிரதாய மின்றும். இதுபோலவே மனிதனில் பொன்னில மாதராசை கொண்டவனுக்கு யாரும் உத்தம ஞானோபதேசத்தினை ஓதுதல் செய்யமாட்டார். தெரிந்தவினத்தார் எட்டிமரம் விர்த்திசெய்ய ஒருப்படார். அன்றி அதன் காயைத்தின்கவுஞ் செய்யாரென்க. இதேபோன்று உடம்பின் அநித்தியத்துவத்தையும் ஆபாசத்தையும் உணர்ந்தார் அதனைக்காத்தற்கிசையார் என்க. என்? பயனொன்று மில்லையாதலால். இதனால் உடலைப்போற்றுவார் உண்மையறியார் என்பது தோன்றியதாம். ()

கச்சிற்கிடக்குங் கனதனத்திற்கடைக் கண்கள்பட்டே
இச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சே யிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடி யுண்ணாமுலைபங்கர் பாதத்திலே
தைச்சுக்கிடமனமே யொருகாலுந் தவறில்லையே.

(போ - ரை.) வாரணிந்துள்ள விம்மிய தனங்களின்மேல் கடைக்கண் பார்வைசெய்து அக்கொங்கையைப் பற்றற்கு இச்சை கொண்டுள்ள நெஞ்சமே! மலைராஜனது கண்மணியாம் பச்சைபசுங் கொடிபோன்ற பார்வதியம்மையார் என்கிற உண்ணாமுலையம்மை யைத் தமது வாமபாகங் கொண்டருளிய சிவபரஞ்சுடரின் பாததா மரையில் பதிந்துகிடப்பையேயானால் நினக்கு எப்போதும் இடை யூறின்றி வாழ்வாய்.

(கு - ரை.) கச்சு என்பதை இப்போது 'இரவிக்கை' என் பார்கள். ஆனால் வித்வான்கள் 'வாரணிவனமுலை' யென்று வரு ணித்துங்கூறுவர். விம்மிதமான திரட்சிவடிவத்தின் வனப்புநோக்கிக் கனதனமென லாயிற்றென்க; மங்கையர் கொங்கையில் மாறாத இச்சைகொண்டுழல்வதால் ஆடவர் மனசை 'ஏழை நெஞ்' சென்று விளித்தனர். எம்பெருமான் திருவடியில் சிற்சத்தியார் வியாபகமாத லால் "பாதத்தில் தைச்சுக்கிடமனமே" எனக்குறித்துரைத்தன ரென்க. (141)

மானார்விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங்
கோனாகியென்னைக் குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்லை
போனாலும்பேறிருந் தாலுநற்பேறிது பொய்யன்றுகாண்
ஆனாலுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே.

(போ - ரை.) பெண்மக்களார் கண்வலையைக் கடந்து மே லோங்கி வந்துள்ளேன்; சற்குரு மூர்த்தியார் ஞானகுருவாய் வந்த ருளித் தந்திருவருள் பாலித்துச் சேர்த்துக்கொண்டனர். ஆகவே இனிமேல் உண்டாகுங் குறையேதுமின்று; இவ்வுடம்பு அழிந்திடி னும், அழியாதிருந்திடினும் நற்பேறு பெற்றனன்; இஃதுண் மையே! ஆயிடினும் இந்த இழிவாகிய சரீரத்தோடு சேர்ந்திருப் பதுமட்டும் மிக்க வெறுப்பாயிருக்கின்றது.

(கு - ரை.) பிறவிப்பிணிக்கு ஏதுவாயுள்ள மங்கையர் மோகம் மாண்டுபோயது; மேலே சற்குரு மூர்த்தியின் திருவருளும் பாலிக்கப் பெற்றுக்கொண்டேன்; ஆதலினாலே யான் இனி மோக்ஷ மெய்துவதில் சிறிதும் சந்தேகமுறேன்; இருந்தாலும் இந்த ஆக்கையின் அளவைகாறும் வினைப்போகம் உளவாதலின் அதனைத் துத்துத் தொலைத்தல் வேண்டுவன் என்றபடி. "ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்றபாவிநான்" என்றனர் தாயுமானாரும். (142)

சற்றாகிலுந்தனைத் தானறியாய்தனை யாய்ந்தவரை
உற்றாகிலுமுரைக்கப் பொருந்தாயுனக் கானதிலை
பற்றாய்குருவைப் பணியாய்பரத்தையர் பாலிற்சென்றோன்
பெற்றாய்மடநெஞ்சமே யுனைப்போலில்லை பித்தனுமே.

(போ - ரை.) மடமைபெற்ற நெஞ்சே! கொஞ்சமாவது உன்னை இன்னானென்று நீ ஆராய்ந்தறிந்து பார்த்தாயில்லை; போகட்டும், அவ்வாறு தன்னை ஆராய்ந் தறிந்துள்ள மற்றொருவர்பாற் சென்றடைந்து அவரால் கூறக்கேட்டாயில்லை; ஆகவே உனக்காக வேண்டிய நிலையைப் பற்றுவாயாக; சற்குரு மூர்த்தியைக் கண்டடிபணியாய்; இவைகளை விட்டு பொதுப் பெண்டிர் வீட்டிற் சென்று நீ பெற்றதென்ன? உன்னைப்போன்ற பைத்தியக்காரன் இவ்வுலகத்தி லில்லை.

(கு - ரை.) தன்னைத்தான் அறிதலாவது, தேகமே தானென்று முன்னம் அறிந்துள்ள மடமையொழிந்து, ஆன்மாவெனப்படும் அறிவையே தான் என்று உண்மைகண் டிருத்தலேயாம். தன்னையறிந்தது எவ்வாறோ அவ்வாறாகவே தலைவனும் பரமாத்மனையும் அறியப்படும் பேரறிவாகும் என்பதாயிற்று. "தன்னைத்தான் கண்டால் தனைப்படைத் தோனையும், இன்னவித மென்றறிந் தின்புறலா" மென்றார் தாயுமானாரும். (143)

உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூற்றையறப், புளியிட்டசெம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே, ஒளியிட்டதாளிரண் டுள்ளேயிருத்துவ துண்மையென்று, வெளியிட்டடைத்து வைத்தேனினிமே லொன்றும் வேண்டிலனே.

(போ - ரை.) உளியால் தயாரித்துள்ள கல் விக்கிரகத்தையும் மிக அழகாயமைத்துள்ள சாந்து விக்ரகத்தையும் களிம்பு நீங்குமாறு புளிகொண்டு துலக்கிய செம்பு விக்ரகத்தையும் யான் வழிபடேன். பொன்னைப்போன்று பிரகாசிக்கின்ற தலைவன் திருவடி யிரண்டினையும் நெஞ்சினுள்ளே பதித்திருப்பது உறுதியென்று கூறி உபய பாதங்களையும் மனத்தகத் திருத்தியுள்ளேன். இனி யாதேனும் விரும்பமாட்டேன்.

(கு - ரை.) உளியிட்டகல் - சிலாவிக்ரகம். ஒப்பிட்ட சாந்து-சுண்ணாம்பு செங்கல் இவைகளால் ஆக்கப்பட்ட விக்ரத் தெய்வங்கள்; புளியிட்ட செம்பு - செப்புவிக்ரகங்கள். ஆக இம்மூவகையால் விளங்கும் ஆலய விக்ரகங்களையும் நான் துதித்தல் செய்யேன் என்றார். என்? விக்ரகத்தி னின்றுந் தோன்றி அங்கேபோ இங்கேபோ யென்று அருளின் காலம்போய்விடுமே! தேகம் சந்தேகமாயிற்றே என்றும், சாயுஜ்ய பதவியிலேயே இச்சை கொண்டதாலும் அங்ஙனங் கூறலாயினர் எனத் தெரிகிறது. 'ஒளியிட்ட தாளிரண்டு உள்ளே யிருத்துவது' யோகமுறையால் சந்திரகலை சூரியகலையென்றும் இருவழியானும் பூரித்து கும்பகஞ்செய்து கண்ட தாரையால் மேலையணுவழி சுழிமுனைக்கும் அதன்மேலும் சந்திர மண்டலத்தும் செலுத்தி அமுததாரை யுண்டு பசி நீக்கும் நிலையைக் குறித்தலாயிற்று. இன்னும் இவர்பின்னே கூறியுள்ள செய்யுளானும் நன்கு விளங்கலாம்:—

வெண்பா.

எத்தனை நாட்கூடி யெடுத்த சரீரமிவை
அத்தனையும் மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப்பிடித்து மெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப்போ மே. என்னும் இப்பாசுரத்தான் நன்கு விளங்கும். கால் - ஈண்டு பிராணவாயு. கங்குல்பக லற்றவிடம் - துவாத சாந்தவெளி. கபால உச்சிவெளியாம். இவ்வுண்மையையே பத்திரகிரியாரும் தம் எக்காலக் கண்ணியிலே குறித்துக் கூறியதுங் காண்க.— 'உளியிட்ட கல்லும் உருப்பிடித்த செஞ்சாந்தும், புளியிட்ட செம்பும் பொருளாவ தெக்காலம்' என்றருளினர்.

தன்னுள் தன்னுயிர்க் குயிராயுள்ள தலைவனும் பரம்பொருளைத் தரிசித்தற்கு வழியறியாத சர்வ சாமானியர்களே விக்ரகங்களை வணங்கத் தலைப்படுவர். இவர்கள் பிறப் பிறப்பில்லா பெருவாழ்வெய்துவது அரிதாம். அன்றி, கல், செம்பு, சுண்ணம் என்று கருதித் தொழுவாரினும், அங்ஙன முணராது அவ்வுருவங்களின் அந்தர்முகமாக அமர்ந்துள்ள அருவப் பெருமானை அறிவாலறிந்து வணங்குவோர்களே பதவி பெறும் பாக்கியவான்க ளாவர்கள். சான்றாகத் திருமூலரும்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே. என்று அருளிச்செய்த பாசுரத்தானே நன்கு புலனாகும். (இப்பாசுரத்தை முன்னோர் பாசுரத்திற் குவமை கூறியுள்ளாம்) எம்பெருமாற்குள்ள எண்வகை மூர்த்தங்களுள்ளே ஆத்ம மூர்த்தத்தை விசேடமாகக் கொண்டு வழிபாடுசெய்தும் சமாதிகூடி அந்தர் முகமாகத் தரிசிப்ப

வரே இரண்டற்று ஏகபாவமாயு அத்வைத முத்தியை யடையப்பெறுவர். ஆதலாற்றான் திருமூலரும் அங்ஙனம் தன்னுள் தலைவனைத் தரிசித்து மூவாயிரவருடம் தேகத்தோடு மிருந்தமை சான்றாயிற்று; அவர்மட்டோ, எண்ணிறந்தார் அம்முத்திபெற்று வாழ்கின்றனர்.

ஞானிகளார் இவ்வாறாக இறைவனை அந்தர் முகமாக நோக்கி அட்டமலர்கொண்டு பத்தி முறையால் மானசிக பூசைபுரிந் துய்வர்கள்.

இதனையே பிள்ளையார் தாம் சமாதியில் ஞானநிட்டை புரிந்து வந்தமையால் "தாளினை உள்ளே யிருத்தியென்று" உண்மையை வெளியிட்டனர். (144)

* கல்லாலெறியுண்டுங் காலாலுதையுண்டுங் காளைகையில்
வில்லாலடியுண்டு முன்னாள்விடமுண்டு மேவிளித்துப்
பல்லாற்புரமெரி யேகம்பவாணர் பதாம்புயத்தின்
சொல்லார்செவியினிற் கேளா திருந்ததென் றொல்வினையே.

(பொ - ரை.) கல்லினாலே அடிபட்டும், காலினா லுதைக்கப் பெற்றும், இளம்பிராய அருச்சுனனாலே வில்லடியெய்தியும், ஓர்காலத்திலே விஷபானம் பண்ணியும், தந்தம் தரிசனமாக புன்சிரிப்பு செய்து முப்புரத்தைத் தகித்து முள்ள ஏகாம்பரநாதன் திவ்ய திருப் பாதகமலங்களின் துதிப்பாடல்களைக் கேட்டல் தன்மையுள்ள என் காதுகளிலே கேளாமை யானது என்முன் வினைப்பயனாகும்!

(கு - ரை.) கல்லெறிந்த பக்தர் சாக்கியநாயனார். இவர், பெரிய புராணத் திருத்தொண்டர்கள் அறுபத்துமூவருள் ஒருவராவர். காலினால் உதைத்தவர் கண்ணப்பநாயனார். இவரும் பெரியபுராண

* இப்பாடலைச் சிலசுவடிகளில் இல்லையென்கின்றனர்.

பக்தரைச் சேர்ந்தவரே. இவர் உண்மையில் உதைத்தவ ரல்லர். தன் இரண்டாவது கண்ணையும் பெயர்த்து சிவலிங்கமூர்த்தியின் திருமுகத்திலே அப்பவேண்டியதி நிமித்தமாகத் தமக்குக் கண்ணில்லாமையால் அடையாளமாக நம் செருப்பணி காலைத்தூக்கி அடையாளமாக வைத்துக்கொண்டு அவ்வடையாளத்தைக் கண்டு கண்ணை வைத்துப் புதைத்தமையான் அங்ஙனம் நிந்தாஸ்துதியாகக் கூறலாயின ரென்க.

விஷமருந்தினது, ஆன்மகோடிகளின் பந்த பாசாதிகளைச் சுருக்குமாறும், திரிபுர மெரிசெய்தது, ஆன்மபந்த மும்மலாதிகளைக் கடிந்ததுமாகும். இதனைத் திருமூலர் திருமந்திரத்திலே உ-ந்தந்திரம்.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறி வாரே.

என்று அருளியுள்ளா ராதலால் மும்மலகாரியப் பட்டமையைக் கடிந்ததென் றுணரற்பாற்று. (145).

ஒருநான்குசாதிக்கு மூவகைத்தேவர்க்கு மும்பருக்குந்
திருநாளுந்தீர்த்தமும் வேறுளதோவத் திசைமுகனால்
வருநாளில்வந்திடு மந்தக்கண்ணுளன் வகுப்பொழியக்
குருநாதனைகண்டீர் பின்னையேதிக் குவலயத்தே.

(போ - ரை.) நான்கு வருணத்தவர்க்கும், திரிமூர்த்திகளுக்கும், இவரல்லா மற்றைத் தேவர்கட்கும் திருவிழாவும் தீர்த்தங்களும் வேறேயுள்ளதோ? பிரமதேவன் அமைத்தவாறு அவ்வக்காலங்களிலேதான் நிகழும்; அயன் சிருட்டி முடிவடையும்போது எப்

பொருட்கு மிறைவனும் பரமேசுரனது திருவரு ளொக்கமே ஆகு மென்க. ஆகவே இவ்வுலகத்தில் வேறெதுவு மின்றாம்.

(கு - ரை.) நால்வகை வருணம் - வெளி. மூவகைத்தேவரா வார் பிரமன், விட்டுணு, உருத்திரன் என்பார். உம்பர் - மற்றைத் தேவர்கூட்டத்தார். பிரமதேவன் சிருட்டியாயதும் மகாதேவர் "ஒருவனென் றேத்தனின்ற, ஈளிர்மதிச்சடையன்" வகுத்தன் முறை வழங்குமென்க. இது குருமூர்த்தியின் ஆணையென்று பதி வாய்க் கூறினமைகாண்க. (இப்பாவும் அப்படியே யென்க.) (146)

பட்டினத்துப்பெருந்தகையாளர்

தன் தாயாருக்குத்

தகனகிரியை செய்கையிற் பாடியது.

வெண்பா.

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.

(பொ - ரை.) பத்து மாதங்கள்வரைச் சுமந்து தேகாதியந்த மும் நலிந்து வருந்திப்பெற்று, ஆண்பிள்ளையென்ற மாத்திரத்திலே தன்வலிவருத்தம் யாவுமொழிந்து மனக்களிப்போடும் குழந்தையைச் சிவந்த தன்னிருகைகளிலும் ஏந்தி பொற்கிண்ணமொத்த புணர்



பட்டினத்தடிகளார் தன் தாயாரைத் தகனஞ்செய்தல்.

மூலைப்பாலைப் பருகக் குழவிக்கூட்டித் தடவிக்கொடுத்த தாயை இனியான் எந்தப்பிறவியிற் காணப் போகிறேன்!

(கு - ரை.) ஐயிரண்டு திங்கள் - பத்துமாதங்கள். திங்கள் - மாதம். கர்ப்பந்தரித்த அந்நாள்முதல் பெறுங்கால பரியந்தமும் (கர்ப்பிணி) என்றபெயர்க்கிலக்காக தேகாதியந்தமும் சிரமத்திற்குள்ளாகி வருந்துவதியல்பாகலான் ஐயி......நொந்துபெற்று என்றார். ஈன்ற அன்னையார்க்கு ஆண்மக வென்றவுடனே அவ்வளவு பிரசவ நலியாலேற்பட்ட துன்பம் போனவழிதெரியாதாகக் குழவியை இருகரங்கொண்டெடுத்து மார்பிலுடையணைத்து முலையூட்டிக்களிப்பதியல்பாகலான் - பையலென்றபோதே பரிந்தெடுத்து என்றுங்கூறினர். பரிந்து - விரைந்து. இப்பரிவு அந்த நொந்தசரீரத்திற் செங்கனமுண்டாமென்றவிடத்து ஆண் மகவென்ற சப்தம் காதில் நுழைய களிப்புண்டா யதினின்றுந்தோன்றியதாகும் என்றுணர்க.

எப்பிறப்பிற் காண்பேனென்றது - பிறப்பில்லாமையைக்குறிக்கின்றது. (147)

முந்தித் தவங்கிடந்து முன்னூறு நாட்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன்.

(போ - ரை.) முன்னரேயே இராப்பகலாக சிவபரஞ்சுடரைப் பக்திவிரத மூலமாகத்தவமியற்றி பத்துமாதங்களாகச்சுமந்து வருந்தி வயிறு முன்சரிந்துதோன்ற அக்கர்ப்பத்திற்கு யாதானும் துன்பமுண்டாகாது காத்துவந்த என் அரியமாதாவுக்கோ எரியும்படி அக்கினிப் பிரயோகஞ்செய்வேன்! செய்யேனென்றபடி.

(கு - ரை.) பிள்ளைப் பெருந்தகையார் தன்னியல் புணர்ந்தாராய், தன் தாயர் முன்னம் எத்தகையவிரதம், பக்தி தவங்கள் புரிந்திருப்பளோ வென்றெண்ணியே "முந்நித்தவங்கிடந்து" என்றருளினர் என்க. ஒருநாள் இருநாளல்லாது முன்னூறு நாளாதலால் அவ்வளவு காலசிரமத்தையும் வகித்த அருமையைப் பாராட்டிக் கூறலாயினர் என்பாம். தவச்சீலரைப் பெற்ற பிதாமாதாக்கள் தவமுஞற்றியுள்ளரோ வென ஐயுற வேண்டற்க; 'மகன்றந்தைக் காற்றுமுதவி' என்பதாதியாய குறட்பாவின் கருத்தை நம் பெருந்தகையாளர் மெய்ப்பித்தமை ஈண்டுதோன்றிய தென்க. (148)

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டு வேன்.

(பொ - ரை.) வணைத்துணியினும், மரத்தொட்டிலினும், தன் மார்பகத்தும், தோள்மேலும் வைத்தும்; கட்டிலிலிட்டும் விருப்பமுற்று, மற்றும் இடுப்பின்கண்ணும் வைத்துக்காத்து வளர்த்துவந்த நற்றாயையோ நான் கட்டையிற் கிடத்திக் கனல் மூட்டுவேன்! அங்ஙனஞ் செய்பேனென்றபடி.

(கு - ரை.) முன்னங் கர்ப்பத்திற் சுமந்தது போராதென்று, பிறந்தபின்னரும் நடைபயிலுங் காறும் சுமத்தலைக் குறித்துச் சலிப்புறுமையை யுணர்ந்து வருந்தியே "முட்டச்சிறகிலிட்டுக் காப்பாற்றி" யென்றெடுத் தோதலாயினராக்கும். அன்னையர் சிரமத்தை அளவறிந்து அழுதுருகிப்பாடிய இவ்வரியபாசுரம் இவ்வுலகிற் பிறங்கியும், சில பெரும்பேயர் தாயரைத் தடியாலடித்தலுஞ் செய்கின்றனர்! அந்தோ! இம்மாபாவியரை அறக்கடவுள் என் செய்வரோ! (149)

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டு வேன்.

(போ - ரை.) மிக்க கஷ்டத்தோடு பத்துமாதகாலம் வயிற்றில் சுமந்து தேகம் அலுங்காமலும் நலுங்காமலும் இருகையிலும் எந்திப் பாலூட்டிக் காத்துவளர்த்து இரவும்பகலும் தன் கரதல கமலத்திலேந்தியே ஈ எறும்பு கடித்தற் கஞ்சித் தன் சரீரத்திலேயே ஒட்டி வைத்துள்ள நற்றாய் தன் சரீரத்திலோ தீக்கொளுத்துவேன்!

(கு - ரை.) பெற்ற தன் குழவியை வளர்த்தலிற் றாய்க்குரிய கவலை கஷ்டங்களில் நூற்றிலொரு கூறும் பிதாவுக்கிராதென்பது விகசிதம். அதுகொண்டே அந்நாளன்னையான ஔவையாரும் சொன்ன நன்மந்திரமாய் "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்றருளிச்செய்து அதினும் அன்னையையே முன்னங்கூறினமையும் ஆய்ந்துணரற்பாற்று; என்? அவ்வளவுக்கும் தன்தேக சிரமங் கருதாது, குழந்தையைக்காத்தலிலே கருத்துள்ளமையும், கஷ்டத்தைவகித்தலினும் அவ்வாறேயே மனம்பதைத்தலும் அவ்வன்னைக்கேயாகலான் ஈண்டு அத்தகைத் தாய்க்கோ "மெய்யிலோ தீ மூட்டுவேன்" என்றார் பெருந்தகைப் பிள்ளையார். (150)

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியமே
மானே யென வழைத்த வாய்க்கு.

(போ - ரை.) (பாலுக்கழற் கண்டுஞ் சகியாது பரதவிக்கும் பரயதாய்க்குப் பலவாறுன) வரிசைசெய்து மனமகிழாது, இனிய

சுவைத் தேனே! யமிர்தமே! தேடக்கிடையாத் திரவியமே! தெள்ளமுதே! என்றென்னை அகங்கனிந்தழைத்த அவ்வாய்க்கோ நான் அரிசியிடுவது! மேலான 'நன்னிலையில் நிறுத்துவே' னென்றபடி.

(சு - ள.) வெளி என்னை இராப்பக லெந்தநேரமும் தன்னிடம்வைத்துக் காத்த அருமந்த தாய்க்கு அரிசியோ பெரிதாய் நானிடுவது? அன்று! என்றபடி. (151)

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

(பொ - ள.) யான் குழவியாயுள்ளபோது எனது முகத்தின் மேலே தன்முகத்தை மெதுவாகவைத்து முத்தமிட்டு என்னரிய மகனே! என்று அருமையோடும் கொஞ்சியழைத்திட்ட வாயிலே அரிசியையோ யிடுவேன்! அன்றி அவ்வருமந்த தாயின் தலையில் கொஞ்சமும் அஞ்சாது கொள்ளியையேனு மிடுவதா!

(சு - ள.) மகாசிரமத்துடனே யீன்று பல அருமை மொழிகள்கூறி யழைத்திட்டு ஈ எறும்போட்டி பேய்பிசாசு வெருட்டற்கும் காத்து வளர்த்துவந்த அருமந்த தாய்க்கு நான் அதன்பரிசிரமத்திற்காக நன்றி பாராட்டிக் காத்துச் சுகப்படச் செய்யாது அரிசியும் கொள்ளியும் வைக்க வேண்டுமா! என்று மனம் நொந்தனர் போலும். (152)

கலிவிருத்தம்.

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்

அன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே.

(பொ - ரை.) பண்டையோர் காலத்திலே திரிபுரத்தின்கண் ஸ்ரீ சிவபெருமானார் கொளுவிய சுடரானது மூண்டெரிந்தது. பின்னேர்போது அனுமார் கொளுவிய அக்னியானது தென்னிலங்கையைச் சுட்டெரித்தது. இன்றென்தாய் இறந்து என் அடிவயறு எரிகிறது. இதுபோலவே யான் வைத்துள்ள தீயும் மூண்டெரிவதாக.

(கு - ரை.) ஊரவர் வழக்கம் போல் நம்மன்னையரையும் விறகிலிட்டோ கொளுத்துவதென்று குளிர்ச்சிவாய்ந்த வாழைக்கட்டையிலிட்டு எரித்தற்காகவே இப்பாசுரத்தினை நம்பிள்ளைப் பெருந்தகையாளர் திருவாய்மலர்ந்தருளினர். தன் நற்றாய்ப் பிரிவைச் சகிக்கலாற்றாராய் "அன்னையிட்டதீ யடிவயிற்றிலே" என்றனர். (153)

வெண்பா.

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேனையகோ—மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

(பொ - ரை.) நங்குழவிக்கு எங்கு பக்ஷிதோஷந் தாக்கிவிடுமோ என்றையுற்ற தாய் ஆகாயத்தில் பக்ஷிபறவாத சமயம் வெளிக்கொணர்ந்து காத்துவளர்த்து வந்த தாயின் இருகரங்களும் அக்கினிபற்றியெரிகிறதே! அன்றி அக் கைகள் வெந்து தணிந்து சாம்பராகின்றதே! அந்தோ! பாவியேனென்செய்கேன்!!

(கு - ரை.) ஆகாயமளாவிப் பறக்கும் சிலபக்ஷிகளின் சாயை குழந்தைகள் மேல் படுதலடாது; என்? அப்பக்ஷியால் தோஷங்கள்

தாக்கி குழந்தைகள் நாளடைவில் மெலிவுற்று வருந்தியழும்; நம் பெருந்தகைப் பிள்ளையார் அஃதுணர்ந்தா ராகையால் அதனை ஈண்டு 'மாக குருவிபறவாமல்' என்று குறிக்கொண்டு பாடியருளினரென்க. (மாகம் - ஆகாயம்.) தாய் பலமுறையுங் கருத்து கொண்டெடுத்து வளர்த்த கைகளிரண்டும் தீப்பிடித்து வேகிறதை யான் பார்த்திருத்தலும் தகுதியோ! இதுவோ நான் அக்கரங்கட்குச் செய்யுங் கைம் மாறு! அந்தோ! என்றிரங்கினராக. (154)

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
தன்னையே யீன்றெடுத்த தாய்.

(போ - ரை.) அண்ணாமலை மேவிய பரஞ்சோதியே! எக்காலமும் தேவரீர் திருப்பாதங்களையே சாந்நித்திய துணையாக் கொண்டு அன்பு பாராட்டி வரம்வேண்டி அடிமையைப் பெற்றெடுத்து வளர்த்த அரிய பெரிய அன்னையார் அக்னியில் வெந்து போயினளோ! தேவரீரது திவ்ய திருவடித்தாமரையை யடைந்தனளோ! என்னையு மறந்தனள்போலும். என்செய்வாம்!

(கு - ரை.) பெருந்தகைப் பிள்ளையார் பிரிவாற்றாமையை நோக்க, அந்நாள் தவமிழைத்ததையும் பின்னாள் சரீரமுழைத்ததையுங் கண்டுங் கேட்டுமுள்ளாராதலின் பிரிவாற்றாமைக் கேதுவாயினப் புலப்பட்டது. ஜீவியகாலத்து தன்னை சதாநினைவுகொண்டிருந்தமையானே இப்போது 'என்னை மறந்தாளோ' என்றருளினர் போலும். ஐயனது பதாம்புய மடைந்த அக்கணமே தன்னை மறக்கக் கூடுமாதலால் அதனை முன்னங் கூறி மறத்தலைப் பின்னே கூறினர் என்க. சோணகிரி - அக்னிமலை. அதாவது அண்ணாமலையாம்.

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தாளின்று வெந்துநீரானாள்—பாற்றெளிக்க
எல்லீருமவாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்.

(போ - ரை.) அன்னையார் மிக்க சரீரதிடமா யிருந்தனள்; தெருவிலும் வரப்போக விருந்தனள்; நேற்றையதினம் ஜீவதசை யோடு மிருந்தவள் இன்று அக்னியால் தகனஞ் செய்யப்பெற்று சாம்பராயினள். ஆதலால், பால்தெளிக்க நாளையதினம் அனைவரும் வந்து சேர்வீர்களாக. ஏதோ என்னமோ வென்று இரங்கி நின்று விடாதீர்கள். யாவுஞ் சிவமயமே யாகும்! சர்வம் சிவாக்ஞை என் றபடி.

(த - ரை.) அன்னையார் நேற்று ஜீவியமாய் நன்றாகக் காணப் பட்டாள். அந்தோ; இன்றிறந்தனளே என்பது உலகியற்கையே; அதனாற் சலித்த லொழிக; (எவையும் 'சிவன்செயலாலே யாதும் வருமெனத் தேறல்' ஞானியரியல்பு.) (156)

திருவிடைமருதூர்.

மென்றுவிழுங்கி விடாய்கழிக்க நீர்தேடல்
என்றுவிடியுமெனக் கென்கோவே—நன்றி
கருதார்புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

(போ - ரை.) என்னரசே! கொடிய கிராதகர்களாகிய அரக் கர்களான திரிபுராதியர்களையும் அவர்கள் இருப்பிடமாகிய பெரிய நகரத்தோடும் எரியச் செய்தருளிய மருதப்பா! தேவரீர் தம் சந்நிதி மருவியும் உணவைப் பக்குவமாயருந்திப் பின் தாகவிடாய் மாற்று

வான் வேண்டித் தண்ணீர் தேடிச் செல்லல் ஒழிந்தபா டில்லையே; அடிமைக்கு ஒழிவது என்றோ?

(கு - ரை.) சர்வான்மாக்களும் தத்தம் நிலைமைக் கேற்ற பாடு பட்டுழைப்ப தெல்லாம் அவரவர் வயிறு வளர்த்தற்கே யாகும்; ஆகவே இந்த ஜீவனார்த்த ஏதுவான இலௌகிக விர்த்தியானது அவனருள் பெறுதற் கேதுவின்றி மறுபிறப்பிற்கும் மூலகாரணமாகி யுள்ளது. ஆதலாற்றான் மகான்களெல்லாம பசிக்கு ஏதுவாகிய மதி மண்டலச் செழுந்தேன் மடைதிறந் துண்டுளந் தேக்க வேண்டிய சாதனையை முதற்கண் சாதிக்கப் பிரயத்தினயாய யோக முயற்சியில் பிரவிர்த்திப்ப ரென்க. என்? பசிநோய் கொடியதாகலி னென்க. மற்றவை முன்னேவந்த பாசுரத்தி லறிந்திருக்கலாம். (157)

திருவொற்றியூர்.

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப்போல வழகியதாங்—தொண்டர்
உடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

(பொ - ரை.) மிகமேலாய கீர்த்தி வாய்ந்த திருவொற்றி க்ஷேத்திரக் கடலோரத்தின்கண்ணே விளங்குங் கரும்பானது, நீல நிறம் வாய்ந்த கழுத்தும், முக்கண்களைப் பெற்றுள்ளதாயும், ஆகாய மனைய வழகுள்ளதாயும், மெய்யன்பர் மேனியெலாந் தித்தித்துருகத் தக்கதாயும் விளங்கி நிற்கின்றது.

(கு - ரை.) விக்ரக ஆராதனை மட்டில் விளங்கப் பெறுவோ ரெவரோ அவர்கட்கெல்லாம் ஆகாயத்தின் தோற்றம் நன்குபுலனாகா. அஃதன்றி அகக்கண்ணென்கின்ற ஞான நேத்திரத்தான் அறியவல்

லார்க்கே ஞானகாய வொளியும், பிரபுவின் நீலகண்டமும், திரி நேத்திரங்களுங் காணுதற்கிசையும்; இதுவும் இராஜ யோகாநுபவி களுக்கு யென்க; அவர்கள் உணர்வில்தான் மெய்யுருகு மின்பம் வெளிப்படும். இதனையே பிள்ளைப் பெருந்தகையாளர் 'கரும்' பென்றது. பின்னும் பலபெரியோரும் அவரவர்களால் அருளிச் செய்துள்ள தோத்திரங்களினுங் கூறிக்கிடப்ப தறியலாம். 'உட லெலாந் தித்திக்கு முயிரெலாந் தித்திக்கு முள்ளகமெலாந் தித்திக் கும்' என்றூர் வடலூர் வள்ளல். (158)

ஒடுவிழுந்து சீப்பாய்பு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்துந்
தேவாதிதேவன் திருவொற்றி யூர்த்தெருவில்
போவா ரடியிற் பொடி.

(போ - ரை.) ஒன்பது வோட்டைகளாகிய சீயொழுகும் புண் களுக்கு போடும் மருந்தை யானறிவேன்; அஃதாவது, முன்னோர் கால் விஷபானஞ்செய்த தேவர்கட்குத் தேவனும் ஸ்ரீ சிவபரஞ் சோதியார் எழுந்தருளி யிருக்கும் திவ்ய க்ஷேத்திரமாகிய திரு வொற்றியூர் திருவீதியிற் செல்வோர்களது திவ்ய பாதத் திருத்துக ளாகும்.

(கு - ரை.) துவாரங்கள் அமையப் பெற்றும் அதி னின்றும் சீயொழுகுவது மாயது. நவத்துவாரம் - ஒன்பது வோட்டைகள்- நவம் - ஒன்பது. அவை கண் காது மூக்கு வாய் சல மலத்துவாரங் கள் ஆக கூ. இதனையே நம் அப்பர்சுவாமிகளும் 'ஒரு சரீரத்துள்ளே வொன்பது வோட்டைவைத்தாய்' என்றருளினர் தேவாரத் தாண் டகத்தில். மேற்கூறியபுண்களுக்கு மருந்தாவது ஒற்றியூர்த் திருவீதி செல்லும் ஞானியாது திருவடித்துகள் ஆணவ காமியாதிக ளொழிந் தார்க்குப் பிறவிகெடுத்துப் பேரின்பங் கொடுத்தாளு மாதலின் அங்ங

னங் கூறியருளின ரென்க. எவ்வாறெனின் சரீர பிரதக்ஷணம், அதாவது அங்கத்தால் பூமியிற் படுத்துருண்டு பிரதக்ஷணஞ் செய்த லாம். இப்பிரதக்ஷணத்திற்குப் பலன் விசேடமாகும். (159)

வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்களெல்லாங் கணநாதர்—பூவுலகில்
ஈதுசிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

(பொ - ரை.) மெய்த்தவச் சீலர்கள், திருவொற்றியூரைச் சிவலோகம் எனப் புகழ்ந்துள்ளனர். ஆதலால் அந்நகர்க்க ணுள்ள தடாகாதிகள் யாவும் சிவதீர்த்தங்களே யென்றும், மணல் முற்றும் திருவெண்ணீர்க்குச் சமமென்றும், காவணங்கள் யாவும் சிவகண நாதர்கள் என்றும் புராணகொள்கையாம். காவணம் - நந்தனவன முதலிய சோலைகள்.

(கு - ரை.) இக்கூற்று 'சிவோஹம்' பாவனு அநுபூதியர்களி னுடையதாம். இவ்வாறே இன்னும் அநேக அரிய மஹாத்மியம் வாய்ந்துள்ள தலங்களையும் புராணங்கூறுப. அன்றி அத்தலம் வசிப் பாரும் புண்ணியசீலரென்றே யோதும். (160)

திருவாரூர்.

ஆரூர ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றாரூர்க டோறு முழலுவீர்—நேரே
உளக்குறிப்பை நாடாத வூமர்கா ளீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர்.

(பொ - ரை.) ஆரூர்த்தேவரா மண்ணலா ரிங்கிருக்க அவ்வூர் விழாவென்று அலைந்து திரியும் ஆணலாதாரே! நீவீர் பேதைகள்.

எப்படியெனின், உள்ளக்குறிப்பறியாத ஊமையரானீர்; விளக்கை வைத்துக்கொண்டு அக்னிதேடும் பேதையோடொத்தீர்!

(கு - ரை.) வேண்டுவார் வேண்டிய வண்ணமளித்தற்கு அண்ணலார் ஆலயங்கொண்டு ஆரூரிலமர்ந்து எதிர்நோக்கி யிருக்கும்போது, அவரடிவணங்கி அரியபதவிகளைப்பெற வழிதெரியாத காரணத்தானே எங்கெங்கும் ஓடிச்செல்லல் நோக்கி 'ஊமர்காள்' என்றனர் பிள்ளைப்பெருந்தகையார்.

உளக்குறிப்பை நாடாத வூமர்காளென்றதால், சித்தமிசை குடிகொண்ட அறிவானதெய்வத்தை நாடுதல் செய்யாரை என்று சில சாராருங்கூறுவர். நிற்க;

ஈண்டு சில வினயமதியினர், இப்பாசுரகருத்தின் வழிநில்லாது இப்பெருந்தகையார் பலபதிகள் சென்றும் பாடிப்பணிந்துள்ளாரே, அது எம்முறைகொண்டோ வென்கின்றனர்; ஈதறியாமை. அவர் சென்றுபாடியது, ஐயன் ஓர் சமயம் 'நீர் பலபதிகளினுஞ் சென்று பாடுதி' யென்று கூறியருளினமைகொண்டே அங்ஙனம் சென்று பாடிப்பணிந்து வந்தனரென்க. இப்பிரபந்தத்தை நன்குணர்ந்தாராயின் இவ்வினு வெழுப்பாரென்க. இன்னும், சகுணோபாசனையினும் நிர்குணோபாசனையே மிகமேலாயதென்று 'வேதாதிகள் கூறலான்' என்று சிலர் பதிலிறுப்பர். அஃதும் பக்குவத்திற்கேற்றவாறாகவுங் கூறியிருக்கலாம்; அதனை அவ்வழியுணரற் பாலது. ()

எருவாய்க் கிருவிரன் மேலேறுண் டிருக்கும்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடுந் தாரைக்கே நீ.

(பொ - ரை.) மலங்கழிவாசலுக்குமேல் இரண்டங்குல உயரத்திலுள்ள புழுக்கூடாம் கருப்பொரைக்கோவருந்தி யிங்ஙனமா

ஞய்! அன்றியும் திருவாரூரின்தேரோடும் திருவீதியிலே சிறுநீர் வழியும் சிறுதுவாரத்தின் காரணமாக மாண்டனையே! அந்தோ, ஏழைமதியால் வந்த இழிவு!

(கு - ஙா.) திருவாரூரின்கண் பெருந்தகையார் வாசஞ்செய்த அஞ்ஞான்று அவர்க்கோர் உண்மையன்பன் சேர்ந் தூழியஞ்செய்து வரும்போது அன்னான் ஓர்தினம்தைலஸ்னநாஞ்செய்த தினத்திலே தன் மனையாட்டியைப் பொருந்திச் சுகமனுபவிக்க, அதனான் ஜன்னிநோய்க் காட்பட்டிறந்தனன். அப்பேதையை உயிர்பெற் றெழுமாறு கருணைகொண்டு பாடி எழுப்பிய திச்செய்யுளாகும். ()

திருக்காளத்தி.

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
ஐயரே யெண்ணா யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத் தைந்தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு.

(போ - ஙா.) நெஞ்சே! நீ பொய்பேசுவதை விட்டாயில்லை; மாம்ஸபோசனமுந் தள்ளமாட்டாய்; அன்றிக் காளத்திநாதரைத் தியானமுஞ் செய்யமாட்டாய்; புண்ணியவிஷயமுமில்லை; தீய கோபத்தை அடக்குவதுமில்லை; ஐந்து மந்திராக்ஷரஜபஞ் செய்வது மில்லை; ஆகச்சே இவ்வாறுய நினக்குப் பெருமையுமுளவோ? இல்லை யென்றபடி.

(கு - ஙா.) பொய் புலால் கோப மூன்றும் புத்தியைப்பொன் றச்செய்யுமென்க. அன்றி பொய்யால் தரித்திரமும், புலாலுண்ப தால் புத்திமங்குதலும், கோபத்தால் தவக்குறைவும் ஏற்படுமென் றுணர்க. நல்லறம், பஞ்சாக்கரஜபம் இவைவிட்டாரெவரோ. கெட்

டாரவரே. அன்றி அறமும் பஞ்சாக்கரஜபமும் ஞானபரிபாலனஞ் செய்வதாம். இது தருமநூல்விதி. (163)

திருக்காஞ்சி.

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றேன்—நித்தம்
எனக்குக் களையாற்று யேகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ.

(போ - ரை.) ஏகாம்பரா? கம்ப நாதனே! இவ்வெளியேனுக்கு எத்தனை யூர்களும், எத்தனை வீடுகளும், எத்தனை பேர்களும் எத்தனை அன்னையார்களும், எத்தனை நாமமும் ஏற்பட இவைகளுக்கெல்லாம் நான் ஆளாகிவருந்துவதோ? ஆகவேயிந்த பலபற்றுக் களையும் என்று வொழிப்பாய்? யான் கஷ்டமுறுவது உமக்கு விளையாட்டாக விருக்கிறதோ?

(கு - ரை.) இதுகாறும் யான் இருந்தவூர் பல, வாழ்ந்தமனை பல, பெற்றதாயர் பலர், எத்தனை நாமதேயம் எனக்கு இட்டழைத்தது எத்தனையோ! இவைகளினாலே யெல்லாம் யான் அநேகதுன் பங்கட்காட்பட்டேனே! இதுபோராதா! இனியேனுங்கருணை வைத்து திருவருளேக்குவாயாக என்றிரங்தனர் போலும். (164)

திருவிருப்பையூர்.

மாதாவுடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே!—நாதா,
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

(போ - ளா.) இருப்பையூர்வாழும் இலஞ்சியமே! என்னைப் பெற்ற எத்தனையோ தாய்மார்களும் சலித்தார்கள், தீயவினை செய்தயானும் கால் ஓய்ந்துவிட்டேன்; சதுர்முகனும் சிருட்டி செய்து கைசலித்தும் போயினன், எ நாதா! இனியேனும் அன்னை வழிதோன்றாது காத்திடுவாய்.

(து - ளா.) சிருட்டிசெய்த பிரமனே சலித்திடுவனேல், அவ் வகையா யின்பதுன்ப மனுபவித்துவந்த எனக்குச் சலிப்புற்றதைப் பற்றிச்சொல்லவும் வேண்டுமோ! ஆதலால் "கருப்பையூர் இனிவா ராமற் கா" என்றனர் போலும். (165)

திருக்கரோணம்.

அத்திமுத லெறும்பீ ரானவுயி ரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா காரோண ரே.

(போ - ளா.) காரோணரே! பெரிய யானைமுதலாகச் சிறிய எறும்புவரையுள்ள சர்வபிராணிகளையும் திருவுளமிரங்கிக் காத்து வரும் எம்பெருமானே! மெத்தப்பசிக்கிற தையனே! பாழ்வயறு இசிக்கின்றதே! என்ன செய்வேன்!

(து - ளா.) யானைமுதலாக எறும்புகடை எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளையும் சாக்ஷாத் பரமேசுரனே உணவுகொடுத்து இரக்ஷிக்கின்றார் என்று ஒருவர்க்கொருவர் பேசிமுடித்த விவேகி கள், மறுசமயம் சிலவுக்குப் பணமில்லையாயின் அதுவுள்ளார்பாற் சென்று பல்காட்டுகின்றார்கள்; அந்தோ! இவர்கள் வாய் ஞானம் என்னே! நம்பிள்ளைப்பெருந்தகையாளர் அற்றன்று; எதுவறினும் தன்னை யுடையானிடஞ்சென்று கேட்பதல்லால் பின்னர் யார்மாட்

டும் செல்லற்கு எண்ணலுஞ்செய்யார், இவர்மட்டோ, பல ஞான பராளும் இவ்வாறே செய்வர். அதுகொண்டே தமக்குப் பசிநோய் பீடித்ததைக் காரோணர்பாற் கூறி முறையிட்டமையை யறிக. ()

திருக்குற்றாலம்.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

(போ - ரை.) இயமன் எழுந்தருளுவதற்கு முன்னதாயும், கண் பஞ்சடைந்து பார்வைமட்டுப்படுஞ் சமயத்திற்கு முன்னதாயும், பாலருந்திய கடவாய் பற்கிட்டிப்போகு முன்னதாயும், பிராணன் உத்வாசன சமயமறிந்த பந்துஜனர்கள் மேல்விழுந் தழுதற்கு முன்னதாயும், ஊரவர்கள் கொண்டு சுடலையில் சுடுதற்கு முன்னதாயும் ஏநெஞ்சமே! திருக்குற்றால நாதனை நினைந்து துதிசெய்திடுவாயாக.

(து - ரை.) ஐம்புலாதியன தன்தன் இயர்க்கை சுபாவம் மங்கிக் கெட்டுப்போதற்கு முன்பே குற்றாலநாதனைக் கூறத் தூண்டுகின்றார். என்? தென்றிசைக் காவலன் வந்த அக்கணத்தே ஐம்புலாதியர் நம்புலாதியராயிராது வந்த அவர்தம் புலாதியராய்ப் பராக்கிவிருப்பர்; ஆதலின், முன்னரே குற்றாலத்தாரைக் கூறுவான் கூறினர் என்றுணரற்பாற்று. (167)

திருவையாறு.

மண்ணுந் தணலார வானும் புகையாற
எண்ணரியதாயு மிளைப்பாறப்—பண்ணுமயன்

கையாறவு மடியேன் காலாறவுங் கண்பார்
ஐயா திருவை யாறு.

(போ - ள.) ஐயா! திருவையாறு மேயபிரானே! தகிப்பதால் பூமிக்கேறும் வெப்பலாறவும், ஆகாயத்திலும்போய் புகையடையாமலும், கணக்கற்ற அன்னையர்களும் களைப்புத்தீரவும், சிருட்டிசெய்த பிரமனுர் கரங்கள் சலிப்பின்றி அசரவும், அடிமையின் கால்கள் நடந்து நடந்தலுத்தல் சிறிது ஓய்வு பெறவும் தேவரீர் கடைக்கணித்தருளுதல் வேண்டும்!

(கு - ள.) யாவும் வெளி யாதலால் ஈண்டு குறித்தற்கில. ஆகவே முத்திப்பேற்றிற்குத் தீவிரப்படுகின்றமை தோன்றகின்றது.

சிதம்பரம்.

சிற்றம்பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம்பலந்தேடி விட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமடநெஞ்சங்
கறந்திடத்தை நாடுதே கண்.

(போ - ள.) சிதம்பரஸ்தலமும், ஸ்ரீசிதம்பரேசனும் சமீபத்திலிருக்கிறபோது அதைவிட்டு நாம்வீணாக வெறுவெளியி லலைந்து திரிகின்றோமே! பேதமை வாய்ந்த தீயமனமானது ஜெனித்த வாயிலையே நோக்கினவண்ணமா யிருக்கிறதே! இதுதான் இவ்வாறாயிற்றே யென்றாலோ, கண்களிரண்டும் காரிகையார் தங் கனதனமிரண்டையும் மிரண்டு மிரண்டு பார்த்து மயங்கி தயங்குகின்றன! நம்மைச் சும்மாவிடுகிறதில்லை.

(கு - ள.) சிற்றம்பலமென்றது ஈண்டு விராட் புருடனது இதய கமலத்தையெனக் கூறலும் ஆகும். அதே போன்று சிவனும்

என்றது அந்த விராட்புருடனது இதய கமலமாகிய சிதம்பர சிற்சபையே குறித்து அதன்கண் பஞ்சகிருத்திய நிருத்தன மியற்றும் ஸ்ரீ நடராஜ வள்ளலாரையே குறிக்கொண்டதாம். கண்களானவை கறந்தவிடமான தனங்களை விரும்புவதும், மனம்பிறந்த வாசலான நிதம்பத்தை நினைத்துருகுவதும் காமுகர்க் கியல்பேயாகும். மற்றையோர்க் கன்று. பொதுமுறையாக எவரும் தனக்கன்னியரான மாதர்களைக் கண்டபோதெல்லாம் கண் போடுதலும், கருதுதல் செய்வதும் ஆகாதென்பதே ஆசிரியர் கருத்தாம். "நலக்குரியார் யாரெனின் நாம நீர்வைப்பில், பிறர்க்குரியா டோடோயாதார்." திருக்குறள். ஆதலின் பிறபெண்மக்களைத் தாயுந் தந்தையுமாகக் கருதுவதே நீதி யென்றூர் மேலோர். திருவள்ளுவர். (169)

பொது.

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ
என்னைநினைத்தா லிடுப்பி லுதைப்பேனுன்
உன்னை நினைத்தா லுதை.

(போ - ள.) இதழ் விரியப்பெற்ற புஷ்பமாலை சூடிய கூந்தலென்ன, மயில் போலும் சாயலென்ன இத்தன்மை வாய்ந்துள்ள எ மாதரசே! நின்னைத் தேடியவர் இப்போதில்லை, போய்விட்டனர், ஆகவே நீதேறுதலோடு மிருப்பாயாக. இனிநீ என்னை நினைத்துவரின் யான் நின்னையுதைப்பேன், நான் உன்னை நினைத்துவருவேனுயின் நீ என்னை உதைப்பாய் என்றனர். (இது ஓர் சரித்திரம் அடங்கிய செய்யுளாகும்.)

அரிய மாதவரும் மெய்ஞ்ஞானியருமான நம் பட்டினத் தடிகளார் சுமார் 1500 - வருடங்களுக்கு முன்னரே பிறந்தவரென்று பிர

பல சான்றோர்களால் கணிக்கப்பெற்ற அவர்தம் சரித்திர வாயிலாகத் தெரிகின்றது.

மற்றும் வடமொழி யாதரவாகிய பவிஷ்யோத்தர புராணத்துள் திருவிடை மருதூர் மான்மியத்திலே கூறப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இன்னும் இவரைப் பற்றித் தத்துவராயர், ஒழிவிலொடுக்க நூலுடையார், தாயுமானவர், சிவஞானவள்ளலார், முதலிய பலபெரியோர்கள் தங்கள் நூல்களிலே கொண்டாடி யுள்ளனர்.

இலக்கணக் கொத்து நூலுடையாரும் தம் நூலின்கண் இவரை யெடுத்தோதித் தாம் கூறும் இலக்கணத்திற்கு இவரது இலக்கியத்தினை மேற்கோள் காட்டியுள்ளார். இவரது சரித்திரங்களைப் பவிஷ்யோத்தர புராணத்தி னின்றும் எடுத்து நைமிசாரணிய வாசிகளான முனிபுங்கவர்களுக்கு வியாக்கிரபாத மகரிஷியாரது தவப் புத்திராராகிய உபமன்னிய பகவான் ஓதியருளியதாக விளங்குகின்றது.

அக்காலத்திலே அடிகளார் இல்லறத்திருந்து வாழ்ந்துவரும் பிற்போதிலே தாம் துறவுபூண்டு வெளியேறி சிவஸ்தல சேவார்த்தம் பலதலங்களுக்குச் சென்று வருங்கால் திருவண்ணாமலை க்ஷேத்திரத்திருந்தனர். அப்பொழுது ஓர் நாள் ஓர் கணிகை மாதாசியைக் காமுற்ற தாகவும், அவள் பயந்து உடன்படாளாய் நிற்கிறபோது அடியவர்க்கு விந்து தானாகவே வெளித் தோன்றிய தாகவும், பின்னர் அன்னாள் ஐயன் ஆசையை நிறைவேற்ற எண்ணங்கொண்டு அடிகட் கறிவிக்க, உடனே அவர் இச்செய்யுளைக் கூறி யருளியதாகவும் தெரிகிறது. இக்கதை நம்புவதற் காதாரமின்றாம்.

இதற்காதாரமாக இன்னுமோர் பொய்ச் சரிதமும் இதில் இணைத்து விட்டனர். அஃதாவது:—அடிகளார் விந்துவை அந்த தாசியானவள் உண்டுவிட்டதாகவும், அதுமுதல் கர்ப்பிணியாயிருந்து

அருணகிரியார் பிறந்தன ரெனவுங் கூறியுள்ளார்கள். இங்கே கவனிக்கவேண்டிய தொன்று: சுக்கிலமுண்டு கர்ப்போற்பத்தி யாவது இயல்பாமுறைக்கு நேர் விரோதமாயுள்ளது. பட்டினத்தார் பதினொரும் நூற்ருண்டிலே வியாபித்துள்ளவர்; அருணகிரியார் பத்தாம் நூற்ருண்டிலே விளங்கினவர்; பட்டினத்தடிகளார் திருப்பாடல்கள் பதினொராந் திருமுறைக்கண் அமைக்கப்பட்டுள்ளன. பட்டினத்தடிகள் சேக்கிழார்க்கு முன்னேயும், ஸ்ரீ ஞான சம்பந்தருக்குப் பின்னரும் இத்தமிழ் நாட்டில் வாழ்ந்துள்ளவர். ஆகவே ஆறுநூற்ருண்டுகள் கடந்தபின் பிறந்திருக்க வேண்டிய அருணகிரியாரைப் பட்டினத்தடிகள் புத்திரரென்று கூறுவது தக்கதன்ரும். ஆதலால் ஆன்ரேர் நன்காராய்ந்துணர்க. விரிப்பின் பெருகும்.

ஆகவே இப் பொருத்தமற்ற பொய்க்கதையைப் பல பெரியார் அங்கீகரியாது அகற்றினராக, யாமும் அவ்வாறே நிறுத்திஞேம். இருப்பின் தக்க சான்று வேண்டும்.

இங்ஙனங் கால்தலையற்ற அனந்த அனிர் வசனியங்கள் நந்தமிழ் நாட்டிலே அளவுகடந்து பிறங்கிக் கிடக்கின்றனவாம். அவைகளை ஆராயப்புகின் காற்று மூட்டை அவிழ்த்தாப்போல் காண்கின்றன.()

வாசற்படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப்படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்
பட்டிறந்த காலமெலாம் போதும் பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல்.

(பேர் - ரை.) பெருமையிற் சிறந்த சிவபரஞ்சுடரே! தெருவாயிலைத் தாண்டிவந்து போடப்படாத பிச்சையைப் பிரியப்பட்டேற்பதில்லை; அவ்விதபிச்சைக்குப் பிரியமுற்றிருந்த காலங்கள் போகட்டும்; இனிமேல் சுட்டிய அறிவுக்கெட்டா ஞானத்தை உபதேசிப்பாய்.

(கு - ளை.) சுட்டிறந்த ஞானமாவது, ஞாதுரு ஞான ஞேயம் என்பன கடந்த திருவடி ஞானமென்பர் பெரியோர். அதாவது காண்பான், காக்ஷி, காணப்படுபொருள். என்பர் வேதாந்தியர். ()

நச்சரவம் பூண்டானை நன்றுய்த் தொழுவதுவும்
இச்சையிலே தானங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.

(பொ - ளை.) சர்ப்பாபரண சங்கர பிரபுவை மனப்பூர்வ மாய்வணங்குவதும், அவ்வாறு வணக்கஞ்செய்வதிலேயே மனசைப் பதித்திருப்பதும், பிச்சையேற்று உண்பதும், அதன்பின் ஆலயத் தில் உறங்குவதுமே சுகானுபவமாகும்.

(கு - ளை.) ஒருவன் பிச்சையேற்றுண்டாலும் சிவபிரானை மறவாது பதிந்தபக்தியோடும் காலங்கடத்திவந்து அவன் சந்நிதி யிலே விழுந்துகிடப்பதுவுமே பரமசுகமென்றபடி. என், அவரும் பிச்சைப் பெருமானனது கொண்டென்க. நச்சரவம்—நஞ்சை யுடையபாம்பு. (172)

இருக்கு மிடந்தேடி யென்பசிக் கேயன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகே னரனே என்தேகம்
இளைத்தாலும் போகே னினி.

(பொ - ளை.) சிவபரஞ்சுடரே! யான் இருக்கிற இவ்விடத் திற்கு யாரும் அன்புடனே சாதங்கொண்டுவந்திட்டால் புசிப்பேன்; அவ்வாறின்றி என்னை அங்கு புசிப்பிற்கமைப்பாராயின் செல்லமாட் டேன்; அல்லாமல் என் உடம்பு அன்னமின்றி மெலியினும் ஓர் வீட்டையடைந்து பிச்சைகேளேன் என்றபடி.

(கு - ரை.) அதிகப்பசியுறினும் ஒருவன் வீடடைந் தேற்பவர் திருவருள்வழி செல்வோராகார். யாண்டிருந்தாலும் அப்படிப்பட்டவாளுக்குத் திருவருள் தூண்டிக் கொடுக்கும்படி செய்யுமென்க. எதனுன் எனின், உடல்பொருளாவி மூன்றுந் தனக்குத்தத்தம் செய்த நியாயத்தான் இறைவனுக்கே பொறுப்பாதலின்என்றுணர்க.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப் போகிறார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெங்நேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

(பேர் - ரை.) எவ்விதத்தும் இவ்வுடலைவிட்டு ஆன்மாபிரிவது நிச்சயம். அவ்வாறு பிரிந்தபின்னர் சரீரம் பந்துக்களால் தகனம் செய்யப்படும். ஆதலின், எப்பாடுபடினும் பரமேசுரனை எப்போதும் துதித்தும் தியானித்தும் வரல் வேண்டும்; இவையே முத்திக்குவித்தாம், அன்றி ஆன்மசுகமும் இதுவேயாகும் இவ்வுண்மையை அன்பொடும் உங்கட்குக் கூறினேன்.

(கு - ரை.) இன்னகாலத்திலே இவ்வுடம்பைவிட்டு ஆன்மா பிரிந்துபோவது தெரியக்கூடாமையின், 'பட்டதுபட்டு' என்றுத் துரிதமாக சதாகாலமும் சிந்தனையும் துதியும் செய்துகொண்டே வருதல் வேண்டுமென்று கூறினுர்போலும். அன்றி ஜென்மவிடுதலைக்கு ஆத்மசுகமான தியானதுதிகளே முக்கியமாதலின் ஆத்மசுகமும் இதுவேயென்றனர். சங்கரன் எனனும் நாமத்தால் சுகத்திற்காதார மானவன் என்றுதோன்றலின், சுக அபேக்ஷிதாள் சுகபாரும் சிவபெருமானையே பணிந்தேற்றன் முறைபற்றியே பெருந்தகையார் "சிவனையேற்றுங்கள் சொன்னேனதுவேசுக" மெனக் குறித்து ஓதி யருளினரென்க. "அன்றறிவா மென்னு தறஞ்

செய்க மற்றது, பொன்றுங்காற் பொன்றாத் துணை'' என்றார் திருவள்ளுவனாரும். (174)

ஆவியொடு காய மழிந்தாலு மேதினியில்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

(போ - ளா.) மடமை மிகுத்த மனமே! உயிருடன் கூடிவாழும்போது திடும்பிரவேசமாகச் சரீரத்திற் கானிவருமாயினும் நீ இப்பூமியின்கண் 'கொடியபாவி' யென்றபெயரெடாதே. இன்னும் பொருட்செருக்கும் இடம்பப்பகட்டும் விட்டுவிடுவாய்; ஏன்? இராஸதகுணப் பிரவிர்த்தியாலென்க. சத்துவகுணப் பிரவிர்த்தியாக இறந்தார் போன்றிருந்துவாழ்வாய்.

(து - ளா.) பெரும்பாலும் கூடுமானவரையில் பாவத்தேட்டத்திற் கேதுவான காரியாதிகளிற் பிரவிர்த்தித்து பாவத்திற் காளாகாது புண்ணிய சீலனாயும், இளமை, செல்வம், கல்வி, சரீரதிடம் ஆகிய இவைகளால் இறுமாப்பு வசப்பட்டு யாரிடத்தும் சுளிக்கப் பேசாது, நல்லானென்று சொல்லுமாறு இன்சொற் கூறி, பொல்லாங்கென்பவை யெல்லா மொழித்து, இணக்கமறிந் திணங்கிவாழ்தலே செய்வான்வேண்டியே பாவியென்றநாமம் "படையாதே" என்றனர் அடிகளார். ஏன்? அது பயப்பது நரகமும் பிறவியுமாதலினென்க. ஈண்டு, கருவிகரணங்களை யொடுக்குவதைக் குறித்தே செத்தாரை உவமைகூறி அவர் போன்றுதிரியென்றனர். (175)

பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பை நம்பி யிருப்பரோ நெஞ்சகமே
வைப்பிருக்க வாயின் மனையிருக்க—சொப்பனம்போல்

விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச் செத்துக் கொட்டக் கண்டு.

(போ - ை.) ஏ மனதே! புதைத்த பொருளிருக்கவும், வீடு வாசலிருக்கவும், களுக்கண்டதுபோன்று விக்கலுண்டாய்ப் பற்கள் வாய்திறவாதபடி கிட்டிக்கொள்ளவும், கண்களிருண்டு பஞ்சடைந் தும், கபம் மேலிட்டிழியவும் நேர்ந்து பின் னிறந்துபோய்ச் சாவு மேளமடிப்பதைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டிருந்தும், இப்பிறப்பை மகாநிச்சயமாக வெண்ணியிருப்பதுமுண்டோ! மெய்யறிவினர் அங் ஙனம் நம்பியிராரென்க.

(கு - ை.) நித்திய சுகத்திற் கேதுவாகும் தெய்வவழிபாடு சிறிதுமின்றி இந்தஜென்மத்தையும், பொருளையும், வீடுவாயில்கள் முதலியனவும் இருந்தும் அகஸ்மாத்தாய் இறந்து நாசமடைவதைக் கண்டிருந்தார் மீண்டும் அறவழி நில்லாது வாழ்வையும் பிறவியை யும் நம்புகின்றவர்களை நோக்கி இரங்கற் கருத்தாய்க்கூறியதாகும். ()

மேலுமிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந்திலையே சிந்தையே—கால்கைக்குக் [டல்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத்தப் பட்டவு
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு.

(போ - ை.) ஏ மனமே! கைகால்முதலிய அங்கங்களுக்கெல் லாம் சிறிதும் பெரிதுமான மெத்தையை உதவியாகக்கொடுத்துச்சுக மாக நித்திரைசெய்ய குத்தியும் தட்டியும் செய்து பின் கட்டை மேல்வைத்து தகித்துவிடல் கண்டும் அதன் பின்னரும் இவ்வுலக வாழ்வை விரும்பியிருத்தற் கெண்ணியுள்ளாயே! வெண்மையான இடபவாகன மேற்கொண்ட சிவபெருமானது தருமநெறியாம் சாஸ்

திர கருத்தினையறிந்தாயில்லையே! அறியாமை யென்னே! யென்றபடி.

(கு - ணா.) உலக ஆன்மாக்களார், நேர் நேராக யாவையுந் தன்னதாகவும் நிலையாகவு மெண்ணியிருந்து மாண்டொழியப்பார்த்தும், 'நாம் சாகோம்' என்று துணிவுற்றிருந்து வாழ்நாளை வீணுய்க்கழிக்கும் மந்த மதியினர்கட்கு இந்தவிதம் எடுத்தோதியவாகும். (177)

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்கள்
தத்தித்தத் திச்சட்டை தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் ,தித்தின்னக் கண்டு.

(போ - ணா.) மனசே! கொடுங் கழுகினங்கள் தன்தன் சிரகுகளைத் தட்டித் தட்டிக் கொண்டு தாவித் தாவிக் கத்திக்கரைந்து பிரேதத்தைச் சின்னு பின்னமாய்க் கொத்திக்கொத்தித் தின்பதைப் பார்த்திருந்தும், ஒன்பது ஒட்டைகளையுடையதோற்பையாம் உடலை மிகவும் அன்போடும் வளர்த்துத் தினந்தினமும் அலைந்தனையே! பரிதாபம்!

(கு - ணா.) நிதமும் நிணமருந்துங் கழுகினங்களுக்கு ஆகாரமாகக்கூடிய பிணவுடலைப் பொருட்படுத்திவரும் நலமறியாப் பாமரர் தம் நாசகாலபுத்தியினைக்கண்டு எடுத்துரைக்கின்றார் போலும். (178)

இன்னம் பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை—முன்னம்
எரிந்தகட்டை மீதி லிணைக்கோ வணத்தை
உரிந்துருட்டிப் போட்டது கண்டு.,

(பேர் - ணா.) ஏ மனமே! இவர் மகாமண்டலேஸ்வரனுக்கும், என்று பலர்வாழ்த்திக் கொண்டாடத் தக்கவராயிருந்து வாழ்ந்தவரை, யேர்க்கனவே பிணஞ்சுட்டதில் வேகாதிருந்த எஞ்சிய கொள்ளிக்கட்டைமீது கிடத்திக் கோவணத்தையும் எடுத்துக்கொண்டு உருட்டிவிட்டுக் கொளுத்தியதையும் நேராகப் பார்த்தும் மீண்டும் இப்பிறவி கொள்ளற்கிச்சை கொண்டனையோ! வெட்கம் யென்பதாம்.

(கு - ணா.) இறந்தவொருவனைக் கொண்டு சென்று இடுகாட்டின் அடுக்கியுள்ள கட்டைமீதுகிடத்திக் கோவணமுதலியனவுங் கழற்றிக்கொண்டு கொளுத்திவிடுவது, அவனால் சம்பாதித்துள்ள ஓர் சிறிய வஸ்துவுங்கூடப்போதற்கு எதுவில்லையென்றுணருமாறே அங்ஙனம் கோவணமும் பரிமுதல் செய்கின்றார்களென்று கூறத் தலைப்பட்டார். (179)

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங்—கடைச்சங்கம்
ஆம்போ தனவூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்.

(போ - ணா.) ஒருவனுக்கு முதல் முதல் சங்கினால் பாலூட்டுவர்; இடைப்போதில் சங்குவாத்திய கோஷத்தில் அடர்ந்த கூந்தல் வாய்ந்த மங்கையை மணம்புரி விலங்கிடுவர்; கடைசியாக அவன் மரணமடைந்த தருவாயில் சாதலைக் குறிக்கும் சங்குநாத மாகும். ஆகவே, நாம் உலகிடையே வாழ்ந்துள்ள காலஅளவு மிகச்சுளுவாய் முடிந்தன என்றபடி.

(கு - ணா.) முதல்பருவத்தில் சங்கு பாலூட்டுகின்றது; நடுப் பருவத்தில் சங்கானது மங்கல காரியத்தை முழக்கி யறிவிக்கின்றது.

கடைப்பருவமாகிய மரணகாலத்தில் அச்சங்கே மூடிவான் துக்கத்தையுந் தெரிவிக்கின்றது. ஆகவே இந்த எல்லைக்குள் நாம் வாழ்ந்த நலம் இவ்வுலகத்துள் எவ்வளவு காலமென்று பெருமையடைவது?()

எத்தனைநாள்கூடி யெடுத்தசரீர மிவை
அத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப்பிடித்து மெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப்போ மே.

(போ - ரை.) இந்த மானிடதேகமானது எவ்வளவு காலபரியந்தம் சேர்ந்து ஆகப்பெற்ற சரீரமாகும்; அத்தனைகால சிரமத்தினாற்கிடைக்கப்பெற்ற இச்சரீரத்தை மண்ணோ அல்லது அக்னியோ சாப்பிட்டு விடுகிறது. ஆதலால் நாம் ஸ்ரீசிவபிரான் திருவடிகளைச் சாதனமாக்கொண்டு பைய இராப்பகலற்ற பரவெளியி னுள்ளே சென்று வாழ்ந்திருப்போம் என்றபடி.

(கு - ரை.) ஆன்மாக்களாவார் அநாதிகாலத்திருந்து வெளிப்பட்டு "புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாய்ப் பறவையாய்" என்று மணிவாசகர் கூறிய வாறுகப் பிறந்து கடைசியாக இம்மக்களாய்ப் பிறத்தற்கு பல ஊழிகாலங்கள் சென்றிருக்குமாதலினாலேயே நம் பெருந்தகை யடிகள் "எத்தனை நாள்கூடி யெடுத்த சரீரமிவை" யென்றருளினர். அத்தகைய சிரமத்தோடும் கிடைக்கப்பெற்ற இம்மானிட சரீரத்தை கேவலம் இப்பூமிக்குணவாக்குதலானது அறிவின்மை யென்றே "அத்தனையும் மண்தின்பதல்லவோ" என்றார். இதனால் மண்ணுக்கு உணவாக்காது வளர்தற்கேது, "வித்தகனார் காலைப்பிடித்து" என்றார்; "இங்கே சிவராஜயோக முறையில் கால் என்றபிராணவாயுவை வெளிக்கடத்தாது உண்ணாக்கு வாயில் மார்க்கமாக மேலேகண்ட தாரையால் செலுத்தி நடுவணையாம் சுழிமுனைகண்டு மேலே மதிமண்டலத்திற்

கப்பாலான பரவெளிவீடே இராப் பகலற்ற விடமென்ற உண்மையையே யோக பரிபாஷையாக ஓதினர் போலும்'' இந்த துவாதசாந்த வெளியிலே சென்றக்கால் இன்பதுன்ப மில்லாதும், நினைத்தலும் மறத்தலு மற்று யேகாந்த பரிசுத்த துரியாதீத பர வெளி வீடென்பர் மேலோர், இந்த விடத்தையே வ - வள்ளலார் "துரியமலை மேலுள்ளதோர் ஜோதி வளநாடு'' என்றனர். ஆகவே அந்த இராப்பகலற்ற விடத்திலே யிருப்பதையே 'மேலைக்குடியிருப் போமே.' என்றனர் பெருந்தகையடிகள்.

அந்த அதியுன்னத ஸ்தானத்தில் குடியிருப்பின் சரீரம் மண்டின்னக் காரணமின்றாம். அன்றி எமனும் நம்மை எட்டிப்பாரான் என்ற கருத்தாம். மற்ற சூசனம் குருமூலமுணர்க. (181)

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
எச்சிலிருக்கு மிடமறியீர்—எச்சிறனை
உய்த்திருந்துபார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்த நிராமய மாமே.

(போ - ரை.) எச்சில் ஈனை யென்று கேவலமாகக்கூறி ஈனமாயும் மேன்மையாயும் பேசவொண்ணாது; நீங்கள் எச்சிலை யின்ன விதமென்றுணர வல்லீ ரல்லீர்கள்; நன்கு உற்றுணர்ந்து ஆராயின் உண்மை வெளியாகும்; இதன் பின்னரே உங்கட்கு மனம் பரிசுத்த நிலையை யடையும்.

(சு - ரை.) எச்சில் என்ற குற்றம் எந்தமட்டு மிருக்கிறதோ அதுபரியந்தம் துவைதம் அறாது, அத்வைதமுறாது. ஆகவே இந்த ஈனஞானம் என்று போமோ அன்றே ஏகைகபாவம் நிலையுறும். அதன்மேல் சித்தம் பரிசுத்தமாம். (இது மேலோர் கூற்று.) (182)

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர்பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடாபேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய்.

(போ - ரை.) எவ்வளவோ பேர்கள் புல்லிய வல்குல்; எவ்வளவோ பேர்கள் பிடித்த தனபாரங்கள். எவ்வளவோ பேர்கள் வாயினால் சுவைத்த உதடாகும்; தினநிதமும் பொய்யே பேசுகின்ற மடமை மிகுத்த பெண்மக்களார் சேர்க்கையை விட்டொழித்துப் பிழையுங்கள், பிழையுங்கள், பிழையுங்கள்.

(சூ - ரை.) இதனால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதோ வெனின், அக்னி சாக்ஷியாகவும், வேதவிப்ராள் சாக்ஷியாகவும், சகல மகாஜனர்கள் சாக்ஷியாகவும், தொட்டுத் திருமாங்கல்யம் பூட்டிச் சுதந்தரித்துக் கொண்ட பெண்டிரை யன்று யென்று தெரிந்து, பொதுப்பெண்டிரை யென்று பொருள் கோடல் முறையாம். அடா, வென்பது இழிவுரையாகும். (183)

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணிநெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன்னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

(போ - ரை.) மனமே! இவ்வுலகில் நாம் நிச்சயமாயிருந்து வாழ்தல் பொய்யாம்; சாதல்என்பதே சத்தியமாகும்; இதையுணர்ந்து யாதொருவர்க்கும் கேடு நினையாதே; கொழுத்து பருத்த வுடம்பை நம்முடைய தென்று நாம் சந்துஷ்டியா யுள்ளோம்; நாய் நரியும் பேய் கழுகு முதலான ஜெந்துக்கள் தங்களுடைய தென்று சந்துஷ்டியா யிருக்கின்றன; இதைத் தெளிவாய்த் தெரிவாய்.

(கு - ரை.) உலகில் வாழும் ஆன்மகோடிக ளனைத்தும் ஒப்பற்ற ஒரு தனித்தலைமைப் பெரும்பதியாகிய சிவபரம் பொருளார் பெற்ற பெருங்கருணை மக்களானமையின் யார் மாட்டும் சகோதர பாவம் பாராட்டலே ஆன்மநேய ஒருமைப் பாட்டினுக்குரிய தருமநூன் முறையாம். ஆதலால் எவர்க்கும் 'இடுக்கண் இழைத்தற்க' என்றார் நம்பட்டினத்தடிகளார். 'தன்னுயிர்போல் மன்னுயிரைக் காப்பதுவே சரியை' என்றார் பெரியார். எந்த வுயிர்க்குந் தீங்குசெய்யாம லிருத் தற் கென்றே நிலையாமையை நிலையாச் செய்தன ரென் றுணர்க. ()

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர்மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

(போ - ரை). மாதுர்ய சாதுரியமாய்ப் பேசிக் கைகளை வீசி விளையாடி வந்திடினும் பெண்களின் நினைவு நீர்க்குடத்திலேயே யாம். அதேபோன்று ஜீவன் முத்தர்களது உள்ளமானது, என்ன காரியம் பார்த்திடினும் எவ்வகைத் துன்ப மெய்திடினும் அந்த மௌன நிலையைவிட்டுப் பிறழாவாம்.

(கு - ரை.) பிள்ளைப் பூச்சி யெவ்வாறு சேற்றுள்ளிருந்து வாழ்ந்தவரினும் அச்சேறு சிறிது மொட்டாது காணப்படுமோ அவ் வாறே போன்று ஜீவன்முத்தர்கள் உலகத்துலவிடினும் உலக காரி யாதிகளில் சிறிதும் பற்றுதலின்றியே வாழ்வ ரென்பதாம். "மனத் தகத் தழுக்கறுத்த மௌனர் யோகர் வேசியர் தனத்தகத் திருப்பி னும் விருப்பறுத்து நிற்பரே" என்றனர் சிவவாக்கியர். (185)

மாலைப்பொழுதின்று மஞ்சளரைத்தே குளித்து
வேலைமினக்கிட்டு விழித்திருந்து—சூலாகிப்

பெற்ருள்வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தாஞ லென்செய்வாள் பின்.

(போ - ரை.) சாயுங்கால வேளையிலே நன்மஞ்சள் பூசிக் குளித்து வீட்டில் உள்ளவேலே பாராது கண்ணுறங்கா திருந்து கருவுயிர்த்து பிள்ளையைப் பெற்றனள் ஓர் பெண்; பின்னரதற்கு நாமஞ் சூட்டி வளர்த்தாள், அவ்வரிய குழந்தை பித்துப் பிடித்துப் பேத்துதல் செய்யின், பின்ன ரென்னசெய்வளோ அப்பேதை!

(கு - ரை.) உலகத்திலே ஆன்ம கோடிகளுக்கு நடைபெறும் சகல காரியாதிகளும் அயனுல் அன்றமைத்தவாறே யாகுமல்லால் மற்ருென்ருகா என்பதாம்;

விழித்திருத்தல் - ஈண்டு ஓரிச்சைகொண்டு துயிலாநிற்றல். ().

விருத்தம்.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர் [டே
கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே.

(பொ - ரை.) நாவானது வெடிக்கும்படியான அவ்வளவு பொய் வார்த்தைகளை யெல்லாங் கூறி 'நவநிதி' யென்று சொல்லக் கூடிய எதேஷ்டமாய்த் திரவியங்களைச் சம்பாதித்தும், நல்லனவாய காரியா

திக் கண்டறியாத கொடிய மாதர்களைக் கூடியும், பூமியுந் தாங் கொண்ணு அவ்வளவு புற்றீசல்களுக்குச் சமதையாகப் புலபுலவென் றும் கலகலவென்றும் மக்களைப் பெற்றுவாழ்ந்தும் வருவீர்; ஆனால், அவைகளையெல்லாங் காத்துவரும் வழிமட்டும் நன்குணர வல்லீரல் லீர்கள். தவிர அவைகளைக் கைவிட்டு விடவுஞ் செய்யீர்; இருகவ ராய் வளர்ந்துள்ள மரத்தின் ஒட்டைக்குள் தங்கள் காலை நுழைத் துக்கொண்டு, ஆப்பதனை அசைத்துப் பிடுங்கிவிட்ட வானரம் போன்று சிக்கிக் கொண்டீர்கள்! இனிமேல் இவ்வுலகத்துன்ப வாழ் வில் சிக்கித் துன்புறுமாறு ஆளாயினீர்! என்செய்வீர்! அறியாமை யால் வந்தகேடு.

(கு - ரை.) 'அறுப்புண்ட மரப்பிளவிலே தன். காலைவிட்டுக் கொண்டு விழிக்குங் குரங்கின் துன்பம் போன்று' என்று கூறிய உவமையை மிகவும் மெச்சத்தக்கதே. கணக்கற்ற பொய்யாகலான் நாப்பிளக்க வென்றூர் என்க; 'பொய்வழித் தேட்டம் போன்று போயின பொருளெல்லாமே' என்றவாருய் முடியுமென்பது அவர் தங் கொள்கையென்பதை யுய்த்துணர்க. அவ்வழிவந்தது அத்தகை யார்க்கே ஈடுபட்டு விரைவில் அழிந் தொழியுமென்றே நவ நிதியந் தேடி நாரியரைக் கூடி யென்றதாயிற்று. ஈண்டு குறிப்புணர்வித்த லாகும். (187)

வேறு.

மத்தளை தயிருண்டானு மலர்மிசை மன்னினானும்
நித்தமுந் தேடிக்காணு நிமலனே நீயின்றேகிச்
செய்த்தலை கயல்பாய்நாங்கூர் சேர்ந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கியென்முன் காட்டுவெண் காட்டுளானே.

(போ - ரை.) மத்துகொண்டு கோபிகைகள் கடைந்துள்ள தயிருண்ட விட்டுணுவும், அம்போருக மலரமர்ந்த அயனும் நெடுநாள்

தேடிக் காண்டற்கரியதான நின்மலனே!, வெண்காட்டில் மேவி வாழும் வித்தகச் சிவ பரஞ்சுடரே! தேவரீர் என்னைக் குறித்தெழுந் தருளி கயல்மீன் நிறைந்து வயல்கள் சூழ்ந்த நாங்கூர் சேந்தனுக்கு அரசன் அறியாதிட்ட விலங்கை நீக்கியருளி அவனை யான்பார்க்க நோக்கமுடையேன்; மேல் திருவருட் சம்மதம்.

(கு - ணா.) அடிகளார் வேண்டுதலுக்கிசைந்து எம்பெருமான் அநுக்ரகிக்க, அரசன் சேந்தனைவிட்டு மன்னிப்பும் கேட்டுக் கொண்டமை முதலியன சரித்திரத்தானுணர்க. (188)

வடிவந்தானும் வாலிபம் மகளுந்தாயு மாமியும்
படிகொண்டாரு மூரிலே பழிகொண்டாட னீதியோ
குடிவந்தானு மேழையோ குயவன்றானுங் கூழையோ
நடுநின்றானும் வீணனோ நகரஞ்சூரை யானதே.

(பொ - ணா.) சொரூபமோமிக இளமை, புத்திரியும் தாயும் மற்ற மாமியாரும் ஒன்றுபட்டு வாழாநின்ற இவ்வூரிலே பழிசுமக்க கூறுவதும் முறையோ? குடியிருப்பான் வந்தமனிதன் மட்டும் ஏழ்மையனோ? இருக்கட்டும், குயவனும் சக்தியற்றவனோ? மத்தியில் நிற்போன் வேலையில்லாதவனோ? ஊரும் சூரையாயதுவே.

(கு - ணா.) 'சீவாத்மாவை'க் குடிவந்தான் என்றார். சதுர் முகப்பிரமனைக் 'குயவ' னென்றனர். 'யமனையே' நடுவன் என்றனர். ஆணவத்தை மகன் என்றனர். 'மாயையே' தாயென்றனர் 'கர்மாவை' மாமியென்று உருவகித்துக் கூறிநராக்கும். (189)

மண்ணுமுருகு மாமுருகு மாயையுருகு மாலுருகும்,
பெண்ணுமுருகு மாணுருகும் பேதாபேத வகையுருகும்,
அண்ணலுருகு மிடத்தமர்ந்த வாத்தாளுருகு மாவணையா

ன், எண்ணியுருகும் குருநாத னென்பாலுரைத்த வோர் மொழியே.

(போ - ரை.) எனது பரமாசிரியன் ஓதியருளிய ஓர் வார்த்தையை (வெளியிடுவேனாயின்) மண்ணும் உருகும்; மாவர்க்கங்களு முருகும்; மாயாதேவியுமுருகுவள்; மற்றும் மயங்கியுருகும்; பெண்களுமுருகுவர், ஆடவர்களுமுருகுவர்; பேத அபேதப்பொருளனைத்தும் உருகா நிற்கும்; சிவபரஞ்சுடராரும் உருகுவர்; அவர்தம் வாம பாகத்துள்ள பரமமாதாவாகிய பரமேஸ்வரியும் உருகுவள்; சேஷசயனராம் மகாவிட்டுணுவும் உருகுவர்.

(து - ரை.) சற்குரு மூர்த்தியார் தமக்குபதேசித்தருளிய ஓர் ஒப்பற்ற மொழியின்னனவென்று உரைத்தல் கூடாமைபற்றியே அதன் தத்துவம் இத்தன்மைத்தென மட்டும் சேதனா சேதனங்கள் யாவும் உருகுமென் றோதியருளினமையைக்கண்டு அடங்கா ஆனந்தங்கொண்டதுமன்றி ஆச்சரியமுமுற்றார் என்க. தாயுமானாரும் தமக்கு மவுனகுரு உபதேசித்தமையைக்குறித்து "சொல்லாதவார்த்தையைச் சொன்னாண்டிதோழி" என்று அவ்வியக்தமாய் விளக்கினரென்க. குருவுபதேசம், சிவகுரு நாதன் செய்த திருவருள் இவைகளைப்பிறரறியக் கூறவொண்ணா தென்பது சித்தாந்தமாகவி னென்க. (190)

உடற்கூற்று வண்ணம்.

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதானனு.

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்க வொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து—

(போ - ரை.) பேதைமையுள்ள ஓர் தலைமகளும் ஓர் தலைவ னுமாகத் தனித்தவர்களாய், இனிய சுகானுபவத்திற் கேதுவான அன்புவசப் பட்டவர்களாய்ப் பொருந்தி அறிவுமயங்கியபடி, தலைம கன்மூலம் வெளியான சுக்கிலமானது தலைவிபால் வெளிவந்த சுரோ ணிதத்தோடுங்கலந்து,

(கு - ரை.) பெண்களுக்குரிய நால்வகைக் குணங்களுள் ஒன் ருய மடமையையுடைமையான் 'ஒருமடமாதும்' என்ருர். தலைவி தலைவன் ஆக இருவர்பாலும் அன்பானது யேககாலத்தோற்றத் தான் மனம் ஒருமையுற்று பொருந்துங்காலே யின்பம் காணப்பெறு மாதலின் 'இன்பசுகந்தரும் அன்புபொருந்தி' யெனக் குறிப்பா யுணர்த்தப்பட்டமையறிக. இருபாலார்க்கும் விஷயாதியால் விந்து நாதம் வெளியாம்போது ஓர் அரியநூதனமாய இன்போதயமாய் அறிவும் மயக்குறுதல் சுபாவமாதலால் 'உணர்வுகலங்கி' யென்றனர். ஈண்டு சுக்கில சுரோணித மிரண்டும் ஒரேசமயமானுல்தான் புத்தி

ரோற்பவத்திக் காதாரமாகும்; முன்பின்னாயில் கருவமைவுறு மென்க. இன்னும் ஆண்மகன் விந்துவும் பெண்மகள் சுரோணிதமும் கலந் தால்தான் கருக்கூடிமுத்து கர்ப்போற்பத்தியைப் பெறுமென்க. ஆதலாற்றான் 'கலத்தல்' என்பதைக்குறிப்பிட்டனர்.

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்துபு
குந்துதிரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—

(போ - ரை.) தலைவி தலைவர்கள்பால் வெளியாகிய சுக்ல சுரோணிதவிதத்துள் கலப்புற்று அதில் பனித்துளியில் பாதியளவு திவலைமட்டும் தலைவியின்பால் கலந்து தாமரைமொட்டையொத்தும் பிறகு ஆமைவடிவைப்போன்றும் விரிவாகி கண் காது மூக்கு கால் கை இவையெல்லாம் சிறிதுசிறிதாகப்பிரிந்து எனக்கூறியுள்ளது,

(கு - ரை.) கருக்கூடடைவது 'அறுகுநுனி பனித்துளி' யென்று அருணகிரிநாதரும் திருப்புகழில் வெளியிட்டதுங் காண்க. அவயவாதிகள் தோன்றற்குமுன்னே உருவ உருண்டையாயிருந் தது, சப்பட்டையாய் ஆமைபம்ஸமாகக் காணுவதாலேயே கமடமா கிய ஆமையை ஈண்டுகூறினர் மீண்டுமென்பாம். இவ்வுருவிலிரு ந்து இனி அங்கங்கள் பிரிவாகும்.

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்றுநி
றைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—

(போ - ரை.) சிசுரூபம் பூர்த்தியாகிப் பத்துமாதங்களும் சரி வர முடிந்தவரலும் தலைவி வேதனையால் சிசு பூமியிலே பிறந்து வீழவும், மற்ற உற்றார் அக்குழந்தைக்கு நாள் நக்ஷத்திர கணிதங் களைக்குறித்து ஆராய்வர்கள்,

(கு - ரை.) வயிறுபெருத்து மேல் பிரசவமாதலின் 'உதர மகன்று' என்றனர். இதன்மேல் நாள் நக்ஷத்திராதிகளை ஆராய் வார்கள். அதனையே 'யோகவார நாளறிந்து' என்றனர்.

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்து கவிழ்ந்து மடமயில் கொங்கை யமுதமருந்தி
யோரறி வீரறி வாகிவளர்ந்து—

(பொ - ரை.) இதன்மேல் பெண்வகையருக்கள் குழந்தையை ஏணையிலிட்டுத் தாலாட்டுவர்; குழந்தை ஓர் சமயம் பூமியிலே தவிழ்ந்து நகர்ந்து மயிற்சாயலுள்ள தன் தாயின் பாலருந்தி நாளடை வில் ஓரறிவு ஈரறிவாக வளர்ந்து,

(கு - ரை.) தலைவியின்சேனை, தாயின் வகையருக்கள். ஏணைத் துணியை அணையாடை யென்றார். பூமியிற் படுத்து புழுதிபட நகர் தலையே 'மண்படவுந்தி யுதைந்து' தவழ்ந்தென்பா ராயினர். உந்து தலை இயல்பா வுடையதானதால் அதனை மதலைக் குணமாய்க் கூறி னர்போலும். நாளடைவில் ஓரறிவு ஈரறிவாய் வளருந் தன்மை யாய்ச் சிலவருடங்களில் தான் ஆறு அறிவும் நிறையப் பெறுதல் சுபாவமென்க. பகுத்தறிவு ஒன்றும் சேர்ந்து ஆறறிவாயது. இது வும் கல்வியறிவு, உலக அறிவு இவைகள் உண்டாய பின்னரே யென்க. சிசு ஐயறிவுடையதே.

ஒளிநகையூற விதழ்மடவாரு முவந்து முகந்திட
வந்து தவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிரு'போவென நாமம் விளம்ப—

(பொ - ரை.) குழந்தையின் ஒள்ளிய பற்களையும், மிருது வாய்ச் சிவந்த கீழுதட்டையும் தாய்முதலானவர்கள் ஆசையோடும் பார்த்து முத்தஞ்செய்ய, பின்னும் அவரவர்பால் சிசு தவழ்ந்தோடித்

தன் தாயின் மடியேறிக் குதலைவார்த்தை குலவி, வாயெனவும், போயெனவும், வார்த்தைகள் கொஞ்சிப் பேசியும், அப்பா, அம்மா வென்ற பெயர் சொல்லியும் என்ப,

(கு - ரை.) தவழ்தலையுடைய குழந்தையை பல மாதர்கள் ஆசையோடும் எடுத்து முத்தஞ்செய்து உச்சி முகாலும், பிறகு பல் தெரிய பலவார்த்தைகள் பேசுதலையும், வார்த்தை பழகுதலையும் இயல்பாக விருத்தியாகின்ற தென்பதாயுணர்க.

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர் தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோர்டிநடந்து—

அஞ்சுவயதாகி விளையாடியே—

(போ - ரை.) பல மணிமாலைகளும் பட்டுவஸ்திரங்களும் சுவர்ன அரைநாண் பூணும் இடுப்பு அசைந்தசைந்து ஆடுதலும், உண்பார் தின்பாரைப் பார்த்துத் தானும் அப்படி பழகியும், நடுவீதியிற் கிடந் துருண்டு விளையாடியும், புழுதியைக் கையாலளைந்தும் சரீரத்தில் பூசியும், சகல குழந்தைகளோடும் ஓடி விளையாடியும், நடந்துதிரிந்து விழுந்தும் புழுதியை யளைந்தும் வாயிலிற்போட்டும் ஒருவர்க்கொரு வர் மேலே போட்டு விளையாடி இவ்வாறு வயது ஐந்தாக,

(கு - ரை.) உடுத்தற்குரிய ஆபரணாதிகளோடு பட்டுத் துகி லணிந்து இடுப்பில் வெண் பொன் செம்பொன்களால் அரைநாண் பூட்டி யசைந்தாடி, மற்றும் பக்ஷணம் சோறு இவையுண்ணும் குழந்தைகளை நோக்கித் தானும் அவ்வாறே யுண்டு தெருவில் விளை யாடல்புரிந்து, இதர குழந்தையுடன் ஓடியாடிவந்து இப்படி வயது ஐந்து முடிய.

உயர்தருஞான குருவுபதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு, வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—

(பொ - ரை.) உத்தமமான குருவின்பால் ஞானோபதேசமும், தமிழ்க்கல்விக்குரிய சாஸ்திர உபதேசங்கள் பெற்றும், அவ்வாறு நூல்பலகற்றுத் தெளிந்து, பார்ப்போர் வளர்பிறைச் சந்திரனென்று சொல்லுமாறு நாளொரு வண்ணமாய் வளர்ச்சிபெற்று வயது பதினாறு நிரம்ப,

(கு - ரை.) மேலான மோக்ஷ யேதுவான ஞானத்தையே ஈண்டு 'உயர்தரு ஞான' மென்றனர். இதன்மேலேயே வித்யாரம்பம் உபதேசிக்கப் பெறுதல் பூர்வகால மேன்மக்களார் வழக்காகும். ஆதலின் அம்முறையை அடிகள் கூறலாயினர் என்க. மற்றும் பல கலாவிநோதாதிகளையெல்லாம் முறையேயோதி அதன்பால் நிகழும் சந்தேக விபரீதங்களை யொழித்துத்தெளிந்து வுணர்தலையே "கலையுங்கரைகண்" டென்றார் அடிகளார்.

மயிர்முடிகோதி யறுபதநீல வண்டிமிர் தண்டொடை
கொண்டை புனைந்து, மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க,—

(பொ - ரை.) பிள்ளைக்குத் தலைமயிர்வாரி கொண்டைகட்டி அறுகால் வண்டுகள்மொய்க்கின்ற மலர் மாலைசுற்றி, பொன்மணிப் பூண்கள் பலதரித்து, பார்ப்பவர் பலவாறாக ஒன்றுகூடி வளைந்து நிற்க,

(கு - ரை.) வண்டினங்கட்கு கால் ஆறு ஆதலின் "அறுபத நீலவண்டு" என்றனர்; தொடை—புஷ்பமாலை.

மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டும
ருண்டுதிரண்டு, வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

(போ - ை.) கணிகைமாதர்கள் பார்த்து ஆஹா! இப்பிள்ளையென்ன, காமனையொத்த அழகுவாய்ந் திருக்கின்றனனே, என மயக்குற்று, வரிபரந்த நேத்திரங்களால் மருட்டிப்பார்த்து, மயில் போன்று செல்வதுணர்ந்து கண்களிக்க வெறிக்கக்கண்டு,

(கு - ை.) மதனன—சொரூபன், ஈண்டு மதனசொரூபனென இடைக்குறைந்து வந்தது; அதாவது காமனையொத்த வனப்பு வாய்ந்தவ னென்றபடி. தாசிகளையே விலைமாதரென்றும், கணிகையரென்றும், பரத்தையரெனவும், பொதுப்பெண்டிரென்றும் கூறப்படும். காமக்கிழத்தி யெனலுமமையும். அவன்மனங் கவலச்சுழித்துப்பார்த்தலையே 'சுழியவெறிந்து' என்றனர். இன்னும் அவன் மயக்குற்றுச் சொக்குவதற்காக மயில்போன்று பையசொகுசாக நடத்தலும் அம்மாதர்க்குரியன வென்றனர்.

மனதுபொருும லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை, மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடிய மாமுதல் சேரவழங்கி—

(போ - ை.) மேற்கூறிய வண்ணத்தான் திடம்பெற அம்மாதரைப் பின்பற்றித் தொடர்ந்துபோய் அவளைப் பார்த்தவளை நெருங்கி பொற்கிண்ணம் போன்ற புணர்முலையைப் பரிசித்துப் பின் அத்தனம் மார்பினிலே அழுந்தும்படியாகக் கட்டித் தழுவிப் புணர்தல் புரிந்து இஷ்டப்படி யெல்லாம் விளையாடி பெருந்தனங்களை அந்நாசகாரிகளுக் கீந்து,

(கு - ை.) மோகவெறிகொண்டு வெகு அவசரமாக அவன்பால் சுவானம்போல் செல்வதையே 'ஓடி' யென்றனர். மயங்கி

கூடி, சங்கமித்தலை யென்க. மூலதனத்தையும் தன்தேட்டத்தை யும் பொதுப்படவே தேடிய முதற்பொருள்களை சேர, வென்றது 'தொகையாக' என்ப.

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழுந்து, மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

(பொ - ரை.) முன்னோர் நிறுத்திய மூலப் பொருள்களும் இன்னு மிதரபொருள்களுங் கூட்டி அவ்வழியி லழித்துக் காமசுக மறிந்த மறுக்ஷணமே கைவராக்ஷியால் துக்கித்து முன்னைய மேனியு மாறி பேமானியாய் நடைப் பிணம்போன்று பார்த்தோர் பலரும் சுகத்தின் கதியென்று பரிகசிக்க,

(கு - ரை.) முதுபொருளென்பன பழமையாயுள்ள தாவர சங் கம சொத்துக்களும் நாணய திரவியங்களும் ஆகும். கணக்கற்று கால நிலை, சரீரநிலை, வயதுநிலை ஆகிய இவைகளைச் சிறிதுஞ் சீர் தூக்காது அளவுகடந்து போகத்தில் மூழ்குபவர்களே பின்னர் மகாதுர்ப்பலர் களாய்ப் பல வியாதிகட் குட்பட்டு மேனியும் நுடங்கி ஈற்றில் தேவாங்காவர் என்பதையுமே அடிகளார் "மதனசுகந்த விதனம் இது" வென்று கூறினர். ஆகவே பால்ய கொண்டாட்ட மெல் லாம் யௌவனத் துள்ளேயே விருத்தாப்பியம்வந்து தின்டாட்ட மாய்ச் சந்தானமுமற்று விட்டதை நினைந்து நினைந்து வருந்த வேது வாய் விடுவதால் 'வாலிபகோலம்' பிரிந்தென்றார்.

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு, வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து—
செங்கையினி லோர் தடியுமாகியே,

(போ - ரை.) தேககாந்தியும் இளமையும்போய், வலிமையாயுள்ள தந்தங்கள் நழுவி, கண்களின் பிரகாசங் குறைந்து, வயது சென்றதுபோலத் தோற்றி உரோமம் 'வெளுமையுற்று, தேகம் கொழுமைமாறி திரைந்து; வாதநாடி முதலியன தளர்ச்சி யடைந்து, செங்கமலம் விரிந்ததன்ன கரத்தில் ஓர்தடியும் பிடிப்பதாகியே,

(கு - ரை.) இங்கே வளமையென்றது திரவியத்தைக் குறித்து நின்றது. திரை - சரீரம் சுருங்கியகுறி. 'விந்துவிட்டான் நொந்து கெட்டான்' என்று உலக சமுதாய சனங்களில் சிலர் சமயம் நேர்ந்துழி கூறுவதியற்கை. பலரும் அறிவர். அளவுக்கு மிஞ்சிய அமுதமும் விஷமதாகும் என்பது மொன்று. சிலர் விந்துவை 'ஜீவரத்னம்' என்றும் கூறுவர். ஆகவே எதைக்கட்ட வேண்டுமோ அதைக் கட்டியும், விடவேண்டுமோ அதைவிட்டும் செய்யாதவர் கதி அந்தியத்தில் அதோகதிதான் இன்னும், "மூத்திரத்தி ஞனைனந்த முடைநாற்றயோனிக்குக் காத்திரத்தை விட்டார்" கணக்கில்லை. என்றார் சிவஞான வள்ளற் பெருமான்.

வருவதுபோவதொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து, மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—

போ - ரை.) ஓர் கூன்விழுந்த கிழக்குரங்கு அங்கு மிங்கும் குந்தி குந்தி அலைந்து திரிகின்றது என்று சொல்லவும்; அறிவு அழிந்து காதும் அடைபட்டு அடுத்தடுத்துச் சொல்வதையு மறியலாற்றாது, வாயில் வந்தனவெல்லாம் உளறி,

(கு - ரை.) 'மிகுந்த கூனையே' அதிக கூன் என்றனர்போலும்; முதுகூன் என்றதைச் சிலர் கூன்முதுகென்று பொருள் கொண்டு விடுவர், அது பொருந்தாது: முதுமை-கூன் எனப்பிரித்து காலமுற்

பருவத்தைக் குறிக்கும் ஆகவே முதுமையாயுள்ள கூன் என்று வருதலால் அதிக காலத்தையே காட்டும். பழமையாயுள்ள கூனென்றபடி. முதுகு என்னும்பதம் முது எனக் குறுகியது.

துயில்வருநேர மிருமல் பொருது தொண்டையுநெஞ்ச
முலர்ந்துவறண்டு, துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு—

(போ - ள.) நித்திரை துவக்கத்தில் வரும் இருமல் தாங்கவியலாது தொண்டை, நெஞ்சமிவைகள் உலர்ந்துபோய் வரட்சியுற்று இடுப்பின் வஸ்திரம் நழுவிச் சுவாதீனமின்றி, இந்நிலையைப்பார்த்து மக்கள் மனைவியர்கள் மனமிகவருந்த,

(கு - ள. சுரணையையே சுணையென்றார். கோரணி - விகாரத்தோற்றம். குழப்பம் என்பது மனத்தெளிவின்மையேயாம். அன்றிக் கலங்கிப்போத லென்பாருமுளர்.

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச, கலகலவென்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து—

(போ - ள.) இக்கலிகாலத்திலே இவரது நியாயத்தைக் கவனியுங்கள் எனச் சொல்வார்க்குக் கவலையானது முன்னிலு மிஞ்ச சலசலவெனவே மலசலாதிகள் வெளிவந்து கால்வழியும் மேல்வழியும் எங்கும் பட ஒழுக்கெடுப்ப,

(கு - ள.) அதிபூர்வ காலத்தார் ஜீவகாருண்யத்தில் தலைசிறந்து பிறரெய்துந்துயரைக்கண்டு தனக்குற்றதாகக் கருதி அவரை அத்துயரினின்றும் மீட்டுவருதல் இயல்பாயிருந்தது என்பது பலபூர்வ சரிதமூலம் வெளியாகின்றது. இக்கலியுகத்திலோ அவ்வாறு

கொள்ளாது பிறர்க்குதவி புரியாதே யிருக்கட்டும், அதனுற் குறை யில்லை; பிறர்யாதானும் ஓர் செயலால் துன்புறும்போது அவையிற் றினைக்கண்ட இக்கலிகாலத்தார் வன்னெஞ்சால் வாய்மதங் கொண்டி ழித்துக் கூறி கைகொட்டி நகைப்பதை யாவது செய்யா திருப்பின் அதவே பேருதவியாகப் பாவிக்கலாம். அவ்வாறுமின்றி இக்கஷ் டம்போல் இன்னும் பதின்மடங்கான துன்பமெய்தி ஆற்றுவெள்ள மடித்துப் போவது போன்று தொலேந்தாலல்லோ சரி யென்னும் கண்மணிகளின் கடுஞ்சித்தங் கண்டே "கலியுகமீதி லிவர்மரியாதை" என்ருர் நம்பெருந்தகையார். இதனுல் வயோதிகபருவத்தில் உல கத்தி லிருப்பதைவிட இறந்துபோதலே சுகம் என்பதுகருத்தாம்.

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லேந்துமருண்டு, திடமுமுலேந்து மிகவுமலேந்து
தேறிநலாதர வேதென நொந்து—

(போ - ரை.) மனத்தெளிவின்றி வாயுங்குறைவுற்று சிந்தை கெட்டுக் கலங்கி உறுதிப்பாடின்றி மிகத்திண்டாடிப் பின் ஆராய்ச்சி செய்து, நமக்கிப்போது உற்றதுணையாவர் என வருந்தியே,

(கு - ரை.) திடமு முலேந்து - என்றது மன வலிமை மாறி என்க; ஈதன்றி அலேந்தென்றுங் கூறுதல் வளமை.

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்டமு
மென்றுதெளிந்து, இனியென்கண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வு நிலாதினிநின்ற—

(போ - ரை.) வேதாவெனும் பிரமதேவன் முதலில் எழுதிய வாருகவே கண்டாதிகளும் வந்துகொண் டிருக்கின்றன எனத் தேர்ந்து "இனியுங் கண்டமுண்டோ, இனியென்ன தொந்தங்கள்

வரப்போகிறது? (எல்லாமும் வந்துகொண்டுதா னிருக்கிறதே,புவன போகம் நிலைத்ததல்ல, அநுபவிக்கவேண்டிய,

(கு - ரை.) லலாட லிகிதத்தையே வேத னெழுத்தென்றனர். ஆபத் சந்தர்ப்பத்தையே கண்டமென்றனர். தொந்தம் - வினைத் தொடர்பாம்; நின்றது - பாக்கியாயுள்ள காரியாதிகள் என்க.

கடன்முறைபேசு மெனவுரைநாவு முறங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமுநின்று—
நெஞ்சுதடுமாறி வருநேரமே.

(போ - ரை.) "கடமையான முறைமைகளைப்பற்றிப் பேசுங்கள்" எனக்கூறிவந்த நாவு பேசமுடியாது வலிமை குன்றவே, தனது கரங்களால் சயிக்கினைசெய்து சுட்டிக்காட்டிப் பேசியும், அன்னஞ்செல்லாமையால் விட்டுவரும் கஞ்சியினங்கள் செல்லுதலின்றி சடைவாய் வழிவடிந்து கொண்டும், பிராணவாயுவும் பூதநாடியும் விரைந்துபேசவும், சுவாசபந்தமுற்று மனம் கலக்குறும்போது,

(கு - ரை.) கடன்முறை - கடன் முதலாயுள்ள காரியாதிகள் எனினும் ஒவ்வும். மேல் பித்தம் ஓங்கிவரவேண்டிய நிலைமை.

வளர்பிறைபோல வெயிறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும்விஞ்ச, மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—

(போ - ரை.) வளர்பிறைச் சந்திரனை யொத்து விளங்குந் தந்தபந்திகளையும், சுருண்ட செம்பட்டை மயிரும் ஜடைகளும், தடிப்பான மனமும், கருமை மேனியும் பொருந்தி மலையிலக்காக யமபடாள் தற்சூழவும்,

(கு - ரை.) விஞ்சுமனம் - என்றது, கன்னெஞ்சு என்க. (பிராணன் உத்வாஸன சந்தர்ப்பம்.)

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்து
குனிந்தழநொந்து, மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—

(பொ - ரை.) பாசக்கயிர் கொண்டு வீசிக்கட்டி பிராணனைக் கைக்கொண்டு போகும்போது மக்கள் வந்தழுது துக்கங்கொண்டாடவும், மனையாள்வந்து அவர்மடியில் விழுந்தழுதலும், ஐயோ ஐயன் சென்றனரே!! எனக் காலத்தை யுத்தேசித்து கனிந்தழவும்,

(கு - ரை.) மாழ்கினர் - இறந்தனர். காலமறிந்து - நிலைமைக்குத் தக்கவாறாக.

பறைபவர்காணு மெனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று—

(பொ - ரை.) 'பழயகாலத்து மனிதனுச்சுதே' என்று பேசிக்கொண்டே அண்டையசலார்களெல்லாம் விரைவாக வந்து ஆங்குள்ளாரில் சிலரைக்குறித்துப் 'பந்தல் முதலான காரிபாதிகளைக் கவனியுங்கள்' என்ன, பஞ்சமன் தப்புமேளந்தட்ட, சவஞ்சுடுதற்கு ஆக வேண்டியன தயாரியுங்கள் எனச்சொல்லி,

(கு - ரை.) பறக்கும் பஞ்சென வேகமாயோடி - என்பதற்கு 'பஞ்சுபறந்திட' என்றனர். பந்தரிடல் என்றது, அக்காலத்தில் அம்மனைவாயிலில் பந்தரிடுதல் வளமை யென்பது விளங்கிற்று. ஆனல் அம்முறை இக்காலத்திலும் நாடுகளில் நடக்கின்றன.

பலரையுமேவி முதியவர்தாமி ருந்தசவங்கழு
வுஞ்சிலரென்று, பணிதுகில்தொங் கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை—

(போ - ரை.) (இவ்வாறு) பலரைக்குறித்து அநுப்பி, பெரியோர்கள் 'பிணத்தினுக்கு எண்ணெய்க்காப்புச்செய்து தண்ணீர்விட்டுக் கழுவுங்கள்' என்றுதூண்டி, பொன்னுபரணம், புதுவத்திரம், புஷ்பமாலை, நறுமணப்பொடி இவைகளையெல்லாம் பூட்டித் தங்கள் விசுவாச மறிவித்து, நாறும்படியான சரீரத்தை.

வரிசைகெடாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—

(போ – ரை.) 'மாமூல் பிரகாரமாக எடுங்கள்' என முதியார் கூற, திடசரீரிகளாக நால்வர் வந்தெடுத்துத் தோளில் சுமந்து துரிதமாய் நடந்து சுடலைசேர்ந்து, "இம்மட்டுதான் மனிதன் வாழ்க்கை இவ்வளவுதான் மனுஷாள்வாழ்வு" என்று வைராக்கியவார்த்தைகளைக் கிளப்பித் துக்கித்து,

(கு – ரை.) வரிசைகெடாமல் - தூக்கவேண்டிய முறையுடையவர்களைக் குறித்தது. மானிடவாழ்வென வாழ்வெனநொந்து - என்ன வாழ்வு! என்ன வாழ்வு! என்றது வாழ்வின் கேவலத்தைக்காட்டும் இழிவுரையாம்.

விறகிடமூடி அழல்கொடுபோட வெந்துவிழுந்துமு
றிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை—
நம்புமடியேனை யினியாளுமே.

(பொ - ரை.) விறகுவிராட்டிகளைக்கொண்டு ஜதைபடுக்கி, மேலே பிணத்தைக்கிடத்தி மேல் மூடித் தீவைத்து மூட்டவே, பிணம் வெந்திடும்போது தசை, கொழுப்புமுதலியன வெந்தும் வேகாததுமாய்ச் சரிந்திட மீண்டெடுத்திட்டும், என்புகள் கருகிப், பின் நீருய்ச்சர்வமும் எரிந்து தணிந்தபின் ஓர் கைப்பிடி சாம்பருக்குள் அடங்கிய இச்சரீரத்தையே பெருமைவாய்ந்த பெரும்பொருளாக யெண்ணியிறுமாந்த அடிமையை இனியேனும் ஆட்கொண்டருள்வீர் எந்தையே !

(து - ரை.) இதனுல் மனிததேக யோக்கியதை நன்கு புலனுயது; இங்ஙனமழிந்தொழியும் இழிவுள்ள சரீரத்தையே சதா போஷித்துவந்து சிவபெருமானை ஓர் பொழுது ஓர் கணமுந் தியானியாதொழிந்து நாளை அவமாய்க்கழித்தல் நல்லறிவின்மையாலென்றபடியாயிற்று.

சிவமயம்.

முதல்வன் முறையீடு.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

(பொ - ரை.) மதுரை க்ஷேத்திர மேவிய மகாதேவனே! மதுரைக்ஷேத்திர மேவிய மகாதேவனே!

(கு - ரை.) கன்னிவனம் - கன்னிகையாம் மீனாக்ஷியம்மை ஆக்ஷிபுரிந்த நகரம். பூர்வம் கடம்பவனமா யிருந்தமையானும், ஊழி காலங்களாக அழியாதோங்கி விளங்கலானும் அழியாத வெனும்பொருள்படலுமாயது.

மூலமறியேன் முடியுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டதுயர் நாடநடக்குதடா.

(பொ - ரை.) ஆதியையு மறியமாட்டேன், அந்தத்தையு முணரகில்லேன். இவ்வுலகத்தில் என்னைப் பலதுன்பங்கள் வந்தடைந்து துயரத்துள் ஆழ்த்துகின்றது!

(கு - ரை.) உலக ஆன்மாக்களார் இன்பம் துன்பம் என்னு மிருவகையநுபவங்களும் அநுபவிக்கின்றனர். இவைகளில் இன்பமென்றது சிற்றறிவினர்க் கின்பமாகவும், பேரறிவினர்களுக்கு அஃதுந் துன்பமாகவே நூன்முறையால் விளங்குவதாகும்.

ஆகவே இத்துன்பயேது யாது என்று ஆராய்ந்தறிந்துமுடிவை யறிய என்னறிவுக் கெட்டவில்லை. ஆனால் துன்ப அனுபவத்திற்

குத்தக்க காரணமின்றி நிகழாது என்றுவிளங்குகின்றது. ஊன்றிப் பார்க்க அது கன்மத்தையே காரணமாக்கொண்டுள்ளது. அவ்வித கருமத்திற்கு ஆதியந்தமின்றி அநாதியாகத்தோன்றுகின்றது.

அறியாமை யாமலத்தா லறிவுமுதற் கெட்டனடா
பிரியா வினைப்பயனுற பித்துப் பிடித்தனடா.

(பொ - ரை.) அஞ்ஞானமயமாகிய மனசினுலே என்னறிவே கெட்டுப்போய்விட்டது. பழவினை காரணமாகப் பைத்தியக்காரனுமாய்விட்டேன்.

(கு - ரை.) அறியாமையே ஆணவமலமென்பர். இந்த மலமானது தன்மீறிய சந்தியால் அறிவாம் பொருளினை அடியோடுங் கவர்ந்துகொண்டது; பிராரத்தவினையைப் பிரியாவினையென்றனர்.

"வாய்மூடிக் கொல்பவர்போலே யெனுள்ளத்தை வல்வினையாம், பேய்மூடிக்கொண்டது" என்ருர் ஓர் பெரியார்.

தனுவாதிய நான்குந் தானுப் மயங்கினண்டா
மனுவாதி சத்தி வலையிலகப் பட்டனடா.

(பொ - ரை.) நான் தனு கரண புவன போகங்களிலேயே தான் லயப்பட்டு அவையே தானெனவெண்ணி மயக்குற்று திரோதான சத்திவலைச் சிக்குண்டேன்.

(கு - ரை.) தனுவாதிய நான்கும் வந்ததன்காரணம் மாயையாலென்க; தான் அறிவென வறியுந் திறமில்லாமையாலேயே தனு, கரணம், புவனம், போகம் இவைகளைத்தான் தானுகவெண்ணியிருப்பதாயிற்று. இவ்வாறு எண்ணியிருந்தது ஞானமின்மையேயாம். ஆதலாற்ருன் 'மயங்கலாயினே' னென்றனர். திரோதானசத்தியே மறைக்குந்தொழிலுடையது; அதுவுங் காருணியத்தாலே

ஆன்மாக்களது மலபந்தத்தை யொழித்துவிடவேமறைத்திருத்தலால் 'மனுவாதி சத்தி' எனலானார்.

மாமாயையென்னும் வனத்திலலேகிறண்டா
தாமாயுலகனைத்துந் தாதுகலங்கிறண்டா

(பொ - ரை.) பெரியதா மாயை யென்னப்படும் கானகத்தி லலேகிறேன்; ஆனாலும் அந்தமாயையாக நின்று உலகமுற்றிலு மே தாதுகலங்கப் பெறுகிறேன்.

(கு - ரை.) தன்னை மாயையாக வெண்ணல் பிறவிநோய் கொடுப்பதாதலினாலேயே தாதுகலங்கிறண்டா என்றார்.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

(பொ - ரை.) மதுரைச் சிவபெருமானே! மதுரைச் சிவ பெருமானே!

மண்ணாசைபட்டேனை மண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசைபெண்ணாசை போகேனேயென்குதே

(பொ - ரை.) மண்ணிடத்து ஆசையுற்ற என்னை அந்த மண்ணே புசித்துவிட்டது. பொன்னாசையும் பெண்ணாசையும் போகோ மென்கின்றதே!

(கு - ரை.) யாவர் எந்தப்பொருளில் ஆசைகொள்வரோ அவர் அப்பொருளாகத்திரிவர் என்பது சித்தாந்தம். அன்றி அதனை அநுபவிப்பர்; மண்விருப்பங்கொண்டார் மண்ணேயாகுவர்; மண்ணினிடமாகவே பிறந்துதிரிவர். இதன் கருத்து. மண்பெண் பொன் முதலிய ஆசாபாசங்கள் உள்ளவரையிலும் பிறந்திறந்தே வருவர் தேவப்பிரசாதமும் அனுபவமும் கிடைக்கப்பெறாரென்பது.

மக்கள்சுற்றத்தாசை மறக்கேனேயென்குதே!
திக்கரசாமாசையது தீரேனேயென்குதே!

(பொ - ரை.) பெண்டு, பிள்ளை, பந்துக்கள் ஆசை எனையும் மறக்கேன் எனச் சொல்கின்றவே! எண்டிசைத் தேசமும் ஆளவிருக்கும் ஆசை என்னைவிட் டேகேனென்கிறதே.

(கு - ரை.) புத்திரவாஞ்சையும், அரசுபுரியும் ஆசையும் லேசில்விட்டு நீங்காவாம். அதுவொழிதல் மிகக்கஷ்டம்.

வித்தைகற்குமாசையது விட்டொழியேனென்குதே!
சித்துகற்குமாசை சிதையேனேயென்குதே!

(பொ - ரை.) எடுபுறட்டும் ஆசையானது யெனைவிட்டு யேகே னென்கிறதே! அஷ்டமகா சித்துக்களையுங் கற்கவுள்ள ஆசையானது எனை நீங்கி ஒழியேன் என்கிறதே..

(கு - ரை.) மணிவாசகப் பெருமானார்:—
கல்வியென்னும் பல்கடற் பிழைத்து மென்றார். இதனான் கல்வி கடலாதலின் கற்கக்கற்க ஆசை நீங்குவதில்லையாம்; சித்துவிளையாடலிலுள்ள ஆசை மிக்கபைத்தியம். இதனானே இச்சித்தர்களை 'கர்மசித்தர்க' ளென்றும், 'சித்துபலகற்றுமென்ன' என்றும் ஒருவாறு கழித்து ஒதுக்கினர்.

மந்திரத்திலாசை மறக்கேனேயென்குதே!
சுந்தரத்திலாசை துறக்கேனேயென்குதே!

(பொ - ரை,) ஒருவனது மந்திரவலிமையைக் கண்டபோது அதை நாமுங்கற்கவேணுமென்று ஆசைப்படுகின்றதே! அழகு செய்து கொள்ளுமாசை எனை அகலேன் என்கின்றதே!

(கு - ரை.) பிறப்பறுக்கும் பெருமந்திரமாய பஞ்சாக்கரத்தை யன்று; ஆனால் மாரணம், தம்பனம், வசியம், வைப்பு முதலிய தீய கரு ஏதுவான மந்திரங்களையே குறித்தனரென்க. அழகுசெய் வது அகில மயக்கவாதலின் அதனைப் பெரியோர் பிழையெனக் கூறினர்.

கட்டுவர்க்கத்தாசை கழலேனேயென்குதே !
செட்டுதனிலாசை சிதையேனேயென்குதே !

(பொ - ரை.) சித்திரா லங்கார வத்திரா லங்காரஞ் செய்து கொள்வதில் உண்டாம் ஆசை அசையேனென்கிறதே! வர்த்தக லாபத்திலிச்சை பின்வாங்கேனென்கிறதே!

(கு - ரை.) ஆடையிலாசை அதிகமாதல் பயனில; இவ்விஷ யத்தில் பிறரைநோக்கித் தானும் அவ்வாறுடுத்த வேணுமென் றெண்ணுவர் பல்லோர்; அவர் வீண் அபலரே செட்டிட்டத்தில் நியாயம் நிலவவேண்டும். பேராசை வொண்ணா தென்பதே பெரி யார் கருத்தாம்.

மாற்றுஞ்சலவை மறக்கேனேயென்குதே
சோற்றுக்குழியுமின்னுந் தூரேனேயென்குதே

(பொ - ரை. மாற்றியணியும் துகில் ஆசையின்னும் மறக்க வில்லைபோலும்; அன்னமுண்ட வயிறு இன்னமுந் தூரவில்லையே! உள்ளளவுஞ் சோற்றாசை விடாதென்பது தோன்றிற்று.

(கு - ரை.) வயிற்றையே அன்னக்குழி யென்றனர். வெள் ளையிலும் நீர்க்காவியிலும் மனம் திருப்தியாகாததைக் குறிக்கின்றார்.

கன்னிவனநாதா கன்னிவனநாதா

(பொ - ரை.) கடம்பவனத்தோனே கடம்பவனத்தோனே!

ஐந்துபுலனு மடங்கேனேயென்குதே!
சிந்தைதவிக்கிரதுந் தேறேனேயென்குதே!

(பொ - ரை) இந்திரியாதிகளைந்தும் அடங்கே னென்கின் றதே! மனசஞ்சல மின்னமும் மாளேனென்கிஃறதே. அதாவது தெளிவடைத லில்லாமையை யென்க.

(கு - ரை.) ஐம்புலன்கள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற் றம் என்பன. புலனொடுங்கின் மனமும் ஒடுங்கிவிடும். ஒரு சாரார் மனமொடுங்கின் புலனொடுங்கு மென்பார். ஐம்புல ஆசை அறின் ஜென்மவேரும் அறும் என்றபடியாம்.

காமக்குரோதங் கடக்கேனேயென்குதே !
நாமேயரசென்று நாடோறுமென்னுதே !

(பொ - ரை.) காமாதியன இன்னமும் கடத்தலைக் காணோம்; இவ்வாறு இந்திரிய நிக்கிரகஞ் செய்யாத நீ நாமே ராஜாவென்றும், நமக்கு இனி அணுக்கமில்லையென்றும் நினைக்கின்றது தவறென் றும் கொண்டனர்.

(கு - ரை.) நாம் என்பதே அகங்காரம். நம்மை நம் அறிவால் நாயினுமிழிவாய் நினைத்து நிலையுறு காறும் காமக்குரோ தாதியன வொழிய மாட்டா.

அச்சமாங்கார மடங்கேனேயென்குதே
கைச்சுமின்னுமானங் கழலேனேயென்குதே

(பொ - ரை.) அச்சமென்ன, ஆங்காராதியென்ன, இவைதன் னிற் ருழ்வதில்லை. சர்வத்தினையு மொழித்தும் மனம் இன்னமும் தாவுதலுடையதா யிருந்து வருகின்றன. எதனுல் ? பழய வாசனை யால் என்றபடி.

(கு - ரை.) அகங்காரமே மற்றவையினும் அரசாம். அஃ தொடுங்க அதுவழியே அனைத்தும் படியு மென்பது. மாணவமானம் என்றொழியுமோ அன்றே பதிப்பொருள் காண்டற்கியை புறுமென் றூர் பெரியார். ஆனல் அதுமட்டும் இலேசா யறுதலருமை.

நீர்க்குமிழியாமுடலை நித்தியமாயெண்ணுதே!
ஆர்க்கும்உயராசை யழியேனேயென்குதே!

(பொ - ரை.) நீரின்மேல் தோன்றும் குமிழியை யொத்த திவ்வுடலம்; இதனை நிலையென் றெண்ணல் மனவியல்பு. விஷ யாதிகளின் புகுந்த ஆசையானது இன்னமுந் திளைத்தபாடில்லை. ஆசையற்றபாடில்லை.

(கு - ரை.) மனதில் நினைப்பு அறுங்காறும் நிர்ச்சிந்தையாகாது; அதாவது யேகாக்கிரச்சித்தம். அம்மன நாசமுற்ற பின்னரே தேக அநித்தியத்துவத்தால் சர்வ வெறுப்புற்று இராகத்துவேஷம் நீங்கும்; அதன்மேலேயே தேகாபிமானம் நீங்கி அது சம்பந்தமான சகலமும் மறந்து ஆத்மதத்வ விவகாரத்தோடு நிற்கும் என்ப துணர்ந்தா ராக லான் மேற்கூற்று தோன்றின.

கண்ணுக்குக்கண்ணெதிரே கட்டையில்வேகக்கண்டும்
எண்ணுந்திரமா யிருப்போமென்றெண்ணுதே!

(பொ - ரை.) கட்டையில் சவமெரிவதைக் கண்ணால் கண் டும் நாம் சாகோம் என்று மிருப்போம் என எண்ணுகின்றது மனம் என்பர்.

(கு - ரை.) இதனால் அநித்தியத்தை நித்தியமென் றெண் ணும் அறியாமை மிகுந்த மனத்தின் பேதமையைக் குறித்து இரங் கியவாறெனக் கோடல் அவசியமாம்.

அநித்தியத்தைநித்தியமென் றுதாரவாயெண்ணுதே
தனித்திருக்கேனென்குதே தனைமறக்கேனென்குதே!

(பொ - ரை.) அநித்தியத்தை நித்திய வஸ்துவாகக் கருதி அதுவே தனக்குற்றதோர் தோன்றாத்துணையாகக் கொள்கின்றது; மனம் ஒய்ந்திருத்தல் ஒருநாளுமில்லை; தன்னைமறந்து கிடத்தலுங் காணேம்! (இதற்கென்செய்வே னென்றபடி)

(கு - ரை.) ஈசன் பூசனையில் மனத்தைச் சதா நுழைத்து வைத்தால் தான் அவனருளால் மன ஓட்டம் ஒழிதல் கூடு மென்பதை மேல்வாக்கியத்தால் விளக்குகிறா ரென்க. இதனால் பொய்ப்பொருளா மனவழியடைந்து அறிவால் மெய்ப்பொருளாம் ஆன்மதேட்டத்தில் நிலையுதல் வேண்டுமென்பது பெறப்பட்டது.

நரகக்குழியுமின்னு நான்புசிப்பேனென்குதே
உரகப்படத்தல்கு லுனைக்கெடுப்பேனென்குதே!

(பொ - ரை.) இதனாலே தேக தத்வாதிகளெல்லாம் வெறுப்புற்று "நீ எங்கள் வாயில் மண்ணிட்டுத் தனித்தபொருளை அவாவி நிற்கின்றனை, நாங்கள் உன்னைக் கெடுத்து எங்கள் வழியீர்த்து உன் வாயில் மண்ணிடப்பார்க்கிறோ" மெனக் கூறுவதுபோல விருக்கிறது ஒவ்வொரு கரணசேட்டிதங்களு மென்று நம்மனோர்க் கறிவுறுத்தும் வாரும் என்ப. நரகக்குழி - நரகமே. படத்தல்குல் - பாம்பின் படமொத்த நிதம்பம். அதாவது பெண்குறி.

(கு - ரை.) நரகவாதையும், மாதர் முயக்கமும் அவிவேகத்தின் தோற்றமாம்; அத்தோற்றம் அறிவால் நிறைந்த பெரியார்க்கு சற்றும் இட ருண்டுபண்ணுதென்க. ஆகவே உலகுக் கறிவுறுத்த லென வறிக.

குரும்பைமுலையும் குடிகெடுப்பேனென்குதே
அரும்புவிழியுமென்ற னுவியுண்பேனென்குதே!

(பொ - ரை.) குரும்பையை யொத்த தனங்கள் நினை என்றுங் கெடுத்து வருவோமென்கின்றன. நீலமலர் நேத்திரங்கள் நின் உயிரைவாட்டி விடுவோ மென்கின்றன.

(கு - ரை.) குரும்பை - தென்னங் குரும்பை; காமகுணத்தைத் தட்டி யெழுப்புவது கண்களும் தனங்களுமாம். இதனுன் பாசபந்த வன்மையை விளக்கியவாறும்.

மாதருருக்கொண்டு மறலிவஞ்சமெண்ணுதே
ஆதரவுமற்றிங் கரக்காயுருகிறண்டா.

(பொ - ரை.) நமன் நாரியுருக்கொண்டுவந்து யெனைமோசஞ் செய்தற்கு யெத்தனிக்கின்ருன்; நான் யாதொருதுணையுமின்றி நெருப்புமுற்பட்ட அரச்கையொத்து கரைகின்றேன்.

(கு - ரை.) பெண்களாசை, துன்பத்திற்கும் நரகத்திற்கும் ஆளாக்கிவிடலான் ஈண்டு கூற்றுவனுக உருவகஞ் செய்தனர். "பேய்பிடித்தாற்றீரும் பெண்பேய்பிடித்தால் செந்நாய் பிடித்தாற் போல நலியுங்காண்" என்றனர் ஓர் பெரியார் பெண்ணை நமனுக உருவகித்தல் அடிகளார் தன்மை.

கந்தனையீன்றருளுங் கன்னிவனநாதா
எந்தவிதத்தினு னேறிப்படருவண்டா.

(பொ - ரை.) முருகேசனைப் பெற்றளித்த மதுரைப்பரமேசா! இந்தஉலக மருட்சியிலிருந்து தெளிந்துதிடமுற்று நின் திருவடிக்கண் எவ்வாறு சேர்வேன்!

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

(பொ - ரை.) மதுரைச்சுந்தரேசா! மதுரைச்சுந்தரேசா!

புல்லாகிப்பூடாய்ப் புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க் கழிந்தநாள்போதாதோ

(பொ - ரை.) புல்லேயாகியும், பூண்டாயும் பிறந்து வாடி வதங்கியகாலம் போதாவோ, மற்றுங் கல்லாயும் மரமாயும் கடத்திய காலம் போராதா!

(கு - ரை.) தாவராதியாகப் பற்பல பிறவிகளிற் ஜனித்துக் கஷ்டமெய்தது போராது இனியும் ஆசை நீத்து மெஞ்ஞானக்கரை காணுதிருத்தலைக்குறித்துக் கலங்குகிறார்போலும்.

கிரியாய்க்கீடமாய்க் கெட்டநாள்போதாதோ
நீரியாயூர்வனவாய் நின்றநாள்போதாதோ

(பொ - ரை.) கிரிப்பிள்ளையாகவும், புழுவாகவும் பிறந்து நொந்த காலம்போராதோ! நீர் ஜெந்துவாகியும், புழுமுதலான பூமியில் நகரும் ஜெந்துவாகவும்வந்து வருந்தியதும் போராதோ.

(கு - ரை.) நீரில்வாழ்வதானமுதலை, பாம்பு, மீன்முதலியன. பூமியில் ஊர்ந்துசெல்லும் பாம்பு, புழு, முதலியன ஊர்வனவாம்.

பூதமொடுதேவருமாய்ப் போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய் வீழ்ந்தநாள்போதாதோ!

(பொ - ரை.) பூதபைசாசாதிகளும் தேவ கணங்களுமாகப் பிறந்து துன்புற்ற நாள் போராதோ! சாதுக்களுக்கு இடர் செய்யும் இராக்கதராய் வந்து கெடுமை செய்ததும் போராதோ!

அன்னைவயிற்றில் அழிந்தநாள்போதாதோ
மன்னவனுய்வாழ்ந்து மரித்தநாள்போதாதோ

(பொ - ரை.) மாதாவின் உதரத்தின் கர்ப்பத்தி லிருந்தபடியே அழிந்தொழிந்ததும் போராதோ, பின்னர், மன்னவனாய் பூமியிலே வாழ்ந்த காலம் போராதோ.

தாயாகித்தாரமாய்த் தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச் சென்றநாள்போதாதோ

(பொ - ரை.) மாதாவாகியும், மனைவியாயும் வந்து வாழ்வும் தாழ்வு மடைந்தகாலம் போதாதா? புத்திரனாகியும், நாயகனாகியும் வந்தனுபவித்தது போராதா!

நோயுண்ணவேமெலிந்து நொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப் பிறந்தநாள்போதாதோ

(பொ - ரை.) வியாதி தொந்தத்தாலே வெகுநாள் துன்புற்றது போதாதா? பெண் பேய்களின் உணவின் நிமித்தமாக யான் பேய் போலலைந்து துன்புற்ற காலம் போதாதா?

ஊனவுடல்கூன்குருடா யுற்றநாள்போதாதோ
ஈனப்புசிப்பி லிளைத்தநாள்போதாதோ

(பொ - ரை.) உடலெடுத்த பின்னர் கூன், குருடு, முடம் இவைகளோடும் துன்புற்றநாள் போதாதா! சாமானிய ஆகாரத்தினாலே தேகம் மெலிவுற்ற காலம் போராதா?

(கு - ரை.) ஈண்டு ஊனவுடல், மாம்ஸ உடம்புமாகும். ஈனப்புசிப்பென்பது சாமானிய போசனமுமாகும் என்ப.

பட்டகளையும் பரதவிப்பும்போதாதோ
கெட்டநாள்கெட்டேனென்று கெட்டநாள்போதாதோ

(பொ - ரை.) நான் பல பிறவிகளெடுத்தும் அதனால் அடைந்த இளைப்பு களைப்புகள் போதாதோ, உள்ளகாலமும் கெட்டதுமன்றி மேலுமேலுங் கெட்டவனானதும் போராதோ.

நில்லாமைக்கேயழுது நின்றநாள்போதாதோ
எல்லாருமென்பார மெடுத்தநாள்போதாதோ

(பொ - ரை.) சரீரம் அநித்தியத்தை யுத்தேசித்தும், மற்றநிலையற்றதைக் குறித்தும் துக்கித்த நாள்கள் போராதா? பலபேர் அவ்வப்போது என் சுமையை யெடுத்ததெல்லாம் போராதோ! இவை, ஐயமுற்றிரங்கற் கண்ணிகளாம்.

காமன்கணையால் கடைபட்டல்போதாதோ
ஏமன்கரத்தால் இடியுண்டல்போதாதோ

(பொ - ரை.) யான் அனங்கன் புஷ்ப பாணத்தால் அடியுண்டது போராதோ? இயமனது கரங்களால் குத்துண்டதும் போராதோ!

நான்முகன்பட்டோலை நறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமி தேக்குண்டல்போதாதோ

(பொ - ரை.) பிரமாவினால் குறித்துள்ள விதியேடு பிரகாரம் பட்டகஷ்டம் போராதோ? தேன் துளிக்குந் துளசிமாலை யணிந்த மகாவிட்டுணுவினது சக்கராக்னையால் துன்பப்பட்டது போராதா?

உருத்திரனார்சங்காரத் துற்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலை வாவென்றழைத்தையிலை

(பொ - ரை.) உருத்திரரால் சம்ஹரித்ததில் துன்பமெய்தியதும் போராதோ? அன்றி என்துயரமறிந்து வாவென்றழைத்து வருத்த மொழித்தாயில்லை,

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

பிறப்பைத்தவிர்த்தையிலே பின்னுகக்கொண்டையிலே
இறப்பைத்தவிர்த்தையிலே யென்னென்றுகேட்டையிலே

(பொ - ரை.) ஜெனன மொழித்தாயில்லை; பின்னர் தடுத்தாண்டதுமில்லை; மரணத்தைக் காத்தாயில்லை, என்னிளைப் பறிந்து என்னவென்று கேட்டாயுமில்லையே!

(கு - ரை.) இவ்வளவு பிறவிகளெடுத்து எடுத்து இறந்திறந்து அயர்வுற்ற எளியனைச் சற்றேனும் கிருபைவைத்து வாழ்க வென் மகனேயென்றோர் வார்த்தை கூறின் நின் மனைவியாம் என்பரம மாதா மறித்து வருத்துவளோ?

பாசமெரித்தையிலே பரதவிப்பைத்தீர்த்தையிலே
பூசியநீற்றைப் புனையென்றளித்தையிலே

(பொ - ரை.) பந்தித்த மாயாமலத்தினை யறுத்தபாடில்லை. நான் அதனுல் அடைந்துவரும் கஷ்டத்தை யொழிக்கவு மில்லை. பூசும் திருநீற்றை எனக்குப் பொருந்தக் கொடுத்தாயில்லை.

அடிமையென்றுசொன்னயிலே அக்குமணிதந்தையிலே
விடுமுலகம்போக்கியுன்றன் வேடமளித்தையிலே

(பொ - ரை.) என்னைநீ உன் அடிமையாக அழைத்த வில்லை; அன்றி உருத்திராக்ஷ மணியாவது கொடுக்கவு மில்லை; விட்டுவிடக் கூடியதான உலகத்தை ஒழித்து நின் திருவுருவ மளித்தாயிலே.

உன்னிலழைதத்தையிலே யொன்றுகிக்கொண்டையிலே
நின்னடியார்கூட்டத்தி னியழைத்துவைத்தையிலே

(பொ - ரை.) நின்னேடிருக்க என்னை அழைத்தா யில்லை; அன்றி யென்னை உன்னில் கலந்தாண்டாயில்லை; அன்றி யுமது அடியவர் கூட்டத்திலேனும் சேர்த்துவைத்தா யில்லையே!

ஓங்குபரத்து ளொளித்தவடியார்க்கடியான்
ஈங்கோரடியா னெமக்கென்றுரைத்தையிலை

(பொ - ரை.) ஒப்பற்ற பரசிவத்தில் லயித்த அடியார்களுக்கு அடியான் எமக்கு இவ்வுலகத்திலே ஒருவன் உளன் என்று சொல்லியது மில்லை.

நாமந்தரித்தையிலை நானெழியநின்றையிலை
சேமவருளிலெனைச் சிந்தித்தழைத்தையிலை

(பொ - ரை.) அடிமைத்து அடியவன் என்கிற பட்டத்தை உலகறியத் தரித்தாயில்லை; அகங்கார கிரந்தியை யழித்தாயில்லை. என்னை நின்றிருவருள் வசத்தில் அழைத்திருத்தின யில்லை.

முத்தியளித்தையிலை மோனங்கொடுத்தையிலை
சித்தியளித்தையிலை சீராட்டிக்கொண்டையிலை

(பொ - ரை.) மோக்ஷவீட்டில் சேர்த்தாயில்லை, மௌனநிலையினையளித்தாயில்லை; அட்டமாசித்தியையு மளித்தாயில்லை; எப்பதவியானும் சிறப்புச் செய்தாயில்லையே!

தவிர்ப்பைத்தவிர்த்தையிலை தானுக்கிக்கொண்டையிலை
அவிப்பரியதீயாயென் னுசைதவிர்த்தையிலை

(பொ - ரை.) பரதவிப்பை நீக்கினபாடில்லை; அன்றிச் சிவமாக்கிக் கொடாயுமில்லை; நீர்கொண்ட வித்தற்கியலாத பேராசை யென்னுந் தீயினையொழித்தாண்டா யில்லையே!

நின்றநிலையி நிறுத்தியெனைவைத்தையிலை
துன்றும்கரணமொடு தொக்கழியப்பார்த்தையிலை

(பொ - ரை.) சின்மயானந்த யோகநிட்டையின்கண் என்சித்தத்தை நிலைபெறுமாறு திருவருள் புரிந்தாயில்லை; இதற்குச் சாதனமாக, தீய அகக்கரணாதிகளை யடக்குமா றருளினையிலை.

கட்டவுலகக்காக்ஷிக் கட்டொழியப்பார்த்தையிலை
நிட்டையிலேநில்லென்று நீநிறுத்திக்கொண்டையிலை

(பொ - ரை.) கஷ்டத்திற் கேதுவாய அவித்யா தோற்றமாமலபந்த மொழியுமாறு திருநோக்கு தீக்ஷைசெய்தருளினையிலை மற்றும், நின்மலானந்த நிட்டையிலே யாவது தியானமா யிருவென்று சுட்டியுபதேசஞ் செய்தாயில்லையே!

கன்னிவனநாதா கன்னிவனநாதா

கடைக்கணருள்தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொறுக்கிக் கிட்டிவரப்பாரேடா

(பொ - ரை.) மதுரைப்பதிக்கரசே! கருணைகடாக்ஷம் செய்வாயாக. யான்மெய்ஞானம் பெறுவகைத் தடுத்துக் கெடுமைசெய்கின்ற ஆணவத்தினை யெனைவிட்டு ஓடச்செய்து தம்மையண்டியுய்யுமாறருள்புரிக.

(கு - ரை.) நின்திருவருள் தீக்ஷையாலன்றி என்வலிமையால் காரணவாதனை யொழியாதென்றும், அதன்பின்னரே தம்மருட்டிருநோக்கு மமைவுறுமென்றும் வேண்டுவாராயினர்.

காதல்தணியேனோ கண்டுமகிழேனோ
சாதல்தவிரேனோ சங்கடந்தான்தீரேனோ

(பொ - ரை.) அவ்வாறு அருளைக்குப் பெறுவனேல் உல கியல்பற்றொழிவேன்; தம்மடியும் பார்த்துத் தரிசிப்பேன்; பிறப் பிறப்பும் பெற்றுய்வேன்; அன்றேயென் துன்பம் அகலும்.

உன்னைத்துதியேனோ வூர்நாடிவாரேனோ
பொன்னடியைப்பாரேனோ பூரித்துநில்லேனோ

(பொ - ரை.) (நின் தீக்ஷானுகூலத்தின் பின்னர்) எம்மானைத் துதியேனோ, நின்பதிகடோறுஞ் சென்றுசேவியேனோ, பொன் னனையுந்தாளைப்போற்றி நிதமுய்யேனோ அதனாற் பெறற்கரிய ஆனந்த முறேனோ.

ஓங்காரப்பொற்சிலம்பி னுல்லாசம்பாரேனோ
பாங்கானதண்டை பலபணியும்பாரேனோ

(பொ - ரை.) பிரணவ மயமாயுள்ள பெருஞ்சிலம்பின் அழ கைக்கண்டு களியேனோ; பார்வைக்குக் கிட்டாத பண்ணிசைக்குந் தண்டையையும், பலமணியிழைத்த பாதசரங்களையும் பரிவோடும் பார்க்க மாட்டேனோ.

வீரகண்டாமணியின் வெற்றிதனைப்பாரேனோ
சூரர்கண்டுபோற்றுமந்தச் சுந்தரத்தைப்பாரேனோ

(பொ - ரை;) (குஞ்சிதபாதத் தணிந்துள்ள) வீரகண்டாமணி யினது வெற்றிப் பிரதாபங் கேளேனோ, சூராதி சூரர்கள் செய்யுந் தோத்திரங்கேட்டுய்யேனோ (உய்வேனென்றபடி)

இடையில்புலித்தோ லிருந்தநலம்பாரேனோ
விடையிலெழுந்தருளும் வெற்றிதனைப்பாரேனோ

(பொ - ரை) அரையி லணிந்துள்ள புலித்தோ லாடையி னழகை அகங்குளிரப் பார்க்க மாட்டேனோ; இடபாரூடராய எழிலத னைப் பார்த்து என்றுமிலாப் பேருவகை யெய்துய்ய மாட்டேனோ.

ஆனையுரிபோர்த்த வழகுதனைப்பாரேனோ
மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப்பாரேனோ

(பொ - ரை.) யானையின்தோலைப் போர்த்துள்ள வழகினை யான் கண்குளிரக் காணுதல் செய்யேனோ? அன்றி, மானேந்தியுள்ள தாமரைமலரனைய கரத்தினழகைக் கண்டு களியேனோ?

மாண்டார்தலைப்பூண்ட மார்பழகைப்பாரேனோ
ஆண்டார்நமக்கென் றறைந்துதிரியேனோ

(பொ - ரை.) (பலகற்ப கோடிகாலங்களாக) இறந்துசென்ற பிரமன் சிரங்களையெல்லாம் மாலையாகத்தரித்துள்ள மார்பின் திருவழகினைத் தரிசியேனோ? எம்மனோர்க்கு இறைவரென்று யாண்டுங் கூறிக்களிக்க மாட்டேனோ!

கண்டங்கறுத்துநின்ற காரணத்தைப்பாரேனோ
தொண்டர்குழுவினின்ற தோற்றமதைப்பாரேனோ!

(பொ - ரை.) எம்மான் திருக்களங்கறுத்த காரணமின்னவென்ன கண்டறியமாட்டேனோ? மெய்யன்பர் கூட்டத்தே எழுந்தருளிய காக்ஷிகண்டுவக்க மாட்டேனோ?

அருள்பழுத்தமாமதியா மானனத்தைப்பாரேனோ
திருநயனக்கடையொளிரும் செழுங்கொழுமைப்பாரேனோ

(பொ - ரை.) காருணியங்கனிந்த முழுச்சந்திரனையொத்ததம் திருவதன வனப்பை காணமாட்டேனோ? கருணைததும்பும் கடைவிழியினழகை மனங்களிப்பப் பார்க்கமாட்டேனோ? ஆனனம்- முகம். நயனம் - நேத்திரம்.

செங்குமிழின்துண்டம்வளர் சிங்காரம்பாரேனே
* அங்கனியைவென்ற † வதாரத்தைப்பாரேனே

(பொ - ரை.) சிவந்த குமிழமலர் ஒத்த நாசியினழகுகண்டு ஆனந்தித்துத் தரிசியேனே? கொவ்வைக்கனியினுஞ் செவ்வையாய்ச் சிவந்த அதரங்களினழகைப் பார்த்திருக்க மாட்டேனே. செங்குமிழ் - குமிழமலர் = துண்டம் - நாசி.

முல்லைநிலவெறிக்கு ‡ மூரலொளிபாரேனே
§ அல்லார்புருவத் தழகுதனைப்பாரேனே

(பொ - ரை.) முல்லைமலரொத்து சந்திரனொளிபோன்று பிரகாசியாநின்ற பல்வரிசையி னழகைப்பார்க்க மாட்டேனே? கரிய தான நெற்றிப்புருவவழகினைப் பார்க்கமாட்டேனே.

மகரங்கிடந்தொளிரும் வண்மைதனைப்பாரேனே
சிகரமுடியழகுஞ் செஞ்சடையும்பாரேனே

(பொ - ரை.) மகரகுண்டலமணிந்த காதின் அழகினைக் காணமாட்டேனே? திருமுடியிற்றுலங்கும் சிவந்தசடையழகையும் பார்க்கமாட்டேனே? மகரகுண்டலம் - மாதேவர் காதணி.

கங்கையொடுதிங்கணின்ற காட்சிதனைப்பாரேனே
பொங்கரவைத்தான்சடையில் பூண்டவிதம்பாரேனே

(பொ - ரை.) கங்கையோடும் சந்திரனையும் அணிந்த நின் அழகுமுடியைப் பார்க்கமாட்டேனே? சீறும் சர்ப்பத்தைத்தரித்த சடாமுடியைப் பார்க்கமாட்டேனே?

---

* அங்கனி - கொவ்வைக்கனி. † அதரம் - உதடு.
‡ மூரல் - பல். § அல்லார் புருவம் - கருமையாகிய கண்புருவம்.

சரக்கொன்றைபூத்த சடைக்காட்டைப்பாரேனே
எருக்கறுகூமத்தையணி யேகாந்தம்பாரேனே

(பொ - ரை.) கொன்றைமலர் மாலை சூட்டிய கற்றைச்சடையின் அழகைப்பார்க்க மாட்டேனே? இன்னும் எருக்கம்பத்திரமும், அறுகும், ஊமத்தைமலரும் ஆகிய இவைகளும் அணிந்துள்ள அழகினைப் பார்க்கமாட்டேனே?

கொக்கிறகுசூடிநின்ற கொண்டாட்டம்பாரேனே
அக்கினியையேந்திநின்ற வானந்தம்பாரேனே?

(பொ - ரை.) கொக்கிறகணிந்த கோலத்தைப் பார்க்கமாட்டேனே? இடக்கரத்தே அனலேந்திய அழகினை உற்றுநோக்கியானந்திக்க மாட்டேனே?

தூக்கியகாலுந் துடியிடையும்பாரேனே
தாக்குமுயலகன்மேல் தாண்டவத்தைப்பாரேனே?

(பொ - ரை.) தூக்கியாடிய குஞ்சிதபாதத்தையும், சிறிய மருங்கின் வனப்பையும் பார்த்துக் களிப்பெய்தேனே? யெதிர்த்து வந்த முயலகனைப்பிடித்து வலதுகாலின்கீழ்க் கிடத்திமிதித்தாடும் தாண்டவத்தைத் தரிசித்து ஆனந்திக்கேனே?

வீசுகரமும் விகசிதமும்பாரேனே
ஆசையளிக்கு * மபயகரம்பாரேனே?

(பொ - ரை.) சிற்சபையின் கண்ணே வீசித் தாண்டவம் புரிகின்ற இடது கரத்தினையும், பிரத்தியக்ஷத்தையும் பார்த்திட மாட்டேனே? அன்பைப் பெருகச்செய்யும் அநுக்ரக வலது கரத்தைப் பார்த்தானந்திக்கமாட்டேனே?

---

* அபயகரம் - குறைமுறை கூறுவாரை அநுக்ரகிக்கும் வலக்கரம்.

அரிபிரமர்போற்ற வமரர்சயசயெனப்
பெரியம்மைபாகம்வளர் பேரழகைப்பாரேனோ?

(பொ - ரை.) மகாவிட்டுணுவும், பிரமரும் துதிசெய்யவும் மற்றைத் தேவர்களெல்லாம் ஜெயஜெயவென்று கோஷிக்கவும் உமாதேவியார் தம் இடப்பாக வனப்பினையும் பார்த்துக்களியேனோ? பெரியம்மையார் - பராசத்தியார்.

சுந்தரநீற்றின் சொகுசுதனைப்பாரேனோ
சந்திரசேகரனைத் தயவுசெய்தல்பாரேனோ

(பொ - ரை.) அழகுசெய்யும் திருநீறுதரித்துள்ள வனப்பினைப் பார்க்கேனோ? சந்திர சேகர திருமூர்த்தமாய்த் தோன்றி அநுக்ரகித்தலைப் பார்க்கமாட்டேனோ?

(கன்னிவனநாதா கன்னிவனநாதா

கெட்டநாள்கெட்டாலும் கிருபையினிப்பாரேனோ
பட்டநாள்பட்டாலும் பதமெனக்குக்கிட்டாதோ?

(பொ - ரை.) தேவரீரது திருவருளுக்கு எதிர்பாராது வீணே கக்கழிந்தநாள் கழியினும், இனியேனும் எம்மான்கிருபையை யெதிர்பாராது விடுவேனோ? பலகாலமாக யான் திருவருளுக்கு அயலாகித் துன்பப்படுவேனானாலும் இனியேனும் பிறவாதபதம் எனக்குக்கிடைக்கமாட்டாதோ?

நற்பருவமாக்குமந்த நாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கழன்ற வேகாந்தங்கிட்டாதோ

(பொ - ரை.) மலபரிபாக காலம் எனக்கு எப்போதாவது கிட்டாதுபோகாதே! எல்லாவித பரிபாக காலங்களுக்கு மேம்பாடாய தன்னந்தனிநிலைமை கிட்டாதோ?

யேகாந்தம் - சர்வாவஸ்தையுங்கடந்த தனியேயிருக்கையாம். (தாயுமானுர் குறித்ததும் இதுவே.)

வாக்கிறந்துநின்ற மவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத் தற்சுத்திகிட்டாதோ

(பொ - ரை.) வாசாமகோசரமான மோன ஞானம் பிறக்காதோ? அன்றியும் ஜீவபோதங்கழன்ற சுத்தசிவநிலை எனக்கும் ஏற்படாதோ?

வெந்துயரைத்தீர்க்குமந்த வெட்டவெளிகிட்டாதோ
சிந்தையையந்தீர்க்குமந்தத் தேறலதுகிட்டாதோ

(பொ - ரை) கொடிய துக்காஸ்பதமாய பவசாகரந்துலைக்கும் பரவெளியி லேகாந்தமாயிரேனே! சிந்தைக்குரிய சந்தேகாதியன வொழிக்கும் திருவருளாந் தேன்பருகக் கிடைக்காதோ.

ஆனவடியார்க் கடிமைகொளக்கிட்டாதோ
ஊனமறவென்னை யுணர்த்துவித்தல்கிட்டாதோ

(பொ - ரை.) தொண்டுபுரி மெய்யடியார்க்கு அடியவனுந் தன்மையெனக்கும் வாய்க்காதோ? குற்றந்தீர அடிமைக்கு உள் நிறைந்து திருவருளால் ஓதுவித்தல் ஆகாதோ.

என்னென்றுசொல்லுவண்டா வென்குருவேகேளடா
பின்னையெனக்குநீ யல்லாற்பிறிதிலையே

(பொ - ரை.) என் சற்குருமணியே! (என் தீயவினைப்பயனை) என்னென்றுசொல்லுவேன்! கேள், தேவரீரன்றி எளியேற்கு ஆதரிப்பாளர் எவருமேயில்லையப்பா.

கன்னிவனநாதா கன்னிவனநாதா

அன்னவிசாரமது வற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிசாரந் தொலைந்தவிடங்கிட்டாதோ

(பொ - ரை.) சந்திர மண்டலாந்தம்போய் செழுந்தேனும் அமுததாரணை தோன்றச்செய்து அதையுண்டு பசிப்பிணியாற்ற கிட்டாதோ? பொருளாசை ஒழிக்குமிடம் தோன்றப்பெறுதோ. சொர்னம் - சொன்னம் எனவந்தது.

உலகவிசார மொழிந்தவிடங்கிட்டாதோ
மலக்குழுவின்மின்னார் வசியாதுங்கிட்டாதோ

(பொ - ரை.) மண்ணுலக வாழ்வினால் ஏற்படுந்துன்பம் ஒழியுமிடங்கிடைக்காதோ? பாசப்பிசாசங்களான பெண்மக்களார் வாழ்தலில்லாவிடங் கைக்கெட்டாதோ?

ஒப்புவமைபற்றோ டொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத் தெளிவிடமுங்கிட்டாதோ?

(பொ - ரை.) சமானம் திருட்டாந்தம் பந்தமென்னும் இவையொழிந்தவிடம் கிடைக்காதோ? வாசாவினால் அளவுரைசெய்யவியலாத தெளிவுவாய்ந்த இடம்கிட்டாதோ?

வாக்குமனாதீத வகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவே நின்தாளிணைக்கேயான்போற்றி.

(பொ - ரை.) வாக்காதி மனங்களுக்கும் மேலாயுள்ள துரியத்தில் நான்செல்ல எனைச்செலுத்தும் திருவருட்டேசிகனே! தேவரது திவ்யதிருப்பாத கமலங்களிரண்டிற்கும் நமஸ்காரம்.

முதல்வன் முறையீடு
முற்றிற்று.

சிவமயம்.

மகடூமுன்னிலையாகத் திருவாய்மலர்ந்த

அருட் புலம்பல்.

ஐங்கரனைத்தெண்டனிட்டே னருளடையவேண்டுமென்று
தங்காமல்வந்தொருவன் தற்சொரூபங்காட்டியெனை

(பொ - ரை.) திருவருட்பிரசாத நிமித்தமாக முதற்கண் ஐந்துகரங்களுடைய விக்னேசுரனை நமஸ்கரித்தேன். அப்போது ஓர் இறையவன் துரிதமாக என்பால்வந்து தன் யதார்த்தசொரூபத்தினைத் தரிசிப்பித்து அடிமையை.

(கு - ரை.) ஆன்மாக்களார், திருவருள் வலத்தால் ஆண்டவனடியிணையைப் பெறவேண்டுமாதலால் 'அருளடையவேண்டுமென்று' என்றனர்; ஐங்கரன் ஸ்தானம் - மூலாதாரம். நாலிதழ்க் கமலம் - முக்கோணவட்டமாம். ஒருவனுவான் - பரமாசிரியனென்க.

கொள்ளைப்பிறப்பறுக்கக் கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி

(பொ - ரை.) பெண்பாவாய்! பற்பல முகாந்தரங்களைக் கொண்டு தோன்றிவந்த பிறவிகளை யொழிப்பான் வேண்டியே எனக்காக சற்குருவாய் வந்தனன். கபடநாடக ஐம்புலன்களை அறுத்து ஒழிக்க வேண்டியே எனக்கு முன்வந்தருளினன்.

(கு - ரை.) கணக்கிலா ஜனனங்களாதலால் கொள்ளைப்பிறவி யென்றனர்; பிறவியினேது ஆசையே; அவ்வாசைக்குக் காரணம்

ஐம்புலாதிகளின் மூலம். ஆகவே அந்த புலன்களின் விவகாரம் ஆசான் சேவையினுல் அறும்; "மலங்கப் புலனைந்தும் வஞ்சனை யைச்செய்ய'' என்ருர் மணிவாசகனுரும் (சிவபுராணத்துள்.)

ஆதாரமோரா்று மைம்பத்தோரட்சரமும்
சூதானகோட்டையெல்லாஞ் சுட்டான்றுரிசறவே

(பொ - ரை.) அறுவகை ஆதாரங்கள் என்ன, அந்த ஆதாரங் களிலுள்ள ஐம்பத்தொரு அட்சரங்களென்ன, ஆதாரங்களுக்கு அர ணுகச்சூழ்ந்துள்ள ஏழுசுற்றுக்கோட்டைகளென்ன இவைகளாகிய யாவும் பரமாசிரியன் தம் திருவருள்வலத்தால் தகித்தான்.

(கு - ரை.) ஆருதாரம் - மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞைஎன்பன இவைகட்குக் கோணச் சக்கரங்களும், அச்சக்கரங்கள் பொருந்தும் இதழ்களும், அவ்விதழ் களில் வடமொழி அக்ஷரங்களும் அமைந்துள்ளன. அவ்வாருதாரச் சக்கர இதழ் அக்ஷரங்கள் அனைத்தும் சேர்ந்த தொகுதியே ஐம்பத் தொரு அக்ஷரங்களாகும்.

மெத்தவிகாரம் விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாம் தலைகெட்டுவந்ததடி

(பொ - ரை.) மனோவிகாரத்திற் கிலக்காகவுள்ள தத்துவாதிக ளனைத்தும் தத்தம் நிலைகெட்டுக் கலங்கலாயின.

(கு - ரை.) ஈண்டு, தோற்ற ஒடுக்கத்தினையே விகாரமென்ற னர். மாயையின் காரியமே தத்துவாதிகளாக வுள்ளன; அவை யனைத்தும் ஆத்மார்த்த தத்துவங்களாய் முப்பத்தாறு எனத் தொகை யுற்றுள்ளன. அத்தத்துவாதிகளைப் பொருட்படுத்தித் துன்புற்றி ருந்ததனைத்தும் தாமேயொழியலாயின.

என்னோடுடன்பிறந்தா ரெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியே தனித்திருக்கமாட்டேண்டி

(பொ - ரை.) என்கூட சேர்ந்துள்ளார் எவர்களும் மரித்தேகி னர்கள்; அஃதாவது (தனுசாரணுதியவாம்) ஆகலான் யான் இனித் தனியிருப்பது சாத்தியமன்று.

(கு - ரை.) என்னோடு உடன்பிறந்தா ராவார் சகாவாகிய தத்து வாதிகளையாம். "ஜீவன் என்னும் ஆத்மாவானது தனக்குப் பரிவா ரங்களாக பல தத்துவங்களை உடன்கொண்டே வாழும்; தானே நிற் பின் காரிய நிகழ்வுக் கேதுவின்றாம். இனி அவ்வித சகோதரங்கள் யேகியபின்னர் நான் தலைவனையே நோக்கி நிற்பேன். அதுபோல அத்தலைவனும் என்னை நோக்கி ஆதரியாது பராமுகமா யிருப்பரேல் பயனின்றாம். ஆதலாற்றான் தனியிரேன்'' என்றனர் என அர்த்த மாயது. உற்றுநோக்கின் உள்ளுரை விளங்கும்.

எல்லாரும்பட்டகள மென்றுதொலையுமடி
சொல்லியழுதாற் றுயரமெனக்காறுமடி

(பொ - ரை.) தத்துவாதிகளனைத்தும் இருந்துவாழ்ந்த இடமா னது எப்போது நீங்கும்? அதுவிஷயத்தை இன்ன சமயமென் றுரைப்பின் அப்போதுதான் என் துயரமானது நீங்குமாக்கும்.

(கு - ரை.) மாயையால் காரியப்பட்டதே தத்துவங்களாகும்; அதனால் மாயை காரணமாயது; காரணமான மூலம் உள்ளவரையும் காரியாதி நிகழ்ந்து கொண்டே யிருக்கும்; ஆகவே காரணமாய மூல மாயை கெட்டொழிய வேண்டுவது அவசியம்; அதனாலேயே "எல் லாரும் பட்டகளம், என்று தொலையும்'' என்றார்; அஃதாவது மாயை' என்றுணர்க. மாயைதொலையின், மணவாளனோடு இணை யாடலாம்; (இதனானே துரிதப்படுகின்றார்.)

மண்முதலாமைம்பூத மாண்டுவிழக்கண்டேண்டி
விண்முதலாமைம்பொறிகள் வெந்துவிழக்கண்டேண்டி

(பொ - ரை.) பிருதிவி முதற்கொண்டு ஐந்து பூதங்களும் தொலைந்ததைப் பார்த்தேன்; இதுபோன்று சப்த ஸ்பரிசாதிகள் தொலைந்து போனதுவும் கண்டு கொண்டேன்.

(கு - ரை.) இங்கே தேகதத்வாதிகளை விவரிக்கின்றனர்; பஞ்ச பூதம் - வெளி; தன்மாத்திரையும் வெளி. ஆக இந்த பத்துவகையும் தொலைந்ததே பரமசுகமாயிற்று என்றபடி.

நீக்காப்புலன்களைந்து நீறுகவெந்ததடி
வாக்காதியைவரையு மாண்டுவிழக்கண்டேண்டி

(பொ - ரை.) அடைத்தற்கு வொண்ணு ஐந்து புலன்களும் சாம்பராயெரிந்து போயின. அன்றி வாக்காதிய வைந்தும் மாளக் கண்டேன்.

(கு - ரை.) ஐம்புலன் மெய், வாய், கண், மூக்கு, செவி; வாக் காதியாவன - கன்மேந்திரியங்களை, அவை, வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். இவைகள் (பாயுரு - மலத்துவாரம்)

மனக்கரணமத்தனையும் வகைவகையேபட்டழிய
இனக்கரணத்தோடே யெரிந்துவிழக்கண்டேண்டி

(பொ - ரை.) மனமாதி அந்தக்கரணங்க ளெவையும் தனித் தனியாய்க் கெட்டு தன் இனங்களான மற்ற இந்திரியாதிகளோடும் செயலற்றொழிந்ததையும் பார்த்தேன்.

(கு - ரை.) மனக்கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்பன; இதனையே அந்தக்கரண மென்பதும்; (அந்தஹ:—உள்+) கரணம் - உட்கரணம். மனமாதி நான்கும். இதனை ஞானேந்திரிய மென்றுங் கூறுவர்.

ஆத்துமதத்துவங்கள் அடுக்கழியவெந்ததடி
போற்றும்வகையெப்படியோ போதமிழந்தானை

(பொ - ரை.) ஆன்ம தத்வாதிகளெல்லாம் அடுக்காய் அவ்வளவு மாண்டன; அகங்காராதியற்ற ஞானாசிரியமூர்த்தியைத் துதித்தேற்றும்வகை யெவ்வகையோ.

(கு - ரை.) மேலே குறித்துள்ள இருபா நான்கு தத்வாதிகளுக்கே ஆன்மதத்துவ மென்றழைப்பர்; அவை யாவையெனில், பூதாதிகள் ஐந்து, தன்மாத்திரை ஐந்து புலனைந்து, பொறியைந்து, அந்தக்கரணம் நான்கு. போதம் இழந்தான் - இங்கே அகங்காரமில்லாத சற்குருநாதனை யென்க.

வித்தியாதத்துவங்கள் வெந்துவிழக்கண்டேண்டி
* சுத்தவித்தையைந்தினையுஞ் சுட்டான்றுரிசரவே

(பொ - ரை.) வித்யா தத்வாதிகள் எல்லாம் நாசமடைந்ததை நான்கண்டேன்; சுத்தவித்தை முதலாயுள்ள தத்வங்களைந்தையும் என்னையீர்த்துள்ள மலநீக்கத்தின் பொருட்டாக சற்குருநாதன் தகித்தொழித்தனன்.

(கு - ரை.) வித்யாதத்வங்களாவன;— காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை, என எழுமாம். சுத்தவித்தை முதலாயுள்ள ஐந்துமே சிவதத்வங்கள் எனப்படும். அவை, சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம். என்பவைகளாம்.

மூன்றுவகைக்கிளையு முப்பத்தறுவரையும்
கான்றுவிழச்சுட்டுக் கருவேரறுத்தாண்டி

---

* சுத்தவித்தை - சாதாக்கியம், ஞானமுங் கிரியையும் ஒத்ததாம். ஞானமோங்கி கிரியைகுறைந்தது.

(பொ - ரை.) சிவதத்துவம், வித்யாதத்துவம், ஆத்மதத்துவம் என்கின்ற மூவகைத் தத்வகூட்டங்களனைத்தையும் அதாவது முப் பத்தியாறு தத்துவங்களையும் குருநாதன் கொளுத்தி அவைகளை வேருடன் எரித்தொழித்தனன்.

(கு - ரை.) இதனால், சற்குருமூர்த்தியார் திருநோக்கு தீக்ஷையினாலே மேற்கூறிய தத்துவாதிக ளனைத்தையும் வேறற மாய்த்தனன் என்பதாம்.

குருவாகிவந்தானோ குலமறுக்கவந்தானோ
உருவாகிவந்தானோ வுருவழிக்கவந்தானோ

(பொ - ரை) வந்த குருநாதன், ஞானசிரியனாக வந்தனனோ? அல்லாமல் தத்துவாதிகளைக் கடிந்தொழிக்க வந்தனனோ? சகளீகரித் தருளிய திருவுருவத்தோடும் தோன்றி வந்தனனோ? அன்றி யென் னுருவைத்தான் கெடுதிசெய்ய வந்தனனோ? (யாதோ வறியேன்) என்றபடி.

(கு - ரை.) எம்பெருமான் சற்குரு மூர்த்தியாய்த் தோன்றி வந்து திருநோக்கு தீக்ஷைசெய்ததும் ஆன்மாக்களைப் பந்தித்துள்ள மும்மலாதிகள் நீங்கலானே, "உருவழிக்க வந்தானோ" வென்றனர். ஈண்டு உருவழித்தல், காயம் இனி எடாவகைக்குப் பிறவியொழித் தலாம்.

கேடுவருமென்றறியேன் கெடுமதிகண்டோற்றமல்
பாடுவருமென்றறியேன் பதியாண்டிருந்தேண்டி

(பொ - ரை.) எனக்குக் கேடுவருமெனத் தெரியவேயில்லை, என்? 'கெடுமதி கண்ணுக்குத் தோன்றமல்' அன்றித் துன்பம்வரு மென்றுவது தெரிந்து கொண்டேனு மில்லை; வீணே இவ்வுலகில் வாழ்ந்தொழிந்தேன்.

(கு - ரை.) கெடுமதி கண்ணுக்குத் தோன்றுதென்பது போன்று பின்னே நேருங் கெடுதியை நினையாது உலக ஆக்ஞிசெய்யும் அரசமக்களாரைக் கடிந்தமை யென்க; பதியென்றது தேகத்திற்குமாகும்; யெவ்வாறு; க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன் என்றமுறையில். அஃதாவது (க்ஷேத்திரம் - உடல், க்ஷேத்திரக்ஞன் - ஆன்மா.)

எல்லாரும்பட்டகள மின்னவிடமென்றறியேன்
பொல்லாங்குதீர்க்கும் பொறிவிலியைக்கண்டேண்டி

(பொ - ரை.) தத்துவாதிக ளனைத்தும் அழிந்தவிடம் இதுவென்றுணர்ந்திலேன்; தீயன வொழிக்கும்படியான சற்குரு நாதனைத் தரிசித்தேன்.

(கு - ரை.) தத்துவாதிகள் யாவும் ஒடுக்கமானதும், ஆன்மாவிற்கு விளங்குவது பரசிவமட்டுமே யாதலால் அங்கே 'பொறியிலியைக் கண்டே' னென்றனர். பரசிவதரிசனம் செய்தார்க்கு (அதாவது சாக்ஷாதாக) உலகத்தோற்றம் விளங்காதென்றறிக.

உட்கோட்டைக்குள்ளிருந்தா ரொக்கமடிந்தார்கள்
அக்கோட்டைக்குள்ளிருந்தா ரறுபதுபேர்பட்டார்கள்

(பொ - ரை.) சரீரத்துள்ளே யுள்ள தத்துவாதிகளனைத்தும் சாய்ந்தன. அவையன்றி மற்ற அறுபதுதத்வகாரியங்களும் மாய்ந்து போயின.

(கு - ரை.) ஆகவே, முப்பத்தாறுதத்துவங்களும் காரணங்களாயுள்ளன. மற்ற காரியதத்துவங்கள் அறுபதும் சேர்ந்து தொண்ணூற்றாறுமாயின. விரிவாயறியவேண்டின் தத்துவகட்டளையை நோக்குக.

ஒக்கமடிந்ததடி யூடுருவவெந்ததடி
கற்கோட்டையெல்லாங் கரிக்கோட்டையாச்சுதடி.

(பொ - ரை.) கூறிவந்த இரண்டுவகைத் தத்துவாதிகளும் ஒன்றாயழிந்தன. துப்புறவா யொழிந்துபோயின; கற்கோட்டை யொத்த சரீரமுற்றிலும் சரிக்கோட்டையாய்ப் போகிறதே. கல் கோட்டை - வச்சிரதேகம்.

தொண்ணூற்றறுவரையுஞ் சுட்டான்றூரிசறவே
கண்ணேறுபட்டதடி கருவேரறுத்தாண்டி

(பொ - ரை.) தொண்ணூற்றாறு தத்துவாதிகளையெல்லா மறுத்து என்றுன்பத்தை யொழித்தான். இதனால் பிறர் திருஷ்டி பட்டுவிட்டது; ஆனால் அந்த தத்துவங்கள் மீண்டும் முளைக்கா வண்ணமாக சற்குருமூர்த்தி வேரறுத்துவிட்டனன்.

(கு - ரை.) தத்துவாதிகளின் காரிய காரணங்கள் தீர்மானமாக ஒழிந்ததால் பிறவியொழிந்ததாயிற்று.

ஓங்காரங்கெட்டதடி வுள்ளதெலாம்போச்சுதடி
ஆங்காரங்கெட்டதடி யடியோடறுத்தாண்டி

(பொ - ரை.) பிரணவாம்சமும் ஒழிந்துபோயிற்று; அதனுள் விளங்கிய தத்துவங்களெல்லாம் தீர்ந்துதொலைந்ததாம். இதன் பின்னாகவே ஆணவமும் வலிகுறைந்தது. குருமூர்த்தியார் எல்லாவற்றையும் வேரோடும் பிடுங்கி யொழித்தனர்.

(கு - ரை.) தத்துவாதிகள் அடங்கலுக்கும் தாயகமாயுள்ள பிரணவமாகும்; இப்பிரணவம் நசித்தொழியின் அதுவேவழியாக எல்லாத்தத்வங்களும் ஒழிந்தபாடாயிற்று சுத்தமாயையின் கூறு பிரணவமாம். அது ஒழிந்தவுடனாக ஆணவமலம் நீங்கியதாயிற்று.

தரையாங்குடிலைமுதல் தட்டுருவவெந்ததடி
இரையுமனத்திடும்பை யெல்லாமறுத்தாண்டி

(பொ - ரை.) சர்வாதாரமாயிருந்த குடிலைமுதலாகவுள்ள தத்துவங்களெல்லாம் நிலைகெட்டொழிந்து நீறாயின. ஆகவே விவகாரஏதுவாய மனத்துயரங்கள் யாவும் வேரறுத்தனன்.

(கு - ரை.) குடிலை என்பதுவே சுத்தமாயையாம்; இது தத்துவாதிகட்கெல்லாம் மூலகாரணமாயிருத்தல் பற்றியே தரையாங் குடிலை யென்றனர் போலும்.

முன்னைவினையெல்லா முழுதுமறுத்தாண்டி
தன்னையறியவே தாளொருத்தியானேனண்டி

(பொ - ரை.) பழவினையாவையு மொழித்தனன்; அதன் பிறகே தலைவன்கிருபையால் என்னையானறியலாயினேன். இப்போதுதான் ஏக நானேன்.

(கு - ரை.) காரியவிச்சையொழியவே தன் ஆன்மதோற்றம் பிறங்கும்; அதன்பிறகு மலவலியற்றுப்போமென்க.

என்னையேநானறிய விருவினையுமீடழித்துத்
தன்னையறியத் தவமெனக்குச்சொன்னாண்டி

(பொ - ரை.) இருவிதவினைகளையுங் கெடுத்தே என்னையறிந்துகொள்ள வேண்டியதால் எனக்குப்பின் தன்னிருப்பைக் குறித்துக்காட்டினன்.

(கு - ரை.) தன்னைத்தான் கண்டபின்னரே தலைவனைக்காணுந்தர மென்றதை விரித்துக்கூறினன்.

தன்னையறிந்தேனண்டி தனிக்குமரியானேனண்டி
தன்னந்தனியே தனியிருக்கும்பக்குவமோ

(பொ - ரை.) என்னை யறிந்தனன்; அறிந்த பின்னர் தலைவ ேனாடுங் கூடிவாழும் பக்குவ மடைந்தேன்; இனித் தனிமையளா யிருக்க வேண்டிய நிதியாகும்.

(கு – ரை.) இனிமேல் தத்துவச்சேர்க்கையாக வாழ்தல் இல்லை யென்பதாம்; தன்னை யறிந்தபின் தலைவனைத் தானேயுணரும்.

வீட்டிலொருவரில்லை வெட்டவெளியானேனண்டி
காட்டுக்கெறித்தநிலா கனவாச்சேகண்டதெலாம்

(பொ - ரை.) நானானபின்னர் அங்கொருவருமின்றாம்; அது போலவேயானும் வெறுவெளியாய்க் கண்டேன். ஆகையால் யான் பார்த்தவிடங்க ளெங்கும் கானகமெறித்த நிலவுபோன்றும் கனவெ னவுங் கண்டனன்.

(கு - ரை.) மோக்ஷநிலையில் கருவி கரணாதிய வனைத்துமே யிருப்பதில்லையல்லவா? ஏன்? (முன்னமே யொழிந்து போதலால்) அந்த தத்துவங்களை விவகார ரீதியில் விவகரிப்பே யன்றிப் பொரு ளிராவாம். அதனை மெய்யென நினைப்பது பேதைத்தன்மை யென்க.

முப்பாழும்பாழென்ற மூலனாரடிபோற்றி
யப்பாலும்பாழென்ற சடகோபரடிபோற்றி
யொப்பாருமிலையென்ற சீவாக்கருரைபோற்றி
பொய்ப்பாரையறத்துறந்த வெண்காடர்புகழ்போற்றி. (என்ற னர் சிவஞான வள்ளலார்)

நகையாரோகண்டவர்கள் நாட்டுக்குப்பாட்டலவோ
பகையாரோகண்டவர்கள் பார்த்தாருக்கேச்சலவோ

(பொ - ரை.) சர்வத்ராளையுந் தொலைத்து விட்டு தன்னந் தனிமையளா யிருப்பதை யுணர்ந்தவர்கள் என்னைச் சிரிக்கமாட்டார் களா? அன்றிப் பார்த்தார் பகையார்களா? கண்டார்க்கும் வசைச் சொல்லாயிருக்குமே!

(கு - ரை.) ஆத்மாவின் தன்மை தனியிராமல் ஒன்றைப் பற்றியே யிருத்தல் இயல்பாகும். இப்போது ஆத்மாவானது தன்சகாக்களின்றித் தனியே யிருத்தலைக் கூறுவதாகும். இனி ஆன்மா பரமான்ம சக்கியம் பண்ணவேண்டும்; சற்குரு நாதனும் திருவருள் புரிவர்.

இந்நிலைமைகண்டாண்டி யெங்குமிருந்தாண்டி
கன்னியழித்தாண்டி கற்பைக்குலைத்தாண்டி

(பொ - ரை.) எங்கணும் வியாபியாயுள்ள சிவபெருமான் இவ்வகையான களையெடுத் தெனக்கின்புறச் செய்தனன் அப்பெருமானே எனது கன்னியாந் தன்மையைப் போக்கிக் கற்பழியக் கண்டவனானன்.

(கு - ரை.) ஆன்மாவானது தத்துவக் கூட்டங்களை யொழித்துவிட்டு தனியிருப்பதை யுணர்ந்து சற்குருமூர்த்தியார் அவ்வான்மாவைத் தற்கொண்டனன் போலும்.

கற்புக்குலைத்தமையுங் கருவேரறுத்தமையும்
பொற்புக்குலைத்தமையும் போதமிழந்தமையும்

(பொ-ரை.) கற்புநிலையழித்தும், பிறவியின்வேர் பிடுங்கியதும், அழகைக் கெடுத்தும், மடமையை யொழித்தும் அல்லாமல்.

(கு - ரை.) ஆன்மாவானது இறைவனோடும் சேர்ந்து அநுபவஞ்செய்த சுகாதியன குறித்தவாறென்க.

என்னவினைவருமோ வின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லாம் பலித்ததடிசோர்வறவே

(பொ - ரை.) இதன்மேல் எனக்கு இன்னமும் என்னென்ன கஷ்டங்கள் வந்துறுமோ வென்பது அறியேன்; என் தயக்கம் ஒழிய

சற்குருநாதன் மொழிந் தருளிய வார்த்தைகள் யாவும் பூர்த்தி யடைந்தன.

கங்குல்பகலற்றிடத்தே காட்டிக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டி பார்த்தானைப்பார்த்திருந்தேன்

(பொ - ரை.) இராப்பகலற்ற யேகாந்தப் பரவெளியை எனக்குச் சுட்டிக்காட்டியருளினன் யான் (அவ்வெளி தரிசனஞ் செய்ததும்) என்குற்றம் எனக்குத் தெரிந்தில; ஆனாலும், அவ்வெளியிலே என்னைப்பார்த்துள்ளவ னெவனோ அவனை யான் பார்த்திருந்தனன்.

சாதியிற்கூட்டுவரோ சாத்திரத்திற்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லா முள்ளபடியாச்சுதடி

(பொ - ரை.) இவ்வாறாகக் கெடுத்தமைநோக்கி என்னை சாதியில் சேர்ப்பர்களோ! சேர்க்கார்களோ! இந்த நடபடிக்கை இவ்வனுபவம் சாத்திரமுறையா? அல்லது சகசமுறையா? ஆனால் நான்கற்றுணர்ந்தவாறே சகலவிஷயங்களும் எதார்த்தமாகவே நிறைவேறின.

(கு - ரை.) தத்துவாதிகளைச் சாதியென்றன ரென்க. இறைவன்பா லடையப்பெற்றுள்ள ஆன்மா மறுபடியும் தத்துவாதி கூட்டத்திற் பொருந்தா. (கறந்தபால் முலைப்புகா) என்றபடி.

என்னகுற்றஞ்செய்தேனோ எல்லாருங்காணாமல்
அன்னைசுற்றமெல்லா மறியாரோவம்புவியில்

(பொ - ரை.) எல்லவருங் காணுதற்கில்லாதபடிக்கு யான் செய்த பிசகைத்தெரியேன்; நான் தவறுதல்செய்ததையும் செய்யாமையும் பெரிய உலகத்திலே தாய்வழியார் அனைவரும் தெரியமாட்டாரோ?

கொன்றுரைத்தின்றேனே தின்றுரைக்கொன்றேனே
எண்ணுதெல்லாமெண்ணு மிச்சைமறந்தேனே

(பொ - ரை.) அநேக பிறவிகளிலெல்லாம் என்னைக்கொன்றவர்களை யான் புசித்தேனே? என்னைக் கொன்றுதின்றவர்களை யான் மீண்டும்கொன்றிருப்பேனே? நினைத்தற் கரியனவெல்லாம் நினைந்துருகும் ஆசையை மறந்துவிட்டேனே!

சாதியிற்கூட்டுவரோ சமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி

(பொ - ரை.) என்னைச் சாதிக்கூட்டத்திற் சேர்ப்பரோ? அன்றிச் சமயவாதிகள் என்னை நினைப்பர்களோ? எல்லோரையும் கலக்கமெய்துமாறுயான் காலங்கடத்தியது பேச்சுக்கிடமாகவல்லவோ முடிந்துவிட்டது!

கண்டார்க்குப்பெண்ணலவோ காணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதெலா மூணல்லாதுண்பர்களோ

(பொ - ரை.) பார்த்தவர்களுக்குப் பெண்ணுயிற்றே! காணப்பெறுர்க்குக் காமமேயாகும்; புசிப்போர்க்கு உண்பனவெல்லாம் ஆகாரமாகக் கொண்டல்லாற் புசிப்பார்களோ!

கொண்டார்கள் கொண்டதெலாங் கொள்ளாதார்கொள்ளுவரோ? விண்டார்கள் கண்டவரோ கண்டவர்கள் விண்டவரோ?

(பொ - ரை.) ஆசிரியர்பால் பெற்றபேறெவையும், பெருதவர்கள் அநுபவியார். அநுபூதியின்றிப்பேசும் வகையான் பேசுபவர் உண்மைநிலையுணர்ந்தவரோ? உண்மையுணர்ந்தவரும் ஒரு

வர்க்குரைப்பாரோ, உரையார் என்றபடி. (கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்.)

பண்டாயநான்மறைகள் பாடும்பரிசலவோ
தொண்டாயதொண்டருளந் தோற்றியொடுங்குமதோ

(பொ - ரை.) முதுமறைகளாய நான்கு வேதங்களாலும் போற்றப்படும் பரமகருணாநிதியன்றோ? அன்றி, சரணகதியடைந்த அடியாருள்ளமே இனியதோர் ஆலயமாக வமர்ந்திருப்பதன்றோ?

ஓதவரிதோ வொருவருணர்வரிதோ
பேதமறவெங்கும் விளங்கும்பெருமையன்காண்

(பொ - ரை.) அந்தபரம்பொருள் சொல்வதற் கருமையோ? எவரும் அறியலாற்றாததோ? அப்படியல்ல; மாறுபாடின்றி எங்கணும் விளங்காநின்ற சகலபெருமையும்பொருந்திய சர்வபரிபூரணனென்றறிவாய்.

வாக்குமனமுங் கடந்தமனோலயன்காண்
நோக்கவரியவன்கா ணுண்ணரியநுண்ணியன்காண்

(பொ - ரை.) மனவாக்கினுக்கு அகோசரமான மனோலயனாக்கும்: ஊனநேத்திரப் பார்வைக்கெட்டாதவன்; நுட்பங்களினும்அதிநுண்ணிய அணுவினிலும் அணுமாத்திரமாய் விளங்குபவன்.

(கு - ரை.) மனோலயன் - மனத்தில் லயமாய்விளங்குபவன். மனம் லயப்படார் பார்வைக்கு அகப்படான் - (பரமாணுப்பிரமாணன். ஜீவன்)

சொல்லுக்கடங்கான்காண் சொல்லிறந்துநின்றவன்காண்
கல்லுளிருந்த கனலொளிபோனின்றவன்காண்

(பொ - ரை.) சொல்லுள் அடங்கான்; சொற்கடந்தே விளங்குபவனும். கல்லினுள் கலந்துள்ள கனலொளிபோன்று எப்பொருளினுங் கலந்தவியாபகன் - என்றறிவாய்.

(கு - ரை.) சொல்லுள் அடங்கான் - வார்த்தையால் இத்தன்மையன் என்றுகுறித்துரைக்க முடியாதபொருள் என்பது, கல்லின்கனலொளி - கல்லில் அக்கினிகலந்திருக்கிறது=எப்படியெனின், கருங்கல்லில் இரும்பு அழுத்தமாய்ப்படுங்கால் நெருப்பு தோன்றும்; இதையே (சக்கிமுக்கி) என்று முன்காலத்திலுள்ளார் உணர்ந்தாராய் நெருப்பு உண்டுபண்ணுவது முறைமை. இன்னுங் கப்பிரோட்டுகளில் லாடக்குதிரை செல்லும்போது குதிரைக்கால் லாடம் ரோட்டுகளிலே தலை நீட்டியுள்ள கல்லில் இடறியபோது நெருப்புப் பொறிபறப்பது பார்க்கலாம்; இவ்வாறாக இறைவன் எப்பொருளினும் கலந்து சோதிமயமாயிருப்பன் என்பதை விளக்கினராக. மற்றும் விறகினும் தீமயமாயிருப்பன். ஸ்படிகமணியின் ஜோதியனையான் எனலுமாம் சொலற்கரிய சுயஞ்சோதியென்றார் மேலோர்.

சுட்டிறந்தபாழதனிற் சுகித்திருக்கச்சொன்னவன்காண்
எட்டிலெழுத்தோ எழுதினவன்கைப்பிழையோ

(பொ - ரை.) குறித்துணர்தற்கு அப்பாலான வெருவெளியில் சுகவாழ்வுற்று நிலையுற்றிருப்பான் உபதேசஞ் செய்தவன் ஆனால் அப்படி எனக் குபதேசித்தருளியவோர் சொல் எட்டின் சுரைக்காயாகுமோ? அன்றி அதை எழுதியவன் தவறுதலோ?

(கு - ரை.) சின்மயானந்த அப் பரம்பொருள் எவற்றையும் தன்னகத்தில் லயப்படுத்திக்கொண்டு விளங்கலான் அதைச் "சுட்டறிதற்கு எட்டாதது" என்றார். அத்தகைய வெளியிலே கலந்து வாழவிரும்பியவர் 'சொன்னவன்காண்' என்றார். இவ்வாறாகிய

சின்மயவெளியைச் சுட்டியுணர்த்தும் நூலும்பயனிலவென்றே 'எழுத்தொகைப்பிழையோ' வென்றனர். சுட்டறியக்கடந்த வொன்றே மோக்ஷமாம். அது எழுதிக் கூற வியலாததாதலின் 'எட்டிலெழுத்தோ எழுதியவன் கைப்பிசகோ' என்று எளன வுரைபகர்ந்தனர் என்க.

சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தைபானறியேன்
அம்மாபொருளிதென வடையவிழுங்கினண்டி

(பொ - ரை.) என்னைச் 'சும்மாயிரு, வென்றனன்; ஆனல் அம்மொழியின் மர்மமறியேன்; ஆ! சும்மாயிருப்பதுவே பொருள் எனத்தெரிந்ததும் முற்றிலும் என்னைவிழுங்கியது அப்பரவெளி.

(கு - ரை.) "சும்மாயிருக்கச் சுகமுதயமாகுமே, இம்மாயா யோகமினியேனடா" என்றார் தாயுமானர். தத்வசேட்டை யுறுங்காறும் சும்மாயிருப்பவியலா. சற்குருதரிசனத்தால் தத்துவாதி கெட்டொழிந்து சும்மாவிருக்கநேரும். இவர்க்கு உலகம் தோன்றா.

பார்த்தவிடமெல்லாம் பரமாகக்கண்டேண்டி
கோத்தநிலைகுலைத்த கொள்கையறியேண்டி

(பொ - ரை.) பார்க்குமிடங்கள் எங்கணுமே பரன்மயமாய்க் கண்டதுவே; தத்துவங்கள் சேர்ந்திருந்த பொய்மாயக் கோட்டை தகர்ந்தோடின.

(கு - ரை.) ஞானிகள் பார்க்கிறதெல்லாம் உலகியல் தோற்றமா யறிவதில்லை; அப்பரவெளியாகவே காணப்படும் பொருளாந் தன்மையா மென்க. இதனுனே எங்கும் பரமாகக் கண்டேனென்றனர்; 'எங்குஞ் சிவமொழியவில்லை யவன்றன்னுணை' யென்றனர் மேலோர். இதுவே அத்வைத நிலையென்க.

மஞ்சனமாட்டி மலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழானே னின்றநிலைகாணேண்டி

(பொ - ரை.) எம்பெருமானுக்கு திருமஞ்ச னுதிகளாலே அபிஷேகாதிகள் புரிந்து மலர்மாலைசூட்டிப் பாராமலே மனமடங்கி மாய்ந்தது; எம்மானைக் காணகில்லேன்!

(கு - ரை.) ஆன்ம தத்துவம் சுத்த சிவதத்துவமானது பற்றித் தலைவநிலை வேருகத் தோன்றப்பெருது அத்துவித நிலையுற்றதனுல் முன்னைய தற்போத நிலைகெட்டு சிவபோத மாயினதாலேயே 'நின்ற நிலைகாணே' னென்றன ரென்க.

பாடிப்படித்திருந்தும் பன்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாம லுருக்கெட்டுவிட்டேனண்டி

(பொ - ரை.) பலநூல்களாய்ந்தும், பற்பல பாக்கள் பாடினும் எம்பெருமானுக்கு நறுமலரணிந்து பாராதும் தலயாத்திரை செய்யாதும் காலத்தைக் கழித்தொழிந்தேன்?

(கு - ரை.) சிவபூசா கைங்கரியம், சிவபுராண பாராயணம், சிவதலயாத்திரை, பரசிவதரிசனம் இவை யனைத்தும் பெத்த காலத்தில் செய்யும் கிரியா விசேடங்களாகும். யோகப்படிக்கு முற்பட்ட நிலைக்குரியன. இப்பத்தி நிலையிற்பதிந்த மனத்தூய்மை கண்டே சற்குரு மூர்த்தியார் உபதேசிக்க முற்படுவார். "மூர்த்தி தலந் தீர்த்த முறையாய் வணங்கினர்க்கே வார்த்தைசொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" யென்றது போன்றென்க. பற்றறுங்காறும் பரன்பணியே பாராட்டின் பிற்றை சிலநாளிற் பேரருளும் பெற்றிடலாம். பரசிவத் தொண்டோடு நின்றவர் முடிவில் மேலான லோகங்களில் வாழ்வரன்றி பிறந்திறவா பேரின்பநிலை யெய்தா ரென்க. அதுபெறற் கிச்சையுறின் சகள சேவையைவிட்டு நிஷ்கள சேவைக்கேதுவாம் இராஜயோக நிட்டைபுரிதல் வேண்டும்.

மாணிக்கத்துள்ளொளிபோல் மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார் பேசாப்பெருமையன்காண்.

(பொ - ரை.) மாணிக்கக் கல்லின் உள்ளே ஜொலிக்கும் பிரகாசத்தை நிகர்த்து என்னுள்ளே பரிபூரணனாய் வியாபித் திருந்தனன்; ஆனால் அத்தற்பரனை வணங்கிப்போற்றும் அன்பர்களால் இத்தன்மையன் என்று குறிப்பிட்டுச் சொல்லுதற்கரிய தத்துவமுள்ளான்.

அன்றுமுதலின்றளவு மறியாப்பருவமதில்
என்றும்பொதுவா யிருந்தநிராமயன்காண்.

(பொ - ரை.) அந்நாண் முதலாக இந்நாள்பரியந்தம் அறிவறியா சிறுபிராயமுதல் என்னகத்தில் என்றும் ஓர் படித்தாயிருந்து வந்த மலரகிதன் என்க. நிராமயன் - மலசம்பந்த மில்லாத கடவுள்.

(கு - ரை.) சிவபெருமான் தம் வியாபகத் தன்மையால் அன்பர்களிடத்திலே விசேட விளக்க மாகவும், மற்றையோரிடத்தில் பொதுமுறையாயும் விளங்குவன்; ஆனாலும் யான் அவன்றன் விசேஷ வியாபகத்தினை யறிந்துய்ய எற்றதான பரிபக்குவம் எனக்கில்லை யென்றனர்.

சித்தவிகாரத்தாலே சின்மயனைக்காணாமல்
புத்திகலங்கிப் புகுந்தேன்பொறிவழியே.

(பொ - ரை.) பக்குவமற்ற என்னெளிய மனக் கோளாறினாலே அறிவாகார பரமாத்மனை அறிதலின்றி மயக்கவசத்தனாய் பஞ்சேந்திரிய வழிபற்றி நின்றேன்.

(கு - ரை.) இதனால் ஐம்பொறியைப் பின்பற்றி நிற்கும்வரையில் இறைவனைத் தரிசிக்க வியலாதென்றபடி.

பத்தியறியாமற் பாழிற்கவிழ்ந்தேண்டி
ஒத்தவிடநித்திரையென் றொத்துமிருந்தேண்டி

(பொ - ரை.) அன்பின் வழியன்றி அந்யாய விஷயாதிகளிலே வீணாய் விழுந்து கழித்தேன். சமநிலையுறக்கமே சகச நித்திரையாக் கொண்டும் ஒத்திருந்தேன்.

செத்தாரையொத்தேண்டி சிந்தைதெளிந்தேண்டி
மற்றொருமில்லையடி மறுமாற்றங்காணேண்டி.

(பொ - ரை.) நான் இறந்தார் போன்று மிருந்தேன்; மனத்தெளிவும் பெற்றேன்; மற்றப் பேய்க் கூட்டங்களெல்லாம் தொலைந்தோடின; பேச்சுக்கிடமின்றி பேசா நிலையிலுள்ளேன்.

(கு - ரை.) ஐம்புலாதிகள் முதலாக சர்வேந்திரியாதி கரணங்களோடு முகந்த நட்பாயிருந்த வெனக்கு இப்போதுதான் இனியயேகாந்தத் தத்துவம் வாய்த்து சுகப்படுகின்றேன் என்றபடியாம். இதனால் கலக்கமின்றிய தெளிவாய நிலைபிறந்து சிற்சுகோதயத்திற் சொக்கி யிருத்தலையே ஈண்டு செத்தாரை யொத்தேன் என்றனர். (நிர்ச்சிந்தையே நிர்மலதத்துவம்) இதன்மேல் அந்தர் முகத்தோற்றமேயன்றிப் பகிர்முகத் தோற்றமிரா வென்க. பகிர்முகம் - வெளித்தோற்றம் - (அந்தர்முகம் – உள் தோற்றம்,) அதாவது உட்பார்வையோடிருத்தல். ஆனால் கண்வெளிப் பார்வையாகத் திறந்துதானிருக்கும். அதனால் வெளிநோக்க முடையாரென்று கருதுதல் பிசகு. "வேலொத்தகண்ணை வெளியில்விழித்திரு காலத்தைவெல்லும் கருத்திதுவாமே." என்றனர் திருமூலர். ஞானிகளின் குறியீதாம்.

கல்வியல்லகேள்வியல்ல கைகாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடி யெங்குநிறைந்ததடி

(பொ - ரை.) மெஞ்ஞானநிலை, கல்விகேள்விகளாலே தேடப் பெறும் தேட்டமன்றாம்; எம்மானே சற்குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்து தக்ஷிணாமூர்த்தமாய் நால்வர்க்குச் சொல்லாமற் சொன்ன தான சின் முத்திரையைக்காட்டி யதை யொத்தே ஓதுவிப்பர். (அவ்வுபதேசத்தின் பின்னரே அகண்டவெளியாய், சின்மய தன்மயமாய், என்றுமறியா யின்பநிலை யெய்தற்பாலதான பக்குவமுறும் என்க.)

வாசாமகோசரத்தை மருவியிடங்கொண்டாண்டி
ஆசூசமில்லாண்டி யறிவுக்கறிவாண்டி

(பொ - ரை.) வாக்கென்ன, மனமென்ன இவைகளால் அப்பரன் இத்தகைமையன் என்று எடுத்தோதமுடியாத் தன்மையன்; அவ்வகண்டவெளியிலேயே பரிபூரணனாய் விளங்கி நிற்றலைக்குறித்தனர். ஆசூசமில்லாத சுத்ததத்துவன். மற்றும் ஜீவான்மாவின் அந்தர்ப்பூதமாய அறிவுமயத்துக்குப் பேரறிவாய் நிற்பவன் என்க. ஆசௌச மென்பதே ஆசூசமாகக் கூறினர் ஆகவே - அவ் விருபதங்களும் ஒரு பொருட்சொற்களாம். ஆசூசம் - சூதகம் அல்லது தீட்டு.

பத்துத்திசைக்கு மடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்கு மிடைவிடாத்தேகமடி

(பொ - ரை.) பரசிவத்தின் திருவுருவம் அகண்டாகாரமாய்ப் பத்துத்திசைகட்கும் அப்பாலுமாய் வியாபித்துள்ள பிரமாண்ட வியாபகன் ஆனவன். எங்கெங்கும் அவனே வியாபித்துள்ள பரிபூரணன் என்றனர்.

(கு - ரை.) அத்தகைய அகண்டாகார சொரூபமானது கொண்டே திகம்பரனென்றபடியாயிற்று. திக் - அம்பரன் திகம்

பரன். 'எங்கும் இடைவிடாத்தேகம்' என்றகருத்தையே தாயுமானுர் "பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணன்" என்று குறிப்பிட்டமைகாண்க.

தித்திக்கவூறுமடி சித்தமுடையார்க்குப்
பத்திக்கடலுட் பதித்தபரஞ்சோதியடி

(பொ - ரை.) அன்புருவாய்நிற்கு மெய்யடியார்கட்கு தானும் அவ்வன்புருவாயே உடலெலாம் உயிரெலாம் உள்ளகமெலா மினிப்புறுமாறு வியாபித்திருப்பன் என்க. 'தின்றுகண்டோர்க்கது தித்தித்தவாறே' என்ருர் திருமூலர். சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறிநின்று பிறந்தபிறப்பறுக்கும் எங்கள்பெருமான். என்ருர் மணிவாசகர்.

உள்ளுணர்வாய்நின்றவர்த முணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளதிலே யேறிக்குறையாண்டி

(பொ - ரை.) (ஒப்பரிய இப்பெரிய அப்பரம்பொருளே) தன் இதயதாமரையின்கண் அறிவாகாரமாய் விளங்குவதைக் கண்டிருப்பவர்கள் எவர்களோ அவர்களது 'அறிவுக்குக் காணப்பட்டவன். அத்தகையான் எட்டுணையேனும் தன்னுடைய அகண்டாகார சோரூபத்தில் ஏற்றக் குறைவில்லாதவன் என்றபடி.

(கு - ரை.) இதனுல், அப்பரம்பொருள் எஞ்ஞான்றும் யாண்டும் ஒரேபடித்தாயுள்ளவன் என்பதை நிரூபித்தனரென்க.

தூருந்தலையுமிலான் ருேற்றமொடுக்கமிலான்
ஆருமறியாம லகண்டமாய்நின்ருண்டி

(பொ - ரை.) அடிமுடியில்லாதும், பிறத்தலிறத்தலில்லாதும், யார்க்கும் அறியப்படாதும் அகண்டிதாகாரமாயு முள்ளவனுக்கும் என்றும், சர்வாண்டமுமவனே யெங்குமாய்த்துலங்குபவன் என்றுங்

குறித்தோதினரென்க. அகண்டம் - யாதானுங் கண்டித்தற் கிசையாத வஸ்து.

எத்தனையோவண்டத் திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனைபேருண்டாலும் அணுவுங்குறையாண்டி

(பொ - ரை.) சர்வாண்ட புவனங்களிலு முள்ளார் அத்தனை பேர்களும் அப்பரம் பொருளாரது பேரின்ப நுகர்ந்திடினும் அவரது பேரருளுருவத்திலே ஓர் அணுப் பிரமாணமுங் குறைபாடில்லாத முழுமுதற் பொருளாயுள்ளவன் என்றபடி கூறினர்.

வாக்குமனமும்வடிவுமிலா வான்பொருள்காண்
போக்குவரவுமிலான் பொருவரியபூரணன்காண்

(பொ - ரை.) மனவாக்குக் காயங்களற்று பேரருளே பேருருவமாய்க் கொண்டு நித்தியத்துவம் வாய்ந்துள்ளவன். இன்னும், பிறத்தலிறத்தலில்லாது என்றும் ஒப்புயர்வற்ற பூரணப் பொருள்காண் என்றனர்.

காட்சிக்கெளியான்காண் கண்டாலுங்காணன்காண்
மாட்சிமனம்வைத்தார்க்கு மாணிக்கத்துள்ளொளிகாண்

(பொ - ரை.) அவனருள்கொண்டார் கண்களுக்கு இலேசாகத் தோற்றுவன்; அவ்வாறு தோன்றுவனேயாயினும் அவனது வடிவம் பூதவடிவாகப் புலப்படாது என்றும், மெய்ஞ்ஞானவுணர்ச்சி விளங்கப்பெற்றார்க்கே மாணிக்க இரத்தினத்தின் உள்ளாடும் ஒளி போன்ற தன்மையனாய்க் காணப்படுவன் என்றும் கூறினர்.

வாழ்த்தியவனை வழிப்பட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியான்காண் சொல்லிறந்தசோதியன்காண்

(பொ - ரை.) ஆன்மாக்கள் மனம்நிலைத்து அப்பரம்பொருளைத் துதிசெய்து வணங்குவார்களானாலும் கண்முன்னாகத் தோற்றுபவனல்லன். அன்றிசொல்லுக்கடங்காத சுயம்பிரகாசத் தூவெளியன். தூவெளியன் - ஞானாகாயன்.

ஐயமறுத்தவனை யாராய்வாருண்டானால்
வையகத்தேவந்து மலர்பாதம்வைத்திடுவான்

(பொ - ரை.) ஒப்பரிய அப்பெரிய தற்பரனை யாதொரு சந்தேகாதிகளின்றி பேரறிவினாலே ஆராய்ந்து விசாரணை செய்வார்களானால் அந்தசிவசங்கரன் அவர்களை ஆசிரியமுகூர்த்தமாய் எழுந்தருளிவந்து திருவடி தீக்ஷைசெய்து ஞானபரனாக்குவன்.

அணுவுக்குமேருவுக்கு மகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்றுஞானக் கரும்பின்றெளிவான்காண்

(பொ - ரை.) அணுமாத்திரமாய பொருளினும், பெரியமலைப்பிரமாணமான பொருளினிடத்திலும் உள்ளும் வெளியினும் விளங்கியிருப்பன்; கணுமுதிர்ந்த ஞானமயக்கரும்பின் சாற்றினிலும் தீஞ்சுவையன்.

எந்நாளுமிந்நாளு மிப்படியாயப்படியாய்ச் [காண்
சொன்னாலுங்கேளான்காண் சோத்திரத்தில் கொள்ளான்

(பொ - ரை.) அந்நாளிலும் இந்நாளிலும் இவ்வாறு அவ்வாறென்று யாதொருவன் கூறுவானெனினுங் கேட்கான்; தவிர அவ்விஷயத்திற்குக் காதுகொடுத்தும் கேட்பவனல்லன்.

ஆத்தாளுக்காத்தாளா மப்பனுக்குமப்பனுமாம்
கோத்தார்க்குக்கோத்தநிலை கொண்டகுணக்கடல்காண்

(பொ - ரை.) எம்பரம்பரனார் தாய்க்குத் தாயாகவும், தந்தைக் குத் தந்தையாகவும் மற்றுமுள்ள பந்துவுக்குப் பந்துவாயு முள்ள எண்குணத் திறைவனுக்கும்.

இப்போபுதிதோடி யெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போ தருளறிவுந்தந்தாண்டி

(பொ - ரை.) இப்போதென்ன எனக்கு அப்பரமன் புதிதாக வந்து அறிவும் திருவருளும் பாலித்தவரா? அல்ல, அல்ல; என் ஜென்மங்க டோறும் வந்துவந்து என்னறிவுக் கறிவாய் நின்றுதவி மேனிலைக்கேற்றியவ னல்லவா!

பற்றற்றார்பற்றாகப் பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டி கூடியிருந்தாண்டி

(பொ - ரை.) இருவகைப் பற்றுக்களையு மொழித்துள்ள ஜீவன் முத்தர்களைத் தான்பற்றியிருந்தனன். அவனே இப்போது என்குற்றமாய அகப்புறக் கரணச்சேட்டைகளை யொழித்துப் பரி சுத்தனாக்கி என்னைத் தன்னொடுங் கூட்டாளியாக ஒன்று படுத்திக் கொண்டனன். (அதாவது அத்துவிதநிலை)

வெட்டவெளியிலென்னை மேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடி பார்த்திருந்தாரெல்லோரும்

(பொ - ரை.) சுத்த பரவெளியிலே எம்மான் என்னைச் சேர்த்துக் கொண்டனன்; (ஆனால் இது இரகசியமன்று;) பட்டப் பகற்போதிலே அனைவரும் அறியலாயினர்.

வாழ்வானவாழ்வெனக்கு வந்ததடிவாழாமல்
தாழாமற்றாழ்ந்தேண்டி சற்றுங்குறையாமல்

(பொ - ரை.) அழியாப் பெருவாழ்வு அதிஷ்டத்தால் வந்தது; ஆனால், நான் அதிலிருந்து முன்னைய அழிவாழ்விலேயே யிருந்து தாழ்ந்து கெட்டுப்போகாமல் வந்த பெருவாழ்வை வணங்கிப் பெற்றுக்கொண்டேன்; இதன்மேற் குறைவில்லை.

பொய்யானவாழ்வெனக்குப் போதுமெனக்காணேண்டி
மெய்யானவாழ்வெனக்கு வெறும்பாழாய்விட்டதடி

(பொ - ரை.) நிலையற்ற இவ்வுலகவாழ்வு எனக்குப் போதுமென்று மனத்திருப்தி பெற்றேனுமில்லை; நிலையுற்றதான வாழ்வு வந்ததும் என்னை வெறும் பரவெளியில் விட்டது.

கன்னியழித்தவனைக் கண்ணாரக்கண்டேண்டி
என்னியல்புநானறியே னீதென்னமாயமடி

(பொ - ரை.) என் கன்னிகைப் பருவத்திற்கு ஆனிசெய்தவன் இன்னானெனக் கண்டு கொண்டேன்; மறுக்ஷணத்திலே எனது தன்மை யின்னனவென யெனக்குப் புலனாகவில்லை; ஈதென்ன மாயமோ வறியேன்!

(கு - ரை.) ஜீவான்மாவானது, பரமான்மாவாய கடவுள் தன்மையுற்ற தென்றே (அதாவது யாண்டும் நிறைந்துள்ளமை) நூன்முறை யுணர்தற்பாலது; ஆனால் அத்தெளிவினை தான்பெத்தகாலத்திலே அவ்வான்மாவே தேகமென்றும் கண்டப் பொருளென்றும் எண்ணியிருந்தது, உண்மைவிளங்காமை யென்றனர் போலும்.

சொல்லாலேசொல்லுதற்குச் சொல்லவாயில்லையடி
எல்லோருங்கண்டிருந்து மிப்போதறியார்கள்

(பொ - ரை.) எம்பெருமான் என்னுடனே உறவாய பின்னர் அவ்வொற்றுமையின் நிகழ்ச்சியினையும் சுவாநுபூதியையும் யான்

வாயிஞல்கூற வசமின்று; ஆனல், அத்தன்மையினை அஞ்ஞான்று யாவரும் நூன்முறை கொண்டுணர்ந்த தாயினும், இந்நிலையில் சொல்ல எனக்கேவிளங்க விலை யென்றபடி. (தம்பெருமை தான றியா தத்துவன்காண் சாழலோ வென்ருர் மணிவாசகர்.)

(கு - ரை.) அந்தர்முக அநுபவமாகிய சுவாநு பூதியினை விரிவாய்ப் புறத்தேகூறப்புகின் கரணவிரோதத்தான் தீங்குறுவது நோக்கியே 'சொல்லவாயில்லை' யென்றனர். ஆகவே, அநுப வாதிய அந்தரங்கம் அந்தரங்கமாயிருப்பதுவே நியதியென்பதாயிற்று. அன்றி, இன்பநிலையினை இன்னனவென் றெடுத்தோதுதலு மிசையா. என்? அக்கால நிலைமைவேறு இப்பருவ நிலைமை வேறு, ஆதல் கொண்டென்க. தன்னையே தானறியாத் தத்துவத் தில் தானுற்றபோது இசைத்தல் எவ்வாறு கூடும் என்றறிதல் வேண்டும். (துவிதம் நீங்கி அத்துவிதமாயதறிக) வாக்கானு மனத் தானு மன்னவொண்ணுமோன, வினத்தாரே என்ருர் பெரியார்.

கண்மாயமிட்டாண்டி கருத்துமிழந்தேண்டி
உண்மாயமிட்டவனை யுருவழியக்கண்டேண்டி

(பொ - ரை.) நேத்திர சமிக்ஞையால் காட்டினன்; அக்ஷ ணமே மனேலயமானது; என்நினைவு எனக்கில்லை; உறுதிப்பாடு ஒளிந்துகொண்டது; இவ்வாருக என்னுள்ளிருந்து மாயவேலை செய்தவனை உடனேதன்னுரு மறையப்பார்த்தனன் (உள்ளங்கவர் கள்வன் என்ருர் சம்பந்தர்)

என்னசொல்லப்போறேனே விந்தவதிசயத்தை
கன்னியிளங்கமுகு காய்த்ததடிகண்ணுர

(பொ - ரை.) யான் அவனைப்பார்த்திருந்தேன்; அப்போது என் கண்ணைக் கவரத்தக்கவிதமாக பாக்குமரமொன்று குலையீன்றது; இப்புதுமைக்கு யான் என்சொல்வது!

ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாஞ் சவ்வாதுமணக்குதடி

(பொ - ரை.) யான் எம்பெருமானோடு சேர்ந்தவிடமெங் கணும் அருள்மயமாயே தோன்றப்படுகின்றன; பொருந்துமிட மனைத்திலும் நறுமணங்கமழ்கின்றது.

இந்தமணமெங்கு மியற்கைமணமென்றறிந்து
அந்தச்சுகாதீதத் தருட்கடலில்மூழ்கினண்டி

(பொ - ரை.) இம்மணம் எங்கெங்குங்கமழும் இயல்புடைய தெனக்கண்டு அவ்வானந்த மேலீட்டால் மிகவும் திருவருளில் மூழ்கினேன்.

இரும்பினுறைநீர்போல வெனைவிழுங்கிக்கொண்டாண்டி
அரும்பிலுறைவாசனைபோ லன்றேயிருந்தாண்டி

(பொ - ரை.) அக்கினியிற் காய்ச்சப்பெற்ற இரும்பானது தண்ணீரை யுண்டுவிட்ட பான்மையாக அவன் என்னை யுண்டு விட்டனன். ஆனாலும், மலர்மணம்போன்று என்னை விட்டுப் பிரிந்தானில்லை.

அக்கினிகற்பூரத்தை யறவிழுங்கிக்கொண்டாப்போல்
மக்கினம்பட்டுள்ளே மருவியிருந்தாண்டி

(பொ - ரை.) தீயானது கற்பூரத்தை யெரித்துச் சூனியஞ் செய்வதுபோன்று என்னை யெவருமறியவொண்ணாது உள் ளிருந்தே கலந்துகொண்டுவிட்டான்.

கடல்நீருமாறும்போல் கலந்துகரைகாணேனண்டி
உடலுமுயிரும்போ லுட்கலந்துநின்றானண்டி

(பொ - ரை.) சமுத்திரஜலத்துளே ஆறுகளோடிக் கலக்கு மாறுபோல, யான் என்பரம் பொருளோடுங்கலந்து கரைகண்டிலேன்; அன்றி உடலும் உயிரும் பேதமின்றி ஒன்றுபட்டதையொத்தே இறைவனும் என்னை அபேதமாய்க் கலந்துகொண்டருளினன்.

பொன்னுமுரைமாற்றும்போற் பொருவரியபூரணங்காண்
மன்னுமனுபூதியடி மாணிக்கத்துள்ளொளிபோல்

(பொ - ரை.) பொன்னையன்றி மாற்று பிரிவினையில்லாமை போலவே ஆன்மாக்களிடத்தே பரமன் பிரிவில்லாது நிறைவாயிருப்பன்; (எதனால்? சர்வபரிபூரணத்துவத்தால்) இன்னும், மாணிக்கக் கல்லின் பிரகாசம்போன்று உயிர்களிடத்தே ஒன்றுபட்டிருத்தலையறிவதே சிவாநுபூதியெனப்படும்.

கங்குகரையில்லாண்டி கரைகாணுக்கப்பலடி
எங்குமளவில்லாண்டி யேகமாய்நின்றாண்டி

(பொ - ரை.) எல்லைமுதலிய வரம்பில்லாதவன்; துறைமுகங் காணப்பெறாத கப்பலையொத்தவன்; சர்வபரிபூரணனும் ஒருவனுமாயுள்ளவன்.

தீவகம்போலென்னைச் சேர்ந்தபரசின்மயன்காண்
பாவமொன்றில்லாண்டி பார்த்திடமெல்லாம்பரங்காண்

(பொ - ரை.) மானைக்கொண்டு மானைப்பிடிப்பது போலவே அவன் மானிடவடிவாய்த் தோன்றி என்னை யீர்க்கும் ஒப்பற்ற தற்பர ஞான சொரூபன்; மற்றும் பாவனை யென்பதுவே யில்லான்; பார்க்குமிடமெங்கணுமே நீக்கமிலா தொளிரும் பரமசொரூபன்.

உள்ளார்க்குமுள்ளாண்டி யூருமில்லான்பேருமில்லான்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி

(பொ - ரை.) அப்பரம் பரனைச் சர்வதா மனக் கோயிலில் வைத்து தியானஞ்செய்பவர்களான உத்தம பத்திமையாளர்க்கு பூரணமாய் வீற்றிருந்தருள் புரிபவன். அவனுக்குச்சொந்தமாக ஒருரும் ஓர் பேருமில்லாதவன். தீயனவாய பஞ்சபுலாதிகளை யடக்குவான் வேண்டியே சற்குரு மூர்த்தியாய்த் தோன்றிவந்தவன்.

அப்பிறப்புக்கெல்லாம் அருளாயமர்ந்தாண்டி
இப்பிறப்பில்வந்தா னிவனுகுமெய்ப்பொருள்காண்

(பொ - ரை.) சென்ற ஜென்மங்களி லெல்லாம் எளியேற்குத் திருவருட்டுணை புரிந்தாண்டான். இந்தஜென்மத்திலே அந்த பரம தயாளனே சற்குருமணியாக வந்தாண்டு கொண்டனன். ஆகவே இம்மாதேவனே ஒப்புவமையற்ற தற்பரசிவனும்.

(கு - ரை.) ஒவ்வொரு பிறவிகளிலேயும் சிவசத்தியாய திருவருட்சத்தியார் திரோதான சத்தியெனவந்து சர்வான்மாக்களையும் பந்தத்தினின்றும் விடுவித்தும், இச்சத்தியார்க்கு அன்னியமாகப் பரசிவமில்லாது ஏகபாவமாயும் அநுக்கிரகிப்பதால் “அருளாயமர்ந்தாண்டி” யென்றனர்.

நீரொளிபோலெங்கு நிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும் பரந்தபராபரன்காண்

(பொ - ரை.) தண்ணீரினொளிபோன்று எவ்விடத்தும் நிறைந்துள்ளவன்; பூமியின் ஒளியைப்போன்று எங்கணும் வியாபித்துள்ள ஒருவனுயுள்ள மூர்த்தியாய் விளங்குபவன்.

நூலாலுணர்வரிய நுண்மையினு நுண்மையன்காண்
பாலாறுசர்க்கரைபோற் பரந்தபரிபூரணன்காண்

(பொ - ரை.) சாத்திரவன்மையால் உணர்தற்கு அரியதான நுண்ணிய அணுவினும் நுண்ணியதாயுள்ளவன். பாலொடுங்கலந்த சர்க்கரையன்ன எங்கும் விரிந்துள்ள பரிபூரண சொரூபன்.

உளக்கண்ணுக்கல்லா தூன்கண்ணாலோருமதோ

விளக்குச்சுடரொளிபோல் மேவியிருந்தாண்டி

(பொ - ரை.) எம்பெருமான், ஞானநேத்திரத்திற்கன்றி ஊனக்கண்களுக்குத் தோற்றப்பட மாட்டாதவன். ஞானக்கண் கொண்டு பார்ப்பவர்களிடத்தே தீபவொளியொத்து வியாபித் திருப்பன்.

கல்லுளிருந்த கனலொளிபோற்காரணமாய்ப்

புல்லியிருந்தும் பொருவரியபூரணன்காண்

(பொ - ரை.) கருங்கற்பாறைக்குள் கலந்தொளிரும் அக்னிப் பிரகாசம்போன்று பொருந்தியுள்ள அவன் எங்கும்வியாபகத்துவ மாய் விளங்குவனென்க.

பொற்பூவும்வாசனைபோற் போதம்பிறந்தார்க்குக்

கற்பூவும்வாசனைபோற் காணுக்கயவருக்கு

(பொ - ரை.) சுத்த மெய்ஞ்ஞானியர்களுக்கு அழகிய மலர் மணம்போன்றும், அஞ்ஞானியர்கட்கு கற்பூவின்கண் எப்படி நறு மணமிராதோ அவ்வாருகவும் விளங்கப்பெறுவன் நம்முழுமுதற் றலைவன்.

(கு - ரை.) கற்பூவிற்கு மணமின்மை வெளிப்படைபோலவே அஞ்ஞானியர்க்கு விளங்கப்பெறான் என்பது இப்பொருளுவமை யாகக் கற்பூவைக் கூறினரென்க.

மைக்குழம்புமுத்தும்போல் மருவிமறவாதவர்க்குக்
கைக்குட்கனியாகுங் கருவறுத்தகாரணர்க்கு

(பொ - ரை.) அப்பரமனை சிந்தைகுடிவைத்துத் தியானித்து வருபவர்க்கு மைக்குழம்பின் மத்தியில் துலங்கும் வெண்முத்தைப் போன்று விளங்குவன்; பிறப்பிறப்பற்ற ஞானியர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனியொத்து விளங்கப்பெறுவன்.

(கு - ரை.) பிறப்பிறப்பிற்கு ஏதுவாய்க் கடவுளைமறத்தலின்றித் தியானத்தில்வைத்து வணங்கிவருபவர்க்கு கருமை ஸ்தானத்தின் மத்தியில் முத்து ஒளிர்வதுபோல ஏகதேசமாக விளங்குவன். மெய்ஞ்ஞானியர்கட்குப் பிரத்தியக்ஷமாய் கையகத்துள்ள கனியைப் போல் நன்குபிரகாசித்தருள்வன் என்றபடி.

பளிங்கிற்பவளமடி பற்றற்றபாவலர்க்குக்
கிளிஞ்சியைவெள்ளியென்பார் கிட்டாதார்கிட்டுவரோ

(பொ - ரை.) ஆசாபாச மொழித்த துதித்தியான பராளாயுள்ளவர்க்கு கண்ணாடியிற்பட்ட பவளம்போன்று விளங்குவன்; கிளிஞ்சலை வெள்ளியென்பவரைப்போன்ற மயக்கபுத்தியினர் அப்பரமனை அடையப் பெறாதவராவர். இவர்கள் எவ்வாறு அவனையடையப்போகிறார்கள்; அடையார் என்றபடி.

ஏட்டுக்கடங்காண்டி யெழுத்திற்பிறவாண்டி
நாட்டினரிகளெல்லா நற்புரவிசெய்தாண்டி

(பொ - ரை.) அப்பரமன், சாத்திரங்களிற் கட்டுப்படக் கூடியவனல்ல; மற்றும் அக்ஷரத்தாலும் காண்பரியவன். அதாவது (எழுத்தாலும் அறியமுடியாதவன்) நாட்டகத்துள்ள நரிகளைக் குதிரைகளாக்கிய கோமான்.

(கு - ரை.) எம்மான், எட்டாலும் எழுத்தாலும் அறிதற்கசாத்தியன், சுவானு பூதியாற் றெரிதற்குரியவனே யாவன் என்க. அன்றி அன்பர்க்காக திருவுருக்கொண்டு திருவிளையாடல்களியற்று பவன்.

பஞ்சப்பிரளயத்து மிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமிடற்று னயனத்தழல்விழியான்

(பொ - ரை.) ஐவகைப் பிரளயகாலங்களிலும் அழிந்து போகாது விளங்குபவன்; இன்னும் அன்னான் விஷந்தரித்த கண்ட முடையவன். மேலும் நெற்றிநடுவில் நெருப்புக்கண் கொண்டவன்

அகங்காக்கும்புறங்காக்கும் அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத் திசைபத்துங்காக்குமடி

(பொ - ரை.) அப்பெருமான் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இருவகைப் பொருளையுங்காப்பவன்; கண்ணுக்கெட்டக் கூடாத கணக்கற்ற அண்டபுவனங்களையெல்லாமும், தசதிசைகளை யுங்காக்கும் வன்மையுள்ளான்.

பேசாப்பிரமமடி பேச்சிறந்தபேரொளிகாண்
ஆசாபாசங்கள் அணுகாதபேரொளிகாண்

(பொ - ரை.) அக்கடவுள், பேச்சற்ற பிரமமாம்; சொற் கடந்தசோதியன்; ஆசாபாசப்பேய்களை அண்டவிடாது ஓட்டிக் கொண்டேவரும் பெருமாந்திரீகவாதி; ஆனாலும், பார்த்தற்கரிய பரஞ்சோதித்தெய்வமது.

தேசமிறந்தவன்காண் திசையிறந்ததென்கடல்காண்
ஊசிமுனையூன்ற வில்லாவுறுபொருள்காண்

(பொ - ரை.) அவன், தேசதேசங்களை யெல்லாங் கடந்துள்ள திகம்பரன். திக்கனைத்தும் தாண்டி யப்பாலும் உள்ள தென்சமுத்திரமாயவன்; ஊசிமுனைநாட்டற் கிடமில்லாஞனுலும் எங்கெங்கு மவனுயே யிருப்பவன்.

சிப்பியில்முத்தொளிகாண் சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோ லமர்ந்தவரும்பொருள்காண்

(பொ - ரை.) ஞானக்கண்ணுள்ளவர்கட்கு சிப்பியின் முத்தை யொத்துப் பிரகாசிப்பன். அஃதில்லாத ஏனையோர்க்கு தண்ணீரிற் காணும் பிரகாசம்போன்று விளங்கப் பெறுவன். ஆயினுமவன், அரியவற்றுளறியவன்.

ஆலாவிருக்ஷமடி அளவிலாச்சாகையடி
மேலாம்பதங்கள்விசும் பூடுருவுமெய்ப்பொருள்காண்

(பொ - ரை.) ஆலமரத்தை யொத்தவன்; அதன் கிளைகளைப் போல் கணக்கற்ற மூர்த்த பேதங்களுடையவன்; மேலாம் பதங்களுக்கும், ஆகாயத்தும் ஊடுருவிப் பாய்ந்துவரும் உண்மையான பொருளாவான்.

வங்கிஷமெல்லாங்கடந்து மருவுமாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும் ஆய்ந்தவரும்பொருள்காண்

(பொ - ரை.) ஜாதியென்ன, குலமென்ன இவையனைத்துந் தாண்டி சித்திப்பதானது அப்பரமனது திருப்பாதமலரிணைகள்; இன்னும் மெய்யறிவாளர்கள் குப்பல் குப்பலா யளந்து ஆய்ந்து கண்ட அரிய பரம்பொருளாக்கும்.

நாமநட்டமானதடி நவிலவிட்டமில்லையடி
காமனைக்கண்ணுலெரிக்கக் கனல்விழித்தகாரணன்காண்

(பொ - ரை.) எம்பெருமான் ஆச்சரியகரமாய நிர்த்தனம் புரிபவன்; அதனைக் கூறவகையுமில்லை. மன்மதனை எரிக்க வேண்டித் தனது அக்னிக் கண்ணைத் திறந்தவன்.

(கு - ரை.) நாமநட்ட மென்றது, யுகாந்த சர்வ சம்ஹார காலத்தே தான் தனியிருக்கும்போது நடிக்கும் நிர்த்தனமாம். நட்டம், நடம், நடனம், நடிப்பு இவையனைத்தும் நிர்த்தனத்தையே குறித்த ஒருபொருட் சொற்கள். இந்நடத்தினைத் 'தாண்டவம்' என்றழைத்தலு மொன்று.

கொட்டாதசெம்பொனடி குளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடி யீப்புகாத்தேனமுதம்

(பொ - ரை.) அம்மகாசீல குணபரன், தட்டிவேலை செய்யப் படாத உயர்ந்த செம்பொன்னையும், கடலில் துளைந்தெடுக்கா முத்தையும், எவர்க்கு மெட்டப்படாத ஓர் கிளையில் ஈமொய்த்தலிலாத் தேனமிர்தத்தையு மொத்த பரமசித்தன்.

(கு - ரை.) உலோகத்தில் சிறந்தது செம்பொன், நவமணியிற் சிறந்தது முத்தாம், அறுசுவையிற் சிறந்தது தேன் ஆக முப்பொருளுவமை கூறி முதல்வனை உபசரித்தார் என்ப.

காணிப்பொன்னுணியுடன் கல்லுரைமாத்தின்னதென்றே
ஆணியுடன்கூட்டி யடங்கவிட்டுக்கொண்டாண்டி

(பொ - ரை.) மேன்மையான பொன்றுணுக்கை மாத்துரைக் கல்லி லுரையாது உணர்தல்போல, ஆன்மகோடிகளின் சாதனங்களை யுணர்ந்தே சோதியாது இயல்பா யுணர்ந்து கொண்டனன்.

அளவிறந்தவண்டத்தா ரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும் பேசாப்பிரமமடி

(பொ - ரை.) கணக்கற்ற அண்டபுவனத்தார்க ளத்தனைபேர் களும் தனக்கெனக்கொண்டு அநுபூதி செய்யினும் கொஞ்சமேனும் அருவறுக்காது மௌனமாயுள்ள பிரமம். உண்டாலும் - இங்கே அன்பர்கள் அவனை அநுபூதிசெய்தல்.

கன்னெஞ்சினுள்ளே கழுநீலம்பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளே யிணையடிகள்வைத்தாண்டி

(பொ - ரை.) கல்லொத்த திட்பமான எனது நெஞ்சகத்தே நீலோற்பல மலர் புஷ்பித்தவண்ணமாக என்னெஞ்சினுள்ளே அப் பரசிவம் உபயதாண்மலர்களையும் நிலைநாட்டினன்.

(கு - ரை.) தண்ணீரில் தளிர்க்க வேண்டிய புஷ்பங்கள் கல்லி னிடமாகத் தோன்றியதுபோன்று அதிதீவிர பக்குவ பக்தர்களது நெஞ்சினில் ஊன்றவேண்டிய திருவடிகளை அபக்குவியாய தன்னி டத்தும் ஊன்றினமையை வியந்து கூறுவான் 'இணையடிகள் வைத் தாண்டி' என்றனர்.

வேதப்புரவியடி விரைந்தோடியும்மறியார்
காதற்றஞானமடி காண்பார்க்கருத்துடையோர்

(பொ - ரை.) பெருமான் அரோகணிப்பது வேத குதிரை யாகும்; பார்க்க மிகவிரைவாயோடினும் தரிசித்தற் கியலாவாம்; அப் பெரியோனை யறியவேண்டிய காரணஞானத்தை செவிகொண்டறி யப்படாதது; அதாவது (மௌனமாயுணர்தல் தக்கது.) மெய்ஞ் ஞான தேட்டத்தில் விளங்தொளிர் வித்தகனுவன். ஆகவே ஞானி யர் ஆராப்ச்சிக்குக் கிட்டுவன் என்றபடி.

பாசவினையைப் படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டியடி நில்லென்றுசொன்னுண்டி

(பொ - ரை.) பிள்ளைப்பெருந்தகையாளர் தம் பாசங்கழிவான் திருநோக்கு தீக்ஷையாய்ப் பார்க்கபெற்றதோடும் அவனன்பு மிக்குடையரா யறிவித்து நிரதிசயானந்த 'நிட்டைபொருந்து' என்று அருளினன் என்றனர்.

ஓசையொடுங்குமிட மோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும் பிரமமிதுவென்றாண்டி

(பொ - ரை.) பேச்சற்ற விடமெனவும், பிரணவாகாரத்தின் உள்வட்டத்தொளிரும் பரஞ்சுடரெனவும் தன்னிடங்குறித்துக்காட்டி, யாதொரு மொழியுமின்றி சுத்தமௌன நிலையாய பிரமசொருபமேயாம் எனக் காட்டியருளினன் என்றார்.

(கு - ரை.) சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், விந்து, நாதம், இவ்வெழுவகை ஆவரணத்தின் அப்பாலுள்ள பிரணவ அம்ஸமத்தியில் கதிரொளியனையான் என்று காட்டினன் ஐயன் என்றனர்; மேற்கூறிய எழாம் ஆவரணமே நாததத்துவ எல்லையாகும். அதனைக்குறிக்கவே 'ஓசையொடுங்கு' மிடமென்றார் பெருந்தகையாளர்.

இவ்வுண்மை நிலையினையே கைவல்யகாரர் கடவுள் வணக்கமாகக்கூறிய காப்புமுதற்செய்யுளிலே "என்னிலங்களினுமிக்கவெழுநில மவற்றின்மேலாம், நன்னிலமருவுமேக நாயகன்பதங்கள் போற்றி" என்றனரென்க. இன்னும், உத்தரஞான சிதம்பர சத்தியஞானசபைக்கண் வடலூர்வள்ளலாரும் மேலே கூறிப்போந்த எழுவகை ஆவரணங்களையும் எழுவகைத்திரையாய்விட்டு அவைகட்கப்பாலாக ஆனந்தத்தாண்டவ சொருபத்தினையும், நிர்மலாங்கத வொளியையும்நிறுவியருளியதுங் காண்ப.

சின்மயநன்னோக்காற் சிற்சொருபங்காட்டியெனைத்
தன்மயமாயாக்கியே தானவனாய்நின்றாண்டி

(பொ - ரை.) ஞானதீக்ஷயினாலே என்னைநோக்கி (என் மலங்கெடுத்தாண்டு) தம் ஒப்பற்ற ஞானசொரூபங் காட்டியருளி எனைத் தன் மயமாக்குவித்துத் தானே அவனாய் விளங்கினன்.

(கு - ரை.) பரமாசிரியனாய்த்தோன்றி திருநோக்கு தீக்ஷை செய்வித்து திருவருளால் தம்மைத் தரிசிக்குமாறுசெய்து, அவ்வாறு தரிசித்த மாத்திரத்தே தன்மயமாக்கி என்னையானறியாத வகையில் செய்தருளித் தானே தனியாயிருந்தனன். திருநோக்கு தீக்ஷை=கண்ணினால்பார்த்து தீட்சைசெய்தல். தீக்ஷை - சுத்தி கரித்து ஞான உதயமாகச்செய்தல்.

தானென்னைப்பார்த்தாண்டி தன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டி நவிலவிடமில்லைபடி

(பொ - ரை.) அவன் என்னைத் தன் திருநோக்கால் பார்த்தனன்; அவ்வாறுபார்த்தல் தன்னையேயல்லாது என்னையன்றாம்; (ஏன்? யான் வேறாகவன்றி அவனேயாதலால் பார்ப்பது என்னையாகுமோ?) இவ்வாச்சரியத்தை யான் எவ்வாறு கூறுவது! இப்புதுமையை யான் கூறற்கிடனின்று.

இன்றிருந்துநாளைக் கிறக்கிறபேரெல்லோரும்
என்றும்பரிபூரணத்தி லினிதிருக்கச்சொன்னாண்டி

(பொ - ரை.) இன்றைவரைப் பிழைத்திருந்து நாளையிறக்க விருக்கும் அனைவர்களும் எப்போதும் பரிபூரணமாய் நிலைபெற்றிருக்குமாறு திருவருள்வியாபகத்தால் நன்கு வாழ்வுற சின்முத்திரைகாட்டி யருளினனென்றார்.

(கு - ரை.) அநித்தியர்களான சர்வான்மாக்களும் நித்திய வாழ்வெய்தி திருவருளால் தன்னைக்கலந்தருளக்கூறினன். (இதனால் பரிபூரணதசையடைய ஆசிகூறினன்) னென்றபடி.

பார்க்கிலெளிதலவோ பற்றற்றபற்றலவோ
ஆர்க்குமிடங்காட்ட வவனிதனில்வந்தாண்டி

(பொ - ரை.) எவ்வுயிர்கட்கும் உறுதிப்பாடாயுள்ள ஒப்பற்ற ஸ்தானத்தைக்காட்டவே உலகில் சற்குருநாதனாய்த் தோன்றி யருளினன். அவனை ஞானக்கண்ணினால் பார்க்கின் மிக்க எளிதாக விளங்குவன்; காரியத்தைநோக்க, ஆன்மாக்களது பாசபந்தமொழிப் பான் திருவருள்பார்வையாய்த் துலங்குவன்.

இத்தனைகாலமடி யிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடி யிரும்பிலுறைநீரானேன்

(பொ - ரை.) இவ்வளவு காலங்களாய் செத்தும் பிறந்துமுள்ள நடபடிக்கைகளெல்லாம் இன்றுதொட் டில்லையாயிற்று. யானோ; இரும்புண்ட தண்ணீர்போ லாகினேன் = சூன்யமாயினே னென் றபடி.

எக்காலம்பட்டதடி யிறந்ததுபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாம் அழுந்தினேனரகில்

(பொ - ரை.) எந்தக்காலமுதலாக யான் பிறந்திறந்து வந் துள்ளேனோ அவ்வளவு காலமெல்லாம் நரகானுபவத்திற்கே யாளா கினேன். ஏன்? "புண்ணியமென்று லெனக்குப் போராட்டம்" ஆதலாலென்க.

காலங்கழிந்ததடி கர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவு நாமநட்டமாச்சுதடி

(பொ - ரை.) பிறத்தலிறத்தற் கேதுவான பாசபந்த கர்ம காலமெலாந் தொலைந்து போயின; நான்குவகையான பிறவிகளு மொழிந்து போயின. நாமநட்டம் - பேரற்றொழிதல். நால்வகைப் பிறப்பு = அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்ப.

முப்பாழுக்கப்பால் முதற்பாழ்முழுமுதலாய்
இப்போதுவந்தான்காண் எனைவிழுங்கிக்கொண்டான்காண்

(பொ - ரை) மூவகைப்பாழுக்கு மேலே முதற்பாழிடத்தே கடவுளாய் என்முன்பாக இப்போது தோன்றியருளினன். அப்பராபரன் என்னைத் தன்னிற் சேர்த்துக்கொண் டொன்றாயினன். முப்பாழ்=சீவப்பாழ், சிவப்பாழ், பரப்பாழ் என மூன்றுமாம்.

பாலின்கணெய்யிருந்தாற் போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய் தறவிழுங்கிக்கொண்டாண்டி

(பொ - ரை.) பாலில் நெய் மறைந்திருப்பதுபோன்று பரஞ்சோதியாம் எம்பரமாசிரியன், என்னில் மறைந்திருந்து என்னைத் தழுவி தன்னில் கலந்தருளினன். விழுங்குதல்=ஈண்டு ஐக்கியமாக்கிக் கொள்ளல்.

தெத்தபடமானேனண்டி நீயிரும்பினீரானேன்
ஒத்தவிடநித்திரையென் றோதுமுணர்வறிந்தேன்

(பொ - ரை.) (யான் பரமகருணாலயனோடு கலந்தனன்.) நெருப்புபிடித்த வத்திரமாயினேன்; மற்றும் இரும்பருந்திய தண்ணீராயினேன்; தக்கவிடத்திலே யோகசாதனை செய்ய வேணுமென்று கூறியது முணர்ந்தனன்.

ஒப்புமுவமையுமற் றோதவரிதாயபொருள்
இப்பூவினிற்குருவே யென்னவந்தோன்றுள்வாழி

(பொ - ரை.) திருட்டாந்தங்கூற வியலாததாயுள்ள அப்பரம்பொருளார் உலகின்கண்ணே சற்குருநாதன் எனக் கூறத்தக்கவனாயெழுந்தருளிவந்த எம்மான்றன் இணைமலரடிகளும் வாழ்க.

ஒப்பாரிசொல்லிடினு முவமைபிழைத்திடினும்
முப்பாலுங்கற்றுணர்ந்தோர் முன்னோர்பொறுத்தருள்வார்.

(பொ - ரை.) முத்திறப்பாலினையுங் கற்றுணர்ந்த முதல்வர்கள், ஒப்பாரிசொல்லி யழுதிடினும், திருஷ்டாந்தம் பழுதுபடினும் தாங்கிக் கொள்வர்கள். என்றபடி.

இறந்தகாலத் திரங்கல்.

வார்த்தைத்திறமில்லா மனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லி சதுரிழந்துகெட்டேனே

(பொ - ரை.) சத்தியவார்த்தை பேசாதவர்களுக்கு சாமானிய வார்த்தையாஞ் சாத்திராதிகளை யெடுத்துக்கூறி எனது கௌரவத்தை குறைத்துக் கெட்டுப் போயினன்.

மெத்தமெத்தசெல்வாக்கில் வேறுமருளடுத்துத்
தத்தித்தலைகீழாய்த் தானடந்துகெட்டேனே

(பொ - ரை.) விசேஷித்த செல்வாக்கினாலே எனக்குப் பல் வேறு மயங்கு புத்திகளுண்டாகிச் செருக்கடைந்து குமார்க்கியாய் நடந்து கெட்டவனாயினேன்.

வழக்கந்தலங்களினு மண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்தவிராமற் பதியிழந்துகெட்டேனே

(பொ - ரை.) யான் வாசஞ்செய்திருந்த ஊர்களி லெல்லாம் மண் பெண் பொன் என்கின்ற மூவகை ஆசைகளிலேயும் என்

மனசைப்பதித்து நடத்திவந்த துர்ப்பழக்கத்தினை விடாது பெறத்தக்க ஓர்ஸ்தானத்தைப் பெறாது கெட்டுப்போயினேன்.

ஆணிபொருந்து மரும்பூமியத்தையும்
காணிநமதென்று கனம்பேசிக்கெட்டேனே

(பொ - ரை.) நல்ல வளப்பம் பொருந்திய அரும்பூமி காணியாகிய சர்வத்தையும் நம்மதென்று பெருமைப்படப் பேசிக்கெட்டுப் போயினேன்.

ஆசாரமில்லாத வரசருடன்கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்துகெட்டேனே

(பொ - ரை.) சுசி சுத்தமில்லா மன்னர்களோடுஞ் சேர்ந்து சமயம்போல் பேசி அடைதற்குரிய ஸ்தானம் பெறாமல் கெட்டுவிட்டேன் (அசடருடன் என்றும் பாடம்.)

குருமார்க்கமில்லாக் குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தமிழ்ந்துகெட்டேனே

(பொ - ரை.) உத்தம ஆசிரியர்பால் கல்லாத குருட்டுச்சிநேகஞ்செய்து பிறப்பிறப்பிற்கேதுவான தீநெறிபற்றி புத்திதடுமாறி கெட்டழிந்தேன்.

ஆலமருந்து மரன்பெருமையெண்ணாமல்
பாலர்பெண்டீர்மெய்யென்று பதியிழந்துகெட்டேனே

(பொ - ரை.) ஆலகால விஷத்தை யருந்தின சிவபெருமானது மகாத்மியத்தை யெடுத்துப் புகழ்ந்துகொண்டாடாது பெண்டுபிள்ளைகளைப் பெரிதாய்ப் பாராட்டிப் பெறுதற்கரிய பேற்றினை யடையப் பெறாதுத் தவறிக் கெட்டு விட்டேன்.

பிணவாசமுற்ற பெருங்காயமெய்யென்று
பணவாசையாலே பதியிழந்துகெட்டேனே

(பொ - ரை.) பிணநாற்றமுடைய பெரிய சரீரத்தை நிலையெனக்கருதியும், பொருளாசையாலும் மோக்ஷவீட்டை யடையாது கெட்டுப்போயினேன்.

கண்டபுலவர் கனக்கவேதான்புகழ
உண்டவுடம்பெல்லா முப்பரித்துக்கெட்டேனே

(பொ - ரை.) வித்வான்கள் என்னைப்பெருமையாய்க் கொண்டாடிவாழ்த்த, அதன்மேல் கொழுமையான சத்தாகாரமாக வுண்டு பருத்துக் கெட்டனன்.

எண்ணிறந்தசென்ம மெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற் பதியிழந்துகெட்டேனே

(பொ - ரை.) மட்டற்ற ஜென்மங்களெடுத்துச் சிவாராதனஞ் செய்துய்யாமல் முத்திப்பதவியை யிழந்துகெட்டனன்.

சிற்றெறும்புசற்றுந் தீண்டப்பொறுவுடம்பை
உற்றுருக்கவுஞ்சுடவு மொப்பித்துமாண்டேனே

(பொ - ரை.) சிறிய எறும்பு என்சரீரத்தைச் சிறுகத்தீண்டுமானாலும் சகிக்கொணாது வருந்திப்பின்னர் அவ்வுடலை என் பந்துக்கள் கொண்டுபோய் மயானத்திலே வருந்திச்சுட்டெரிக்கவும் சம்மதித்து ஒப்படைத்து அழியலாயினேன்.

தன்னுடம்புதானே தனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்வில்லாம லின்பமென்றுமாண்டேனே

(பொ - ரை.) தனதுசரீரமே தனக்கு விரோதமெனக்கருதும் விவேகமின்றி அவ்வுடம்பைச் சுகத்தில்வளர்த்து அழிந்தனன்.

தோலெலும்புமாங்கிஷமுந் தொல்லன்னத்தால்வளரு
மேலெலும்புஞ்சுற்றமென்று வீருப்பாய்மாண்டேனே

(பொ - ரை.) தோல், எலும்பு, மாமிசம் மேலெலும்பு இவை கள் பழஞ்சோற்றினுலே வளர்த்து உறவாயெண்ணி இறுமாந்து ஒழிந்தேன்.

போக்குவரத்தும் பொருள்வரத்துங்காணுமல்
வாக்கழிவுசொல்லி மனமறுகிக்கெட்டேனே

(பொ - ரை.) பிறத்தல் இறத்தலாதியவும், பரம்பொருள் தோற்றமும் ஆகிய இவைகளை நன்கு ஆராய்ந்து அறிந்துதெளிவு பெருது கேவலம் வீண்வார்த்தைகள்பேசி மனத்திடமின்றி வீணே கெட்டனன்.

(கு - ரை.) ஜனன மாணுதிகட்குரிய எது இன்னவையென விசாரணைசெய்யாதும், உண்மையாயுள்ள பரம்பொருளைத்தரிசிப் பான் வேண்டியமார்க்கமுணராதும் வாழ்ந்துவந்தமையால் மனதில் ஒருவித மயக்கங்கொண்டதையே 'மனமறுகி' யெனக்கூறினர்.

நெஞ்சொடு புலம்பல்.

மண்காட்டிப்பொன்காட்டி மாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்ற தேசிகனைப்போற்றுமல்
கண்காட்டும்வேசியர்தங் கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போ லலைந்தனையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! திருச்செங்கா டென்னும் திவ்யக்ஷேத் திரத்திலே திருநிருத்தம்பயிலும் ஸ்ரீசிவபெருமானை மனமாரவணங்

காது மண்ணையும் பொன்னையுங்காட்டி, மயக்கத்தி லாழ்ந்தும் இருளைக்காட்டி, மற்றும் கண்ஜாடை செய்து காட்டி மயக்காநின்ற பொதுப்பெண்டிர்களது கண்வலைப்பட்டு கடைவீதியலையும் நாயையொத்து அலைந்தோடிக் கெட்டனையே!

(கு - ரை.) முதற்கண் மண் பொன், பெண் என்கின்ற மூன்றிடங்களிலும் மனிதர்க்குள்ள ஆசையை விளக்கிறாரேனும் இவைகளுள்ளும் பெண்ணாசையைப் பெரியதாய்க் கூறவேண்டியே "மாய விருள்காட்டிக் கண்காட்டும் வேசியர்'' என்றனர். ஆனால் இவ் வேசியர் செய்யும் வசீகரஜாலவேலை மண், பொன் என்னுமிச் சட பதார்த்தங்களுக் கில்லையாகலான், அவர்களது மயக்கால் ஆசை அதிகமாயது உண்மையென்பதில் ஐயமேயில்லை;

"மண்ணாசை வெற்பே மறிகடலே பொன்னாசை
பெண்ணாசை யொன்றேயென் பேராசை—நண்ணாசை
விட்டார் புகழும் விடையாய்நான் பொய்யாசைப்
பட்டால் வருமோ பதம்.'' வடலூர் வள்ளல். இப்பாசுரத்

தான் பெண்ணாசை மிகவும் பேராசையென்று நன்குபுலனாகின்றது. அன்றி, முன்னிரண்டு ஆசைகளினும் இப்பெண்ணாசையைப் பெரியாருந் துறத்தல் அரிதினும் அரிதாம் என்றார் பரஞ்சோதி மாமுனிவரும். வரைவின்மகளிரே ஆடவரைப் பலவாற்றானும் வலிந்து வலிந்து மலிந்து மலிந்து வசப்படுத்தும தீக்குணமுடையா ராகலானும், குலமகட்கு அஃதில்லாமையானும் இங்கே குலமகளை விலக்கியறிதற்பொருட்டு "வேசியர்'' என்றார் வெண்காட்டடிகள். "மூவாசைப்பட்டார் முத்திநிலைக்கெட்டார்'' என்ற மூதுரைப்படியே முப்பொருளாம் பொய்ப்பொருளை விரும்புபவர் எவரோ அவரெல்லாம் பிறவிப்பெருங்கடல் நீந்தாரென்பது சித்தாந்தம்; ஆதல்கொண்டே "அங்காடிநாய்போ லலைந்தனையே'' என்றார்.

புட்பாசனவணையிற் பொறப்பட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணி யோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தி யியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்றி முயங்கிலையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! மலர்தூவப்பெற்ற அழகாய பட்டு மெத்தைக்கண் சர்வாபரண பூஷிதையாயிருந்த சம்பிரமம் கெடாத படி பின்னர் பாயலில் கிடத்தி இயமன் உயிரைப்பறிமுதல் செய்தற்கு முன்பாக மூவகைப்பாழிற்கு மேதுவாம் முழுவயிரத்தனி மணியைத் துதிசெய்ய முற்பட்டாயில்லையே!

(கு - ரை.) நம்முயிரை இயமதர்மன் கைப்பற்றுமுன்னரே நாம் ஈசன் கழலிணையைக் கைப்பற்ற வேண்டுமென்பது சர்வசாஸ்திரசாரமாகும்.

முப்பாழும்பாழாய் முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பானின் றாடுமதைப்போற்றாமல்
இப்பாழாம்வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன் றீயாமல்
துப்பாழாய்வந்தவினை சூழ்ந்தனையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! பொய்வாழ்வினை மெய்வாழ்வெனக் கொண்டு சீவப்பாழ், சிவப்பாழ், பரப்பாழ் என்னு மூவகைப்பாழுக்கு அப்பாலுள்ள முதற்பாழ்வெளியுளே தாண்டவஞ்செய்யாண்டவனை வேண்டியவாறுபோற்றித் துதிசெய்யாதும், வந்தடுத்தவறியார்க்கு ஏதும் வழங்காதும், வீணே வினைவழிநின்றாயே.

(கு - ரை.) முப்பாழாவது சீவப்பாழ், சிவப்பாழ், பரப்பாழ் என்பன; இதனை ஆத்மதத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் என்றும் கூறுவர். மேலே முதற்பாழாவது பரவெளியாகும்; தத்துவங்களனைத்தும் பாழ்பட்டவிடமெதுவோ அவ்விடத்தையே

திருநடனசபை யென்பர்மேலோர். சர்வதத்துவாதீதனுயுள்ள தற்பர சிற்பர மூர்த்தியைத் துதிசெய்பவரே தற்பராபர மாவரென்பதுந் தலைவன் அருண்முறையென்பர்.

அன்னம்பகிர்ந்திங் கலைந்தோர்க்குதவிசெயுஞ்
சென்மமெடுத்துஞ் சிவனருளைப்போற்றுமல்
பொன்னுமனையுமெழிற் பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாக வெண்ணினையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! பசிப்பிணியால் வருந்தும் வறியார்கட்கு அன்னம்படைக்கும் உபகாரத்தைச் செய்தவரக்கூடிய மானிடவுடலெடுத்துவந்தும் சிவபெருமானது திருவருட்டன்மையை வாயார வாழ்த்தாது பொருள், மனை, அழகுடைப்பெண் இவை கலந்தவாழ்வு என்னுமிவற்றினை மேலும் மேலும் நிலைமையாகக் கொண்டனையே!

(கு - ரை.) எல்லாவுயிர்கட்கும் தன்மை (அதாவது இரக்கங் கொண்டொழுகும்) ஆறும் அறிவைப்பெற்று மக்களாய்ப் பிறந்து வந்தும் வறியவர்க்குதவும் தன்மையான் மானிடப்பிறவியார் மேன்மையர் என்பது. ஆகவே அவ்வரிய காருண்ய குணவிசேஷமில்லையோ அவர்களைக் கேவலம் பறவை மிருகம் முதலிய இழிந்த வகுப்பாளரென்றே கூறலாமென்றார் பெரியார். "கலையெலா முணர்ந்தானேனுங் கரிசறத்தெளிந்தானேனும், மலையெனவுயர்ந்தானேனு மனமயலகன்றானேனும், உலகெலாம்புகப்பல்லோர்க் குதவியகையனேனு, மிலகியவிரக்கமின்றேலெழுநரகடைவனன்றே." என்றார் சி. வள்ளலார். பின்னும், ஜென்மம் பிறப்பிறப்பற்ற பேசாத ஆனந்த மௌனமுத்திரை கொண்டருளும் பெரியனிலும் பெரியனும் அரியனிலும் அரியனுய், ஆண், பெண், அலியென்னும் இம்மூன்று அம்ஸமுங்கடந்த அருட்ஜோதி மயமாயுள்ள ஐயனைப்போற்றாது பொய்யினையே கொண்டொழுகுவதென்னையே?

முற்றொடர்பிற்செய்த முறைமையால்வந்தசெல்வம்
இற்றைநாட்போற்றேமென் றெண்ணுதுபாழ்மனமே
அற்றவர்க்குமீயாம லரன்பூசைபோராமல்
கற்றவர்க்குமீயாமற் கண்மறந்துவிட்டனையே.

(பொ - ரை.) மூடமனமே! ஜென்மாந்தரத்திற்செய்த தவப் பயனுற் கிடைக்கப்பெற்ற பொருள்களை இந்த ஜென்மத்திலே தேவரீர் கிருபையினு லடையப்பெற்றேம் எனக்கருதாதும், மற்றும் ஏழைபரதேசிகட் கீயாமலும், பின்னும் சிவார்ப்பணுதிகளுக் குப யோகியாதும், கற்றமேலவர்க்குக் கொடுத்துதவாதும் மமதையினுலே யிருந்துவிட்டாய்.

(கு - ரை.) செல்வம்வந்த ஞான்றே மமதாங்காரமும் பின் னுடியேவந்துறுவது பலர்க்குவழக்கம். அது மிக்க அறியாமை; முன்னர் செய்தவத்தாற் கிடைக்கப்பெற்ற அப்பொருளைப் பாத் திரங்கண்டு ஏதும் ஓர் பாகத்தை தருமவழியில் சிலவிடவேண்டுவது அத்யாவசியம். அதிலும் கற்றூர்க்கும் மற்றூர்க்கும் சமயமறிந்து கொடுக்கவேண்டியதே; அவ்வாறெல்லாம் செய்யாதுதானே பெரி தாய்ப்புசிப்பதைநோக்கியே "கண்மறந்து விட்டனையே" யென் ருர். என்? தருமஞ்செய்யாவிடின் அப்பொருள் கெடும் என்பது கொண்டே.

மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்கா தனத்திலிருந்தாலும்
காணித்துடலைநமன் கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! நவரத்னங்களாலிழைக்கப்பெற்ற ஆபரணுதிகள்பூண்டு மேலான பொற்சிம்மாசனமிருந்து அரசாளி

னும், தென்றிசைக்கிறைவனும் இயமதர்மன் சரீரத்தைக் கடைசி காலத்திலே நன்றாயிறுக்கிக்கட்டி யீர்த்தழைக்குங்கால் அச்சமயத் திலே சொற்பகாணியத்தனை பொன்கூடகொண்டு போதலைக் காணோமே!

(கு - ரை.) மிகுந்த செல்வப்பெருக்குடையராய் வாழ்ந்த போதும், உயிர் நீங்கிய அக்காலத்தில் அந்தப்பொருள் உடன் கொண்டேக விசையாமற் போகிறதென்பதாயிற்று. "அமராவதி யிறைக்காருயி ரீந்தவருட்குன்றமே, சமராபுரிக்கரசே தணிகாசலத் தற்பரனே, குமராபரமகுருவே குகாவெனக்கூவிநிற்பே, னெம ராஜன்வந்திடுங்கா லையனேயெனை யேன்றுகொள்ளே." என்றனர் வள்ளலார்.

கற்கட்டுமோதிரநற் கடுக்கனரைஞாண்பூண்டு
திக்கெட்டும்போற்றத் திசைக்கொருத்தரானாலும்
பற்கிட்டவேமனுயிர் பந்தாடும்வேளையிலே
கைச்சட்டங்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! பல இரத்னங்க ளிழைக்கப்பெற்ற மோதிரமென்ன, அதியழகுவாய்ந்த கடுக்கனென்ன, அரைநாண் இவையணிந்துள்ளதை எட்டுத்திசைகளிலும் எண்மர்நின்று புகழ்ந்து கொண்டாடினாலும், பற்கிட்டி உயிரைக்கவர, இயமன் மனம்போல் கைப்பற்றிப் பந்தாடுவதுபோல் விளையாடி உயிர்கொண்டு போங்கா லத்து கேவலம் ஓர் சிறிய ஓலைகூட பிரேதத்தோடு செல்லக் காண் கின்றே னில்லையே!

(கு - ரை.) அட்டதிசைகளிலு முள்ளார் இவரணிபணிகளைக் கண்டு ஆச்சரியமுற்றுப் புகழ்ந்து துதிசெய்தாலும் முடிவுகாலத் துக்கு அப்போற்றல் பிரயோசன மற்றதாம் என்றபடி.

முன்னநீசெய்ததவ முப்பாவுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகழும் பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச் சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற் காட்சியற்றாய்நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! ஜென்மாந்தரங்களில் நின்னால் செய்யப்பட்ட புண்ணியபாவங்கள்வந்து இருமையினும் பின்தொடர்வதன்றி, திரவியமும், பல ஆபரணாதிகள் பூண்ட மனைவியரும் அங்குவந்து றுமோ? தன்னையும் தன்வாழ்வையும் உண்மையென்றெண்ணி மயங்கிச் சற்குருமூர்த்தியைப் பத்திமையாய்ப் பணிந்தேத்தல் செய்யாது கண்கெட்ட குருட்டேமன்போன்று பார்வையொழிந்தனை!

(கு - ரை.) இருமை - இம்மை, மறுமை. தன்னை - யென்பது தன்னுடலை. பூவை - பெண்கள் பொதுப்பெயர், ஆனாலும் மனைவியை யென்க.

பையரவம்பூண்ட பரமர்திருப்பொற்றாளைத்
துய்யமலர்பறித்துத் தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங் காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிறுமாந்து விட்டனையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! படங்கொண்ட பாம்பினை திருவாபரணமா யணிந்துள்ள சிவபெருமானது திவ்ய திருப்பாதங்களை, பரிசுத்தமாகிய மலர்பறித்து அருச்சனைபுரிந்து வணங்கித் துதியாமல், கையிலணிந்துள்ள காப்பையும் காலில் அணிந்த பாடகத்தையும் ஸ்திரமென்று இறுமாப்பு வசத்தளா யிருந்தனையே!

(கு - ரை.) நீ அணிந்துள்ள பலவகை இரத்னாபரணங்களையும் பொன்னாபரணங்களையும் சாஸ்வதமாக வெண்ணிக் கெர்வித் திருப்பது மடாபுத்தியீனமாகும்; அவைகளைச் சிறிதும் பாராட்டாது எம்

மானே மலர்கொண் டருச்சனை புரியாமே வாழ்வது பேய்வாழ் வொத்ததென்றபடி. "பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார், நாக்கைக் கொண்டர னுமநவில்கிலார், ஆக்கைக்கே யிரைதேடியலமந்து, காக்கைக்கே யிரையாகிக் கழிவரே" என்றும், பின்னும், "இட்டுக்கொள்வன பூவுள நீருள, கற்றுக்கொள்வன வாயுள நாவுள, கற்றைச் செஞ்சடை யானுள நாமுளோம், எற்றுக்கோ நமனுனிடந்துண்பதே" என்றும், தேவாரச் செல்வர்கள் அருளிச்செய்தமையால் காண்க.

மாதுக்கொருபாகம் வைத்தவரன்பொற்றுளைப்
போதுக்கொருபோதும் போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிந்த மண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீ யெண்ணினையேநெஞ்சமே?

(பொ - ரை.) மனமே! உலோக மாதாவாகிய அம்பிகைக்கு தமது திருமேனியின் இடதுபாகத்தைக் கொடுத்திருந்தி யருளிய சிவபரஞ்சுடரின் பொன்னனைய நற்றுண்மலரைத் தினமானம் ஒருநேரமேனும் துதிசெய்து உன்னில் நீ யிரக்கமுற்று வாழாதபடி வம்புக்கேதுவாகச் சம்பாதித்து மண்ணில் மறைத்துவைத்து எந்நிலையைப்பெற யெண்ணங்கொண்டனை?

(கு - ரை.) எம்பெருமானைத் துதிசெய்து ஆன்மலாபத்தைப் பெறாது, பொருள்தேட்டத்திலேயே முனையாய் நின்று தேடிப் பின்னர் உற்றார் உரியார் சண்டையிட்டுப் பாகம் பண்ணிக்கொள்ளயேதுவாகவோ அப்பொருளை மண்ணிற்போட்டு வைத்தது? இவ்வாறு செய்தது என்னகருத்து கொண்டோ? (தன்மனதைக் குறித்ததுபோன்று ஏனையோர்க்கே இவ்வாறு கூறலாயின ரென்பதும் ஒவ்வும்.)

அஞ்சருளைப்போற்றி யைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்கு நினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தாளைச் சிந்தைசெய்வாய்நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! ஐவகையாய திருவருட் சத்திகளையுந் துதிசெய்து அதன்மேல் ஐம்புலாதிகளை யடக்குமாறு யான் நினக்கோர் யோசனை சொல்வதைக் கேட்பாய்; - (அஃதாவது) ஏ மனமே! வஞ்சமிலா நெஞ்சுகொண்டு வேறுவிதமான நினைப்புமின்றி (சிவபெருமானது) சிவந்த உபயபாத கமலங்களையும் தியானத்தில் வைப்பதேயாகும். (இதுவே நேரான வுபாயம் என்க.)

(கு - ரை.) ஈண்டு ஐவகைச் சத்திகளையே அஞ்சருளென்றார்; தியானம் நிலைபெறச் சித்தசுத்தி அவசியமாதலின் 'வஞ்சகத்தை நீக்கி' என்றார் அதோடும் நில்லாது சலனசுபாவத்தைக் குறித்து 'மறுநினைவு வாராது' என்றுங் கூறுவாராயினர். திருவடித் தியானமே ஐம்புலன்வாயில் மண்ணிடுமாதலால் செஞ்சரணத்தாளை சிந்தைசெய்யென்றனர் சுவாமிகளாரென்க.

அற்புதமாயிந்தவுட லாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித் தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன் உடைமைபெருவாழ்வைநம்பிச்
சர்ப்பத்தின்வாயிற் றவளைபோலானேனே.

(பொ - ரை.) இந்தச்சரீரத்திலே ஆன்மா வெகு ஆச்சரியகரமாக அடங்குவதன்முன்பாக நமதருள் வடிவாசிரியரை அன்பொடும் வாய்கொண்டு தோத்திரஞ்செய்து தவநிலைபுறாது செம்பொன், ஆபரணம், பெருவாழ்வு ஆகிய இவைகளின் விர்த்தியையே கருதியிருந்து கடைசியாக பாம்பின்வாய்த் தேரையொத்து பரதவிக்கலாயினேன்!

(கு - ரை.) அநித்தியமாய இவ்வுடம்பினுயிர் அடங்குங்காலம் நமக்கு விளங்காமையால் அதிவிரைவாக அருளாசிரிய ரருள்கொண்டு நற்றவமிழைத்து நற்கதி பெறவேண்டு மென்பதே. செம்பொனென்ன, அணிபணியென்ன வாழ்வென்ன இவைகளில் ஆசை வைத்திருப்பதையே பாம்பின்வாய்த் தேரையென வுருவகித்து, அவ்வாசைதம்மை விடாமையைக் குறித்து அவலம்பித்தலைக் குறிப்பித்தனரென்க.

உற்றாரார்பெற்றாரா ருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென் மாளும்போதுதவுவரோ
கற்றுவிழுந்தவிளங் கன்றதுபோலேயுருகிச்
சிற்றுகிச்சிற்றின்பஞ் சேர்ந்தனையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! உறவின்முறையார் யாவர்? பெற்று வளர்த்தவர் யாவர்? கூடப்பிறந்தவர் யாவர்? மக்கள் யாவர்? இன்னும் யாவரிருப்பினும் என்ன பிரயோஜனம்? (இவர்களெல்லாம்) உடலை விட்டு உயிர்நீங்குந் தருவாயில் வந்துதவி புரிவார் எவருமில்லையே! ஆகவே நீ, தன்தாயாகிய பசுவினைப்பறிகொடுத்த சேங்கன்றுபோலப் பதறிக்கதறி மனமுருகிச் சீர்குலைந்து சிற்றின்பத்தை நுகர்ந்தனையே!

(கு - ரை.) மானிடப் பிறப்பினர் மரிக்கும்போது அவரவர்களுக்குரிய பெண்டு பிள்ளை பந்துமித்திரா ளனைவரும் வந்து வந்து பிரேத தரிசனஞ்செய்து விட்டும், சிலர் மயானம்வரைச் சென்று தீமூட்டியும் சென்று விடுகின்றனரே யன்றி உபகரிப்பா ரெவருங் காணோம் என்பதாக, “தந்தையார், தாயார், தாரமார், புத்திராரார் தாம் தாமாரே” என்றும், “உயிர்கொண்டு போம்பொழுது, குற்றாலத் துறை கூத்தனல்லால்நமக் குற்றாராருளரோ” என்பதாதி திருநாவுக்கரையர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரங்களானும், நன்கு புல

னுகும், இன்னும், 'எத்தாயர் எத்தந்தை' என்பதாதியாம் தாண்டக வாயிலாகச் "செத்தால்வந் துதவுவாரொருவரில்லை" என்பதாதியாகவும் திருவாய்மலர்ந்தருளிய அந்நாவுக்கரையரே அருளினமையானும் செவ்வனே துணையெவருமில்லை யென்பதுந் தெரிகிறது. இங்ஙனமிருக்கிறபோது சிற்றின்ப நுகர்ச்சியினால் மனமுருகி தாயிழந்த பசுவின்கன்றைப்போல் துயருறுவது மகா மடமையென்றும், மோட்சார்த்தமாகக் கடவுளை நம்பிக் கதிபெறல்வேண்டு மென்பதும் தோன்ற நின்றது.

வீடிருக்கத்தாயிருக்க வேண்டுமனையாளிருக்கப்
பீடிருக்கவூணிருக்கப் பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கன்றிருக்க வைத்தபொருளிருக்கக்
கூடிருக்கநீபோன கோலமென்னகோலமே.

(பொ - ரை.) தங்கிவாழ்தற்குத் தக்கமனையிருக்கவும், அன்போடும் உபசரிக்க அன்னையாரிருக்கவும், இல்லறம் நடத்துவதற்கேற்ற இல்லவளிருக்கவும், பெருந்தன்மையாயிருக்கவும், உண்ணற்குப் போதுமான இயல்பிருக்கவும், புத்திரர்களிருக்கவும், மாடுகன்றுகளிருக்கவும்,முன்னோர்களால் நமக்கென வைக்கப்பெற்றுள்ள செல்வமிருக்கவும், இவைகளோடும் வாழ்தற்கினிய மனிதசரீரமிருக்கவும் நீ சென்றதென்ன விசித்திரமோ!!

(கு - ரை.) மனிதனுக்கு முக்கியமாய் உயிர்த்துணையென்ன பொருள்துணையென்ன இவைகள் நிரம்பியிருக்கிறபோது நீ மேற்கூறிய அனைவரையும் யேமாற்றி ஒருவர்க்கும் தெரியப்படாது மறைவாய்ச்சென்றது மகாவியலனைத்தருகின்றது என்பது நன்கு விளங்கலாயின; ஆனாலும் என்னவிருப்பினும், எவ்வளவு பேர்களிருந்திடினும் உயிர்க்குற்றதுணை யெவருமாகாரென்பது நிச்சயமாயிற்று.

சந்தனமுங்குங்குமமுஞ் சாந்தும்பரிமளமும்
விந்தைகளாய்ப்பூசிமிகு வேடிக்கையொய்யாரக்
கந்தமலர்சூடுகின்ற கன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனுயென் றெண்ணிலையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! சந்தனமென்ன, குங்குமம், சாந் தென்ன, இன்னும் நறுமணத்திரவியாதிகளென்ன இவைகளெல் லாம் மிகவும் மனோஹரமாயணிந்து உல்லாசமாக மலர்பல சூட்டிக் கொள்ளும் மாதர்களிருக்க, நீ சென்ற முகாந்தரம் இவ்விதமென எட்டுணையும் எண்ணவில்லை.

(கு - ரை.) மேலே கூறிப்போந்த பலவகை நறுமணப் பொருள்களோடும் நீ விசேஷமாய் ஆசை வைத்திருப்பது பக்குவ மங்கையாராக்கும்; அங்ஙனமிருக்க நீ அன்னோர் அறியாவண்ணம் நீ யேகியது மகா ஆச்சரியகரமாயிருக்கிறதெனலாம்; என் உலகின் கண்ணே மாதர்முயக்கமே மகா மயக்கமாகும்; அவ்வாறு அதிமோக வியாபகமாயுள்ள மங்கைமாரும் கடைவழிக்குக்கூட வாரரென்பதை யுணர்ந்தகற்றியும், தன்னந்தனிமையாகவேதான் செல்லுதல் நிலை யானமையானும் யாதொன்றின் மீதும் ஆசைகொள்ளாது இறை வன்பாலே அன்புகொண்டிருத்தல் வேண்டுமென்பது தோன்ற லாயிற்று.

காற்றுத்துருத்தி கடியவினைக்குள்ளான
ஊற்றைச்சடலத்தை யுண்டென்றிறுமாந்து
பார்த்திரங்கியன்னம் பசித்தோருக்கீயாமல்
ஆற்றுவெள்ளம்போ னாவினையேநெஞ்சமே.

(பொ - ரை.) வாயுபூரிக்கப்பெற்ற தோற்றுருத்தியைப் போன்றதும், கொடியவினைக்காளா யுள்ளதுமான இவ்வுடம்பை

நித்தியமாய்க்கருதி கெர்விதங்கொண்டு, பசியுடன்வரும் பரதேசிகளுக்கு அவர்கள் முகம்பார்த்து இரக்கமுற்று பரிந்தொன்றீயாது கேவலம் * ஆற்றுவெள்ளத்தையொத்து எங்குஞ்சென்று பன்முகங் கொண்டளவளாவுதலிற் பயனென் ? என்பதாம்.

(கு - ரை.) இப்பாசுரம், தன்னையே மிகமதித்து நித்தியமென்றெண்ணும் மதோன்மத்தர்களைக்குறித்துக் கூறப்பட்டதாகவுணர்க. தவிர, ஜீவகாருணியமற்று தன்மட்டுக்கும் ஆகாரம், நித்திரை, மைதுனம் என்பவையோடுமட்டு மிருகத்தன்மையா யிருப்பதில் யாதும் பயனின்றென்பதை விளக்குவாராயினர். "ஈதலிசைபட வாழ்தலதுவல்ல தூதியமில்லையுயிர்க்கு." என்றார் திருக்குறளார்.

காசிகண்டம்.

மாண்புடையாளர் கேண்மையர்தத்தம் வழிமுறையொழுக்கினி லமர்ந்தோர், சேண்படுநிரப்பினெய்தினோர் புரப்போர்தீர்ந்தவர்தந்தைதாய்குரவர், காண்டகுமுதவி புரிந்தனோரினையோ ரொன்பதின் மருமுளங்களிப்ப, வேண்டுறுநிதிய மளிப்பின்மற்றொன்றே கோடியாமெனமறைவிளம்பும்.

நீர்க்குமிழிவாழ்வைநம்பி நிச்சயமென்றேயெண்ணிப்
பாக்களவாமன்னம் பசித்தோர்க்களியாமல்
போர்க்குளெமதூதன் பிடித்திழுக்குமப்போது
ஆர்ப்படுவரென்றே யறிந்திலையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! தண்ணீரிடைவியாபிக்கும் நீர்க்குமிழியையொத்த அற்பகாலவாழ்வினை நிலையாக்கொண்டு கேவலம் பாக்கத்தனை யன்னங்கூட பசித்துவந்த பரங்களுக்குக்கொடாது வாழ்வோமாயின், ஈற்றில் கோழைவந்தடைத்து நிற்கின்றசமயத்

---

* பெருவெள்ளநீரினும் ஆற்றுநீரே மிகப்பயன்படுவது காண்க.

தில் காலதூதாள் கயிர்கட்டியிழுப்பார்களே, அந்த மகாகொடுந்துன் பத்தைச்சகிக்க யாராலப்பா முடியுமென்று முன்னமே யோசித்தா யில்லையே !

(கு - ரை.) பசிப்பிணியதிகரித்துள்ள சீவர்களுக்கு அச்சமயம் சீவ அறிவு விளக்கமின்றி மயங்குகின்றது; அதுமயங்கவே யறிவுக் கறிவாகிய கடவுள்விளக்கம் மறைபடுகின்றது; அதுமறையவே புருடதத்துவம் சோர்ந்துவிடுகின்றது; அதுசோரவே பிரகிருதி தத்துவமழுங்குகின்றது; அதுமழுங்கவே குணங்களெல்லாம் பேதப் படுகின்றன; மனந்தடுமாறிச் சிதறுகின்றது; புத்திகெடுகின்றது; சித்தங்கலங்குகின்றது; அகங்காரமழிகின்றது; பிராணன் சுழல் கின்றது; பூதங்களெல்லாம் புழுங்குகின்றன; வாதபித்தசிலேத்து மங்கள் நிலைமாறுகின்றன; கண் பஞ்சடைந்து குழிந்துபோகின்றது; காது கும்மென்று செவிடுபடுகின்றது; நாவுலர்ந்து வரளுகின்றது; நாசிகுழைந்து அழல்கின்றது; தோல்மெலிந்து ஸ்மரணைகெடுகின் றது; கை கால் சோர்ந்து துவளுகின்றன; வாக்குத்தொனிமாறிக் குளறுகின்றது; பற்கள்கட்டுவிடுகின்றன; மலசலவழி வெதும்பு கின்றன; மேனிக்கருகுகின்றது; உரோமம் வெறிக்கின்றது; நரம்புகள் குழைந்து நைகின்றன; எலும்புகள் கருகிப்பூட்டுகள் நெக்குவிடுகின்றன; இருதயம் வேகின்றது; மூளைசுருங்குகின்றது; சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது; ஈரல்கரைகின்றது; இரத்தமுஞ் சலமுஞ் சுவறுகின்றன: மாமிசங்குழைந்து தன்மைகெடுகின்றது; வயிறு பகீலென்று எரிகின்றது; தாபசோபங்கள் மேன்மேலு முண்டாகின்றன; உயிரிழந்துவிடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடை யாளங்களும் அநுபவங்களுந் தோன்றுவது சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே யிருக்கின்றது.

இவ்வளவு அவஸ்தைகளும், ஆகாரங்கிடைத் துண்டபின்னர் நீங்கித்தத்துவங்களெல்லாந் தழைத்து உள்ளங்குளிர்ந்து அறிவுவிள

ங்கி அகத்திலுமுகத்திலுஞ் சீவகளையும் கடவுள்களையுந் ததும்பி ஒப்பற்ற திருப்தியின்பமுண்டாகின்றது. இப்படிப்பட்ட யின்பத்தையுண்டுபண்ணுகின்ற புண்ணியத்திற்கு எந்தப் புண்ணியத்தை இணையென்றுசொல்லலாம்; இந்தப் புண்ணியத்தைச்செய்கின்ற புண்ணியவான்களை எந்தத் தெய்வத்திற்குச் சரியென்று சொல்லலாம்! எல்லாத்தெய்வங்களுக்கு மேலான கடாவுளாம்ஸமென்றே சத்தியமாக அறிதல்வேண்டும். இதனால் நரகவேதனை, ஜனன வேதனை, மரண வேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங்கூடி முடிந்தவேதனையே பசிவேதனையென்றும் சொல்லப்படும். ஆதலால் ஆகாரத்தின் சொரூபரூப சுபாவங்களும் கடவுளருளின் ஏகதேச சொரூபரூப சுபாவங்களாகவே யறியவேண்டும்.

கடவுளின்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ்செய்கின்ற சீவாதுதத்துவக்குடும்ப முழுவதும் பசியினால் நிலைதடுமாறி யழியுந்தருணத்திலே அன்னாகாரங்கொடுத்து அக்குடும்பமுழுதும் நிலைபெறச்செய்வதே ஜீவகாருணியம்.

பசியென்ற புலியானது ஏழையுயிர்கள்மீதுபாய்ந்து கொல்லத்தொடங்குந்தருணத்தில் அப்புலியைக்கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே சீவகாருணியமாம்.

பசியென்கிறவிஷந் தலைக்கேறிச் சீவர்கள் மயங்குந்தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தையிறக்கி மயக்கந்தெளியச்செய்வதே சீவகாருணியமல்லவா? ஆகவே இத்தகைய பசிநோயாளர் தன் வீட்டு வாயிலில்வந்தக்கால், அவர்களுக்கு அன்னபானீயமிடாது தன் குடும்பமட்டும் ஜீவித்துவருபவர் எப்படியும் கடைசியாக எமவாதனைக்காளாகாமற் போகார். இதனால்; தன்னுயிரைமட்டும் இரட்சித்துவருதலையொழித்து பரம ஏழைகளுக்கும் அன்னமிட்டு, எமபுரிக்கேகாது இறைவனடி யடைந்துய்யும்படி நல்லறிவுச்சுடர் கொளுத்தியவாறென் றுணரல்வேண்டும்.

சின்னஞ்சிறுநுதலாள் செய்தபலவினையான்
முன்னந்தமார்பில் முளைத்தசிலந்திவிம்மி
வன்னந்தளதளப்ப மயங்கிவலைக்குள்ளாகி
அன்னம்பகிர்ந்துண்ண வறிந்திலையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! சிறுத்த நெற்றியைப் பெற்றுள்ள பெண்ணாள், தான் முன்னே செய்தபாவச் செய்கையினாலே அவள் தன் சிறந்த மார்பகத்தே கட்டியனையதாக் கிளம்பியுள்ள தனங்களிரண்டும் வனப்புவாய்ந்து விம்முதலாய்க்காண, அதனைக்கண்டு மதி மயங்கிச் சொக்கிக்கிடந்து, முகவாட்டத்தோடு தலைவாயிலில் வந்து பிச்சைகேட்கும் ஏழையர்க்கு அன்னமிட் டுபசரித்து அதன்மேல் நீயுண்ணும் தன்மையினைத் தெரிந்தாயில்லையே.

(கு - ரை.) பாவமே திரண்டுருண்டு ஓர் பெண்ணாய்ப்பிறந்து, அவர்தம்மார்பின்மேல் தோன்றியுள்ள மாம்ஸகட்டியினைக் கொம்மைமுலையெனக் கொண்டாடிப் பின்திண்டாடும் பேய்மதியால் ஏழைப்பரதேசிகட் கன்னமிட்டுண்ண மறந்தனையே! என்னமடமையிது! என்று வியந்தனர்போலும். "கன்னியர்தம் மார்பிடங்கொண்டலைக்கும்புன்சீழ்க் கட்டிகளைக்கருதிமனங் கலங்கிவீணே, யன்னியனா யலைகின்றேன் மயக்கம்நீக்கி யடிமைகொள லாகாதோ வருட்பொற்குன்றே" என்றார் திருவருட்பிரகாச வள்ளலார். மேன் மூன்று பாக்களாலும் வறியார்க் கன்னமிடற் கூறியதாம்.

ஓட்டைத்துருத்தியை யுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்த ரருளைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்து வெள்ளியையொளியாலழைத்துக்
காட்டும்பொருளிதென்று கருதிலையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! துளைகளோடுங் கூடிய தோற்பையினையும், தானேயுடைந்துபோகக் கூடிய புழுக்கூட்டினையு மொத்த இவ்வுடம்பை அசைவிக்கும் பரமேசுரனது திருவருளை விசேஷமாகத் துதிசெய்து ஆணவக்கோட்டைக்குள் வியாபித்துள்ள அறையினைத் திறந்து அப்பரவெளியைச் சோதியாலமைப்பித்து அல்லது பரசிவத்தினைச் சத்தியினாலே அழைப்பித்து சர்வத்தினையுங் காட்டிக் கொடுக்கும் பரம்பொருள் இதுவே யென்று அறிந்திலைபோலும்.

(கு - ரை.) "காண்பாரார் கண்ணுதலார் காட்டாக்காலே" என்றபடி ஸ்ரீ சிவபெருமான் சற்குரு முகூர்த்தமாய்வந்து காட்டியருளலே அதன்மேற் காண்பர் பக்குவான் மாக்களென்பர் ஞானிகளார். இவ்வுண்மையினைச் சீவர்கள் பெத்தகாலத்து அறியவல்லாரல்லர் என்பதாம்.

ஊன்பொதிந்தகாய முளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லால்நீ சற்குருவைப்போற்றாமல்
கான்பரந்தவெள்ளங் கரைபுரளக்கண்டேகி
மீன்பரந்தாற்போலே விசாரமுற்றாய்நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! மாம்ஸாம்ஸமாகிய சரீரத்தினைக் கிளறும் சிறுபுழுக்கள் அடர்ந்த இக்கூட்டினை வாளாய்த் தாங்கிக் கிடந்தாய்; அன்றியும் சற்குருவை நீ துதிசெய்து போற்றுதலுமின்றிக் கானல்நீர் பெருக்கைக்கண்டு மீன்கள் அக்கானலை யதார்த்த தண்ணீராகக் கருதிச் சென்றோடி உண்மையுணர்ந்து ஏமாந்ததுபோன்று துயருற்றாய்.

(கு - ரை.) கிடைத்தற்கரிய இம்மானிடதேகங் கிடைத்தும், சத்தியஞான சற்குருமணியைப் போற்றாதும், திருவருளைப் பெறாதும் கானல் சலம்போன்ற இவ்வுடலை வீணாய்ச்சுமந்தமைக்கு இரங்கினாரென்க. கானற்சலம் - பேய்த்தேர்.

உடைக்கையொருக்கி யுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்று சார்ந்தங்கிறுமாந்தை
உடக்கைத்தகர்த்தே யுயிரையமன்கொள்கையிலே
யடக்கமாய்வைத்தபொரு ளங்குவரமாட்டாதே.

(பொ - ரை.) வாயுவாம் ஆணியினை முடுக்கி ஆத்மாவை நிலை பெறச் செய்துள்ள இவ்வுடலை லெட்சியமாய்க்கொண்டு மிகக்கொர் விதத்தோடும் அதிலே வாசஞ்செய்திருந்தாய்; பின்னர் இயமன் அவ் வாணியைக் கழட்டி பிராணனைக் கைப்பற்றிக் கொண்டுபோகும் போது நீ எவருமறியாது சேர்த்து மறைத்து வைத்துள்ள செல்வம் அந்த எமபுரிக்குக் கூடவரப்போகிறது நிச்சயமாகவில்லை யென் றறிவாய்.

தித்திக்குந்தேனைத் தெவிட்டாததெள்ளமுதை
முத்திக்குவித்தான முப்பாழைப்போற்றாமல்
பற்றிப்பிடித்தியமன் பாசத்தாற்கட்டும்வண்ணம்
சுற்றியிருக்கும்வினை சூழ்ந்தனையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! இனிமை பயக்குந்தேனை, உண்ணு தற்குச் சிறிதுந் தெவிட்டலின்றிய தெளிவுடைய அமிர்தத்தை மோட்ச ஏதுவாய மூவகைப்பாழாம் தன்மையினை வணங்குதல் செய் யாது, அக்காலன் நன்குபற்றி கயிற்றினாலே கட்டுமாறு நின்னைச் சூழ்ந்த வினைப்பகுதியிலே அழுந்திப்போய் விட்டாய்.

(கு - ரை.) தேசாதியந்தமும் சிவாநுபூதிச்செல்வர்கட் கினிக்கு மாதலை நோக்கியே ஈண்டு தேனென்றனர் அமுதை யென்றது தேவாமிர்த மொத்தவன் என்பது - முப்பாழாவது மூன்று முக்கிய தத்துவாதிகளையென்ப; அதன் அதிபதியையே போற்றாமையை பிசகென்றனர்; இருவினையினும் அழுந்தியுள்ளவரையில் பாசக் கயிற்றினுக்கு அகப்பட்டே தீர்தல்வேண்டு மென்பதாம்.

அஞ்செழுத்தாயெட்டெழுத்தா யைம்பத்தோரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய்நின்ற பெருமானைப்போற்றாமல்
வஞ்சகமாயுற்றமுலை மாதர்வலைக்குள்ளாகிப்
பஞ்சரித்துத்தேடிப் பாழுக்கிரைத்தோமே.

(பொ - ரை.) ஒப்பற்ற பஞ்சாக்கரமாயும், அஷ்டாட்சர மாயும், ஐம்பத்தோரட்சரமாயும், சக்தியின் பீஜாக்ஷரமாயும் வியாபக மாயுள்ள நம்கடவுளரைத் துதித்துய்யாது வஞ்சமாயுள்ள கொங்கை யைக்கொண்ட பெண்களின் மாயாமோக வலைப்பட்டு அவர்களுக்குக் கீழ்ப்படிதலாய் மன்றாடி நின்று வீணே காலங்கடத்திவிட்டோம்.

(கு - ரை.) அஞ்செழுத்து பஞ்சாக்கரம் சி. வ. ய. ந. ம. எட் டெழுத்தாவது - ஓம்; ஆம், அவ்வும் சிவாயநம என்பதாம். பிஞ் செழுத்து - சத்தியக்ஷரமாகிய வகரம். மற்றவை ஆசிரியர் மூலம் விசாரித்தறிதன் முறையாம்.

அக்கறுகுகொன்றைதும்பை யம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத் தொழுதுவணங்காமல்
மக்கள்பெண்டீர்சுற்றமுடன் வாழ்வைமிகநம்பியன்பாய்
எக்காலமுமுண்டென் றெண்ணினையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! உருத்திராக்ஷமாலையையும், கொன்றை யென்ன தும்பையென்ன இம்மலர்களையும், மதியையும் சூடியுள்ள சம்மான் சொக்கலிங்கேசர் இணையடிமுடிபட வணங்காது, புத்திர மித்திரகளத்திர சுற்றத்தார்களோடும் சேர்ந்துவாழ்வதையே மிக்க ஆசையோடும் சதமாயெண்ணிக் காலத்தைக்கழித்துவிட்டாயே!

ஆண்டகுருவி னருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாய வீட்டுவழிபாராமல்

பூண்டகுழன்மாதுநல்லார் பொய்மாய்கைக்குள்ளாகித்
தூண்டிலகப்பட்டுத் துடிகெண்டையானேனே.

(பொ - ரை.) அருளிறையாய் வந்தாண்டருளிய சற்குரு மூர்த்தியின் திருவடியையவணங்கித் தோத்திரித்து நமக்கினிய திருக் கயிலாய காக்ஷியினைக் கண்டானந்திக்காது, மலரணிகூந்தல் மாதரார் தம் பொய்மயக்கத்திற் குட்பட்டுத் தூண்டிலில் அகப்பட்டு விழிக் கும் கெண்டையொத்துத் துடிக்கலாயினேன்.

ஏணிப்பழுவா மிருளையறுத்தாளமுற்றும்
பேணித்தொழுங்கயிலை பேறுபெறமாட்டாமல்
காணவரும்பொருளாய்க் கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போ லாகினனேனெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! ஏணிப்படியையொத்த ஆணவாதி மலங்களையறவோட்டி சிவபெருமானுக்கு மீளாத அடிமையாதற்கு எண்ணங்கொண்டே வணக்கஞ்செய்யும் கயிலைப்பதவியைப்பெற வொட்டாமல் உயிரையும் பொருளையும் நிலைபெற்றதாகவே யெண் ணிக்கவலையுற்ற இச்சிறியவன் மரத்திற்கு ஆணிவேரற்றுப்போல் வாடி நிற்கலாயினேன்.

(கு - ரை.) இங்கு, ஆணவாதியமலங்களையே - இருளென்று கூறினர். பொருட்பற்றும் உயிர்ப்பற்றும் நிச்சயமாகக் கடைசியில் மனோவிசாரத்தை யுண்டாகச்செய்யும். இதையெவர்கள் உண்மை யாகக்கருதுவார்களோ அவர்கள் பிற்பட்டு மிக்கவாட்டத்தினை யனுப விப்பர். எப்படி? ஆணிவேரறுந்த விருக்ஷம்போல் முடியுமாக்கும். ஆதலால் ஆணியாகக்கொள்ளற்பாலது கயிலையாளியின் கழற்பற்றே யென்றறிக. இவ்வாறு செய்வதே விவேகிகளின் இலக்ஷணமா மென்பதையே இரக்கங்கொண்டு நம் பெருந்தகையடியார் நமக்காக இரங்கற்பா பாடினரென்பாம்.

கோத்துப்பிரகாசங் கொண்டுருகியண்டமெல்லாம்
காத்தபடியே கயிலாயஞ்சேராமல்
வேற்றுருவப்பட்டடியேன் வெள்ளம்போலுள்ளுருகி
ஏற்றுங்கழுவி லிருந்தபிணமானேனே.

(பொ - ரை.) சர்வான்மாக்களிடத்துங் கலந்தருளி மிக்ககருணையால் அவைகளைக் காத்தருளினவண்ணம் கயிலைசேராமல், மயக்கங்கொண்டு சிறிதும் இரக்கமில்லாது சலனபுத்தியால் கலக்கமுற்று கழுவேற்றித்தொங்கும் பிணத்திற்கொப்பாயினேன்.

(கு - ரை.) இங்கே, அகிலாண்டகோடி யான்மாக்களையே அண்டமெல்லாம் என்றனர். திருவருட்பிரகாசத்தினை பிரகாசமென்றனர். அஃதாவது, சர்வபிராணிகளிடத்தும் கருணைசெலுத்துவதையே கயிலைநெறியென்றறிக; தன்னருள் வெளிக்குளே யகிலாண்டகோடியெல்லாந், தங்கும்படிக் கிச்சைவைத்து, உயிர்க்குயிராய்த் தழைத்தருளியது அப்பரசிவமே யெனக்கண்டு, ஆகவே தன்னைப்போன்றே சர்வான்மாக்களும் எனும்பாவனைகொண்டு வன்னெஞ்சின்றி இரக்கமுற்று எவ்வுயிரும் அவ்வீசனென்றே பார்த்து இடையறு அன்புபூண்டொழுகலேன் என்றிரங்கலாயினரென்ப. "தன்னுயிர்தான் பரிந்தோம்புமாறுபோல், மன்னுயிர்வைகலும் ஓம்பி வாழுமின்" என்றார் திருத்தக்கதேவர்.

நிலைவிட்டுடலையுயிர் நீங்கியகலுமுன்னே
நிலைதொட்டவேடனெச்சிற் றின்னனைச்சேராமல்
வலைபட்டுழலுகின்ற மான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற் றட்டழிந்தாய்நெஞ்சமே.

(பொ - ரை.) நெஞ்சமே! ஆன்மா, வாசஞ்செய்யும் க்ஷேத்திரமாய இச்சரீரத்தைவிட்டு வெளியேறுவதற்கு முன்னேயே வில்

லுடைக் கண்ணப்பநாயனார் தம் எச்சில் பதார்த்தத்தைப் புசித்தபரம் பரனாரது அன்புக்காட்படாது கேவலம் வலையிலகப்பட்டு அலக்கணு றும் மானைப்போன்று வருந்தி நூல் நுனிகாணக்கூடாத நூற்பந்தாற் பயனில்லாமைபோன்றும் கலக்கமுற்றொழிந்தனே, யென்று தன் னெஞ்சைத்தான் கண்டிக்கின்றனர் என்க.

(கு - ரை.) வேடனென்று குறிப்பிட்டது - கண்ணப்பரை யென்க. அவனெச்சி லுண்டானை யென்பது, அந்நாயனார் தன் பரமார்த்திக பக்தியால் தான் ருசிபார்த்து கடவுள்முன்வை 'த்துண் ணும் சுவாமி' யென்று படைத்தலையே தின்றானை எனக்குறித்துப் பாடினரென்க. ஈண்டு அன்னார் பக்திக்கும் அன்பிற்கும் களித்த ருள் புரிந்தனரேயன்றி மற்றன்றெனக் கருதுப. இதனால் எம்மான் அன்பிற்கும் அளவு ஏற்பட்டதே!

முடிக்குமயிர்ப்பொல்லா முழுக்குரம்பைமின்னாரின்
இடைக்குநடைக்கு மிதங்கொண்டவார்த்தைசொல்லி
அடிக்கொண்டதில்லைவனத் தையனேநாயனையேன்
விடக்கையிழந்த மிருகமதுவானேனே.

(பொ - ரை.) என்னை ஆட்கொண்டருளிய தில்லைச்சிதம்பர தேவனே கேவலம் சுவானமொத்தேன், அற்ப புழுக்கூட்டங்கள் பொதிந்துள்ளதான குடிசலின் பெண்மக்களார் தம் கூந்தல் முடிப் பையும், இடை நடை நொடி முதலியவை குறித்தும் கனிமொழி புகன்று ஈற்றில் வாய்மாம்சத்தை யிழந்து ஏமாந்த பிராணியாய் விட்டேன்.

(கு - ரை.) "புழுநெளிந்து புண்ணழுகி யோசனைநாறுங் கழி முடைநாற்றத்த இவ்வுடலம்'' குமரகுருபரர். இடைகுலுக்கும் நடைபலுக்கும், ஆடவரின் இதயத்தே ஆசையை யெழுப்புவதாகும்.

பூவாணர்போற்றும் புகழ்மதுரைச்சொக்கரது
சீபாதம்போற்றிச் சிவலோகஞ்சேராமல்
தாவாரந்தோறுந் தலைபுகுந்தநாய்போல
ஆகாதநெஞ்சமே யலைந்துதிரிந்தாயே.

(பொ - ரை.) ஏ தீயமனமே! இம்மண்ணுலக மக்களார் போற்றித்தொழும் புகழ்வாய்ந்துள்ள மதுரைமாநகர மேவியருளும் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரரது திவ்ய திருவடிக் கமலங்களில் பக்திபுரிந்து பரகதியடையாது, மனைகளெங்குஞ் சென்றோடியாடிய சேவலம் சுவானம்போன்று திரிந்து துன்புற்றாய்.

(கு - ரை.) பூவாணர் - பூவுலகில்=வாழ்நர் - வாணர் என்றாயது எனைய, வெளிப்படை.

பத்தெட்டாயோரைந்தாய்ப் பதின்மூன்றையுங்கடந்த
ஒத்திட்டுநின்றதோ ரோவியத்தைப்போற்றாமல்
தெத்திட்டுநின்ற திரிகண்ணிக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சே விடவுமறியாயே.

(பொ - ரை.) மனமே! தத்துவ முப்பத்தாறையுங் கடந்து அதற்கப்பால் விளங்கும் பரசொரூபங் கண்டு தரிசியாது பார்க்கில் திளைத்த கண்ணோட்டத்தில் நின்று லோகானுபவ சுகத்திலே புத்தியென்னும் வித்தைப் பொதிந்து விட்டனை; போகட்டும், அதன்மேலேனும் நீங்கி வாழத் தெரிந்துகொள்வையோ! அது உனக்கு அசாத்தியமாம் என்றபடி.

(கு - ரை.) பரிபாஷையாக, பத்து, எட்டு, ஐந்து, பதின்மூன்று ஆக ஒன்றுசேர்க்க முப்பத்தியாறு தொகையாய்த் தத்துவங்கள் முப்பத்தாறையுங் குறித்தது; இம்முப்பத்தாறு தத்துவங்கட்கும் மேலே விளங்கும் சித்திரமொத்த செஞ்சுடரானது நிதர்சனமா

யுள்ளதால் அப்பரம்பொருளை, அசையாமை பற்றிச் சித்திரமென்று கூறலாயினர். சித்திரம் - ஓவியம்.

அஞ்சுடனே ழாகி யைமூன் றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்த விளக்கொளியைப்போற்றாமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற் பற்றிப்பிடியாமல்
நஞ்சுண்டகெண்டையைப்போல் நானலைந்துகெட்டேனே.

(பொ - ரை.) முப்பத்தாறு தத்துவாதிகளைத் தாண்டி அப்பாலுள்ள சுடருதயங்கண்டு தொழுதேத்தாதும், பஞ்சிட்ட தீயைப் போன்று துரிதமாய்ப் பற்றிக்கொள்ளுதலின்றியும், விஷமருந்திய மீனையொத்து யான் துன்புற்று வருந்தினன்.

(கு - ரை.) பஞ்சின்கண் தீ யெவ்வளவு விரைவாய்ப் பிடிக்குமோ அவ்வளவு தீவிரமாகச் சிவபரஞ்சுடரைப் பற்றிக் கவத்தலைக் குறிப்பித்துணர்த்துவா ராயினரென்க.

ஊனமுடனே யடையும்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்து மண்ணுலகில்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்க ளாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம் போய்ப்பிழைத்தோமில்லையே.

(பொ - ரை.) குற்றத்தினல் சீர்கெட்டழியும் கிருமிவாழ் வீடாம் சரீரத்தை மானமரியாதையோடும் பூமிமேல் மரித்துப்போகாது, பஞ்சபாண்டவாள் தம் நாட்டைத் துறந்து காடடைந்து வாழ்ந்ததுபோன்று நாமும் வனவாசஞ்செய்து தவமிழைத்து உய்ந்தோமில்லையே.

(கு - ரை.) காடடைந்து வாழ்தலாவது ஈண்டு, துறவாசிரமத்தைக் குறித்துக் கூறினரென்க. மானபிமானவாழ்க்கைப் பற்றுற்றவரையுமேயன்றிப் பற்றற்றகண்ணும் பயனுமோ? இல்லையென்றபடி.

ஊறையிறைக்கின்ற வுப்பிருந்தபாண்டத்தை
நாறுமல்நாறி நழுவும்புழுக்கூட்டை
விரும்புரத்தை விரும்புகின்றதெப்படியென்
றாருதநாட்டி லகன்றிருந்தேனில்லையே.

(பொ - ரை.) கசமாலங்களைக் கழிக்கும் உப்பூரும்பாத்திரமும், உயிரோடிருந்து நாறுகின்றதும், அநித்தியமாகிய கேவல புழுக்கூட்டையும், மமதாங்காரங்கொண்டுள்ள உடலையும் விரும்புவது எவ்வகையோ? இனியேனும் அவ்வாறின்றி எக்காலத்தினும் பொன்றுதவில்லாப் பலன்றரும் க்ஷேத்திரத்தை யடைந்தேனு மில்லையே. 'ஆருதநாட்டில்' என்றது - சிவலோகமாகும்.

அரியவரிதேடி யறியாவொருமுதலைப்
பரிவுடனேபோற்றும் பரஞ்சுடரைப்போற்றுமல்
கரியபெருவாழ்வைநம்பிக் காமத்தழுந்தியே
அரிவாயிற்பட்ட கரியதுபோலானேனே.

(பொ - ரை.) அரியபெரிய வைகுண்டநாதனுருந் தேடிக் காணப்பெறுத ஒப்பில்லா வொருதலைவனையும், அவ்வாசுதேவனே மிக்க அன்புடனே துதிசெய்யும் பரஞ்சோதிநாதனை வழிபடாது, வெகுவிரைவில் ஒழியக்கூடிய கேவலமாயவாழ்வை மெய்யென்று கொண்டு காமாந்தகாரத்தில் கவிழ்ந்துகிடந் தலறுவதான்றி, சிம்மவாய்சிக்குண்ட யானையையொத்தவனுயினேன் என்பதாம்.

தந்திரத்தையுன்னித் தவத்தைமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னி மயங்கித்தடுமாறி
விந்துருகிநாதமா மேலொளியைக்காணுமல்
அந்தரத்தேகோலெறிந்த அந்தகன்போலானேனே.

(பொ - ரை.) ஆகமாதிகளையோதுவதிற் சிறிதும் பலனின் றெனக்கண்டு தவஞ்செய்யாதொழிந்து வேதாத்தியயனத்தைக்கூறி மனமிக வயர்ந்து, விந்துநாதத்திற்கப்பாலோங்கும் வித்தகச்சுத்த சுய பரஞ்சோதியினைத் தரிசித்தலின்றி மேற்கண்ட ஆகாயவீதியின் கண் தனது ஊன்றுகோலெறிந்த குருட்டுமேனையொத்தவனானேன்.

(கு - ரை.) இங்கே, தந்திரமாவது ஆகமமாம்; மந்திரமே வேதமென்க; ஆகையால் ஆகமமுறையைவிட்டு வேதத்தையே கைக்கொள்பவர் துரிதமாக மெய்ஞ்ஞானம் பெறவியலாது தட்டுக் கெட்டுத்தடுமாறுவர் என்பது; எப்படியென்றால், வேதம் கடவுள் பலவென்றும் அதன்சார்பானமதங்களும் பலவென்றும் விளம்பிவரலான் ஆராய்வார் உள்ளமானது இலேசாக ஒருமையுறாது தவம் பலியாது என்பதாம். ஏன்? வேதத்திற்கு ஆகமசாதகமில்லாது வேதநுட்பம் உணரற்கரிதாகலானே அங்ஙனங் கூறியதேயன்றி வேதம் தாழ்ந்ததன்று; இன்னும் விரிப்பின் பெருகுமாதலால் நிறுத்தினேம்.

விலையாகிப்பாணனுக்கு வீறடிமைப்பட்டதுபின்
சிலையார்கைவேடனெச்சிற் றின்றானைப்போற்றாமல்
அலைவாய்த்துரும்பதுபோல் ஆணவத்தினாலமுழுங்கி
உலைவாய்மெழுகதுபோ லுருகினையேநெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! பூர்வம் பாணபத்திரனுக்குப் பெருமை வாய்ந்த ஆளாகியும், மற்றோர்சமயம் வில்லையுடைய கண்ணப்ப நாயனாரது எச்சிலையுண்டவனையும் வணக்கஞ்செய்யாது ஆணவாதியில் அழுந்திக்கிடந்து அலையில் அகப்பட்டுள்ள சிறுதுரும்பையொத்தும், உலையில்பட்ட மெழுகதுபோன்றும் வருந்தித்துன்புற்றனை. (பாணபத்திரரது வரலாற்றை திருவிளையாடலில் ஆராய்க.)

பூ ர ண ம ா லை.

மூலத்துதித்தெழுந்த முக்கோண சக்கரத்துள்
வாலைதனைப்போற்றுமல் மதிமறந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கும் வியாபித்துள்ள பரம்பொருளே! மூலாதார ஸ்தானத் தமர்ந்தருளிய திரிகோணவடிவ சக்கரத்துள் வாலாம்பிகையை ஊர்ஜிதஞ் செய்து வணங்கிக் கொள்ளாமல் மறந்துபோயினேன்.

(கு - ரை.) மூலம் - ஆதாரம் ஆறனுள் முதன்மையதாம். பூரணம் - எங்கும் நிறைந்துள்ள அகண்டாகாரப் பொருள் இப்பொருளானது, ஒவ்வொரு மனிதனின் ஆண்குறிஸ்தானத்துக்குக் கீழும் ஆசனவாய்க்கு மேலுமாயுள்ள உள்பிரதேசத்தில் நாலிதழ் மலர் நடுவில் முக்கோணசக்கரமும், அதன்மத்தியில் ஓங்காரமும், அவ்வோங்காரத்தின் மத்தியிலே விநாயகரும் வாலாம்பிகையும் பொருந்தியிருப்பது அறிக.

உந்திக்கமலத் துதித்துநின்ற பிர்மாவைச்
சந்தித்துக்காணுமற் றட்டழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கணும் வியாபியே! உந்திக்கமலத்திலே விளங்கியுள்ள சதுர்முகனை வணங்கிக்கொள்ளாது தவறிப்போயினன்.

(கு - ரை.) இது சுவாதிஷ்டானம்: மூலாதார ஸ்தானத்தின் இருவிரற்கடைக்கு மேலே நான்குமூலைச் சதுரமாயிருக்கும் வரம்பினுள் ஆறுஇதழ்க் கமலமலரும், அதன்நடுவாக - ந. என்னும் அக்ஷரமுமுள்ளது; அதின்கண் பிரமரும் வாணியும் வீற்றிருப்பர்கள்.

நாவிக்கமல நடுநெடுமால் காணாமல்
ஆவிகெட்டுயானு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) சர்வபரி பூரணம்ஸனே! நாபிக்கமலத்தின் நடுவிலுள்ள நீண்டதிருமாற் கடவுளைத் தரிசியாது யான் உயிர்துடிப்ப அறிவற்றுப் போயினேன்.

(கு - ரை.) இந்நாபிக்கமல ஸ்தானத்திற்கு மணிபூரகம் என்னும் பெயர். இதுவும் சுவாதிஷ்டானத்திற்கு எண்விரற் கடைக்கு மேல் வியாபித்துள்ளதாம்; வடிவோ முட்டையையொத்தது; இதனுள் தசவிதழ் புஷ்பத்துள் - ம - என்ற எழுத்து உள்ளது; அதின்கண் மகாவிட்டுணுவும் இலக்குமியும் பொருந்தியுள்ளார்.

உருத்திரனையிருதயத்தி லுண்மையுடன் பாராமல்
கருத்தழிந்துநானுங் கலங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) சர்வாண்டபுவன வடிவனே! எனது இதய கமலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள உருத்திர மூர்த்தியைத் தரிசியாது நான்மிக்க மனங் கலக்கத்தோடு துயருற்றேன்.

(கு - ரை.) இருதய கமலத்தையே அநாகத ஸ்தானமென்ப. இதுவும் மணிபூரகத்திற்கு பத்துவிரற் கடைக்குமேலே மூன்றுகோணங்களாக வுள்ளது; அங்கே பனிரண்டிதழுள்ள ஓர் புஷ்பமத்தியில் சி - என்ற அக்ஷரம் விளங்கி அதில் ருத்திரனும் பராபரியுமாய்த் துலங்கப்பெறுவர்.

விசுத்திமயேசுரனை விழிதிறந்து பாராமல்
பசித்துருகிநெஞ்சம் பதறினேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறைகின்றபொருளே! விசுத்திஸ்தானத்தின்கண் எழுந்தருளியிருக்கும் மகேசுரனைக் கண்ணாரக்கண்டு களியாது பசிநோய்கொண்டு மிகவும்மெலிவடைந்து மனம்நொந்தனன்.

(கு - ரை.) இவ்விசுத்தி அநாகதத்திற்கு மேலாக பத்துவிரற் கடையளவில் விளங்கும்; அதாவது கழுத்துஸ்தானமென்ப; உருவம் ஆறுகோணமாகும்; அந்தநிலையில் பதினாறு இதழ்விரிந்த புஷ்பத்தின் மத்தியிலே வ - என்ற எழுத்து துலங்கி அதில் மகேசுவரன் மகேஸ்வரியுமாய் விளங்குவர்.

நெற்றிவிழியுடைய நிர்மல சதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எல்லாமாய் நிலவியபொருளே! இதுவே ஆஞ்ஞாஸ்தானமாய நெற்றிநடுவில் நிர்மலவஸ்துவாய் சதாசிவமாய் விளங்குவதை அறிவால்காணப்பெறாது புத்திகெட்டுப்போயினேன்.

(கு - ரை.) ஆஞ்ஞையென்பது விசுத்திஸ்தானத்தின் பனிரண்டுவிரற்கடைமேல் இருகண்களுக்கு நடுவாய் புருவமத்தியாயுள்ள திலதஸ்தானமாகும். ஆங்கே மூவிதழ்புட்பத்தில் ய - என்ற எழுத்து வடிவத்திலே சதாசிவம் மனோன்மணி யிவர்கள் காணப்பெறுவர்கள்.

நாதவிந்துதன்னை நபமுடனே பாராமல்
போதமயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ - ரை) நாதம், விந்து இவ்விரண்டையும் அன்பொடும் தரிசியாமே புத்தியழிந்து பொறிகெட்டேன்.

(கு - ரை.) நாதம், விந்து இவைமுறையே சத்தியின் அம்ஸமாயும், சிவத்தின் அம்ஸமாயுமுள்ளன; ஆயின், சிவதத்வம் மற்ற தத்துவாதிகளை அதிட்டித்து நின்றும், நாதவிந்துக்களையும் தற்பவமாயும் நடத்துமென்பது நூல் துணிபாம்.

உச்சிவெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுடனனு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எல்லாமாயுள்ள வஸ்துவே! "துவாதசாந்த வெளி" யென்ற ஞானவெளியினை உறுதிப்பாடாகப் பார்த்தறிய வியலாமே பயந்து என் புத்தியை யிழந்தேன்.

(கு - ரை.) உச்சிவெளியாவது நாதம், விந்து என்னும் இரண்டினையுங் கடந்துள்ள ஞானகாயப் பரவெளியென்பர் மேலோர்.

மூக்குமுனையை விழித்திருந்து பாராமல்
ஆக்கைகெட்டுநானு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) என்றுமுள்ள விறைவனே! மூக்குநுனிச் சுடரைத் தூங்காதுபாராமல் சரீரங்கெட்டு யான் என்னறிவுகெட்டனன்.

இடபிங்கலையி னியல்பறிய மாட்டாமல்
தடையுடனேயானுந் தயங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) பார்க்குமிட மெங்குநிறை பரநாதபொருளே! சந்திர சூரிய கலைகளினது கணக்கறிந்து செலுத்தாமல் தடைபட்டு நானும் தயக்கமுற்றனன்.

ஊனுக்குணின்று உலாவினதைக் காணமல்
நானென்றிருந்து நலமழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) பார்க்குமிடமெங்கும் படர்ந்த பரம்பொருளே! தேவரீர் இச்சரீரத்தின்கண் வீற்றிருந்தருள்வதை யறியாது இவ்வுடலினையே யானென்றிருந்து யேமாந்து பெறுதற்குறியபேற்றைக் கெடுத்துக்கொண்டேன்.

(கு - ரை.) சரீரத்தையே ஆன்மாவாகக் கருதுவோர் மக்களாகார் என்றபடி.

மெய்வாழ்வைநம்பி விரும்பிமிக வாழாமல்
பொய்வாழ்வைநம்பிப் புலம்பினேன் பூரணமே.

(பொ - ரை.) யெங்கெங்குமாய இறையே! உண்மை வாழ்க்கையினை யறிந்து விருப்பத்தோடும் மதிப்புடனேயும் வாழாது நிலையற்ற வாழ்வை நம்பிக் கெட்டேன்.

(கு - ரை.) இங்கே மெய்வாழ்வாவது உற்பத்தியும் லயமுமில்லாது என்றுமுள்ள நிலையாம்வாழ்வு. இதுவே பெருவாழ்வென்பர். சின்னாளில் அழிவது பொய்வாழ்வு.

பெண்டுபிள்ளைதந்தைதாய் பிறவியுடன் சுற்றமிவை
உண்டென்றுநம்பி யுடலழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) பார்க்குமிடமெல்லாம் விளங்கும் பரம்பொருளே! பெண்ஜாதி பிள்ளைகளும் பிதாமாதாக்களும் சகோதராள் உறவின் முறையார் முதலிய யாவரையும் சாஸ்வதமென்று நம்பியிருந்து மரித்தேன்.

தண்டிகைப் பல்லாக்குடனே சகலசம்பத்துகளும்
உண்டென்றுநம்பி யுணர்வழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமுள்ள பரிபூரணப்பொருளே! தண்டிகையென்ன, பல்லக்கென்ன இவைகளுடனே மற்ற சம்பத்தெல்லாமும் பெற்று இவை எப்போது மிருக்குமென்று நம்பி என்னறிவைக் கெடுத்துவிட்டேன்.

இந்தவுடலுயிரை யெப்போதுந் தான்சதமாய்ப்
பந்தமுற்றுநானும் பதமழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) சர்வவியாபகப் பொருளே! இவ்வுடம்பையும உயிரையுமே பொருளென மதித்து அஞ்ஞானத்தி லாழ்ந்து யான் பெறவேண்டிய பேற்றினைப் பெறாதுவிட்டேன்.

மாதர்பிரபஞ்ச மயக்கத்திலே விழுந்து
போதமயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) பரிபூரண பரம்பொருளே! பெண்மக்களார்தம் பேதமையிற் சொக்கி உலக இச்சைப் பிசாசம் பற்றி நல்லறிவிழந்து உத்தம வத்துவை யறியாது பொறிமயங்கிப் போயினேன்.

சரியைகிரியாயோகந் தான்ஞானம் பாராமல்
பரிதிகண்டமதியதுபோல் பயனழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) பரிபூரணப் பொருளே! சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய இந்நான்குவித படிகளிலும் நாடியுழையாது ஆதித்தனைக்கண்ட அம்புலிபோலும் அப்பிரயோஜன னாயினேன்.

மண்பெண்பொன்னாசை மயக்கத்திலே விழுந்து
கண்கெட்டமாடதுபோற் கலங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கணும் வியாபியா மிறையவனே! மண் என்ன, பெண்ணென்ன, பொன்னென்ன இம்மூவகை ஆசையிலும் மயங்கியழுந்தி குருட்டு மிருகத்தையொத்துக் கண்கலக்க முற்றனன்.

(கு - ரை.) மேற்கூறியுள்ள மூவகையாசை யெந்தமட்டுமுள்ளனவோ அதுவரையிலும் ஞானக் கண்ணற்ற நன்மாடென்று ஞாலத்துயர்ந்தோர் நவிலுவர்.

தனிமுதலைப்பார்த்துத் தனித்திருந்து வாழாமல்
அநியாயமாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கு நிரந்தரமாயுள்ள யிறையவனே! ஒப்புவமையற்ற தனித்தலைமைப் பெரும்பதியைக் கண்டு ஏகபோகமாயிருந்து வாழ்தலன்றி வீணாய்ப்பிறந்து இங்கு வருந்தியுழன்றேன்.

ஈராறுதண்கலைக்கு ளிருந்துகூத் தாடினதை
ஆராய்ந்துபாராம லறிவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்குநிறை பூரணப்புத்தமுதே! பனிரெண்டா மிடமாய துவாதசாந்த ஸ்தானத்தில் (அதாவது பரவெளியிலே) ஆனந்த நடனத்தைப் பாராமல் அறிவிழந்து போயினேன் என்றபடி.

(கு-ரை.) சிவராஜயோக சாதனையால் சமாதி நிட்டைகூடி துவாதசாந்த பரவெளியிலே ஒப்பற்ற பரஞ்சோதியைப் பாராது வந்தமையின் 'மதிகெட்டனன்' என்றார்.

வாசிதனைப்பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(பொ-ரை.) அகண்டாகார வியாபகப் பொருளே! வாசியினைக்கொண்டு சாதனைபுரிந்து மனங்குளிரத் துதிசெய்யாமல் காசி நகரம் வரையிலும் போய் (அதாவது வெகுவாக வலைந்து திரிந்து) கால் ஓயப்பெற்றது. வாசி - பிராணவாயு.

கருவிகடொண்ணூற்றாறிற் கலந்துவிளை யாடினதை
இருவிழியாற்பாராம லீடழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) சர்வ பரிபூரணப்பொருளே! தொண்ணூற்று ஆறுவகை தத்துவாதிகளிலுங் கலந்துநின்றும் பேரானந்த முற்றருளியதை என்னிருகண்களாலும் தரிசியாது யான் வீணே கெட்டனன்.

(கு-ரை.) தத்தம் கன்மானுசாரமாக ஒவ்வொருவருடைய தத்துவங்களை நடத்துவிப்பவன் எம்பெருமானே யென்னும் உண்மையைத் தெரியாவண்ணம் கெட்டேனென்பார் 'ஈடழிந்தேன்' என்றனர் என்க.

உடலுக்குள்நீநின் றுலாவினதைக் காணுமல்
கடமலைதோறுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! சரீரத்துள் தேவரீர் சஞ்சரித்து சேடித்ததை யுணராது மலையென்ன காடுகளென்ன எங்குமலைந்து கால்கள் ஓய்ந்தன.

(கு - ரை.) என்சரீரத்தில் வியாபித்துக் கொண்டிருப்பதை யானறியலாற்ருது யெங்கெங்கோ வெல்லாம்போ யலுப்படைந்து கால்கள் ஓய்வுற்றன. அங்கங்கும் அவர் அகத்திருந்து ஆடல்புரிவதை அறியுந்திற மற்றவரே மலைகாடுகட்குச் செல்லுவர் என்றபடி.

எத்தேசகாலமுநா மிறவாதிருப்ப மென்று
உற்றுனைத்தான்பாராம லுருவழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) அகண்டாகார சச்சிதானந்த பொருளே! எந்த சமயத்தும், எந்தகாலத்தும் நாம் இறவோமென்று கருதி எம்மானை ஊன்றி ஆராய்ந்தறியாது என்னில் யான் கெட்டவனுயினேன்.

(கு - ரை.) நீர்மேற்குமிழியா யிக்காலத்தை நிச்சயமாயறிந்து அதனுல் என்னுள் விளங்கிய நின்னை ஊன்றி ஆராயாது சாலநாள் போக்கிச் சலிப்புற்றேன். இப்பாசுரங்களால் தன்னுள்ளிருக்கும் தலைவனைப் பார்த்தலே தகுதியென்பது தோன்ற நின்றது.

எத்தனை தாய்தந்தை யிவர்களிடத் தேயிருந்து
பித்தனுயானும் பிறந்திறந்தேன் பூரணமே.

(பொ - ரை.) ஒரேநிறைவா யெங்குமுள்ள பொருளே! எவ்வளவோ பிதாமாதாக்களது கருக்கூட்டினில் கிடந்து அறிவிழந்து தீயவனுய்ப் பிறந்திறந்து வந்தனன்.

(கு - ரை.) கீழ்க்கடையான ஜென்மங்களி நின்றும் மானிடப் பிறவியெடுத்த அம்முதற் பிறவியிலேயே சகல சாஸ்திர விசாரணை களும் புரிந்து ஆசிரியரால் அறியவேண்டியனவு மறிந்துய்யாத காரணத்தால் பற்பல தாய்மார்களிடம் கருவுயிர்த்துத் துன்ப மெய்தலாயினேன் என்பார், 'யானும்பித்தனாயினேன்' என்றார்.

பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன் யானுமுன்றன்
பொற்றுணைத்தாள்தந்து புகலருள்வாய் பூரணமே.

(பொ - ரை.) அகண்ட வஸ்துவே! அநேகதாய்மார்கள் என்னைப் பெற்றுவளர்த்து அலுத்து விட்டனர்கள்; அவ்வப்போது யானும் அவர்கள்பால் பிறந்து பிறந்து துன்புற்றேன்; இதுபோதும்! இனியேனும் தேவரீர் பொன்னடிதரிசனந் தந்து இரக்ஷிப்பாய்.

(கு - ரை.) பெற்றுவளர்த்த தாயர்க்கும் பிறந்துவந்த அடியேற்கும் கணித்தலியலாமையால் அலுப்புற்றோம் என்றனர் இனியேனுந் தடுத்தாள்வான் வேண்டுமென்பார் 'புகலருள்வா' யென்றனர்.

உற்றாரழுதலுத்தார் உறவின்முறையார் சுட்டலுத்தார்
பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணமா யெங்கும் பொருந்திய பொருளே! அழுதலுத்துப்போயினர் சுற்றத்தார்கள்; பந்துக்கள் சுட்டு சுட்டலுத்தனர்கள்; அன்னையர் என்னைப் பெற்று அலுத் தொழிந்தனர்கள்; அடியேனும் பிறந்து பிறந்து அலுப்பெய்தினேன்.

(கு - ரை.) பெற்றார், உற்றார், சுட்டார், மனைவியர், மக்களார், யான் ஆகிய அனைவரும் அலுப்படைந்தோம்; இனியேனுந் தயவு கூர்ந்து கருணைக்கண் திறந்துபார்த்து மேற்கூறிய அனைவர்க்கும்

அலுப்பொழித்தல் வேண்டுமென்பார், 'அலுத்தேன்' என்றுவேண்டித் தெரிவிக்கலாயினர் என்க.

பிரமன்படைத்தலுத்தான் பிறந்திறந்து நானலுத்தேன்
உரமுடையவக்கினிதான் உண்டலுத்தான் பூரணமே.

(பொ - ரை.) சர்வ பரிபூரணப்பொருளே! சதுர்முகன் உற்பவித்தலுத்து விட்டான்; யான்பிறந்து மிறந்து மலுத்தொழிந்தேன்; அச்கினிபகவானும் பலதடவைகளில் என்னைப் புசித்துப் புசித்து அலுத்தனன்; ஆதலின் இனிப்பிறவாமைக்கு அநுக்கிரகம் செய்தல் வேண்டும்.

(கு - ரை.) பிறந்து பிறந்து இறந்திறந்தும், பிரமன் படைக்கவும், அக்னிதேவன் தகிக்கவும் செய்தமைபற்றி அவர்கள் அலுப்பெய்த அதுகண்டயானும் அலுப்புற்றே னென்றனர்.

எண்பத்துநான்குநூ றாயிரஞ்செனனமுஞ் செனித்துப்
புண்பட்டுநானும் புலம்பினேன் பூரணமே.

(பொ - ரை.) ஆரணம் போற்றும் பூரணப் பொருளே யானோ? எண்பத்துநான்கு நூராயிரம் செனனங்களெடுத்தெடுத்து வருந்தி துக்கித்தேன்.

(கு - ரை.) வினைக்கீடாகப் பல செனனங்களிலேயும் கடமைப்பட்டு அநுபவிக்க வேண்டியதாதலால் நூராயிரம் செனனமென்முர் போலும்.

என்னையறியாம லெனக்குள்ளே நீயிருக்க
உன்னையறியாம லுடலிழந்தேன் பூரணமே.

(பொ - ரை.) காரணங்கடந்த பூரணப்பொருளே! எனக்கே! விளங்காது என்னில் தேவரீர் அத்துவிதமாய்க் கலந்திருப்ப, யான்

தம்மை யறியலாற்ருது மரணமெய்தினேன். பேதபாவனையின்றிக் கலத்தலே அத்துவிதமாம்.

(கு - ரை.) எம்பெருமான் சர்வான்மாக்களிடத்தும் பேதமின்றிக் கலந்துள்ளதை அறியாமை அறியாமையேயாம்; ஆகவே, அவ்வாறு கலந்துள்ள தன்மையையறிந்து அவ்வஸ்துவோடும் பிரிவின்றி ஒற்றித்து நிற்பதே அத்துவிதமாயிற்று; ஞானம் லபிப்பது அப்போதேயாம். உபமானமாக,

பிரமகீதை:—சாந்தோக்கியம் ஏழாவது:—

விதம்படு முளந்தொறும் விசேடவறி வாயுற்
றிதம்படுத லாவிதய மென்பரிறை தன்னைத்
திதம்பட விவன்றிற மறிந்தவர்கள் சேரும்
பதம்பிரம மல்லது பசர்ந்திடுத லுண்டோ? என்றபடி.

கருவாயுருவாய்க் கலந்துலகெலா நீயாய்
அருவாகிநின்ற தறிகிலேன் பூரணமே.

(பொ - ரை.) சகலமுந்தானேயாய தற்பர பூரணப்பொருளே! கருவேயாயும், உருவேயாயும், அவைகளோடுங் கலப்புற்று உலகடங்கலுந் தாமேயாகி அருவமாயுள்ள உண்மைப்பொருள் தெரியாது போனேன்.

(கு - ரை.) கருவாய் கர்ப்பத்திருந்தபோதும், உருவாய் உடம்பெடுத்து வந்திருந்த சமயத்திலும் நீக்கமில்லாதெங்கும் நிறைந்துள்ள தம்மையறியாது போனது அறியாமையே என்றபடி.

செம்பொற்கமலத் திருவடியைப் போற்ருமல்
பம்பைகொட்டவாடும் பசாசானேன் பூரணமே.

(பொ - ரை.) சர்வவிடங்களிலும் ஒளிரும் பூரணப்பொருளே! சிவந்த பசும்பொற்றாளிணையை வழிபாடு செய்யாமே, கேவலம் உடுக்கைக்குத் தலைசுற்றியாடாநின்ற பேயை யொத்தேன்.

(கு - ரை.) சர்வேசுரனது அடிமலரிணைத் தரிசியாவிடத்து அவர் எத்திறத்தரேனும் பேயாய்ப்பிறந்து கெடுவார் என்பார் 'பிசாசானேன்' என்றனர். "நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகாவருள் பெற்றே" னென்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும்.

எனக்குள்ளேநீயிருக்க வுனக்குள்ளே நானிருக்க
மனக்கவலைதீர வரமருள்வாய் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! என்பால் எம்மான் எழுந்தருளியிருக்க, தம்பால் யானும் தங்கிநிற்க, (இவ்வாறு பரஸ்பரம் ஒற்றுமையா யிருக்கிறபோது) தேவரீர் என் மனத்துயர்நீக்க தம்மனத் தெண்ணாதிருப்பது நியாயமோ? ஆதலின் ஓர்வரந்தரல் வேண்டும்.

(கு - ரை.) ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றுபட்டு அத்துவிதமான காலத்தும் மலமாயையின் திட்பத்தினாலே அவ்வுளவு தெரியவில்லையாதலால் இனியேனும் அவ்வுண்மையினைத் தெரிந்திடுமாறு அநுக்கிரகிக்க வேண்டுமென்பார் 'வரமருள்வாய்' எனலாயினர்.

எழுவகைத்தோற்றத் திருந்துவிளை யாடினதைப்
பழுதறவேபாராமற் பயனழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! எழுவகையான பிறப்பினுளெல்லாம் செறிந்து திருக்கூத்தாடிய வைபவத்தினை ஐயமறத் தரிசியாது எனக்கான ஆத்மலாபத்தை யிழந்துவிட்டேனே.

(கு - ரை.) எழுவகைப் பிறவிகளாய தேவர், மனிதர், விலங்கு பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னு மிவைகளிலேயும் தேவரீர் தொடர்ந்து என்னைக்காத்துவர, அவற்றை யானறிந்து வணங்காதிருந்த படியாலேயே மீண்டும் ஜனனத்துக்குக் காரணமா கிற தென்பார் 'பயனழிந்தேன்' எனலானர்.

சாதிபேதங்கள் தனையறிய மாட்டாமல்
வாதனையாநின்று மயங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! சாதியின் வரன்முறை யறியாது, அதனல்வரும் கஷ்டநஷ்டங்களால் துன் புற்று மிக்கவருந்திக் கிடந்தனன்.

(கு - ரை.) இதனல், பலஜாதிபேதங்கள் பலனற்ற கொள்கை யென்றார். (ஆனலது அத்தகையார்க்கே யன்றி மற்றவர்க்சாகா) அவர் கூறியது அவர்க்குச்சரியே என்? ஞானியாராகலின். ஈண்டு (படித்தா மறிதல்வேண்டும்) மற்றும் பலகலை வல்லோர் காட்டிய உபமானங்களும் அப்படியார்க்கேயாம்.

குலமொன்ருய்நீபடைத்த குறியையறியாமல் யான்
மலபாண்டத்துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! தேவரீர் உலகடங்கலுக்கும் குலமொன்ருய்ச் சமைத்துள்ள தன்மையையே யறியலாற்ருது யான் மலஜலபாத்திரமாய இம்மனுவுடலால் மயக் குற்றுப் போயினேன்.

(கு - ரை.) மானிட வகுப்பிற்ருேன்றி ஒருபடித்தாயிருப்பி னும் இடையே மதிவல்லாரால் காலதேச வர்த்தமானங்களிற்கிசைய கற்பித்தவோர் வரன்முறையைக் கொண்டொழுகித் துன்புற்றமை யால் 'மயங்கிநின்றேன்' என்றனர்.

அண்டபிண்டமெல்லா மணுவுக் கணுவாகநீ
கொண்டவடிவின் குறிப்பறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! தேவரீர் அண்டபகிரண்டங்க ளெங்கும் அணுவினுள் அணுவாய் வியாபித்து ஒன்றுபட்டுள்ள பிரமாண்ட சொரூபத்தினது குறியறியாது போயினேன்.

(கு - ரை.) அண்டமென்ன பிண்டமென்ன இவைகளின் உற்பத்திக்கு பரமாணு சூக்கும ஏதுவாயமர்ந்து காரியாதிகள் நிகழ்விக்கும் வடிவத்தினை சரியாய் ஆய்ந்துணராத் தன்மையினர் 'குறிப்பறியேன்' எனலானூர்.

சகத்திரத்தின்மேலிருக்குஞ் சற்குருவைப் போற்றுமல்
அகத்தினுடையாணவத்தா லறிவழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கு மிலங்கும் பூரணப்பொருளே! ஆயிரமிதழுடைத் தாமரைமலர்போன்ற இருதய கமலத்தின்மீது விளங்கும் சற்குருமூர்த்தியினைத் தரிசித்து வணங்கப்பெறாது, அதன் பக்கலில் நிற்கும் அகங்காரத்தின் வசப்பட்டு அறிவுகெட்டுப் போயினேன்.

(கு - ரை.) இதயதாமரை மலரிலே சிவகுருநாதன் விளக்கமுற்றிருந்தும், ஆங்குள்ள ஆணவமல வசமுற்று ஐயனை யறியாது போயினமையால் 'அறிவழிந்தனன்' என்றூர். "இவ்வுண்மையையே தாயுமானூரும் சித்தமிசை குடிகொண்ட அறிவானதெய்வமே" என்று தம் தோத்திர வாயிலாய்க் குறித் துணர்த்தினர் போலும்.

ஐந்துபொறியை யடக்கியுனைப் போற்றுமல்
நைந்துருகிநெஞ்ச நடுங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கு மிலங்கும் பூரணப்பொருளே! என்சரீரத்திலுள்ள பஞ்ச இந்திரியங்களை ஒருவாறு யடங்கும்படி சாதனை செய்து, அதன்மேல் எம்பெருமானைத் தொழுதேத்தாது மனமிக விளகி நடுக்க மடைந்தனன்.

(கு - ரை.) ஐம்புலாதிகளை யொடுக்கிச் சித்த மொருமித்து அத்தன் அடியிணைக் கன்புசெய்தார்க்கே பத்தியு ஞானமும் பலித்துப் பரம்பரனைக் காணத்தகுமென்றார் மேலோர். "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்புளார் கோமான், இந்திரனே சாலுங்கரி" யென்றார் திருவள்ளுவனாரும்.

என்னைத்திருக்கூத்தா லிப்படிநீ யாட்டுவித்தாய்
உன்னையறியா துடலழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப் பொருளே! கன்மத்திற்கு ஏற்றவாறாக என்னை முந்தை வினைப்பயன் கொண்டு திருவருட்சத்தியின் கருத்தினுக்கேற்ப மாயாவலிமை கொண்டாடும்படி செய்தனை. ஆனாலும் யான்விழித்துக் கொள்ளாது ஏமாந்து மரித்தனன்.

(கு - ரை.) அடிமையைக் கன்ம பரிபாகத்திற் கேற்றவாறாக நடத்துவிப்பவன் நீயாயிருந்தும் யான் அதுவிஷயத்தினை அடியோடு மறந்துபோயினே னென்பார் 'உடலழிந்தேன்' என்றனர். (சிவபெருமான் முன்னிலை)

நரம்புதசைதோலெலும்பு நாற்றத்திற் குள்ளிருந்து
வரம்பறியமாட்டாமல் மயங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங் கும் பரிபூரணமே! நரம்பு, மாம்சம் எலும்பு, தோல், இவைகளின் தீய நாற்றத்திற் கட்டுண்டு அருள் வரம்பறியாது கலங்கலாயினேன்.

(கு - ரை.) சரீரத்திற் கண்கெட்டுக் கிடந்து விட்டேனே தவிர எம்மான்றன் சர்வவியாபக வன்மையினை யறியலாற்றாது போயினேன் என்பார் 'மயங்கினேன்' என்றனர்.

சிலந்தியிடை நூல்போற் சிவசெந்துக் குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல் நலமழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! சிலந்திப் பூச்சியினுள்ளே நூல்வஸ்து வெளிவருவதுபோன்று ஆன்மாக்களிடமிருந்து தேவரீர் வாசஞ்செய்வதான தத்துவத்தை ஆழ்ந்தறிதலின்றி ஆன்மலாபமிழந்து போயினேன்.

(கு - ரை.) சிலந்தி தன் வாய்நுரையினால் நூல்நூற்கின்றது; தேவரீர் மாயாபரமாயிருந்துகொண்டு உலகமாகிய காரியப்படுத்தும் தேவரீரை ஆராய்ந்துணராது விழல்போலானே னென்பார் 'நலமிழந்தே' னென்றனர்.

குருவாய்ப்பரமாகிக் குடிலைசத்தி நாதவிந்தாய்
அருவாயுருவான தறிகிலேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! சற்குருவாயும், சிவபெருமானாயும், ஓங்காரமாயும், சத்தியாயும், நாதமாயும், விந்துவாயும், அரூபமாயும் ரூபமாயும் வியாபித்துள்ள நின் அனந்த சத்தியின் வன்மையைத் தெரிந்தேனில்லை.

(கு - ரை.) சிவபெருமான் சர்வான்மகோடிகளையும் தடுத்தாட் கொள்ளும்வண்ணம் சற்குருமணியாய் வருதலின் குருவாயென்றும், ஒப்புயர்வற்ற தனித்தலைமைபொருளாகலான் பரமாகியெனவும், மகாமாயையினையும், நாதவிந்துவையும் காரியப்படுத்தும் பலனாகலான் குடிலைநாதவிந்தாகி யெனவும், சத்தியைத்திருவுருக் கொண்டுவிளங்கலான் சத்தியெனவும், சொரூபத்தில் நிஷ்களமாகி

யும், தடத்தத்திலே சகளமாயும் விளங்கலான் அருவாயுருவாயெனவுங் கூறலாயினரென்க.

ஒளியாய்க்கதிர்மதியா யுள்ளிருளா யக்கினியாய்
வெளியாகிநின்ற வியனறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! பரஞ்சோதிமயமாய், சந்திரசூரியனாய், ஆணவமாயவிருளாகி, தீயாய், வெளியாய்நின்ற நின் தத்துவமறிந்திலன்.

(கு - ரை.) ஒளி கதிர், மதி, மலம், தீ ஆகிய இவையனைத்தும் சிவபரஞ்சுடரையல்லாது காரியமாகாமையாலும், தான் சிதாகாச வெளியாய் விளங்குபவனாதலாலும் 'வியனறியேன்' என்றனர் போலும்.

இடையாகிப்பிங்கலையா யெழுந்த சுழிமுனையாய்
உடலுயிராய்நீயிருந்த வுளவறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே இடைகலையாயும், பிங்கலையாயும், யேலோங்கிய நெற்றி நடுவிழிஸ்தானத்தொளிர்சுடராய், சரீரத்தின்கண் பிராணனாய் வீற்றிருந்தருளும் நின் பேரருள் சூக்ஷியினைத்தெரியாமற் போயினேன்.

(கு - ரை.) இச்சரீரத்தினிடமாக பிராணவாயுவானது காரியாதி நிகழ்ச்சியிலிருப்பதும், உடற்குளுயிராய் விளங்கலும் அப்பரசிவத்தின் தூண்டலானமையான் அவ்வுண்மையை யறியமாட்டாது 'நான்தான் பாதவித்தேன்' என்றார்.

மூலவித்தாய் நின்று முளைத்துடல் தோறுமிருந்து
காலனெனவழிக்குங் கணக்கறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! எவைகட்கும் மூலகாரணமாய்த் தோன்றிநின்று சகலசரீரத்தும் பிராணனுய் விளங்கிப் பின்னர் நமனையொத்து நீயே நாசஞ்செய்வதையு மறிந்திலன்.

(கு - ரை.) சர்வான்மகோடிகளின் நன்மைக்கென்றே படைத்தல் காத்தல் அழித்தலாகிய காரியநிகழ்வுநடப்பது தேவரீர்தம் திருவிளையாடலென்பதைத் தேரேனென்றே 'கணக்கறியேன்' எனக் கூறினராக.

உள்ளும்புறம்புமா யுடலுக்குள் நீயிருந்த
தெள்ளளவுநானறியா திருந்தேனே பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! என் சரீரத்தின் அகம்புற மென்னுமிரண்டிடத்தும் தேவரீர் பொருந்தியிருந்து வருவதை இதுகாறும் யான் உணரகில்லேன்.

(கு - ரை.) செல்வச்செருக்காலும் இரத்தமுறுக்காலும் நினைவிலுங்கனவிலுங்கூட தாமொருவ ரிருப்பதாகத்தெரியாது கிடந்தமையுணர்ந்தாராகலான் "எள்ளளவும் அறியேன்" என்றனர்.

தாயாகித்தந்தையாய்த் தமர்கிளைஞர் சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! எனக்குத் தாயுந்தந்தையுமாய், தாரமும் பந்து உறவின்முறையும் நீயேயாயும் அத்துவிதமுறையாய் விளங்கலை யானறிந்திலேன்.

(கு - ரை.) "அப்பனீ யம்மைநீ யையனுநீ யன்புடைய
மாமனு மாமியுநீ,
யொப்புடையமாதரு மொண்பொருளுநீ யொரு
குலமுஞ் சுற்றமு மோரூருநீ" என்றனர்.

விலங்குபுள்ளூர்வனவசரம் விண்ணவர் நீர்ச்சாதிமனுக்
குலங்களெழுவகையில்நின்ற குறிப்பறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! மிருக மென்ன, பக்ஷிஜாதிகளென்ன, ஊர்ந்துசெல்வன, நீரில்வாழ்வன, தாவராதிகளென்ன மனிதர், தேவர் ஆகிய எழுவித பிறவிகளிலும் எம்மான் பொருந்தி வாழ்விக்கும் பொறுப்பின் தன்மையை யான் கருத்தாயறிந்திலேன்.

(கு - ரை.) "யானெனதென்னு மிருசெருக்காலாருயிர்கள்
யோனிபேதத் துழலுமுற்று. (1)

புற்றுறுகீடங்கள் புள்விலங்குமானிடர்கள்
சொற்றேவ ரேழ்வகைத்தோற்றம். (2)

அண்டசஞ்சுவேதசமுற் பீசஞ்சராயுசங்கள்
மண்டியநால்யோனி வகுப்பு."—என்றுமிவ்
வாக்கியங்களான் உணர்க. வள்ளலார்.

ஆணுகிப்பெண்ணு யலியாகி வேற்றுருவாய்
மாணுகிநின்ற வகையறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! ஆண், பெண், அலி, மற்றும் பல்வேறு வகையாகவும் பிறந்துபெரும் தகைமைபெற்ற நின்போாற்றலைத் தெரியகில்லேன்.

(கு - ரை.) கன்மத்திற் கேற்றபடியாக ஆன்மாவானது ஓர்சமயம் ஆண்பிறவியாயும், மற்றோர்சமயம் பெண்பிறவியாயும், இன்னு மோர் சமயம் அலிப்பிறவியாயும் பிறப்பன முறையாயினும், அப்பன் இவைகளோடும் உடனிகழ்ச்சியாயே நின்றுவருவ னென்பது தோன்றுமையானே 'வகையறியேன்' என்றனர் என்றறிக.

வாலையாய்ப்பக்குவமாய் வளர்ந்துகிழந் தானாகும்
பாலையாய்நின்ற பயனறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கு மிலங்கும் பூரணப்பொருளே! பாலைப் பருவம்பெற்றும், யௌவனப்பருவமுற்றும், மற்றும் வயோதிகப்பருவம்வாய்ந்தும் சத்தியாயும் வந்தபயனை அறிந்திலன்.

(கு - ரை.) ஆன்மாக்களுக்கு மரணகாலம் ஒருபடித்தா யில்லாமைக்கு அவ்வவ்வான்மாக்கள் முன்வினையினைக் குறித்த பிராரத்துவத்தை யனுசரித்து அதனுள்ளே சரீரத்திற்கு பாலை, வாலை, யௌவனம் மூப்புஎன்னு மிப்பருவம் வந்துதான் தீரும் ஆகவே ஏது இல்லையாயிற்று என்க. "வினைப்போகமே யொரு தேகங்கண்டாய் வினைதானொழிந்தால், தினைப்போதளவு நில்லாதுதேக" மென்றார் தாயுமானார்.

பொய்யாய்ப் புவியாய்ப் புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கு மிலங்கும் பூரணப்பொருளே! பொய்யேயாயும், பூமண்டலமாயும், போற்றற்குரிய சமுத்திரமாயும், மற்றும் சத்தியமாயும் விளங்காநின்ற நின்பெருமை யறியமாட்டேன்.

(கு - ரை.) நின்னியல்பானது, பார்க்குமிடத்து பொய்ப்பொருளா யோர்சமயமும், மெய்ப்பொருளா யோர்சமயமும், மற்றும் அகண்டமாக (அதாவது கடலாயும் பூமியாயும் மலையாயும்) இப்படி பல வேறுவகையும் காணப்படும் நிலையை இவ்வாறென் றறியப் படாததால் 'வியனறியேன்' என்றார்போலும். உபமானமாக,

தேன்முகம் பிலிற்றும்பைந்தாட் செய்யபங்கயத்தின்மேவும்
நான்முகத் தேவேநின்னால் நாட்டிய வகிலமாயைக்

கான்முயற் கொம்பேயென்கோ கானலம் புனலேயென்கோ
வான்முக முளரியென்கோ மற்றென்கோ விளம்பல்வேண்டும்.
என்றார் தாயுமானார்.

பூவாய்மணமாகிப் பொன்னாகி மாற்றாகி
நாவாய்ச்சொல்லான நயமறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப் பொருளே! மலராயும் மணமாயும், செம்பொன்னாயும், அதன் வர்ணமாயும், நாவாயும். அதனாற்பேசப்படும் வார்த்தையாயும் யிருக்கும் சீரினையறியமாட்டேன்.

(கு - ரை.) பூவின்கண் நறுமணமும், பொன்னின்கண் நிறகுணமும், நாவின்கண் வார்த்தையும் குணகுணிபாவமாய்ச் சத்திசிவம் போல விளங்கும் உண்மையைத் தேர்ந்திலே னென்பவர் 'நயமறியேன்' என்றும் கூறலாயினர் எனவறிக.

முதலாய்நடுவாகி முப்பொருளாய் மூன்றுலகாய்
இதமாகிநின்ற வியலறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப் பொருளே! ஆதியாயும், மத்தியாயும், மூவகைப்பொருளாயும், மூன்றுலகாயும், மற்றும் நலமாக நின்ற அப்பரம்பொருளை யான் தெரியாது போயினேன்.

(கு - ரை.) ஆதிநடுவந்த மிலானாயிருந்தும் காரிய நிகழ்வில் ஆதியந்த முடையான்போன்று திரிமூர்த்திகளை யதிட்டித்து ஐந்தொழிலியற்றி முப்புவனமும் நடத்தும் பெருந்தலைமை வகித்துள்ள பேரருளாளனது இயல்பைத் தெரிகிலே னென்பதற்கே 'இயலறியேன்' என்றார்போலும்.

ஊனாயுடலுயிரா யுண்ணிறைந்த கண்ணொளியாய்த்
தேனாய்ருசியான திறமறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! தசையாயும், அதுசேர்ந்த சரீரமாயும், அச்சரீரத்துள் உயிராயும், அவ்வுயிர்க்குள் உள்ளொளியாயும், தேனும் அதன் சுவையாயும் நீ நிலைத்துள்ள வன்மையினைக் கண்டறியேன்.

(கு - ரை.) ஜீவான்மாவோடும் நீ பரமான்மாவாய்ச் சேர்ந்து தூண்டிவருதலாலேயே உடல் நிலைபெற்றுள்ள தாகலின் அவ்வுண்மை நிலையினை யானறிந்திலனென்பவர் "திறமறியேன்" என்றார் போலும்.

வித்தாய்மரமாய் விளைந்தகனியாய்ப் பூவாய்
சித்தாகிநின்ற திறமறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! விதையாயும், விருட்சமாயும், நறுங்கனியாயும், புஷ்பமாயும், அறிவாயும் நின்றருளிய நின் உண்மையினைத் தெரிந்திலன்.

(கு - ரை.) விருக்ஷவர்க்கங்களிலுள்ள சகலபலா பலன்களாய் விளங்குவிக்கின்ற நின்மகா பிரதாபகரமான சித்தின் தன்மையினை யறியாதார் 'திறமறியேன்' என்றார்.

வித்தாகி முளையாகி விளைவதாகி
விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி யின்பமாகிச்
சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்கமாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்ததேவே. என்றார்
அருட்பிரகாச வள்ளலாரும்.

ஐவகையும்பெற்றுலக வண்டபகி ரண்டமெல்லாந்
தெய்வமெனநின்ற திறமறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! பஞ்ச பூதங்களால் ஆய உடலைப்பெற்றும், அவ் வைம்பூதபௌதிக காரிய மாய்த்துலங்கும் அண்டபுவனங்க ளெல்லாவற்றிற்கும் ஆதார பூத மாய காரணகடவுள் தாமே என்கின்ற உண்மையினை நான் அறிந் திலன்.

(கு - ரை.) ஆன்மாக்களுக்கு இவ்வகிலத்தின்கண் பஞ்ச கிருத்தியங்களையும் செய்துவர, அதனாலேயே ஓர் கடவுள் உளர் என்பது விளங்கப்பெற்று அவரைப்பணிந்துய்தற்கு காரணத்தை யறியேனென்பார், 'திறமறியேன்' என்றார்.

மனமாய்க்கனவாகி மாய்கையா யுள்ளிருந்து
நினைவாகிநின்ற நிலையறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! நெஞ்ச மாயும், மேல் சொப்பனமாயும், காண மாயையாய், அதனுள் விளங்கி நினைத்தலுமாகிய நின்செயலை யான் நன்குணர்ந்திலேன்.

(கு - ரை.) இச்சரீரத்தினிடமாக ஆன்மாக்கள் அவஸ்தாத் திரயத்தால் அடையுங் கஷ்டஎதுவாயும் உள்ளார் மாயாதிபதியே யென்றறியார் 'நிலையறியேன்' என்றனர்.

சத்திசிவமிரண்டாய்த் தான்முடிவி லொன்றாகிச்
சித்திரமாய்நின்ற திறமறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! சத்தி யென்றும் சிவமென்றும் இரண்டாகவிளங்கியும், பின்னோர் சமயம் இவ்விரண்டும் ஒன்றேயாயும், மற்றுமோர் சமயம் பிரிந்தும்

சேர்ந்துமா யுலககாரியங்களை நடத்தும் சித்திரமாய நின் மகிமை யறிந்தேனில்லையே.

(கு - ரை.) ஏகவஸ்துவாய சிவமொன்றே நவீன சிருட்டியில் கதிரவனும் ஒளியும்போல்பிரிந்து இருவகைப்பட்டும், பின்னர் இலயத்தில் சத்திசிவத்திலொடுங்கி ஏகமாகியும் தனிப்பரசிவமான தன்மையினை ஆய்ந்தறியேனென்பவர், 'திறமறியேன்' என்றனர். 'சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பரமுத்தியான முதலை' என்றார் பரஞ்சோதியாரும், (திருவிளையாடலில்)

பொறியாய்ப்புலனாகிப் பூதபே தப்பிரிவாய்
அறிவாகிநின்ற வளவறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! ஐம்பொறிகளாகியும், ஐம்புலன்களாகியும், பஞ்சபூதங்களாகியும் அப்பூதங்களின் பேதங்களாயும், புத்தியாயும் நின்றருளிய ஓர்வித அளவையறியவில்லை.

(கு - ரை.) பொறிபுலன் பூதம் அறிவு ஆகிய இவையெலாம் பலவேறுவகைத்தாய் காரிய இயக்கம் நிகழுமாயினும் அத்தனைக்கும் ஏவுதற்கர்த்தா அவராதலால் 'அளவு' அறிந்தேனில்லை யென்றனர், ஏன்? அவரன்றி மேற்கூறிய சகலயந்திரங்களும் நடைபெறாதாதலின் என்க. "அவனன்றியோரணுவு மசையாதெனும்பெரிய ஆப்தர்மொழி யொன்றுகண்டா" யென்றார் தாயுமானாரும்.

வானிற்கதிர்மதியா வளர்ந்துபின் னொன்றானதுபோல்
ஊனுடலுக்குள்ளிருந்த வுயிர்ப்பறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! ஆகாயத்தின்கண் சூரிய சந்திரர்களாய்த்தோன்றி பின்னே ஓர் பிரகாசப்

பொருளாய்த் துலங்குமாறுபோல சரீரத்தினிடத்து உள்ளுலாவி வரும் பிராணன் இன்னவகையெனத் தெரிந்துகொண்டேனில்லை.

(கு - ரை.) சூரியசந்திராதிகள் பிரசன்னமாய்த் தெரிவது போல பிராணனும் ஏன்தெரிதலில்லை யென்பதாக உயிர்ப்பறியேன் என்றார். ஏன்? தெரியாதது தெரியக்கூடாததே. எதனாலெனின் கதிர்மதி புறப்பொருள், அதினும் ஸ்தூலப்பொருளாகும் பிராணன் ஸ்தூலமன்றி அகத்தில் சூக்குமப்பொருளாய் கட்புலனால் அறியப் படாது அறிவால் அறியப்படும் பொருளாதல்பற்றியென்க.

பொய்யும்புலையுமிகப் பொருந்திவீண் பேசலன்றி
ஐயோவுனைவுரைக்க வறிகிலேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! அசத்தி யத்தையும், மாமிசமுண்ணலையும் கொண்டாடிப் பேசிவருதலே யன்றி அந்தோ! நின்பெருமையை யாரும் கொண்டாடிப்பேசக் கேட்டிலேனே!

(கு - ரை.) சதாகாலமும் உலகம் பொய்யும் புலாலையும் பற்றி மிகவிஸ்தீரணமாய் மகிழ்ந்துபேசுவதேயன்றி முத்திக்குரிய சத் தாம்ஸமான பக்திமுறையாய் தேவரீரைப்பற்றிப் பேசுதலே யறிந் திலமென்றனர். "பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றார் அப்பரும்.

நிரந்தரமாயெங்கு நின்றுவிளை யாடினதைப்
பரமதுவேயென்னப் பதமறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! எக்கால மும் எங்கணும் இடையறாது வியாபித்து பஞ்சகிர்த்திய மியற்றும் ஒருதனிப்பொருளாம் பரமனையே மேலாம் பரஞ்சோதித் தெய்வ மெனக் கற்றறிந்தேனில்லை.

(கு - ரை.) முடிவி லாற்றல்வாய்ந்த முழுமுதற்கடவுள் சிவ பெருமானே யென்றும், அப்பரம்பொருளே யெங்குமா யெல்லா மாய்விளங்கி எல்லாம் வல்ல இறைவனுயுள்ளா னென்பதையும் தெரியாரானதால் ஈண்டு "பதமறியேன்" என்றருளினர் பெருந் தகையாளர். "யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா யென் றைக்கு முள்ளதெதுமேற், கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெது அதுநம் கருத்திற் கிசைந்தது," எனத் தாயுமானருமொழிந் தருளினர்.

கொல்வாய்பிறப்பிப்பாய் கூடவிருந்தே சுகிப்பாய்
செல்வாய்பிறர்க்குட் செயலறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! நீயே அழித்தல் செய்வாய்; நீயே பிறப்பிப்பாய்; ஆன்மாக்களுள்ளிருந் தும் நீயே சுகானுபவஞ்செய்விப்பாய்; இவைகளைவிட்டு மற்றோர் தேகத்திலுஞ் சென்றடைவாய், இவ்வாறெல்லாஞ் செய்தருளுபவன் நீயேயென்றறிய வல்லேனல்லேன்.

(கு - ரை.) தேவரீரே இறைமைகொண்டொழுகும் சர்வப்ரா தான்ய தத்துவத்தினை அறியுமறிவிழந்தமை சகஜமென்பார், "செய லறியேன்" என்றனர்.

'தில்லை மூதா ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியு மழித்து
மென்னுடை யிருளை யேறத் துரந்து
மடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பு'

மென்றார் மணிவாசகர் தந்திருவாசகத்தில்.

வாரிதியாய்வையமெல்லா மன்னுமண்ட பிண்டமெல்லாஞ்
சாரதியாய்நின்ற தலமறியேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! சமுத்திரமாயும்; உலகெங்கணும் நிரைந்துகலந்து நிலைபெற்ற அண்டபிண்ட சராசரங்களெல்லாமும் தாமே சாரதிபோன்று கொண்டு செலுத்தும் தேவரீரது சான்னித்ய ஸ்தானத்தைத் தெரிந்தேனில்லை.

(கு - ரை.) ஜலப்பெருக்கும், விரிந்தபூமியுமாய் விரவியுள்ள இவ்வகண்டாகார இரதத்தை நடத்தும் சாரதியார் போன்றெருளிரும் தம்மிடம் தேரேன் என்றவர் "தலமறியேன்" என்று கூறுவாராயினர்.

வித்தாய்மரமாய் வெளியா யொளியாய்நீ
சத்தாயிருந்த தரமறியேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! தேவரீர் விதையாயும், மரமாயும், அகண்டவெளியாயும், ஒப்பற்ற பரஞ்சோதியாயும், நித்தியப்பொருளாயு மிருந்தருளிய தன்மையை யானறிந்திலேன்.

(கு - ரை.) சர்வாண்ட புவனபோகாதி காரியா காரியங்களுக்கெலாங் காரணனுய கருணகர பரமமூர்த்தியின் சர்வவல்லமையின் தீரத்துவத்தை சிவபோக அனுபூதியால் தானறிந்திலனென்பாராயினர்.

"பூப்பதுவாய்க் காய்ப்பதுவாய்ப் போக்குவதாய்த் தேக்குவதாய்
நீப்பதுவாய்த் தன்னுள் நிறுத்துவாய்ப்—பூப்பதின்றி
வாளா விருப்பதுவாய் வாதனை தீதமதாய்
நீளாது நீண்ட நிலையினதாய்.'' என்றார் அருட்பிரகாசர்.

தத்துவத்தைப் பார்த்துமிகத் தன்னையறிந்தறிவால்
உய்த்துனைத்தான்பாராம லுய்வாரோ பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! ஜீவாத்ம தத்துவத்தால் தன்னையறிந்து, மேலே சிவதத்வநிலையை ஆராய்ந்தறியும் திடத்திறைலே தேவரீர்தம் திருவருட்ஜோதியைப் பாராது நீங்கார்கள். பார்த்தே பிறப்பறுப்பரென்றபடி.

(கு - ரை.) "கண்டவர்க்குப் போகமனங் காலெழா கைதலை மேற், கொண்டவர்க்குப் பாவங்குடியோடும்" என்றூர் பெரியார்.

ஒன்ருயுயிரா யுடல்தோறு நீயிருந்தும்
என்றுமறியார்க ளேழைகள்தாம் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! தாம் ஏக வஸ்துவாயும், ஆன்மசொரூபமாயும், எல்லாச்சரீரங்களிலும் வியாபித்திருந்தாலும், நல்லறிவில்லாதார் ஓர்போதும் அறியார்கள்.

(கு - ரை.) ஒப்புவமையற்ற ஒருவனுய் விளங்கி யிருப்பினும், உயிர்க்குயிராய்த் துணையிருந்தும் காரியவுலகை நடத்திவந்தும், அஃது உணரகில்லா மெய்யறிவீனர்கள் உணராரென்பார் 'அறியாரேழை' யென்றனர். (ஏழை - ஈண்டு மதியினி லேழையர் எனக்கொள்ப.)

நேற்றென்றுநாளையென்று நினைப்புமறப் பாய்ப்படைத்து
மாற்றமாய்நின்ற வளமறியேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! நேற்றெனவும், நாளையெனவும், நினைப்பு மறப்பு முடையவர்களாயுள்ள ஆன்மகோடிகளைச் சிருட்டிசெய்துவிட்டு எம்பெருமான் இத்தனைகோடி ஜீவசரீரத்திலும் ஒட்டாமல் தனித்திருக்கும் சித்திரத்தை யான் எவ்வாற்றிவேன் என்றனர்.

(கு - ரை.) முக்காலமுமுள்ள முன்னைப் பழம் பொருளாம் தேவரீர் தம் திருவருள்கொண் டுய்யுமாறறியா உலுத்தமதிப் பித்தனர்போல் யானும் 'வளமறியாது மயங்கினேன்.' என்பது கூற்று.

மனம்புத்திசித்த மகிழறிவாங் காரமதாய்
நினைவாந்தலமான நிலையறியேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! மனம், சித்தம், புத்தி, களிப்புறும் ஆங்காரஅறிவெனு மிவைகள் நினைத்தற்கேதுவாய ஓர் நிலைமையை யறிந்தேனில்லை.

(கு - ரை.) மேற்கூறிய அந்தக்கரணங்களான ஞானேந்திரியங்கள் ஓர் தொகுதியாய் நின்று கருதும் நினைவாதியை இவ்விடத்துரியன வென்பதுணராதார் "நிலையறியேன்" என்றனர்.

உருப்பேதமின்றி யுயர்ந்தசத்த பேதமதாய்க்
குருப்பேதமாய்வந்த குணமறியேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! தேவரீர் தம் சொரூபத்திலே சிறிதும் பேதந்தெரிதலிலாது, பெரிய ஓசையாலும் நிறத்தாலும் பேதந்தோன்றிய வண்ண முணரகில்லேன்.

(கு - ரை.) ஈண்டு 'குருப்பேதமாய்வந்த' என்பதற்கு காத்திரத்தையாவது அன்றி நிறபேதத்தையாவது கொள்ளலுமாகும்.

சட்சமயபேதங்கள் தான்வகுத்துப் பின்னுமொரு
உட்சமயமுண்டென் றுரைத்தனையே பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! அறுசமயங்களையும் வகுத்துவிட்டு அதன்மேலும் அகச்சமய மென்பதொன்றும் உண்டெனக் கூறியுமுள்ளாய்.

(கு - ரை.) ஆறுசமயங்களாவன? பாஷாண வாதசைவம், பேதவாதசைவம், சமவாதசைவம், சங்கிராந்தவாத சைவம், ஈசுரவிகாரவாதசைவம், சிவாத்வைத சைவர், ஆக ஆறும்ஆம் உட்சமயம்;— சுத்தாத்துவித சித்தாந்த வைதிகசைவம் என்பதாம்.

முப்பத்திரண்டுறுப்பாய் முனைந்துபடைத் துள்ளிருந்த
செப்படிவித்தை திறமறியேன் பூரணமே.

(பொ - ரை.) பரிபூரணப் பொருளே! இம்மனித தேகத்தை முப்பத்திரண்டு அங்கங்களாக பாகுபாடுசெய்து படைத்து எம்பெருமான் இவ்வுடலுள் வீற்றிருந்தருளும் ஜாலகோலத்தினை என்னெனன்றுணர்வேன். முடியா என்றபடி.

(கு - ரை.) கடவுளால் சிருட்டிக்குள்ள இம்மானிடயாக்கையானது முப்பத்திரண்டு பிரிவினையுள்ளதா யிருக்கிறது. இத்தனை பிரிவாயிருந்தும், தாமும் இக்கூட்டினுள்ளேயே வசித்து வருதல் பேராச்சரிய கரமான விஷயமேயாம்.

என்னதான்கற்றாலென் னெப்பொருளும் பெற்றாலென்
உன்னையறியாதா ருய்வரோ பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! எவ்வளவு நூல் பார்த்துமென்ன, பயன்? எவ்வளவு பொருட்செல்வம் படைத்தாலுமென்னவாகும்? தம்மானையறியாது யாரேனு முய்வரோ?

(கு - ரை.) அதிக வாராய்ச்சியானும், மிகுந்த செல்வப்பொருளானும் கடவுளடியைக் காணவியலாவாம். அன்பும் அருளுமில்லார்க் கவனருளே கிட்டாது. (இது சத்தியமொழி) அருட்செல்வம் செல்வத்துட்செல்வம், பொருட்செல்வம் பூரியார் கண்ணுள என்றார் திருவள்ளுவ நாயனாரும்.

கற்றறிவோமென்பார் காணார்க ளுன்பதத்தைப்
பெற்றறியார்தங்கட்குப் பிறப்பறுமோ பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! 'எத்தனையோ சாத்திரங்கள் பார்த்தாய்விட்டது;' 'எம்பெருமான் திருவடி என்கிட்டேயே

நெருங்கிவிட்டது' என்று கூறுவோர் ஒருபோதும் தம்மடிக் காட் படார்; கண்டாரே கனம்பெறுவர்; காணுதாரென்பெறுவர்! பெரு ரென்பதாம்.

(கு - ரை.) கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவனற்றாள் தொழாரெனின் என்றார் திருவள்ளுவதேவர்; சிலர்க்கு முற்றேறவ ராம் திருமூலரும்.— "சாத்திரமோதுஞ் சதிர்களை விட்டுநீர், மாத் திரைப்போது மறித்துள்ளே நோக்குமின், பார்த்தவிப்பார்வை பசும ரத்தாணிபோ, லார்த்தபிறவி யகலவிட்டோடுமே."

வானென்பா ரண்டமென்பார் வாய்ஞானமேபேசித்
தானென்பார்வீணர் தனையறியார் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! தேவரீரை சுத்தவெளி யென்றும், அன்றி அண்டமென்றும், பின்னுந் தானேயென்றும் பல வாருய்க் கூறி வாசாஞானத்தால் போதுபோக்கு மவராய் ஈற்றில் வீண்வாதிகளாய், முடிவில் வந்தவாறறியா முழுச் சோம்பேறியாவர்.

(கு - ரை.) ஜீவான்ம பரமான்ம விசாரணையில்லாதும், சற்குரு உபதேசம்பெருதும், கையில்கிடைத்த ஏடுகளைப் புரட்டிவிட்டு ஆகார, மைதுனம், நித்திரை, இவைகளை யெல்லாம் அவனே நடத் திக்கொள்கிருன் என்று சொல்லிவிட்டுத் தான் பிரமமென்று சாம் பிரமை சுற்றித் தடுமாறி விராட்டி முத்தியே விதேக முத்தியாய்க் கொண்டிடுவர் என்க.

ஆதியென்பா ரந்தமென்பா ரதற்குணடுவாயிருந்த
சோதியென்பார் நாதத்தொழிலறியார் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! தேவரீரை இவ்வுலகமக்களார் மூலகாரணப்பொருளெனவும் கூறுவர், முடிவாய சகல கேவலாதீதப் பொருளென்பர் சிலர்; இன்னுமோர் சாரார் நடு

வாய சுழிமுனைச்சோதி மயமென்பர்; இவர்கள் பரநாதமே காரியப் பட்டுள்ளமை அறியாதார் என்க.

(கு - ரை.) தேவர்தம் நிலையினை உண்மைவாயிலாக அறியாது யெப்பொருட்கு மூலகாரண வஸ்துவென்றும், சிலர் அந்த மாயா நாதகாரியமென்றும், மற்றுஞ் சிலர் இடையினில் விளங்கும் சுழிமுனையாம் சோதியையும் பொருளென்று இவ்வாறு பலவகையாய்க் கூறுவர்கள். ஆயினும் தன் எதார்த்த தத்வநிலையாம் பரநாதகாரியத்தினை உள்ளபடி யுணராதார் என்பதாம்.

மூச்சென்பாருள்ளமென்பார் மோனமெனு மோட்சமென்
பேச்சென்பாருன்னுடைய பேரறியார் பூரணமே. [பார்

(பொ - ரை.) எங்கும் வியாபியாம்பொருளே! உண்மையறியாச் சிலர் தேவரீரை பிராணவாயுவென்பர்; சிலர் மனதெனவே கூறுவர்; இன்னுஞ்சிலர் மௌனமேயென்பர், மற்றும்பலர் சர்வநீக்கமென்பர்; சிலர் சப்தநாதமென்பர்; இவர்களெல்லாம் எம்பெருமான் றன் உண்மைநிலையை யுணரார்கள்.

(கு - ரை.) பாசிவத்தின் உண்மைத் தத்துவநிலையாகிய பராபர வஸ்துவாந் தன்மையினைத் தன்னுள்தானறிந் துணராதார், பலவாருய்ப் புகன்று திரிவரேயாவர்; இவர்கள் யதார்த்த சொரூபத்தை நிதரிசனமா யுணராதாரென்பது விகசிதம்.

பரமென்பார் பானுவென்பார் பாழ்வெளியாய்நின்ற
வரமென்பார்நின்றன் வழியறியார் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறை பூரணப்பொருளே! எம்மானை ஒப்பிலாபரவஸ்து வென்பர் சிலர், சிலர் ஆதித்தனென்றும் கூறுவர்; முப்பாழ் வெளியென்பர் சிலர்; ஆகவே யிவர்கள் மேலாய தமது யதார்த்த பூரணத்துவத்தினை யறியார்கள்.

(கு - ரை.) பரமேஸ்வரனது யதார்த்தசொரூபம் இன்னதெனப்பகரும் பதித்துவ நிச்சயங்கூறியுள்ள மெய்ந்நூல் சாற்றும் நிச்சயமுணராது பாசநூல் பசுநூல் என்பவைகளில்கூறும் மாறுபாடானவைகளெல்லாங் கற்பித்துத்திரிவரென்க. சான்றாக—கந்தபுராணங்கூறுப:—

ஊரிலான் குணங்குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்.

எத்தனைபேரோ வெடுத்தெடுத்துத் தானுரைத்தார்
அத்தனைபேர்க் கொன்றானதறிகிலேன் பூரணமே.

(பொ - ரை.) சர்வபரிபூரணமே! எம்மான்றன் இயல்பினைப் பல்லோரும் பற்பலவகையாய்க் கூறியுள்ளார்கள் அவைகட்கெல்லாமும் தேவரீர் ஓர் உருவாய்த்தோன்றி யருளினதைக்காணகில்லேன்.

(கு - ரை.) அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாம் சிவபரஞ்சுடரே ஒவ்வொருவரது கன்மபலனாக அநுக்கிரகஞ்செய்து வருவதால் அவர், பலபடவிரிந்துள பலமதத்தேவராய் விளங்கியும் ஈற்றில் ஒருருவமே கொண்டுவருவதை யறிகிலேன் என்பார், "ஒன்றானதறிகிலேன்" என்றனர்.

நகாரமகாரமென்பார் நடுவேசிகார மென்பார்
வகாரயகாரமென்பார் வகையறியார் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! நகாரத்தையும் மகாரத்தையும் குறிப்பிடுவர்; இதன்மத்தியில் சிகாரத்தையுங்கூறுவர்; இன்னும் வகாரயகாரங்களையுங்கூறுவர்; ஆகவே இவர்கள் இந்த பஞ்ச அக்கரங்களின் சத்திய தத்வத்தை யுணராதவர்கள்.

(கு - ரை.) ந. திரோதானசத்தி. ம. மலமாம்; சி. சிவம். வ. சத்தி. ய. ஆத்மா. இவ்விதமாகச் சாத்திராதியவைகளாய்ந் துணரார்; 'வகையறியார்' என்றனர்.

"அஞ்செழுத் தாய்நின்ற தேயானு மதன்பொரு ணீயெனவேகண்டேன்
அஞ்செழுத்தோதியே பினுமதன்முடிவி லுனையேகண்டேன்"
என்றார் அப்பமூர்த்தியார்.

மகத்துவமாய்க்காம மயக்கத்திற் குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற் பயனழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கும்விளங்கும் பூரணப்பொருளே! மிக்க மதிப்புடனே காமாந்தகாரத்தழுந்தி நன்றுதீதறியாதபடி பெறுதற் கரிய பேற்றையிழந்துபோயினேன்.

(கு - ரை.) காம இச்சையெனும் பிசாசுபற்றிக் கண்மூடித் தனமாக அதிலேயே ஆழ்ந்து, அதனினும் மேலாயமோக்ஷ இன் பத்தையுணரும் அறிவு உதயமாகாதபடியாலேயே 'பயனழிந்து போயினே' னென்றனர்.

உண்மைப்பொருளை யுகந்திருந்து பாராமற்
பெண்மயக்கத்தாலே பிறந்திறந்தேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! நித்தியமாய உண்மை வஸ்துவை ஆசிரயித்து ஓரிடமமர்ந்து ஞானநோக்கங் கொள்ளாமே பெண்பித்துக்கொண்டு அதனாலேயே பிறந்துமிறந்தும் வந்தனன்.

(கு - ரை.) "காமாந்தகாரமெனுங் கள்ளுண்டுகண்மூடி
யேமாந்தேனெற்றி யெழுத்தறியும்பெருமானே"
என்றார் அருட்பிரகாசவள்ளலாரும்.

வாயாரவாழ்த்தி மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காயமெடுத்துக் கலங்கினேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! எம்மானை அன்பொடும் வாயாரவாழ்த்தி துதிசெய்து வழிபடாது உடற்சுமையை வீணே சுமந்து கெட்டனன்.

(கு - ரை.) தேவரீரை சதாதுதிசெய்வதிலும், கண்டுசேவிப்பதிலும், பொழுதுபோக்காகக் கொள்ளாதபடியால் பலமுறையும் உலகஉபத்திரவம்யேற்பட்டு என்பவர் 'கலங்கின' னென்பாராயினர்.

சந்திரனைமேகமது தான்மறைத்த வாறதுபோற்
பந்தமுறயானுமுனைப் பார்க்கிலேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறைபொருளே! நிலவதனை மேகபடலம் மறைப்பதுபோன்று, பாசம் எனும் படலமானது அறிவை மறைத்து அதிலிருந்து தேவரீரையான் தரிசியாதொழிந்தேன்.

(கு - ரை.) மதியொளியினை மேகபடல மறைத்து அதனால் இருட்படலம் நீங்காவாறுபோல, மாயாமலமாம் ஆணவப் பேய் பிடித்து அலக்கழிவு செய்துவந்தமையால் என்னறிவின் வொளி குன்றி தேவரீர் ஞாபகம் வாராமல் எம்மானைக் கண்டுகளிக்க வியலாதாயிற்று என்றனர்.

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும் போற்றாமல்
அந்தரமாய்நின்றுங் கலங்கேனுன் பூரணமே.

(பொ - ரை.) சர்வபரி பூரணப்பொருளே! சிவந்துகுளிர்ந்துள்ள தாமரைமலர்போன்ற உபயதிருவடிகளை அநுதினமுந் துதி புரிந்து வணக்கஞ்செய்யாது (கொழுக்கொம்பில்லாக் கொடிபோல) வாடித்திரிந்தேன்.

(கு - ரை.) எம்மானை ஆலயத்தில் சென்றடைந்து வணங்கித்துதியாதார் யாதொரு ஆதாரமின்றி நிராதரவாகத்திரிவரென்பார், 'அலைந்தேன்' என்றனர். "பத்தியாற்பரனைப் பாடித்துதித்திடார், சித்தியாதொன்றும் சீர்குலைந் தேங்குவார்." என்றனர் பெரியார்.

நீர்மேற்குமிழிபோல் நிலையற்ற காயமிதைத்
தாரகமென்றெண்ணிநான் தட்டழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! தண்ணீர்மேல் தோன்றும் குமிழ்போல்வதாம் இத்தேகத்தை பெரிதும் சுதந்தரமாய்க் கொண்டு என்னிலையினை விட்டு துன்புற்றனன்.

(கு - ரை.) அநியனித்திய வுடலை அதிகமாய் நிலைத்துள்ளதாயெண்ணி காலத்தை வீணாய்க்கடத்தித் தட்டுக்கெட்டேன் என்பதைப் பிறர்க்கு எச்சரித்தவாறும். "நடலைவாழ்வு கொண்டென் செய்தீர் நாணிலீர்" என்றார் அப்பர்.

நெஞ்சமுருகி நினைந்துனைத்தான் போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்க வகையறியேன் பூரணமே.

(பொ - ரை.) சர்வ பரிபூரணப் பொருளே! தம்மானை மனங்கரைய நினைந்து வாழ்த்தி, என்பால் இயல்பாயுள்ள நஞ்சனைய வஞ்சத்தை யகற்றும் மார்க்கம் தெரியவில்லையே.

(கு - ரை.) சிவபிரானை மனங்கசிந்துருகித் துதிப்பார்க்கு வஞ்சமாயது கொஞ்சமுமின்றிப் பரிசுத்தமாமென்பார். ஆனல் அவ்வுண்மை என்மாட்டுளதாக வறியேன். என்னும் அபிப்பிராய முள்ளார்போலும்.

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்குநிறைந்திருந்த
துள்ளமறியா தருகினேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறைபொருளே! எள்ளினுள்ளே நெய் நிரம்பியவாறுபோல் சராசரமெங்கும் தேவரீர் வியாபகமா யுள்ளதை என்மன மறியாமையாலே யான்பின்னர் மிகவும் நையுறக்கரைந் தேன்.

(கு - ரை.) அகண்டாகார சிவபரஞ்சுடரார் எங்குமாய் எல்லாமா யிருத்தலை முதற்கண்ணுணராது பின்னுணர்ந்ததும், காலங் கடந்ததைக் கருதி உள்ளங்கரைந் துருகியதைக்கொண்டு தனக்குள் தானிரங்கினராக.

மாயாபிரபஞ்ச மயக்கத்திலே விழுந்தே
ஓயாச்சனன மொழித்திலேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குமிலங்கும் பூரணப்பொருளே! மாயாசக்தியின் பிரதிபிம்பமாகிய இவ்வுலகமயக்கத்திலே அழுந்தித் தெளிவுபெறாத இப்பிறப்பினை மாற்றிக்கொள்ள வகைதெரியாது போயினேன் சிலகாலம்.

(கு - ரை.) மாயாசனனத்தைச் சிலகாலமாக மாற்றிக்கொள்ளாதிருந்து, மாயை சம்யோகமா யிருந்ததைக் கொண்டிரங்கினர் என்க.

பூசையுடன்புவன போகமெனும் போக்கியத்தால்
ஆசையுற்றேநானு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கும் நிறைபூரணப் பொருளே! பெருமைப்பட, இவ்வுலகானுபவங்களில் ஆசைவைத்து பூசை முதலியவைகளோடு வாழ்ந்து மதிமயங்கினேன்.

(கு - ரை.) பூஷிப்பி நிமித்தம் சிலகாலம் உலகறிய பூசைகளோடும் வாழ்ந்தமையில் பிறகு தமக்கு வெட்கந்தோன்ற, இங்ஙனமிரங்கினர் என்க.

படைத்துமழித்திடுவாய் பார்க்கிற் பிரமாவெழுத்தைத்
துடைத்துச்சிரஞ்சீவியாய்த் துலங்குவிப்பாய் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறை பூரணப்பொருளே! தேவரீர் சிருட்டியும் அழித்தலும் செய்வீர்; இதன்றி யோசிக்குமளவில் பிரமதேவனால் தலையில் எழுதியுள்ள திட்டவட்டத்தையு மாற்றி ஒருவனை என்றுஞ் சிரஞ்சீவியா யிருக்கவுஞ் செய்திடுவீர்; (தம் வன்மைக்கு அளவில்லை யெனவுமறிந்தேன்.)

(கு - ரை.) ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய் அருடருவாய், போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில் என்றார் மணிவாசகர் தன் திருவாசகத்திலே.

மந்திரமாய்ச்சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
தந்திரத்தைநானறியத் தகுமோதான் பூரணமே.

(பொ - ரை.) எங்கும் விளங்குமிறையவனே! எம்மான் மந்திர சொரூபமாயும், பற்பலசாஸ்திர அம்ஸங்களாயும், நான்குவேதங்களாயும் விளங்கிவந்த நின்பேருட் டந்திரத் திரத்தின் வன்மையை அறிந்து அளவிட யாவரேவல்லார்! யானோ அறியத்தக்கவன்!

(கு - ரை.) வேதாகம சாஸ்திராதி புராணேதி காசங்களுக்கெல்லாம் தாமே அதிட்டான கர்த்தாவா யிருக்கிறபோதும் தம்மானைப் பெம்மானைக் கொண்டாடும்போதும் யெல்லாமும் தாமேயாயுள்ள தந்திரவன்மையை யானோ அறியவல்லேன்? அறியேன் என்றபடி. "மந்திரமாய்ப் பதமாகி வன்னமாகி வளர்கலையாய்த் தத்துவமாய்த் தானே தானாய்" என்றார் அருட்பிரகாச வள்ளலாரும்.

அல்லாய்ப்பகலா யனவரத காலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்த தொடர்பறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறை பூரணப்பொருளே! இராப்பகலென்றும் இன்னும் பலகாலங்களென்றும் சொல்லப்படுவதை பிரித்தறியத்தக்க தொடர்பினை யானறியேன்.

(கு - ரை.) இவ்வுலகுக்கென தாம் ஏற்படுத்திய கலை, நியதி காலமென்னும் பல்வகைய அளவின் விவரணங்களை சொல் மாத்திரமாய்ப் பிரித்துள்ளதும் அவரே யென்றும் விளக்கினர். ஆனாலும், அவர் காலங்கடந்தவர் என்பது தோன்றநின்றது.

நரகஞ்சுவர்க்கமென நண்ணு மிரண்டாயும்
அரகராவென்ப தறிகிலேன் பூரணமே.

(பொ - ரை.) பூரணப்பொருளே! நரகலோகம் சுவர்க்கலோகமென்னும் இரண்டும் ஆன்மகோடிகளுக்காகக் கற்பிதம் செய்திருப்ப, அஃதுணர்ந்து எம்மானைநோக்கி அரஹராவென்று கூறவுந் தெரியவில்லையே! அந்தோ! என்னபாவம்!

(கு - ரை.) "சிவபத்தியில்லாத ஜென்மம் பவமுத்தி பாழடைந்தபோ" மென்பதே சாரமாகின்றது.

பாவபுண்ணியமென்னும் பகுப்பாய் படைத்தழித்திங்
காவலையும் ...வைத்த வருளறியேன் பூரணமே.

(பொ - ரை.) எங்கு நிறைபொருளே! பாவமென்றும் புண்ணியமென்றும் இருவித கன்மமாகக் கற்பித்து, அவைகளன்றிப் பின்னும் ஆசைபாச மென்பனவுங் கற்பித்துள்ள நின் திருவருளின் தன்மை யிவ்வாறெனத் தெரிந்திலன்.

(கு - ரை.) ஆன்மாக்களார் செய்யுங்கன்மம் இருவகையாயும், பின்னும்பார்க்க, மூவகையாயும் ஏற்பட்டமைபோக மேலும் மேலும் ஆசாபாசமும் முன்வந்து வேண்டிய அநுபவாதிகளையும் அநுபவித்தல் பாசப்பிராந்தி யென்பார் 'அருளறியேன்' என்றனர். மூவகை

வினையாவது பாவம் புண்ணியம் - இவ்விரண்டுமின்றி இருவினையு மிஸ்ரமாகச் செய்யும் வினையாம். (மிஸ்ரம் - கலப்பு)

சாந்தமென்றுங் கோபமென்றுஞ் சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்புத்தியென்றும் படைத்தனையே பூரணமே.

(பொ - ரை.) எங்கு நிறைபொருளே! பொறுமையென்றும், சினமென்றும், நாலுவகையான ஜாதிவேற்றுமைகளென்றும், பற்றி நிற்றல் எனவும், அறிவென்றும் கற்பித்தாய்;

(கு - ரை.) மேற்கூறிய பொருமை, கோபம், சாதிபேதம், பந்திப்பென்றும், அறிவென்றும் கற்பித்தாய்; ஆனு லிவையெலாம் பூர்வகன்மத்தைப் பொருத்ததா யுள்ளதே யாயினும், இத்தனையும் படைத்ததுக் கொண்டு கூட்டி முடிப்பவன் நீயா யிருக்கின்ருய், பார்த்துக்கொள் என்பார் போலும்.

பாசமுடலாய்ப் பசுவதுவுந் தானுயிராய்
நேசமுடநீபொருளாய் நின்றனையே பூரணமே.

(பொ - ரை.) எங்கு நிறைபொருளே! பாசம் தேகமாயும், பசுவாவதே ஆன்மாக்களாகவும், தேவரீரே விருப்புற்ற கடவுளாகவும் விளங்கி யுள்ளீர்.

(கு - ரை.) பாசத்தால் சரீரம்வந்ததும், பசு, சுதந்தரவீன ஆன்மாவாய் வந்ததும், தேவரீர் பதிப்பொரு ளாயினமையும் நின் பாகுபாடேயென்பார். 'பொருளாய் நின்றனையே' என்றனர். (என், நீ சுத்தன் ஆனதுபற்றி யென்க.) பசு - அபரிசுத்தன் என்றபடி.

ஏதிலடியா ரிரங்கியிகத் தில்வந்துன்
பாதமதில்தாழப் பரிந்தருள்வாய் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறை பொருளே! குற்றமற்ற அடியவர்கள் மிசமனமிரங்கிவந்து தேவரீர்தம் திருவடிக்கமலங்களில் நமஸ்கரிக்க, அவர்களுக்கு அன்புகொண்டருள் புரிவாய்.

(கு - ரை.) இதனால் மெய்யன்பர்கட்கு மிக்க அன்புடனே மிகவும் விரைந்து ஆட்கொண்டு அவர்களுக்குப் பொன்னடி காட்டிப் புரப்பவன் நீயேயென்பார் 'பரிந்தருள்வாய்' என்றனர்.

நானேநீநீயேநா னுமிரண்டு மொன்றுனால்
தேனின்ருசியதுபோல் தெவிட்டாய்நீ பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறைபொருளே! யான் நீயாகவும், நீநானுகவும் இருவகையன்றி ஒன்றும்போது தேன்சுவையொத்தே மாதுர்யமாய்விடுவாய்.

(கு - ரை.) சீவான்மாவாய யானும் பரமான்மாவாய தேவரீரும் யேகபாவமாயினபின்னர் தேன்சுவையா யினிப்புத்தோன்றி சிவானந்தத்தினைப்புறுதல் இயல்பாதலால், ஈண்டு தேனையுவமை கூறிச் சிவானந்தந் தேக்குதலைக்குறித்தார்போலும். (அத்வைதமே சிவானந்தப்பேறும்)

முடிவிலொருசூனியத்தை முடித்துநின்று பாராமல்
அடியிலொருசூனியத்தி லலைந்தேனே பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறைபொருளே! தத்வாதிகளின் அந்தமாயுள்ள நிராதாரப்பொருளை எளியேற்குட்படுத்தியும், அதனிலை பெறாது மாயையால் கட்டுண்டு களைத்தேன்.

(கு - ரை.) சிவபோதமின்றித் தற்போதமாம் ஜீவாத்மபோதத்திற் கெட்டாமைபற்றி அடியிலொரு சூனியமென்று சிதாகாய சின்மயவெளியைக்குறித்தார். இஃதும், அவனது அருட்

போதம்சித்தியாக, அஞ்ஞான்றே தானேபரமாய்த் தற்பராபரமாகுந் தன்மைவாய்க்கப் பெறலாமென்றபடி.

பூரணமாலைதனைப் புத்தியுட னோதினர்க்குத்
தாரணியில்ஞானந் தழைப்பிப்பாய் பூரணமே.

(பொ - ரை.) எங்குநிறைபொருளே! பூரணமாலையா மிதனைப் பொருளறிந்துபோற்றிப் பாராயணம் பண்ணிவருவார்க்கு இவ்வுலகத்திலே மெய்ஞ்ஞானம் லபித்துய்யச்செய்வாய். "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தினுள்ளார்" என்றார் மணிவாசகர் தந்திருவாசகத்தில்.

பூரணமாலை பூரணமாயது.

நெஞ்சொடு மகிழ்தல்.

அன்றுமுதலின்றளவு மாக்கையொடு சூழ்ச்சியுமாய்
நின்றநிலைபறிய நேசமுற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! நல்லறிவுதோன்றிய காலமுதலாக இதுகாறும் இந்தச்சரீரத்தோடும் நீ வெகுதாந்திரீகமாய் நேசங்கொண்டிருந்த உண்மையினையறிய ஆசைகொண்டனை.

(கு - ரை.) இம்மானிட தேகம்வந்தவாறும், இதனோடு ஆன்மாவானது ஆதிமுதல் இதுகாறும் சம்பந்தித்திருந்து தூலத்தை நடத்திவந்த நிலைமையையுந்தெரிய காரணமாயினை என்பது இதனால் தோன்றநின்றது.

அங்கங்குணர்வா யறிவாகி யேநிரம்பி
எங்கெங்குமான திலே யேகரித்தாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! அந்தந்த விடங்களிலெல்லாம் உணர்ச்சியாகியும், அறிவாயும் நிறைந்து எவ்வெவ்விடங்களிலேயும் கலந்து கொண்டுள்ளாய்.

(கு - ரை.) மனம் இச்சரீர அங்கங்களிலெல்லாம் சென்றடைந்து அதில்பற்றியிருந்து பேதமறவிளங்கிவருகின்றது.

அலையாதபேரின்ப வானந்த வெள்ளத்தில்
நிலையாயுருவிறந்து நின்றனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! நிர்சலனமாய் பேரின்பமென்னும் பரானந்த பிரவாகத்திலே உருக்கரந்து சொக்கிநின்றாய்.

(கு - ரை.) சிவானந்தவெள்ளத்திற் றிளைத்து அதனையே பிறப்பிடமாய்க்கொண்டு ஆனந்தாதீதப்பட்டு சிவபோதமா யிருந்தனையே யென்பதாம்.

பாராமற்பதையாமற் பருகாமல் யாதொன்றும்
ஓராதுணர்வுடனே யொன்றினையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! யாதொன்றையும் பார்க்காதும், பார்ப்பதைக்கண்டு பரபரப்புக்கொள்ளாதும், அநுபூதியாராய்ச்சியில்லாதும் நல்லறிவால் எம்மானைச்சேர்ந்தனை.

(கு - ரை.) அந்தர்முகமின்றிப் பகிர்முகப்பட்டு ஆத்மகாரியாதிகளிற்றலையிடாது சிவாம்ஸமுற்றனையென்பார். 'ஒன்றினை' யென்றனர்போலும்.

களவிறந்துகொலையிறந்து காண்பனவுங் காட்சியும்போய்
அளவிறந்துநின்றதிலே யன்புற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! கொலைகளவாதியன நீத்து, காட்டப் படும்பொருளும் காணுங்காட்சியுமின்றி அளவிடக்கூடாத ஒப்பற்ற ஒருபெரும்பொருளையே விருப்புற்றனை.

(கு - ரை.) உலகத்துள்ள தீயப்பற்றுகளொழிந்து சிவபரஞ் சுடரையே சேர்வான் ஆசைகொண்டனை யென்பார், 'அன்புற்றாய்' என்றார்போலும்.

பேச்சிறந்துசுட்டிறந்து பின்னிறந்து முன்னிறந்து
நீச்சிறந்துநின்றதிலே நேசமுற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! சொல்லொழிந்து, ஒன்றைச்சுட்டு தலையுங்கடந்து எதிர்கால மிறந்தகாலங்களு மொழிந்து போக்கும் வரவுமற்ற பூரணத்திலேயே மிக்கவிருப்புற்றிருந்தாய்.

(கு - ரை.) இவ்வுலககாரியாதிகளைவைக்கும் புறம்பான சிவ பரஞ்சுடர்பால் அன்புற்றாயென்பவர் 'நேசமுற்றாய்' என்றார் போலும்.

விண்ணிறந்து மண்ணிறந்து வெளியிறந்து வொளியிறந்து
எண்ணிறந்துநின்றதிலே யேகரித்தாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! வெளி கடந்தும், பூமியைக் கடந்தும், வெளி குறைந்தும், பிரகாசங் குறைந்துமுள்ளதும், அளவு கடந் துள்ள ஒருபெரும் பொருளிலே கலந்தனை.

(கு - ரை.) பௌதிகப்பொருள் எல்லாமுங் கடந்தேறி நின்ற தாம் சர்வவியாபகப் பொருளினையே யேகைக பாவமாய்க் கலந்து கொண்டாய்.

பார்த்தவிடமெங்கும் பரமெனவே யுட்புறம்புங்
கோத்தபடியுண்மையெனக் கொண்டனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! கண்கண்ட விடமெங்கும் கடவுளரே யாகுமென உள்ளும்புறமுங் கலப்பெய்திய நிலைமையினை உண்மையே யெனக்கொண்டனை.

(கு - ரை.) தியான வுறுதியினாலே பார்க்குமிடமெல்லாம் பரசிவமே யாமெனக்கொண்ட மெய்யுணர்வால் அகத்தும் புறத்தும் வியாபித்துள்ள தன்மையே யெனத் துணிந்தார்.

ஊரிறந்துபேரிறந்து வொளியிறந்து வெளியிறந்து
சீரிறந்துநின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! ஊருமின்றி, பேருமின்றி, ஒளியுமின்றி, வெளியுமின்றி, சிறப்பிழந்தும் விளங்கிய வொருதனிப் பொருளிலே சேர்ந்தனையே.

(கு - ரை.) ஊர்பேரில்லாது, யெல்லாங்கடந்து விளங்கும் பரசிவத்தின் திருவருள் வெளியுளே பேதமின்றிக் கலந்தனையேயென்றார் போலும்.

ஆண்பெண்ணலியென் றழைக்கவரி தாய்நிறைந்து
காண்பவரிதாயவிடங் கண்ணுற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! ஆண் என்றாவது பெண்ணென்றாவது அல்லது அலியாகவாவது பிரித்து அழைத்தற் கேதுவின்றி யாண்டும் ஒரே தன்மையாயிருந்து காண்டற்கு அருமையாகியுள்ள ஓர் ஸ்தானத்தைக் கண்டுகொண்டாய்.

(கு - ரை.) இவ்வண்ணத்தா னென்றழைக்க வியலாத சிவபரஞ் சுடரினையே கண்களிகூறக் கண்டுகொண்டாய் என்பது தேற்றமாய் முடிந்ததாம்.

ஆங்காரமச்ச மகற்றி யறிவினொடு
தூங்காமற்றூங்கிச் சுகம்பெற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! அகங்காரமென்ன, பயமென்ன, இவைகளை விலக்கிக்கொண்டு அறிவோடுங்கூடி தூங்காமல் நிஷ்டைகொண்டு சிற்சுகாதீதம் பெற்றனை.

(கு-ரை.) சச்சிதானந்தம் பெறுதற் கானியாய அகங்காராதியை அறவே யொழித்துச் சிவபோதமுற்றுச் சுத்த சைதன்யத்திற் சொக்கிக்கிடத்தலையே 'தூங்காமற்றூங்கி' என்றார்.

ஆதியாய்நின்ற வகண்டபரி பூரணத்தைச்
சாதியாநின்றவிடஞ் சார்வுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! சர்வத்திற்கும் காரண கர்த்தாவாய சர்வபரிபூரண சச்சிதானந்த சொரூபத்தைக் கண்ணுறுமிடத்தினைக் கண்டு கொண்டனை.

(கு-ரை.) சிவபரஞ்சுடரைத் தரிசித்தற் கேற்றதாம் திருவருளைச் சார்ந்து கொண்டாய், என்பது தெளிவாம்.

விருப்புவெறுப்பில்லாத வெட்ட வெளியதனில்
இருப்பேசுகமென் றிருந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! விரும்புதலும், வெறுத்தலு மில்லாத ஞானகாய ஸ்தானத்திருத்தலே சுகமெனக் கொண்டு ஆங்கே நிலைத்தனை.

(கு-ரை.) இராக த்வேஷமின்றிய சிதாகாச வெளியை தனக்கினிய ஸ்தானமாகக் கொள்வதே முறைமையாம்.

ஆருமுறாப்பேரண்டத் தப்புறத்து மிப்புறத்தும்
நீருமுப்புமென்ன நிலைபெற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! எப்பாலவரு மெய்தவொண்ணு மிகப்பெரிய அண்டபுவனத்திலே எப்பக்கத்தும், தண்ணீரும் உப்பும் எப்படி பிரிக்க வியலாதோ அவ்வாறு ஒன்றுபட்டுள்ளனை.

(கு - ரை.) உவரும் நீரும் போன்று ஒன்றுபட்ட நீ, அண்ட புவனங்களுக்கு எப்புறத்தும் அவ்வேனெடு ஒன்றுறச்சேர்ந்து விளங்க லாயினை என்பது முடிபுரை.

உடனாகவேயிருந்து முணரவரி யானேடு
கடனீருமாறும்போற் கலந்தனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! பரவத்துவோடும் நீ இப்போது கடல் நீரும் ஆற்றுநீரும்போலக் கலந்துள்ளாய்; ஆனாலும், முன்னே நீ யென்னேடு கூடவே யிருந்தாலும் எனக்கு இதுவிளங்கிற்றில. பேத மின்மையைக் குறித்தே கடல்ஜலத்தையும் ஆற்றுநீரும் உவமித்தார்.

(கு - ரை) இங்கே, தானென்ற அறிவுணர்ச்சிக்கு விளங்காம லிருக்கிறபோதே திருவருட் சத்தியின் தீவிரதரத்தால் பரமாத்மா ஜீவாத்மாவை யீர்த்துக்கொண்டதை விளக்கினராக.

நெடியகத்தைப்போக்கி நின்ற சழக்கறுத்துப்
படிகத்துக்கும்பம்போற் பற்றினையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! வலிமையான அகங்காரத்தை யற வொழித்தும், மற்றுமுள்ள மாசினையுங் களைந்து ஸ்படிகமய கல சத்தை யொத்தே தலைவனைச் சேர்ந்தனை.

(கு - ரை.) கலசம் - ஈண்டு குடம் அல்லது தோண்டி. ஸ்ப டிக தோண்டியையே கடமென்றூர். கடமெனினும் கும்பமெனி னும் ஒருபொருட் சொல்லாம்.

மேலாகியெங்கும் விளங்கும் பரம்பொருளிற்
பாலூறுமென்சுவைபோற் பற்றினையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! யெவற்றினுக்கும் மேம்பாடுடையதாய் யாண்டும் பொருந்திவிளங்காநின்ற பரம்பொருளிடத்தே பாலின் சுவையினைப்போன்று கலந்தாய்.

(கு - ரை.) பாலும் அதன்ருசியையும் வேருகப் பிரிக்கொணுததுபோல நீயும் சிவமும் அவ்வளவு ஒற்றுமைப்பட்டுக் கொண்டனை என்பார் "சுவைபோற் பற்றினை" யென்ருர். மென்சுவை - மிருதுவாய உருசிகரமாம்.

நீரொடுதண்ணுலிவிண்டு நீரான வாறேபோல்
ஊரொடுபேரில்லானே டொன்றினையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! தண்ணீரிற்ருேன்றிய குளிர்ந்த ஆலங்கட்டியானது வெப்பத்தால் மீண்டும் நீராவதுபோன்று ஊர், பேர் இவையற்ற பரசிவத்தோடு சிவமாய்க்கலந்தனை.

(கு - ரை.) நீரிற்ருேன்றியுள்ள ஆலங்கட்டியினுவமை ஈண்டு பெரிதும் உற்றுநோக்கியுணரற்பாலது.

இப்பிறப்பைப்பாழ்ப்படுத்தி யிருந்தபடியே யிருக்கச்
செப்பவரிதாயவிடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! இந்த நரஜென்மத்தை யொழித்து எப்போதும் ஒரே நிலையினதாயுள்ள விடங்கண்டு சேர்ந்துகொண்டாயே!

(கு - ரை.) தான் ஐக்கியமுற்ற ஸ்தானமானது, தன்னையடைந்ததனை ஓர் கால் நீக்கற்கும், பிரித்தற்கும், அன்றிமாற்றற்கும் ஏதுவில்லாமையால் 'செப்பரிதாயவிடம்' என்ருர்.

மேலாம்பதங்களெல்லாம் விட்டுவிட் டாராய்ந்து
நாலாம்பதத்தி னடந்தனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! தபோதனருக்குங் கிடைத்தற்கரிய ஒப்பற்ற பதவிகளிருக்க, ஆராய்ச்சிசெய்து நாலாவதான ஞானபதவி யுற்றனை. (நாலாம்பதவி, மேலாம் ஞானபதவியென்பார்.)

(கு - ரை.) ஈண்டு நான்காம்பதவியென்றது, இந்திராதி தேவர்கள் பதவிக்கும், மும்மூர்த்திகளின் பதவிக்கும் மேலாய துரியபரவஸ்துவாகிய சிவபரஞ்சோதியைச் சேர்ந்து ஒற்றித்து சச்சிதானநந்தந் தேக்கித்திளைத்து நிற்றலாம்பதவி. (இப்பதவிக்கொப்பு, செப்புவதுதப்பு.) அதாவது - சாயுச்சியமாம்.

கடங்கடங்கடோறுங் கதிரவ னூடாடி
அடங்குமிடந்தானறிந் தன்புற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! (ஜலம் நிறைந்த) பாண்டங்களிலெல்லாம் சூரியரஸ்மிபடும்போது அப்பிம்பம், கடஜலத்தில் விளங்குவதியல்பு. பின்னர்பாண்டம் உடைய, பரிதிவட்டம் பரிதியிடமே சேர்ந்துவிடுவதுபோல அன்புகொண்டு சேரிடமறிந்து சேர்ந்தாய் என்றபடி.

(கு - ரை.) ஈண்டு ஆதவன், நீர் நிறைகடத்தில் பிரதிபிம்பிக்க பின்னர் கடமுடைந்தக்கால் பிரதிபிம்பவட்டசாயை தான் எதற்கண் முதன்முதல்தோன்றியதோ அதன்கண்ணே அதாவது ஆகாயநிலவிய யதார்த்தசூரியன்பால் லயமாவதுபோன்று மாயாகற்பித சரீரம்பாழ்த்தபேறு அதினின்ற பரமாத்மவஸ்து யதார்த்த வஸ்துவாம் இறைவன்பாற் சார்ந்தியங்குமென்பதுபோல எனவறிக. (கடபடம்போன்றது ஜடவுடலென்றூர் வேதாந்தியர்.)

கற்றவனைக்கேட்டவனைக் காணானைக் காண்பவனை
உற்றவனைநின்றதிலே யொன்றுபட்டாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! கற்றவனையும், கேட்டவனையும், காணாதவனையும், காண்பவனையும் அடைந்தவனையும் உள்ள அப்பர வத்துவிலே கலந்துகொண்டனை.

(கு - ரை) எல்லாமாய் அல்லதுமாய் நின்றவொன்றிலேயே நீ அறிந்துசேர்ந்தமை பாராட்டத்தக்க வியப்பாம்.

நாலுவகைக்கரண நல்குபுலனைந்து மொன்றாய்ச்
சீலமுற்றுநின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! கரணநான்கும், விஷயாதிகளில் செல்லும் ஐவகைப்புலன்களும் ஒன்றுபட்டு பரிசுத்தமாகி யமைந்த ஒரு பெரும் பொருளின்கண் கலப்புற்றனையே.

(கு - ரை.) கரணங்கள் நான்காவன: மனம், புத்தி, சித்தம், அகங்காரம். ஆகிய இவைகள் புலன்கள் ஐவகையாவன:—சுவையொளி, ஊறு, ஓசை, மணம் ஆக இவைகளாம் ஆக இவ்வொன்பதும் தத்தனக்குரிய பூர்வவாசனை சேஷ்டிதங்களி னின்றும் ஒழிந்து அனைத்தும் உண்முகமா யடங்கியபோது அவ்வரிய வத்துவுடன் 'சேர்ந்தாய்' என்றார் பெறுந்தகையாளர் என்ப.

விட்டிடமும்தொட்டிடமும் விண்ணிடமு மண்ணிடமும்
கட்டுமொரு தன்மையெனக் கண்ணுற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! நீவிட்டயிடமும், தொட்டுக்கொண்டயிடமும் மண்ணுலகமாய பூலோகமும், விண்ணுலகமாய தேவலோகமுமாகும். இவை அப்பரமன் கட்டளைவழி ஒன்றானதாகக் கண்டுகொண்டனை.

(கு - ரை.) விட்டிடம் தொட்டவிடம் என்னும் இருவுலகங்களும் நிலைமையில் சமத்துவமுடையதுவே, ஆகவே நமக்கிது வேண்

டாமென்று அறிவாலறிந்து இறைவனையே சேர்ந்தது மிகவும் கருதத் தக்கதாகும்

எந்தெந்தநாளு மிருந்தபடி யேயிருக்க
அந்தச்சுகாதீத மாக்கினையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! எக்காலும் யதார்த்தத்திற்கு வேற்றுமையாகாவண்ணமாக ஒரேநிலைமை பெற்று விளங்குவான் சச்சிதானந்தமயமாய்விட்டாய்.

(கு - ரை.) சதாசர்வகாலங்களினும் பேதமின்றி ஒரே மவுனமுற்றுச் சிவானந்தப் பேற்றைப் பெற்றனையென்பார், 'சுகாதிதமாக்கினை' யென்றார்போலும்.

வாக்கிறந்துநின்ற மனோகோசரந் தனிலே
தாக்கறவேநின்றதிலே தலைசெய்தாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! மனவாக்குகளுக்கெட்டாததாகிய அகண்டாகார நிலையிலே தாக்குதலைவிட்டு தலைசிறந்தாய் அதாவது மேன்மைவாய்ந்தனை.

(கு - ரை.) சொலற்கரிதாஞ் சுகாதீத நிலையிலே 'தலைமைவாய்ந்து நின்றனை' யென்றார் போலும்.

எத்தேசமுநிறைந்தே யெக்காலமுஞ் சிறந்து
சித்தாயசித்தினிடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! சர்வ தேசங்களிலேயும் வியாபித்து, எந்தக்காலங்களிலுஞ் சிறப்புற்றோங்கும் மெய்ஞ்ஞானப் பொருளை மேவினாய்.

(கு - ரை.) எங்கணும் எப்பொருளினும் வியாபித்துள்ள ஞானஆனந்தாநுபவ வஸ்துவைச் சேர்ந்து ஞானமயமானாய் என்றபடி.

தாழாதேநீளாதே தன்மயம தாய்நிறைந்து
வாழாதேவாழ மருவினையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! சிறுகாதும், பெருகாதும் எக்காலமும் ஒரே நிலைமைத்தாய் விளங்கிவாழாது வாழவே சேர்ந்தனையே - (வாழாதுவாழ்தல், - பெருவாழ் வெய்துவது.)

(கு - ரை.) சுத்தசிவ பரஞ்சுடரின் திருவருட் சத்தியினைச் சேர்ந்தும், எக்காலமும் அழிவாழ்வின்றி பெருவாழ் வென்பதைச் சேர்ந்ததையே வாழாதுவாழ வென்றூர்போலும்.


உள்ளும்புறம்பு முவட்டாத வானந்தக்
கள்ளருந்திநின்றதிலே கண்ணுற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! அகம்புற மிரண்டிடங்களிலும் தெவிட்டல் செய்யாததாகிய ஆனந்த மது வருந்திவந்து அதிலேயே நோக்கமா யிருந்துவந்தாய்.

(கு - ரை.) எக்காலங்களினும் திளைத்த லில்லாத சிவானந்தாமிர்த மருந்தி யிருந்ததையே கண்ணுங் கருத்துமாய்க் கொண்டிருந்தாய்.

வாதனைபோய் நிட்டையும்போய் மாமவுனராச்சியம்போய்ப்
பேதமறநின்றவிடம் பெற்றனையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! இம்மண்ணுலக வாசனையாய கஷ்டங்களெல்லாந் தொலைந்தும், அதன்மேல் நிஷ்டானுபூதியு மொழிந்து, மிகப்பெரிய ஞானமய மௌனராச்சியத்தை யடைந்து, துவைதமாயில்லாது, ஐக்யபாவமுற்ற பரானந்த யெல்லையி லினிது வீற்றிருந்தாய்.



பட்டினத்தடிகளார் சமாதியிலிரங்கல்.

(கு - ரை.) வாதனையெலாங் கடந்தும், நிட்டையும் கடந்து மோனமாயதுங்கடந்து அப்பாலுள்ள சிற்சுகோதய ஸ்தானம் கிடைத்ததைத் தெரிக.

இரதம்பிரிந்து கலந்தேகமாம் வாறேபோல்
விரகந்தவிர்ந்தணல்பால் மேவினையே நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! பாதரசமானது பிரியினும் உடனே ஒன்றுசேர்ந்து விடல்போல் ஆசைகளைக் களைந்து சிவத்துடனே யேகவடிவாயினை.

(கு - ரை.) மாயாதேவியின் கோலாகலத்தால் சிறிதுபோது பிரிந்து உலகவாதனை யுறினும் பிரிந்த பாதரஸம்போன்று மீண்டும் அப்பர வஸ்துவையே பேதமின்றிக் கலந்ததாயிற்று. அண்ணல் பால் என்றது அணல்பால் என இடைக்குறைந்து வந்தது.

சோதியான்சூழ்பனிநீர் சூறைகொளு மாறேபோல்
நீதிகுருவின்றிருத்தாள் நீபெற்றாய் நெஞ்சமே.

(பொ - ரை.) மனமே! ஆதித்தன் முற்பட்ட பனிப்படலம் அரைக்ஷணத்தில் அகல்வதுபோன்று, நின் அஞ்ஞானங் கெடச் செய்த அருட்குரு மூர்த்தியின் திவ்ய சரணாம்புயத்தை யடையப் பெற்றாய் என்றவாறு.

பட்டினத்துப்பிள்ளையார் பாடல்

முற்றிற்று.

சிவமயம்.

பட்டினத்துச்சுவாமிகள் சீடராகிய

பத்திரகிரியார் வரலாறு.

சத்தியம் நிறைந்த உத்தரதேசத்திலேயுள்ள பத்திரகிரியை மருவியதும், வளம்பொருந்தியதுமாகிய உஞ்சேனைமாகாளம் என்னும் திவ்யதேசத்தை, பத்திரகிரியார் என்னும் க்ஷத்திரியகுலதிலகர் பூர்வம் தருமசாஸ்திரப்படி அரசாண்டு வந்தகாலத்திலே ஓர் தினம் பலதிருடர்கள் சேர்ந்து அப் பத்ரகிரியரசன் மாளிகையிலே களவுசெய்தல் வேண்டுமென்னும் அவாக்கொண்டவர்களாய் நகரப்பக்கத்துள்ள குறுங்காட்டின்கண் ஆலயங்கொண்டமர்ந்தருளும் விக்னேசுரப் பெருமானையடைந்து, தாங்கள் நாட்டங்கொண்டுள்ள வேட்டைபலிக்கச் செய்யவேண்டுமென்று வேண்டுவாராய் வணங்கிச்சென்று அரண்மனையடைந்து நடுநிசியிலே உயர்ந்த இரத்னபரணங்களும் பட்டுபீதாம்பராதிகளும் திரவியாதிகளும் கொள்ளைகொண்டு திரும்புகையில் பிள்ளையார்மீது அன்புற்றவர்களாய் அவ்விநாயகர் கழுத்தில் மாணிக்கமாலையொன்றை சூட்டிச்சென்றூர்கள். அதுசமயம் அந்தகாரமிகுந்த காலமாகையால் அவ்வாலயத்தில் யோர்க்கனவே நிட்டைகூடியிருந்த பட்டினத்தடிகளார் கழுத்

தில் மாணிக்கமாலை விழுந்துவிட்டது. இதுவிஷயம் அவர் அறியார்.

இங்ஙனமாக, பொழுது விடியவே களவாடிய விஷயம் அரண்மனைக் காவலாளர்களால் வெளிப்பட்டு அரசனுக்கறிக்கைசெய்ய, உடனுக மன்னன் மனம் வருந்தி வேவுகாரர்களைக்கொண்டு வெளிப்போந்து கள்ளர்களைக் கண்டறிய ஆக்ஞைசெய்யவே, அப்படியே அவர்கள் சென்று குறுங்காட்டுக்கொடிவழி செல்லும்போது பிள்ளையாராலயந் தென்பட, அப்போதே பிள்ளையார் மாலை கண்முன் பட்டது. உடனே ஒருவன் பைய ஒண்டி ஒளிந்து சமீபஞ் சென்று பார்க்க, கண்மூடி நிட்டைபுரிவதைப்பார்த்து, ஆஹா! இராவெல்லாம் கண்விழித்துக் களவாண்ட பெருந் திருடன் மாணிக்கமாலையை மாட்டிக்கொண்டே குந்திகினு தூங்கிருனடோ அண்ணே ஓடியாங்கடோவென்று கூக்குரலிட, மற்றையோரும் வந்துபார்த்துச் சந்தேகங்கொள்ளாதபடிக்கு தடயத்தை மாரிலேயே மாட்டிக்கொண்டு தூங்கிறது நமக்கு ருசுவாயிட்டதப்பாவென்று பிள்ளைப்பெருந்தகையாளரை அப்படியே அலக்காய்த் தூக்கிக்கொண்டு போய் அரண்மனைசேர்த்து அரசன் முன்விட்டனர்கள். அப்போது பிள்ளையார் சிவபெருமான் செயலோவென்று தன் மார்பிடைபுறளு மாலையைநோக்க, அரசரும் வெளி வந்து பிள்ளையைநோக்க, உடனே அங்குள்ள காவலர் பிள்ளையைப்பிடித்துத் தள்ளிக்கொண்டுபோய் மன்னன் சமீபம் விட்டனர்கள். அரசன் மார்பிடைதுலங்கும் மாலையை

யும் பார்த்தவுடனே யாதொன்றும் விசாரியாது அவரைக் கழுவேற்றிவிடுங்கள் என்று உத்திரவிட்டு அந்தப்புறஞ் செல்ல, அரசனாணையைச் சிரங்கொண்ட கொலைஞர்கள் வெண்காடரை யிழுத்துச்சென்று கொலைக்களமடைந்து கழுமரத் தண்டையில் பிள்ளையாரை நிறுத்தினர்கள். பெருந்தகையார் ஆண்டுள்ள கழுமரத்தைப்பார்த்தார்; அப்போதே அகமுகமாகிக் கூறுகின்றார்:—

"என்செய லாவதியாதொன்று மில்லையினித் தெய்வமே
உன்செயலே யென்றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினையா தொன்றுமில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே."

என்ற திருப்பாடலை யருளிச்செய்தனர். அங்ஙனே கழுமரம் பற்றி யெரிந்துவிட்டது. அவ்வளவில் அங்கிருந்த பரிவாரத்தினர் கண்டு பயந்தோடி நடந்த விவரங்களை அரசனுக்கு விண்ணப்பித்தலும், இறைமகன் திடுக்கிட்டு யாதுந்தோன்றாராய் அச்சமேற்கொண்டு தம்மையறியாத அன்பும் ஆராமையும் பிடர்பிடித் துந்த, என்னையாளுடைய ஆரியமணியோ வந்தருளியதென்று நின்ற நிலையிலே பாதசாரியாகவோடிவந்து, பற்றியெரியும் கழுமரத்தண்டையில் நிற்கும் தவப்பெருமலையாகிய வெமது வெண்காட்டடிகளைத் தரிசித்துக் கண்பெற்றபேறு பெற்றவராய் இவ்வுலகினை முற்றும் மறந்தனர். பின்னர் பகிர்முகப்பட்டு ஐயன் திருப்பாத கமலங்களிலே நமஸ்கரித்தெழுந்து தன்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுவாராயினர். பிள்ளையார்

26

அப்போது ஞானதிருஷ்டியால் பத்திரகிரியாரது சத்திநிபாத உத்தம நிலை யுணர்ந்தாராய் "நாய்க்கொரு சூலும்" என்பதாதியாம் பாடலைத் திருவாய்மலர்ந்தருளி அரசர் பெருமானுக்கு ஞானதீக்ஷை செய்தருளினர். அப்போது பத்திரகிரியார் மனத்துறவெய்தி ஞானுசிரியராய பட்டினத்தார் ஆணையின் பிரகாரம் நின்றருளினர். உடனே வெண்காட்டடிகள் பத்திரகிரி மன்னனைப்பார்த்து 'திருவிடைமருதூர்க்குச்செல்க' யென்று ஆக்ஞாபித்துத் தாம் யாத்திரைசெய்யப் புறப்பட்டனர்.

குருவாணை சிரங்கொண்ட பத்திரகிரியார் திருவிடை மருதூரடைந்து சிவயோகசாதனை யுற்றிருந்தனர். பின்பட்டினத்தடிகள் பற்பல சிவதல சேவைசெய்து ஆங்காங்கு பலபாக்களையும் பாடிக்கொண்டு திருவிடைமருதூரை வந்தடையலானுர். பத்திரகிரியார் வீடெங்குஞ் சென்று பிச்சைகொண்டுவந்து குருநாதனுக்கு முன்னம் படைத்து அருந்துவித்துச் சேடான்ன மருந்தி ஆசிரியர் அகக்குறிப்பறிந்து தாம் மேற்குக்கோபுரவாயிலிலமர்ந்து தினேதினே யிவ்வாறு குருமூர்த்தியை வழிபட்டுவரலாயினர். இங்ஙனம் நிகழ்ந்து வருநாளிலொருநாள் பத்திரகிரியார் பிச்சைகொண்டு ஆசிரியருக்கு நிவேதனஞ்செய்து தான் மிச்சத்தை புசிக்கும்போது, ஓர் பெண்ணுய் மிக்க பசிகொண்டதால் அவரையடுத்து வாலைக்குழைத்து நின்றது; அதுகண்ட பத்திரகிரியார் மனமிரங்கி அச்சுவானத்

திற்கு சொற்ப அன்னமிட்டனர். அதுமுதலாக அச் சுவானமானது அவரைப்பிரியாது அங்கேதங்கலாயத்து.

அந்த நாயானது, தன் முன்பிறவியிலே அங்க தேயத்தின்கண் விலைமகளாயிருந்து இளையார் மூத்தார் கருதாது பலர்பாலுங்கலந்து தேட்டஞ்செய்து மதுவருந்து தல் முதலிய தீயவழிகளில் நின்று விளங்கினள். இங்ஙன மிருக்கும்போது ஓர் தினம் பிரமசாரியொருவர் குருமொழி கொண்டு அன்னத்தைக்கருதி அத் தாசியகஞ் சென்று பிக்ஷைகேட்க, அவள் சில தீயர்களோடுங் கலந்துண்ட மிச் சத்தை அப்பிரமசாரியார்க்கு அன்பிலாது அலெக்ஷியமா யளிக்க, அப்பிரமசாரி அதையேற்றுண்டு சென்றனன். பின்னர் அத்தாசி தான்செய்த இழிந்தபாவகாரியமாய்ப் பெட்டைநாய்ப் பிறவிகொண்டனள். பிரமசாரியார்க்கு சேடத்தையிட்டதின் காரணமாகப் பத்திரகிரியாரிடம் காவல்காத்துக்கிடந்து அவரால் அளிக்கக்கூடிய சேடான் னத்தைப்புசிக்கும் தன்மையை யடைந்தனள். இவ்வாறு கப் பத்திரகிரியார் அந்நாயினைக் காப்பாற்றிவந்தனர்.

இவ்வாறு நடந்தேறும்போது ஓர் தினம் மருத வாணர் ஒரு எளியனுருக்கொண்டு பட்டினத்தடிகளார் பாற்சென்று ஐயனே! மெத்தப்பசியினால் வாடுகின்றேன் "அன்னமிருப்பின் இடுங்கள்" என்று கேட்டனர். அதற் குச் சுவாமிகளார் "மேலைக் கோபுரவாயிலிலே ஓர் குடும்பி யுளன், ஆதலின் அவனிடஞ்செல்க" என்றனர். எளிய வேடதாரியாய ஏழைபங்கன் அவ்வாறே மேலைக்கோபுர

மடைந்து பத்திரகிரியாரைக் கண்ணுற்று ஐயா! கீழைக் கோபுரத்தடியில் ஓர் பெரியாரிருக்கின்றார், அவரை யான் அன்னமிடக்கேட்டனன், அவர் மேலைக் கோபுரவாயிலில் ஓர் குடும்பியிருக்கின்றனன், அவன்பால் செல்வீர் எனக் கூறினார்; அவர் உத்திரவுபிரகாரம் யான் இவ்விடம் வரலானேன் என்பசியை நீக்கும் என்றனர். அவ்வார்த்தை கேட்ட பத்திரகிரியார், அந்தோ! "பிச்சையெடுக்கும் இவ்வோடும் எச்சிலருந்தும் இந்த நாயுமோ எளியேனைக் கேவலம் குடும்பஸ்தனுக்கின" என்றுகூறிக் கையிலிருந்த ஓட்டை யெறிந்தனர். அந்தவோடு நாய்தலைமீது தாக்கவே ஓடும் உடைந்து நாயு மரித்தது. மருந்தவாணரும் மறைந்து மாயமாயினர்.

உடனே, மரித்த நாயானது மெய்ஞ்ஞானியரது எச்சிலைப்புசித்த மேன்மையினாலே காசிமகாராஜனுக்குப் புத்திரியாய்ப் பிறக்கலாயிற்று. பின்னர் அக்காசிமன்னன் அப்பெண்குழந்தைக்கு மிக்க ஆர்வத்தோடும் ஞானவல்லி யென்னும் பெயர்சூட்டிக் காப்பாற்றிவந்தனன். அந்த ஞானவல்லிப்பெண் நாளொருவண்ணமாய்வளர்ந்து மணப்பருவம்பெற்றனள்; அரசன் ஞானவல்லியின் நல்லறிவு, குணம், செய்கைக் கேற்றவாறாக ஓர் நாயகனைத்தேடி முயற்சிசெய்துகொண்டிருந்தனன். அஃதுணர்ந்த ஞானவல்லியாள் ஓர் நாள் தன் பிதாவிடமணுகி ஐயனே! யான் எவருடைய வாழ்வுக்கும் உரிமைப்பட்டவளல்ல; ஆனால் திருவிடைமருதூரிலே மேலைக்கோபுர வாயிலின்கண் எழுந்

தருளியிருக்கின்ற தவசீலருக்கே யுரியவளாவேன் எனக் கூறினள்; மன்னன் பெண்ணின் அம்மனவுறுதிகண்டறிந்தவனுய் அந்த ஞானவல்லியாளைத் திருவிடைமருதூர்க்குக் கூட்டிச்சென்றபோது ஞானவல்லி பத்திரகிரியாரைக்கண்டு வணங்கி, "அடிநாய் மறுபடியும் திருவடிநாடி வந்தது" என்றனள்; பத்திரிகிரியார் அன்னவள் பக்குவத்தினையறிந்து அவளது கையைப்பற்றிக்கொண்டு சென்று கீழைக்கோபுரவாயிலிலே வீற்றிருந்தருளும் தம் ஞானுசிரியவள்ளல் முன்பாகநிறுத்தி, சுவாமி! "தேவாள் உச்சிட்டமுண்ட நாய்க்கும் இந்த இழிந்த பிறவி கிடைக்கலாகுமோ" என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டினத்தடிகள் "எல்லாஞ் சிவன்செயல்" என்று திருவருளைத் தியானமுற, அப்போது ஓர் பெருஞ்சோதி தோன்ற, அதில் பத்திரகிரியாரும் பெண்ணும்புகுந்து இரண்டறக் கலந்தனர்.

பத்திரகிரியார் திருநக்ஷத்திரம்.

பத்ரகிரிமன்னன் பரஞ்சோதி யுற்றதினஞ்
சித்ரைமதி மக நாளெனத் தேர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திரகிரியார் அருளிய

மெய்ஞ்ஞானப்புலம்பலும்

உபயார்த்த தீபிகையுரையும்.

கணேசர் துதி.

முத்திதருஞான மொழியாம் புலம்பல்சொல்ல
அத்திமுகவன்றன் அருள்பெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) மோட்சார்த்த மளிக்கும் மெய்ஞ்ஞானப் புலம்பலை யான்பாடுதற்கு யானைமுகத் தண்ணலார்தந் திருவருள் கிடைக்கப்பெறுதல் எப்போதோ?

(கு - ரை.) பாடத்துவக்கிய ஞானமொழிப் புலம்பல் இடையறாது இனிது முடிதல் வேண்டி இங்ஙனம் முதற் பாசுரத்திலே கணநாதரைத் துதிபுரிந்தனர்போலும். தொந்தித்திருந்த பந்தபாசாதிகள் எச் சமயம் நீங்கப்பெற்றதோ அப்போதே முத்தி சித்தித்ததாயிற்று. இம்முத்தியும், ஞானமலது கூடாதாகலின் ஞானமொழி யென்றார் பத்திரகிரி பெருமான்.

"கற்பங்கடோறு நிலைநிற்க வீறுசித்திசெய்தும் ஞானமலது கதி கூடுமோ" என்றார் தாயுமானார்.

"கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்தங் கருத்தி ஞேக்கரிய நோக்கே" என்றூர் மணிவாசகர் தந்திருவாசகச் சிவ புராணத்துள். "ஞானத்தான்முக்க ணீசனுக்காட்படல் முற்றிலு மரிதே" என்றூர் சி - வள்ளலாரும். அத்திமுகவன் - யானைமுக வன். ஞான சம்யோக பிரயோக விவேகமாதலின், ஈண்டு 'ஞான மொழிப் புலம்பல்' என்றனர்.

நூல்.

ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) ஆணவத்தைத் தலையெடாதபடி அடக்குவித்து ஐந்து இந்திரியங்களையும் தத்தம் வினையிற்செல்ல வொட்டாதடக்கி அவத்தையாகிய நித்திரைசெய்யாது யோருரக்கங்கொண்டு சுகித்தி ருப்பதுவும் எந்தக்காலம்.

(கு - ரை.) ஆணவமே - ஆங்காரமென்ப. இதனைக் கொடுங் கிழங்கென்றூர் ஓர் பெரியார். ஆணவமே மாயாசத்தியாகும். இது வொழியின், மற்றவெல்லாம் தான்தானே வெகு சுலப சாத்தியமாக ஒடுங்கிவிடும். தூங்காமல் தூங்கியென்பது சுழுத்தி தூக்கங்கொள் ளாது அறிவின்முழிப்பாய் யோகநிட்டையிலிருந்து அறிவுமயமாக ஒன்றுபட்டிருந்து சுகானந்த முறுவது எந்தக்காலம்.

நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம்.

(பொ - ரை.) நடு நீங்காமலே யோகநித்திரை புரிந்துவந்து திளைப்பிலாது கிருபாப்பிரவாகம் பெருகுவது எந்தக்காலமோ?

(கு - ரை.) சமயம் நேர்ந்துழி யோகசாதனை செய்வது தக்க தன்றென்றே 'நீங்காத சிவயோக நித்திரை' யென்றூர். அதாவது

யோகமூலமாக அந்தர்முகத்தே சிவதரிசனஞ் செய்வதே யோகநெறி யென்பார் மேலோர். சிவயோகநித்திரையிற் றேர்ந்தோர் அந்தக்கரணாதிகளை அகற்றித் திருவருளையே தியானித்திருந்து திளைத்தல் ஏற்படுவதால் தேங்காத கருணைவெள்ளம் வந்து பொருந்துவது எச்சமய மெனலாயினர்.

தேங்காக் கருணைவெள்ளந் தேக்கியிருந் துண்பதற்கு
வாங்காமல் விட்டகுறை வந்தடுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) தெவிட்டுதலில்லா அவனது அருட்பெருக்கானது மிகுதியுற்றுவிளங்க அதிலே ஊன்றி யனுபூதி செய்தற்கு வேர்க்கனவே புசியாக்குறை வந்தியங்குவது எப்போது?

(கு - ரை.) தேக்கியிருந் துண்பதற்கு - அருள் வெள்ளப் பெருக்கை அநுபூதி செய்தற்கு என்பது வாங்காமல்—பின்வாங்காது முனைப்பா யிருத்தற்கு விட்டகுறை - ஈண்டு அநுபவியாச் சேடமென்ப. சஞ்சித கன்மம் பாழ்த்தவிடத்தே திருவருள் நம்பாலடையு மென்க.

ஓயாக் கவலையினு லுள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) ஒழியாத துக்கத்திஞலே உள்ளம் கலங்கி வாட்டமுற்றுச் சலியாது, நீக்கமிலா பிறப்பிறப்பைப் போக்கி நித்திய தேகம் பெற்றுய்தல் எப்போது.

(கு - ரை.) உலக அநுபவாதிகளிலே ஆசையுறுங்காறும் மனக் கவலை நீங்குதலின்றி, எப்போதும் பிறந்திறந்து கொண்டேதானிருக்கும். மனிதசரீரம் பெற்றுவந்ததோ, பிறவியை யொழிக்குமாறே; ஆகலான் மக்களாய நாமெல்லோரும் சரியை யாதியன புரிந்து வரல்வேண்டு மென்றபடி.

மாயாப் பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயா புரிக்கோட்டை கைக்கொள்வ தெக்காலம்.

(பொ - ரை.) என்றும் நீங்காத பிறப்பின் மயக்கந் தொலைத்துச் சரீரமெனும் கோட்டையினை ஸ்திரமாகச் செய்வது இனியெக் காலமோ?

(கு - ரை.) பிறந்திறவாத பெருவாழ்வெய்த வேண்டிய தவ நியமாகும். ஆனால் அதற்காக, காயமாகிற சரீரம் சித்திபெற்றிருத்தல் வேண்டுமென்க.

காயா புரிக்கோட்டைக் கைவசமாய்க் கொள்வதற்கு
மாயா வனுபூதி வந்தடுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) இவ்வுடலம் நிலைத்தற்குத் தக்க சுவாநுபூதி நேர்தல் எப்போதோ?

(கு - ரை.) சரீரம் சித்திபெற வேண்டுமேல் சுவானுபூதியாலாகும். எவ்வாறு? திருமூலர் திருமந்திரம்:—

பிண்டத்து ளூற்ற பிழக்கடை வாசலை
யண்டத்து ளூற்று வடுத்தடுத் தேகிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழன் மாதரார்
கண்டிச் சிக்குநற் காயமு மாகுமே.

சேயாய்ச் சமைந்து செவிடூமை போற்றிரிந்து
பேய்போ லிருந்துன் பிரமைகொள்வ தெக்காலம்.

(பொ - ரை.) யான் இனி ஓர் ஆண்மகனாய்த் தோன்றி செவிடனைப்போன்று யாதாமோர் விஷயத்திற்கும் காது கொடாதும், ஊமையனைப் போன்று வாய்ப்பேச்சை ஒடுக்கியும், சாமானியனாய்த்

திரிந்து பேய்ப் பற்றியதுபோல வாழ்நாள்கடத்தி, இவ்வளவுமான பின்னர் எம்மான்றன் ஆசைப் பித்துக்கொள்வது எந்நேரம்.

(கு - ரை.) மனிதப்பிறப்பெய்தி ஐம்புலாதிகளை யொடுக்கி மேலே தத்தம் நிலைமைக்கேற்றவாறு செல்ல வொண்ணாது தடுத்து அகமுகமாக்கித் தியானத்திருத்தலே அவசிய மென்பார், 'செவிடு ஊமைபோற் றிரிந்தென்றார்' இதனால் பஞ்சேந்திரியங்களை விஷயாதிகளில் செல்லவொட்டாதடக்க வேண்டுமென்பது பெற்றாம். சீவர்காரியங்கள் சிவன்செயலாமாறு பேயெனத்திரிந்து 'நின்பால் பிரமிப்புக் கொள்வதை'க் கூறினார்போலும் "சிந்தையில் சிவத்தைக்கொண்டார் சிவமதே யாவர்கண்டா" யென்றார் திருமூலர்.

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்துபெண்ணைத்
தாய்போ னினைத்துத் தவமுடிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) பிசாசம்போல் அலைப்புண்டும், சவம்போன்று ஓர்பக்கலிற் கிடந்தும், உலகமாதர்களைத் தாயாராகக் கருதியும் தவமுடித்து வரல்வேண்டும். ஆனால் இது எந்தக்காலம் ஒன்றுபட்டு முடியுமோ?

(கு - ரை.) பேயெனத்திரிந்து பிணமெனக் கிடந்து பெண் மக்களைத் தாயர்போல் நினைத்தலே தவச்செயலாக் கொள்ளலாம்.

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகங்காட்டி
மால்காட்டு மங்கையரை மறந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) காலினழகையும், கைவீச்சின் அழகையும், கண்களின் சுழலழகையும், முகவசிகர அழகினையும் காட்டி மயக்கத்தை யூட்டிவரும் பெண்மக்களை மறத்தல் எந்தக்காலமோ?

(கு - ரை.) மாயாவிசேடத்தால் மதிமயங்கி அம்மாதர்கள் மயக்கில் சிக்கி எம்மானைமறந்திருக்கும் காலத்தை அதிதீவிரதாப் பக்கு

வத்தால் எதிர்நோக்குடையார் என்று தோன்றியமைக்கு, ஈண்டு அருட்பிரகாச வள்ளலாரும்:—

"பொன்னாசை யோடும் புலைச்சியர்தம் பேராசை
மன்னாசை மன்னுகின்ற மண்ணாசைப் பற்றறுத்தே
யுன்னாசை கொண்டேயென் னுற்றியப்பா நான்மகிழ்ந்துன்
மின்னாரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனோ" என்று திருவாய்மலர்ந்தமை காண்க. மங்கையர் - ஈண்டு விலைமாதரை.

பெண்ணி நல்லாராசைப் பிரமையினை விட்டொழிந்து
கண்ணிரண்டு மூடிக் கலந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) வனப்புடை மாதராசை யென்கின்ற பெரும் பித்தை யொழித்து பகிர்முகவிஷய பராக்கற்று அந்தர்முகமாக எம் மானோடும் அத்துவிதமா யமர்வதும் எந்தக்காலமோ தெரியவில்லேன்.

(கு - ரை.) மங்கையர் சங்கமம் என்று மறக்குமோ அன்றே அத்னருள் தனக்காட்படுவோம் என்பது சித்தாந்த முறையாம். சான்றாக அருட்பிரகாச வள்ளலார்.

பித்தளைக்குங்காமப் பெரும்பேய் மயக்குமயல்
வித்தனைத்தா மாணவம்பொய் வீறுமழுக்காறுசினங்
கொத்தனைத் தாம்வஞ்சங் கொலைமுதலாம்பாவங்க
ளித்தனைக்குநான்கா ணெழுத்தறியும் பெருமானே. என்றனர்.

வெட்டுண்ட புண்போல் விரிந்தவல்குற் பைதனிலே
தட்டுண்டு நிற்றல் தவிர்வதுவு மெக்காலம்.

(பொ - ரை.) கத்தியால் வெட்டிய புண்போன்று பிளவுகா ணும் நிதம்பப்பையினில் அழுந்தி பற்றிக்கிடப்பதை நீக்கி நிற்பது எந்தசமயமோ?

(கு - ரை.) வெளி. மாதர்போகம் கூடாதென்பது நான் மறைகள்.

ஆறாத புண்ணி லழுந்திக் கிடவாமல்
தேறாத சிந்தைதனைத் தேற்றுவது மெக்காலம்.

(பொ - ரை.) ஆறுதலில்லாப் புண்ணினிலே ஆசைவைத்துக் கெடாமல் சித்தத்தைச் சுத்திசெய்து திடப்படச் செய்வதும் எந்தக் காலமோ?

(கு - ரை.) ஆறாப்புண்=பெண்கள்குறி. மற்றவை வெளி.

தந்தைதாய் மக்கள் சகோதரரும் பொய்யெனவே
சிந்தைதனிற் கண்டு சிக்கறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) அன்னை, பிதா, புத்திரர்கள், உடன் பிறந்தார்கள் ஆய இன்னோரெல்லாம் சதமல்லர்; அநித்தியங்களே, யென மனதில் திடங்கொண்டு இவர்களது ஆசையறுவது எந்தக்காலமோ? அறியேன் என்றபடி.

(கு - ரை.) இவர் நமக்குத்தந்தை, இவர்தாயார், இவர்புத்திரர், இவர்மித்திரர், இவர் சுற்றத்தார் என்று எண்ணி அவர்களையே பொருளாக்கொண் டொழுகுதல் முறையன்று.

“ தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ர ஜாலக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே ” யென்றும் பிறவுங் கூறினர் தாயுமானர்.

மன்னுயிரைக்கொன்று வதைத்துண் டுழலாமல்
தன்னுயிர்போ லெண்ணித் தவமுடிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) நம்மினும் எவ்வளவோ பங்கு கீழ்ப்பட்டதானதும், அறிவு, வார்த்தை முதலியன வற்றதுமான அற்பபிராணிகளை வதைசெய்து அதன்மாமிசத்தை யுண்டுகளியாது அவைகளைத் தன்னைப்போன்றே கவனித்து வந்துதான் தவத்தினைக் குறைவுபடாது முற்றுப்பெறச் செய்து கொள்வது எந்தசமயமோ!

(கு - ரை.) 'தன்னுயிர்போன் மன்னுயிரை யெண்ணுவதே சரியை' யென்றார் மேலோர். 'தன்னூன்பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பானெனல் எங்ஙனமாளுமருள்.' என்றும், 'கொல்லான்புலாலை மறுத்தானைக்கைகூப்பி எல்லாவுயிருந்தொழும்' என்றார் திருக்குறளார். "கொல்லாவிரதம் குவலயமெல்லாமோங்க, எல்லார்க்குஞ்சொல்லுவதென் னிச்சைபராபரமே" என்றார் தாயுமானர். 'நோன்பென்பதுவே கொன்றுதின்னாமை' என்றார் ஔவையார்.

பாவியென்றே பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல்
ஆவிநின்ற சூத்திரத்தை யறிவதினி யெக்காலம்.

(பொ - ரை.) மகாபாவியெனும் பெயர்கொண்டு தீயநரகத்திலாழாது ஜீவான்மா நிலைபெறும் சூட்சத்தைத் தெரிந்துகொள்வது இனி எக்காலமோ!

(கு - ரை.) உலகத்துள்ளளவும் 'உத்தமன்' என்று எவரும் எப்போதும் கொண்டாடத்தக்க தகைமையாளனாய் வாழ்தலே மிக மேலாய வாழ்க்கையாம். அக்கருத்துகொண்டே பிள்ளைப்பெருந்தகையாளரும் முற்பாகத்திலே,— "ஆவியொடுகாய மழிந்தாலுமேதினியிற், பாவியென்ற நாமம் படையாதே" என்றார்கள்.

உளியிட்ட கல்லு முருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவ தெக்காலம்.

(பொ - ரை.) உளியினாலே செய்துள்ள கல்விக்கிரகங்களும், உருவமாயமைக்கப்பெற்ற சுண்ணவிக்கிரகங்களும், புளியால் சுத்தப் படுத்திய செப்புவிக்கிரகங்களும் தெய்வீகத்தன்மை தோன்றியருள் வது எந்தக்காலமோ!

(கு - ரை.) கருங்கல், செம்பு, சுண்ணம் என்னு மிவைகளால் ஆச்குவித்துள்ள தெய்வவிக்கிரகங்களை ஆலயத்தில் ஸ்தாபித்து வணங்கும் விக்ரசாராதனமே இந்தியர்களான ஆஸ்திகர்களுக்கு அநாதிகாலந்தொட்டு நாளதுவரையில் நடந்தேறிவந்த ஆண்டவன் வழிபாடாகும். இவ்வழிபாட்டினை அவ்வந்த முத்திறப்பட்ட மூர்த்தங்களும்கொண்டு அன்பு மீதுற அவ்வவ் வான்மகோடிகளை சம்ரக்ஷித்து அநுக்ரகாதி முதலியனவும் அந்தந்த விக்ரகமூலமாகவே செய்துவந்தமை பன்னெடுங்காலப் பழமறைகளும் சாஸ்திராதிகளும் மற்றுமுள்ள புராணேதி காசாதிகளும் முழக்கியுள்ளமை மிகவிகவித மாம்.

ஆகவே, கல்லாயினும், அல்லது செம்பாயினும், அன்றிச் சுண்ணமாயினும் அத்தெய்வாம்ஸங்களை அந்த பூதபௌதிகப் பொரு ளாய்ப் பாராது, சாக்ஷாதான பரதெய்வங்களாயே பார்த்து பத்தி மீதுறவணங்கியும், துதித்தும், தியானித்தும் வந்து, வேண்டியவரப் பிரசாதங்களும்பெற்று முத்தியுமடைந்து வந்ததே இத்தெய்வத் தமிழ் நாட்டிற்குரிய பல மகாத்மியங்களி லொன்றாகும்.

மேற்கூறியுள்ள மூவகைத் தெய்வங்களும், தன்னைவணங்கிப் பத்திசாதிப்பார் மனோதிடம் எம்மட்டோ அம்மட்டாகவே அத்தெய் வத் திருவருட்பயனும் ஆன்மாக்கள் அடையப்பெறுவர். ஆகவே பத்திநெறியின் முதிர்ச்சியே காரணமாகும். இவ்விதபத்திமுதிர்ச்சி

யானது புறச்சமயிகளுக்கு இல்லாமையால், அவர் அவ்விக்கிரக வழி பாட்டால் பயனெய்த வியலாமைகொண்டு நம் அரிய அறுசமய வழிபாட்டினையிகழ்ந்து எரிவாய் நரகத்திற்காளாகின்றனர். அவை கிடப்ப ;!

ஈண்டு நம் பத்திரகிரி மன்னராம் பெருந்தகையாளர் தந் தேக அநித்தியத்துவத்தைக்கருதி எம்பெருமான் திருவருள் வாய்க்கப் பெறுதற்கு கால அளவு நீடிக்கின், தேகம் நிலையற்றதாயிற்றே யென்றஞ்சி அங்ஙனம் அம் "முப்பொருளும் எப்பொழுது முன் வந்தருளுமோ" என்று தமக்குள் தாம் வருந்தியதேயன்றி அம் மூவகை விக்ரகாதிகளும் பொருளாகமாட்டாதென்ற கொள்கை யுடையதன்றாம், சான்றாக.—

"மந்திரமுந்தேவு மருந்துங் குருவருளுந்
தந்திரமுஞானந் தருமுறையும்—யந்திரமு
மெய்யென்றால் மெய்யாய் விளங்குமே மேதினியில்
பொய்யென்றால் பொய்யாகிப் போம்" என்ற சுருதி கவனிக்

கத்தக்கது. இவர்கருத்து விக்ராராதனங் கூடா தென்பதாயின், இவர்முதற்கண் விநாயகபெருமானைக் குறித்து துதிசெய்யாரென் பது தெரிந்துகொள்க.

வேடிக்கை யுஞ்சொகுசு மெய்ப்பகட்டும் பொய்ப்பகட்டும்
வாடிக்கை யெல்லா மறந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) பலவித காக்ஷியிலும், உல்லாசநடையிலும், தன் னலங்காரத்திலும், பகட்டாகப் பேசுதலிலும், வீணாக போதுபோக்கு வதை யினி மறந்தொழிவது எந்தக்காலமோ.

(கு - ரை.) இடம்பார்த்த நடபடிக்கையை இழித்துக்கூறி மறுத்தல் செய்கின்றார் போலும்.

பட்டுடை பொற்பணியும் பாவனையுந் தீவினையும்
விட்டுவிட் டுன்பாதம் விரும்புவது மெக்காலம்.

(பொ - ரை.) பட்டு வஸ்திரங்க ளென்ன, பொன்னுபரணு திகளென்ன, போலியாக நடபடிக்கை செய்வதென்ன, பாவச்செய லென்ன இவைகளை யொழித்து தேவரீர் தம்திருவடிச் சேவை செய்து வாழ்வது எந்தக்காலமோ!

ஆமைவரு மாட்கண் டைந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை யுருக்கொண் டொடுங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) தன்பால் மனிதர் வருவதறிந்த ஆமை தனது அவயவாதிகளை உள்ளடக்கமாக வொடிக்கி வருவதுபோன்று ஞான வரம்பா மோனமுற்று இங்கே அகமுகமா யிருந்துகொண்டு, புறஞ் செலும் புலனைந்தை யொடுக்குவதும் இனி எந்தக்காலமோ?

(கு - ரை.) ஆமை தன்கால் தலை இவைகளைத் தனக்குச் சலன மேற்பட்டபோ தொடுக்கிக் கொள்வது இயல்பாம். இக்காரணங் கொண்டே அதற்குரிய நாமங்களுள் 'ஐந்தடக்கி' யென்றும் ஓர்பெ யர் பூண்டிருக்கிறது. திருவள்ளுவர் குறள்பாடும்போது இதன் சுபாவத்தைத் தவசிகளின் ஐம்பொறியடக்கற்கு உவமித்துள்ளார் "ஒருமையுளாமைபோல் ஐந்தடக்கலாற்றின்—எழுமையும் ஏமாப் புடைத்து" என்றபடி.

தண்டிகையுஞ் சாவடியுஞ் சாளிகையு மாளிகையும்
கண்டு களிக்குங் கருத்தொழிவ தெக்காலம்.

(பொ - ரை.) பல்லக்கென்ன, சாவடிசத்திரமென்ன, பணப் பை வீடு இவை முதலியவைகளைப் பார்த்து மகிழ்வடைய ஆசைப் படுவது எக்காலம் நீங்குமோ!

அத்த னிருப்பிடத்தை ஆராய்ந்து பார்த்துநிதஞ்
செத்த சவம்போற் றிரிவ தினி யெக்காலம்.

(பொ - ரை.) பிண்டமாகிய சரீரத்துள் சிவபராஞ்சுடரார் வீற்றிருந்தருளுவதை ஆராய்ந்தறிந்து தினநிதமும் பிணத்தை யொத்துத் திரிந்துலவுவது எந்தக்காலம்.

(கு - ரை.) அத்தன் - எவற்றிற்கு முன்னேன், கடவுள். இந்த சிவபெருமான் நம்முள்ளே வீற்றிருக்கும் ஸ்தானமாவது தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற்பட்ட அதீதவஸ்துவை அறிவா லறிந்து கொள்வதுவாம். (மேலே குருவாலுணரற்பாற்று) பிரேத அலங்காரத்தினை பிணம் அறிதலில்லை, அதுபோல், உலகோரது பூஷிப்பும் தூஷிப்பும் பொருட்படுத்தாதும், சரீரத்தில் அபிமானம் வையாதும் நிற்றலையே 'செத்தசவம்போற்றிரி' என்றார். திரி, திரிதல், அதாவது ஞானி நிலையாய் மாறிநிற்றலையென்க. இக்கருத் தினையே இவரது ஆசிரியராய வெண்காட்டடிகளும் 'செத்தாரைப் போலேதிரி' என்றோர் பாசுரத்தில் அருளியதறிக. சான்ருக வள்ளலார்.

ஆருறு தத்துவத்துக் கப்பா லதீதத்தே
வேருகத் தம்மை விசாரித்தும் - கூருக
வானந்தந் தாமென் றறியா வறிவிலிக
ளானந்தந் தேடி யலையும்.

ஒழிந்ததரு மத்தினைவைத் துள்ளெலும்பு வெள்ளெலும்பாய்க்
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) சாத்திரமுறையில் பதிபுண்ணிய மாற்றி, சரீர என்பனைத்தும் பரிசுத்த எலும்பாய், மாம்ஸமொழிந்த பிரேதம்போன் றிருந்து எம்மானைக் காண்டல் இனி யெப்போதோ!

(கு - ரை.) இங்கே, தருமமாயது புண்ணிய காரியத்தின் மேலதாம்; உள்ளெலும்பனைத்தும் பரிசுத்த தாவள்ய என்பாக மாம்சமொழிந்தமை; அதாவது சரீரம் வாடி, யென்க. (ஒழிந்த கருத்தினையெனவும் பாடம்.)

அற்பசுக மறந்தே யறிவையறி வாலறிந்து
கொப்பத்தில் வீழ்ந்துகொண்டு கோளறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) உலகாகிய பள்ளத்திற்கிடந்து கேவல யின்பத்தினை யொழித்து அறிவுமய சொரூபத்தை தன்னறிவினாலே யாராய்ந்தறிந்து அஞ்ஞானந் துலைத்தல் எந்தக்காலமோ!

(கு - ரை.) கொப்பம் என்பது படுபள்ளமாம். இங்கே கோளாவது - குற்றமாகும். அதாவது அவித்தையென்க. ஈண்டு அறிவென்றது சிவத்தையாம். 'அறிவே சிவமென் றறிவா ரிலையே' யென்றார் திருமூலரும். "அறிவுக்கறிவா யவிகாரியாகி, நிறைதல் பதிநிச்சயம்" என்றார் சி - வள்ளலார்.

அறிவுசிவ மிரண்டென்ப ரறிவிலார்
அறிவுசிவ மாவதாரு மறிகிலர்
அறிவுசிவ மாவதாரு மறிந்தபின்
அறிவே சிவமா யமர்ந்திருப்பாரே. திருமந்திரம்.

கருப்பத்தி என்னையமன் கைப்பிடித்துக் கொள்ளாமுன்
உருப்படுத்தி யாள வுடன்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) யான் மனிதயோனியில் வந்தபின்னர் நமனார் என்னை நாடிவருதற்கு முன்னதாக சாரூபமளித்து அநுக்கிரகிப்பான் கருதுவது எக்காலமோ!

(கு - ரை.) மானிடராய்ப் பிறந்தபின்னர் நமன் கைக்குள் அகப்படாதபடி சிவகதி யடையுமாறு தவமுனைற்றலே தகுதியென்

பார் 'கைப்பிடித்துக் கொள்ளாமுன்' என்றார். நமன்கைக்கெட்டாது சிவன்கழற் காட்படல் வேண்டுமாயின் தொண்டராய் நின்று பணி பலபுரிதல் வேண்டுமென்பதே துணிபாம். 'மார்க்கண்டர்க்காக மறலி பட்ட பாட்டையுன்னிப், பார்க்கிலன்பர்க்கென்ன பயங்காண் பரா பரமே' என்றார் தாயுமானார்.

தூண்டு விளக்கணையத் தொடர்ந்திருள்முன் சூழ்ந்தாற்போ
மாண்டு பிழைத்துவந்த வகைதெரிவ தெக்காலம். [ல்

(பொ - ரை.) பிரகாசிக்கும் தீபமானது நின்றுபோக, பழய இருளானதுவந்து மூடிக்கொள்ளுவது போல, இறந்தும் பிறந்தும் காலங்கழித்துக்கொண்டு வந்தால் ஜனனம் வந்தமைக்கு காரணந்தெரிந்து அவ்வழிநடப்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) ஒளியும் இருளும் எவ்வாறு மாறிமாறி வருகின்றனவோ அவ்வாறே ஜனனமும் மரணமும் உண்டாகின்றன் வென்றபடி. இந்தச்சரீரம் நமக்குக்கிடைத்தது நாம் மேலான மோக்ஷ சுகத்தைப் பெறுதற்கேயன்றி வேறென்றாதலின் அதனை ஆராய்ந்தறிந்து அதற்குரிய தவத்தில் பிரவிர்த்திக்க வேண்டுமென்பதே ஆசிரியர் கருத்தாம். "இப்பிறவிதப்பிஞ லெப்பிறவிவாய்க்குமோ யாதுவருமோ வறிகிலே" னென்றார் தாயுமானார்.

தூரியின் மீன்போற் சுழன்றுமனம் வாடாமல்
ஆரியனைத் தேடி யடிபணிவ தெக்காலம்.

(பொ - ரை.) மீன், வலையிலகப்பட்டுக் கொண்டதுபோன்று மனமானது பதைபதைத்து வருந்துதலொழிந்து, சற்குருநாதன் வாய்க்கப்பெற்று அவரது அடிமலரினை நம்முடிக்கணிந்து கொள்வது எந்தக்காலம் நேருமோ?

எண்ணா றுகமிருந்து மெய்தாத வீடுபெற
வெண்ணீறு பூசி விளங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) எண்ணூறு யுகங்களாக இவ்வுலகின்கண்ணி ருந்து வாழ்ந்தவரினும், பெறுதற்கரிய மோட்ச சாம்பிராச்சியத்தை யடையவேண்டி வெண்ணிற விபூதியணிந்து வாழ்வது எந்தக் காலமோ.

(கு - ரை.) எவ்வளவு காலம் இவ்வுலகத் திருப்பினும் விபூதி யணி சைவசமயத்தைப் பெற்றே தான் முத்திபெறவேண்டு மென் பது முடிபாம். விபூதி=மஹைதைஸ்வரியம். ஈண்டு அருட்சத்தி யினது குறியாம். அன்றியும் குற்றமற்ற பளிங்கனைய மனத்தைக் காட்டும் ஓர் குறியுமாம். இது பெரியார் முடிபு.

'மனமாசுடையார் அணிநீற்றால் பயனொன் றடைய மாட்டார்' என்றார் ஓர் உரையாசிரியர். ஆயின், 'உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்பக்கேட்டு' என்பதாதி பாடலை பரஞ் சோதியாரும், 'வெந்துயர் தீர்ப்பதுநீறு' 'போதந்தருவதுநீறு' 'முத்திதருவதுநீறு' 'பத்திதருவதுநீறு' 'பெருந்தவத்தோர்களுக் கெல்லா, மாசைகெடுப்பதுநீறு' 'பாவமறுப்பதுநீறு' என இவ் வாறாக நமது பரமாசிரியராம் ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகளும் திரு வாய் மலர்ந்துள்ளார்கள்.

மற்றும். "சங்காளன்பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற்பூச மகிழ்விரே யாமாகிற்
றங்காவினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே." என்று திருவாய்

மலர்ந்துள்ளார் திருமூல பரமாசிரியரும். ஆகவே திருநீற்றின் மான் மிய மிங்ஙனமாக, ஆசிரியர்மேற் கூறிப்போந்தமை எக்காரணமோ வெனச்சிலர் ஐயுறுவராதலின், அதற்குச் சமயம் நேர்ந்துழி விரித் துரைக்கப்படும் என்பதை அறிதல் வேண்டும்.

அவவேடம் பூண்டிங் கலைந்து திரியாமற்
சிவவேடம் பூண்டு சிறந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) பொய் வேடங்கள்கொண்டு உலகில் அலைந்து கெடாதபடி, உண்மைச் சிவவேடந் தரித்து பெரும் புண்ணியத்திற் காளாவது எந்தக்காலமோ!

(கு - ரை.) அவவேடமாவது மெய்யறிவும் மெய்யொழுக்கமு மின்றிப் போலித் தவசீலர்கள்போன்று சிவசின்னங்களைத் தரித்துக் கொண்டு தீயகாரியாதிகளைப் புரிந்துகொண்டு படா டோபமாக விளங்கி யாதொரு பத்திமார்க்கத்திலும் ஈடுபடாது வெறும் வாசா ஞானம் பேசி வயிறுவளர்த்துக் கொண்டு திரிவர். விபூதி - மனமா சொழிக்கும் பரிசுத்தத்தைக் குறிப்பிடும். உருத்திராக்கம், காருணி யத்தை விளக்கும்.

அண்டருக்கா நஞ்சருந்தி அம்பலத்தி லாடுசிவன் [லம்.
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய லெக்கா

(பொ - ரை.) தேவர்கள் உய்யுமாறு விஷபானஞ் செய்தவ ரும், ஸ்ரீ சிதம்பராலய சிற்சபையின்கண்ணே ஆனந்தத்தாண்டவஞ் செய்யாநின்றவருமாய சிவபெருமானது அடியார்களுக்கு அடிமை யென அன்னார்க்குத் தொண்டுசெய்வது இனி எந்தக்காலமோ!

(கு - ரை.) ஸ்ரீ சிவபிரான் விஷபானஞ்செய்த விவரத்தினை காந்தமுதலாய சிவபுராணத்துள் விரிவாய்த்தெரியவரும். சாக்ஷாது சிவபெருமாற்குச் செய்யும்பணியைக் காட்டிலும் அவரடியார்க்குப் பணிபுரிதலே மிகமேலாயதாம். சான்றாக சுந்தரமூர்த்திசுவாமிகள் 'தில்லைவாழந்தணர்தம் மடியார்க்குமடியேன்' என்பதாதியாம் பதிகத் தால் அறுபத்துமூவர்க்கும் தனித்தனியே அடிமை கூறியது பிர சித்தமாகும். இன்னும் 'அன்பர்பணிசெய்யவெனை யாளாக்கிவிட்டு விட்டால், இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே' என்றனர் தாயுமானார்.

பன்றி வடிவெடுத்துப் பாரிடந்து மால்காணுக்
குன்றில் விளக்கொளியைக் கூறுவது மெக்காலம்.

(பொ - ரை.) விட்டுணுமூர்த்தியார் பன்றியுருவந்தாங்கி இப் பாரினைப்பறித்து பாதாளத்துக் கப்புறமுஞ்சென்று காணப்பெறாத மலையின் தீபம் போன்றுள்ள சிவபரஞ்சுடரினைத் துதிசெய்துவாழ் தல் எந்தக்காலமோ!

(கு - ரை.) "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திரு வடியை" யென்றோதினார் மணிவாசகர் தந்திருவாசகத்திலே 'குன்றில் விளக்கொளியை' என்றார். இது அண்ணாமலையை உணர்த்திய குறிப்பென்னலாம்.

தித்திக்குந் தெள்ளமிர்தைச் சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப தெக்காலம்.

(பொ - ரை.) இனிப்புறும் தெள்ளியதாய தேவாமிர்தமும், சித்தாந்தத்திற் கூறியுள்ள இரகசியபொருளும், முத்திக்கு முளை தரும் விதைபோன்றும் உள்ள சிவபெருமானை முதற்கண் தியானிப்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) கருவிகரணாதிகளை யெல்லாமடக்கிச் சிவபெரு மான்றிருவடியில் சிந்தைவைத்துள்ள மெய்யடியார் எவரோ, அவர்க்கு அப்பரசிவமானது அமிர்தம்போன்று இடையறாதினிப் பிக்குமென்பது சித்தாந்தமாம். இம்மண்ணுலகத்தாருள் அறுசமய வாதிகள் நீங்கிய ஏனைச்சமயத்தவர்கள் கொண்டுள்ள கடவுளர் அனைத்தும் பார்க்குமளவில், அநித்தியத்துவ தத்துவ வத்துவினையே யாகும். நம் சைவசமயிகளோ அற்றன்று; தத்துவங்களுக்கு அப் பாற்பட்ட பரசிவத்தையே சைவசித்தாந்தமுறையில் ஒப்புவமை யற்ற தற்பரனய்வணங்கி வாழ்த்தித் துதித்துவரும் உத்தமசமயி களாய் விளங்கி, சித்தாந்தவுட்பொருளாய்க்கொண்டுவணங்கலாயினர்.

இக்காரணங்கொண்டே அருணந்தியாரும்:—

"சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றிலே சீவன்முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந்தம்
பொழிந்துவரும் பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பனென்று மொழிந்திடவும்
உலகரெலா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றி பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவ
ரிதுவென்ன பிராந்தி?" என்றனர்.

முத்தாந்தவீதி முளரித்தொழும் அன்பருக்கே
சித்தாந்த வீதிவரும் தேவேபராபரமே. தாயுமானர்.

வேதாந்த வேதமெல்லாம் விட்டொழிந்தே நிஷ்டையிலே
ஏகாந்த மாக விருப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) வேதசாஸ்திராதிகளைக் கசடறக்கற்றவர்போல் வாசாஞானம் புகன்றுவருதலை யொழித்து நிட்டானுபூதியால் ஏகாந்தமாயிருந்துவருதல் எந்தக்காலமோ!

(கு - ரை.) இதனால் கருவிகரணாதிகளையெல்லா மொடுக்கி தனியிருந்து நிட்டைபுரிதலே பரமசுகமென்றதாயிற்று.

மற்றிடத்தைத் தேடியென்றன் வாழ்நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி யுறங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) பயனற்றதான காரியாதிகளிற் புத்தியைச் செலுத்தி கண்டவிடங்களிற்றிரிவதிலும், ஜீவான்மாக்களுக்காகவே உரித்தாய சிவானந்தத் திருவருளிருப்பையறிந்து யோகசாதனை யெனும் நல்லுறக்கங் கொள்ளுவதெந்தகாலம்?

(கு - ரை.) இஃதும் மேற் பாசுரக்கருத்துடையனவேயாம்.

இன்றுளோர் நாளை யிருப்பதுவும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வகையறிவ தெக்காலம்.

(பொ - ரை.) இன்று பிழைத்துள்ளார் நாளை பிழைத்திருப்பது நிச்சயமில்லையென்று ஞானசபைவாணர் நவிலுவதுகேட் டுய்வது எந்தக்காலமோ ?

(கு - ரை.) ஒருபொழுது வாழ்வதறியார் கருதுப. கோடியு மல்ல பல. 'நேற்றுள்ளான் இன்றில்லை' யென்றவுலகென்றார் ஆன்றோர். 'நேற்றிருந்தார் இன்றுவெந்து நீறானார்' என்றார் வெண்காடர். 'வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோவிம் மலக்கூ' டென்றார் வடலூர் வள்ளலாரும், ஆதலின் 'விரைமின்! விரைமின்! விரைந்து தவமிழைமின்!' என்பது பெறப்பட்டது.

கஞ்சா வபினியுடன் கள்ளுண்டு வாடாமற்
பஞ்சா வமிர்தம் பருகுவது மெக்காலம்.

(பொ - ரை.) கஞ்சா, அபின், கள்; சாராயம் இவைமுதலிய இலாகிரி வஸ்துக்களை யருந்திகெட்டுப்போகாது பஞ்சாமிர்தமுண்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) பாலோடு சர்க்கரையும் பழமும் ததிதேனும் நெய்யுங்கலந்த பஞ்சாமிர்தமே புறப்பூசைக்கான நிவேதனமாகும். நாத வெளிநிலவும் சந்திரமண்டல மிருந்துவழியும் அதிசீதளாமிர்தமே அகப்பூசை நிவேதனமா மென்பர்மேலோர்.

செஞ்சலத்தி னூற்றிரண்ட செனனமோட்சம் பெறவே
சஞ்சலத்தை விட்டுன் சரணடைவ தெக்காலம்.

(பொ - ரை.) செவ்விய நீராம் இரத்தத்தாலாய இந்தமானிட வுருவம் முத்திபெறுவதற்கு சஞ்சலத் துக்கத்தை யொருத்து நின் சரணாரவிந்த மடைதல் இனி எந்தக்காலமோ ?

கும்பிக் கிரைதேடிக் கொடுப்பாரிடந் தோறும்
வெம்பி திரிகை விடுப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) வயிற்றுக்கு உணவிடும் பொருட்டதாக பொருள் தருவார் வீடுகடோறுஞ் சென்று யுழல்வதை யொழிப்பது இனி எக் காலமோ!

(கு - ரை.) வயிறுவளர்ப்பதே பெரிதாக்கொண்டு அதற்குச் சதாகாலமும் பாடுபடுவதே வேலையாக்கொண்டு காலங்கழித்து வரல் மிக்க அறியாமையென்றூர் பெரியோர்.

(கு - ரை.) இதனுல், வந்தகாரியம் பாராது வயிற்றுக் காரியத் திற்கான பொருளீட்டலிலேயே காலமெலாங் கழித்துவரின் சொந்த காரியம் பார்ப்பதாரோ? என்றபடி. 'பூவைவிட்டுப் புல்லெடுப்பார் போலுன் திருப்பாதத், தேவைவிட்டு' என்றதுபோல், உலகப்பராக் கால் வகையறியாத் தன்மைவழிசெல்ல லடாதென்பது தோன்ற நின்றதாம்.

ஆடுகின்ற சூத்திரந்தா னறுமளவு மேதிரிந்து
போடுகின்ற நாள்வருமுன் போற்றுவது மெக்காலம்.

(பொ - ரை.) நடந்துதிரிந்து வராநின்ற இவ்வுடம்பானது மரணபரியந்தம் உழன்று, பின்னர் சாகுங்காலத்துத் துதித்துவாழ் தல் எந்தக்காலமோ!

(கு - ரை.) சூத்திரக் கயிற்றூல், என்றது இங்கே நல்வினை தீவினையென்ற இருகயிறுக்கும். இதனுலாடிப் பின் வினைக் கயிர்

சுருங்கி அற்றுப் போம்போது மண்ணில் இச்சரீரத்தைப் போடும் சமயம் விளங்காமையால் முன்னதாகவே சதாசர்வகாலமும் தியான பரனு யிருத்தல்வேண்டு மென்பது பெறப்பட்டது.

நவசூத்திர வீட்டை நானென் றலையாமல்
சிவசூத் திரத்தைத் தெறிந்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) ஒன்பதுவாயிலுள்ள இச்சரீரமாகிய வீட்டினை நான் எனக்கொள்வது மடமை; ஆகையால் அச்சூத்திரம் இன்னதெனத் தெரிவது அவசியமாதலின் 'அது எக்கால' மென்றூர்போலும்.

(கு - ரை.) இவ்வநித்திய வுடலைத் தானகக் கருதும் தன்மையோர், சரீரதத்துவ வாதிகளாய நாத்திகராம். இவர்கள் இவ்வுண்மையறியாவரையில் அடுத்தடுத்து இழிபிறப்பாளராய் வந்தழிவர்; இந்தச் சடசரீரத்தை உள்ளிருந்து நடத்தும் ஆன்மாவையும், அவ்வான்மசக்திக்கு வித்தாகச் சிவமெனும் பரமாத்மாவே ஜடஜீவசரீரத்தின் அந்தர்ப்பூதமாயிருந்து ஆண்டுவருகிற தெனவும் சுவானுபவ வாயிலாக வுணராது மாய்வதால் சிவசூத்திர தாரியாம் பரம்பரனை யறிதற்காகவே "சூத்திரந் தெரிவதெக்காலம்" என்றனர்.

மறந்து மலசலங்கள் மாயும்புழுக் கூட்டைவிட்டுக்
கரந்து னடியிணைக்கீழ்க் கலந்துநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) மெய்மறந்து மலசலாதிகள் இயல்பாய்க் கழிந்து கிருமிகள் நிறைந்துள்ள காயத்தினை யொழித்துத் திருவருட்சத்தியுட் கலந்து பின்னர் எம்மான்றன் உபயபாத கமலங்களி லயப்பட்டிருப்பது எந்தக்காலமோ?

(கு - ரை.) மெய்மறந்து - மெய்மையாகிய அறிவு மயங்கி; சரீரத்தைவிட்டுப் புறப்பட்டு ஆன்மதாரகத்தில் ஊடாடிக் கலந்து

நிற்றலே சித்தாந்தமுடிபாம். இவ்வுண்மையினை இவரது பரமாசிரியராம் வெண்காட்டடிகளார் திருவாய்மலர்ந்தருளிய "மெய்யருளாந் தாயுடன்சென்று, பின்தாதையைக் கூடிப் பின்தாயைமறந்து" எனவுங் கூறியதறிக.

இம்மைதனிற் பாதகனு யிருவினைக் கீடாயெடுத்த [ம்.
பொம்மைதனைப் போட்டுன்னைப் போற்றிநிற்ப தெக்கால

(பொ - ரை.) இந்த ஜனனத்திலே பாவகிருத்தியஞ்செய்து, நல்வினை தீவினைகளுக்குத் தக்கபடி வாய்த்துள பதுமைச் சரீரத்தை விட்டு தேவரீர்க் கன்புசெய்துய்வது எப்போது?

(கு - ரை.) இந்தஜென்மத்தில், யோர்க்கனவே செய்வினைகளுக்குரிய பாவ புண்யங்களை யனுபவித்த லோடும், இப்பிறவியிற் செய்யாநின்ற இருவினைப்பயன்களும் அடுத்துவரும் ஜென்மாவுக்கு விதையாகலான் "இருவினைக் கீடாயெடுத்த" என்றனர். இதனால் இந்தஜென்மத்திலாவது பாவத்தையொழித்து பரனடிக்குரிய பணியாற்றல் வேண்டு மென்பது பெற்றாம்.

"தத்துவத்துக் கப்பாலே தன்னைத்தரிசித்து
நித்தபரிபூரணத்தி நில்லாமல் - சுத்த
பனிமாயையாற்செய் பதுமையினைத் தேடு
கனிமானிட மிருக நாடு" என்றார் சி. வள்ளலார்.

உப்பிட்ட பாண்ட முடைந்துகருக் கொள்ளுமுன்னே
அப்பிட்ட வேணியனுக் காட்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) உப்பரித்த மட்பாண்டம் ஒத்த இத்தேகம் அழிவுபெற்று மீண்டும் பிறத்தற்கு முன்னதாக, கங்கைதங்கிய ஜடாமுடிகொண்டுள்ள நஞ்சிவபரஞ் சுடரார்க்கு ஆட்படல் எக்காலமோ!

(கு - ரை.) "சந்தேகதேகம் சவமாகு முன்னரே யெந்தை யடியிணையை யேத்தி யடிமையுற" என்றார் பெரியார்.

ஆட்டைச்சுமந்த நின்பாதாரவிந்தத்தி லன்புசெய்யாக்
கூட்டைச்சுமந்து குடும்பத்தையோம்பிக் குருக்கிடையாய்
பாட்டைச்சுமந்து பயன்றெரியாமலப் பாட்டெழுது
மேட்டைச்சுமந்தவர்க் கின்பமுண்டோ கச்சியேகம்பனே. என்றார் சி. வள்ளலார்.

சேவை புரிந்து சிவரூபக் காட்சிகண்டு
பாவை தனைக்கழித்துப் பயனடைவ தெக்காலம்.

(பொ - ரை.) சிவசொரூபத்தைப் பார்த்து வணக்கஞ்செய்து பின்மாதராசையை யகத்தினின்று மொழித்து பெறத்தகும் பேற்றினைப் பெறுவது எக்காலமோ.

(கு - ரை.) ஆசையொழிய ஆசை கொண்டார் சிவதரிசன முஞ் சிவத்தியானமும் செய்துவர, நாளடைவில் சுடருண்ட கற்பூரம்போற் கரைந்து ஞானம் செழித்தோங்குமென்க. "ஊசலாட்டு மிவ்வுடலுயிராயின மிருவினை யறுத்தென்னை, யோசையா லுணர் வார்க்குணர்வரியவ னுணர்வுதந் தொளியாக்கிப், பாசமானவை பற்ற றுத்துயர்ந்த தன் பரம்பெருங்கருணையா, லாசைதீர்த்தடியாரடிக் கூட்டிய வற்புதமறியேனே." என்றார் மணிவாசகர் தந் திருவாசகத்திலே.

காண்டத்தை வாங்கிக் கருமேக மீண்டதுபோல்
பாண்டத்தை நீக்கிப் பரமடைவ தெக்காலம்.

(பொ - ரை.) மேகமானது கடல் ஜலமுண்டு கருமையாகத் திரும்பியதுபோல, தேகத்தை நசிக்கச்செய்து ஒப்பற்ற பரசிவத்தினை யடையப்பெறுதல் எந்தக்காலமோ!

சோற்றுத் துருத்திதனைச் சுமந்தலைந்து வாடாமல்
ஊற்றைச் சடம்போட் டுனையடைவ தெக்காலம்.

(பொ - ரை.) சோற்றுத் துருத்தியாம் இச்சரீரத்தினை நெடு நாள் சுமந்து வீணே யலையாதபடி, அதனை மாய்த்துவிட்டுத் தேவரீர் தம் திருவடியொடுங்குவது எந்தக்காலமோ!

தொடக்கைச் சதமெனவே சுமந்தலைந்து வாடாமல்
உடுக்கைக் கழற்றி யுனையறிவ தெக்காலம்.

(பொ - ரை.) இந்தச்சரீரத்தினை மெய்ப்பொருளாகக்கொண்டு வீணே சுமந்துவந்து வருத்தமுறாதபடி, தத்வாதிகளை யாராய்ந்து தேவரீரைக் கண்டறிவது எந்தக்காலமோ!

(கு - ரை.) தொடக்கு - ஸ்தூலசரீரம். உடுக்கை - ஆன்மாவுக் குரிய தத்வாதிகளாம். தத்துவங்கள் நீக்கிப் பதிப்பொருளைத் தேர வேண்டுதலின், ஈண்டு 'உடுக்கைக்கழற்றி உனையறிவ தெக்கால' மென்றார். முப்பத்தாறு தத்துவாதினைத் தெரிந்தொதுக்கி மேற் போக, நின்றதே ஆத்மாவாக வறிதல் அறிவாகும்.

ஆசைவலைப் பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணித் தீபத்தில் ஒன்றிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) பொய்யாசை யென்கிற வலையி லகப்பட்டுத் துன்புறாமல் நாதாந்தமாகிய மணித்தீபத்திலே பேதமறக்கலந்து வாழ்வது எந்தக்காலமோ?

(கு - ரை.) ஈண்டு ஓசையென்பது நாதவொலியாம். மணித் தீபம் - பரஞ்சோதி யென்க.

கூறரிய நால்வேதங் கூப்பிட்டுங் காணாத
பார ரகசியத்தைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) சொல்லற்கரியதாம் சதுர்வேதங்களும் ஓலமிட்டுத்தேட, அவைக்கு அகப்படாத பரம இரகசியமாயுள்ள வஸ்துவை இனிக்காண்ப தெக்காலமோ!

(கு - ரை.) சதுர்மறைக்கே யகப்படானை நாம் காண்பதென்னுளாமோ என்றபடி.

புல்லாய் விலங்காய்ப் புழுவாய் நரவடிவாய்
எல்லாப் பிறப்பி னிருளகல்வ தெக்காலம்.

(பொ - ரை.) புல்பூண்டாயும், மிருகமாகவும், கேவலம் புழுவாகவும், பின்னர் மானிடனாயும் பிறந்துழன்ற ஒவ்வொருபிறவிகளின் பந்தபாசத்தையொழிப்பது எக்காலமோ.

(கு - ரை.) இம்மானிடப்பிறவிக்கு மூலாதார முளையாகவுள்ளது ஆணவ மலமேயாம் அதனை 'இருள்' என உருவகித்தார். பொதுவாக இருள் - ஆணவமே.

தக்கும்வகைக் கோர்பொருளும் சாராமலே நினைவில்
பக்குவம்வந் துன்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) மாயாகாரியாதிகள் என் மனத்தின்கண் நிலைக்கும் வகையிலொட்டாது மலபரிபாகத்தால் தேவரீரின் திருவருட் பிரசாதத்தையே எதிர்பார்த்திருப்பதும் இனி யெந்தக்காலமோ!

பருவத் தலைவரொடும் பல்கியின்பங் கொள்வதற்குத்
தெரிவைப் பருவம்வந்து சிக்குவது மெக்காலம்.

(பொ - ரை.) பரிபக்குவ காலத்தே வந்து ஆட்கொள்ளும் தலைவராம் சிவபிரானோடும் சேர்ந்து ஆனந்தமாயிருத்தற்குத் தெரிவைப்பருவம்பெற்று அவர்பால் ஒன்றி நிற்பது எந்தக்காலமோ?

(கு-ரை.) எழுவகைப் பருவங்களுள் பெண்களுக்கு 'தெரிவை' யென்னும் பருவத்தின்காலம் இருபத்தைந்து வயதளவாகும்; இந்த பருவத்திலேதான் மனைவியர் தத்தம் நாயகரோடு சங்கையற இங்கிதங்கொண்டு கலந்து சுகிப்பதியல்பாம். நிற்க, இங்கே தெரிவையாகக் கொண்டது தமது ஆன்மசக்தியையாம்; தலைவராம் சிவத்தை அத்துவிதமுறையில் சென்றடைதற் காரணமாகுமென்றறிக.

தெரிவையுறும் பக்குவத்தின் சீராட்டெல்லா மறிந்து
குருவையறிந் தேநினைத்துக் கும்பிடுவ தெக்காலம்.

(பொ - ரை.) தெரிவைப்பருவப் பக்குவசந்தர்ப்பத்திலே சகல லெட்சணங்களையுமறிந்து, சற்குருவைநினைத்து தியானஞ்செய்து வணங்குவதும் எக்காலமோ!

வம்படிக்கு மாதருடன் வாழ்ந்தாலு மன்னுபுளி
யம்பழமு மோடும்போ லாவதினி யெக்காலம்.

(பொ - ரை.) அநேகவிதமான லீலா விநோதங்களால் தீயகாரியாதினைப்புரியும் பெண்ணுடன் கூடியிருப்பினும் அவர்கள்பால், இனி புளியம்பழம் ஓட்டினைப்பிரிந்து அதனுள்ளிருப்பதுபோல் கலந்திருப்பது எக்காலமோ!

(கு - ரை.) பெண்களோடு கூடிவாழினும் சரீர ஒருமைப் படாதும், ஆசைவையாது மிருப்பது எப்போதோ வென்றபடி.

பற்றற்று நீரிற் படர்தாமரை யிலைபோல்
சுற்றத்தை நீக்கமனந் தூரநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) தண்ணிய நீரில் வாழாநின்ற தாமரையானது தண்ணீரை எப்படிதான் பற்றிக்கொள்வதில்லையோ அதேபோல, பந்துமித்திரர்களைவிட்டு அவர்களது தொந்தமாம் பற்றற்றுவாழ்தல் எப்போது கிடைக்குமோ!

(கு - ரை.) இதனால் தாமரையிலையிலுள்ள நீர் அவ்விலையில் ஒட்டாமைபோல் மனிதன் குடும்பத்தார்பால் அழுந்திவாழாது செய் தவமாங் கைதவத்திற் கண்ணுயிருத்தல் வேண்டுமென்பதே. கை தவம் - ஈண்டு கைக்கொண்டதவம் என்க. இங்ஙனமிருந்து மெய் யறிவினால் மெய்க்கடவுளரை மெய்யன்புசெய்து ஜென்மசாபல்ய மடைதல் வேண்டுமென்பதுவே மன்னன் கட்டிய மனமாளிகையா மென்பது தோன்றநின்றது. அன்றி வேத சம்மதமுமிதுவேயாம்.

"உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே." என்றார் மணிவாசகர்தந்திருவாசகத்தில்.

சல்லாப லீலையிலே தன்மனைவிசெய்த சுகம்
சொல்லாரக் கண்டெனக்குச் சொல்வதினி யெக்காலம்.

(பொ - ரை.) நாயக நாயகிகளுள் நடந்த லீலைச் சுகத்தைச் சொல்லுதல்போல யான் கண்டுணர்ந்த சுகானுபவத்தை யான் சொல்ல முன்வரக்கூடிய காலம் எந்தக்காலமோ!

(கு - ரை.) ஈண்டு மனைவிக்குப் பிரதியுவமை ஆன்மாவெனக் கொள்க. மற்றும் தலைவன் - சிவபெருமானுமென்று முணர்க.

மருவ வயற்புருடன் வருநேரங் காணாமல்
உருகுமனம் போலெனுளம் உருகுவது மெக்காலம்.

(பொ - ரை.) ஓர் சோரஸ்திரீயானவள் சோரநாயகன் தன் பால் வருகைத் தாழ்க்குமேல், அதனால் அவள் மனம்வருந்தி உருகு வதுபோல என் மனம் உருகுதல் எப்போதோ!

(கு - ரை.) ஈண்டு, அத்துவிதாநுபவத்திற் கிச்சித்திரங்கல் என்பது தோன்ற நின்றது. (அன்பின்திவிரதரம்.)

தன்கணவன் றன்சுகத்திற் றன்மனம்வே றானதுபோல்
என்கருத்தி லுன்பதத்தை யேற்றுவது மெக்காலம்.

(பொ - ரை.) ஓர் பெண், தனது தலைவனைச்சேர்ந்து சுகந்துய்க்குங்கால், அவளது மனமானது பிறநாயகனை நினைத்து வேறுபட்டமைபோன்று, என் எண்ணத்தைத் தேவரீர் திருவடிக்கண்ணழுத்துதல் எப்போதோ?

(கு - ரை.) நல்லொழுக்கமற்ற பெண்ணொருத்தி தனக்குரிய தலைவன்பால் கலவிபுரியும்போது, தன் மனதைச் சோரபுருஷனிடம் செலுத்துதல் இயல்பாம். அதேபோன்று, உலகாபாசவாழ்க்கையில் அடிமை இறங்கியகாலத்தும், என்மனமானது எம்மான் திருவடித்தாமரையில் அழுந்தி கிடத்தல் வேண்டுமென்பதுபோன்றாம். அழுத்தமானபக்தபராள் எக்காரியாதிகளில் தலையிட்டிருப்பினும், எவ்விடத்திருப்பினும் சித்தம்சிவன்பால் சென்றிருக்குமேல், அவர் பிறப்பிறப்பெய்தாப் பெருவாழ்வுறுவரென்பது சித்தாந்தமாம்.

கூடிப் பிரிந்துவிட்ட கொம்பனையைக் காணுமல்
தேடித் தவிப்பவன்போல் சிந்தைவைப்ப தெக்காலம்.

(பொ - ரை.) நெடுநாட்பிரிவின்றிய நாயகியைப்பாராது அவளையாராய்ந்து பார்த்துவருந்தும் தலைவனைப்போன்று, யான் தேவரீரை ஆய்ந்தறிந்து கண்கூடாக்கண் டின்புறுவதும் எக்காலமோ!

(கு - ரை.) தனது ஆன்ம பிரியையாம் மனைவியின் பிரிவினையைக்குறித்து மனம்பொருதலையும் தலைவன் மனம்போன்று, யானும் தேவரீரைத்தேடிப் பொருந்தல் வேண்டு மென்பது போன்ற வெட்கையாம் என்க.

எவ்வனத்தின் மோகம் எப்படியுண் டப்படிபோல்
கவ்வனத் தியானம் கருத்துவைப்ப தெக்காலம்.

(பொ - ரை.) கொஞ்சிக் குலவும் இளம்வஞ்சியர்பால் நாயகர்கள் எவ்வாறு நெஞ்சுவந்து நிற்பர்களோ அவ்வாருகத் தேவரீரது திவ்ய திருவடித்தாமரையில் என்மனத்தை யிருத்துவதும் எக்காலம் வருமோ!

(கு - ரை.) யாதர்பால் மோகபிராந்தியானது தகுந்த இளம் பருவத்தில் யௌவனனுக்குத் தானே தோன்றுவ தியல்பானமையால், 'யௌவனத்தின் மோகம்' என்று குறிப்பிடலாயிற்று. பேரின்பத்திற்குச் சிற்றின்பம் அடுத்துள்ள முன்படியாதலாலேயே அநுபவ வாயிலாயுணர்தல் காரணமாக இதன் ஆசிரியர் சிற்றின்ப விஷயாநுபவங்களை யெடுத்துக் கூறுவாராயினர்.

கண்ணு லருவி கசிந்துமுத்துப் போலுதிரச்
சொன்ன பரம்பொருளைத் தொகுத்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) மெய்யன்பர்கட்கு ஆனந்தக்கண்ணீர் முத்துப் போன்றுதிரும்படி மேலான ஞானோபதேசஞ் செய்தருளிய அப் பரம இரகசியார்த்தங்களை நன்குணர்வது எந்தசமயமோ?

(கு - ரை.) உள்ளபடியான பேரன்புடையார்க்கே ஆனந்தக் கண்ணீர் கசிந்துருகல் இயல்பாதல்கொண்டு ஈண்டு ஆசிரியர் 'கண்ணு லருவி கசிந்து' என்றனர் போலும். அன்பின்குறியே ஆனந்த நீர் காட்டும். சான்ருக,—

"உடையானே நின்றனையுள்கி யுள்ளமுருகும் பெருங்காத
லுடையாருடையாய் நின்பாதஞ் சேரக்கண்டிங் கூர்நாயிற்
கடையானேனெஞ் சுருகாதேன் கல்லாமனத்தேன்கசியாதேன்
முடையார்புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே!"

என்றார் மணிவாசகர் தம் திருவாசகத்தில்.

ஆக மிகவுருக வன்புருக வென்புருகப்
போக வனுபூதி பொருந்துவது மெக்காலம்.

(பொ - ரை.) சரீராதியந்தமு முருகவும், அன்பு முருகவும், எலும்பெலா முருகவும், சிவபோகாநுபூதி பொருந்த வாழ்வதும் இனி யெக்காலமோ!

(கு - ரை) உண்மைஞானியர் தம் முத்திபருவத்திலே உயிரும் உடலும் வேறுபடாது ஒன்றாயுருகி நிற்றல் இயல்பாம் இப்பருவத்தில் ஆன்மா ஆனந்தா தீதமாய் நிற்கும்; அஞ்ஞான்று உடலினைத் தும் உருகிநிற்குமாதலால், மணிவாசகர் "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" என்றார். இன்னும், "அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண்ணீ ரதனாலுடம்பு, நினைந்து நினைந்து அருளமுதே! நன்னிதியே!" என்றார் அருட்பிரகாசரும்.

நீரிற்குமிழிபோ னிலையற்ற வாழ்வை விட்டுன்
பேரிற் கருணைவெள்ளம் பெருக்கெடுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) தண்ணீர்க் குமிழியனைய அநித்திய வாழ்க்கையை யொழித்து, தேவரீர்பால் எனக்கு அன்பும், அதனால் என்பால் தேவரீர்க்கு அருள்வெள்ளமும் பெருக்கெடுப்பது எக்காலமோ!

(கு - ரை.) பொய்வாழ் வாதலின், 'நீர்க்குமிழியை' உவமித்தனர். ஆதலால் நிலையாய பெருவாழ்வாம் அப்பனருட்பெரும் நல்வாழ்வையே ஈண்டு அவசிய மென்றனர் போலும். என்? பிறப்பிறப்பில்லாப் பேரானந்த மெய்தலானென்க. அன்றியும், அநித்திய வாழ்வாம் சிற்றின்பவாழ்வையே "வாழ்வாவதுமாய மிதுமண்ணாவது திண்ணம்" என்றார் தேவாரம்.

அன்பையுருக்கி யறிவையதன் மேற் புகட்டித்
துன்ப வலைப்பாசத் தொடக்கறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) ஆண்டவன்பால் அன்பினைக் கரைந்துருகச் செய்து, அதன்மேல் ஞானோபதேசம் பெற்று, துக்காஸ் பதமாகிய பந்தமறுப்பது எக்காலமோ !

(கு - ரை.) ஈண்டு - அன்பை யுருக்கி யென்றது இளகிய அன்பெனக் கொள்ப. உண்மையன்பு தோன்றிய விடத்து அவிவேகம் தானே மறைந்து போதலியல்பு. ஆதல்கொண்டே 'அறிவையதன்மேற் புகட்டி' யெனக்கூறிப் போந்தனரென்க. அன்றி, பெருநாவலரெனுந் திருக்குறளாரும் "அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழார்வலர் புன்கணீர் பூசாரும்" என்றார். முடிவாக ஆன்மாபெறவேண்டியது திருவருளானமையின் பாசத்தொடக்கற நிற்றலே தகுதியென்பாராயினர்.

கருவின் வழியறிந்து கருத்தைச் செலுத்தாமல்
அருவி விழிசொரிய அன்புவைப்ப தெக்காலம்.

(பொ - ரை.) இனியுங் கருவில் மருவிபிறந்திறந் துழலாது ஆனந்தக்கண்ணீர் அருவிபாய்தல்போற் சொரிந்து தேவரீரிடத்து அன்பென்பதைச் செலுத்துவதும் எச்சமயமோ?

(கு - ரை.) இதனால், பிறந்திறத்தற் கேதுவான சிறுநெறி சேராமே, இறைவன் றிருவருளுக்குப் பாத்தியப்படும் பெருநெறி பிடித்தொழுக வேண்டு மென்பது பெறப்பட்டது. எப்படி? சான்றாக.—

"கிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்கள் நிமலன்றாளைக், கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரிய சுகங் கிடைக்குங்காம, வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித்தாலிக், கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலைதானே." என்றிவ்வா றுதலினென்றறிக.

தெளியத்தெளியத் தெளிந்த சிவானந்தத் தேன்
பொழியப் பொழியமனம் பூண்டிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) ஜீவதத்துவாராய்ச்சியினாலே தெளிவுபெற்று யதார்த்தவஸ்து நிச்சயங்கண்டு, அதனாலுண்டாய சிவானந்தத் தேன் பொழியுமாறு மனம்பொருந்தி வருதல் எந்தக்காலம்.

(கு - ரை.) உண்மை யாராய்ச்சிகொண்டு தெளிவு பெற்ற திடத்தினாலே ஆன்மதத்துவமும், அதன்மேல் சிவதத்துவமும்தெளிவுற, இதன்பின்னர் சிற்சுகானந்தத் தேன் வெளிப்பட்டு உடலெங் கணு மினிப்பித்து ஆனந்தாதீதத்தி லாழ்த்தும் என்றபடி.

ஆதார மூலத் தடியிற் கணபதியைப்
பாதார விந்தம் பணிந்துநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) மூலாதார ஸ்தானத்திலே எழுந்தருளியுள்ள யானைமுகத் தண்ணலார்தந் திருவடி மலரிணையை வணங்கி வாழ்வு பெறுவ தெந்தகாலமோ!

(கு - ரை) இதுமுதலாக அறுவகைக் கண்ணிகளால் ஆறுதார நிலையும், ஆங்காங்குள்ள தேவதைகளின் அக்ஷரங்களும் விவரிக்கப் பட்டு வரும்.

மண்வளைந்த நற்கீற்றில் வனைந்திருந்த வேதாவைக்
கண்வளைந்து பார்த்துள்ளே கண்டிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) மண்ணில் வளைவாகக் கீறியுள்ள ஓர் கோட்டின் மத்தியிலே, அதாவது சுவாதிஷ்டான ஸ்தானத்திலே மிகவும் நன்றா யெழுந்தருளியிருக்கும் பிரமதேவனை உண்முகத்தில் பார்த்திருத் தல் எந்தக்காலமோ!

அப்புப் பிறைநடுவே யமர்ந்திருந்த விட்டுணுவை
உப்புக் குடுக்கையுள்ளே யுணர்ந்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) ஜலதத்துவக் கூறுயுள்ளதும், பிறையைப் போன்ற வளைவாயுள்ளதுமான மணிபூரக ஸ்தானத்திலே வீற்றிருந் தருளும் இலக்குமிநாதனை உப்புப்பாண்டம் போன்றதாயுள்ள இவ்வு டற்குள்ளாகக் கண்டு தெளிவுபெறல் எந்தக்காலமோ!

மூன்று வளையமிட்டு முளைத்தெழுந்த கோணத்தில்
தோன்று முருத்திரனைத் தொழுதுநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) முக்கோணமாயுள்ள கோட்டினுள்ளே உதய மாயுள்ள ருத்ரமூர்த்தியைத் தரிசித்துவாழ்தல் எந்தக்காலமோ! அந கதம் இதுவாகும் என்ப. இதுவும் அக்னிமயமாகும்.

வாயு வறுகோண மதில்வாழு மயேசுரனைத்
தோயும் வகைகேட்கத் தொடங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) ஆறுகோண வடிவமாயதும் வாயு அம்சமாயது மான விசுத்தி ஸ்தானத்திலே மகேசுரனைச் சார்ந்திருக்கும் வண் மையை விசாரிப்பது எக்காலமோ!

வட்ட வழிக்குள்ளே மருவுஞ் சதாசிவத்தைக்
கிட்ட வழிதேடக் கிருபைசெய்வ தெக்காலம்.

(பொ - ரை. வட்டவடிவாய ஆக்ஞாசக்கரத்துள் காணும் சதா சிவத்தினைச் சார்ந்துய்யும் வழிதேடற்குத் திருவருள் புரிவது இனி யெக்காலமோ! இது ஆகாயமயமாய ஸ்தலம்.

உச்சிக் கிடைநடுவே யோங்கு குருபதத்தை
நிச்சயித்துக் கொண்டிருந்து நேர்வதினி யெக்காலம்.

(பொ - ரை.) உச்சிஸ்தானத்திற் கிடையில் பிரகாசிக்கும் சற்குருநாதன் றன் பாதகமலங்களை திடமாகக்கொண்டு தியானஞ்செய்யும் பேற்றினைப் பெற்றுய்வதினி யெந்தக்காலம்.

(கு - ரை.) இவ்வித ஆறுதாரங்களுக்கும் உச்சியாகிய மேல் வீட்டில் எழுந்தருளியுள்ள சற்குருமணியைத் தரிசிக்கு மவரே பெரும்பேறளிப்ப ரென்க. இக்காக்ஷி, ஞானமுறுவதற் கியலாதன. சற்குருகடாக்ஷமே நிலவரமாதல் நியமமாகும். இனி அச்குருவினைச் சர்வதாதியான பரனுயிருத்தலே அவசியமாகும்.

பாராகிப் பார்மீதிற் பஞ்சவர்ணந் தானாகி
வேராகி நீமுளைத்த வித்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) பூமியாகியும், பூமிமுதல் பஞ்சபூதங்களாகியும், மற்றும்யாவற்றிற்கும் வேராயிருந்தருளும் மூலகாரணத்தைத் தெரிந்துகொள்வது இனியெக்காலமோ !

(கு - ரை.) பார் - பூமி. பஞ்சவர்ணந் தானாகி பார்முதல் அதாவது மண்முதலாகப் பஞ்சபூதங்களும் (மண், நெருப்பு, தண்ணீர், காற்று, ஆகாயம்) இவைகளைந்தும் ஐந்துவர்ணங்களாகக் காணப்பட்டமை கூறினர். இறைவன் யாவற்றிற்கும் வேரைப்போன்றும் விளங்கலானே வேராகி யென்றனர்போலும். எல்லாமும் நீயேயாகியும் என்றபடி. இறைவன் ஆதியந்த மற்றவனாதலின், அநாதியன் என்பது தோன்றவே, 'முளைத்தவித்தறிவ' தெக்காலம் என்றனர் போலும்.

கட்டறுக்க வொண்ணாக் கருவிகர ணாதியெலாஞ்
சுட்டறுத்து நிட்டையிலே தூங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) ஆணவமல மாயாமலக் கட்டுகளெல்லாம் தவம்ஸஞ்செய்தொழித்து, அதாவது ஞானத்தா லொழித்துவிட்டு யேகனாய் நிட்டாபரனா யிருப்பதுவும் இனி எந்தக்காலமோ !

(கு - ரை.) ஈண்டு பாசபந்தங்கள் அநாதிகாலமாக தொந்தமாய் வந்த தாகலின், "கட்டறுக்க வொண்ணுக் கருவிகாணுதிகளெ"ன் ருர். நிட்டைக்கு, அகக்கரணப் புறக்கரண சேடிப்பு விரோதமாக லின் அவைகளேச் "சுட்டறுத்து" என்ருர். சுட்டறுத்தல்-வைராக் கிய ஞானத்தீயிஞல் சூன்யப்படுத்தலாம். தூங்குவதாவது—யோக நித்திரையை யென்க.

கள்ளக் கருத்தையெல்லாங் கட்டோடு வேரறுத்திங்

குள்ளக் கருத்தை யுணர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) கள்ளத்தனமான நடபடிக்கைகளே யெல்லாம் சிறிதுமின்றி யொழித்து, யதார்த்தமான நிலைமையில் நிற்றலாகிய நன்னிலையினைத் தெரிந்திருப்ப தெக்காலமோ!

(கு - ரை.) யதார்த்தத்திற்கு மாருன தன்மையை - கள்ளக் கருத்தென்ருர். ஏன்? இதுமனமாசு ஆதலாலென்க. அல்லாம லும், போலித்தன ஞானம் ஒருசிறிதும் பயன்படாது; தலைவனும் வெறுப்புற் ருெதுங்குவன்; ஆதல்கொண்டே 'உள்ளக் கருத்தை யுணர்ந்திருப்ப தெக்கால' மென்றனர் போலும்.

அட்டகாசஞ் செலுத்து மவத்தைச் சடலத்துடனே

பட்டபா டத்தனையும் பகுத்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) பெருமையை ஆசிரயித்து வாழ்தற்குரிய துக் காஸ்பத இவ்வுடம்போடு வாழ்ந்தனுபவித்து வந்த துன்பங்களையெல் லாம் ஆய்ந்துணர்தல் எப்போதோ?

(கு - ரை.) நற்சார்பின்றி இவ்வனித்திய காயத்தை மெய் யாக நம்பி டம்பாதிகளாலே அறியாமை மிகுத்து மனமாசறியாது அட்டகாசமாய்த் திரிபுற்றுக் காலங் கடத்தியதற்கு மனம் வருந்தி

தனக்குத்தானுகவே இரங்கியதென்றுணர்தற்பாற்று. இதனுல் வஞ்சகமாகிய நெஞ்சக மாகாதென்பது தோன்ற நின்றது.

அறிவுக் கருவியுட னவத்தைபடும் பாட்டையெலாம்
பிரிவுபட நிறுத்திப் பெலப்படுவ தெக்காலம்.

(பபா - ரை.) பசுபாச விவேகாதிகளால் உண்டாம் துன்பங்களைத் தனித்துப் பகுத்தறிந்து ஒதுக்கி, மேலே பதிஞானத்தையுணர்ந்து அதைவிர்த்திசெய்வ தெக்காலமோ!

(கு - ரை.) அறிவையே கருவியாக நிரூபித்துள்ளார். பாசபந்தாதிகளிற் கலந்த அறிவானது துன்புறுவதை ஈண்டு வெளியிட்டனரென்க; பிரிவுபட நிறுத்துதல் - ஈண்டு தத்துவாதிகளோடு அறிவைச் சேரவொட்டாதடக்குதல் என்க.

பூதம் பொறிகரணம் போந்தவிந்து நாதமுமாய்ப்
பேதம் பலவிதமும் பிரிந்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) பஞ்சபூதங்களென்ன, ஐம்பொறிகளென்ன, அந்தக்கரணங்களென்ன இவையனைத்தும் சேர்ந்துகொண்டு சித்தியாகவும் சிவமாகவும் விளங்கும் அநேகபேத பாவனைகளிலிருந்து தனித்து மேல் எதார்த்த வஸ்துவைக் காண்டல் எந்தக்காலமோ?

(கு - ரை.) "பூதங்களைந்தும், பொறிகளைந்தும், கரணநான்கும், பூதமுதல் நாதபரியந்தமான தத்துவாதிகள் முப்பத்தாறின் பேதாபேதங்களிலிருந்தும் பிரிந்துநின்று என்னையானறிதல் எந்தக்கால" மென்றும், தன்னையறிந்தின்புறுதலையும் விவரிக்கும்போதந் தோன்றியவாறுமென்க.

தோன்ருசை மூன்றுந் தொடர்ந்துவந்து சுற்ருமல்
ஊன்ருசை வேரையடி யூடறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) பிரதம ஆசைகளான மூவகையும் என்னை வாதிக்காதும், யான் மாயாவிலாசத்தில் ஆழாதும் ஆசாபாச மூல வேரையறவேயொழிப்பது எக்காலமோ!

(கு - ரை.) ஆசைமூன்றென்பன - பொன்னிலமாதராசைகள். பசுவைபாசத்தி லூன்றச்செய்வது துவேஷதத்துவங்களாம். ஆகவே அவையொடுங்கச்செய்யின் ஆசைமூன்றுமறும் என்க. "ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள் ஈசனோடாயினு மாசையறுமின்கள்" என்றார் திருமூலர்.

புன்சனனம் போற்றுமுன்னே புரிவட்டம் போகிலினி
என்சனன மீடேறு மென்றறிவ தெக்காலம்.

(பொ - ரை.) சாமானிய இந்தப்பிறவியில் எம்மானைவணங்கி யீடேறுவதற்குள்ளாக சூக்குமசரீரம் மாயுமாயின், என்னுயிர் இனி எந்தசென்மங்கொண்டு கதிபெறுமெனத்தெரிதல் எக்காலமோ!

(கு - ரை.) அத்துவித வாஞ்சையால், ஆகம் நிலையாமையைக் குறித்து அவலம்பிக்கின்றனரென்க.

நட்ட நடுவினின்று நற்றிரோ தாயியருள்
கிட்ட வழிகாட்டிக் கிருபைசெய்வ தெக்காலம்.

(பொ - ரை.) என் ஆத்மசொரூபத்திற்கும் எம்பெருமானுக்கும் மத்திய ஆவரணமாயுள்ள திரோதாயியாந் திருவருட் சத்தியார் இறைவர்பாலென்னைச் சேர்ப்பிக்கு மார்க்கமருள்வதினி யெக்காலமோ!

(கு - ரை.) மேற்கூறிய திருவருட் சத்தியே திரோதான சத்தியென்றும், திரோதாயியென்றும் பெயர்பெற்று விளங்குவள். திரோதானம் - மூவிடம். ஈண்டு மூவிடங்களாவன, பதி பசு பாசம் இம்மூவிடங்களிலும் சமயம் நேர்ந்துழி ஒன்றி நின்று காரியாதிகளை

இயைவிக்கும். அஃதாவது ஆன்மாக்களது பெத்தகாலத்தே திரோதாயியாய் திரிமல நுகர்ச்சியினை ஆன்மாவிற்குச் சேர்ப்பிக்கும். இச்சத்தியே ஆன்மா பரிபாக காலமெய்த, அப்போது இறைவனோடுங்கலந்து பேரின்பத்தை நுகர்ப்பிக்குமென்க. பெத்தகாலம்- ஆன்மா மாயாசகிதகாலமாம். முத்தகாலம் - ஆன்மா மாயாரஹிதகாலமாம். ஆகவே, தலைவனது கூட்டுறவுக்கும் தானே அருட்சத்தியாய் நிற்றலின் 'நல்லதிரோதாயி' யென்றார். இங்ஙனமாக அத்திருவருட்சத்தியே நடுநின்று ஆன்மாவிற்கு மலத்தைநுகர்வித்தும், அதன்மேல் பரிபக்குவ முற்றபின்னர் ஆன்மாவை இறைவர்பால் சேர்ப்பித்தலானும் "நட்டநடுநின்று" என்றார்போலும்.

நானேநா னென்றிருந்தேன் நடுவினிற் கட்டழகி
தானே வெளிப்படுத்தித் தருவனென்ப தெக்காலம்.

(பொ - ரை.) என் தூலசரீரத்துள் வியாபித்துள்ள என் ஆன்மாவையே தலைவனாக நிச்சயித்திருந்தனன். ஆராய்ந்துற்றுணருங்கால்தயாசொரூபியாய், அழகுவாய்ந்துள்ள திருவருட்சத்தியாரே என்னறிவினில் எம்மான்றனுண்மைத்தன்மையையறிவித்து அவனது திருவடியைத் தந்தருள்வன் என்றநுக்கிரகித்தனள். அக்காலம் எக்காலமோ!

(கு - ரை.) சேதனசேதன தத்வ விசாரணையை நன்கு கற்றுணர்ந்தவாறே, தான் இன்னதன்மையனெனக்குறித்தற் கியையுமாதலின் இன்னூலாசிரியர் ஐயுற்று 'நானே நான்' என்றனர் போலும்; கேவலம் ஜடதத்துவாதிகளைத் தான் அன்றெனக்கண்ட பின்னர் தன்னையறியுந்தர முதயமாம். "தன்னைத்தான் கண்டால் தனைப் படைத்தோனையும் இன்னவித மென்றறிந் தின்புறலாம்" எனவும், 'தன்னையறிவான் தலைவனையுந்தானறிவான்' எனவும் நூன்முறைகூறுவதறிந்தும், தான்வேறு ஆன்மாவேறு எனக்கண்டு, திரு-

வருட்சத்தியின் அநுக்ரகத்தால் பதியைத்துதிசெய்து பார்க்கப்பரிவன். ஈண்டு அத்திருவருட் சத்தியின் அநுக்கிரகமேகொண்டு பின்னர் விளங்கினமை கொண்டே "கட்டழகிதானே வெளிப்படுத்தி" யென்றனர். அருள் சக்தியம்ஸமாகும்.

அடர்ந்த மனக்காட்டை யஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்து தொடர்ந்துவெட்டிச் சுடுவதினி யெக்காலம்.

(பொ - ரை.) மனமாம் பிரதேசத்தில் அவ்வப்போது தோன்றும் மாயாகாரிய நிகழ்வாகிய தோற்றங்களையெல்லாம் பஞ்சாக்கர வாளினாலே தளிர்க்கத் தளிர்க்க வெட்டி வெட்டி யெரித்தல் இனி யெந்தக்காலமோ!

(கு - ரை.) சகலமாயாதோற்றங்களும், அவிவேக சங்கல்பாதிகளும் தோன்றுமிடம் மனப்பிரதேசமே யாதலால் "மனக்காட்டை" யென்றனர். அன்றியும், அம்மனத்தோற்றமாம் செடிகொடிக்காடுகள் ஒன்றினின்று மொன்ருகப்பெருகுவ தியல்பாதல்கொண்டே. ஆசிரியர் " அடர்ந்த மனக்காட்டை " யென்றனர். மனச்சேட்டைகளை யொழித்துத் தூய்மைசெய்தல் பஞ்சாக்கர ஜெபமாதலின் அதனை "அஞ்செழுத்தாம் வாளால்" என்ருர். (இன்னுமோர் விசேடம்) மேலே காடென்றதால் அவைகளை வெட்டி யெரிசெய்தல் வாள் அரிவாள் ஆனதால் வாளென்று கற்பித்தார் போலும். இன்னும் அந்தஜெபமும் அடுத்தடுத்துப் பலகாலமும் செய்து வந்தமையைக்குறிக்கவே தொடர்ந்து தொடர்ந்தென்றுங் கூறலாயினர்.

ஐந்துபொறி வழிபோ யலேயுமிந்த பாழ்மனதை
வெந்து விழப்பார்த்து விழிப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) இந்திரியாதிகள் வழிபோய் அலேந்து துன்புறும் படியான இத்தீய மனதை ஒய்ந்தொழியப்பார்த்து அதன்மேல் ஞானநேத்திரம் துலங்கப்பெறுதல் இனி எக்காலமோ!

(கு - ரை.) மனமாசொழியவே, அந்தர் முகத்தினறிவாகிய நேத்திரம் துலங்கி மெய்ப்பொருளைக் காட்டுமென்க.

இனமாண்டு சேர்ந்திருந்தோ ரெல்லாருந் தான்மாண்டு
சினமாண்டு போகவருள் சேர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) தத்துவக் கூட்டம் சமஸ்தமும் சமூலமாயொழிந்து அதன்காரியமாய காமக்குரோதாதிக ளனைத்தும் ஒழிந்தும், கோபமுதலியனவும் தொலைந்து திருவருட் சேர்க்கையுறுவது இனியெக்காலமோ!

(கு - ரை.) மனிதனுக்குள்ள தீயகுணங்கள் பலவற்றுள்ளும் கோபம் மகா கொடியதாதலின் அதனை ஆசிரியர் தனிப்படக் கூறினமையே காட்டுகின்றது. கோபத்தால் அரிய தவங்களெல்லாம் அக்கினிபட்ட வைக்கோற் போர்போல் அரைநொடிக்குள் அழிந்து போமென்றார் ஆன்றோர். அன்றிக் கோபிகளுக்குச் சிவப்பிரசாதமுங் கிட்டாதாகும். அதுபற்றிதான் ஔவையாரும் அறஞ்செய விரும்பு கூறியவுடன், 'ஆறுவது சினம்' என்று கூறியதாகவும் விளங்குகின்றது. சான்றாக.—

கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினான்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடா கோடியே. சி - வள்ளலார்.

அமையா மனதமையு மானந்த வீடுகண்டால்
இமையாம னோக்கி யிருப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) யாதானும் சாந்தமுறா மனமானது, தனக்கென ஓர் கிளர்ச்சி எதுவாயின் அப்போதே பரம சாந்த மடையப்பெறும். ஆகவே சதா திருவருட் பிரசாதத்தினை எதிர்நோக்கியே யிருத்தல்

வேண்டுமென்பது பெறப்பட்டதால் அது சித்திப்ப தெக்காலமோ! என்றார்.

(கு - ரை.) மனம் ஐம்பொறி வயப்பட்டு கெட்டலைவதை நிறுத்த வேண்டுமானால், பரவஸ்துவையே பார்த்துவரல் வேண்டு மென்றும், அதுவும் இமைகொட்டாது தரிசித்து வரலே மிக்கநல மென்றும் ஆன்றோ ரென்கிற சான்றோர் கூறுவாராயினர்.

கூண்டுவிடுஞ் சீவன்மெள்ளக் கொட்டாவி கொண்டாற்போல்
மாண்டுவிடு முன்னேநான் மாண்டிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) சரீரமாகிய கூட்டைவிட்டு ஆவி ஓட்டெடுக்கும்போது, சிறுகொட்டாவி விடுவதுபோல் வாய்திறந்து போதற்கு முன்னதாக நானென்னும் ஆணவமொழிந்து நிற்பது எந்தக் காலமோ!

(கு - ரை.) எப்போதும் சீவனதியல்பு சரீரம்விட்டோடி விடுவது நிச்சயமாதலால், "கூண்டுவிடும் சீவன்" என்றனர். அப்படி சீவன் பிரிந்து பிணப்பேரெடுக்காதும், நான் எனும் ஆணவக் கொடுங்கிழங்கை அகழ்ந்தெரிய வேண்டுவது அவசிய மானதாலும், அந்த 'நான்' போனவாறே தான் அத்துவித சித்தியாகு மாதலாலும், நானழிதற்கு இச்சைகொண்டனர் போலும். இலையேல் பிறவியோ நான்வந்தேனென்று வந்து குந்திக்கொள்ளு மாதலாலேயே 'நான் மாண்டிருப்ப தெக்கால' மென்றனர். என்? பிறப்பிற்கு வித்தாதலாலே 'நான்' எனும் ஆணவத்தை அடியோடும் குடியோட்ட வேண்டுமென்றும், அந்த நானழிந்தவாறே இறைவர்பால் இலயத்துக்கு இடமுண்டென்றுங் கருதியே அங்ஙனங்கூறினர் என்பது நன்குபுலப்பட்டது.

ஊனிறைந்த காய முயிரிழந்து போடுமுன்னம்
நானிறந்து போகவினி நாள்வருவ தெக்காலம்.

(பொ - ரை.) மாம்ஸங்களாலாய சரீரத்தைவிட்டு ஆன்மாபிரிதற்கு முன்னதாகவே நான் என்கின்ற ஓங்கல் பசையற் றொழிந்து போகும் காலம் எப்பொதுநேருமோ!

கெட்டுவிடு மாந்தர் கொர்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடு முன்னென்னைச் சுட்டிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) உலகாபாச நடவடிக்கையினுலேகெடும் புல்லறிவாளர்கள் இறுமாப்பு வார்த்தைகள் பேசிவந்து என்னுடலைச் சுட்டெரிப்பதற்கு முன்பாகவே என்பால் இயல்பாய்த் தோன்றியுள்ள தான (யான், எனது) என்னும் அகங்கார மமகாரத்தை - அதாவது 'சீவபோதத்தை' யான் சுட்டொழித்துப் பரிசுத்தமாயிருப்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) சரீரமழியுமுன் சிவபோத மொழியின் பிறவியற்று மோக்ஷசுகம் கைவரப் பெறலாமென்ற நோக்கமே யாகும்.

தோலேணி வைத்தேறித் தூரநடந் தெய்க்காமல்
நூலேணி வைத்தேறி நோக்குவது மெக்காலம்.

(பொ - ரை.) தோன்மய இச்சரீர ஏணியைக்கொண்டு பற்பல தலசேவைகள் செய்து துன்புறுது, முன்னோர் முறையென்கின்ற சாத்திர நூலேணியைக் கொண்டாய்ந்தேறி முடிவறிந்து அதன்பின்னர் தம்மானையே யறிந்து தரிசித்து மகிழ் வெய்துவதும் எந்தக்காலமோ!

(கு - ரை.) தலைவனைத் தத்துவாராய்ச்சியால் பலதலஞ்சென்று தரிசிப்பதினும் அந்தர்முக ஆராய்ச்சிக்கு நூலேணி கொள்வதே மிக மேலாயதென்றபடி.

வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு கண்மூடித் தழுவிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை) வாயையும் கண்ணேயு மூடிக்கொண்டு மட்டு மிருந்து, (மனம் விரிந்தலேந்து)யோகசாதனையால் மயங்கித்திரியாது, அருட்சத்தியின் கிருபையால் யோகம்சாதித்து சிவத்தையேசேர்ந்து நிற்றல் இனியெக்காலமோ தெரியேன்.

(கு - ரை.) போகங்களேயும் யோகத்தினேயும் ஈண்டு பின்படுத் தினர்.

காசினியெ லாநடந்து காலோய்ந்து போகாமல்
வாசிதனி லேறி வருவதினி யெக்காலம்.

(பொ - ரை.) க்ஷேத்திரயாத்திரையென்று பூமண்டல பிர தட்சணஞ் செய்து துன்புறுதபடி வாசியோகத்தின் சாதனையால் தேகத்தைத் திடப்படுத்தித் தத்துவாராய்ச்சி செய்வதினி யெக் காலமோ!

(கு - ரை.) தலயாத்திரையை வெகு சிலாக்கிய மாக்கொண்டு காலமும் பொருளும் வீணுகச் சிலவழிப்பதினும், ஞானனந்தத்தால் எம்மானே அந்தர்முக தரிசனஞ்செய்தல் பிறவிநோயைத்தடுக்கு மென்று தெரிவித்தவாரும்.

ஒலிபடருங் குண்டலியை யுன்னியுணர் வாலெழுப்பிச்
சுழிமுனையின் றுள்திறந்து தூண்டுவது மெக்காலம்.

(பொ - ரை.) நாதமயமாங் குண்டலி சத்தியைதுதிசெய்து அங்கிருந்து மூலாக்கினிமயமாய்த் தோன்றும் பிராணவாயுவை யெழுப்பிக் கண்டதாரையால் சுழிமுனைத் தானத்தின் ஆவரணத் தைப்போக்கி நந்தியொளிதரிசனத்தான் மதிமண்டலத்தையடைந்து திருவருட் சத்தியைத் தரிசிப்ப தெக்காலமோ!

இடையிங் கலைநடுவே யியங்குஞ் சுழிமுனையில்
தடையறவே நின்று சலிப்பறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) சூரியகலைக்கும் சந்திர கலைக்கும் பொதுவாய சுழிமுனை ஸ்தானத் தியானமாயிருந்து அலுப்பு சலிப்பற் றிருந்து வரல் எக்காலமோ!

(கு - ரை.) பிராணவாயுவினை முறையாக இரேசக பூரகத்தால் அநுட்டிக்க, சலிப்பறும் என்க. இன்னும் இந்த யோகாநுட்டானங்களின் இலக்ஷண நுட்பங்களை திருமந்திரத்தா னறிக.

மூல நெருப்பைவிட்டு முட்டிநிலா மண்டபத்தில்
பாலை யிறக்கியுண்டு பசியொழிவ தெக்காலம்.

(பொ - ரை.) மூலஸ்தானத்திருந்தும் பிராணவாயுவை கனலோ டெழுப்பிச் சந்திரமண்டலத்தில் தேக்கிட்டு, அடற்பெரும் பசிநீக்கி வாழ மதியமுர்தமுண்டுவந்து நிற்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) இங்கே, பாலென்றது, மதியமுதமாம் ஞானப் பாலையென்க. இது யோகதந்திரவித்தை. இவ்வித்தை பிணி மூப்புச் சாக்காடெனும் மூன்றையு மாற்றும் வன்மையது. இவ்வுண்மை வழியாம் வித்தையைக் கற்றுச் சரிவரசாதித்து விடுவரேல் ஓர் ஊழியளவும் மாயாது நிற்பர். சான்றுகூறின் திருமூலரே சாலுங்கரியாம்.

ஆகவெளிக் குள்ளே யடங்காப் புரவிசெல்ல
ஏக வெளியி லிருப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) சாக்கிரநிலையில், சரீர உட்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இயல்பான ஸ்தானங்களே ஆகவெளியாம். ஆகம் எனும் சரீர உட்கூட்டில் ஆண்டுள்ள கருவிகளோடும் கலந்து இயங்கியுள்ள பிராணவாயு சென்றுவிடுமேல் ஏகபரவெளிக்கண் சென்றிருந்து வாழ்தல் இனி எந்தக்காலமோ!

(கு - ரை.) சாக்கிரத்தில் பிராணவாயுவானது சகசமாக உள்ளிருந்து வெளிவந்தும், வெளியிலிருந்தும் சரீரத்துள்ளும் சென்று வந்துகொண்டிருக்கிறது. இந்தவாசியாகிய பிராணவாயு சந்திர கலை சூரியகலைகளென்ற வலதுநாசித்துவாரம் இடதுநாசி துவாரங்களால் வெளிச்செல்ல விடாது உண்மார்க்கமாகவே பிர்ம்ம ரந்திரமென்னும் உச்சிவெளிவரைச்சென்று மீண்டும் அந்தவழியே மூலாதாரமடைந்தும் வந்துகொண்டிருப்பின் பிராண லயமில்லையென்பது சித்தாந்தம். இதன்பிரயோக மர்ம தர்மங்கள் உத்தம குருமுகமாக விசாரித்து உபதேசிக்கப் பெறுதலே கிரமமாம். இவ்வாறு சாதனை செய்யும்போது பிராணன் துவாதசாந்த மத்தியில் இலங்கி நிற்குமென்க.

பஞ்சரித்துப் பேசும் பலகலைக்கெட் டாப்பொருளில்
சஞ்சரித்து வாழ்ந்து தவம்பெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) பற்பல வகையாகப் பேசும் சாத்திரங்கட்கு எட்டாத ஸ்தானமாகிய துரியங்கடந்து அப்பாற்பட்டுள்ள பரவெளிக்கண் குடியிருந்து தவமுடித்து ஆண்டுவியாபித்துள்ள ஏகபர வஸ்துவை அடையப்பெறுதல் எந்தக்காலமோ!

(கு - ரை.) பஞ்சகோசங்களையுங் கடந்து, அப்பாற்பட்ட பரவெளி வீட்டுக்குள்ளே பரன் பரையாய்ப், பின்னர் தனிப்பரவத்துவாய பரஞ்சோதி மயத்தில் ஒன்றிவாழ்தல் எப்போதென்றபடியாயிற்று.

மலமுஞ் சலமுமற்று மாயையற்று மானமற்று
நலமுங் குலமுமற்று நானிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) மலசல வாதனையொழிந்து, மாயாரகிதமாய், மானாபிமானம் விட்டு, நலமுங்குலமுமறந்து ஏகனாய் வாழ்வதினியெக்காலமோ!

ஓடாமலோடி யுலகைவலம் வந்து சுற்றித்
தேடாம லென்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) பலவாருன திருவிழா வேடிக்கை யார்த்தமாகப் பற்பல க்ஷேத்திரங்களுக்குச் சென்றும், மற்றும், அந்த சுவாமி மகா வரதர், இந்தசுவாமி மிக்க மூர்த்திகரமெனப் பேதமை கொண் டலைந்து திரியாதபடி என்னகத்தே தரிசித்தல் எப்போது வாய்க் குமோ என்பதாம்.

(கு - ரை.) ஈண்டு ஓடாமலோடி என்றது, 'ஓட்டமாயோ டாது சாதாரணமாய்ச் சுற்றித்திரிந்து' என்க. உலகத்தையே சுற்றி வரினும், காணப்பெரு. அன்பரகத்தையே ஆலயமாக் கொண்டவர். சான்ருக.

உடம்பினைமுன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண்டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின்றேனே. திருமூலர்.

" அண்டமெலாங் கண்ணுகக் கொளினுங்காண்டற் கணுத்துணையுங் கூடாவென் றனந்தவேதம் விண்டலறி யோலமிட்டுப் புலம்ப" என்ருர் வள்ளலார்.

அஞ்ஞானம் விட்டே யருண்ஞானத் தெல்லைதொட்டு
மெய்ஞ்ஞான வீடுபெற்று வெளிப்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) மடமை யொழிந்து திருவருட் சத்தியைச் சார்ந்து உண்மையான ஞானப்பேற்றினைக் கைவரப்பெற்று, ஜீவ போதங்கழன்று வெளியேகுதல் எந்தக்காலமோ.

(கு - ரை.) ஈண்டு, அஞ்ஞானம்,—உண்மை அறியாமையாம். இவ்வுண்மைப் பொருளொன்று உள்ளேயிருக்கும் உளவுதெரிய

வரும்; அதன்மேல் அதையறியுமாசை அறிவைப்பிடர் பிடித்துந் தும்; அறிவு தீவிரப்படவே, அருட்சத்தி வசப்பட்டு பதியைக்காட்டித் தான் மறையும்.

வெல்லுமட்டும் பார்த்து வெகுளியெல்லாம் விட்டகன்று
செல்லுமட்டுஞ் சிந்தை செலுத்துவது மெக்காலம்.

(பொ - ரை.) உடற்பகை விளைக்கும் தத்துவாதிகளின் பிரவிர்த்திகளைக் கூடுமானவரையில் ஒடுக்கி, கோபமுதலாய தீயகுணங்களைச் சகித்துச்செயித்து, பரமசாந்தமுற்று மௌனத்தை அப்பியசித்து, நிர்வகித்துவருதல் இனி எந்தக்காலமோ!

(கு - ரை.) மாயாவிவகாரிகளான தத்துவாதிகள் வழிசெல்லும் அந்தக்கரணங்களால் தலைவன் ஒருபோதும் தண்ணருள் புரியானென்பது திடமாயதால் அவைகளை யடக்கியொழித்து சாந்தமுற்று மௌன முத்திரையைக் கைக்கொண்டு நிஷ்டாபரனாய் நிற்பதே அவசியமென்ப தாயிற்று. "கோபமொழிய பாவங்கழியு" மென்பார் ஆன்றோர்.

மேலாம் பதந்தேடி மெய்ப்பொருளை யுள்ளிருத்தி
நாலாம் பதந்தேடி நான்பெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) மேலாகிய பதவியைப் பெற ஆராய்ச்சிசெய்து ஒப்பற்ற மெய்ப்பொருளை உள்ளத்தே வைத்தறிந்து அத்துவித முத்தியைப்பெற முயன்று நான் பெறுவது இனி யெக்காலத்திலோ தெரியேன் என்றபடி.

எண்ணாத தூரமெல்லா மெண்ணியெண்ணிப் பாராமல்
கண்ணாடிக் குள்ளொளிபோற் கண்டறிவ தெக்காலம்.

(பொ - ரை.) உன்னற்கரிய பரம்பொருளினை பலகாலும் பலவாறாகவும் எண்ணியாராயினும், அகப்படாத அப்பரம்பொருளைக்

காணப்பெறு து கண்ணுடியின் பிரகாசமொத்த உள்ளொளிர் சோதி நாதனை நான் தரிசித்துய்வது எந்தக்காலமோ!

(கு - ரை.) நெஞ்சகத்திருந்தும் காணப்பெறு துரியாதீதப் பரம்பொருளை, "மனத்தானும் வாக்கானு மன்னவொண்ணு" வென்றும், "எண்ணுதற்கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி" என்று திருவாசகத்தில் மணிவாசகரும், "மனுநிகளுக் கெட்டாத பரமானந்த வாழ்வினையங் கோரிலிங்க மணலாற்கூப்பி" என்று பெரியபுராணத்தும் கூறியவாறு கருவிகரணங்களுக் கெட்டாத பரம்பொருளென்பது நன்குபுலப்பட்டது.

என்னை யறிந்துகொண்டே னெங்கோமா னுடிருக்கும்
தன்மை யறிந்து சமைந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) என்னை யான் இவ்வாறெனத் தெரிந்துகொண்டேன்; இனி எம்மான்றன் தன்மைபெற்று அவரோடும் பேதமின்றிவாழும் வாழ்க்கையைப் பெறுவது எந்தக்காலம்.

ஆறு தாரங்கடந்த வானந்தப் பேரொளியைப்
பேருகக் கண்டுநான் பெற்றிருப்ப தெக்காலம்.

(கு - ரை.) ஆதாரமாறுங்கடந்துபோய் ஆனந்தமாய்ப்பிரகாசிக்கும் பெருஞ்சோதியிறைவனை யான்பெறுதற்கரிய பேறுக்கொண்டு பெருவாழ்வெய்தல் எந்தக்கால மென்க.

ஆணவ மாயத்தா லழிந்துடலம் போகாமுன்
காணுதலா வின்பமற்றுக் கண்டறிவ தெக்காலம்.

(பொ - ரை.) ஆணவாதிகளின் கொடுமைகளால் உடம்பு மாய்தற்குள்ளாக, பரசிவதரிசனத்தாலே நிர்மலானந்தமுற்று நிச்சய நிகழ்வையறிந்துய்வதும் இனி எந்தக்காலமோ!

மும்மலமுஞ் சேர்ந்து முளைத்தெழுந்த காயமிதை
நிர்மலமாய்க் கண்டுவினை நீங்கிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) (ஆணவம், கன்மம், மாயை) என்னும் மூவகையான மலக்கூட்டுறவினால் வந்த யிந்தச்சரீரத்தினைப் பரிசுத்தமாக நடத்தி வினைமேற்செய்யாது சும்மாயிருப்பதினி எந்தக்காலமோ!

(கு - ரை.) மும்மலச்சாரியமாய் இவ்வுடம்புண்டானமையான் "மும்மலஞ்சேர்ந்து முளைத்தெழுந்த காயமிதை" என்றார். சரீரத்தை நின்மலமாக்கல், கருவிகரணாதிகளையெல்லாம் தத்தம் விஷயாதிகளின் வழிசெல்லவொட்டாது மறுத்துவிடுதலாம். ஆகவே, ஆமையைப்போலேந்தடக்கிச் சும்மாயிருப்பின், அதனாற் பிறப்பிறப்பின்றி மோக்ஷம் பெறலாகுமென்க.

முன்னை வினைகெடவே மூன்றுவகை காட்சியினால்
உன்னை வெளிப்படுத்தி யுறுவ தினி யெக்காலம்.

(பொ - ரை.) பிராரத்தம் என்ற பழவினை யொழிய, மூவகைப்பட்ட காட்சியினாலே வெளிகண்டு அடையப்பெறுவது இனி எந்தக்காலமோ!

(கு - ரை.) காக்ஷிமூவகையாவது:— ஸ்தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூன்று சரீரங்களாலும் ஆய்ந்துணர்தலாம். இவ்வகையன்றி, ஆத்மதத்துவம், வித்யாதத்வம் சிவதத்துவம் எனும் மூவகைத்தத்துவங்களாலும் காண்டலும் அமையும். ஆயின் இது ஏகதேசமாம். இது நிற்க; சிற்சத்தியின் கிருபாவிசேடத்தால் தற்பரத்தை நோக்கித்தூண்டினும், தானே முன் தோற்றநிற்கும் என்க. ஆயினிஃது அகங்கனிந்த கருணையாலென்க.

கண்ணினொளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்து கொண்டதுவும்
விண்ணினொளி கண்டதுவும் வெளிப்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) கண்களின் மத்தியில் சிறியவோர் ஒளிபாய்ந்து துலங்குவதும், கருத்தையுணர்ந்துகொண்ட தன்மையும், மற்றும் பரவெளியில் தோன்றிய ஒளியைக்கண்டதுவும் நான்தெரிந்து கொள்ளல் இனி யெப்போதோ!

(கு - ரை.) கண்களிலே ஓர் சிறியதாக ஒளிதுலங்குவது, ஆன்மசரீரத்தின்பால் கடவுள் நிறைந்துள்ளமை தெரிதலாகும்; கருத்தறிதல், மனம் சகலவிஷயாதிகளையும் ஆத்மசகாயத்தாலுணர் தல்போலவே ஈண்டு உடலின் ஆன்மா எம்பெருமான்றன் ஆற்ற லாலே சர்வபதார்த்தாதிகளையும் அறிந்துள்ளது; இன்னும், ஆகா யத்தில் ஒளியைக் காணப்பெறல் சக்திபிரிந்த சிவத்தைத் தனித் தறிதலாகும் எனவிளங்கலாயின.

கனவுகண்டாற் போலெனக்குக் காட்டிமறைந் தேயிருந்த
நினைவைப் பரவெளிமேல் நிறுத்துவது மெக்காலம்.

(பொ - ரை.) சொப்பனத்தில் ஓர் பொருளைக்கண்டதைக் கூறும்வகையான் 'கனவுகண்டது' போல் என்று நிரூபித்தல் எவ் வாறே, அவ்வாறே ஓர் சோதியைக்காண்பித்துப் பின்மறைப்பெய் திய என் எண்ணத்தை எப்போதும் பரவெளியின்கண் வைத்து எதிர்பார்ப்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) கனவிலே காணத்தகும் அவைகளைப்பின்னர் சாக் கிரத்திலே மறந்துதோன்றுவதுபோன்று முன்னம் எம்மான்றன் சோதிமயத்தைப்பார்த்து பின்பு அதனை மறைப்புச் செய்தல் தகா தென்றனர். ஈண்டு ஞாபகத்தையொழிப்பது மதியீனமாகும்; ஆகவே அவ்வாறு மறதி வாராவகையாய் சதா ஞானகாயத்திற் றோற்றமாய் நிற்றல் வேண்டு மென்றபடியாம்.

ஆரென்று கேட்டதுவு மறிவுவந்து கண்டதுவும்
பாரென்று சொன்னதுவும் பகுத்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) யதார்த்தமான உண்மைப்பொருளினைக் காண்பது நிமித்தமாகத் தத்துவாதிகளை ஆய்ந்துவர, அத்தத்துவாதிகள் 'ஆராய்வார் யாவர்' எனவினவியதும், அதற்குத் தரங்கூறுதல் போன்று ஆன்மாவானது தத்துவங்களைக் கண்டுநிற்க, 'நானே, பார்ப்பாய்' என்று ஆன்மாசொல்லுவதுமாகிய இந்நிலைமைகளைப் பகுத்தறிந்து உணர்தல் எக்காலமோ!

(கு - ரை.) தத்துவகாரியப்பட்ட இச்சரீரம் நான் அல்லவென்பதும், 'நான்' இங்கே ஆத்மாவெனவும் தெரிவித்தமை பெறப்பட்டது.

நினைக்கு நினைவுதொறும் நிறைந்தபரி பூரணத்தை
முனைக்குமேற் கண்டுகண்ணில் முத்துதிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) நினைவுகள்தோறும் இடையறாது பொருந்தியுள்ள பூரணாகாரவஸ்துவை சுழிமுனைக்குமேலாய்த்தெரிந்து நேத்திரத்தில் முத்துமுத்தாக ஆனந்த நீர் வடிவது எந்தக்காலமோ!

(கு - ரை.) சகல நினைவிலும் தலைவன் கலந்தேயிருப்பது அவனது சர்வவியாபகத்துவ மெனவிளங்குவதறிக.

முப்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமாய்
அப்பாழும் பாழா யன்புசெய்வ தெக்காலம்.

(பொ - ரை.) மாயையே காரியப்பட்டுள்ள ஆத்மதத்துவம் வித்யாதத்துவம் சிவதத்துவம் என்னும் இம்மூன்றும் பாழ்பட்டு, இவைகட்கு சேர்க்கை யேதுவாயிருந்த ஆணவமும் கெட்டுப்போக

இவையனைத்துங் கடந்து அப்பால் பிரகாசியாநின்ற பரசிவன்பால்
அன்புறுவது இனி யெக்காலமோ!

சீயென் றெழுந்து தெளிந்துநின்ற வான்பொருளை
நீயென்று கண்டு நிலைபெறுவ தெக்காலம்!

(பொ - ரை.) உலகமும் தேகமும் வாழ்வும் கேவலம் துச்சம் சீ! என்று அதைமருவாது தனித்து தெளிந்தறிந்த பரஞ்சுடரையே தேவரீராகவுணர்ந்து அவரோடும் நிர்மலமாய்க்கலந்து விடுவது எக்காலமோ!

(கு - ரை.) தத்வாதீதமான யேக வஸ்துவையே தலைவனைக் கோடல் மரபென்பதை நன்குவியக்தப் படுத்திவிட்டதாகும்.

வவ்வெழுத்து மவ்வெழுத்தும் வாளாகுஞ் சிவ்வெழுத்தும்
யவ்வெழுத்தி னுள்ளே யடங்கிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) வகாரஎழுத்தும், சிகாரஎழுத்தும், மகாரஎழுத்தும் யகாரத்திலே அடங்குவது எந்தசமயமோ.

(கு - ரை.) சி. என்றது சிவமாம்; வ. என்பது சக்தியாகும்; ய. என்பது ஆத்மாவாகும்; ந. திரோதானசக்தியாம்; ம. மலமாம்; ஆக (சிவயநம) சத்திசிவத்திடம் ஆன்மா சென்றடைதல் வேண்டுமென்பதாம்; இவைந்தினுள் சி. மலமாயை பரிபக்குவஞ் செய்வதால் வாளாகும் எழுத்தென்றனர்.

எழுத்தெல்லா மாண்டிறந்தே யேகமாய் நின்றதிலே
அழுத்தமாய்ச் சிந்தைவைத் தன்புகொள்வ தெக்காலம்.

(பொ - ரை.) கூறிய எழுத்துக்களெல்லாம் மரிப்புற்று ஏகமாயிருந்து, அந்த ஒன்றின்பால் மனம் பற்றச்செய்து அன்பு பெறல் எந்தக்காலமோ!

அருவாகி யுருவாகி ஆதியந்த மாகிநின்ற
குருவாகி வந்தெனையாட் கொண்டருள்வ தெக்காலம்.

(பொ - ரை.) அரூபமாகவும், ரூபமாகவும், ஆதியாயும் எவற்றிற்கும் அந்தமாயும் நித்தியமாயுள்ள சற்குருவாய்வந்து எளியேனை பாசக்கடற்குள்ளே செல்லாதவாறு ஆட்கொள்வது எக்காலமோ!

(கு - ரை.) அருட்குருவாய் வெளிவந்தருளும் அரும்பொருளார் அருவாயுருவாயும் ஆதியந்தமாகவும் விளங்குவதே யென்பாம். சற்குருகடாக்ஷத்தாலேயே மலபரிபாகமுறுவதால் 'குருவாகிவந்து' என்றனர்.

நானென் றறிந்தவனை நானறியாக் காலமெல்லாம்
தானென்று நீயிருந்த தனுவறிவ தெக்காலம்.

(பொ - ரை.) நானே ஆன்மாவென்று கருதியிருந்த என்னை யான் அறிந்திராக் காலங்களிலெல்லாம் நானேதான் என்று வாசஞ் செய்த உடலெதுவோ அதையறிதல் இனி எச்சமயமோ!

(கு - ரை.) இங்கே, நான் எனல் உடம்பையல்ல; சிவமுமல்ல என்றதை நிலைநாட்டியதாம்; இதனை, 'நானறியாக் காலமெலாம்' என்ற குறிப்புரை தேற்றியதாகும். நீயிருந்த 'தனு' என்றது, இங்கே எம்பெருமானுக்குச் சரீரமாய ஆன்மாவே யென்றறிக. இதனையே, "உலகநிலை முழுதாகி யாங்காங்குள்ள வுயிராகியுயிர்க்குயிரா மொளிதானுகி" என்ருர் வள்ளலாரும், இதனுல், பரமாத்மாவுக்கு ஜீவாத்மாவே சரீரமாகும் என்பதறிக.

என்மயமாய்க் கண்டதெல்லா மெண்ணியெண்ணிப் பார்த்தபின்பு, தன்மயமாய்க் கொண்டதிலே சார்ந்துநிற்பதெக் காலம்.

(பொ - ரை.) தற்போதமா யறிந்தன வனைத்தும் ஆழ்ந்தாய்ந்து பார்த்தபின்னர் சிவபோதமாய்க் கண்டு அதன்கண் சேர்ந்திருப்பது எக்காலமோ! என்றபடி.

(கு - ரை.) தன்சொரூபமாகக் காண்டல் சிவபோதமென்னுந் தற்போதமாகும்; அனைத்தும் ஜீவாத்மாவாகப் பாவிக்கும் ஏகாத்ம வாத முடிபாகும். இதன்மேல் ஆராய்ந்தறியத் தக்கதுவே பரமாத் மாவாகும். அந்த நிலையினைத்தான் இங்கே 'தன்மயமாய்' என்று குறித்துள்ளதாம்.

ஒளியி லொளியா முருப்பிறந்த வாறதுபோல்
வெளியில் வெளியான விதமறிவ தெக்காலம்.

(பொ - ரை.) நிலவரமாய ஒளியிலே ஒளிவடிவங்கள் தோன்று வனபோல் பரவெளியிலிருந்தும் திருவருள் வெளிபுலப்படுந் தன் மையைத் தெரிவது எக்காலமோ.

(கு - ரை.) இதனால், 'ஒளியின்கண் ஒளி' யென்றது.—பூத ஒளியின்கண் திருவருள் ஒளியென்றும், 'வெளியில் வெளியான' என்பது பூதாகாயத்திலிருந்தும் 'ஞானாகாயம்' எனவும் பொருள் கொள்ளுவோரு முளர். ஈண்டு, ஒளியில் ஒளிதோன்றல், யாண்டு முள்ள நெருப்பிலிருந்து நம்முயற்சிகொண்டு அவ்வவ் விடங்கடோ றும் தனித்தனியாக வர்த்தியினாலோ அல்லது மற்ற முயற்சி சாதகத் தாலோ தீயை உண்டாக்கல்போல் என்க. வெளியில்வெளி எங்கு முள்ள பரமாகாயத்தினின்றும் ஆன்மாக்களுக்காக ஆசாரிய சொரூபங் கொள்ளும் சத்தியின் அம்ஸமென்பாம்.

ஒளியிட்ட மெய்ப்பொருளை யுள்வழியிலே யடைத்து
வெளியிட்டுச் சாத்திவைத்து வீடுறுவ தெக்காலம்.

(பொ - ரை.) அருண்மயமாய் விளங்கும் யதார்த்தப் பொருளினை உள்ளே நிலைப்படுத்தி வெளியமைத்து, மூடி, முக்திபெறல் எக்காலமோ!

(கு - ரை.) ஆன்மதத்துவத்தில் தலைவனுண்மை யுணர்ந்து அதுவே பிறவிடங்களிலுள்ளமையு முணர்ந்து மௌனநிலை காண்பதைப் பற்றிக் கூறலாயின வென்க.

காந்தம் வலித்திரும்பைக் கரந்திழுத்துக்கொண்டதுபோல்
பாய்ந்து பிடித்திழுத்துன் பதத்தில்வைப்ப தெக்காலம்.

(பொ - ரை.) காந்தமானது தன்னைக் காட்டாமல் மறைந்து நின்று இரும்பை வலிந்து இயக்குந் தன்மைபோன்று, அடிமையைத் தேவரீர் விரைவாய் வலியப் பற்றியீர்த்துத் தம்திருவடிக்கண் சேர்த்துக் கொள்ளல் எக்காலமோ!

பித்தாயங் கொண்டு பிரணவத்தை யூடறுத்துச்
செத்தாரைப் போலே திரிவதினி யெக்காலம்.

(பொ - ரை.) ஞானப்பித்தேறி பிரணவத்தைத் தாண்டிச் செத்தாரைப்போலத் திரிந்தலைதல் இனி எந்தக்காலமோ!

(கு - ரை.) ஈண்டு பிரணவமாவது, சுத்தமாயையாம். இதனைக்கடந்த அப்பாற்பட்ட நிலையினையே செத்தாரையொத்த நிலையென்பர்; தவிர, அந்நிலையையே இராகத் துவேஷமற்ற நிலையென்பர் மேலோர்; அதாவது: சரீரம் யானன்று எனும் நிலையாம். ஆகவே பிரணவ சமாதியினும் காரண சரீரப்பற்றுதல் உண்மையை இங்கே கவனித்தற்குரியது.

ஒழிந்த கருத்தினைவைத் துள்ளெலும்பு வெள்ளெலும்பாய்க்
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) சகல ஆசைகளையு மொழித்தமனத்தால், உடலுள் உள்ள எலும்புகள் யாவும் வெள்ளெலும்பாய் சகலமுமொழிந்த சவத்தைப்போன்றுதிரிந்து எம்மானைக்காண்டல் எக்காலமோ அறியேன் என்றபடி.

(கு - ரை.) பிணம்போலிருந்தென்பது, யோகநித்திரையை என்க.

ஆதி கபிலர்சொன்ன வாகமத்தின் சொற்படியே
சாதி வகையில்லாமற் சஞ்சரிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) முன்காலத்துக் கபிலரருளிய சாத்திரமுறை கொண்டே சாதிபேதமற்றுவாழ்தல் இனி எக்காலமோ!

(கு - ரை.) தொன்மையில் திருவள்ளுவரது சகோதரராய கபிலர் அருளிச்செய்த ஓர் சிறுநூல் 'கபிலரகவல்' என்பது. அச் சிறுநூல் ஜாதிவகைகளைப்பற்றி மறுத்துக்கூறப்பட்டுள்ளது; அதனை இப்பெரியார் உலகோர்க்கு ஞாபகம் செய்தவாறாகும் என்க. ஆனாலம்முறைமை ஞானப்படியினிலுள்ளாரையே குறித்துள்ளதென்றறிக.

சூதுங் களவுந் தொடர்வினையுஞ் சுட்டிடக்கால்
ஊதுந் துருத்தியைப்போட் டுனையடைவ தெக்காலம்.

(பொ - ரை.) சூது என்ன, களவு என்ன, இவைகளால் ஏற்படும் தீயகாரியங்களையெல்லாம் சேர்த்து சுட்டொழிப்ப, இவை விளைவிடமாம் காற்றடைத்தூதும் துருத்தியையொத்த இந்தவுடம்பைக் கரைத்துத்தேவரீர் பாதமடைதல் எப்போது.

(கு - ரை.) சூதுமுதலிய தீவினைகள் பலவின் கூட்டமே சேர்ந்து இச்சரீரமாகவந்துள்ளது; ஆதலாற்றான் "தொடர்வினையுஞ்

சுட்டிட" என்றனர் போலும்; இவை அக்கினியைவிடக் கடூரமா யுள்ளதால் 'சுட்டிட' என்ருர்.

ஆசைவலைப் பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணித் தீபத்தி லொன்றிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) ஆசையாகிய வலைத்தொடக்கில் சிக்குண்டு வீணே மாயாமல் சப்தியாநின்ற இரத்னசோதியிற் கலந்துவாழ்வ தினி யெந்தக்காலமோ.

(கு - ரை.) ஓசைமணித்தீபம் - இங்கே நாதமாம். மணியில் ஒளி எப்போதும் நீங்காது பிரகாசித்தலால் 'மணித்தீப' மென்றனர் போலும்.

கல்லாய் மரமாமாய்க் கயலாய்ப் பறவைகளாய்ப்
புல்லாய்ப் பிறந்தசென்மம் போதுமென்ப தெக்காலம்.

(பொ - ரை.) கல், மரம், மீன்பறவை, புல் முதலாயுள்ள பிறப்புக்களிலெல்லாம் பிறந்திளைத்து வருந்தியது இனிப்போதும் எனக்கூவுதல் எந்தக்காலமோ !

தக்கும்வகைக் கோர்பொருளும் சாராமலே நினைவில்
பக்குவம்வந் துன்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) திருவருளானது பொருந்தியிருத்தற்குரிய வழியில் நிற்பதற்கு வேறு எவற்றினும் பொருந்தி யில்லாமல் என் நினைவில் பரிபக்குவமுற்றுத் தேவரீர்து திருவருளை முன்பார்த் திருப்பது எந்தக்காலமோ !

(கு - ரை.) ஆன்மாவைச்சார்ந்து அதன்வண்ணமாய சுபாவத் தாலே திருவருளில் அழுந்தவேண்டுமானல் இதரவஸ்துக்களைப் பற்ருது நிற்றல்வேண்டும். அங்ஙனம் வேறொன்றில் பற்ருதிருத்

தற்கு ஆன்மாவிற்கு வலிமையின்ருனதால் தலைவனருள் கண்டு நிற்றல் வேண்டுமாம். என்? அப்போது ஆன்மா இதரபொருளில் மருவாதிருக்குமாதலா லென்க.

தூரோ டிசைந்து சுழன்றுவருந் தத்துவத்தை
வேரோ டறுத்து விழுங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) மகாமாயை யென்கின்ற புதரோடும் அசைந்தாடி நின்று காரியப்பட்ட தத்துவாதிகளை மூலத்தோடுங் களைந்து விழுங்குதல் எக்காலம்?

(கு - ரை.) இதிலே, தூறு - கொத்து அதாவது மாயையை, இயல்பாகவே பலவிடங்களிலும் புதரென்றே பேசியுள்ளார்போலும்; தவிர ஒரோ விடத்து சேறுஎனலும் பொருந்துமாம். இதனுல் மாயா தத்வவேரை சம்ஹரித் தென்றபடியாயிற்று. தத்துவ வேராவது தத்துவ மூலத்தையாம். அதாவது தத்துவகாரண மாய மாயையை யென்றறிக.

பாச நடுவேறிப் பாய்ந்தெழுந்த சித்திரத்தை
ஏச நடுமூலந் திருத்துவது மெக்காலம்.

(பொ - ரை.) பாசநடுவைச் சேர்ந்து ஊன்றி நின்றோங்கிய இச்சரீரத்தினை உலகத்தவர்கள் ஏசும்படி, அதன் பிரத்தியக்ஷத்திற்கு காரணமாயுள்ளதை சீர்படுத்துவது எந்தக்காலமோ!

(கு - ரை.) 'சித்திரத்தை' யென்றது, மாயாகற்பித தத்துவத் தொகையுருவாம் இவ்வுடம்பை யென்க. பந்தபாசத்தினு லேற்பட்டதாகலின் பாசநடுவேறிப் பாய்ந்தவென்ருர்.

ஓரின்பங் காட்டு முயர்ஞான வீதிசென்று
பேரின்ப வீடுகண்டு பெற்றிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) உயர்வொப்பில்லாத மேன்மையதான ஆனந்தாநுபவ ஞானத் திருவீதியடைந்து ஆண்டுள்ளதாகிய பரமாநந்த வீடடைந்து வாழ்தல் எக்காலமோ!

(கு - ரை.) ஈண்டு ஞானமே வீதியாம். இன்பாநுபவமே வீடாம். இதனால் மோக்ஷம்=வீடென்பதாயிற்று.

காரணமாய் வந்தென் கருத்தினுரைத்த தெல்லாம்
பூரணமாக் கண்டு புகழ்ந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) எம்மிறைவன், காரணகுருவாய்த் தோன்றி என் மனத்தகத்தே நன்கு பதியுமாறு ஓதியருளிய உபதேச வுண்மைகளனைத்தும் ஒப்பற்ற நிறைமொழி யெனவறிந்து புகழ்ந்து போற்றுநாள் எந்நாளோ!

(கு - ரை.) திவ்யஸ்ரீ மெய்ஞ்ஞான தேசிகனார் நித்தியானந்த திருவுருக்கொண்டு வருதலையே 'காரணமாய்' என்றனர் போலும். என், அக்காரணமும் நித்தியத்துவமாதலினாலென்க. ஈண்டு புகழ்ந் திருத்தல் - வேறொன்றையுங் குறியாது தலைவன் அருட்டன்மையையே புகழ்ந்த பாடலாம்.

ஆயுங் கலைகளெல்லா மாராய்ந்து பார்த்ததற்பின்
நீயன்றி யொன்றுமில்லா நிசங்காண்ப தெக்காலம்.

(பொ - ரை.) ஆராய்ந் துணரத்தக்க சாத்திரங்க ளனைத்தும் நன்கு ஓதி யுணர்ந்து, அத்தெளிவினாலே தேவரீரன்றி இதரபொருளில்லை யென்ற ஓர் நிச்சயத்தைக் காண்டல் இனியெக்காலமோ!

குறியாகக் கொண்டு குலமளித்த நாயகனைப்
பிரியாமற் சேர்ந்து பிறப்பறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) என்னை யாட்கொள்ளுவதைத் தனக்குற்றகுறிப்பாகக் கொண்டருளி மெய்யடியார் கூட்டத்தை என்பால் கொடுத்

தருளிய எம்மானை ஒருபோதும் நீங்காதிருந்து ஒன்றுபட்டு இப்பிறவியைப் போக்கடிப்ப தெந்தக்காலமோ!

(கு - ரை.) மெய்யன்பர் சேர்க்கையே மேன்மை பயத்தலின் 'குலமளித்த நாயகன்' என்றார். 'அடியாருறவும் அரன்பூசைநேசமும்' என்றார் வெண்காட்டடிகளும்.

மத்தடுத்து நின்று மருளாடுவார் போலே
பித்தடுத்து நின்னருளைப் பெற்றிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) மயங்கி மருளுற்றோர் ஆடுதல்போல மெய்ஞ்ஞான மயக்கத்திலேறி தேவரீரது திருவருள் தேடிக் கொள்ளுதல் எந்தக்காலமோ!

(கு - ரை.) மருளாடிக் குறியுரைப்பார்க்குத் தன்னுடலுணர்வில்லாமை யென்றபடியாம்.

சாவாமல் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேவாமல் வெந்திருக்க வேண்டுவது மெக்காலம்.

(பொ - ரை.) மரணமுறாது இறந்திருந்து சற்குருநாதன் திருவடிக்கீழே வேகாதபடி வெந்து வாழ்வது எந்தக்காலம்.

(கு - ரை.) தூலசரீரம் மரிக்காது சூக்கும தத்துவமாய ஜீவபோத மழியப்பெறுவதே சாகாமல் சாதலாம். வேகாமல் வேவதாவது: பூதாக்கினியினால் நீறுபடவேகாமல் ஞானக்கினியினாலே தற்போதம் அழியப்பெறுதலாம்.

என்னை யறியாம லிருந்தாட்டுஞ் சூத்திரநின்
தன்னை யறிந்து தவம்பெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) தமியேனறியாவண்ணம் என்பாலிருந்து என்னை யாட்டுவிக்குஞ் சூத்திரதாரியாகிய தேவரீரை யறிந்து தவமுறுற்றல் எக்காலமோ!

உள்ள மறியா தொளித்திருந்த நாயகனைக்
கள்ளமனந் தெளிந்து காண்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) என்நெஞ்ச மறியாதபடி என்னிடத்து ஒளிந் திருக்குந் தலைவனை என்வஞ்ச நெஞ்சம் பரிசுத்தமாய் அதனைமேற் காண்பது இனியெக்காலமோ.

வாசித்துங் காணமல் வாய்விட்டுப் பேசாமல்
பூசித்துந் தோன்றாப் பொருள்காண்ப தெக்காலம்.

(பொ - ரை.) அடுத்தடுத்துப் படித்தெடுத்தும் அகப்படாததும், வாயால்பேசுத லொண்ணு மோனநிலையிலே தோன்றுமலும், பூசா உபசாரத்தால் காணப்பெறு துமுள்ள பரம்பொருளினைக் காணப்படு தல் இனி எக்காலமோ!

பன்னிரண்டு காற்புரவி பாய்ந்துசெல்லத் தப்பாமல்
பின்னிரண்டு சங்கிலிக்குள் பிணைப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) பன்னிரண்டங்குல அளவு பாய்ந்து செல்லும் நாசிக்காற்றினைத் தன்னிட்டப் பிரகாரம் கடக்கவிடாதபடி இரேசக பூரகமென்கிற சங்கிலிகொண்டு கட்டுதல் எக்காலமோ.

(கு - ரை.) வலதுநாசித் துவாரத்தாற் செல்லும் காற்றுக்கு வாசியென்றும், அது பனிரண்டங்குலம் பாய்ந்துபோகும் சுபாவ முடைய தெனவும், வாசி - என்பதற்குக் குதிரையென்றும் பொரு ளிருத்தலால் 'புரவி' யென்றும் கூறலாயினர். இரேசக பூரகத் தால் அளவால் கட்டவேண்டலின் 'பின்னிரண்டு சங்கிலிக்குள்'

என்றார். இரேசகம் - பிராணவாயுவை நாசிவழி வெளிப்போகச் செய்தல்; பூரகம் - அதையே பின்னும் உள்வாங்குதல். கும்பகம் - உள்ளேயே கும்பித்து நிற்றல் என்க.

நாட்டுக்கா லிரண்டும்விட்டு நடுவக்கா லூடேபோய்
ஆட்டுக்கா லிரண்டினுள்ளே யமர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) நாட்டப்படும் வாயு இரண்டை வெளிவிட்டு நடுவாயுள்ள வாயுவிற்சென்று அங்கே நிர்த்தனம்செய்யும் தலைவனது இருதிருவடிகளின் கீழாய் வாழ்தல் எந்தக்காலம்.

(கு - ரை.) நாட்டுக்காலாவது, இரேசகமும் பூரகமுமாம். இவை யிரண்டாம். நடுவுக்கால் என்றது கும்பகமாம்.

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாயா மிரேசகத்தா லுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலால முண்டா னருள்பெற லாமே. திருமந்திரம்.

பாற்பசுவைப் பூட்டிப் பதியில்வைத்துச் சீராட்டிக்
காற்பசுவை யோட்டியதிற் கட்டிவைப்ப தெக்காலம்.

(பொ - ரை.) அமுதப்பால் சொரியாநின்ற பசுவாம் ஆன்மாவைச் சிவபோதத்திற்சேர்த்து காற்றாம் இரேசக பூரகமெனும் பசுவை அதாவது பிராணவாயுவை அதன்பாற் செலுத்தி அவ்வாயுவால் ஆன்மாவைக் கட்டிடல் எக்காலமோ.

(கு - ரை.) காற்றினால் ஆன்மாவைக் கட்டல் - ஈண்டு கும்பித்தலாகும்; சான்றாக;—"இட்டதவ் வீடிளகாதிரேசித்துப், புட்டிபடத்தச நாடியும் பூரித்துக், கொட்டிய பிராண னபானனுங் கும்பித்து, நட்டமிருக்க நமனில்லை தானே." திருமூலர்.

பலவிடத்தே மனதைப் பாயவிட்டுப் பாராமல்
நிலவறையி னூடேபோய் நேர்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) மனத்தைப் பலதிசைச் செலுத்திப்பாராது மதி மண்டலஞ் செலுத்தி தேவரீர் தம் அருளுக்காட்படல் எக்காலம்.

(கு - ரை.) பயனற்றதாய பிறவிடங்களி லெல்லாம் மனதைச் செலுத்தி வீணே பராக்காயிராது, நிலஅறையாங் குகைக்கண் எம்மான் எழுந்தருளியிருத்தல் சத்யம். குகையிலுள்ளான் - குகன் என்பது முண்டு. குகை - இயற்கையாற்றூனே கடவுளால் நிர்மாணித்துள்ள நிர்மலப் பிரதேசமாயுள்ள சித்தஸ்தானம் என்பதே குகையெனக் கண்டார் போலும். இதனையே தாயுமானூர் ஸ்பஷ்டமாகச் "சித்தமிசை குடிகொண்ட அறிவானதெய்வ" மென்றூர் போலும். "மாசகன்ற யோகர் மனக்குகையில் வாழுமாதேவ" னென்றூர் பிறரும்.

காமக் கடல்கடந்து கரையேறிப் போவதற்கே
ஓமக் கனல்வளர்த்தி யுள்ளிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) காமமாகிய கடலைத்தாண்டி யதன் பக்கலுள்ள திருவருளாய கரையேறிப் போதற்கு, ஞானக்கனலை வளர்த்திட்டு ஐயன் அருள்வெளி வீட்டில் நுழைந்து ஆங்கே வாழ்வது இனியெக்காலமோ!

(கு - ரை.) ஞானுக்கினியைக் கொண்டே காமக்கட்டினையழித்தல் வேண்டுமாதலின், "ஓமக்கனல் வளர்த்தியுள்ளிருப்ப" தென்றூர்போலும். ஓமக்கனலாவது ஈண்டு மூலாதார ஸ்தானத்திருந்து எழும் பிராணவாயுவை யெழுப்பிக்கண்ட தாரையாக வூத பிரம ரந்தரம்வரைச் செல்லுந் தன்மையாயுள்ள யோக அநுட்டான மாகும். இதனல், காமத்தீ மூலாக்கினியால் அடங்கிவிடும் சுபாவ மாதலால்

அங்ஙனம் யோகியர் செய்தலியல்பாம். ஆகவே மனம் நிர்ச்சிந்தை யாகு மென்றபடியாம். இக்கருத்தினையே திருமூலர் தம் திருமந்திர வாயிலாக:—

மேலை நிலத்தினில் மேதகப்பெண் பிளாய்
மூல நிலத்தினில் மூளைத்தெழுஞ் சோதியை
யேல வெழுப்பி யிருவருஞ் சந்திக்க
பாலனு மாவர் பரானந்தி யாணையே. என்றனர்.

உதயச் சுடர்மூன்று முள்வீட்டிலே கொளுத்தி
இதயத் திருநடன மினிக்காண்ப தெக்காலம்.

(பொ - ரை.) உள்ளகத்தி னின்றும், மூவகைப்பட்ட சுடர்களையும் வேகாக்காலென்னும் பிராணவாயுவால் கிளப்பி யதனுடன் அறிவைப்பிணைத்து இருதயகமலமாகிய குகையில் வீற்றிருக்கும் திருநடநாதன் சேவடியை இனிக்காண்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) ஈண்டு சோம சூரியாக்கினியையே 'முச்சுடர்' என்றனர். இம்முச்சுடரினையே யெம்பெருமான் மூன்றுநேத்திரங்களாகவுங் கொண்டுளார். இம்முச்சுடரைக் கொண்டே அண்டத்தைச் சூழ்ந்துள்ள அவ்விருளை அகற்றிவருகின்றார் ஆண்டவர். அதேபோன்று பிண்டத்துள்ள அஞ்ஞான இருளையும் அம்முச்சுடரால் ஒழித்து பெரியதோர் ஞானப் பொருளையும் அநுக்கிரகித்து வருகின்றாரென்க. நிற்க; இங்கேபிண்டமாகிய ஆன்மாக்களிடத்து இடகலை பிங்கலை சுழிமுனை இம்மூன்றும் முச்சுடராக வுள்ளன.

சுழிமுனை நாடியினாலே கும்பகஞ்செய்து பிராண வாயுவினை யெழுப்பி ஆறுதாரமார்க்கமாகச் செலுத்தி ஆங்காங்குள்ள ஆதாரங்களுக்குரிய பீஜாக்ஷர மந்திரவுருச்செபித்துச் சென்று அண்ணவுவாயில்கடந்து அப்பாலுள்ள நடுவணைக்கடந்து சுழிமுனைச் சோதியைத் தரிசித்து மேல்நோக்கிச் சென்று துரியவெளியேகி பரவெளிபாந் த

பான்மையால் மயங்காது நாதவிந்து கொண்டங்கிருந்து அமுததாரணு வருவியிழிய வுண்டுகளிகொண்டு பேரானந்தத் திருநடஜோதியைத் தரிசித்துப் பேருவகைபூத்து வாழ்தலையே சிவராஜ யோகாநுபவ மென்பர் மேலோர். (மேற்கூறிய திருமந்திர சூத்திரங் கவனிப் பீர்களாக.)

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறியே கடந்து
நாதாந்த மூல நடுவிருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) வேதாந்த சாத்திரங்களனைத்தும் விட்டொழித்து அவைகட்கு மேல்விளங்கும் நாதமுடிவில் விளங்குவது இனி யெக் காலமோ!

(கு - ரை.) நாதாந்தத்திருப்பது பரநாதனென்ப; அப்பர வொளியை வேதாந்த நுட்பங்களா லறியத்தக்கதன்று; ஞானமார்க் கத்திடை கூர்த்த மெய்ஞானத்தாற் கண்டு ஒன்றுபடுவதாகும் "நாத முடிமேலிருக்கும் வெண்ணிலாவே, அங்கேநானும்வர வேண்டுகின் றேன் வெண்ணிலாவே" என்றார் அருட்பிரகாச வள்ளலாரும்.

பட்டமற்றுக் காற்றிற் பறந்தாடுஞ் சூத்திரம்போல்
விட்டு வெளியாக விசுவசித்த தெக்காலம்.

(பொ - ரை.) காற்றூடியாயபட்டம் பறப்பற்றொழிந்து, அந் நூல் அற்று காற்றால் அலைந்து விழுதல்போன்று, பாசத்தொடர் பற்று சிதாகாயவெளியினிலவல் எக்காலமோ!

அட்டாங்க யோகமதற் கப்பாலுக் கப்பாலாய்க்
கிட்டாப் பொருளதனைக் கிட்டுவது மெக்காலம்

(பொ - ரை.) அஷ்ட ! அங்கங்களோடுங்கூடிய யோகாநுட் டானத்துக்கும், அதற்கந்தண்டையாய், அதன்மேலு முள்ள

வெளிகடந்துங்கிட்டப்பெருததான பரவஸ்துவை அடையப்பெறுவ தினியெப்போதோ!

(கு -ரை.) அஷ்டாங்கயோகமாவது:—இயம; நியம, ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எண்வகை யாசனத்தோடுங்கூடிய யோகமாம். தற்போதமற்ற சிவ போதத்தால் சிவபராஞ்சுடரை அறியத்தக்கதாம்.

ஒட்டாம லொட்டிநிற்கு முடலுமுயிரும் பிரித்தே
எட்டாப் பழம்பதிக்கிங் கேணிவைப்ப தெக்காலம்.

(பொ - ரை.) பற்றுதலில்லாது பற்றியுள்ள சரீரத்தையும் ஆன்மாவையும் வேறுபடுத்தி பசுவென்ன, பாசமென்ன இவைகளால் அறியக்கூடாததாகிய பழயபதியாம் பரவஸ்துவையடைதற்கு இங்கு திருவருளாம் ஏணி கொண்டேறுதல் எப்போதோ அறியேன்.

பாசத்தை நீக்கிப் பசுவைப் பதியில்விட்டு
நேசத்தி னுள்ளே நினைந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) மூவகைப்பாசமாய ஆணவ, கன்ம, மாயையை யொழித்து, யோர்க்கனவே கட்டுப்பட்டுள்ள ஆன்மாவைப்பரசிவத்தி னிடமாய்ச் சேர்ப்பித்து ஆண்டுபிறக்கும் அன்புவசப்பட்டுத் தேவ ரீரைத் தியானித்தல் எக்காலமோ!

ஆசார நேய வனுட்டான மும்மறந்து
பேசா மெய்ஞ்ஞானநிலை பெற்றிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) புறம்பாய்ச் செய்துவரும் ஆசார நேசாநுட் டானங்களை யெல்லாமறந்து மௌனமுத்திரையுற்று ஞானியாகிய நிலைமையுறல் எக்காலமோ!

பல்லாயிரங் கோடிப் பகிரண்ட மும்படைப்பே
அல்லாது வேறிலையென் றறிவதினி யெக்காலம்.

(பொ - ரை.) அநேக ஆயிர கோடிக்கணக்காயுள்ள பகிரண்டங்கள்யாவும் சிவபெருமானது சிருட்டியேயன்றி வேறொருவருடைய தன்று என்னும் அறிவுதோன்றல் எக்காலமோ!

(கு - ரை.) கணக்கற்ற அண்டபுவனாதிகள்யாவும் ஆண்டவரது சிருட்டிக்குட்பட்டதும், தோன்றித்திரியும் விகாரங்களாதலும் ஆகியநிலைமையுள்ளதென விளக்கினராம். சிருட்டிக்கு வாராப் பொருள் இயங்குமேல், சிருட்டி வஸ்து அறுமென்க.

ஆதிமுதலாகி நின்ற அரியென்ற வட்சரத்தை
ஓதியறிந் துள்ளே யுணர்வதினி யெக்காலம்.

(பொ - ரை.) ஆதியட்சரமாம் அரியென்னு மெழுத்தைப் படித்துத் தெரிந்து நெஞ்சகம்வைத்து தெளிவு பெறுவது இனி எந்தக்காலமோ!

(கு - ரை.) இதனால் அரியெனுமட்சரமானது தொன்மை முதல் நாளதுவரையில் யாவற்றிற்குந் துணையாயது யென்பது பெறப்பட்டது.

சாத்திரத்தைக் கட்டிச் சதுர்மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்ப தெக்காலம்.

(பொ - ரை.) சாத்திராதிகளை யெல்லாம் கட்டிவைத்து நால் வேதங்களையும் தள்ளி ஞான சூத்திரமறிந்து பழயதுன்பநீத்தல் எக்காலமோ! கலைஞானம் பயனில வென்றபடியாயிற்று.

அல்லும் பகலுமென்ற னறிவையறி வாலறிந்து
சொல்லுமுறை மறந்து தூங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) இராப்பகலாக என்னறிவாம் பொருளைத் திருவருளினாலே யுற்றுணர்ந்து, அது இத்தகைய தென்று கூறுமாற்

ருல் அறியாது நினைவுதப்பி அறிதற்றுயில் கொள்வது இனி யெப்போதோ!

(கு - ரை.) ஆகவே, அதைப்பகரா நிலையே ஞான வரம்பா மோனநிலையென்க; உணர்ந்ததைக் கூறுவது உண்மை ஞானமாக மாட்டாதாம்.

இயங்குஞ் சராசரத்தி லெள்ளுமெண் ணெய்யும்போல்
முயங்குமந்த வேத முடிவறிவ தெக்காலம்.

(பொ - ரை.) பொருந்தும் அசைபடுபொருள் அசையாப்பொருள்களிலே எள்ளிநெய்போல அப்பரம்பொருள் வியாபித்துள்ள வேதாந்த ஞானவுண்மையினை யுணர்தலினி யெக்காலமோ.

(கு - ரை) தாவரசங்கமாதி பொருள்களிலெல்லாம் இயங்கியதும், எள்ளினிடத்துள்ள எண்ணெய்போற் கலந்துநின்றதே அத்துவிதமாம். "விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன் மறையநின்றுளன் மாமணிச்சோதியான்" என வள்ளலார் சாத்திரம் வகுத்தலறிக. வேதவேதாந்த முடிவு அத்வைதமோதுவதால் 'வேதமுடிவறிதல் எக்காலம்' என்றனர் போலும்.

ஊனாகி யூனி லுயிராகி யெவ்வுலகுந்
தானாகி நின்ற தனையறிவ தெக்காலம்.

(பொ - ரை.) ஊனாகியும், ஊனில் உயிராயும் எவ்வுலகமுந் தானாகியும் விளங்குகின்ற அத்வைத வுண்மையினை யறிவது எக்காலமோ!

(கு - ரை.) சகலத்திலும் கடவுளிருப்பையும், அச்சகலத்தையும் கடவுளாகவே பார்ப்பதும் சத்தியஞான முறையாகு மென்பாம். சான்றாக.

"வேதமுட ணுகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைக ளெல்லாம்
மிக்காக அத்துவித துவித மார்க்கத்தையே
விரிவா யெடுத் துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
யுண்டு பணு ஞான மாகும்
ஊரிமனு பலவசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவாதிகள் சம்மதம்." (தாயுமானுர்)

என்னைவிட்டு நீங்காம லென்னிடத்தில் நீயிருக்க
உன்னைவிட்டு நீங்கா தொருப்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) எளியனைவிட்டுச் சிறிய நேரமாவது நீங்கியிராத தேவரீர் என்பாலே சதாகுடியாயிருப்ப, அதேபோன்று யானும் எம்மானைவிட்டுப் பிரியாது ஒன்றுபட்டிருப்பது இனி யெக்காலமோ!

(கு - ரை.) சிவனுக்கு ஆன்மாவே சரீரமாதலின் சிவன் சீவனை விட்டுப்பிரிந்திரான். ஆனுல் இவ்வுண்மையைச் சீவன் ஆற்றலற்று அறியாதிருக்கிருன். இவ்வுணர்ச்சி சீவனுக்கு என்று விளங்கியதோ அன்றே ஞானவானுவன். அவன்செயலைத் தன்செயலாகக் கொண்டு துன்புறும் நிலை அவித்யா நிலையாம். அன்றித் தன்செயலைச் சிவன் செயலெனக் கோடல் விவேகநிலையாம்.

இன்னதென்று சொல்லவொண்ணு வெல்லையற்ற வான் பொருளைச், சொன்னதென்று நானறிந்து சொல்வதினிஎக் காலம்.

(பொ - ரை.) இத்தகையதென்று குறிக்கவொண்ணு அளவு கடந்த பரம்பொருளை அடிமைக்குச் சற்குருநாதன் உபதேசித்தன னென்று அடியேன் தெரிந்துரைப்பதினி என்ருே!

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணுக்கி
எனதறிவை யம்பாக்கி யெய்வதினி யெக்காலம்.

(பொ - ரை.) தமியேன் நெஞ்சை வில்லாக்கொண்டு ஆகிய பஞ்சபொறிகளையும் கயிருக்கியும் என்னறிவை யம்பாக்கியும் எம்மான்பால் விடுதல் எக்காலமோ!

என்னை யிறக்கவெய்தே யென்பதியை யீடழித்த
உன்னை வெளியில்வைத்தே யொளித்துநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) யான் மரிக்குமாறு என்மீது அம்புவிட்டு என் இருப்பையொழித்த தேவரீரைப் பரவெளிக்கண்ணிருத்தி அதனிடமாக நான் மறைந்துறுவது எக்காலமோ!

(கு - ரை.) இங்ஙனம் எய்த அம்பு, பாசமாங் காட்டினில் நுழைந்நு ஆண்டுள்ள காமக்குரோதாதிகளாகிய துஷ்டமிருக வேட்டையைக் கருதி 'என்னையிறக்கவெய்தே' என்றனர் போலும். தானிறத்தல் இங்கே தன்னிடத்துள்ள ஜீவசேஷ்டிதம் ஒடுங்குவதாகும். ஈண்டு பதியென்றது. காமக்குரோதாதிகட் குரிமையாகிய மூளைப்பை யென்க. சிதாகாசத்தோடு மறைதல் சாயுச்சிய பதவியாமென்க.

கடத்துகின்ற தோணிதனைக் கழைகள்குத்தி விட்டாற்போல்
நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெக்காலம்.

(பொ - ரை.) மீகாமன் ஓட்டுந்தோணியில் மூங்கில் கழிகுத்தித் தள்ளியது போன்று, இங்கே என்னுடலாந் தோணியை நடத்தும் அழகை நான் அறிவது எக்காலமோ!

(கு - ரை.) எனக்குத் தெரிதலின்றித் திருவருள் என்னை நடத்துவிக்கும் வன்மையை யெவ்வா றென்பேன்! என்பதாம்.

நின்றநிலை பேராமல் நினைவிலொன்றுஞ் சாராமல்
சென்றநிலை முத்தியென்று சேர்ந்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) நிஷ்டைநிலை மாறாதும், அந்நிலை நினைவில் இதர எண்ணங்கள் குறுக்காய்ப் பாயாமலும் இப்படியாகப்பெற்றுள்ள தன்மையே மோக்ஷமெனத் தேவரீரை யொட்டி யுணர்தல் இனி யெக்காலம்.

(கு - ரை.) நின்றநிலை பேராமல், நினைவில் வேறொன்றும் வாராமலுமுள்ள நிஷ்டைபுரிதலே முத்திநிலை யென்பர் மேலோர்.

பொன்னும் வெள்ளியும்பூண்டு பொற்பதத்தை யுள்ளமைத்
மின்னு மொளிவெளியே விட்டடைப்ப தெக்காலம். [து

(பொ - ரை.) பொன் வெள்ளி முதலிய ஆபரணம் தரித்துள்ள திருவடிகளை மனசில் குறிப்பித்து, பிரகாசிக்கும் சோதிமயவெளி யூடே யெனைவிட்டு, மறுபடியும் பூதாகாயத்தில் வாராவகையா யடைத்தல் எந்தக்காலமோ!

(கு - ரை.) ஈண்டு பொன், வெள்ளியென்பதை தீயும் நீறு மெனக் கூறுவாருமுண்டு. இன்னும், வேதம் ஆகமமெனவும் சிலர் கூறுவர். அன்றி வெள்ளிமலை பொன்மலை யெனவும் கூறுவர்.

கூட்டிலடைப் பட்டபுழு குளவியுருக் கொண்டதுபோல்
வீட்டிலடைப் பட்டருளை வேண்டுவது மெக்காலம்.

(பொ - ரை.) குளவிக்கூட்டிலே வாழும் புழுவானது குளவி வடிவுபெற்றது போன்று, யானும் மோட்சவீட்டில் அடைபட்டுத் திருவருள் பெறுவது இனியெக்காலமோ!

பிரமரகீடநியாயம்.

(கு - ரை.) அஃதாவது:—ஓர்பரிபாஷை; "ஓர்வகைக் குள வியானது, தான் ஓர் புழுவைக் கொணர்ந்து தன் கூட்டில் வைத்து

அதைக் கொடுக்கால் கொட்டிக் கொட்டித் தன்னைப்போல் குளவி யாக்குவது" என்பதேயாம். இதேபோல, 'கடவுளும் ஆன்மாவைத் தன்வசப்படுத்தித் திருவருட் சத்தியால் தன்மயமாக்கி வருகிறார்' என்று சிலவுபநிட தாதிகளிலும் வேறு ஞானசாத்திரங்களிலும் அமைந்துள்ளன.

ஆனால், இவ்விஷயத்தினைத் தற்கால வித்வ விப்ரர்கள் சிலர் கண்டிக்கின்றனர். எங்ஙனமெனில்,—"குளவி தன் உணவுக்காக வேண்டி சிலபுழுக்களை எடுத்துப்போய்த் தன் கூட்டினில் வைத்துக் கொடுக்கால் கொட்டிக் கொட்டிக் கொன்று பின்னர் அதனைத்தன் குஞ்சுக் குளவிகளோடும் அரித்தரித்துத் தின்று விடுகின்றன. இதைப்பாராதசிலர், யேர்க்கனவேயுள்ள புழுவைக்காணோம், ஆகவே முன்னேயே யிருந்துவந்த குஞ்சுக் குளவிகளைப் பார்த்துவிட்டு குளவியே புழுவைக் குஞ்சுகளாக்கிவிட்டது என்று சொல்லுகிறார்கள்" என்பதாம்.

கடலி லொளித்திருந்த கனலெழுந்து வந்தாற்போல்
உடலி லொளித்தசிவ மொளிசெய்வ தெக்காலம்.

(பொ - ரை.) சமுத்திரத்திலே யுள்ள வடவா முகாக்கினி தோன்றி வந்ததுபோலவே, என்சரீரத்துள்ளே நானறியாதுள்ள பரசிவம் கண்காணத்தெரிதல் எக்காலமோ!

அருணப்பிரகாச மண்டமெங்கும் போர்த்தது போல்
கருணைத் திருவடியிற் கலந்துநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) இவ்வுலகடங்கலையும் சூரியனது பிரகாசம் மூடி வருவது போன்றே அருட்சத்தி சகிதமாய எம்மான் திருவடிகளிலே யான் பரந்துபற்றியிருப்ப தெப்போதோ.

பொன்னிற் பலவிதமாய்ப் பூஷணமுண் டானதுபோல்
உன்னிற் பிறந்துன்னி லொடுங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) பொன்னைக் கொண்டே பல்வேறு வகையான ஆபரணதிகள் செய்து முடிவதுபோல, தேவரீர்பால் தோன்றிய யான் தேவரீரிடமே யொடுங்கல் எக்காலமென்க.

நாயிற் கடைப்பிறப்பாம் நான்பிறந்த துன்பமற
வேயிற் கனலொளிபோல் விளங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) யான் நாயினும் கடைப்பிறப்பெய்தி வந்த துன்பம் நீங்குமாறு, மூங்கிலிலே இயல்பாய் அக்கினிபிறப்பது போன்று இங்கென்பால் பரசிவ வொளிதோன்றி விளங்கல் எந்தக்காலமோ!

சூரிய காந்திவெளி சூழ்ந்துபஞ்சைச் சுட்டதுபோல்
ஆரியன் தோற்றத் தருள்பெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) சூரியகாந்தி படிந்த கண்ணாடி வாயிலாகச் சூழப்பட்டுள்ள பஞ்சினை யெரித்துவிடுவதுபோன்றே, இங்கு என்பால் சற்குரு கடாக்ஷத்தினாலே என்பாச வினையாம் பஞ்சை யெரியச் செய்து திருவருள் பாலித்தல் எக்காலமோ.

இரும்பிற் கனன்மூட்டி யிவ்விரும்பே யவ்வுருவாய்க்
கரும்பிற் சுவைரசத்தைக் கண்டறிவ தெக்காலம்.

(பொ - ரை.) ஆன்மாவாகிய இரும்பின்கண் திருவருள் என்னும் அக்கினியைக் கொளுத்த, அவ்விரும்பே பின் அக்கினியாவது போன்று, அவ்வான்மா அருண்மயமாய் அத்திருவருளாங் கரும்பின் கண்ணுள்ள கறுஞ்சுவைச் சாற்றினைக் கண்டல் எந்தக்காலமோ.

கருக்கொண்ட முட்டைதனைக் கடலாமை தானினைக்க
உருக்கொண்ட வாறதுபோ லுனையடைவ தெக்காலம்.

(பொ - ரை.) சமுத்திரத்துள்ள ஆமை தான்வைத்த முட்டையைத் தன்னினைப்பு மாத்திரத்தான் அம்முட்டை குஞ்சுபொறித்து ஆமைவெளிவருவது போன்றே, சற்குருநினைவால் யான் சிவத்தைத் தானாகவே செற்றடைதல் எக்காலமோ!

வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில் வருவார்போல்
கூடுவிட்டுப் பாயுங் குறிப்பறிவ தெக்காலம்.

(பொ - ரை.) ஒருவன் தன்வீட்டை விட்டொழித்து வெளியிலே வருதல்போன்றே என்னுடம்பினின்று பிரியுங் குறிப்பறிதல் இனி யெந்தக் காலமோ!

கடைந்த வெண்ணெய்மோரிற் கலவாத வாறதுபோல்
உடைந்து தமியே னுனைக்காண்ப தெக்காலம்.

(பொ - ரை.) கடைந்தெடுத்த வெண்ணெய் எங்ஙனம் மோர் புகாவோ அதுபோல, பாசப்பிரிவினின்றும் வெளிப்பட்ட யான் மறுபடியும் அதன்பால் சாராது எம்மானைக்காண்டல் எக்காலம்.

இருளைவெளி விழுங்கி யேகவுருக் கொண்டாற்போல்
அருளை விழுங்குமிரு ளகன்றுநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) இருளை அகண்டவெளியானது உட்கொண்ட தன்மையைப் போன்று, திருவருளினை விழுங்கிய இருள்வொழிந்து தனிப்பது இனி யெக்காலம்.

(கு - ரை.) ஈண்டு ஒளியின்மையே இருளாவது தார்க்கீக நியாயமாக்கும்; ஒளியானது இருட்டைக் கவளீகரித்தல் போன்று, இருளம்ஸமான ஆணவம் திருவருளையுட்கொண்டு மறைத்துவிடுகிற தென்பதுபோன்றும், விழுங்கல் இங்கே குறிப்புணர்வு. முத்தியின் போது ஆணவம் வலிகுறைந்து கிடத்தலின் 'அகன்றென்று' கூறினர்.

மின்னெழுந்து மின்னொடுங்கி விண்ணிலுறைந் தாற்போல்
என்னுணின்ற தென்னுள்ளே யானறிவ தெக்காலம்.

(பொ - ரை.) வான் மின்னல் விண்ணிலே தோன்றி அவ் வாகாயத்திலேயே மறைந்தொழிவதுபோன்று, என்பாலே தோன்றி யென்பாலே ஒடுங்கும் வஸ்துவை யான் அறிதல் எக்காலமோ!

கண்ட புனற்குடத்திற் கதிரொளிகள் பாய்ந்தாற்போல்
கொண்ட சொரூபமதைக் கூர்ந்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) குடத்தினில் கண்டவடிவாயுள்ள தண்ணீரிலே சூரியன் வடிவம் பாய்ந்து துலங்கல்போன்று நீ யென் சரீரத்துள் பிரவேசித்து அங்கு ஸ்தானமாக்கொண்டுள்ள பிரமாம்ஸத்தை யறிதல் இனி யெக்காலமோ!

பூணுகின்ற பொன்னணிந்தாற் பொன்சுமக்கு மோவுடலைக்
காணுகின்ற வென்கருத்திற் கண்டறிவ தெக்காலம்.

(பொ - ரை.) அணியப்படும் ஆபரணாதிகளைப் பொன்னே சுமத்தலில்லை. உடலே சுமக்குமல்லவா, அதுபோலவே என் எண்ணத்தில் விளங்குகின்ற இவ்வுடலை யான் பாராது அதன் உள்ளே யுள்ள பொருளையருளாலறிதல் இனி யெக்காலமோ!

செம்பிற் களிம்புபோல் சிவத்தை விழுங்குமிக
வெம்பிநின்ற மும்மலத்தை வேறுசெய்வ தெக்காலம்.

(பொ - ரை.) செம்பிலே களிம்புறுவதுபோன்று என்பாலுள்ள பரசிவத்தை, மறைத்து, மகா ஊறுசெய்யும் மூன்று மலங்களும் என்னிடமிருந்து நீங்கி யான் சுத்தனாய் வாழ்தலினி யெக்காலம்.

ஆவியுங் காயமும்போ லாத்துமத்து நின்றதனைப்
பாவி யறிந்துமனம் பற்றிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) ஆன்மாவும் சரீரமும் ஒன்றைவிட்டொன்று பிரிதலில்லாமே ஒன்றாயே யிருப்பதுபோன்று, ஆன்மாவைப் பிரியாதுள்ள பரமான்மசொரூபத்தை இப்பாவியாய நான் அறிந்து அதன்பால் மனம்பொருந்தியிருத்தல் எந்தக்காலமோ!

ஊமைக் கனுக்கண் டுரைக்கறியா வின்பமதை
நாமறிந்து கொள்வதற்கு நாள்வருவ தெக்காலம்.

(பொ - ரை.) ஊமையனொருவன் சொப்பனங்கண்டு அதனைப் பிறர்க்குரைக்க வியலாதிருத்தல்போன்று, நாம்பெறவிருக்கும் இன்பமாயது இத்தன்மைத்தென்ன சொல்லமுடியா மௌன ஆனந்தத்தை நாம் உணர்தற்கு நல்லகாலம் எந்தக்காலமோ!

சாகாச் சிவனடியைத் தப்பாதா ரெப்போதும்
போகாவுட லகன்று போவரென்ப தெக்காலம்.

(பொ - ரை.) நித்தியமாய பரசிவத்திருவடியைத் தவறாது எப்போதும் துதிசெய்வோர்கள், நீங்காநின்ற அநித்தியதேகம் ஒழிந்து மோக்ஷவீடடைவார் என்பதை அநுபவவாயிலாகக் காண்பதினி யெந்தக்காலமோ!

(கு - ரை.) இருவினைகளால் எப்போதும் சரீரபிறவி யேற்பட்டுக்கொண்டே யிருத்தலினாலே 'போகாவுடல்' எனலாயினர். ஈண்டு வினையறுவது பரசிவத்தியான காரணமாகையினாலே அத்தியானபரர் சரீரபிறவியற்று மோக்ஷமெய்துவர் என்பதை நன்கு தேற்றியவாறறிக.

நிட்டை தனைவிட்டு நினைவறிவு தப்பவிட்டு
வெட்ட வெளியில் விரவிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) நிஷ்டையை விட்டொழித்து நினைப்பையு மொழித்து வெறுமையான ஆகாயத்திலே பேதமின்றிக் கலந்தொளிர்வது இனி யெந்தக்காலமோ!

(கு - ரை.) மனதைத்தியானத்தில் நிறுத்தலே நிட்டையாம். அந்நிட்டை நிலைபெறுமாயின், வேறெவையும் நினைவுகொள்ளல் வாராது; அந்நிலையே மிக நன்னிலையாம்; அன்றிச்சிதாகாச நிலை யெனவுங்கூறுவர். இப்பாசுரத்தால் நிட்டைக்கு மேலாயதோர் நிலையுள்ளதென அறியவருகின்றது: அதாவது 'நினைப்பு மறப்பு மற்றுநிற்றல்' சான்றாக, மணிவாசகர் தந்திருவாசகத்திலே:

வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மயனுங்
கூன்கெட் டுயிர்கெட் 'டுணர்வுகெட்டென் னுள்ளமும்போய்'
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. என்றார்.

வெட்ட வெளிதன்னில் விளைந்த வெறும்பாழைத்
திட்டமுடன் கண்டு தெளிவதினி யெக்காலம்.

(பொ - ரை.) வெறும் வெளியிலே யேற்பட்ட சர்வ சூனியத்தை நெறிமுறைதெரிந்து அதனுண்மை தெளிந்து வாழ்தலினி யெக்காலமோ!

(கு - ரை.) பாழ் என்றது இங்கே 'ஞானாகாயத்தையாம்' 'வெம்பாசத்தை' யென்றும் கூறலுண்டு.

எங்கும் பரவடிவா யென்வடிவு நின்வடிவாய்க்
கங்குல்பக லின்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) அடிமையின் அம்சம் தேவரீரது சொரூபமாய் எவ்விடத்தினும் இரண்டற்ற ஒரே வடிவமாய் இராப்பகலற்று தேவரீர் தரிசனமாயே யிருத்தல் எந்தக்காலமோ!

(கு - ரை.) யான் சீவவடிவன்; நீயோ, சிவவடிவம். இவ் விரண்டும் பேதமறவிளங்குவது யாண்டும் வியாபித்துள்ள பரசிவ வடிவமாகும்; கங்குல்பகல் - இராப்பகலற்ற பரவெளியென்ப; அதுவே சிருட்டிலயமில்லாத விடமாம்.

உண்டதுவு மாத ருடன்கூடிச்சேர்ந் தின்பங்
கண்டதுவு நீயெனவே கண்டுகொள்வ தெக்காலம்.

(பொ - ரை.) உலகத்தில் கிடைத்த பற்பலசுகங்களை யனுபவித்ததும், இன்னும் மாதரின்பம் பெற்றதுவும் ஆகிய இவைகளை யனுபவித்தது தேவரீரே யெனக்கொள்வது இனி யெந்தக்காலம்!

ஈமென்று கேட்டதுவு மென்னுள்ளே நின்றதுவும்
ஓமென்று சொன்னதுவு முற்றறிவ தெக்காலம்.

(பொ - ரை.) 'ஈம்' என்னும் சப்தம் என்காதில் பட்டதும், என்மனத்தின்கணின்றதுவும் 'ஓம்' என்று எனக்கு அறிவித்தது யாகிய இவ்விரண்டுசொல்லையும் நன்காராய்ந்து உண்மையறிவ தெந்தக்காலமோ!

(கு - ரை.) 'ஈம்' என்ற ஒலியும், 'ஓம்' என்ற உபதேசமும் என்மனத்திருந்த வொரு பொருளேயாம். என்றபடி.

சத்தம் பிறந்தவிடந் தன்மயமாய் நின்றவிடஞ்
சித்தம் பிறந்தவிடந் தேர்ந்தறிவ தெக்காலம்.

(பொ - ரை.) சத்தம் தோன்றியவிடத்தையும், தன்மயமாயுள்ளவிடத்தையும், மனம்பிறந்த விடத்தையும் ஆய்ந்தறிவது எந்தக்காலமோ!

(கு - ரை.) சத்தம் - நாதம். தன்மயம் - சிவமயமாம். சித்தம் - மனம். மனம்தோன்றிய விடத்தையும் நாதந்தோன்றிய

விடத்தையும் ஆராய்ந்துணரில் தன்மயமானது புலனுமென்பதை நன்கெடுத்துக் காட்டியவாறுகும் என்க.

போக்கும் வரவும் புறம்புள்ளு மாகிநின்றும்
தாக்கு மொருபொருளைச் சந்திப்ப தெக்காலம்.

(பொ - ரை) போக்கலும், உண்டாக்கலும், உள்ளும் புறமும் பொருந்திநிற்றலாலும், தன் கடமைசெலுத்தும் ஓர் தனிப்பரம் பொருளைப்பார்ப்பதினி யெந்தக் காலமோ!

(கு - ரை.) போக்குவரவாவது தலைவரது சகளத்தைக்குறித் துள்ளதாம். அகம்புறமென்றது தலைவர் நிஷ்களசொரூபத்தைக் காட்டுவதாம். இவ்விருவடிகளாலும் இறைவன் ஐந்தொழிலியற்ற லால் 'தாக்கும் ஒருபொருளை' என்றனர்.

நானெனவு நீயெனவு நாமிரண்டு மற்றொன்றும்
நீயெனவே சிந்தைதனி னேர்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) நான், நீயென்னும் பேதபாவனை யொழிந்து அவையொன்றுபடுமாறு எதுவாய தேவரீரே யாவுமென்னும் தோற்றந்தோன்றுவது எந்தக்காலமோ!

(கு - ரை.) நானென்றும் நீயென்றும் பேதம்பிறப்பிறப் பிற்கு காரணமாம். ஆதலால் அப்பேதமொழிந்து அபேதமாய்ச் சர்வமும் ஒன்றேயென்றநிலையே பிறவியை வேறறுக்கும் என்பது மனத்தில் பதிவது எக்காலமோ.

அறிவையறி வாலறிந்தே யறிவு மறிவுதனில்
பிரிவுபட நில்லாமல் பிடிப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) ஆத்ம ஞானத்தைப் பரஞானத்தாலுணர்ந்து, அப்பதிஞானத்திலும் பிரிவாயிராமல் யேகசொரூபமாய் நிற்றல் இனி எக்காலமோ!

நீடும் புவனமெல் லாம்நிறைந்து சித்திரமாய்
ஆடுந் திருக்கூத்தை யறிவ தினி யெக்காலம்.

(பொ - ரை.) விரிவாய புவனங்களனைத்தினும் பரிபூரணமாய் நிறைந்து வெகு அழகாய் நிர்த்தனம் செய்யும் தத்துவநிலையினை இனி யெக்காலம் உணர்வதோ!

(கு - ரை.) அண்டபிண்ட சராசரமெங்கணும் அடங்கி யொரு நிறைவாய் விளங்கியிருக்கும் ஆண்டவன்றன் முண்டவமூலமாக ஐந்தொழிலியற்றி உலககாரியாதிகளை முடித்து இயங்குதலினாலே "நீடும் புவனமெல்லாம் நிறைந்துநின்ற சித்திரமா யாடுந்திருக் கூத்தை" யென்றார். இன்னமும், அகண்டமாய் நிறைந்து புரியா நின்ற நிர்த்தனத்தையே ஈண்டுச் 'சித்திரமா' யென்றார்போலும். அம்பலத்தாடுவானுடல் காண்டலால் பிறத்திறத்தலில்லையாகும்.

தித்தியென்ற கூத்துந் திருச்சிலம்பி னோசைகளும்
பத்தியுடனே கேட்டுப் பணிவ தினி யெக்காலம்.

(பொ - ரை.) 'தித்தி' யென்னுந்தாளத்திற் கிசைய நடிக்குந் திருநிருத்தத்தினையும், அந்நிருத்தச் சிலம்போசையும் அன்புற்று செவியேற்று இனி எம்மானை வணங்குவது எக்காலமோ!

நயனத் திடைவெளிபோய் நண்ணும் பரவெளியில்
சயனித் திருந்து தலைப்படுவ தெக்காலம்.

(பொ - ரை.) நேத்திரங்கட் கிடைநின்று வெளியே சென்று சேராநின்ற அகண்டவெளியில் உறக்கமாய் நின்று எம்மானோடுங் கலந்திருப்பது இனி யெக்காலமோ.

(கு - ரை.) இருபுருவத்திடையே ஆண்டவன் நிர்த்தனஞ் செய்வது பரமயோகியரறிவர்; அக்கூத்தினைச் சிதாகாய வெளியிற் பார்த்து சிறுதுயில் செய்வதால் பரமானந்தம் பிறக்கு மென்பதாம்.

அருவி மலைநடுவே யாயிரக்கால் மண்டபத்தில்
திருவிளை யாடற்கண்டு தெரிசிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) அருவிசொரியும் மலையினடுவிலேயுள்ள ஆயிரத் தூண் மண்டபத்தில் தேவரீர் செய்யானின்ற திருகூத்தைப்பார்த்து சுகம்பெற லினி யெக்காலமோ!

(கு - ரை.) ஈண்டு அருவியென்றது அமுததாரையையென்க. மலையாவது நந்தியாம்; ஆயிரக்கால் மண்டப மென்றது இதய கமலமாம்.

மீனிரம்ப வுண்டுகக்கி விக்கிநின்ற கொக்கதுபோல்
தேனிரம்ப வுண்டுதெவிட்டிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) மச்ச மாமிசாதிகளை எதேஷ்டமாகப் புசித்துக் கக்கியும் விக்கியும் நின்ற கொக்கைப் போன்று பேரின்பத் தேனை மட்டற்றுப் பருகித் தெவிட்டி யிருப்பது எக்காலமோ?

பொல்லாத காயமதைப் போட்டு விடுக்குமுன்னே
கல்லாவின் பால்கறப்பக் கற்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) தீயவுடலானது கீழ்விழுமுன்னரே கல்லொத்த பசுப்போன்ற ஆன்மாவினிடம் மெய்ஞ்ஞானப் பாலை கறந்துகொள் வது இனி யெக்காலமோ!

(கு - ரை.) இச்சரீரம் சாதற்கு முன்னதாகவே மெய்ஞ்ஞான மடைதல் வேண்டுமென்றபடி. அன்றி, ஆன்மா ஞானம் பெறும் அருமையைக்கண்டு 'கல்லா' யென்றூர்.

வெட்ட வெளிக்குள்ளே விளங்குஞ் சதாசிவத்தை
கிட்டவரத் தேடக் கிருபைசெய்வ தெக்காலம்.

(பொ - ரை.) வெட்டவெளியாம் பரவெளி வீட்டுக்குள்ளே, வீற்றிருக்கும் சதாசிவ மூர்த்தியார் அடிமையினிடத்து விரும்பிவரத் தேடுமாறு திருவருள் பாலித்தல் எக்காலமோ!

(கு - ரை.) சதாசிவ மூர்த்தியை ஆராய்ந்தறிய என்பது. சில பிரதிகளில் 'தேடி' யென்று காண்டல் பொருந்தாமை கொண்டு, தேட வெனத் திருத்திய வாறும்.

பேரறிவிலே மனதை பேராமலே யிருத்தி
ஓரறிவி லென்னாளு மூன்றி நிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) பேரறிவாஞ் சிவத்தின்பால் மனதை இடைய றாது நாட்டிப் பேரறிவு சிற்றறிவெனும் பேதமில்லா நிலையாம் ஓர் அறிவின்பாலே பதித்துவிடுவது இனி எக்காலமோ!

அத்துவிதம் போலுமென்ற ஞத்துமத்தி னுள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம்.

(பொ - ரை.) அத்துவிதமாக வென் னுன்மாவைப் பற்றி யொன்றாய் நின்று எனக்கினிய வீட்டின் பேற்றை யளித்தருளு முறைமையை யுணர்தல் இனி யெக்காலமோ!

(கு - ரை.) சிவன், சீவன் இவ்விரண்டும் பிரிந்திராது ஒன்று பட்டே யிருக்கும் தன்மையுடைத்தாதல் அத்துவிதமாம். அத்வை தம் எனபதிலுள்ள (அ - துவிதம்) என இரண்டாய்ப் பிரிக்க, அ, அகரத்திற்கு இன்மைப்பொருள் கூறற் பாலது. வேறுபலர் அன்மை, மறுமை முதலியனவுங் கூறுவர்கள். இவர்தத்துவசோதனை புரிவார். ஆனல் அநுபூதியாளர்க்கு சர்வமும் ஒன்றென்றே கொள் வர் என்க; விரிக்கிற் பெருகும். இவைகளின் விரிவை மகாபாஷி யத்தில் பார்த்துணர்க. சிவன் சீவன் இரண்டும் ஒன்றாயுள்ள யதார்த்த நிலைகாண்டலே பந்தவிடுகை யாதல்பற்றி ஈண்டு 'முத்தி தர நின்றமுறை' யெனலாயினர்.

நானின்ற பாசமதி ளுனிருந்து மாளாமல்
நீநின்ற கோலமதில் நிரம்பிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) என்னிலைப் பேறதாய பாசத்தின்கண் யான் கிடந்து தன்புறாது தேவரீரது திருவருள் கோலத்திலே ஒன்று பட்டு நிலைத்து நிற்றல் எக்காலமோ!

(கு - ரை.) யான் மலசம்பந்தமாய் வாழாது திருவருள் சார்ந் துய்தல் எக்கால மென்பதாம்; 'ஆணவத்தோ டத்துவிதமானபடி மெய்ஞ்ஞான, தாணுவினே டத்துவித மாகுநா ளெந்நாளோ' என்ற னர் தாயுமானரும்.

எள்ளுங் கரும்பு மெழின்மலருங் காயமும்போல்
உள்ளும் புறம்புநின்ற துற்றறிவ தெக்காலம்.

(பொ - ரை.) எள்ளினுள்ளே எண்ணெய் போலவும், கரும் பினுட் சுவையை யொத்தும், திவ்ய மலரின் நறுமணம் போன்றும், சரீரத்தின் பிராணன் போன்றும் சகலசர அசரங்களி னெல்லாவற் றினும் அகம்புறமாக எம்மான் வியாபித்துள்ளமையை யுணர்வது இனி எந்தக்காலமோ! இதனால் அத்துவித நிர்ணயம் கூறியதறிக.

அன்னம் புனலைவகுத் தமிர்தத்தை யுண்டதுபோல்
என்னை வகுத்துன்னை யினிக்காண்ப தெக்காலம்.

(பொ - ரை.) அன்னப்பறவை, கலப்புற்ற பால்நீரில் பாலை மட்டும் பிரித்துப்பருகுந் தன்மைபோல, என்னிடத்துள்ள யான், எனது என்கின்ற அகங்கார மமகாரத்தினை யொழித்துப் பரம்பொ ருளைப் பார்ப்பது இனி எந்தக்காலத்திலோ வறியேன்!

அந்தரத்தி னிற்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல்
சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) ஆகாயதாமரை மலரினிடத்து மனப்பற்று வைத்துத் தெரிசித்தல் இனி யெக்காலமோ!

(கு - ரை.) ஞானகாயத்தில் தங்கி மலர்ந்திருப்பது பரசிவமாகும். ஈண்டு அதனையே சிவமலர் என வருணித்தார் போலும்.

பிறப்பு மிறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பு நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) பிறத்தலு மிறத்தலு மொழிந்து, பின்னர் பேச்சு மூச்சற்று, மறப்பும் நினைப்பும்போய் தற்போதமு மற்றுக் கிடத்தல் இனி யெக்காலமோ!

மன்னும் பரவெளியை மனவெளியி லடைத்தறிவே
யென்னுமொரு நினைவை யெழுப்பிநிற்ப தெக்காலம்.

(பொ - ரை.) நித்தியமான பரவெளியை மனத்தாலறிந்து அறிவென்னும் ஓர் நினைப்புடனே நிற்றல் எக்காலமோ.

(கு - ரை.) இங்கே பரவெளியாவது, ஞானகாயமாம். அதனை மனத்தில் கொள்ளவாவது யோகமுறை வருத்தலாம். அந்தயோகத்தினைப் பெறுதல் ஞானசாதனமாகும். அந்த ஞானநிலையிலே தான் சகலத்தையுமே பேறறிவாயறிக என்றபடி.

ஆசைகொண்ட மாத ரடைகனவு நீக்கியுன்மேல்
ஓசைகொண்டு நானு மொடுங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) ஆசை வைத்துள்ள மங்கையர் தொடர்பாய சொப்பனத்தை யொழித்துத் தேவரீர் மீது அன்பு பூண்டு நானெனுந் தற்போத மொழிவது எந்தக்காலம்!

(கு — ரை.) மாதர் ஆசையைச் சொப்பனமாயுணர்ந்து கண்டு கழித்துவிட வேண்டு மென்பதாம்.

தன்னுயிரைக் கொண்டு தான்றிரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங் கொடுங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) ஒருவன் தன்னுயிரைக் கொண்டு தன்னிட்டப் பிரகாரம் உலகினில் திரிவதுபோன்றே பரமபிதாவாகிய தேவரீரைக் கொண்டு யான் ஜீவன் முத்தனுய் இங்கே திரிந்துவாழ்தல் எக் காலமோ!

(கு - ரை.) ஆண்டவரால் சர்வமும் நடந்தேறுகின்றனவெனும் ஞானமில்லாது, யாவும் நம்மாலேயே நடை பெறுகின்றன வென்று அஞ்ஞானத்தால் கெர்விதங்கொண்டு மயங்கிக் கிடத்தலே பெத்த நிலையாகும். மற்றும் சிவபெருமானுல் ஆட்ட, நான் முதலிய அனை வர்களும் ஆடுகின்றோம் எனும் விவேகம் விளங்கி இவ்வுலகத்திலே ஜீவித்திருத்தல் முத்தநிலையாகும். இன்னும், இவ்வுலகியலே விளங் கப்பெருது சிவத்தன்மையுற்று எங்கும் சிவமாயே தோன்றக் காண் டல் முத்தநிலையுமாம். இதனுல் ஜீவன்முத்த நிலையினை நன்கு விளக்கினராக.

சேற்றில் கிளைநாட்டுந் திடமா முடலையினிக்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) சேற்றிலே ஊன்றப்பட்ட கிளையை யொத்த, திடமாய இவ்வுடலை இனிக் காற்றினுல் துவளும் கயிற்றைப் போல் பார்த்தல் இனியெக்காலமோ!

(கு - ரை) சேற்றில் நட்ட கம்பமொத்தது இச்சரீரம் என் பதாம். ஆகவே இதன் அநித்தியத்துவத்தைக் கண்டு இப்பூமியினிட மாக வாழ்தல் வேண்டு மென்பார். "காற்றிலுழல் சூத்திரமா" யென்ருர்.

என்வசமுங் கெட்டிங் கிருந்தவச மும்மழிந்து
தன்வசமுங் கெட்டருளைச் சார்ந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) சீவபோதங் கெட்டு, அதற் காதாரமாய சரீர வுணர்ச்சியும் போய், ஆத்மதத்துவமுங் கெட்டு திருவருள் பெற்றுய் வது இனியெக்காலமோ!

தன்னை மறந்து தலத்து நிலைமறந்து
கன்ம மறந்து கதிபெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) தன் ஸ்மரணைமாறி, தான்வசிக்கும் இடமுதலிய வற்றையு மறந்துபோய், மற்றுந் தான் செய்துவருங் கர்மாக்களை யு மறந்துவிட்டு சிவநிலை யுறுவது இனி யெக்காலமோ!

என்னை யென்னிலேமறைந்தே யிருந்தபதியும் மறந்து
தன்னையுந் தானேமறந்து தனித்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) சீவனைப்பற்றியுள்ள அவிவேகத்தினுலே சிவ னும்பதியை மறந்து, பின்னர் ஆத்மாவை மறந்து தானுகமட்டு மிருப் பது எந்தக்காலமோ!

தன்னையுந் தானேமறந்து தலைவாசற் றுள்போட்டே
உன்னை நினைந்துள்ளே யுறங்குவது மெக்காலம்.

(பொ - ரை.) தன்னைத்தானுக மறந்துபோய், தன்னைத்தூண்டி விடும் மனதினுக்கு தாளிட்டடைத்து வைத்து, தேவரீரை நெஞ்ச கத்தில் நினைந்து உறங்குவது இனி யெக்காலமோ!

இணைப்பிரிந்த போதலறி யின்பமுறு மன்றிலைப்போல் [ம்
துணைபிரிந்த போதருளால் தொடர்ந்துகொள்வ தெக்கால

(பொ - ரை.) துணையாயிருந்துவந்த அன்றில் பக்ஷிகளிரண் டில் ஒன்று பிரிந்துபோய்விடுமேல், மனம்பொறுது அதைத்தேடிச் சென்று கண்டு அன்பு பொருந்து மாறுய அப்பக்ஷிகளைப் போன்று இன்றியமையாது கிடைக்கப்பெற்ற சற்குருமூர்த்தியார் என்னை

விட்டகன்ற சமயம் திருவருளையூட்டும் சாத்திரா ராய்ச்சிசெய்வது இனி யெக்காலமோ!

ஆட்டமொன்று மில்லாம லசைவுசற்றுங் காணுமல்
தேட்டமற்ற வான்பொருளைத் தேடுவது மெக்காலம்.

(பொ - ரை.) ஆட்டமாவது, அன்றி அசைவாவதுகொஞ்சமு மின்றிச் சலனமற்ற பரம்பொருளைத் தேடிப்பிடிப்பதினி யெந்தக் காலமோ!

முன்னைவினை யாலறிவு முற்றுமல் பின்மறைந்தால்
அன்னைதனைத் தேடி யமுதுண்ப தெக்காலம்.

(பொ - ரை.) பழயவினையால் நல்லறிவு அதிகப்படாமல் அஃதாவது பரசிவ மாகாதபடி, பின்னர் திரோதான சக்தியால் மறைவெய்திடின், திருவருளாய அன்னையைத் தேடி ஞானமிர்தமுண்டல் எப்போதோ?

கள்ளுண் டவர்போற் களிதரு மானந்தமதாற்
றள்ளுண்டு நின்றாடித் தடைபடுவ தெக்காலம்.

(பொ - ரை.) மதுபானஞ் செய்தாரையொத்தே மயக்கமுறும் ஆனந்தபோதங்கொண்டு கூத்தாடி மாயா நிரோதஞ் செய்யப்படுவதினி யெக்காலமோ!

தானென்ற வாணவமுந் தத்துவமுங் கெட்டொழிந்தே
ஏனென்ற பேச்சுமிலா திலங்குவது மெக்காலம்!

(பொ - ரை.) நான் என்றெழுகின்ற ஆணவமும், மற்றும் மாயாகாரியமாகிய தத்துவாதிகளும் அழிந்தொழிந்து ஏனென்னும் பேச்சுமூச்சி மில்லாதிருப்பது எக்காலமோ!

நானவனுய்க் காண்பதெல்லா ஞானவிழி யாலறிந்து
தானவனுய் நின்று சரணடைவ தெக்காலம்.

(பொ - ரை.) நான் அவனேயென்று காண்பனவனைத்தும் ஞானநேத்திரத்தாலுணர்ந்து நான் அவனுயே யிலங்கி சரணடைதல் இனி எந்தக்காலமோ!

(கு - ரை.) நானவனுதல், இங்கே தற்போதங்கழன்று சிவபோதமா யமைந்திருத்தலாம். சரணடைதல், முத்திநிலையினும் ஆண்டானடிமையின் முறையளந்தனராகும்.

தானந்த மில்லாத தற்பரத்தி னூடுருவி
ஆனந்தங் கண்டே யமர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ - ரை.) சீவாத்மன், அழிவிலாச் சிற்பர தற்பரசிவத்தைக்கலந் தளவுகடந்தானந்த மெய்தியிருப்பது யினியெக்காலமோ!

உற்றவெளி தனிலே உற்றுப்பார்த் தந்தரத்தே
மற்ற மறமாய்கை மாய்வதினி யெக்காலம்.

(பொ - ரை.) சீவாத்மா அடையப்பெற்ற ஞானகாயத்தின் கண் உற்றுநோக்கி அதனிடம் ஞானமழிவான் மாயையை ஒழிப்பது இனி யெக்காலமோ!

எடலர்ந்த பங்கயமு மிருகருணை நேத்திரமுந்
தோடணிந்த குண்டலமுந் தோன்றுவது மெக்காலம்.

(பொ - ரை.) இதழ்விரிந்த தாமரை முகமும், மற்றுமிரு திருநேத்திரங்களும், திருத்தோடணிந்துள்ளதும் குண்டலமும் கண் குளிரப்பார்ப்பது எந்தக்காலமோ!

(கு - ரை.) சத்திசிவமா யேகோபித்துள்ளமையால், 'தோடு குண்டல மணிந்துதோன்றுவது' என்றூர். இதனல் சத்திசிவபேத-

யின்மையை விளக்கினவாரும். ஸ்ரீ ஞானசம்பந்தர் பாடத்துவக்கிய முதற்கண் 'தோடுடைய' வென்றெடுத்தே பாடியருளினர் போலும்.

ஐபாறு மாறு மகன்றுவெறு வெளியில்
மையிருளில் நின்றமன மாள்வதினி யெக்காலம்.

(பொ - ரை.) முப்பத்தறுவகைத் தத்துவங்களையு மகற்றி, வெட்டவெளிக்கண்ணிருந்து, ஆணவத்தில் கலந்தமனம் உணர்வு பட்டு ஒழிதல் எக்காலமோ!

காட்டு மருண்ஞானக் கடலிலன்பு கப்பல்விட்டு
மூட்டுங் கருணைக்கடலின் மூழ்குவது மெக்காலம்.

(பொ - ரை.) பரசிவமாய கரையினைக் காட்டியருளும் திருவருளாம் ஞானவாரிதியிலே, அன்பாங் கப்பலேறிச்சென்று மூழ்கி வாழ்தல் எக்காலமோ!

நானாரோ நீயாரோ நன்றாம் பரமான
தானாரோ வென்றுணர்ந்து தவமுடிப்ப தெக்காலம்.

(பொ - ரை.) நானார், நீயார், இவ்விரண்டு மன்றி நலமுள்ள தான தானார், என்பவை யாராய்ந்தறிந்து தவத்தினை நன்கு முடித்தல் இனி யெந்தக்காலமோ!

(கு - ரை.) நான் நீ என்னும் பேதங்கடந்து அபேதத்தை யடைதலை விளக்கினராக.

எவரெவர்கள் எப்படிகண் டெந்தப்படி நினைத்தார்
அவரவர்க் கப்படிநின் றுனென்ப தெக்காலம்.

(பொ - ரை.) யார்யார் எவ்வாறாகக்கண்டு எவ்வண்ணம் நினைத்தார்களோ, அவரவர்க்கு அவ்வாறே தலைவன் நின்றருளுவன் என்கின்ற சமரசவுணர்ச்சியுறல் எக்காலமோ!

உற்றுற்றுப் பார்க்க வொளிதருமா னந்தமதை
நெற்றிக்கு நேர்கண்டு நினைப்பதினி யெக்காலம்.

(பொ - ரை.) உற்றுப் பார்க்கும்போது பிரகாசிக்கும் பேரின்ப ஆனந்தத்தை நெற்றி நடுவாகப்பார்த்து அதிலே நிலைத்தறிதல் இனி யெந்தக்காலமோ!

(கு - ரை.) 'கையறவிலாத நடுக்கண்புருவப்பூட்டு, கண்டுகளி கொண்டுதிறந் துண்டுஉளே நாட்டு' என்றார் வள்ளலார்.

விளங்குகின்ற தாரகையை வெய்யோன் மறைத்தாற்போல்
களங்கமற வுன்காட்சி கண்டறிவ தெக்காலம்.

(பொ - ரை.) பிரகாசியாநின்ற நக்ஷத்திர வொளியினைச் சூரிய பகவான் கிரணங்கள் மறைத்தல் போன்று, தேவரீரது காட்சியினை குற்றமறக் கண்டறிதல் இனி யெந்தக்காலம்.

என்னையே நானறியே னிந்தவண்ணஞ் சொன்னதெல்லா
முன்னையோர் கைக்கொள்ள முன்பணிவ தெக்காலம்.

(பொ - ரை.) 'என்னையான் அறிந்திலன்' என்பதாதி யான் கூறிவந்த வினைத்தும் பெரியோராவார் கைக்கொள்ளவே அடிமை பெரியார் முன்பாக வணக்கங்கூறுவது எக்காலமோ!

(கு - ரை.) மிகச்சிறியவன் விரும்புவதெல்லாம் ஒன்றே; அதாவது கடவுள்பால் பணிசெய்து கிடத்தலேயாம் என்றபடி.

ஐஞ்சுகரத்தானை யடியிணையைப் போற்றிசெய்து
நெஞ்சிற் பொருந்தி நிலைபெறுவ தெக்காலம்.

(பொ - ரை.) பஞ்சகரத்தானை முகத்தானை, அவனது உபய திருப்பாத கமலங்களையும் துதிசெய்து நெஞ்சினில் பதித்து நிருவருள் பாலிக்கப்பெறுவது எக்காலமோ! சுபம்.

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப்புலம்பல்

முற்றியது.

உ

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருப்பாடலகராதி.

பட்டினத்துப்பிள்ளையார்

திருப்பாடலகராதி

முற்றுப்பெற்றன.

சிவமயம்.

பத்திரகிரியார்

மெய்ஞ்ஞானப்புலம்பலகராதி.

மெய்ஞ்ஞானப்புலம்ப லகராதி.

பத்திரகிரியார்

மெய்ஞ்ஞானப்புலம்ப லகராதி

முற்றுப்பெற்றன.

நைடதமூலமும் விருத்தியுரையும்.

கூர்மபுராணம், இலிங்கபுராணம், காசிகாண்டம் முதலிய அரிய பெரிய இலக்கியங்களை யியற்றிய அரசகுலசேகர புலவசிகாமணியாய் ஸ்ரீ அதிவீரராம பாண்டிய மகாராஜனால் செய்யப்பட்ட (நைடதம் புலவர்க் கௌடதம்) என்னு முதுமொழியாற் கொண்டாடப்படும் நைடதம் என்னும் காப்பியத்திற்குச் சிறந்த விரிவுரை ஒன்றும் இன்றியமையாத இலக்கணக்குறிப்பு ஆசிரியவசனம், அலங்காரவிளக்கம் விசேடக்குறிப்பு, நளசரிதம், ஆசிரியர்வரலாறு என்னும் இவற்ரோடு சித்திரப் படங்களுமிட்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும் உவெஸ்லியன் மிஷன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும், ஆரணிநகர சமஸ்தான வித்துவானுமாகிய யாழ்ப்பாணம் ஸ்ரீமந் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் திருத்தியும், புதுக்கியும், விளக்கியும், சேர்த்துந்தர, நல்ல காகிதத்திற் றிருத்தமாகப் பதிப்பித்திருக்கின்றது. இதுகாறும் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்களைப்பார்க்கிலும் இது எல்லாவற்றிலும் விசேடித்தது என்று செந்தமிழ்ப்புலவர் பலர் சிராட்டியிருக்கின்றனர்.

புத்தகம் ஒன்றின் விலை ரூ. 4 0 0

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

ஆர்மோன்ய அனுபவ சங்கீத ரத்னம்.

ஸங்கீத நேயர்களே!

ஸங்கீதத்தை வாய்ப்பாட்டாகப் படிப்பதைவிட ஆர்மோன்ய வாத்ய மூலமாக பாடக்கற்றுக் கொள்வது ரெம்பவும் எளிது. அப்படிக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் ஏராளமாகப் பொருளைச் செலவுசெய்து தான் கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிக் கற்றுக்கொள்ள எல்லாராலு முடியுமா? முடியாது. இதையெல்லாம் கவனித்து யாவரும் ஒருவர்சகாயமின்றித் தாமே கற்றுக் கொள்ளும்படி "ஆர்மோன்ய அனுபவ சங்கீத ரத்னம்" என்ற சங்கீத பொக்கிஷத்தை வெளிப்படுத்தினோம், இம்மாதிரி ஏனைய புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும் அவைகளைத் தானே கற்றுக்கொள்ள முடியாதென்பது நன்கறிந்ததே நம் பெண்பாலர்களில் சிலர் அவர்கள் பருவகாலம்வரை இதைக் கற்றுக்கொள்ள முடியாமல் முன் கற்றுக்கொண்ட விஷயங்களைக்கூட மறந்து வருந்துகின்றார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் இவ்வித "ஆர்மோன்ய அனுபவ சங்கீத ரத்னம்" இல்லாதிருந்த பெருங்குறையே.

யாவரும் எளிதில் தாமே கற்றுக்கொள்ளும்படி ஆர்மோன்யத்தைக் கையில் எடுத்தது முதல் இரண்டு கைகளாலும் சபையில் வாசித்து ஆனந்திக்கும்வரையுள்ள விஷயங்களையும் இடத்திற்குத் தகுந்தபடி உபகர்ணப்படங்களைக்காண்பித்து கீர்த்தனைகள், கண்ணிகள், தேவாரம் திருவருட்பா, இராமாயணம், நந்தனார் சரித்திரம், தில்லானா, காவடிச்சிந்து, ஒரடிபார்ஸிநோட் இன்னும் அநேகபாடல்களும் அவைகளுக்குத் தகுந்தவாறு சுரங்களமைத்து எளியநடையில் இனிய வசனத்தோடு கிரவுன் 16-சைஸ் கிளேஸ் பேப்பரில் அச்சிட்டு அழகிய பைண்டுடன் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.

இதன் விலை ரூபாய்—1.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.